Bible Victory (TAMIL)

# பைபிள் வெற்றி

## ஆன்மீகப் போராட்டம் குறித்த திருமறைப் போதனை

R. ஸ்டான்லி

# பைபிள் வெற்றி

**ஆன்மீகப் போராட்டம் குறித்த**
**திருமறைப் போதனை**

**R. ஸ்டான்லி,** B.E.,M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய*
*ஒரு கட்டிடப் பொறியியலர்*

Evangeline Stanley Jones
13 Church Colony
Vellore 632 006, India
<evangeline@stanleyonbible.com>

**BIBLE VICTORY** (Tamil)

Copyright 2019 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006
*00 91 98437 07600*
*00 91 98430 11943*

*முதல் பதிப்பு:* ஜனவரி 2019

*அட்டைப் படம்:*
2018 ஜூன் மாதம் தென்னாப்பிரிக்காவில் ஆசிரியரது தம்பி மகள் Mrs. நீட்டா ஜேம்ஸ் எடுத்த புகைப்படம்.
விவிலியத்தில் 150 தடவைக்குமேல் சிங்கம் குறிப்பிடப்பட்டுள்ளது; வேறெந்த மிருகமும் இத்தனை தடவை குறிப்பிடப்படவில்லை. யூதா கோத்திரத்துச் சிங்கமாகிய கிறிஸ்துவே வெற்றியாளர்.

*ஆங்கிலத்திலும் உண்டு.*

*தட்டெழுத்து & பக்க வடிவமைப்பு:*
K. குணசேகரன்
ஓய்வு பெற்ற மிஷனரி, ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

*அச்சுப்பிழை திருத்தம்:*
லினெட்டா சம்பத்குமார், M. மரியஜோசப்
C. சுதாகர் & குழுவினர்

*வசன அட்டவணை:*
C. சுதாகர், A. கனிஷ்டன், P. எபனேசர்

விலை ரூ. 200/-

*அச்சடிப்பு:*
SRM Printers, Vellore

***அப்போஸ்தலன் பவுலின்***

*வெற்றியான வாழ்வுக்காகவும் பணிக்காகவும்*

*கடவுளுக்கு நன்றி செலுத்தி*

***அர்ப்பணிப்பு!***



இயேசுவைப் போலவே
நரகத்திலும் பவுல் பெயர்பெற்றிருந்தார்!

(அப்போஸ்தலர் 19:15)



# பவுலின் வெற்றிகள்

கிறிஸ்து மூலம் அப்போஸ்தலன் பவுல் இவையெல்லாவற்றிலும் முற்றும் ஜெயம்கொள்ளுகிறவராயிருந்தார் —

1. உபத்திரவம்
2. வியாகுலம்
3. துன்பம்
4. பசி, பஞ்சம்
5. ஆடையின்மை
6. நாசமோசம்
7. பட்டயம்
8. உறைவிடமின்மை
9. வேலைப் பளு
10. வையப்படுதல்
11. பழிக்கப்படுதல்
12. எதிர்ப்பு, விரோதம்
13. எப்பக்கமும் நெருக்கம்
14. கலக்கம்
15. கீழே தள்ளப்படுதல்
16. பாரங்கள்
17. தவிப்பு
18. சந்திக்கப்படா தேவைகள்
19. அடியுதைகள்
20. சிறையடைப்புகள்
21. பிரயாசங்கள்
22. கண் விழிப்பு
23. உபவாசங்கள்
24. கனவீனம்
25. அவதூறு
26. குற்றச்சாட்டுகள்
27. அறியப்படாதவர்கள்
28. சாகிறவர்கள்
29. தண்டிக்கப்படுகிறவர்கள்
30. துக்கம்
31. தரித்திரம்
32. போராட்டங்கள்
33. பயங்கள்
34. அவமதிப்பு
35. கல்லெறி
36. கப்பல் சேதம்
37. அடிக்கடி பயணங்கள்
38. ஆறுகளால் மோசம்
39. கள்ளர்களால் மோசம்
40. வனாந்தரத்தில் மோசம்
41. கள்ளச் சகோதரர்
42. வருத்தம்
43. களைப்பு
44. கடுங்குளிர்
45. உடலில் முள்
46. பலவீனங்கள்
47. நிந்தைகள்
48. மனத்தளர்வு
49. உடன் ஊழியர் விலகல்
50. பாம்பு, சிங்கம்

*(ரோ 8:35-37; 1 கொரி 4:11-13; 16:9; 2 கொரி 4:8,9; 5:4; 6:4-10; 7:5; 10:10; 11:23-27; 12:7,10; பிலி 2:27; 2 தீமோ 4:10,16,17; அப் 28:3-6)*

# பொருளடக்கம்

*(1) கிறிஸ்தவ வாழ்க்கை*


1. பைபிள் வெற்றி ... 8
2. உங்கள் எதிரியை அறிந்துகொள்ளுங்கள்! (பகுதி 1) ... 11
3. உங்கள் எதிரியை அறிந்துகொள்ளுங்கள்! (பகுதி 2) ... 18
4. பிசாசுக்கு இடமில்லை! ... 24
5. உள்ளேயே இருக்கும் எதிரி ... 31
6. எதிர்ப்பும் எதிர்மறையும் ... 41
7. சோதனைகளை மேற்கொள்வது எப்படி? ... 51
8. வென்றவர் மூலம் வெல்லுவோம்! ... 62
9. வெல்லவேண்டுமானால் முயலவேண்டும்! ... 71
10. பிசாசின் முப்பெரும் பொய்கள் ... 75
11. சாத்தானின் சதிகள் ... 79
12. என்னைத் தீட்டுப்படுத்தமாட்டேன்! ... 88
13. கிறிஸ்து மூலம் விடுதலை ... 93
14. சாத்தானை முறியடிப்பது எங்ஙனம்? ... 103
15. கர்த்தரின் சேனைகள் ... 119
16. தடங்கல் ஓட்டம் ... 128
17. நாம் ஏன் பயப்படத் தேவையில்லை? ... 134
18. சோர்புண்டாக்கும் அம்புகள் ... 142
19. பொல்லாத ஆவிகளை மேற்கொள்வது எப்படி? ... 150
20. சிலுவை மூலம் கவலைகளை மேற்கொள்ளுதல் ... 162
21. தெய்வீக சுகம் பெறுவது எப்படி? ... 168
22. நீங்கள் சுகம் பெறாவிட்டால் ... ... 181
23. பாடுபடும்போது சொல்லவேண்டியது ... ... 188
24. பாடுகளும் தற்கொலையும் ... 198
25. இன்றைய இழுபறிகள் ... 205





26. நான் பிசாசாயிருந்தால் ... ... 210
27. பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி? ... 215
28. விசுவாசிகளுக்குத் தோல்வியே வராதா? ... 226
29. தனித்தே போராடாதிருங்கள்! ... 229
30. அபாய அறிவிப்புகள் ... 234


*(2) உபதேசமும் ஊழியமும்*


31. வஞ்சிக்கப்படக்கூடிய பகுதிகள் ... 242
32. வஞ்சிக்கப்பட்டவனின் அடையாளங்கள் ... 255
33. உபதேசங்களைச் சோதிப்பது எப்படி? ... 257
34. திசை திருப்பும் உபதேசங்கள் ... 269
35. ஆவிகளைச் சோதித்தறிவது எப்படி? ... 279
36. விடுதலை ஊழியம் எனக்குக் கிடைக்குமா? ... 293
37. பிசாசுகளைத் துரத்துதல் ... 297
38. ஜெப ஊர்வலம் ... 310
39. சாத்தானின் கோட்டைகள் ... 316
40. பிசாசைக் கட்டுதல் ... 325
41. பரம்பரை ஆவிகள் ... 330
42. ஆட்டங்காணும் அடித்தளம் ... 335
43. தூண்களில் கீறல்கள் ... 341
44. ஜெயங்கொள்வது எப்படி? ... 347
45. ‘‘யுத்தம் கர்த்தருடையது!’’ ... 350
46. அடைக்கப்பட முடியாத கதவுகள் ... 356
47. துன்புறுத்தப்படும் மிஷனரிகளுக்கு ஒரு கடிதம் ... 364
48. ‘‘உயிருள்ளவரை உண்மையாயிரு!’’ ... 369
49. இரண்டாம் வருகையின் வல்லமை ... 381
50. விக்டரி டானிக் ... 394

☐ ஆன்மீகப் போராட்டப் பொன்மொழிகள் ... 405
☐ வசன அட்டவணை ... 411

## பகுதி 1

# கிறிஸ்தவ வாழ்க்கை

# Christian Life



**1**

# பைபிள் வெற்றி

## Bible Victory

''ஆன்மீகப் போராட்டம்'' என்ற பொருள்மீது இந்நாட்களில் கிறிஸ்தவ வட்டாரங்களில் புத்தார்வம் எழுந்துள்ளது. இப்பொருளைப்பற்றிய கருத்தரங்குகளும் புத்தகங்களும் நிறையவுண்டு. தேவனது பிரதான எதிரியாகிய சாத்தானை மேற்கொள்வதற்கு இவையெல்லாம் கிறிஸ்தவர்களுக்குப் பேருதவியாய் இருந்துவருகின்றன. அதே வேளையில் திருமறைக்கு ஒவ்வாத பல காரியங்களும் இவ்வுபதேசங்களில் புகுந்துள்ளன. வசனத்திலிருந்து வழிவிலகல் ஏற்படும்போதெல்லாம் பிசாசுக்கு ஒரே கொண்டாட்டம்தான். ஏனென்றால், ஏதேன் சோலையாயிருந்தாலும் சரி, யூதேயா பாலையாயிருந்தாலும் சரி, அவனது பிரதான தாக்குதல் தேவனுடைய வார்த்தையின்மீதுதான். ஆன்மீகப் போராட்டம் குறித்து ஒரு புத்தகம் வெளியிட்டு எனது தலைமுறையினரை ஆசீர்வதிக்கவேண்டுமென்ற வாஞ்சை வேத மாணாக்கனாகிய எனது இதயத்தில் வளர்ந்துவந்தது. அதின் விளைவுதான் உங்கள் கைகளில் தவழும் இந்நூல். கடந்த 40 முதல் 50 ஆண்டு காலத்தில் நான் எழுதியவை இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

பல்வேறு விதங்களில் பிசாசு நம்மைச் சோதிக்கிறான். காலத்திற்கேற்றாற்போல் தனது தந்திரங்களை அவன் மாற்றிக்கொண்டேயிருக்கிறான். அவனது அடிப்படையான சோதனைகளை இங்கு வரிசைப்படுத்துகிறேன் —

1. ஆதாம், ஏவாளிடம் முயன்றதுபோல் நாமும் இறைவார்த்தையைச் சந்தேகிக்கும்படிச் சோதிக்கிறான் (ஆதி 3:1; 2 கொரி 11:3,4).

2. ஆடவர், பெண்டிரின் மனதிற்குள் பெருமை எனும் நஞ்சைச் செலுத்துகிறான். அவன் விண்ணிலிருந்து விழுந்ததற்குக் காரணம் அவனது பெருமையே (ஏசா 14:12-15; 1 தீமோ 3:6).

3. இறைவன்மையைச் சாராது தங்களது புயபலத்தையே சாரும்படி மனுக்குலத்தைத் தூண்டுகிறான். மக்களைத் தொகையிடுவதற்குத் தாவீதை ஏவியது அவன்தானே? (1 நாளா 21:1).

4. தேவ மக்கள் தேவன்மீது வைத்திருக்கும் விசுவாசத்தை அழித்துவிட முயற்சிக்கிறான். யோபுவிடமும் பேதுருவிடமும் இதைத்தானே செய்ய முயன்றான்? (யோபு 1:9,11; லூக் 22:31).

5. தேவ பக்தியும் பரிசுத்தமும் உள்ள எதையும் எதிர்க்கிறான். பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் அழுக்கு உடைகளை அகற்றி, சிறந்த ஆடைகளை அவருக்கு உடுத்தி, அவருக்குச் சுத்தமான தலைப்பாகை அணிவிக்க முயன்றோரைச் சாத்தான் தடுத்து நிறுத்த முயன்றான் (சக 3:1-5).

6. தங்களைத் தாங்களே உயர்த்திக்கொள்ள மக்களுக்கு அவன் குறுக்கு வழிகளைச் சொல்லிக்கொடுக்கிறான். இவ்விதம் அவன் இயேசுவைச் சோதித்துத் தோல்வி கண்டான் (மத் 4:5-10).

7. ஆன்மீகச் சிந்தைக்கு எதிராக உலகச் சிந்தையை மக்கள்முன் வைக்கிறான். சிலுவையைத் தவிர்க்கும்படி இயேசுவுக்கு ஆலோசனை கூற அவன் பேதுருவைப் பயன்படுத்தினான் (மத் 16:22,23).

8. மக்களின் இருதயங்களைப் பண ஆசையினால் நிரப்புகிறான். அவன் யூதாசுக்குள் நுழைந்து அவனது ஆண்டவரை முப்பது வெள்ளிக்காசுக்கு விற்கச் செய்தான் (லூக் 22:3).

9. மக்களை ஏமாற்றி அவர்களை மாய்மாலமாய் வாழச் செய்கிறான். அனனியா-சப்பீராள் தம்பதியரிடம் இம்முயற்சியில் வெற்றி கண்டான் (அப் 5:3).

10. ஆண்கள் மற்றும் பெண்களது தன்னடக்கமின்மையைச் சாதகமாக்கி அவர்களைப் பாலியல் நடத்தைக் கேட்டுக்குள் நடத்துகிறான் (1 கொரி 7:5; 1 தீமோ 5:14,15).

11. நற்செய்திப்பணிகளைத் தடுக்கிறான். பவுல் மற்றும் பிற அப்போஸ்தலரது மிஷனரிப்பணி முயற்சிகளுக்கு எதிராய்ச் செயல்பட்டான் (1 தெச 2:18).



12. ஒளியின் தூதனாகத் தோன்றி இறைமக்களை உபதேச வஞ்சகத்திற்குள் நடத்துகிறான் (2 கொரி 11:14).

தனது கதாபாத்திரங்களின் வெற்றிகள், தோல்விகள் ஆகிய இரண்டையும் திருமறை சுட்டிக்காட்டுகிறது. அவர்களது வெற்றிகளால் நாம் உற்சாகங்கொள்ளவேண்டும்; அவர்களது தோல்விகளைக் கவனித்துச் சவால் பெறவேண்டும். இரு வகையிலும் நாம் எதிரியை மேற்கொள்ளும் வழியைக் கற்றுக்கொள்ளுகிறோம். அப்போஸ்தலன் பவுல் நம்மெல்லாருக்கும் முன்பாக உயர்ந்த எடுத்துக்காட்டாய் நிற்கிறார். வாலிபன் தீமோத்தேயுவுக்கு அவர் எழுதிய கடிதத்தில், ''விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு'' என ஊக்குவித்தார் (1 தீமோ 6:12). இரண்டாம் கடிதத்தில், ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்'' என்று சான்று பகன்றார் (2 தீமோ 4:7). இறைமக்கள் வெற்றிமேல் வெற்றியடையும்படி அவர்களை நடத்திச் செல்ல இவ்விதத் தலைவர்களே இன்றையத் தேவை! பவுலின் வெற்றியான வாழ்வு மற்றும் பணிக்காய்க் கடவுளைத் துதித்து இப்புத்தகத்தை அர்ப்பணித்துள்ளேன். அவர் முற்றும் ஜெயங்கொண்ட ஐம்பது போராட்டங்களை 4ஆம் பக்கத்தில் பட்டியலிட்டுள்ளேன்.

இந்நூலை நான் ஆயத்தம்பண்ணத் தொடங்கியதிலிருந்து பல்வேறு விதங்களில் எனது உடல் நலம் பாதிக்கப்பட்டது. எனது நெருங்கிய ஜெபத் தோழர்கள் என்னுடன் முழங்காலில் நின்றனர். கர்த்தர் இரங்கவே, இப்புத்தக வேலை முடிந்தது.

இந்நூலை இரு பகுதிகளாய்ப் பிரித்துள்ளேன். 30 அத்தியாயங்கள் கொண்ட முதல் பகுதி கிறிஸ்தவ வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைத் தழுவியது. 20 அத்தியாயங்களை அடக்கியுள்ள இரண்டாம் பகுதி உபதேசம் மற்றும் ஊழியம் பற்றியது. அங்குமிங்கும் ஒரு சில கருத்துக்கள் ஒன்றோடொன்று கலந்து வரலாம். இங்கு 39 கட்டுரைகளும் 11 சுருக்கக் குறிப்புகளும் உண்டு. ஒவ்வொரு அத்தியாயமும் தன்னில் தானே நிறைவு பெற்றது. நீங்கள் ''இயேசு கிறிஸ்துவின் நல்ல சேவகனாய்'' மாறும்படி உங்கள் ஆன்மீகத் தசைகளை இப்புத்தகத்தில் அடங்கியவை வலுப்படுத்தும் என்று உறுதி கூறுகிறேன் (2 தீமோ 2:3). ***''பைபிள்''*** எனும் ஆவியின் பட்டயத்தைக் கையிலேந்தி ***''வெற்றி''*** நடை போடுவோம், வாருங்கள்!

**2**

# உங்கள் எதிரியை அறிந்துகொள்ளுங்கள்! (பகுதி 1)

## Know your enemy! (Part I)

‘‘உங்கள் எதிரியை அறிந்துகொள்ளுங்கள்’’ என்பதே எந்த யுத்தத்திலும் நாம் கற்கவேண்டிய முதல் பாடம். இரு இராஜ்யங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டிருக்கின்றன. ஒன்று தேவனுடைய இராஜ்யம், அடுத்தது சாத்தானுடைய இராஜ்யம். ஒன்று ஒளியரசு, அடுத்தது இருட்டரசு. நாம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது இருட்டின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனது அன்பின் குமாரனது ஆளுகைக்குள் மாற்றப்படுகிறோம் (கொலோ 1:13). தேவனது பரம எதிரியாகிய சாத்தான் அவரது மக்களுக்குப் பிரதான எதிரியாக அவர்கள்மீது போர் தொடுத்துள்ளான். தேவனது திட்டங்களிலிருந்து நம்மைத் திசைதிருப்பி அவரது வழிகளிலிருந்து நம்மை வழிவிலகச் செய்யத் தன்னால் முடிந்ததையெல்லாம் அவன் செய்கிறான். சாத்தானால் எது முடியும், எது முடியாது என்று நாம் சரிவர அறியாவிட்டால் நாம் யுத்தத்தில் தோல்வியுறுவோம். எதிரியை அறிந்துகொள்ளும் காரியத்தில் நாம் இரு காரியங்களைச் செய்யக்கூடாது —

(அ) பிசாசைக் குறைவாய் மதிப்பிடுதல்
(ஆ) பிசாசை அளவுக்கு மிஞ்சி மதிப்பிடுதல்

**(அ) பிசாசைக் குறைவாய் மதிப்பிடுதல்** (Underestimating)

பிசாசு என்றால் யார்? இயேசுவைப் பொருத்தவரை அவன் ‘‘இவ்வுலகின் *அதிபதி’’* (யோ 14:30). அப்போஸ்தலன் பவுலைப் பொருத்தவரை அவன் ‘‘ஆகாயத்தின் அதிகாரப் *பிரபு’’* (எபே 2:2). அவனை ‘‘இந்த யுகத்தின் *தேவன்’’* என்றும் பவுல் அழைக்கிறார் (2 கொரி 4:4). அதிபதி! பிரபு! தேவன்! அறுபது ஆண்டுகட்குமேல்



கிறிஸ்துவைப் பின்பற்றிய அப்போஸ்தலன் யோவான் பிசாசின் எல்லையைப் புரிந்துகொண்டிருந்தார். அவர் எழுதியது: ‘‘உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது’’ (1 யோ 5:19ஆ). இப்போராட்டத்தைக் குறிப்பிட்டு அவர் சொன்னது: ‘‘நாம் தேவனால் உண்டானவர்கள் என்று நாம் அறிந்திருக்கிறோம்’’ (வச 19அ). பிரியமானவர்களே, நாம் தேவனால் உண்டானவர்கள் என்று அறிந்திருப்பது போலவே இவ்வுலகம் முழுவதும் பிசாசின் உடும்புப்பிடியில் அகப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

### *பிசாசின் குணாதிசயங்கள்*

■ சாத்தானின் விழுகை குறித்து மறைமுகமாய்ப் பேசும்போது தீர்க்கன் எசேக்கியேல் குறிப்பிட்டது: ‘‘நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம் ... பூரண அழகுள்ளவன்’’ (எசேக் 28:12). நாட்டழகி அல்லது உலக அழகி போன்று பிறரைவிட அழகு என்றல்ல; அவன் ‘‘பூரண’’ ***அழகுள்ளவனாயிருந்தான்***. அவனது ஆடையில் பொன்மீது ஒன்பது இரத்தினக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன (வச 13). அவனது ஆடையலங்காரம் நிகரற்றதாயிருந்தது! அவனைப் ‘‘பூரண’’ அழகுள்ள ‘‘உலகழகன்’’ எனலாம்! பாம்புகள் பொதுவாக மினுங்கும். முதல் பெண்மணியே சர்ப்பத்தினால் ஈர்க்கப்பட்டதில் ஆச்சரியமில்லை! சர்ப்பமும் கவர்ச்சியாயிருந்தது; அது கொடுத்த வாக்கும் கவர்ச்சியே! (ஆதி 3:5,6). சாத்தானது விளம்பரங்களின் ஈர்ப்பு சக்தி நிகரற்றது. எனவேதான் பெரும்பாலானோர் அதற்குப் பலியாகின்றனர்.

■ லூசிபரைக் குறித்த எசேக்கியேலின் விவரிப்பில் அவன் ***‘‘ஞானத்தால்*** நிறைந்தவன்’’ என வாசிக்கிறோம் (எசேக் 28:12). அழகும் அறிவும் சேர்ந்திருப்பது அபூர்வம்! சாத்தானின் சாதுரியத்தை ஆதியாகமம் அவனது தந்திரம் என்றழைக்கிறது. ஆதி 3:1, ‘‘தேவனாகிய கர்த்தர் உண்டாக்கிய அனைத்துக் காட்டு மிருகங்களைவிடச் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது.’’ எதிலும் தந்திரமாய்ச் செயல்படுவதே சாத்தானின் பிரதான குணம். அவனுக்கு இணையான தந்திரசாலி எவருமில்லை. அவனை இவ்விதம் அடையாளங்கண்ட அப்போஸ்தலன் பவுல் கொரிந்து கிறிஸ்தவர்களுக்கு

எழுதியது: ''சாத்தானுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவை அல்லவே'' (2 கொரி 2:11). நாம் விழிப்பாகவும் கவனமாகவும் இல்லாவிடில் அவன் நம்மைக் கவிழ்த்துவிடுவான்.

சாத்தானின் தந்திரசாலித்தனம் இணையற்றது. ஆணையும் பெண்ணையும் ஆண்டவர் படைத்து எத்தனையோ யுகங்கள் ஆகியும் கொரிந்திய விசுவாசிகளுக்குப் பவுல் எழுதியது: ''சர்ப்பமானது தனது தந்திரத்தினால் ஏவாளை வஞ்சித்தது போல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையிலிருந்து விலகும்படிக் கெடுக்கப்படுமோ என்று பயந்திருக்கிறேன்'' (2 கொரி 11:3). அவனது வஞ்சகம் ''வேறொரு இயேசு'' அல்லது ''வேறொரு ஆவி'' அல்லது ''வேறொரு சுவிசேஷம்'' என்று வெளிப்படும் (வச 4). அவனை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள முடியாத அளவு விவேகமாய் அவன் நடந்துகொள்ளுவான். ''ஒளியின் தூதனுடைய வேடத்தை'' அவன் அணிந்துகொண்டால் அது ஆச்சரியமல்ல (வச 14). கள்ள அப்போஸ்தலர் மற்றும் கபடமுள்ள ஊழியர் மூலம் அவன் தனது தயாரிப்புகளை விற்றுவிடுவான்.

■ சாத்தான் சர்வ வல்லவன் அல்ல எனினும் அவனது ***பலத்தைக்*** குறைவாய் மதிப்பிட்டுவிட முடியாது. அநேகப் பொல்லாத ஆவிகளால் பிடிக்கப்பட்டிருந்த ஒருவனை நாம் மாற்கு 5ஆம் அத்தியாயத்தில் சந்திக்கிறோம். அவன் கல்லறைத் தோட்டங்களில் வாழ்ந்து வந்தான். சங்கிலிகளாலும் ஒருவரும் அவனைக் கட்டி வைக்க முடியவில்லை. அவன் சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப் போடுவான். எவ்வளவு பலம், பாருங்கள்! ஒருவரும் அவனை அடக்க முடியவில்லை. மக்களிடமிருந்து பிசாசுகளைத் துரத்த முயன்ற ஓர் யூதப் பிரதான ஆசாரியனது ஏழு மகன்களைக் குறித்து நடபடிகளில் வாசிக்கிறோம். பொல்லாத ஆவியுடைய ஒருவன் அவர்கள்மீது பாய்ந்து, பலவந்தம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் ஆடையிழந்தவர்களும் காயப்பட்டவர்களுமாகி ஓடிப்போனார்களாம்! (அப் 19:13-16). பிசாசைச் சாதாரணமாய்க் கணித்துவிடக்கூடாது. கூடுதல் சக்தி பெறுவதற்காக இந்நாட்களில் விளையாட்டு வீரர் ஊக்க மருந்து எடுத்துக்கொள்கின்றனர். தேவனது ஆவியானவர்



சிம்சோன்மீது வந்தபோது அவனுக்கு அசாதாரண பலம் கிடைத்தது. ஒரு சிங்கத்தையே அவனால் கிழித்துப்போட முடிந்தது (நியா 14:6). இவ்விதமே மனிதர் மூலம் செயல்படும்போது சாத்தான் அசாதாரண காரியங்களை நிகழ்த்த முடியும்.

■ ***அற்புதங்கள்*** செய்யச் சாத்தானுக்கிருக்கும் சக்தி அபாரமானது. அவன் ''எல்லா வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்'' செயல்படுவான் (2 தெச 2:9). மக்களை ''வஞ்சிப்பதே'' அவனது நோக்கம் (வச 10). எகிப்தின் மந்திரவாதிகள் தங்களது மந்திர சக்தியினால் தங்கள் கோல்களைப் பாம்புகளாக்கினார்களே (யாத் 7 & 8)! அவற்றையெல்லாம் ஆரோனின் கோல் விழுங்கிப்போட்டாலும், பிசாசின் சக்தியினால் அசாதாரண அற்புதங்களை நிகழ்த்த முடியும் என்பது உண்மைதானே? ஆறுகள் மற்றும் குளங்கள்மீது ஆரோன் தனது கோலை நீட்டியபோது அவை யாவும் இரத்தமாயின. மந்திரவாதிகளாலும் அவ்விதம் செய்ய முடிந்தது. அது சாதாரண காரியமா? எகிப்திலுள்ள தண்ணீர்கள்மீது ஆரோன் தனது கோலை நீட்டியபோது, அங்கிருந்து தவளைகள் திரளாய்ப் புறப்பட்டு வந்து நிலப்பகுதியையெல்லாம் நிரப்பின. மந்திரவாதிகளும் இவ்விதம் செய்ய முடிந்தது. இது நினைத்துப் பார்க்க முடியாத காரியம் அல்லவா? ஆனாலும் அவர்கள் ஓரளவுக்கு மேல் செயல்பட முடியவில்லை (யாத் 8:18,19). இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றைத் தேவன் செய்கிறார்; ஆனால் இயற்கைக்கு அப்பாற்பட்டவை யாவும் தேவனிடமிருந்தே வருகின்றன என்று சொல்ல முடியாது. அது திருவசனத்திற்கு ஏற்புடையதாயிராவிட்டால் அதனை அறவே ஒதுக்கிவிட வேண்டும். இப்படித்தான் நாம் சோதனைக்காரனின் வலைகளுக்கும் வஞ்சகங்களுக்கும் தப்ப முடியும்.

■ சாத்தானது இராஜ்யத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று அதில் பிரிவினை கிடையாது. யுகா யுகமாய் அது ***ஒன்றித்து*** நிற்கிறது. இவ்விதச் சாட்சியை இயேசுவே கொடுத்தார்: மத் 12:25,26, ''தனக்குத் தானே எதிராய்ப் பிரிந்திருக்கும் எந்த இராஜ்யமும் பாழாய்ப் போகும் ... சாத்தானைச் சாத்தானே துரத்தினால் தனக்கு எதிராய் அவனே பிரிவினை செய்கிறதாயிருக்குமே. அப்படிச் செய்தால் அவனது

இராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?'' பிரிந்து நிற்கும் சபை வெட்கத்துடன் இப்பாடத்தைப் படித்துக்கொள்ளவேண்டும். ஒன்று விட்டு ஒன்றாகக் கிறிஸ்தவ ஐக்கியங்களில் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. தனது இராஜ்யத்தை எவ்விதப் பிரிவுமின்றிக் காக்கும் சாத்தானின் ஆற்றல்தான் என்னே! பிளவில்லாத அரசியல் கட்சி என்று எதுவும் கிடையாது. சாத்தானின் இராஜ்யம் ஒன்றித்தும் நிற்கிறது, ஒழுங்காகவும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ''துரைத்தனங்கள், அதிகாரங்கள், அந்தகார லோகாதிபதிகள், பொல்லாத ஆவிகளின் சேனைகள்'' என்று அதினதின் வரிசையில் அணிவகுத்து நிற்கின்றன (எபே 6:12). இதற்கு இரகசியம் என்னவென்றால் அவர்களது தரிசனமும் குறிக்கோளும் ஒன்றே. ''தேவனை எதிர்த்து'' அவரது இடத்தைப் பிடிக்கவேண்டுமென்பதே அவர்களது ஒரே நோக்கு. ''தேவன் எனப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாகவும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து அவனே தேவன் என்று காண்பிக்கவேண்டும்'' என்பதிலேயே சாத்தான் கருத்தாயிருக்கிறான் (2 தெச 2:4). நச்சு நிறைந்த இவ்விருப்பத்தையே முதல் பெற்றோரின் மனதில் விதைத்தான் (ஆதி 3:4,5). காலா காலமாகப் பிரபல மனிதர் பலர் இச்சோதனைக்குப் பலியாகியுள்ளனர். துர்ப்பாக்கியமாக, கிறிஸ்தவத்தில் இன்று நிலவும் சில நவீன உபதேசங்கள் சாத்தானது இவ்விருப்பத்தால் கறைப்பட்டிருக்கின்றன. கவனம்!

■ அடுத்து, சாத்தானது ***அனுபவத்தை*** நாம் குறைவாய்க் கணக்கிட்டுவிடக்கூடாது. நமது ஆதிப் பெற்றோரில் தொடங்கி 6000 ஆண்டுகளுக்குமேல் மக்களைச் சோதித்து வரும் அனுபவம் அவனுக்குண்டு. பெரும்பாலானோரை அவன் வென்றுவிட்டான். யோபு போன்ற மூதாதையர், தாவீது போன்ற அரசர்கள், யோனா போன்ற தீர்க்கர்கள், சீமோன் பேதுரு போன்ற அப்போஸ்தலர்கள், மற்றும் அனனியா-சப்பீராள் போன்ற தம்பதியரைச் சோதித்த அனுபவம் அவனுக்குண்டு. இயேசுவையும் ''எல்லாப் பகுதிகளிலும்'' சோதித்தான், ஆனால் தோல்வியடைந்தான் (எபி 4:15). இயேசுவைச் சோதித்த அனுபவத்திலிருந்து ''எப்படிச் சோதிக்கக்கூடாது?'' என்றும் கற்றிருப்பான்! ஒவ்வொருவரின் வாழ்க்கை எனும் சங்கிலியிலும் எளிதில் அறுந்துபோகக்கூடிய இடம் எதுவென்று அவனுக்கு நன்றாகவே தெரியும். எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத இடத்தில், எதிர்பாராத விதத்தில், எதிர்பாராத நபர் மூலம் அவன் நம்மைத் தாக்குவான். அவன் ஒரு திருடனாயிருப்பதால் எப்பொழுது, எப்படி வருவானென்று முன்னறிவிக்க மாட்டான் (லூக் 12:39).



சாத்தானது விழுகைக்குமுன் அவன் தேவனது வலிமையான தூதர்களில் ஒருவனாயிருந்தான் (2 பேது 2:4; யூதா 6). எனவே தேவனும் அவரது தூதரும் எப்படியெல்லாம் செயல்படுவர் என்பது அவனுக்கு நன்றாகவே தெரியும். சாத்தானின் இவ்வித நெடுங்கால அனுபவத்தைச் சுட்டிக்காட்டவே அவன் ''அந்தப் பழைய சர்ப்பம்'' என்றழைக்கப்படுகிறான் (வெளி 12:9). ''ஏவாளை வஞ்சித்த சர்ப்பம்'' என்று அவனைப் பவுல் அழைக்கிறார் (2 கொரி 11:3). தனது சோதனை அம்புகள் எல்லாவற்றையும் அவன் எறிந்து முடித்துவிடவில்லை. காலத்திற்கேற்றாற்போல் புதிது புதிதாகச் சோதனைகளைக் கண்டுபிடித்துக்கொண்டுமிருக்கிறான். ''சோதனைக்காரன்'' என்று அவன் அழைக்கப்படுவது சரியே (மத் 4:3; 1 தெச 3:5).

■ சாத்தானைக் குறைவாய் மதிப்பிடக்கூடாத ஏழாவது அம்சம் அவனது ***விறுவிறுப்பும்*** சுறுசுறுப்பும். அவனுக்குத் தூக்க வேளை கிடையாது. இரவும் பகலும் வேலைதான் (வெளி 12:10ஆ). நாம் தூங்கும்போது அவனது வேகம் கூடுகிறது (மத் 13:25). ''எவனை விழுங்கலாமென்று'' எப்பொழுது பார்த்தாலும் கர்ஜித்துக்கொண்டு சுற்றித் திரிகிறான் (1 பேது 5:8). அவனது தீராப்பசி எப்பொழுதும் தணியாது. யோபுவின் சரிதையில் தேவன் அவனிடம் கேட்டது: ''எங்கிருந்து வருகிறாய்?'' அவன் கொடுத்த பதில்: ''பூவுலகெங்கும் உலாவி, அதில் சுற்றித் திரிந்து வருகிறேன்'' (யோபு 2:2). ஆத்துமாதாயப்பணியில் கிறிஸ்தவர்கள் இவ்வித விறுவிறுப்பு காட்டுவார்களானால் நலமாயிருக்குமே! ஒரு வீட்டைப் பிசாசு காலிபண்ணியதும் குடிபோக அடுத்த வீடு தேடிப் பாலைவனமாயினும் எவ்வளவு தூரமும் செல்ல அவன் சளைக்கமாட்டான் (மத் 12:43). இயேசுவிடமிருந்து அவனுக்குக் கிடைத்தது தர்ம அடிகள் எனினும் வசதியான வேளையில் திரும்பி வரும்படிச் ''சில காலம்'' மட்டுமே

அவரை விட்டு விலகிப்போனான் (லூக் 4:13). அவன் சோர்புறுவதேயில்லை. ‘‘திரும்பத் திரும்ப முயன்றால் முடிவில் வெற்றி’’ என்பதே அவனது தத்துவம்!

இவ்விதம், சாத்தான் ஞானமுள்ளவன், அழகுள்ளவன், பலமுள்ளவன், அற்புத வல்லமையுள்ளவன், பிளவுபடாதவன், அனுபவமுள்ளவன், மற்றும் விறுவிறுப்பானவன். இப்படிப்பட்ட எதிரி நம்மை எப்பொழுதும் குறிவைத்திருக்கும்போது, நாம் எப்பொழுதாவது ஏனோ தானோ என்றிருக்க முடியுமா?

■

*சேனையதிபன் நம் கர்த்தருக்கே*
*செலுத்துவோம் கனமும் மகிமையுமே!*
*அற்புதமே தம் அன்பெமக்கு — அதை*
*அறிந்தே அகமகிழ்வோம்!*

*ஜெயக் கிறிஸ்து முன்செல்கிறார்,*
*ஜெயமாக நடத்திடுவார்;*
*ஜெயக் கீதங்கள் நாம் பாடியே*
*ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்;*
*ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே!*

*சத்ருவின் கோட்டை தகர்ந்தொழிய*
*சத்தியம் நித்தியம் நிலைத்தோங்க,*
*சாத்தானின் சேனை நடுங்கிடவே — துதி*
*சாற்றி ஆர்ப்பரிப்போம்!*

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014



**3**

# உங்கள் எதிரியை அறிந்துகொள்ளுங்கள்! (பகுதி 2)

## Know your enemy! (Part II)

யுத்தம் எதுவாயினும் அதற்கான முதல் சட்டம், ‘‘உங்கள் எதிரியை அறிந்துகொள்ளுங்கள்’’ என்பதே. நாம் அவனைக் குறைத்து மதிப்பிட்டால் நமது ஆயத்தம் போதுமானதாய் இருக்காது. அவனை அளவுக்குமீறி மதிப்பிட்டால் நாம் பயந்து சாவோம். தங்களது உண்மை நிலையை வெளிப்படுத்துவதாலேயே பெரும்பாலானோர் பைபிளை வெறுக்கின்றனர். சாத்தானது தந்திரத்தைப் பைபிள் வெளிப்படுத்துவதாலேயே அவன் பைபிளை வெறுக்கிறான். ஆன்மீகப் போராட்டத்தில் பிசாசைச் சரியானபடி அறிந்துகொள்ளத் திருமறையைத் தவிர நமக்கு எதுவும் தேவையில்லை. சாத்தானை முழுவதும் அறிந்தவர் தேவன் ஒருவரே; எனவே அவனைக் குறித்துத் திருமறை தரும் தகவல்கள் அத்தனையும் நிசமானவை, போதுமானவை. பிசாசை நாம் ஏன் குறைத்து மதிப்பிடக்கூடாதென்று முந்திய அத்தியாயத்தில் படித்தோம். அவனை ஏன் அளவுக்குமிஞ்சி மதிப்பிடக்கூடாதென்று திருமறையிலிருந்து இந்த அத்தியாயத்தில் கவனிப்போம் —

### (ஆ) பிசாசை அளவுக்கு மிஞ்சி மதிப்பிடுதல் (Overestimating)

■ சாத்தான் ‘‘படைக்கப்பட்டவன்தான்’’ என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. லூசிபரின் ஞானத்தையும், அழகையும், தேவனது தோட்டத்தில் அவனுக்கிருந்த அலங்கார உடையையும் பற்றி எசேக்கியேல் தீர்க்கதரிசனப் புத்தகப் பகுதியில் அவனிடம் தேவன் சொல்வது: ‘‘நீ ***சிருஷ்டிக்கப்பட்ட*** நாள் தொடங்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்படும்வரை உன் வழிகளில் குறையற்றிருந்தாய்’’ (எசேக் 28:15). ஆதியாகமம் 3:1இல் அவன் தேவனாகிய கர்த்தரால் ***‘‘உண்டாக்கப்பட்டவன்’’*** என்று வாசிக்கிறோம். தேவ தூதர்களையும் பரம சேனைகளையும் தேவன் உண்டாக்கினார்.

இதைச் சங்கீதம் 148:2-5இல் காண்கிறோம்: ''அவருடைய தூதர்களே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள்; அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் ... அவைகள் கர்த்தரின் நாமத்தைத் துதிக்கக்கடவது; அவர் கட்டளையிட அவைகள் ***சிருஷ்டிக்கப்பட்டன.***'' தேவனுக்கு விரோதமாக லூசிபர் எழுந்தபோது, ஒரு கூட்ட தூதர் அவனைச் சேர்ந்துகொண்டனர். அவர்கள்தான் பொல்லாத ஆவிகள். சாத்தான் இவ்விதம் ''சிருஷ்டிக்கப்பட்டவன்தான்'' என்பதால், அவன் ''சிருஷ்டிகருக்குக்'' குறைந்தவன்தான். சாத்தான் வல்லவன், சர்வ வல்லவன் அல்ல. அவன் ஓர் ஆவியாயிருப்பதால் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்; ஆனால் அவன் சர்வ வியாபகி அல்ல. அவன் ஞானமுள்ளவன்; ஆனால் சர்வ ஞானி அல்ல. தேவனைப் போலல்லாது அவனுக்கு வரம்புகள் உண்டு. எனவேதான் தனது முதிர் வயதில் அப்போஸ்தலன் யோவான் இறைமக்களுக்கு இப்படி எழுதினார்: ''பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அந்த ஆவிகளை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்தில் இருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர்'' (1 யோ 4:4). கள்ளத் தீர்க்கதரிசிகளையும் அந்திக்கிறிஸ்துக்களையும் மேற்கொள்வதைப்பற்றி இப்பகுதியில் அப்போஸ்தலன் பேசிக்கொண்டிருக்கிறார் (வச 1-3). இறைமக்களைப் ''பிள்ளைகளே'' என்றழைக்கிறார். இது வயதைக் குறிப்பதல்ல; மாறாக, பயமுறுத்தப்படும்போது தைரியமிழந்துவிடக்கூடாதென்று இங்கு ஊக்குவிக்கிறார்.

■ பிசாசை அளவுக்குமீறி மதிப்பிடக்கூடாது என்பதற்கு இன்னொரு காரணம் அவன் இப்பொழுது படிப்படியான ***இறக்கத்தில்*** (descent) இருக்கிறான். □ முதலாவது அவன் விண்ணகத்திலிருந்து தள்ளப்பட்டான் (dethroned). தேவன் அவனிடம் சொன்னது: ''உன் கொடுமை அதிகரித்து நீ பாவம் செய்தாய் ... உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று; உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்; எனவே உன்னைத் தேவனது பர்வதத்திலிருந்து தரையில் தள்ளிப்போடுவேன்'' (எசேக் 28:16,17). □ அடுத்து கிறிஸ்துவின் வாழ்க்கையில் அவன் தோற்கடிக்கப்பட்டான் (defeated). தமது வாழ்வின் இறுதிக்காலத்தில் அவர் சொன்னது: ''இதோ, உலகின் அதிபதி வருகிறான்; அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை'' (யோ



14:30). அதாவது, தமது வாழ்வின் எப்பகுதியிலும் பிசாசுக்கு இயேசு இடம் தரவில்லை. பரிபூரண வெற்றி! □ சிலுவைமீது இயேசு தொங்கியபோது அவர் ''துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு (disarmed), வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் வெற்றி சிறந்தார்'' (கொலோ 2:15). சாத்தான்மீது இயேசுவின் சிலுவை வெற்றி முழங்கியது. □ கிறிஸ்துவின் மறுவருகையை அடுத்து, சாத்தான் ஆயிரமாண்டு கட்டிவைக்கப்படுவான் (detained). இதைக் குறித்து யோவான் எழுதியுள்ள தீர்க்கதரிசன விளக்கம்: வெளி 20:1-3, ''ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையில் பிடித்துக்கொண்டு வானத்திலிருந்து இறங்கிவரக்கண்டேன். பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் ஆண்டுகள் கட்டிவைத்து, அந்த ஆயிரம் ஆண்டுகள் முடிவும்வரை அது மக்களை வஞ்சியாதபடி அதைப் பாதாளத்தில் தள்ளி அடைத்து, அதன்மீது முத்திரை போட்டான். அதற்குப் பின்பு அது கொஞ்சக் காலம் விடுதலையாகவேண்டும்.'' □ முடிவாக, அவன் நித்திய அக்கினியில் தள்ளப்படுவான் (doomed). ''பிசாசுக்காகவும் அவனுடைய தூதருக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்ட நித்திய அக்கினி'' என்று இயேசு இதனை அழைக்கிறார் (மத் 25:41). தள்ளப்பட்டான், தோற்கடிக்கப்பட்டான், உரிக்கப்பட்டான், கட்டப்பட்டான், முடிவில் தொலைந்தான்! தேவனுடைய பிள்ளையே, உற்சாகங்கொள்; பிசாசு தோற்கடிக்கப்பட்ட சத்துருதான்!

■ இன்றைய நமது பிரதான தேவை ***கண் திறப்பே***. எலிசா மற்றும் அவரது வேலைக்காரன் கேயாசியின் சரிதையில் இது சித்தரிக்கப்பட்டுள்ளது. அவர்களைச் சீரியரின் படை சூழ்ந்துவந்தபோது, கேயாசி பயந்து நடுங்கினான். அவன் எலிசாவைப் பார்த்து, ''ஐயோ, என் ஆண்டவனே, என்ன செய்வோம்?'' என்று கதறினான் (2 இரா 6:15). எலிசா கொடுத்த பதில்: ''பயப்படாதே; அவர்களோடிருப்பவர்களைவிட நம்மோடிருப்பவர்கள் அதிகம்'' (வச 16). தொடர்ந்து எலிசா ஏறெடுத்த ஜெபமாவது: ''கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும்!'' கர்த்தர் கேயாசியின் கண்களைத் திறக்கவே, அவன் எலிசாவைச் சுற்றி அக்கினிமயக்

குதிரைகளாலும் இரதங்களாலும் அந்த மலை நிறைந்திருப்பதைக் கண்டான் (வச 17). இச்சம்பவம் நமக்குத் தரும் படிப்பினையின் அடிப்படையில்தான் எபேசு விசுவாசிகளுக்காய் அப்போஸ்தலன் பவுல் அற்புதமான ஒரு ஜெபம் ஏறெடுத்தார்: எபே 1:17-19, ''தேவனானவர் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடம் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமையின்படியே விசுவாசிக்கும் நம்மிடம் காண்பிக்கும் தமது வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்று நீங்கள் அறியும்படி, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.''

■ ஆன்மீகப் போராட்டம் என்ற பொருளில் அளவுக்குமீறி ஆர்வம் காட்டுவது கிறிஸ்துவையே நினைத்துக்கொண்டிருப்பதற்குப் பதிலாகச் ***சாத்தானைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கும் அவல நிலைக்கு*** நம்மைத் தள்ளிவிடும். கர்த்தராகிய இயேசுவைக் குறித்துத் தாவீதரசன் தீர்க்கதரிசனமாய் உரைத்தது: ''கர்த்தரை எப்பொழுதும் எனக்குமுன் நிறுத்தி நோக்கிக்கொண்டிருக்கிறேன்; நான் அசைக்கப்படாதபடி அவர் எனது வலப்பக்கத்தில் இருக்கிறார். அதினால் என் இருதயம் மகிழ்ந்து, என் நாவு களிகூர்ந்தது, என் உடலும் நம்பிக்கையுடன் தங்கியிருக்கும். என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விட்டுவிடமாட்டீர்; உமது பரிசுத்தர் அழிவைக் காணவிடமாட்டீர்'' (அப் 2:25-27; சங் 16:8-11). நரகம் அல்லது பாதாளத்தின் வல்லமைமீது வெற்றி என்பது தேவனை மனதிலிருத்திக்கொள்வதாலேயே கிட்டும். கானான் நாட்டை வேவு பார்த்துவரப் பன்னிருவரை மோசே அனுப்பினார். அவர்களில் பத்து பேர் துர்ச்செய்தி கொண்டுவந்தனர். அந்நாட்டிலுள்ளோர் இராட்சதர்கள் போலவும் அவர்களுக்குமுன் இவர்கள் வெட்டுக்கிளிகள் போலவுமே தோன்றியதாய்ப் புலம்பினர் (எண் 13:33). காலேப் மற்றும் யோசுவா ஆகிய மற்ற இருவரது கண்களுமோ தேவன்மீது பதிக்கப்பட்டிருந்தன. கானானியர் இவர்களுக்கு இட்லித்துண்டுபோல் தெரிந்தனர்! (14:9).

இஸ்ரவேலர் கானானுக்குள் நுழைந்தபோது, எரிகோ நகரைப் பார்த்ததும் பயந்து கலங்கினர். ஆனால், எரிகோ நகர்வாசிகள் இஸ்ரவேலரைக் குறித்துப் பயமடைந்ததுதான் உண்மை! எரிகோவை வேவு பார்த்துவர யோசுவா அனுப்பிவைத்த இரு வாலிபரிடம் ராகாப் கூறிய வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''கர்த்தர் உங்களுக்கு நாட்டை ஒப்புக்கொடுத்தார் என்றும், உங்களைப் பற்றி எங்களுக்குத் ***திகில்*** பிடித்திருக்கிறது என்றும், உங்களைக் குறித்து நாட்டின் குடிமக்கள் எல்லாரும் ***சோர்ந்துபோயினர்*** என்றும் அறிவேன்'' (யோசு 2:9). ஆம், பிரியமானவர்களே, நம்மைக் குறித்துத்தான் பிசாசுக்குப் பயம்! சீர்திருத்தவாதி மார்டின் லூத்தரது ஒரு கூற்று: ''ஒரே வார்த்தையால் சாத்தானை வீழ்த்திவிடலாம்; அந்த வார்த்தைதான் கிறிஸ்து!'' போப்பின் ஆதிக்கத்திற்கு எதிராகக் குரலெழுப்ப இச்சீர்திருத்தச் செம்மலுக்குத் துணிச்சல் தந்தது இந்த விசுவாசமே. நமது கண்கள் இயேசுவின்மீது பதிக்கப்பட்டுவிடாதிருக்கப் பிசாசு தன்னாலியன்ற அத்தனையையும் செய்வான். விழிப்பாயிருங்கள்!

■ முடிவாக ஒரு சிந்தனை: சாத்தான் நம்மைத் தாக்கினாலும் தேவன் அவனுக்கு நியமிக்கும் ***வரம்பை*** அவனால் மீற முடியாது. இச்சத்தியத்தைத் திடமாய் உறுதிப்படுத்துவது யோபுவின் சரிதையே. தேவன் யோபுவுக்கு கொடுத்திருந்த ஆசிகளினாலேயே அவன் அவருக்குப் பயந்து நடந்தான் என்று சாத்தான் தேவனுக்குமுன் சவால் விட்டிருந்தான் (யோபு 1:10). அவன் தேவனிடம் சொன்னது: ''உமது கையை நீட்டி அவனுடைய உடைமைகளையெல்லாம் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைப் பழிக்கமாட்டானோ என்று பாரும்!'' (வச 11). இதற்குக் கர்த்தர் கொடுத்த பதில்: ''இதோ, அவனுடையவை யாவும் உன் கையிலிருக்கிறது; அவன்மீது மட்டும் உன் கையை நீட்டாதே'' (வச 12). இங்கு யோபுவின் உடலை விட்டு, உடைமைகளை மட்டும் பாதிக்கச் சாத்தானை தேவன் அனுமதித்தார். இன்னும் யோபு தனது உத்தமத்தில் உறுதியாயிருப்பதைக் கண்ட சாத்தான் கர்த்தரிடம் விடுத்த அடுத்த சவால்: ''தோலுக்குப் பதிலாய்த் தோலையும், தன் உயிருக்குப் பதிலாய்த் தனது உடைமை அனைத்தையும் மனிதன் கொடுத்துவிடுவான். ஆனாலும் நீர் உமது கையை நீட்டி, அவனது எலும்பையும் சதையையும் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மைப் பழிக்கமாட்டானோ பாரும்!''

(2:3-5). அதற்கும் அனுமதித்துக் கர்த்தர் சாத்தானிடம் சொன்னது: ''இதோ, அவன் உன் கையில் இருக்கிறான்; ஆனாலும் அவன் உயிரை மட்டும் தப்பவிடு'' (வச 6). இங்கு யோபுவின் உயிரை எடுக்காமல், உடலை மட்டும் பாதிக்க அனுமதியளிக்கப்படுகிறது. இவையெல்லாவற்றிலும் சாத்தான் தெரிந்துகொண்டது என்ன வெனில், தேவன் யோபுவையும், அவனது குடும்பத்தையும், உடைமைகளையும் சுற்றி ''வேலி'' அடைத்திருந்தார் என்பதே (1:10).யோபுவின் புத்தகத்தில் பின்னர் யோபுவைப் பார்த்துத் தேவன் கேட்டது: ''நான் கடலுக்கு ***எல்லையை*** நியமித்து, அதற்குப் பூட்டுகளையும் கதவுகளையும் போட்டு: ***இம்மட்டும்*** வா, மிஞ்சி வராதே; உன் அலைகளின் பெருமை இங்கு ***அடங்கட்டும்*** என்று நான் சொல்லுகிறபோது நீ எங்கிருந்தாய்?'' (38:10,11).

ஆம், அவன் விரும்பியதையெல்லாம் அல்ல, தேவன் அனுமதிப் பதை மட்டுமே சாத்தான் நமக்குச் செய்துவிட முடியும். ஆன்மீகப் போராட்டங்கள் அனைத்திலும் தேவனது ஏகாதிபத்தியம் (sovereignty) மற்றும் அவரது சர்வ வல்லமை (omnipotence) எப்பொழுதும் நமது நினைவிலிருக்கவேண்டும். நமது திறனுக்கு மிஞ்சி நாம் சோதிக்கப் பட அவர் இடங்கொடுக்கமாட்டார் (1 கொரி 10:13). அவர் நம்மைத் திருத்துவதற்காய்த் தண்டிக்கும்போதும், நாம் ''மண்'' என்றும், சோர்ந்துபோகும் ''மாம்சம்'' என்றும் நினைவுகூருகிறார் (சங் 103:14; ஆதி 6:3).

மார்ட்டின் லூத்தரது (1483-1546) ஒரு பாடலுடன் இவ்வத்தி யாயத்தை நிறைவு செய்கிறேன் —

*விழுங்க வரும் பேய்களால் புவி நிரம்பினாலும்,*
*பயப்படோம்; கர்த்தாவினால் எதிர்த்து நிற்கக்கூடும்.*
*இருளின் பிரபு சீறினாலும், அது*
*வெல்லப்பட்டந்தப் பேய், தள்ளுண்கத் தீர்ந்ததே;*
*ஓர் சொல்லினால் முறியும்!*



# 4

# பிசாசுக்கு இடமில்லை!

## No place for the devil!

நமது ஆன்மீகப் போராட்டம் தேவனது பரம விரோதிக்கு எதி ரானது. எனவே, தேவனுக்குப் பிரியமற்ற அல்லது சாத்தானுக்குப் பிரியமான எதுவும் நமது வாழ்வில் இருக்கக்கூடாது. இங்கு நாம் கவலையீனமாயிருந்தால் சாத்தான்மீது வெற்றியடைய தேவன் அருளியுள்ள வாக்குகள் எதுவும் பலிக்காது. யோசுவாவின் புத்தகத் தில் இதற்கோர் அருமையான எடுத்துக்காட்டு உண்டு. கானான் நாட்டினரை மேற்கொண்டு அந்நாட்டைச் சுதந்தரிப்பர் என இஸ்ர வேலருக்குத் தேவன் வாக்களித்திருந்தார். எரிகோ நகர்மீது அவர்கள் அமோக வெற்றியடைந்து அதைக் கைப்பற்றினர். அங்கு கிடைத்த கொள்ளைப் பொருள் எதனையும் எடுக்கக்கூடாதென்று யோசுவா கண்டிப்பாய் மக்களுக்குக் கட்டளையிட்டிருந்தார். அவை எவ்வளவு உசிதமான பொருட்களாயிருந்தாலும் அவை சபிக்கப்பட்டவை என்றார் அவர். ஆனால் யூதா கோத்திரத்தைச் சேர்ந்த ஆகான் என் பவன் கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வை யையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும், ஐம்பது சேக்கல் நிறை யான ஒரு தங்கக் கட்டியையும் எடுத்து அதை அவனது கூடாரத்தில் புதைத்து வைத்தான் (யோசு 7:21). இஸ்ரவேலர்மீது தேவனது கோபம் எழவே, அவர் அவர்களை ஆயி நகரில் படுதோல்வியடையச் செய்தார் (7:10-12). எரிகோவின் கொள்ளைப் பொருள் எரிக்கப்பட்ட பின்னரே இறைமக்களுக்கு வெற்றி கிட்டியது. இதிலும் சிறந்த எடுத்துக்காட்டு ஏது?

தேவனே நமது தளபதி. அவர் தமது சேவகர் அனைவருக்கும் அனைத்து ஆயுதங்களும் தந்துவிடுகிறார். அதைத் தேவனது ''சர்வ ஆயுத வர்க்கம்'' என்று திருமறை அழைக்கிறது. இந்த ஆயுதத்திற்கு

இரு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றையும் சுருக்க மாய்க் கவனிப்போம் —

**(அ) ஒளியின் ஆயுதம்** (Armour of Light)

இதோ அப்போஸ்தலன் பவுலின் அழைப்பு: ரோ 13:12, ‘‘இரவு கடந்து, பகல் வருகிறது; எனவே இருட்டின் செயல்களை நாம் தள்ளி விட்டு, ஒளியின் ஆயுதங்களை அணிந்துகொள்வோம்.’’ ஒளியின் ஆயுதங்கள் என்றால் என்னவென்று அடுத்து வரும் வசனங்களில் அவர் விளக்குகிறார்: ‘‘களியாட்டும், வெறியும், வேசித்தனமும், காம விகாரமும், வாக்குவாதமும், பொறாமையும் உள்ளவர்களாய் நடவாது, பகலில் நடக்கிறவர்களைபோலச் சீராய் நடப்போம். துராசைக்கு உடலில் இடம் கொடாமலிருந்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அணிந்துகொள்ளுங்கள்’’ (வச 13,14). ‘‘இருட்டுச் செயல்களை’’ அறவே ஒழித்துவிடவேண்டும் (எபே 5:11). இருட்டின் சீர்கெட்ட காரியங்களை அகற்றிவிடும்போதுதான் நாம் ஒளியின் ஆயுதத்தை அணிந்துகொள்ளுகிறோமாம். நமது பாவங்களிலிருந்து மனந் திரும்பி ‘‘ஒளியில்’’ நடக்கவேண்டும் (1 யோ 1:7-9). தங்களது செயல்கள் தீயவையாயிருக்கும்போது இருளையே மக்கள் விரும்புவர் (யோ 3:19-21). தேவப் பிள்ளைகள் இருட்டின் செயல்பாடுகளுக்கு மறுப்பு தெரிவித்துவிட்டதால், அவர்கள் ஒளியின் பிள்ளைகள் என்ற ழைக்கப்படுகின்றனர் (எபே 5:8-11).

**(ஆ) நீதியின் ஆயுதம்** (Armour of Righteousness)

எவருக்கும் பாதகமில்லாமல் எவ்விதம் குற்றமற்ற ஊழியத்தைத் தாங்கள் நிறைவேற்றினர் என்று கொரிந்தியக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் சாட்சியிட்டார். தேவனது ஊழியர் என்ற வகையில் தங்களிடம் காணப்பட்ட ஏறத்தாழ முப்பது நற்பண்புகளை அவர்களுக்குச் சொல் லிக்காட்டினார் (2 கொரி 6:3-10). இந்த நீண்ட பட்டியலில்தான் ‘‘நீதியின் ஆயுதம்’’ என்று குறிப்பிடுகிறார் (வச 7). இந்த ஆயுதத்தை வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் அவர்கள் அணிந்திருப்பதாகக் கூறுகிறார். அதாவது, அவர்களது வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்பட்ட குற்றமற்ற தன்மையை



இவ்விதம் சுட்டிக்காட்டுகிறார். அதாவது, சாம்பல் நிறப்பகுதி என்றோ, கேள்விக்குரிய காரியம் என்றோ, எதுவும் கிடையாது. அநீதியான செயல்கள் இறையரசிற்கு எதிரானவை. பவுலிடமிருந்து நமக்கு வரும் சவால்: ‘‘அநியாயக்காரர் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று அறியீர்களா?’’ (1 கொரி 6:9). அநியாயம் அல்லது அநீதி என்று அவர் குறிப்பிடுவது: வேசி மார்க்கம், விக்கிர காராதனை, விபசாரம், சுயபுணர்ச்சி, ஆண்புணர்ச்சி, திருட்டு, பொரு ளாசை, வெறி, உதாசீனம் மற்றும் கொள்ளை ஆகியவை (வச 9,10). இது மனந்திரும்பாத மனிதனின் வாழ்க்கைப் படம் (வச 11). கிறிஸ்துவுக்குள்ளான புதுவாழ்வுக்குள் இந்தப் பழைய சரக்குகளை யெல்லாம் கொண்டுவரக்கூடாது. நாம் சாத்தானை மேற்கொள்ள வேண்டுமானால் அவனது காரியங்கள் எதனையும் அவனால் நம்மில் சுட்டிக்காட்ட முடியக்கூடாது. நீதிக்கும் அநீதிக்கும் சமரசம் சாத்திய மல்ல (2 கொரி 6:14).

சத்தியம் எனும் இடைக்கச்சை, நீதி எனும் மார்புக் கவசம், சுவி சேஷத்தின் ஆயத்தம் எனும் காலணி, விசுவாசம் எனும் கேடகம், இரட்சிப்பு எனும் தலைக் கவசம், திருவசனம் எனும் ஆவியின் பட்டயம் ஆகியவை பற்றியெல்லாம் நாம் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் நாம் ‘‘ஒளியிலும், நீதியுடனும்’’ வாழ்ந்தால்தான் இந்த ஆயுதங்களால் பயனுண்டு. துர்ப்பாக்கியமாக, ஆன்மீகப் போராட்டக் கருத்தரங்குகளில் ‘‘பரிசுத்தம்’’ (purity) என்பதைவிடப் ‘‘பலம்’’ (power) என்பதே வலியுறுத்தப்படுகிறது. இது பிசாசுக்குத்தான் சாதகம்.

‘‘ஒளியில் வாழ்வு’’ மற்றும் ‘‘நீதியான வாழ்வு’’ குறித்துச் சற்று விளக்கம் காண்போம் —

□ ***ஒளியில்*** வாழ்வு என்றால் தேவனுக்குமுன் ஒளிவுமறைவின்றி வாழ்தலாம். இதைத் தெளிவாக அப்போஸ்தலன் யோவான் விளக்கியுள்ளார்: 1 யோ 1:7-9, ‘‘அவர் ஒளியிலிருப்பதுபோல் நாமும் ஒளியில் நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.’’ நமது பாவங்களை

நாம் மூடி மறைத்தால் தேவனுக்குமுன் பிசாசு நம்மீது குற்றம் சாட்டலாம். நாம் அவற்றைத் தேவனுக்குமுன் திறந்து அறிக்கையிட்டால், கிறிஸ்துவின் இரத்தத்தால் அவர் அவற்றை மூடிவிடுகிறார். அதற்குப் பின்னர் சாத்தானால் நம்மீது குற்றம் சாட்ட முடியாது. சங்கீதம் 32:1-5, நீதிமொழிகள் 28:13 ஆகிய வசனங்களை வாசித்துப் பாருங்கள்.

□ ***நீதியான*** வாழ்வு என்றால் பாவமின்மை என்பதல்ல; தேவனுக்குமுன் அடிபணிதலாம். இதை நமக்குப் போதிக்கும் பகுதி ரோமர் 10:3, ''இஸ்ரவேலர் தேவ நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறதால் தேவ நீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.'' நம்மில் நல்லது என்று எதுவும் கிடையாதே. நமது சொந்த நீதி என நாம் நினைப்பதெல்லாம் தேவனுக்குமுன் அழுக்கான கந்தை தானே (ஏசா 64:6)? சுயநீதிக்காரன் எளிதில் பிசாசுக்கு இரையாகி விடுவான். இரட்சகர் இயேசு தரும் நீதியின் உடையை நாம் அணிந்து நிற்கும்போதுதான் பிசாசு நடுங்குவான். பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் சுத்திகரிப்பைச் சாத்தான் எதிர்த்ததுபோல் நமது பக்தி முயற்சிகளையெல்லாம் சீர்குலைக்க அவன் முயலுவான் (சக 3:1-5).

நீதியான வாழ்க்கை எவ்விதம் வெற்றிக்கு வழிவகுக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள சில திருவசனங்களைப் பார்ப்போம் —

*யாக்கோபு 4:7,* ''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.'' பிசாசை வெற்றிகரமாய் எதிர்கொள்ளத் தேவனுக்கு அடிபணிந்திருத்தல் இங்கு ஒரு நிபந்தனையாய்ச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

*ரோமர் 16:19,20,* ''உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரியவந்திருக்கிறது ... சமாதானத்தின் தேவன் சீக்கிரம் சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போடுவார்.'' தேவனுக்குக் கீழ்ப்படிதலும் சாத்தானைத் தோற்கடித்தலும் எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது, பாருங்கள்.



*சங்கீதம் 81:13,14,* ''ஆ, என் மக்கள் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரம் அவர்கள் எதிரிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் திருப்புவேன்.'' இங்கும் பிசாசை மடங்கடிப்பதற்குத் தேவனுக்கு அடிபணிவது முந்துகிறது.

*மத்தேயு 8:8,9* — விசுவாசத்திற்காய் இயேசுவிடம் பெரும் பாராட்டு பெற்ற நூற்றுக்கதிபதியைக் குறித்து இங்கு வாசிக்கிறோம். அவன் இயேசுவிடம் கூறியதின் பொருள்: ''நான் உயர் அதிகாரிகளுக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனது வேலைக்காரன் உடனடியாய் எனக்குக் கீழ்ப்படிகிறான். ஆண்டவரே, நீர் உமது பிதாவானவரின் அதிகாரத்தின்கீழ் செயல்படுகிறீர். எனவே பிசாசு உமக்குக் கீழ்ப்படிந்தேயாகவேண்டும். கட்டளையாய் ஒரு வார்த்தை சொல்லும், அது போதும்!'' தேவனுக்குக் கீழ்ப்படியாது இருக்க முடியாது என்று வாழ்பவனுக்குப் பிசாசு கீழ்ப்படியாது இருக்க முடியாது. எந்த அளவிற்குத் தேவனது ஆளுகைக்கு அடிபணிந்து வாழுகிறோமோ அந்த அளவுக்குத்தான் பிசாசின்மீது ஆதிக்கம் செலுத்த முடியும்! நீதிக்கு எப்பொழுதுமே ''ஆம்,'' அநீதிக்கு எப்பொழுதுமே ''இல்லை'' என்றே இயேசுவின் வாழ்க்கை அமைந்திருந்தது (எபி 1:9). எனவே தான் அவரால் தைரியமாய்ச் சொல்ல முடிந்த சாட்சி: ''இதோ, உலகின் அதிபதி வருகிறான்; அவனுக்கு என்னிடம் ஒன்றும் இல்லை'' (யோ 14:30).

நமது வாழ்வில் எப்பாவத்திற்கு இடமளித்தாலும் நாம் பிசாசுக்கு இடங்கொடுத்துவிடுகிறோம். ஆனாலும் பிசாசுக்கு அதிகச் சாதகமான ஒரு சில பாவங்களைத் திருமறை சுட்டிக்காட்டுகிறது —

***கோபம்:*** எபே 4:26,27, ''நீங்கள் கோபப்பட்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் மறையுமுன் உங்கள் எரிச்சல் தணியட்டும். ***பிசாசுக்கு*** இடங்கொடாமலும் இருங்கள்.'' கோபமே வராது ஒரு நாளைக் கழிக்கும் விறுவிறுப்பானதொரு நபரைக் காண்பதரிது. நாம் பரிசுத்தத்தில் வளர வளர நம்மைக் கோபப்படுத்தும் காரியங்கள் அதிகரித்துக்கொண்டே போகும். நமது தரத்தின்படி சரியில்லை என நமக்குத் தோன்றும் காரியங்கள்மீது நமது சகிப்பு குறைகிறது. அது

நியாயமான கோபமோ இல்லையோ சூரியன் மறையுமுன் நமது கோபமும் மறைந்துவிடவேண்டும் என்பதே திருமறைப் போதனை. கோபம் நீடிக்குமானால் அது எரிச்சலாய் மாறிவிடும். அது நம்மையும் பிறரையும் பாதிக்கும். தனது திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அது பிசாசுக்கு இடங்கொடுக்கிறது (எபி 12:15).

***மன்னியாமை:*** 2 கொரி 2:10,11, ''எவனுக்கு நீங்கள் மன்னிக் கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்; மேலும் எதை மன்னித்திருக்கிறேனோ, அதை உங்கள் பொருட்டு கிறிஸ்துவின் முன்னிலையில் மன்னித்திருக்கிறேன். ***சாத்தானால்*** நாம் மோசம் போகாதபடி அப்படிச் செய்தேன்; அவனது தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே.'' திருச்சபையில் தவறு செய்த ஒரு நபரைத் தண்டித்துத் திருத்தும் ஒழுங்குமுறையைக் குறித்துப் பவுல் இங்கு எழுதிக்கொண்டிருக்கிறார். சபைத் தலைவர்கள் அவனை மன்னித்துவிட்ட பின்னர், சபையார் முழுமனதுடன் அவனை அர வணைத்து ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லையேல் சாத்தான் அவனை மனத்தொய்வுக்குள் ஆழ்த்தி அவனை அழித்தேவிடுவான். இவ்விதக் காரியங்களில் மட்டுமல்ல, யாருக்குமே எதிராய் நாம் வைராக்கியத்தை மனதில் தக்க வைக்கக்கூடாது. கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்ததுபோல நாம் பிறரை மன்னிக்கவேண்டும் (எபே 4:32). இல்லையேல் நாம் பிசாசின் கைகளில் ஆயுதங்களாகி விடுவோம். அவனை எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக அவனது படையில் சேர்ந்துவிடுவோம்!

***கவலைகள்:*** 1 பேது 5:7-9, ''தேவன் உங்களை விசாரிக்கிற வரானதால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள். அறிவுத் தெளிவுடன் விழிப்பாயிருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய ***பிசாசானவன்*** கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாம் என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.'' மலைப்பிரசங்கத்தில் நமதாண்டவர் கவலைக்கெதிராய் நிறைய பேசி யிருக்கிறார். நமது எல்லாத் தேவைகளுக்கும் நாம் சார்ந்திருக்க வேண்டிய தேவனது தந்தைத்துவத்தை நமக்கு அவர் நினைப்



பூட்டுகிறார் (மத் 6:25-34). கவலையும் கண்ணீரும் நிறைந்துள்ள வேளைகளில் விண்ணப்பத்தோடும் துதியோடும் இயேசுவின் மார்பில் நாம் சாய்ந்துவிடாவிட்டால் பலங்குன்றிப் போவோம் (பிலி 4:6,7). அப்படிப்பட்ட வேளைகளில்தான் பிசாசு நம்மைத் தாக்கு வான். இயேசு நமது பாவங்களை மட்டுமல்ல, பாரங்களையும் சுமப் பவர் (மத் 11:28-30)! ஜோசப் ஸ்கிரிவென் (1819-1886) இயற்றிய பழம்பாடலைப் பாடுவோம் —

What a friend we have in Jesus!

*பாவச் சஞ்சலத்தை நீக்கப் பிராண சிநேகிதருண்டே;*
*பாவப் பாரம் தீர்ந்து போக மீட்பர் பாதம் தஞ்சமே.*
*சால துக்க துன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால்*
*துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்.*

> *கஷ்ட நஷ்டம் உண்டானாலும் இயேசுவண்டை சேருவோம்,*
> *மோச நாசம் நேரிட்டாலும் ஜெப தூபம் காட்டுவோம்;*
> *நீக்குவாரே நெஞ்சின் நோவை பலவீனம் தாங்குவார்,*
> *நீக்குவாரே மனச்சோர்பை தீய குணம் மாற்றுவார்.*

*பலவீனமானபோதும் கிருபாசனம் உண்டே!*
*பந்து ஜனம் சாகும்போதும் புகலிடம் இதுவே!*
*ஒப்பில்லாத பிராண நேசா, உம்மை நம்பி நேசிப்போம்,*
*அளவற்ற அருள் நாதா, உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.*



**5**

# உள்ளேயே இருக்கும் எதிரி

## The enemy within

நமக்குள்ளேயே இருக்கும் போராட்டங்களில் நாம் வெற்றிபெறாவிடில் வெளியிலிருக்கும் எதிரியை நாம் மேற்கொள்ள முடியாது. இதைச் சுட்டிக்காட்டும் ஒரு நீதிமொழி இதோ: ''தன் ஆவியை அடக்காத மனிதன் மதில் இடிந்த பாழான நகர்போலிருக்கிறான்'' (நீதி 25:28). அப்போஸ்தலன் பவுலின் சாட்சியைக் கேளுங்கள்: 1 கொரி 9:26,27, ''நான் நிச்சயம் இல்லாதவனாய் ஓடுவதில்லை; காற்றை அடிக்கிறவனாய்ச் சிலம்பம் பண்ணமாட்டேன். பிறர்க்குப் பிரசங்கம் பண்ணும் நானே ஆகாதவனாய்ப் போகாதபடி, என் உடலை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.'' உடலுக்கடுத்தவைகளில் தன்னடக்கமாய் இருப்பதையே இப்பகுதியில் அவர் குறிப்பிடுகிறார் (வச 25). நமக்குள்ளேயே நடக்கும் இரு போராட்டங்களைத் திருமறை சுட்டிக்காட்டுகிறது—

**(அ) மாம்சத்தில் போராட்டம்** (Battle in the flesh)

இப்போராட்டத்தைத் தனது சொந்த அனுபவமாகப் பவுல் விளக்கும் திருமறைப் பகுதி: ரோ 7:22-24, ''உள்ளான மனிதனுக்கேற்றபடி தேவனது நியாயப்பிரமாணத்தின்மீது பிரியமாயிருக்கிறேன். ஆனாலும் என் மனதின் பிரமாணத்திற்கு விரோதமாய்ப் ***போராடுகிற*** வேறொரு பிரமாணத்தை எனது உறுப்புகளில் இருக்கக் காண்கிறேன்; அது என் உறுப்புகளில் உண்டாயிருக்கும் பாவப் பிரமாணத்திற்கு என்னைச் ***சிறையாக்கிக்*** கொள்ளுகிறது. பரிதாபமான மனிதன் நான்! சாவுக்குரிய இந்த உடலிலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்?'' இது உள்ளான மனிதனுக்கும் புறம்பான மனிதனுக்குமுள்ள போராட்டம்; அல்லது மனதுக்கும் உடலுக்குமுள்ள போராட்டம். மனதை உடல் மேற்கொள்ளும்போது, அதைச் ''சிறையாக்குதல்'' என்கிறார் அப்போஸ்தலன். விடுதலையாயிருப்பவனே எதிரியோடு போராட முடியும்; ஒரு கைதி அப்படிச் செய்ய முடியாது. வேறு வார்த்தைகளில் சொன்னால், எந்த அளவுக்கு நமது மனது நமது உடலை அடக்க முடிகிறதோ அந்த அளவுக்குத்தான் சாத்தானுக்கு எதிராக நமக்குப் பலம் இருக்கும். கலாத்தியர் 5:17இலும் இதே சத்தியத்தைப் பவுல் குறிப்பிடுகிறார்: ''மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் ஆசை கொள்கிறது; நீங்கள் செய்ய விரும்புபவற்றைச் செய்யாதபடி, இவை ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கின்றன.'' தேவனுடைய ஆவிக்கும் நமது ஊனியல்புக்கும் இடையிலான போராட்டமாக இங்கு விளக்கப்பட்டிருக்கிறது.

மாம்சத்தின்மீது வெற்றி என்றால் என்னவென்று இங்கு விளக்க வேண்டும்; ஏனெனில், இப்புரிதல் இல்லாததால் விசுவாசிகளில் பெரும்பாலானோர் குற்றவுணர்வுக்குள்ளும் தீர்ப்புணர்வுக்குள்ளுமே காலங்கழிக்கின்றனர். மாம்சத்தின்மீது வெற்றி என்றால் மாம்சத்தை ''ஒழித்துவிடுதல்'' (eradication) அல்ல; அதிலிருந்து ''விடுவிக்கப்படுதல்'' (emancipation) ஆகும். இவ்விதம் விடுவிக்கப்படவே பவுல் வாஞ்சித்துக் கதறுகிறார்: ரோ 7:24, ''சாவுக்குரிய இந்த உடலிலிருந்து யார் என்னை ***விடுதலையாக்குவார்?''*** இதில் கிடைத்த வெற்றியை 8:2இல் கொண்டாடுகிறார்: ''கிறிஸ்து இயேசுவினால் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து ***விடுதலையாக்கிற்றே!''*** வேறு வார்த்தைகளில் சொன்னால், சாவுக்கேதுவான உடல் அல்லது மரணத்துக்கேதுவான பிரமாணம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது; ஆனால் நான் அதிலிருந்து ''விடுபட்டு'' விட்டேன்! இங்கு ஊனியல்பு ஒழிந்துபோவதில்லை என்பதை அழுத்தந்திருத்தமாய் அப்போஸ்தலன் யோவான் சுட்டிக்காட்டுகிறார்: ''நமக்குப் பாவம் இல்லை என்று நாம் சொன்னால், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுகிறோம்; நம்மிடம் உண்மை இல்லை. நமது பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநீதியையும் நீக்கி நம்மைத் தூய்மையாக்கத் தேவன் உண்மையுள்ளவராயிருக்

கிறார்'' (1 யோ 1:8,9). முப்பது வயதில் அல்ல, தொண்ணூறு வயதில் யோவான் இவ்விதம் எழுதுகிறார் என்பதை மனதிற்கொள்ளுங்கள்! அதாவது, அறுபது ஆண்டுகளுக்குமேல் ஆண்டவரோடு நடைபோட்ட பின்னர்!

இந்த விடுதலையை நாம் அனுபவமாக்குவது எங்ஙனம்? **(அ)** பழைய மனிதன் செத்துவிட்டான் என்று எண்ணிக்கொள்வதுதான் முதல் படி. ரோ 6:11, ''உங்களைப் பாவத்திற்குச் செத்தவர்களாகவும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று உயிர் வாழ்கிறவர்களாகவும் *எண்ணிக்கொள்ளுங்கள்.*'' இதன் பொருள் என்னவெனில், பாவத்திற்கு மறுப்பு தெரிவித்துக்கொண்டேயிருக்க வேண்டும். அடுத்த வசனம் இதனையே குறிப்பிடுகிறது: ''நீங்கள் உடலின் துராசைகளின்படிப் பாவத்திற்குக் கீழ்ப்படியச் செய்யும், சாகக்கூடிய உங்கள் உடலில் பாவம் ஆளாதிருப்பதாக'' (வச 12). எல்லாவிதச் சோதனைகளும் இருக்கத்தான் செய்யும். அவைகளுக்கு உடன்படாமல் அவற்றை எதிர்க்கவேண்டும். சாகும்வரை சோதிக்கப்பட்டுக்கொண்டேதான் இருப்போம்! தளர்த்தவே முடியாது. **(ஆ)** அடுத்து, நமது உடலுறுப்புகளைத் தேவனுக்கு *ஒப்புக்கொடுக்க* அறிவுறுத்தப்படுகிறோம். வசனம் 13, ''உங்கள் உறுப்புகளை அநீதியின் ஆயுதங்களாய்ப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாய்த் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் உறுப்புகளை நீதிக்குரிய ஆயுதங்களாய்த் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.'' இதை நாம் செய்வது எப்படி? 19ஆம் வசனத்தில் எளிய வார்த்தைகளில் அப்போஸ்தலன் இதனை விளக்குகிறார்: ''அக்கிரமத்தை நடப்பிக்க முன்னே நீங்கள் உங்கள் உறுப்புகளை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாய் ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்க உங்கள் உறுப்புகளை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்.'' விலக்கப்பட்ட எதனையும் தொடுவதற்கு உங்கள் கைகளை அனுமதியாதிருங்கள். சோதனை நிறைந்த இடங்களுக்கு உங்களை இழுத்துச் செல்ல உங்கள் கால்களை அனுமதியாதிருங்கள். தகுதியற்ற வார்த்தைகளைப் பேச உங்கள் உதடுகளை அனுமதியாதிருங்கள். பயனற்றதும் பக்திவிருத்தியற்றதுமானவைகளைக் கேட்க உங்கள் காதுகள் திறந்திருக்கவேண்டாம். இவ்விதம் நமது உடலின் உறுப்புகளை ஒவ்வொன்றாய்த் தேவனுக்கு அர்ப்பணித்து, அடிக்கடி இந்த ''உயிருள்ள பலியை'' நமக்கு நாமே நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும் (ரோ 12:1).



**(இ)** மூன்றாவதாக, நமது ''மாம்சத்திற்கு,'' அதாவது ''ஊனியல்பிற்கு,'' எதிராக நமது ''ஆவியைப்'' *பலப்படுத்தவேண்டும்.* அந்தகாரத்தின் வல்லமை உச்சக்கட்டத்தில் செயல்பட்டுக்கொண்டிருந்த சோதனை வேளையில் இயேசு தமது சீடரிடம் கெத்செமனே தோட்டத்தில் கூறியது நினைவிருக்கிறதா? ''நீங்கள் சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளது தான், மாம்சமோ பலவீனமானது'' (மத் 26:41). நமது வாழ்வின் எக்கட்டத்திலும் விழிப்புள்ள ஜெபத்தின் மூலமாகவே நாம் நமது பலவீன மாம்சத்தைப் பலப்படுத்த முடியும். ஜெப வாழ்வில் ஏற்படும் தளர்வு நம்மைத் தோல்விக்கு நடத்திவிடும். ஜெபிக்க வேண்டிய வேளையில் சீடர்கள் தூங்கிவிட்டதால் அவர்கள் சந்தித்தத் தோல்விகளை நாமறிவோம். **(ஈ)** நான்காவதாக, நாம் ஆவியின் கனியை *விளைவிக்கவேண்டும்.* வெளிப்படையான ''மாம்சத்தின் செயல்களைப்'' பட்டியலிட்டவுடன், பவுல் ''ஆவியின் கனி'' குறித்து எழுதுகிறார் (கலா 5:19-21,22-23). ''ஆவியின் கனிக்கு எதிரான சட்டம் எதுவுமில்லை'' என்று முடிக்கிறார். அதாவது, பாதகமானதைச் சாதகமானது வென்றுவிடுகிறது. அநீதியை நீதி தோற்கடிக்கிறது. இருட்டை வெளிச்சம் அகற்றித் தள்ளுகிறது.

தேவனது உதவியுடன் நாம் முக்கியமான இப்படிகளை எடுக்கும்போது, வெற்றி உத்திரவாதமாகிறது: ரோ 6:14, ''நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்பதால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது.'' ஆம், நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொண்டால் உடலின் துராசைகளுக்குப் பலியாக மாட்டோம் (கலா 5:16). அதாவது, தேவனது ''கிருபை'' மற்றும் அவரது ''ஆவியானவர்'' மூலம் பாவத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் ஆற்றல் பெறுகிறோம்.

**(ஆ) மனதில் போராட்டம்** (Battle in the mind)

உண்மையான பக்தி மனதில்தான் குடிகொள்ளும். எனவேதான், நமது ''உடல்களைத்'' தேவனுக்கு உயிர்ப்பலியாய் ஒப்புக்கொடுப்ப தோடு, நமது ''மனதிலும்'' புதுப்பிப்பு பெறவேண்டும் (ரோ 12:1,2). உலகின் போக்கோடு ஒத்துப்போவதற்கு மறுப்பு தெரிவித்து நமது கண்ணோட்டத்திலேயே ஒரு மாற்றம் பெறுவதுதான் மனதில் புதுப்பிப்பு எனப்படும்.

இப்போராட்டம் பிரதானமாக நமது மாம்சத்திற்கு எதிரானதல்ல, நமது மனதிற்கு எதிரானது. 2 கொரிந்தியர் 10:3-5 இதனை விளக்கமாய் எடுத்துரைக்கிறது: ''நாங்கள் மனுவுடலுடன் நடக்கிறவர் களாயிருந்தாலும், மனுவுடலின்படி போராடுகிறவர்கள் அல்ல. எங்கள் போராயுதங்கள் மனுவுடலுக்கடுத்தவைகளாயிராமல், அரண்களைத் தகர்க்கிறதற்குத் தேவ பலமுள்ளவைகளாயிருக் கின்றன. அவைகளால் நாங்கள் ***தர்க்கங்களையும்,*** தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்பும் எல்லா மேட்டிமைகளையும் தகர்த் தெறிந்து, எந்த ***எண்ணத்தையும்*** கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.'' நமது சிந்தனைகளே நமது வாழ்க்கையின் தரத்தை நிர்ணயிக்கின்றன. ''ஒருவனது இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்'' (நீதி 23:7அ). நமது சிந்தனை சரியாயிருந்தால் நமது சொற்கள் சரியாயிருக்கும் (22:11; 23:15,16; மத் 12:34). நமது சொற்கள் சரியாயிருந்தால் நமது செயல்கள் அல்லது நடக்கை சரியாயிருக்கும் (யாக் 3:2ஆ). நமது எண்ணங்கள் எவ்வளவு முக்கியம் பாருங்கள்! நமது சிந்தனை யையே பிசாசு முதலாவது தாக்குவதில் ஆச்சரியமில்லையே! முதலாவது யூதாசின் மனதில் பிசாசு பண ஆசையெனும் விதையை விதைத்தான்; அதைத் தொடர்ந்து நடந்தது நமக்குத் தெரியும். அனனியா-சப்பீராள் காரியமும் அப்படியே.

தீய எண்ணங்களுக்கு மறுப்பு தெரிவிப்பது உடனடி அற்புதம் அல்ல. அது பயிற்றுவித்து வளர்க்கப்படவேண்டிய பழக்கம். பிலிப்பியர் 4:8இல் அதற்கான வழிமுறையைப் பவுல் தருகிறார்: ''சகோதரரே, உண்மையுள்ளவை எவையோ, ஒழுக்கமுள்ளவை



எவையோ, நீதியுள்ளவை எவையோ, கற்புள்ளவை எவையோ, அன் புள்ளவை எவையோ, பாராட்டுதற்குரியவை எவையோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவற்றையே சிந்தித்துக்கொண்டிருங்கள்.'' ''எவையோ'' என்ற சொல்லை இங்கு அப்போஸ்தலன் ஆறு முறை பயன்படுத்தியிருக்கிறார்; அழகாய்க் கச்சிதமாய்ச் சொல்லவேண்டு மானால் ஒரு முறை ''எவையோ'' என்றால் போதுமே! இங்குதான் அதற்கான அழுத்தம் தெளிவாகிறது. பவுலின் அறிவுரையை எதிர்மறையாய்ச் சொல்லவேண்டுமானால், ''அசுத்தமான, அனா வசியமான எண்ணங்களையெல்லாம் வடிகட்டி எறிந்துவிடுங்கள்.'' உங்கள் தலைக்குமேல் கழுகுகள் பறப்பதைத் தவிர்க்க முடியாது; ஆனால் உங்கள் தலைமீது அவை கூடு கட்டுவதைக் கட்டாயம் தவிர்க்கலாம்! சில வேளைகளில் அப்பறவைகள் நமது தலைமீது முட்டையிடவும் குஞ்சு பொரிக்கவும்கூட இடங்கொடுத்துவிடு கிறோம்! நமது மனதைக் குப்பைத்தொட்டியாக்கிவிடக்கூடாது. எப் பொழுதாவது ஆபாசமானதும் ஆரோக்கியமற்றதுமான எண்ணம் மனதில் நுழையுமானால் ஆவியானவரின் உதவியுடன் அதைத் தூக்கியெறிந்து, பிலிப்பியர் 4:8இன் நற்காரியங்களால் மனதை நிறைத்துக்கொள்ளுங்கள்.

உலகச் சிந்தையும் போக்கும் கொண்டவர்களைப்போல நாம் சிந்திக்க முடியாது. இதோ, பவுல் எச்சரிப்புடன் தரும் அறிவுரை: எபே 4:17,18, ''மற்றப் புறவினத்தார் தங்கள் வீணான ***சிந்தையில்*** நடப்பதுபோல் நீங்கள் இனி நடவாதிருங்கள். அவர்கள் ***புத்தியில்*** இருளடைந்து தங்கள் இருதயக் கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினால் தேவனது ஜீவனுக்கு அந்நியராகின்றனர்.'' கபடும், தெய்வபயமின்மையும் நிறைந்துள்ள மக்களோடு சகவாசம் கொள்ளும்போது நமது எண்ணங்கள் எளிதில் கறைப்பட வாய்ப்புண்டு. பிரிந்து வாழவேண்டும் என்ற திருமறை உபதேசத் தத்துவங்களை நாம் அலட்சியப்படுத்தக்கூடாது. கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடம் காணப்படும் ''மாம்ச இச்சை'' மற்றும் ''மாம்சீகச் சிந்தை'' ஆகியவற்றிற்கு எதிராய் நமது நடையைக் காத்துக்கொள்ள வேண்டும் (எபே 2:1-3). அப்பொழுதுதான் தேவனது இரக்கம், அன்பு, கிருபை ஆகியவற்றின் நிறைவை நாம் அனுபவித்துக்

கொண்டாட முடியும் (வச 4,5). ஊனியல்பின் துராசை மற்றும் கபடுள்ள மனது ஆகிய இரு எதிரிகளையும் நாம் நெடுகவே மேற்கொண்டு வாழ்ந்தால் வெளியே இருக்கும் எதிரியை எளிதில் தோற்கடிக்கலாம். ''உங்கள் தொலைக்காட்சிப்பெட்டியை அணைக்கவே உங்களுக்குச் சக்தி இல்லையேல், சாத்தானின் அரண்களை எப்படித் தகர்க்கப்போகிறீர்கள்?'' என்று சவால் விடுகிறார் பக்தன் லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994).

இவ்வத்தியாயத்தில் மேற்கண்ட பத்திகளில் நான் எழுதியுள்ளவற்றைப் *''பாவத்தை மேற்கொள்ள ஏழு படிகள்''* என்று ஒரு சுருக்கக் குறிப்பாய்த் தயாரித்துள்ளேன். உங்களுக்குப் பயனளிக்க அதனை இங்கு தருகிறேன் —

## பாவத்தை மேற்கொள்ள ஏழு படிகள்

போராட்டம்

உள்ளே (ரோ 7:22-25) | வெளியே (எபே 6:12,13)

- தேவனது *''சர்வ'' ஆயுத வர்க்கத்திற்கு* ஒரு பொதுவான பெயர் — ***''நீதியின்*** *ஆயுதங்கள்''* (2 கொரி 6:7)

### வெற்றிக்கு ஏழு படிகள் —

**1. தீர்மானியுங்கள்.** (Decide)

''நான் (அப்பாவத்தைச்) செய்யக்கூடாது''

தானி 1:8,9 ... நாம் தீர்மானிக்காவிடில் ***தேவன்*** உதவமுடியாது.
1 யோ 5:18 ... நாம் தீர்மானித்தால் ***சாத்தான்*** தொடமுடியாது.

நீங்கள் இவ்விதத் தீர்மானம் எப்பொழுதாவது எடுத்ததுண்டா? தோல்வியடைந்தாலும், எழுந்து திரும்பவும் தீர்மானியுங்கள்.

''தீர்மானங்களைக் கடைப்பிடிக்காவிடில் தீர்மானமெடுத்துப் பயனென்ன?'' எனும் பொய்யை நம்பாதீர்.
நீங்கள் ஏழு முறை விழுந்தாலும் ... (நீதி 24:16)



**2. சார்ந்திருங்கள்.** (Depend)

அ) கிறிஸ்து முடித்துள்ள செயலில் ...

— அவரது இறப்பு, அடக்கம், உயிர்த்தெழுதலில் நம்மை அடையாளப்படுத்திக்கொள்ளுதல்.
ரோ 6:3-5 ... *''அறியீர்களா?''*

கிறிஸ்துவின் வெற்றி நமது வெற்றி.
கிறிஸ்துவே நமது நீதியாகிவிட்டார் (1 கொரி 1:31)

ஆ) நம்மில் குடியிருக்கும் ஆவியானவரின் வல்லமையில் ...

ரோ 8:10-13 ... *பாவம் ... ஆவியானவர் ... நீதி ...*
கடவுளே உங்களில் குடிகொண்டுள்ளார்!
எல்லாச் சக்திகளுக்கும் பெரியவர் அவர் (1 யோ 4:4)

**3. அறிக்கையிடுங்கள்.** (Declare)

*''எழுதியிருக்கிறதே''* — திருவாக்குகள்
— திருக்கட்டளைகள்

அ) உங்களுக்கே சொல்லிக்கொள்ளுங்கள்.
எ.கா.) பொருளாசைக்குச் சோதிக்கப்படுகையில் (எபி 13:5,6)

ஆ) தேவனிடம் சொல்லுங்கள்
எ.கா.) பிதாவிடம் இயேசு சொன்னது (எபி 10:7)

இ) பிசாசிடம் சொல்லுங்கள்.
எ.கா.) வனாந்திரத்தில் இயேசு (மத் 4:4,7,10)

கிரமமாய்த் தவறாது வேதத்தைத் தியானிப்பதும், வசனங்களை மனனம் செய்வதும் இவ்விதம் அறிக்கையிடப் பயிற்சியாகும்.

**4. விட்டகலுங்கள்.** (Desert)

அ) சோதனையான ***இடங்கள்*** (places)

*''பாவிகளின்* ***வழி*** *...*
*பகடிபண்ணுவோரின்* ***இருக்கை*** *...''* (சங் 1:1)

நீதி 4:14,15 ... *தீயோருடைய* ***வழி***
5:8 ... *அவளுடைய வீட்டின்* ***வாசல்***

ஆ) சோதிக்கும் **நபர்கள்** (persons)

1 கொரி 15:33,34 ... *ஆகாத சகவாசம்* ...
யோசேப்பு சிறந்த எடுத்துக்காட்டு (ஆதி 39:7-12)



எதையும் அனுமதிக்கும் கலாச்சாரவுலகில் வாழும்
நமக்கு இச்செயல் மிக முக்கியம் —

2 பேது 2:5 ... நோவா
:6-8 ... லோத்து | லூக் 17:26-29

பேழைக்குள் நோவா நுழைந்தான்;
சோதோமைவிட்டு லோத்து வெளியேறினான்.

**5. மறுத்திடுங்கள்.** (Deny)

தீத்து 2:11-13 ... *அவபக்தியை வெறுத்து* ...
உலகின் பாவ இச்சைகளுக்கு ''மறுப்பு;''
தேவனது சித்தத்தின்மீது ''விருப்பு'' (1 யோ 2:15-17)

வாழ்வின் நியாயமான இன்பங்களில்கூட அளவுக்கு மீறுதல்
ஆபத்தானது, கவனம்! —

1 கொரி 7:29-31 ... வரம்புகள் நியமியுங்கள்; அடிப்படைத்
தேவைகள் சந்திக்கப்படுவதில் திருப்தியடையுங்கள்.

**6. மகிழ்ந்திருங்கள்.** (Delight)

இறைமக்களோடு ஐக்கியம் (2 தீமோ 2:22)
இறைமக்களோடு தொழுகை (சங் 122:1,4)



இவ்விரண்டிலும் நமக்கு ஆர்வம் குறையுமானால்,
நம்மில் ஏதோ தவறிருக்கிறதென அறிந்துகொள்ளலாம்.

சில பாவங்களை மேற்கொண்டு வாழ உடன் விசுவாசிகளின்
ஐக்கியமும் உதவியும் இன்றியமையாதது —

திருச்சபையெனும் கிறிஸ்துவின் உடல் உறுப்புகள்
(பலங்குன்றியவை, பலமானவை)

எ.கா.) ஓரினச் சேர்க்கையாளர், போதைக்கு அடிமைகள், ...
இவர்களுக்கெல்லாம் பிற விசுவாசிகளது
உதவி அவசியம்.

**7. விடுவியுங்கள்.** (Deliver)

கட்டப்பட்டிருப்போரை விடுவிக்கச் செல்லுங்கள்
(லூக் 4:18,19)
பிரச்னைகளிலிருப்போருக்கு உதவுங்கள் (ஏசா 61:3)
ஆத்துமாதாயத்தில் தீவிரமாயிருங்கள் (யோ 10:16)

அ) இப்பயிற்சியினால் கூடுதல் பலம் பெறுவீர்கள்.

ஆ) கீழ்த்தர இன்பங்களில் நாட்டம் மறையும்.

இ) உங்களிடமிருப்பதைப் பிறருடன் பகிரும்போது,தேவனி
டமிருந்து கூடுதல் கிருபை பெறுவீர்கள் (நீதி 11:25,30)

■ **முடிவுரை**

இயேசு திரும்ப வரும்வரை, நடைமுறைப் பரிசுத்தம் காத்திட,
எதிர்நீச்சல் போட்டுக்கொண்டேயிருங்கள் (வெளி 22:11,12)

■

*இயேசுவின் பின்னால் நான் செல்வேன்,*
*திரும்பிப் பார்க்க மாட்டேன்;*

*சிலுவையே முன்னால், உலகமே பின்னால்,*
*இயேசு சிந்திய இரத்தத்தினாலே என்றும் விடுதலையே!*

— தந்தை S.J. பெர்க்மான்ஸ்

# 6

# எதிர்ப்பும் எதிர்மறையும்

(வாலிபர், நங்கையருக்கு ஒரு செய்தி)

**Unpleasant Surprises**

மறுபிறப்பில் நீ தொடங்கியுள்ள மறுவாழ்வில் எப்பொழுதும் சவால்கள் நிறைந்திருக்கும். கிறிஸ்தவ வாழ்வானது மலர்களாலான படுக்கையென நீ நினைத்திருந்தால் ஏமாற்றமடைவாய். எதிர் பாராததை எதிர்பார்! நீ ஏறத்தாழ உடனே சந்திக்கவேண்டிய ஏழு காரியங்கள் இதோ —

**1. உலகத்தால் பகைக்கப்படுவாய்.**

விண்ணகத்திற்குத் திரும்பிச் செல்லுமுன், தமது பிரிவுரைகள் ஒன்றில் இயேசு தமது சீடரைப் பார்த்து, ''உலகம் உங்களைப் பகைத் தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன் என்னைப் பகைத்த தென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும். நீங்கள் உலகத்தாராயிராததால் ... உலகம் உங்களைப் பகைக்கிறது'' என்றார் (யோ 15:18,19). பின் னர் தமது தந்தையை நோக்கி வேண்டியபோதும் அதையே சொன் னார்: ''நான் உமது வார்த்தையை அவர்களுக்குக் கொடுத்தேன்; நான் உலகத்தான் அல்லாததுபோல அவர்களும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப் பகைத்தது'' (யோ 17:14).

கிறிஸ்துவை உலகம் புகழாதிருக்கும்போது, நம்மைப் புகழுமோ? கிறிஸ்துவை அன்று புறக்கணித்த உலகின் நிலை இன்று கூடுதல் மோசமாகியிருக்கிறதே தவிர முன்னேறவில்லை. நல்லதைத் தீதானது விரும்பமுடியாததுபோல ஆபேலைக் காயீன் நேசிக்க முடி யாது (1 யோ 3:10-13). பிசாசின் பெரும்பான்மையினர் இறைவனின் சிறுபான்மையினரை முழுக்க முழுக்க வெறுத்து எதிர்த்துக்கொண்டே இருப்பர். கடவுளும் சாத்தானும் சமரசமாக முடியாதே!



உலகம் தன்னைப் பாவத்திற்கு விற்றுவிட்டது. அது முழுவதும் கறைபடிந்த நிலையிலுள்ளது. ஆனால் இப்பொழுது கடவுளது பிள்ளையாக மாறியிருக்கும் நீ பாவத்தை விரும்ப முடியாது. திருமறை கூறுவது அதுதான்: ''பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவம் செய்கிறான்; பிசாசின் செயல்களை அழிக்கும்படிக்கே இறைமகன் வெளிப்பட்டார். தேவனால் பிறந்த எவனும் (தொடர்ந்து) பாவம் செய்யான். ஏனெனில் அவரது வித்து அவனுக்குள் நிலைத்திருக் கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவம் செய்ய (செய்து கொண்டேயிருக்க) மாட்டான்'' (1 யோ 3:8,9).

உலகப் பாணியில் வாழ நீ மறுக்கும்போது பிசாசின் கடுப்பிற்கும் அவனது ஏஜண்டுகளின் கோபத்திற்கும் உன்னால் தப்ப முடியாது. பரீட்சைகளில் எல்லாரும் சேர்ந்து பார்த்து எழுதுவது இன்று சாதாரணமாகிவிட்டது. நீயோ உனது உத்தமத்தில் உறுதியாக நிற்கத் தீர்மானித்தால், கெட்ட வார்த்தைகளுக்கும் அடியுதைகளுக்கும் நீ ஆளாகலாம். நெருங்கிய நண்பர் சிலரைக்கூட நீ இழக்க நேரிடும். ஆனால் இயேசு உன்னை நேசிக்கிறார் என்பதை மறந்துவிடாதே! இயேசுவைப் போன்ற ஆருயிர்த் தோழனுண்டோ? அவர் உன்னை ஒருபோதும் கைவிடார்.

**2. சமரசம்பண்ண அழைக்கப்படுவாய்.**

உலகம் உன்னைப் பகைக்கும்; ஆனால் உன்னைக் கண்டும் காணாமலும் விட்டுவிடாது. திரும்பவும் உன்னைத் தன்னிடமாய் இழுத்துக் கொள்ளத் தன்னாலியன்ற அத்தனையும் செய்யும். கவனம்!

சிலுவைக்குப் போகாதபடி இயேசுவைத் தடுக்கப் பிசாசு எவ் வளவாய் முயன்றான்! அவரது பணியை நிறைவேற்றுவதிலிருந்து அவரைத் திசைதிருப்ப ஏராளம் தடைகளைக் கொண்டு வந்தான். இயேசுவோ பிசாசிற்குத் திரும்பத் திரும்ப மறுப்புச் சொல்லி தமது அழைப்பை நிறைவேற்றுவதில் உறுதியாயிருந்தார். அவர் சிலுவை யில் தொங்கிய வேளையிலும் பாதசாரிகள் அவரைப் பார்த்து, ''சிலுவையிலிருந்து இறங்கிவா'' என்று சவாலிட்டனர்.

கடவுளிடம் செல்ல பல வழிகளில் இயேசுவும் ஒரு வழி என்று நீ சொல்லும்வரை ஒரு பிரச்னையுமிருக்காது. முப்பத்துமுக்கோடி தேவர்களோடு இயேசு நாதரையும் சேர்த்துக்கொள்ள இந்தியருக்குத் தாராள மனதுண்டு! ஆனால் கிறிஸ்து ஒருவரே நம்மை இரட்சிக்க முடியுமென்றும், ''நாம் இரட்சிக்கப்படும்படி வானத்தின் கீழெங்கும் மனிதரிடையே அவரது பெயரேயன்றி வேறொரு பெயர் கொடுக்கப் படவில்லை'' என்றும் நீ சொல்லும்போதுதான் கோபக்கனல் அம்பு கள் உன்னை நோக்கிப் பறக்கும் (அப் 4:12).

எம்மதமும் சம்மதம்தான்; ஆனால் கிறிஸ்தவம் ஒரு மதமல்லவே. கிறிஸ்தவம் என்றால் கிறிஸ்துவே. அது ஓர் உறவு. இறைவனிடம் செல்ல தாம் ஒருவரே வழி என்று சரித்திரத்தில் என்றும் எங்கும் எவரும் இயேசு சொன்னதுபோல் சொன்னதில்லை (யோ 14:6).

அனனியா, மிசாவேல், அசரியா எனும் யூத வாலிபர் மூவர் பாபி லோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுச் சென்றனர். அவர்களது அறி வாற்றலில் வியந்த அரசன் அவர்களை உயர்ந்த பதவிகளில் அமர்த் தினான். ஆனால் தான் நிறுத்தின பொற்சிலையை யாவரும் வணங்க வேண்டுமென அரசாணை விடுவித்தபோது, இவ்வாலிபர் மூவரும் கண்ணியமாக ஆனால் உறுதியாக மறுத்தனர். கோபங்கொண்ட அரசன் அவர்களை நெருப்புச் சூளையில் தூக்கியெறியும்படித் தனது சேவகருக்குக் கட்டளையிட்டான். ஆனால் இயேசு நாலாவது வாலி பராக இம்மூவருடன் நெருப்பில் சேர்ந்து அவர்களைக் காப்பாற்றி னார்! உணர்ச்சியூட்டும் இச்சம்பவத்தைத் தானியேல் 1 & 3 அத்தி யாயங்களில் வாசி.

உடன் மாணவரோ, ஆசிரியரோ, யார் பயமுறுத்தினாலும் கலங் காதே. பயமின்றி உன் விசுவாசத்தைப் பறைசாற்று. ''ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், உடலை மட்டும் கொல்லுகிறவர் களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம் ... மனிதர்முன் என்னை அறிக் கைபண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகிலிருக்கிற என் பிதாவின்முன் அறிக்கைபண்ணுவேன்'' என்றார் இயேசு (மத் 10:28-33). உனது இல்லத்தினரே உனக்கு எதிராய்த் திரும்பினாலும் ஆச்சரியப்படாதே (வச 34-36). எல்லா மனிதரையும் மதித்து நட.



ஆனால் உனக்காக உயிர் கொடுத்தவர் கிறிஸ்து ஒருவரே. எனவே உனது முழு ஆன்மா, ஆவி, ஆற்றலுடன் அவருக்கு அன்பு செலுத்தி அவருக்கே ஆராதனை செய்.

### 3. அநியாயமாய்த் தண்டிக்கப்படுவாய்.

இது அநியாயமும், அக்கிரமமும், அநீதியும் நிறைந்த உலகம். பல மற்றோரும் பக்தியுள்ளோரும் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்படுகின் றனர்; தீயவரோ சும்மா திரிகின்றனர். இவ்விதச் சூழலில் கர்த்தரது திருவசனம் தொனிப்பாக உன்னோடு பேசுவதாவது: ''பொல்லாதவர் களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள் மேல் பொறாமை கொள்ளாதே ... கர்த்தரை நோக்கி அமர்ந்து, அவ ருக்குக் காத்திரு; தங்கள் வழியில் வெற்றி காண்போர் மற்றும் சூழ்ச்சி கொள்வோர்மீது எரிச்சலடையாதே'' (சங் 37:1,7).

கிறிஸ்துவின் மனதும் ஆவியும் உனக்கிருந்தாலொழிய அநியாய மாய்ப் பழிசுமத்தப்படும்போது நீ அமைதியாய், பொறுமையாய் இருக்கமுடியாது. ''ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட் டால் வெட்கப்படாமலிருந்து அதற்காக (அப்பெயரைக் கொண்டிருக் கிறதினால்) கடவுளைப் புகழட்டும்'' (1 பேது 4:16). ''இதற்காக நீங் கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்க ளுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தமது அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். அவர் பாவம் செய்யவில்லை, அவரது வாயிலே வஞ்சகம் காணப்பட வுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், துன் புறுத்தப்படும்போது அச்சுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்பு வழங்கு பவரிடம் தம்மை ஒப்படைத்தார்'' (1 பேது 2:21-23).

யோசேப்பின் அதிகாரியின் மனைவி அவனோடு உடலுறவு கொள்ள யோசேப்பை இழுத்தபோது அவன் மறுத்து ஓடினான். அவளோ அவனைப் பொய்யாகக் குற்றஞ்சாட்டிச் சிறையிலடைத் தாள். யோசேப்பு சிறையில் பொறுமையாக இறைவாக்குகளைச் சிந்தித்துக்கொண்டிருந்தான். கர்த்தர் அவனுக்காக அற்புதமாகச் செயல்பட்டு அவனைச் சிறையிலிருந்து சிங்காசனத்திற்கு மாட்சி

யாக அழைத்துச் சென்றார். விளங்கிக்கொள்ள முடியாத சூழல்களில் யோசேப்பை உனக்கு மாதிரியாக எடுத்துக்கொள் (ஆதி 39-41; சங் 105:16-22).

உனது மனச்சாட்சி கடவுளுக்குமுன் சுத்தமாயிருக்கும்வரை எதைக் குறித்தும் கலங்கிச் சோர்ந்துபோகாதே. உனக்கு விரோதமான பொய்க் குற்றச்சாட்டு எதுவாயிருப்பனும் அக்காரியத்தைக் கடவுளது கரத்தில் விட்டு விடு. அவரே நீதியுள்ள நீதிபதி. அவர் உனக்காக வழக்காடுவார். தமது வேளையில் அவர் நியாயத்தை நிலைநிறுத்து வார். ஆனாலும் ''அவரது வாக்குப்படியே நீதி குடிகொண்டிருக்கும் புதிய விண்ணுலகும் புதிய மண்ணுலகும் வருமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' (2 பேது 3:13).

**4. ஏமாற்றங்களினால் வியப்படைவாய்.**

''இயேசுவிடம் வா; உனது இன்னல்கள் யாவும் தீர்ந்துவிடும்!'' இவ்விதப் பொய்யான வாக்குகளை நம்பி ஏமாந்துபோகாதே. இப்படி ஒன்றையும் விவிலியம் போதிக்கவில்லை. இப்பொய்யை அநேகர் நம்பி ஏமாந்துள்ளனர். உனது போராட்டங்களிலும் பிரச்னைகளிலும் நீ இப்பொழுது தனியாக இல்லை என்பதுதான் உண்மை. தந்தை யானவர் தமது அன்பை உன்மீது அபரிமிதமாகச் சொரிந்துகொண்டி ருக்கிறார். குமாரனானவர் தமது கிருபையை உனக்குப் பூரணமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். ஆவியானவர் தமது உறுதுணையை உனக்கு நிரந்தரமாக அருளி உன்னைத் தேற்றிக்கொண்டிருக்கிறார். ஆனால் ''நாம் பல வேதனைகள் வழியாகவே இறையரசில் நுழைய வேண்டும்'' (அப் 14:22).

கீழ்வரும் திருமறைப்பகுதிகளைக் கவனமாகப் படி. அப்பொழுது வாழ்க்கையின் சவால்களைச் சந்திக்கச் சரியான ஆயத்தம் பெறு வாய் —

*பிரசங்கி 7:14,* ''வாழ்வு காலத்தில் ஆசிகளை அனுபவித்திரு, தாழ்வு காலத்தில் சிந்தனை செய்; மனிதன் தனக்குப்பின் வருவ தொன்றையும் கண்டுபிடியாதபடி தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக் கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்.'' ஞானிகளிலெல்லாம்



ஞானியானவனது வார்த்தைகள் இவை. உனது வாழ்வில் நலமான நாட்களையும், அப்படியே கடினமான நாட்களையும் கட்டளையிடு பவர் கடவுளே.

*சங்கீதம் 74:16,* ''பகலும் உம்முடையது, இரவும் உம்முடையது; தேவரீர் சூரியனையும் சந்திரனையும் படைத்தீர்.'' படைப்பாண்டவர் மீதுள்ள பூரண நம்பிக்கையின் விளைவே இவ்வறிக்கையாகும். சூரியன் என்றுமே உதிக்காத அல்லது அஸ்தமிக்காத உலகை நீ விரும்புவாயோ? உலகிலும் நம் வாழ்விலும் சமநிலையை அமைத் துள்ள ஆண்டவருக்குத் துதியுண்டாகட்டும். உண்மையாகவே அது ''நல்லது'' (ஆதி 1:1-5,14-18).

*புலம்பல் 3:38-40,* ''உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும் நன்மையும் புறப்படுகிறதில்லையோ? உயிருள்ள மனிதன் முறையிடுவானேன்? ... நாம் நமது வழிகளைச் சோதித்து ஆராய்ந்து ஆண்டவரிடம் திரும்புவோம்.'' ஏமாற்றங்கள், தோல்விகள், இன்னல்கள் இவையெல்லாம் கர்த்தரிடம் நமது கவனத்தை ஈர்க்கும் கருவிகளாம். அப்பொழுது நாம் நம்மை ஆய்ந்தறிந்து அவருக்குமுன் கீழ்ப்படிதலோடு நடக்க வாய்ப்புண்டாகிறது.

வேகமாக ஆமணக்குச் செடி வளர்ந்தபோது மிகவும் மகிழ்ந்து, அதைப் பூச்சி தின்றுவிட்டபோதோ வெகுவாக எரிச்சலடைந்த யோனாவைப் போலிராதே (யோனா 4:5-9). மாறாக, கொடுத்தாலும் எடுத்தாலும் கர்த்தரது பெயரைப் போற்றிய யோபுவைப் போலிரு (யோபு 1:21,22).

**5. பெருமையடித்துக்கொள்ளச் சோதிக்கப்படுவாய்.**

தனது அழகையும் ஞானத்தையும் குறித்துப் பெருமையடித்ததால் லூசிபர் விழுந்தான் (எசேக் 28:11-19). இச்சோதனை எவரையும், அதிலும் குறிப்பாக வாலிபர் நங்கையரை, விட்டுவைக்காது. எனவே தான் பேதுரு, ''இளைஞரே, முதியவர்களுக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குக் கடவுள் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால் ஏற்ற வேளையில் கடவுள் உங்களை உயர்த்தும்படி அவ

ரது பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' என்று இளைஞருக்குக் குறிப்பாக எழுதினார் (1 பேது 5:5,6).

மனிதர் பொதுவாகப் பெருமையடித்துக்கொள்ளும் மூன்று முக்கிய காரியங்களைத் திருவாக்கினன் எரேமியா குறிப்பிடுகிறார்: ஞானம், பலம், செல்வம் (எரே 9:23,24). உன்னால் நன்றாகப் படிக்க முடிந்தால், சீக்கிரம் மனனம் செய்ய முடிந்தால், எதையும் விவேகமாகச் செய்ய முடிந்தால், அதற்காக ஆண்டவருக்கு நன்றி சொல்லு. ஆனால் உனக்கிருக்கும் ஞானம் உனக்குச் சொந்தமென்று எண்ணி விடாதே. அது கடவுளது ஈவு. அறிவில் குறைந்த எவரையும் தாழ்வாய் எண்ணாதே; கடவுளைத் துக்கப்படுத்துவாய். அப்படியே, உனது நல்ல உடலமைப்பிற்காகக் கடவுளைத் துதி; ஆனால் அதைக் குறித்துப் பெருமையடிக்கவோ பலமும் அழகுமற்றோரை மட்டமாக நினைக்கவோ செய்யாதே. செல்வத்தையும் கடவுள் எல்லாருக்கும் ஒரே அளவாகக் கொடுக்கவில்லை. உனக்கு அதிகமிருந்தால், அல்லது நீ அதிகம் சம்பாதித்தால், அது மற்றவர்களுக்கு அதிகம் கொடுக்கத்தான் என்பதை நினைவிற்கொள். முகம், இனம், இடம், உடையலங்காரம், ஆன்மீகம் (face, race, place, lace, grace) ஆகிய எதைக் குறித்தும் பெருமையடிப்பது பிசாசுக்கடுத்தது. அதைவிட்டுத் தூர ஓடிவிடு.

வாலிபன் தீமோத்தேயுவை மூத்த திருத்தூதுவர் பவுல் இவ்விதம் எச்சரித்தார்: ''கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறி. எப்படியெனில், மனிதர் வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர் களாயும், ... இறுமாப்புள்ளவர்களாயும் ... இருப்பார்கள்; இப்படிப் பட்டவர்களை நீ விட்டு விலகு'' (2 தீமோ 3:1-5).

கர்த்தர் அவர்களை ஆசீர்வதித்து உயர்த்தியபோது மனமேட்டிமை யடைந்த அநேக அரசர்கள் மற்றும் தலைவர்களின் சரித்திரம் பைபிளிலுள்ள பழைய ஏற்பாட்டிலுண்டு. அதுவே அவர்களது வீழ்ச்சியாயிற்று. ஆண்டவர் உன்னை ஆசீர்வதிக்கையில், அந்த ஆசீர் வாதத்திலேயே திளைத்துப்போய்விடாதே; ஆசீர்வதிக்கிறவரையே தொழுதுகொண்டிரு.

அடிப்படையாக நான் ஒரு பெருமைக்காரன். பெருமை என்பதற்கு மேற்கோள்காட்ட எனது வகுப்பாசிரியர் கரும்பலகையில் ''ஸ்டான்லி



பெருமையுள்ள ஒரு பையன்'' என்றெழுதிப்போட்டது இன்னும் எனக்கு நினைவிருக்கிறது! காலாகாலத்தில் நான் சீரடைந்துவந்திருக்கிறேன்; இப்பகுதியில் கடவுள் எவ்விதம் என்னிடம் இடைபடுகிறாரென நான் அறிவேன். நெடுகவே முயற்சியெடுத்து கடவுளோடு ஒத்துழைக்காவிடில் எவரும் தனது ஆணவத்தை அடக்குவது சாத்தியமல்ல.

## 6. நிச்சயமற்றவைகளால் குழப்பமடைவாய்.

கிறிஸ்தவ வாழ்க்கையை நம்பிக்கையினாலேயே வாழ முடியும். புலனறிவைக்கொண்டு அதை வெற்றியாய் வாழமுடியாது (2 கொரி 5:6).

மாணவன் என்ற முறையில் பகுப்பாய்வுடன் சிந்திக்கும்படி நீ பயிற்றுவிக்கப்பட்டுள்ளாய். எதையும் ஏற்றுக்கொள்ளுமுன் பரிசோதனைக்கூடத்தின் நிரூபணத்தை எதிர்பார்க்கிறாய். ஆனால் ஆன்மீகக் காரியங்களில் அது முற்றிலும் வேறுபட்டது. ''கடவுள் தம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணியவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனிதனது இதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ அவர் அவைகளைத் தமது ஆவியினால் வெளிப்படுத்தினார்'' (1 கொரி 2:9,10). கிறிஸ்துவுடன் வாழ்வது துவக்கமுதல் முடிவுவரை விசுவாசம்தான். எனவே இறைமக்களின் மிகப் பொதுவான பெயர் ''விசுவாசிகள்'' என்பதாகும். நாம் விசுவாசித்து ஜெபிக்கிறோம், விசுவாசித்துப் பேசுகிறோம், விசுவாசித்து முன்செல்லுகிறோம். ''காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பேறுபெற்றோர்'' என்றார் இயேசு (யோ 20:29).

விசுவாச வாழ்வில் நிச்சயமற்றவை நிறைய இருக்கும். உனது வாழ்க்கைப்பாதையில் ஏராளம் நடுச்சந்திகள் வரும். மாற்றுக்கள் பல இருப்பதால் எதைத் தெரிந்துகொள்வதெனத் திகைப்பாய். ஆனால் நீ உதவியற்றிருக்கமாட்டாய். தமது சித்தத்தை நீ அறிந்துகொள்ளக் கடவுள் பொதுவாக நான்கு உதவிகளை வைத்திருக்கிறார். திருமறையின் அடிப்படைப் போதனை, ஆவியானவரின் உள்ளான சத்தம், தூயவர்களின் பக்தியான ஆலோசனை, மற்றும் சூழ்நிலைப் பொருத்தத்தின் வெளிப்பாடு. இந்நான்கு திசைகாட்டிகளும் ஒரே

கோட்டிலமையும் திசையில் நீ தைரியமாக முன்செல்லலாம். ஒரு வேளை சரியான பாதையிலிருந்து சற்று இடது அல்லது வலது பக்கம் சாய்ந்தால் உன்னைத் திருத்தும் சத்தம் பின்னாலிருந்து கேட்கும் எனவும் கடவுள் வாக்கருளியுள்ளார் (ஏசா 30:21).

''உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர் களிலும் இருந்தன; உமது காலடிகள் தெரியப்படாமற்போயிற்று'' எனப் பழம் பரிசுத்தர் பாடினர் (சங் 77:19). காலெடுத்து வைக்குமுன் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் வேண்டுமென எதிர்பார்க்காதே. நம்பிக்கையில் அடியெடுத்துவை. கடவுள் கரம் பிடிப்பார். அவர் ஆபிரகாமை அழைத்தபோது, ''போகிற இடம் இன்னதென்று தெரியாமல்'' அவர் கீழ்ப்படிந்து கிளம்பினாரல்லவா?

எந்தப் படிப்பு, எந்த வேலை, எந்தப் பெண், எந்த மாப்பிள்ளை, எந்த ஊழியம், இப்படி வாழ்க்கையின் தீர்மானம் எதுவாயிருந்தாலும் மேற்கூறிய நான்கு உதவிகளின் மூலம் உனக்குக் கிடைக்கும் வெளிச்சத்தின் அடிப்படையில் தீர்மானமெடு. கர்த்தரை நம்பு, உன் வழியை அவரிடம் ஒப்புவி, செயல்படு. உனது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும் அவர்தானே! (எபி 12:1,2).

### 7. தியாகம் செய்ய அழைக்கப்படுவாய்.

மார்க்க பக்தியுள்ள குடும்பத்தில் கட்டுப்பாட்டுடன் வளர்க்கப்பட்ட வாலிபன் ஒருவன் இருந்தான். அவன் சட்டப் படிப்பில் ஒரு பட்டதாரி. இயேசுவின் போதனைகள் அவனை வெகுவாய்க் கவர்ந்தன. ''நித்திய வாழ்வையடைய என்ன செய்யவேண்டும்?'' என அவன் ஒருநாள் இயேசுவிடம் கேட்டான். ''திருச்சட்டங்களைக் கைக்கொள்'' என்றார் இயேசு. ''எச்சட்டங்கள்?'' எனத் திருப்பிக் கேட்டான் தம்பி. ''கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, போன்றவை'' என இயேசு பதிலளித்தார். ''இவையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடம் குறைவு என்ன?'' என்று மறுபடியும் வினவினான். அதற்கு இயேசு, ''நீ நிறைவுள்ளவனாயிருக்க விரும்பினால், போய், உன் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடு; அப்பொழுது விண்ணகத்தில்



நீ செல்வந்தனாய் இருப்பாய்; பின்பு என்னைப் பின்பற்றி வா'' என்றார். இப்படி ஒரு பதிலை அவ்வாலிபன் எதிர்பார்க்கவேயில்லை. தலையைத் தொங்கவிட்டு வந்த வழியே திரும்பிப்போனான். செல்வத்தின்மீதுள்ள தனது பிடிப்பை அவனால் தளர்த்திவிட முடியவில்லை (மத் 19:16-22).

இக்கதை திரும்பத் திரும்ப நடக்கிறது. இவ்விதப் பரீட்சைக்கு நீயே அடுத்த நபராயிருக்கலாம். ஒவ்வொருவரது இருதயமும் எங்கேயிருக்கிறதெனக் கடவுள் அறிவார். நமது உரிமைகளையும், சில வேளைகளில் மிகப் பிரியமான உறவுகளையும், தியாகம்பண்ண நாம் அழைக்கப்படுவோம். அது நபருக்கு நபர் வேறுபடும். ஆனால் தியாகமின்றி முன்னேற்றமில்லை. கிறிஸ்துவின் மாதிரியையே நாம் பின்பற்றவேண்டும். அவர் எல்லாவற்றையும், முடிவில் தம்மையும், தியாகம்பண்ணினார். நாம் சிலுவைப் பாதையைத் தவிர்த்து வேறெதையும் தெரிந்துகொள்ளவே கூடாது. சீடத்துவத்தின் நிபந்தனையை இயேசு தெள்ளத்தெளிவாக வரையறுத்தார்: ''ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையைத் தினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றட்டும். தன் உயிரைக் காத்துக்கொள்ள விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என் பொருட்டு தன் உயிரை இழந்துபோகிறவன் அதைக் காத்துக் கொள்வான்'' (லூக் 9:23,24).

''பிடித்துக்கொள்! வைத்துக்கொள்!'' இவையே உலகத்தின் கோஷங்களாம். ஆனால் இறையரசின் முழக்கங்களோ, ''கொடுத்துவிடு! விட்டுவிடு!'' என்பவையாம். இவ்வுலகம் நமது தற்காலிக இருப்பிடந்தான். நீ மறுபடி பிறந்துள்ளதால் நீ விண்ணகக் குடிமகன். இவ்வுலகம் இல்லாதுபோகும். உன்னையும் தமது பிள்ளைகள் யாவரையும் தமது விண்ணக அரண்மனைகளுக்கு அழைத்துச்செல்ல ஆண்டவராகிய இயேசு விரைவில் வரப்போகிறார். இறைவனது மீட்கப்பட்டோரின் கூட்டத்தில் நீ சேர்ந்துவிட்டது என்னே பாக்கியம்!

# 7

# சோதனைகளை மேற்கொள்வது எப்படி?

## How to overcome Temptations

பரிபூரண வெற்றியே தமது மக்களைக் குறித்த இறைச்சித்தமாம். ஆனால் போரின்றி வெற்றியேது? ''சோதனைகள்தான் எனக்கு D.D. பட்டங்களைத் தந்தன'' என்றார் மார்டின் லூத்தர் (1483-1546). ''பரிசுத்தவான்களில் பிரதானமானவனும் பாவங்களில் பிரதானமானதால் சோதிக்கப்படமுடியும்'' என்றார் அந்த வேத வியாக்கியானி மத்தேயு ஹென்றி (1662-1714). சீர்திருத்த விடிவெள்ளி எனப்படும் ஜான் விக்ளிப் (1330-1384) இப்படிச் சொன்னார்: ''மலையுச்சிக்குச் செல்லச் செல்ல காற்றின் விசை அதிகரிக்கும்; அப்படியே வாழ்வில் உன்னதம் ஏக ஏக எதிரியின் சோதனையும் பலக்கும்!''

கிறிஸ்தவ வாழ்வில் மிகச் சாதாரணமான, அதே வேளையில் மிகச் சங்கடமான, பிரச்னையாகிய சோதனை என்பதைக் கண்டும் காணாமலும் இருக்கமுடியாது. விழிப்பாயிருக்கும் விசுவாசிகள் வெகு சிலரே; அவர்களே வெற்றியாயிருப்பவர்கள். சோதனை வருவது பாவமல்ல, அதில் விழுவதுதான் பாவம். விழுந்தவுடன் பிறர்மீது குற்றஞ்சாட்டி, ஏதாவதொன்றின்மீது பழி சுமத்துவது இயல்பு. இதனாலேயே தோல்வி தொடர்கிறது. ஆதாமுக்கும், கிறிஸ்துவுக்கும் வந்த சோதனைகளை முறையே ***ஆதியாகமம் 2,3*** மற்றும் ***மத்தேயு 4*** ஆகிய அத்தியாயங்களிலிருந்து ஒப்பிட்டுப் படித்தேன். நான் பெற்ற பத்துப் படிப்பினைகளை இங்கு தருகிறேன் —

**1. சூழ்நிலையைப் பழிசாட்டக்கூடாது.**

பிசாசின் சோதனையின்போது இயேசு ''வனாந்தரத்தில்'' இருந்தார். அது வெறும் பாறைகளும், மணலும் நிறைந்த பாலைவனம். ஆதாமோ மனிதன் இதுவரை கண்டிராத வளம், வனம் நிறைந்த



''தோட்டத்தில்'' இருந்தான். அங்கு எல்லாமே ஏராளம். வனாந்தரத்தில் இயேசுவுக்கு ஒன்றுமேயில்லை; தோட்டத்தில் ஆதாமுக்கு ஒன்றுமேயில்லாமலில்லை. இயேசு சோதனையை வென்றார்; ஆதாமோ அதில் விழுந்தான். நந்தவனத்திலிருந்தாலும் பாலைவனத்திலிருந்தாலும், நிறைவிலிருந்தாலும் குறைவிலிருந்தாலும், கடவுள் நம்மிடம் வெற்றியையே எதிர்பார்க்கிறார். சூழ்நிலைகளுக்குக் ''கீழ்'' அல்ல, ''மேல்'' இருக்கவே அழைக்கப்பட்டுள்ளோம்.

இதோ அப்போஸ்தலன் பவுலின் வெற்றி முழக்கம்: ''கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மாள்வானாலும் வாழ்வானாலும் ... தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்'' (ரோ 8:36-39). இங்கு மணமுடிப்பின் சித்திரமொன்றைக் காண்கிறோம். ஒருவரையொருவர் காதலித்தபின் பிற காரியங்களைப்பற்றி என்ன கவலை? ''வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும்'' பிரியாது நிற்க வாக்குக் கொடுத்துவிட்டார்களே! அறுந்துபோகாத பாசக் கயிறல்லவோ அவர்கள் கட்டிய தாலி! வானத்திலும் பூமியிலும் நமக்கெதிராகச் செயல்படும் எல்லாச் சக்திகளைவிட இயேசுவின் அன்பு பெரியது. சூழ்நிலைகளின் அழுத்தத்திற்கும் இழுப்புக்கும் நாம் இணங்க மாட்டோம். அனுமதியில்லாது சோதனைகள் உள்ளே நுழையாது!

**2. ஐக்கியமின்மையைப் பழிசாட்டக்கூடாது.**

உதவிக்கோ, உறவுக்கோ இயேசுவுக்கு அங்கு யாருமில்லை. காட்டு மிருகத் துணை மட்டுமேயிருந்தது. தனியாகவே சோதனையை மேற்கொள்ள வேண்டியதிருந்தது. ஆனால் ஆதாமுக்கு ஏவாளும், ஏவாளுக்கு ஆதாமும் உதவிக்கும், உறவுக்கும் இருந்தனர். சாத்தானுக்கெதிராக இருவராய் எதிர்த்து நின்றிருக்கலாம். ஆனால் தோற்றனர். இயேசுவோ வென்றார்.

படித்து முடித்துக் கல்லூரி ஜெபக்குழுக்களை விட்டுச் செல்லும் மாணவ மாணவியர் பலர் பின்வாங்கிக் குளிர்ந்துபோகின்றனர். ஐக்கியமின்மையே காரணமெனச் சாக்கு சொல்லுகின்றனர். விசுவாசிகளின் ஐக்கிய அனலில் பாதுகாப்பும் பலமும் அதிகம்தான். அதனால் நமது தனிப் பொறுப்பு இல்லாது போகாது. ''நம்மில் ***ஒவ்வொருவனும்*** தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்'' (ரோ 14:12). ஐக்கியம் பேராசீர்வாதம்; ஆனால் தனிமையில் விழுவதை தேவன் காணாதிரார். ஏதோவொரு காரணத்தினால் விசுவாசிகளேயில்லாத ஓரிடத்தில் நாமிருக்க நேர்ந்தால் கூடுதல் கவனம், விழிப்புடன் இருப்பது நமது பொறுப்பாகும். ஐக்கியத்தில் அறிந்த யாவும் தனிமையில் அப்பியாசிக்கப்பட வேண்டும்.

சோதனை வேளையில் யோசேப்பு தனியாகவே இருந்தார். சிறையோ, சிம்மாசனமோ, அவருக்கு ஐக்கியமேது? தனித்தே நிற்க வேண்டியதிருந்தது. ஆனால் தேவன் பக்கம் நின்றதால் வெற்றியாய் வெளிவந்தார்.

தமது பரிசுத்தரின் தசைகளை வலுப்படுத்தச் சிலவேளைகளில் தேவன் அவர்களைத் தமது தீர்மானத்தின்படி தனிமையில் வைக்கிறார். மறுரூப மலையனுபவத்தில் எப்போதும் மயங்கிக்கிடக்க முடியாது. அங்குக் கூடாரம் போட்டு இருந்துவிட முடியாது. சோதனையின் பள்ளத்தாக்குக்கு இறங்கி வந்து வாழ்க்கையின் சவாலைச் சந்திக்க வேண்டும்; தப்ப முடியாது.

### 3. சோதனைகளின் தொடர்ச்சியைப் பழிசாட்டக்கூடாது.

அலையலையாய்ச் சோதனை வந்தும் இயேசு மேற்கொண்டார். மத்தேயு 4இல் மூன்றே சோதனைகள்தான் குறிப்பிடப்பட்டிருந்தாலும் பிசாசு ''சில காலம்'' மட்டுமே அவரை விட்டுச் சென்றான் என நாமறிவோம் (லூக் 4:13). நாம் இடங்கொடுத்தவுடன் அச்சோதனையின் வலு குறையும் அல்லது அது முடியும். இயேசு ஒருபோதும் விட்டுக்கொடுக்காததால் பிசாசு அவரை விடாமல், தனது தந்திரங்களை மாற்றிக்கொண்டு, தனது கோபத்தைப் பெருக்கிக்கொண்டேயிருந்தான். எனவேதான் ''எல்லா வகையிலும்'' நம்மைப்போல் அவர் சோதிக்கப்பட்டார் என வாசிக்கிறோம்.



சோதனை ஒன்றன்பின் ஒன்று வந்தும் இயேசு வென்றார்; ஆதாமோ வந்த ஒரே சோதனையில் தோற்றான்.

''இப்படி அடுத்தடுத்து சோதனை வந்தால் நான் தாங்குவதெப்படி?'' எனப் பொதுவாக மக்கள் புலம்புவதுண்டு. இயேசுவுக்கடுத்து யோபுவைத் தவிர இக்கேள்விக்கு வேறு யாரும் பதில் தரமுடியாது. ஒருவன் யோபுவிடம் வந்து, வேலையாட்களை சபேயர் வெட்டிப் போட்டனர் என அறிவித்தான். ''இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில்'' வேறொருவன் வந்து, தேவ அக்கினி மந்தைகளைச் சுட்டெரித்துப் போட்டது என்றான். ''இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில்'' வேறொருவன் வந்து, கல்தேயர் ஒட்டகங்களையெல்லாம் ஓட்டிக்கொண்டு போய்விட்டனர் என்றான். ''இவன் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில்'' வேறொருவன் வந்து, வீடு விழுந்ததால் அவன் பிள்ளைகள் இறந்துபோனார்கள் என்றான். இவ்விதம் பயங்கரமாய், அலையலையாய் நம்மில் எவருக்கும் சோதனையோ, பரீட்சையோ வந்ததுண்டோ? ''இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவில்லை'' (யோபு 1:13-22). துக்கத்தைத் துதியாக்கினார். இழந்தவற்றிற்காய்ப் புலம்பாது இம்மானுவேலரைப் புகழ்ந்தார். சோதனையின் அகோரம் பாவத்தின் அலங்கோலத்திற்குச் சாக்குப்போக்கல்ல!

''சோதனையைச் சகிக்கிற மனிதன் பேறுபெற்றவன்; அவன் உத்தமன் என்று விளங்கின பின்பு ஜீவ கிரீடத்தைப் பெறுவான்!'' (யாக் 1:12).

### 4. இடத்தைப் பழிசாட்டக்கூடாது.

இயேசுவை வனாந்தரத்திற்கு வழி நடத்தியவர் ஆவியானவர்; அப்படியே ஆதாமைத் தோட்டத்தில் வைத்தவர் தேவன் (மத் 4:1; ஆதி 2:15). இயேசு மேற்கொண்டார்; ஆதாம் மேற்கொள்ளப்பட்டான். நமது தோல்விக்கு நாமிருக்கும் இடத்தின் நிலையையும், தன்மையையும் சாக்காக்க முடியாது.

அவரை எகிப்துக்கு விற்றது அவரது சகோதரரெனினும், ''தேவனே'' யோசேப்பை அங்கு அனுப்பினார் (ஆதி 45:4,5). எகிப்

தின் மார்க்கமே துன்மார்க்கம்தான். ஒருவனைக் கொன்றாகிலும் அவனது மனைவியை எடுத்துக்கொள்ளத் தயங்கார் எகிப்தியர் (ஆதி 12:12). நாட்டின் எல்லா மட்டத்திலும் மட்டரக நடக்கையே. போத்தி பார் என்பவன் பார்வோனின் ஓர் அதிகாரி. அவனது மனைவி வீட்டுக் காரியங்களைக் கவனிக்க வைக்கப்பட்டவன்மீது மோகங்கொண்டா ளென்றால் பாருங்கள் (ஆதி 39:5-7). விபசாரம் விளையாட்டா யிருந்த ஒரு நாட்டில் யோசேப்பு இச்சைக்கு இல்லையென்றார்! கட்டுப்பாடு நிறைந்த கலாச்சாரமுள்ள இந்தியாவிலேயே ஓரினச் சேர்க்கை சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது; விபசாரம் தண்டனைக்குரிய குற்றமல்ல என்றாகிவிட்டது (2018). ஆனால் கிறிஸ்துவின் சீடரோ பரிசுத்தம் குறித்த விவிலியத்தின் போதனைகளின்படியே வாழ வேண்டும்.

நமக்குச் சவால்விட தானியேல் இன்னொரு வாலிபன். பாபி லோனுக்குச் சிறையாக்கப்பட்டுச் சென்றார். அங்கும் அக்கிரமத்தின் பாத்திரம் நிரம்பி வழிந்துகொண்டிருந்தது. விக்கிரகாராதனை, குடி வெறி, இன்னும் அத்தனை பாவங்களும் அங்குச் சாதாரணம். ஆனால் தானியேல் வேறுபட்டு நிற்க வீறுகொண்டார். அரசனின் அறுசுவையான ஆனால் அசுத்தமான ஆகாரத்தை அகற்றினார்.

''ஒரு கிறிஸ்தவ நிறுவனத்தில் மட்டும் எனக்கு வேலை கிடைத்து விட்டால் ...'' என ஏங்கும் கிறிஸ்தவர் பலரை நான் கண்டதுண்டு. பிரியமானவரே, அது எப்படிப்பட்ட இடமாயிருந்தாலும், அங்கு உங்களை வைத்திருப்பது தேவனானால் சாக்குச்சொல்ல உங்க ளுக்கு இடமில்லை.

### 5. உங்கள் அறியாமையைப் பழிசாட்டக்கூடாது.

ஆதாம் ஏவாளுக்கு இறைக்கட்டளை மிகவும் தெளிவானது. அதற்கு வியாக்கியானம் தேவையில்லை. அது எளியது, குறிப்பானது (ஆதி 2:16,17); என்றாலும் தவறினர். ஆனால், கல்லை அப்பமாக்கக் கூடாதென்றோ, கோபுரத்திலிருந்து குதிக்கக்கூடாதென்றோ பிதாவானவர் இயேசுவுக்குச் சொல்லியிருந்ததாகத் தகவல் இல்லை. அப்படியானால் இக்காரியங்களைச் செய்யத் தூண்டிய பிசாசை இயேசு வென்றது எவ்வாறு? அவர் தேவப் பிரமாணத்தின் ''தத்து



வங்கள்'' மீது செயல்பட்டார். அவர் தேவ நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்திருந்தபடியால் தேவத் திட்டங்களைச் சிதறடிக்கச் சத்துரு விரித்த வலையை எளிதாய் அடையாளம் கண்டுகொண்டார்.

கல்லுகளை அப்பமாக்க வந்த முதல் சோதனையில், அவரது குமாரத்துவத்திற்கும் திருவசனத்தின் குறைவின்மைக்கும் சவால் வந்தது. மேலிருந்து குதிக்கச் சொன்ன இரண்டாம் சோதனையில், பகட்டுக்கும் தேவனைப் பரிசோதிக்கவும் அழைப்பு வந்தது. தேவ வல்லமையைச் சந்தேகிக்கும்படிப் பிசாசு இயேசுவைச் சோதித்துக் கொண்டிருந்தான். மூன்றாவது சோதனையில், மேன்மைக்குக் குறுக்கு வழியைப் பிசாசு சொல்லிக்கொண்டிருந்தான். இதில் எந்தவொன் றிற்கு விட்டுக்கொடுப்பதும் தேவனது தத்துவங்களை விலை பேசுவ தாகும்.

''ஐயோ, எனக்குத் தெரியாது; எனவேதான் விழுந்தேன்'' என்று ஒரு நாளும் சொல்லவேண்டாம். தேவன் தமது சத்தியத்தை நமது இருதயங்களில் வைத்துள்ளார். தமது பிரமாணத்தை நமது மனதில் எழுதியுள்ளார் (எபி 8:10). நிறைவான திருமறையைக் கரங்களில் தந்துள்ளார். மட்டுமல்ல, நம்மிலிருக்கும் ஆவியானவர் எதை ஏற்க வேண்டும், எதை எதிர்க்கவேண்டுமென போதித்தவண்ணமிருக் கிறார். ஒவ்வொரு காரியத்திற்கும் தனித்தனியே கட்டளை தேவை யில்லை. ''புகை பிடியாதிருப்பாயாக'' என்று வேதத்தில் கட்டளை கிடையாது! ஆனால் அதற்குரிய தத்துவம் உண்டே. ஆவியானவரின் ஆலயமாம் நமது உடலைக் கெடுக்கக்கூடாது; ஒன்றிற்கும் அடிமைப் படக்கூடாது; இப்படிப் பல.

### 6. பிறரைப் பழிசாட்டக்கூடாது.

விலக்கிய பழத்தைச் சாப்பிட்டாயோ எனத் தேவன் ஆதாமைக் கேட்டபோது அவன் பழியைத் தன் மனைவிமீது போட்டுவிட்டான். ''என்னுடனே இருக்கும்படித் தேவா, நீர் தந்த பெண்மணி அம் மரத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள், நான் சாப்பிட்டேன்'' என் றான் (ஆதி 3:12). இயேசுவுக்கு மிக வலுவான சோதனையொன்று பேதுரு மூலம் வந்தது. எருசலேமில் தாம் எவ்விதமாய்ப் பாடுபட்டுக் கொல்லப்படுவாரென்று இயேசு முன்னறிவித்துக்கொண்டிருக்கை

யில், பேதுரு, ''ஆண்டவரே, இது உமக்கு நேரிடக் கூடாதே'' என்று அவரைக் கடிந்துகொண்டார். சிலுவையைத் தவிர்க்க சத்துருவின் தந்திரத்தை இதில் அடையாளங்கண்ட இயேசு பேதுருவைப் பார்த்து, ''எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே!'' என்றார் (மத் 16: 21-23). தமக்கு மிகவும் நெருங்கியதொரு சீடன் சொன்னார் என்பதால் நொடிப்பொழுதும் இயேசு அதை மதித்தாரில்லை. ஏவாள் அப் பழத்தை ஆதாமிடம் கொடுக்கையில் இதைத்தான் அவன் செய் திருக்க வேண்டும். ''அப்பாலே போ, சாத்தானே'' என்று சொல்ல வேண்டியவன், ''அருகில் வா, சாமந்தியே'' என்றானோ? அந்தோ, மனுக்குலம் விழுந்தது!

நாம் உயிருக்குயிராய் நேசிப்பவரிடமிருந்தும் நமக்குச் சோதனை வரலாம். சற்றும் எதிர்பாராத இடத்திலிருந்தும் சோதனை நம்மைச் சந்திக்கலாம். பிசாசு கருப்பாகக் கொம்போடும் வாலோடுமா வரு வான்? மிக அழகானதொரு மிருகமாய் அவன் தோட்டத்திற்குள் வந்தான். ''சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேடத்தைத் தரித்துக் கொள்வானே'' (2 கொரி 11:14). சோதிப்பவர் உங்கள் நண்பரா யிருந்தாலும் மறுக்கத் தயங்கவேண்டாம். மனிதனை மகிழ்வித்து தேவனை மனமடிவாக்குவதைவிட மனிதனை மனமடிவாக்கி தேவனை மகிழ்விப்பதே மேல். ''நம்மைச் சோதனைக்குள் நடத்திச் செல்லத் தலைவர்கள் ஏராளம்; ஆனால் அவர்களைப் பின்பற்றுவது நமது தவறுதான்'' என்றார் ஒரு பக்தன். ''என் மகனே, பாவிகள் உன்னைக் கவர்ந்திழுத்தாலும் நீ சம்மதியாதே'' (நீதி 1:10). சேர்ந்து செய்யும் பாவத்திற்குத் தனித்துக் கணக்கு கொடுக்கவேண்டும், மறக்கவேண்டாம்!

**7. கடவுளைப் பழிசாட்டக்கூடாது.**

ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கடவுள் ஆன்மீக ரீதிக்கும் மேலாக தனிப்பட்ட, வெளிப்படையான நண்பராகவும், ஆலோசகராகவும், போஷகராகவும் இருந்தார். அவர் தோட்டத்தில் உலாவுகிற ''சத் தத்தை'' அவர்கள் ''கேட்க'' முடிந்தது (ஆதி 3:8). அவர் அவர் களோடு முகமுகமாய்ப் பேசினார். தேவனை இவ்வளவு அருகில் வெளிப்படையாகப் பெற்றிருந்தும் அவர்கள் தோல்வியடைந்தனர். மாறாக, பிசாசு புறப்பட்டுச் சென்ற பின்னரே தூதர்கள் இயேசுவுக்குப் பணிவிடை செய்ய வந்தார்கள் (மத் 4:11).



''அந்த வேளையில் மட்டும் தேவன் எனக்கு உதவி அனுப்பி யிருந்தால் ...'' என்று ஒருபோதும் சொல்லவேண்டாம். ''தேவன் என்னைக் கைவிட்டுவிட்டார்'' என்ற வார்த்தையே கூடாது. நாம் ''உணருகிறோமோ'' இல்லையோ, அவர் இம்மானுவேலாகையால் எப்பொழுதும் நம்மோடுதான் இருக்கிறார். கிருபாசனம் இராப்பக லாய்த் திறந்துதானிருக்கிறது. நமது வாழ்வின் மிகச் சிறிய காரியம் என்பதால் அதில் அக்கறை காட்ட முடியாதளவு தேவனுக்கு அலுவல் இல்லை. ''ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் சகாயம் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத் தருகே சேருவோம்'' (எபி 4:16). நாம் சோதிக்கப்படுகையில் அவர் சும்மா நின்று பார்த்துக்கொண்டிருப்பவரல்ல; பரிதபித்துப் பாது காக்கும் பாவமில்லா ஆசாரியரவர்.

சாத்தான் நம்மீது அலைமோதச் செய்கையில் தேவன் அமைதி யாயிரார். ''வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவி யானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்'' (ஏசா 59:19).

**8. உங்கள் சுபாவத்தைப் பழிசாட்டக்கூடாது.**

பாவமறியா நிலையிலிருக்கும்போதே (state of innocence) ஆதாமும் ஏவாளும் தவறினர் (ஆதி 2:25). இயேசு இவ்வுலகிற்கு வருகையில் நன்மை தீமை பற்றிய அறிவு அவருக்கிருந்தது. அவர் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுத்தார் என்று வாசிக்கிறோம் (எபி 1:9). நம்மைப் போன்ற சுபாவம் அல்லது தன்மை (nature) அவருக்கிருந்தது. ''பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் ... அவர் எவ்விதத்திலும் தமது சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது'' (எபி 2:14-17). நம் மைப் போன்ற உடலிலிருக்கும்போதே அவர் பூரண வெற்றியாள ராயிருந்தார்!

''அது எனது சுபாவம்; நான் அதை எப்படி மாற்றமுடியும்?'' பாவத்தில் விழுவதற்கு இது ஒரு பொதுவான சாக்குப்போக்கு. இங்கு இவ்வுலகில்தானே வெற்றியாய் வாழத் தேவன் நமக்குப் போதுமான வாக்குகளையும், வல்லமையையும் கொடுத்துள்ளார். ''நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே வாழ்வுக்கும் தேவ பக்திக்கும்

வேண்டிய யாவற்றையும் அவரது திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்துக்குண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினால் நமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன'' (2 பேது 1:3,4). யானையை வாக்குப்பண்ணிப் பூனையைக்கூடத் தரமுடியாத இக்கால அரசியல்வாதிகள் போன்றவரல்ல நமது தேவன். அவர்களுக்கு வசனிப்பு உண்டு, வசதி குறைவு. தேவனோ சொல்வதைச் செய்ய அனைத்துக்கும் சொந்தக்காரர். நமது சுபாவத்தை மாற்ற இவ்வளவு வாக்குகளையும், வல்லமையையும் அவர் தரும்போது நமக்குச் சாக்குச் சொல்ல இடமேது?

**9. உங்கள் உடலின் ஆசைகளைப் பழிசாட்டக்கூடாது.**

நாற்பது நாள் உபவாசித்தபின் உண்மையாகவே பசியெடுத்த போதும் இயேசு சோதனையை மேற்கொண்டார். ஆதாமோ எல்லாக் காய்கறி கனி வகைகளும் நிரம்ப இருக்கும்போதே தோல்வியடைந்தான் (மத் 4:2; ஆதி 2:16).

தேவன் நமக்குப் போதுமான அளவுக்கும் அதிகமாகக் கொடுத்திருக்கிறார். திருப்தியாயிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மனைவி மீது திருப்தி, கணவன்மீது திருப்தி, உடைகள்மீது திருப்தி, இவை போன்றவை கட்டாயம் தேவை. ''வயிற்றுக்கு உணவும் உணவுக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப் பண்ணுவார். உடலோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் உடலுக்கு உரியவர்'' (1 கொரி 6:13).

தனது உடலின் துராசைகளுக்கு உடன்பட்டு இன்னொருவரின் மனைவியை எடுத்துக்கொண்ட தாவீதின் மீது தேவன் கோபங்கொண்டார். தமது துக்கத்தையும், ஏமாற்றத்தையும் தீர்க்கன் நாத்தான் மூலம் இவ்விதம் தெரிவித்தார்: ''உன் ஆண்டவனுடைய பெண்களையும் உன் மடியில் தந்து, இஸ்ரவேல் வம்சத்தையும், யூதா வம்சத்தையும் உனக்குக் கையளித்தேன்; இது போதாதிருந்தால், இன்னும் உனக்கு வேண்டியதைத் தருவேன். கர்த்தருடைய பார்



வைக்குப் பொல்லாப்பான இந்தக் காரியத்தைச் செய்து, அவருடைய வார்த்தையை நீ அசட்டைபண்ணினது என்ன?'' (2 சாமு 12:8,9).

மாம்சம் பலவீனமுள்ளதுதானே என்று சொல்லி உங்கள் உடல்மீது பழி போடாதிருங்கள். அதற்காகத்தான் தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்திருக்கிறார். நாம் ஆவிக்கேற்றபடி நடந்துகொண்டால் மாம்ச இச்சையை நிறைவேற்றமாட்டோம். கிறிஸ்துவின் சிலுவையானது உயிர்த்தெழுதலின் வல்லமையால் நமக்கு மாம்சத்தின் மீதும் அதின் ஆசை இச்சைகள் மீதும் வெற்றி தருகிறது (கலா 5:16,24).

மீனுக்கு விருப்பமான புழுவையே சாத்தான் தனது தூண்டிலில் வைப்பான். மனிதர் விரும்பாத ஒன்றை அவன் ஒருபோதும் அவர்களுக்குப் பரிமாற மாட்டான். எச்சரிக்கை! ''நாம் யார் என்பதைக் கண்டுபிடிப்பது நமக்கு வரும் சோதனைகளே'' என்றார் பக்தன் தாமஸ் கெம்பிஸ் (1380-1471). உண்மையல்லவா?

**10. சாத்தானைப் பழிசாட்டக்கூடாது.**

சர்ப்பத்தின் மீது ஏவாள் பழியைப் போட்டுவிட்டாள் (ஆதி 3:13). மறுக்கமுடியாத சோதனையது, எனவேதான் விழுந்தேன் என்று சொல்லிக் கொண்டாளோ? ''புசிப்புக்கு நல்லது ... பார்வைக்கு இன்பம் ... புத்தியைத் தெளிவிக்க இச்சிக்கப்படத்தக்கது'' (ஆதி 3:6). இயேசுவுக்கு வனாந்தரத்தில் வந்த சோதனைகளும் இவ்விதம் முப்பலமானவை (மத் 4:4,7,10). கவர்ச்சிக்குக் குறைவில்லை. ஆனால் அவர் மறுத்தார். ஏனெனில், ''மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவை எல்லாம் பிதாவினால் உண்டானவை அல்ல; அவை உலகத்தினால் உண்டானவை'' என்று இயேசுவுக்குத் தெரியும் (1 யோ 2:16).

பிசாசு வல்லவன்தான்; ஆனால் நம்மிலிருப்பவர் உலகத்திலிருக்கும் அவனிலும் வல்லவராச்சுதே (1 யோ 4:4). நாம் வெற்றியாகத்தான் இருக்க வேண்டும்! பிசாசு தோற்கடிக்கப்பட்ட சத்துருதானே? கிறிஸ்து வெற்றி வேந்தர். கிறிஸ்தோரும் வெற்றி வீரராயிருக்க வேண்டுமே ஒழிய தேவனது எதிரிக்குமுன் சரணடைந்துவிடக் கூடாது.

மறுக்க முடியாத அளவு எச்சோதனையும் பெரியதல்ல. ஏனென்றால், ''மனிதருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திறனுக்குமேல் நீங்கள் சோதிக்கப்பட அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ள வழியையும் உண்டாக்குவார்'' (1 கொரி 10:13).

### முடிவுரை

நமது கடைசி மூச்சுவரை சோதனைகள் நம்மைத் தொடரும். ''அடக்கம் செய்யப்பட்ட மனிதனே இப்பொழுது சோதிக்கப்படாத மனிதன்'' என்றார் ஒருவர்! எந்த நிலையிலும், எந்த இடத்திலும் நாம் சோதிக்கப்படலாம். ''எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று இரட்சித்துக்கொள்ளும்'' என்று ஜெபிக்க இயேசு நமக்குப் போதித்துள்ளார். பத்திரமாய்ப் போய்ச் சேருவோம் என்பதே இறைவாக்கன்றி பாதை எளிதாயிருக்கும் என்பதல்ல! (The landing will be safe, but the passage may not be smooth!)





**8**

# வென்றவர் மூலம் வெல்லுவோம்!

## Victory through the Victor

''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் நமக்கு வெற்றி தருகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!'' (1 கொரி 15:57).

கிறிஸ்துவே தளபதி. நாம் படை வீரர். நம்முடையவை அணு, இரசாயன அல்லது விஷவாயு ஆயுதங்களல்ல, ஆனால் ஆன்மீகப் படைக்கலன்கள். அவைகளால் நாம் எதிரியின் தளவாடங்களைத் தகர்த்தெறிகிறோம் (2 கொரி 10:4,5). அண்டசராசரத்திலும் மிகப்பெரிய வல்லரசு (supra-power) நாம்தான். கிறிஸ்துவிடமிருந்து இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையைப் பெற்றிருக்கிறோமல்லவா? நாம் உன்னதங்களில் உட்கார்ந்திருப்பதால் ஆகாயப்படையில் நம்மை மிஞ்சுவது யார்? (எபே 2:7).

ஆனாலும் எதிரியைக் குறைவாய் எடைபோட்டுவிடக்கூடாது. அவன் அங்குமிங்குமாயல்ல, குறிவைத்துக் கிரமமாய்த் தாக்குவான். அவனது போர் முறையும் தத்துவமும் யுகாயுகமாய்ப் பரிசுத்தவான்களோடு அவன் நடத்திவரும் யுத்த அனுபவத்தின் அடிப்படையிலானது. இன்னும் தனக்குக் கொஞ்சக்காலம் மட்டும் உண்டென்று அறிந்து அவன் எப்பொழுதையும்விட இன்று அதிகமாய்ச் சீறுகிறான் (வெளி 12:12). ஆனாலும், வெற்றி வேந்தர் மூலம் வெற்றி நமதே! வெற்றி பெறும் முறை இதோ —

### 1. கிறிஸ்துவின் மாதிரி மூலம்

தொட்டில் முதல் தொழுமரம் வரை இயேசுவைப் பிசாசு விட்டானில்லை. அவன் அவரைச் சோதிக்காத பகுதியே இல்லை. கிறிஸ்துவோ ஒருமுறைகூட விட்டுக்கொடுக்கவில்லை (எபி 4:15). அவரது தொடர்ந்த முழு வெற்றிக்கான இரகசியங்களைத் திருமறை வெளிப்படுத்துகிறது —

முதலாவதாக, கிறிஸ்து தம்மைப் பிதாவின் ஆளுகைக்கு முற்றிலும் அர்ப்பணித்திருந்தார். உலகிற்குள் நுழைகையில், பிதாவை நோக்கி, ''தேவனே, உமது சித்தத்தின்படிச் செய்ய, இதோ, வருகிறேன்'' எனச் சமர்ப்பணம் செய்தார் (எபி 10:5-7). இதில் பின்திரும்பவே இல்லை. அதிகாரத்திற்கு அடிபணிவோரே அதிகாரம் செலுத்த முடியும். இயேசு வில் இத்தத்துவத்தைப் படைத்தலைவன் ஒருவன் தெளிவாய்க் கண்டான். தந்தையின் கட்டளையின்படியே அவர் செயல்பட்டுக் கொண்டிருந்ததை நன்குணர்ந்தான். எனவேதான் கட்டளை வார்த்தை ஒன்று போதும் என்றான் (மத் 8:8,9). ''தேவனுக்குக் கீழ்ப்படிந் திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்'' என்று யாக்கோபு எவ்வளவு தெளிவாய்ச் சொன்னார் (யாக் 4:7)!

அடுத்து, ஜெபத்தின் மூலம் கிறிஸ்து எப்பொழுதும் விழிப்பா யிருந்தார். விடியுமுன்பும், இருட்டிய பின்பும் தாக்குவதே சிறந்தது என்பது சரித்திரச் சான்று! கவலையீனமாக, சோம்பேறித்தனமாக, எதிர்பாராது இருக்கும் வேளையில்தான் பிசாசு நம்மைப் பெரிதும் தாக்குவான். மனிதர் தூங்குகையில்தானே சத்துரு களைகளை விதைத்துச் சென்றான் (மத் 13:25)? விழித்திருந்து ஜெபியுங்கள் என்பது வெறும் வறட்டுச்சொற்களல்ல. உற்சாக ஆவியைக்கொண்டு பலங்குன்றிய மாம்சத்தை மேற்கொள்ள அது ஒன்றே வழி (மத் 26:41). விட்டுக்கொடுக்க எதிரி இன்னும் மறுத்தால் ஜெபத்தோடு உபவாசத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டும் (மத் 17:21).

பொதுவாகப் பிசாசு பார்க்க நன்றாகவே இருப்பான்! அவன் பெரிய தந்திரசாலி. இயேசுவை உயர்த்துவதில் கரிசனை கொண்டவன்போல் பாலைவனத்தில் அவரிடம் வந்தான் (மத் 4:5-10). நாற்பது நாள் ஜெபத்தில் பெற்ற ஆன்மீகக் கூர்மை கொண்டு அவர் அவனது முகமூடியைக் கிழித்தெறிந்தார். இன்னொரு முறை பிசாசு இயேசுவின் நலம் நாடுபவன்போல் வேடமணிந்து வந்தான். ஜெபத்தில் பெற்ற விழிப்பினால் அப்பொழுதும் இயேசு அவனை அடையாளங்கண்டார் (மத் 16:21-23). ஜெபமே பரலோக ஒலியலைகளைச் சரியாய்ப் பிடிக்கும்.



இயேசு இதைச் சொல்லுவாரா? அவர் இதைச் செய்வாரா? அவர் இதை ஆமோதிப்பாரா? சத்துருவின் சதித்திட்டங்களுக்கு நம்மைத் தப்புவிப்பவை இக்கேள்விகளுக்கான பதில்களே. நான்கு சுவிசேஷங் களையும் அடிக்கடி படித்தால்தான் கிறிஸ்து எவ்விதம் சத்துருவை முறியடித்தாரெனக் கற்றுக்கொள்ள முடியும்.

### உ. கிறிஸ்துவின் இரத்தம் மூலம்

கிறிஸ்துவின் மரணத்தைப்போல் அந்தகாரத்தின் ஆதிக்கங் களுக்கு இடியடி கொடுத்தது வெறொன்றுமில்லை. கிறிஸ்துவின் இரத்தமென்றால் பிசாசுக்கு ஒரே நடுக்கம். சிவப்புக்கயிற்றின் பக்கமே வரமாட்டான். கதவின் நிலைகளில் இரத்தத்தைப் பார்த்தால் அங்கு நிற்கவே மாட்டான்.

குற்றஞ்சாட்டுவதே பிசாசின் தொழில். அதில் ஓயவே மாட்டான். தேவ மக்கள்மீது பழிசாட்டுவதென்றால் அவனுக்கு அவ்வளவு பிரியம். ஆனால் கிறிஸ்துவின் இரத்தத்தால் அவனைத் தோற்கடிக் கலாம் (வெளி 12:11). சத்துருவின் குற்றச்சாட்டுகளைத் துச்சமென இகழ்ந்த பவுல், ''ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ் துவே மரித்தவர் ...'' எனச் சவாலிட்டார் (ரோ 8:34).

பிசாசு நமது மனச்சாட்சியில் குற்றவுணர்வை விதைத்து நம்மை மனமடிவாக்குகிறான், கல்வாரியில் கிறிஸ்து முடித்துவிட்டதை நாம் மறக்கச் செய்கிறான். கண்டனத்தீர்ப்புக்கும் (comdemnation) பாவ வுணர்வுக்கும் (conviction) உள்ள வேறுபாட்டை நன்கறியவேண்டும். ஆவியானவர் தருவது பாவ உணர்வு; பிசாசோ மனதைக் கண்டன வுணர்வினால் வாதிக்க முயலுகிறான். நமது மனச்சாட்சியைச் சுத்திகரிக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தைப்பற்றிய நிச்சயத்தில் உறுதியாயிருப்போம் (எபி 9:14).

கர்த்தருடன் ஒளிவுமறைவின்றி வாழும்போது இம்மானுவேலின் இரத்த ஊற்றினால் இடையறாது கழுவப்படுவோம் (1 யோ 1:7). உணர்வுகள் மாறிக்கொண்டேயிருக்குமாதலால், நாம் அவைகளைச் சார்ந்திருக்கக்கூடாது. மாறாத உண்மையாவது —

*வல்லமை உண்டு, உண்டு, அற்புத வல்லமை*
*இயேசுவின் இரத்தத்தால்;*
*வல்லமை உண்டு, உண்டு, அற்புத வல்லமை*
*ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்!*

''தண்ணீரினாலும் இரத்தத்தினாலும்'' வந்த இயேசு மீதுள்ள விசுவாசமே உலகை வெல்லும் வெற்றி (1 யோ 5:4-6). கிறிஸ்துவின் மரணத்தோடு நம்மை அடையாளப்படுத்திக்கொள்ளுதல் நம்மைப் பாவத்தினின்றும், அதின் அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்கும் (ரோ 6:6,7). அடுத்த முறை பிசாசு உங்களது பழைய பாவமொன்றை நினைவுபடுத்தினால், ''அதெல்லாம் சிலுவையில் முடிந்தது, சும்மா வாயை மூடு'' என்று ஓங்கிச் சொல்லுங்கள்! ''கிறிஸ்துவின் ஒரு சொட்டு இரத்தம் வானம் பூமியிலும் விலையுயர்ந்தது'' என்றார் D. L. மூடி (1837-1899).

### 3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம்

''கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்'' (1 கொரி 15:17). ஆனால், அல்லேலூயா, கிறிஸ்து எழுந்தார்; எனவே நமக்கு வெற்றி!

உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மில் வாழுகிறார் (கலா 2:20). நமது அதிபதியாகிய அவர் உலகிலிருப்பவனிலும் பெரியவர் (1 யோ 4:4). ''நான் உலகை வென்றேன்'' என அவர் முழங்கினார்! யுத்தக்களத்திலிருக்கும் சேவகருக்கு என்னே உற்சாக வார்த்தைகள்! மட்டுமல்ல, ''இதோ, பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது'' என்றும் உறுதி கூறினார் (லூக் 10:19). இதுதான் தரைப்போர் என்பது. இதிலும் எதிரியை முறியடிப்போம்.

உயிர்த்தெழுந்தபடியால் கிறிஸ்துவுக்கு, ''எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்'' தரப்பட்டுள்ளது (பிலி 2:9; அப் 2:32,36). *இயேசென்னும் நாமத்தில் ஜெயம் நமக்குண்டு!* ''கர்த்தர் நாமம் பலத்த



துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்'' (நீதி 18:10). அதிவேக ஏவுகணை எதுவும் அந்த அரணைத் தகர்க்க முடியாது. ஒன்று தவறாமல் எதிரியின் ஏவுகணைகள் அத்தனையையும் வழி மறித்து நாசமாக்குவதே இயேசுவின் நாமம் எனும் எதிர் ஏவுகணையாம்! கோலியாத்தைத் தாவீது எச்சரித்தது நினைவிருக்கிறதா? ''நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடம் வருகிறாய்; நானோ நீ பழித்த இஸ்ரவேலின் இராணுவங்களின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் நாமத்தில் வருகிறேன்!'' (1 சாமு 17: 45). *இயேசென்னும் நாமத்தில் பேய்கள் பறந்தோடும்!* (மாற் 16:17).



உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குமுன் சிறைக்கைதிகள் விடுவிக்கப் பட்டனர். ''சிறைப்பட்டோரைத் தமக்குச் சிறையாக்கினார்!'' (எபே 4:8-10). பின்பு அவர் எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறிப் பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்தார். எப்பொழுது வேண்டுமானாலும் உதவி பெற இக்கிருபாசனத்திடம் நாம் தைரியமாய் வரலாம். நமது போராட்டங்களில் அவர் நமக்காகப் பரிதபிக்கிறார்; நமக்குக் கரங்கொடுக்கிறார். நமது வெற்றியே அவர் நோக்கு. வரங்களைத் தவறாது நமக்கு அனுப்பிக்கொண்டேயிருந்து எல்லாப் போராட்டத்திலும் நம்முடன் குடியிருப்பதை மெய்ப்பிக்கிறார் (சங் 68:18). நாம் அசையோம், ஈஸ்டரின் வல்லமையால்!

### 4. கிறிஸ்துவின் ஆவி மூலம்

நம்மில் வாழும் கிறிஸ்துவின் ஆவியின் மூலமாகத்தான் உடலின் துராசைகளை மேற்கொள்ள முடியும் (ரோ 8:8-10). ''வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தரின் ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க்

கொடியேற்றுவார்'' (ஏசா 59:19). இறையரசின் வல்லமை பரிசுத்த ஆவியானவரில் இருக்கிறது (மத் 12:28).

ஆவியின் கனியானது ஊனியல்பின் செயல்களை அதமாக்கும். ஆவியின் கனிக்கு ''விரோதமான'' சட்டமோ சத்துவமோ கிடையாது (கலா 5:19-23).

நம்மில் வாழும் ஆவியானவர் வைராக்கிய வாஞ்சையால் நம்மைப் பாதுகாக்கிறார் (யாக் 4:5). சமரசப் பேச்சுக்கே இடம் தரமாட்டார் (வச 4). பொல்லாங்கனோடு நாம் எவ்வித உடன்பாடும் கொள்ள அவர் சகிக்கமாட்டார். ஆவியானவர் நம்மைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறார். ஆபிரகாமின் குமாரனுக்கு நம்மை மணமுடிக்கப் பரம வீட்டிற்கு அழைத்துச்செல்லும் வழியில் யாரும் நம்மைத் தொடவிடார்! பணி முடியும்வரை கூடவே இருப்பார். ''ஆவியும் மணவாட்டியும்!'' (வெளி 22:17, வேதத்தின் இறுதிப் பக்கம்!).

நமது உடலே ஆவியானவரின் ஆலயம். மாட்டேன் என்று இச்சையான சோதனைகளுக்கு உடனடி மறுப்பு தெரிவிக்கச் செய்வது இந்த அறிவே (1 கொரி 6:18,19). நமது உடல் பலவீனமுள்ளதுதான், சாவுக்குரியதுதான். ஆனால், எதிரியின் தாக்குதல்களுக்கு எதிர்த்து நிற்க ஆவியானவர் உயிரும் உரமும் தருகிறார் (ரோ 8:9-11). யுத்தம் வலுக்க வலுக்கத் தூயாவியெனும் எரிபொருளால் திரும்பத் திரும்ப நம்மை நிரப்பிக்கொள்ள வேண்டும்.

உள்ளத்தின் பிரமாணத்திற்கும் உறுப்புகளின் பிரமாணத்திற்கும் இடையிலான போராட்டத்தில் பவுல் போர்க்கைதியானார். ''யார் என்னை விடுதலையாக்குவார்?'' எனக் கதறினார். ஒன்றும், ஒருவரும் உதவ முடியவில்லை. இறுதியில் கிறிஸ்து இயேசுவின் ஜீவனுள்ள ஆவியானவர் அவரை விடுவித்தார்! (ரோ 7:23,24; 8:2). இந்த ''மகிமையான விடுதலையை'' எப்பொழுதும் பாடி மகிழ்ந்தார் (8:20). ''நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்'' என வெற்றி முரசு கொட்டினார் (வச 37).

### 5. கிறிஸ்துவின் வசனம் மூலம்

''திரும்பத் திரும்பத் திருவசனத்தைத் தியானிக்காதவன் படுதோல்வியடைவது திண்ணம்; வலிமையும் அனுபவமும் மிகுந்த



எதிரியோடு போராட ஆயுதமணியாது செல்வது எத்தனை மடமை?'' என்றார் பக்தன் மெட்கேல்ப் என்பவர்.

வசனமே வாள். அதுவே துப்பாக்கி. தலைக் கவசம், இடைக்கச்சை, காலணி யாவும் அணிந்து, ஆனால் துப்பாக்கியில்லாது களம் செல்லும் படைவீரனைக் கற்பனை செய்து பாருங்கள்! பத்திரமாய்த் திரும்பி வருவதா வெற்றி? எதிரியைத் தாக்கித் துரத்தவேண்டாமா? விசுவாசியின் படைக்கலன்களில் தாக்குவதற்கான ஆயுதம், ''தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்'' ஒன்றே (எபே 6:10-17). எப்படித் தாக்கவேண்டுமென 2 கொரிந்தியர் 10:4-6 வரிசைப்படுத்துகிறது: அரண்களை அதமாக்குவோம்; தர்க்கங்களைத் தகர்ப்போம்; சிந்தனைகளைச் சிறைபிடிப்போம்; தவறுகளைத் தண்டிப்போம்!

பாக்கெட்டில் புதிய ஏற்பாடு, தலையணைக்கடியில் பைபிள், இதெல்லாம் போதாது. வசனம் உள்ளில் வேரூன்றவேண்டும். முதல் நூற்றாண்டில் ஒரு சில வாலிபருக்கு இந்த ஆழ்ந்த அனுபவமிருந்தது. அவர்களுக்குத்தான் அப்போஸ்தலன் யோவான், ''வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருப்பதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை வென்றதினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்'' எனக் குறிப்பிட்டார் (1 யோ 2:14). லூசிபரின் சதித்திட்டங்களையும், நரித்தந்திரங்களையும் ஒன்றுமில்லாதாக்குவது திருவசன நிறைவே.

திருவசனத்திலுள்ள தேவத் திட்டங்களுக்கு முன்னர்தான் சத்துரு நிபந்தனையின்றி சரணடைவான். ''எழுதியிருக்கிறதே'' என்றதும் வேறு வழியின்றி ஓட்டம்பிடிப்பான் (மத் 4:3-11). வசனத்தைத் தினமும் தியானிப்பதே ஆன்மீகத் தசைகளைத் தினமும் திடமாக்குவதாம். அது நமது மனதைக் கத்திபோல் கூர்மையாக்குகிறது. வசனம் உள்ளிலிருந்தால் வெற்றிதான் (சங் 119:11). இந்த இரகசியத்தை நாம் அறியவேண்டுமெனத் தேவன் எவ்வளவாய் விரும்புகிறார்! ''ஆ, என் மக்கள் எனக்குச் செவிகொடுத்தால் ... நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் எதிரிகளுக்கு விரோதமாகத் திருப்புவேன்'' (81:13,14).

வசனமெனும் ஆயுதத்தை நாமும் களையக்கூடாது. சத்துருவும் அதைக் கைப்பற்ற முடியாது. ''தேவ வசனம் கட்டப்பட்டிருக்க

வில்லை!'' (2 தீமோ 2:9ஆ). ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்ற புதிய கட்டளைகள், வாக்குகளைச் சேனைகளின் கர்த்தர் தந்துகொண்டிருப்பார். விசுவாசமானது அவ்வாக்குத்தத்தங்களை எடுத்துக்கொண்டு வல்லரசுகளை வெல்லவும், சிங்கங்களின் வாய்களை அடைக்கவும், அக்கினியின் உக்கிரத்தை அவிக்கவும், பட்டயக்கருக்குக்குத் தப்பவும், சேனைகளை முறியடிக்கவும் யுத்தக்களத்திற்குக் கம்பீர நடைபோட்டுச் செல்லும்! (எபி 11:33,34).

### 6. கிறிஸ்துவின் சபை மூலம்

''என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' என்றார் இயேசு (மத் 16:18). சபையானது ஒரு ''மலை,'' அதை அசைக்க முடியாது. அது ஒரு ''நகர்,'' அதை அழிக்கமுடியாது. அதைச் சுற்றி ஆயிரம் பதினாயிரம் தூதருண்டு, அவர்களை அரட்ட முடியாது. அது பரலோகில் பேரெழுதப்பட்ட முதற்பேறானவர்களின் சர்வ சங்கம் (எபி 12:22,23).

பரிசுத்தவான்களின் ஐக்கியத்திலுள்ள பலத்தையும் பாதுகாப்பையும் குறிப்பிட்டு சாலொமோன், ''ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் ... ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்'' என்றார் (பிர 4:9,12). பாலிய இச்சைகளுக்கு விலகி ''ஓடுவதைத்'' தொடர்ந்து, உத்தம விசுவாசிகளோடு ''ஒட்டிக்கொள்ள'' வேண்டுமென வாலிபன் தீமோத்தேயுவுக்குப் பவுல் அறிவுறுத்தினார் (2 தீமோ 2:22). கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையிலுள்ள உடன் அங்கங்களின் அனுதின அறிவுரைகளால் வஞ்சகனின் வலைகளுக்குத் தப்பலாம் (எபி 3:13).

நாசமோசமோ, பட்டயமோ கிறிஸ்துவின் அன்புக்கு மிஞ்சியதல்ல (ரோ 8:36). பரிசுத்தர் கூட்டத்தின் நடுவில்தான் இவ்வன்பின் நான்கு பரிமாணங்களையும் நன்கு புரிய முடியும் (எபே 3:18). சபையின் அடித்தளத்திற்கு நிகரில்லை. திரித்துவ தேவன் சபையில் குடியிருக்கிறார் (எபே 2:19-22). ''தேவன் அதின் நடுவிலிருக்கிறார், அது அசையாது'' (சங் 46:5).



பிற விசுவாசிகளிடமிருந்து தன்னைப் பிரித்துக்கொள்வதைப் போன்று அபாயமானது வேறில்லை. ஆனாலும் பலர் ''நானும்-என்-தேவனும்'' எனும் தத்துவத்தை மேற்கொண்டு, கர்ச்சிக்கும் சிங்கத்திற்குப் பலியாகியுள்ளனர். தனித்துப்போக மனதில் எழும் எண்ணங்களுக்கு எச்சரிக்கை!

உலகெங்குமுள்ள மீட்கப்பட்டோரின் கூட்டணிப்படைதான் சபையாகும். மக்களை இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க அது யுத்தக்களத்தில் குதித்துள்ளது. பிசாசு அவ்வளவு எளிதில் மக்களைப் போகவிடமாட்டான். ஆனால் நமது பெரும்படைகளுக்குமுன் தாக்குப்பிடிக்க முடியாது கரம் தூக்கிவிடுவான் (2 இரா 6:16,17). நமது ''குதிரைகளும் அக்கினி இரதங்களும்'' அவனைக் குழப்பிவிடும்! நமது சேனைத் தலைவர் தோல்வியறியார்!

### 7. கிறிஸ்துவின் வருகை மூலம்

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே முடிவான வெற்றி! சத்துரு சங்காரமாவான்! அதுவரை போர் நிறுத்தம் இல்லை.

''பின்பு பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது. அதின் மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமும் உள்ளவர் எனப்பட்டார்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார் ... பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய ஆடை அணிந்தவர்களாய், வெள்ளைக் குதிரைகள்மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள்... அவரது வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது ... ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் எனும் பெயர் அவரது ஆடைமீதும் அவரது தொடைமீதும் எழுதப்பட்டிருந்தது'' (வெளி 19:11-16).

''உன்னதமானவரின் பரிசுத்தவான்கள் இராஜரீகத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் இராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்!'' (தானி 7:18).

**9**

# வெல்லவேண்டுமானால் முயலவேண்டும்!

## Striving for Victory

**முகவுரை**

கிறிஸ்து மீதுள்ள தனிப்பட்ட விசுவாசமே கிறிஸ்தவ வாழ்வின் துவக்கம். அதைத்தான் ''இரட்சிப்பு'' என்றழைக்கிறோம் —
அப் 16:30,31 ... *விசுவாசி ... இரட்சிக்கப்படுவீர்கள்*

இந்த இரட்சிப்பு நாளுக்கு நாள் *சமீபமாய் வருகிறது* —
ரோ 13:11 ... *விசுவாசிகளானபோது இருந்ததைவிட* ...

*நாம் நமது இரட்சிப்பு நிறைவேற முயலவேண்டும்* —
பிலி 2:12 ... *பயத்தோடும் நடுக்கத்தோடும்* ...

மறு பக்கம் —
*''அது தேவனுடைய ஈவு, நம்மால் உண்டானதல்ல''*
எபே 2:8

அது ஓர் ஓட்டப் பந்தயம் போன்றது —
நாம் முயன்றால்தான் வெற்றிபெற முடியும் —
1 கொரி 9:24

**நாம் முயலவேண்டிய ஐந்து காரியங்கள்** —

**1. கிறிஸ்துவில் உங்கள் நிலையை நினைவிற்கொள்ள முயலுங்கள்.**

இதுதான் மிகப் பெரிய போராட்டமாயிருக்கும்!

- இரட்சிப்பின் நிச்சயம் (ரோ 8:15,16)
- தேவனது பிள்ளைகளாயிருக்கும் *''உரிமை''* (''தகுதி'' அல்ல) (யோ 1:12)



- உணர்வுகள் — 2 கொரி 5:6 / 1 பேது 1:8,9
  எ.கா.) பரீட்சை முடிவுகள் — துவக்கக் குதூகலம்
- *என் கையிலிருந்து ஒருவரும் பறிக்க இயலாது* (யோ 10:28,29)
- *இயேசுவின் இரத்தத்தால்* மேற்கொள்ளுதல் (வெளி 12:10,11)

அதாவது, இரத்தத்தால் கழுவப்பட்டதை மறவாதிருத்தல் (2 பேது 1:9)

**2. எல்லாச் சோதனைகளையும் எதிர்க்க முயலுங்கள்.**

ஏனோதானோ என்றிருக்கும் கிறிஸ்தவன் தோல்வியடைவான்.
தானாகவே வெற்றி கிட்டிவிடாது —
எபி 12:4 ... *பாவத்திற்கு விரோதமான போராட்டம்*

- தேவன் செய்வது, நாம் செய்வது (1 யோ 5:18) ... *தன்னைக் காக்கிறான்*

எ.கா.) தானியேல் (தானி 1:8) ... *தீர்மானம்பண்ணிக்கொண்டான்*

- உதவிகள் —
  - அ) திருவசனம் (சங் 119:9,11)
    எ.கா.) இயேசு (மத் 4:3-10)
  - ஆ) ஜெபம் (மத் 26:40,41)
    (எபி 4:15,16) ... *பலவீனம் ... இரக்கம் ... சகாயம்*
  - இ) ஓட்டம் + ஐக்கியம் (2 தீமோ 2:22)
    (ஓடு) (ஒட்டு) (flight & fellowship)
- சோதிக்கப்படுவது பாவமல்ல (இயேசு சோதிக்கப்பட்டார் — எபி 4:15)

எ.கா.) தலைக்குமேல் கழுகு பறப்பதைத் தடுக்க முடியாது;
தலையில் கூடு கட்டுவதைத் தடுக்கலாமே!

**3. அனைவரோடும் சமாதானமாயிருக்க முயலுங்கள்.**

- அப் 24:16 ... *நல்மனசாட்சி ... முயலுகிறேன்*
- *''உங்களால் கூடியமட்டும் யாவரோடும் சமாதானம்''* (ரோ 12:18)
- ஒப்புரவாகுதல் (மத் 5:23,24)
  காரியங்களைச் சரிசெய்தல் (லூக் 19:8; எசேக் 33:15)

உதவிகள் —

அ) பதிலுக்குப் பதில் செய்யவேண்டாம் (ரோ 12:17-21)
ஆ) தேவன் உங்களை மன்னித்ததை நினையுங்கள் (எபே 4:32)
இ) எளிய காரியங்களில் முயற்சிக்கத் துவங்குங்கள் (லூக் 17:3-6)
ஈ) நமது ஜெபங்கள் கேட்கப்படத் தவிர்க்கமுடியாத நிபந்தனை இது என்றறியுங்கள் (மத் 6:14,15)

**4. தேவனது சிறுபான்மையினரோடு செயல்பட முயலுங்கள்.**

லூக் 13:23,24 ... *சிலரே ... இரட்சிக்கப்படுபவர் ... நெருக்க வாசல்*

- உலகத்தால் பகைக்கப்படுதல் (யோ 15:18-21)
- பிரபலம் நாடுதல் (யோ 12:42,43)
- மன நிர்ணயம் vs. வசதிக்கேற்ப மாற்றம் (எபே 4:17-24)
- உலகின் போக்கு, நாகரீகச் சரிவு (ரோ 12:2)
  கண்ணியம்/அடக்கம்/பொருத்தம்

**5. நற்செய்தியைக் கேளாதோரைச் சந்திக்க முயலுங்கள்.**

ரோ 15:21 ... *கிறிஸ்து சொல்லப்படாத இடங்கள் ... நாடுகிறேன்*

- பிறரை இரட்சிக்கவே இரட்சிக்கப்பட்டோம்!

நாம் கடனாளிகள் (ரோ 1:14-16)
அ) *கிரேக்கர்* — அறிவாளிகள்
ஆ) *அந்நியர்* — கல்லாதோர்
இ) *ரோமர்* — நாகரீகம், அரசியல்
ஈ) *யூதர்* — மார்க்க பக்தியுள்ளோர்



தேவன் உங்களுக்குச் செய்ததை நண்பர்களோடு பகிருங்கள் — மாற் 5:19

சாட்சி பகரும்போதுதான் இறையறிவில் வளருவீர்கள் —

எ.கா.) பிறவிக் குருடன் (யோ 9:25)
இயேசுவைப்பற்றிப் படிப்படியான தெளிவு, வெளிப்பாடு

படி 1 — *''அவர் ஒரு தீர்க்கதரிசி''* (வச 17)

படி 2 — *''தேவனிடமிருந்து வந்தவர்''* (வச 31-33)

படி 3 — *''தேவ குமாரன்''* (வச 35-37)
*''ஆண்டவர்!''* (வச 38)

**தொகுப்பு:**

1. Strive to REMEMBER your position in Christ.
2. Strive to RESIST all temptations.
3. Strive to RELATE peacefully with all men.
4. Strive to RALLY with God's minority.
5. Strive to REACH the unreached.

*Stand up, Stand up, for Jesus!*

*நல் மீட்பர் பட்சம் நில்லும், ரட்சண்ய வீரரே,*
*ராஜாவின் கொடியேற்றி போராட்டம் செய்யுமே;*
*சேனாதிபதி இயேசு மாற்றாரை மேற்கொள்வார்;*
*பின் வெற்றிக் கிரீடம் சூடிச் செங்கோலும் ஓச்சுவார்!*

— George Duffield, 1818-1888

**10**

# பிசாசின் முப்பெரும் பொய்கள்

(வாலிபர், நங்கையருக்கு ஒரு செய்தி)

**Three great lies of the Devil**

**முகவுரை**

பிசாசின் பெயர் (யோ 8:44) ... *பொய்யன் ... பொய்யப்பன் ...*

விவிலியத்தில் அவனது முதல் பொய் (ஆதி 3:1-4).

அவனது பொய்யை நம்புவோரின் முடிவு (வெளி 21:27 / 22:15)

***வாலிபர், நங்கையர்க்கு*** அவன் கூறும் மூன்று முக்கிய பொய்கள் முக்காலத்தைச் சார்ந்தவை —

(அ) கடந்த காலம்

(ஆ) நிகழ் காலம்

(இ) எதிர் காலம்

**(அ) கடந்த காலம்**

***''நீ இரட்சிக்கப்படமுடியாத பெரிய பாவி!''***

You are too sinful to be saved!

- நற்செய்திக் கூட்டம் ஒன்றுவிடாது பிசாசு பங்குபெறுகிறான்
  யோபு 1:6 ... *தேவ புத்திரர் ... சாத்தானும் ...*
- யூதாஸ்காரியோத்திடம் இப்பொய்யைச் சொன்னான்
  மத் 27:3-5 ... *குற்றமற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேனே*
  பேதுருவுடன் ஒப்பிடுங்கள் ... மத் 26:75



- பவுல்: *பாவிகளில் பிரதானமானவன்*
  1 தீமோ 1:15 ... *''எடுத்துக்காட்டு''* (வச 16)
  பவுலின் கடந்தகால வாழ்க்கை (வச 13)
  எ.கா.) அப் 8:3
- *கருஞ்சிவப்பான பாவங்கள்*
  ஏசா 1:18 ... *பனிக்கட்டி ... பஞ்சு ...*
  1 யோ 1:7,9 ... *எல்லா அநியாயம் ... சுத்திகரிப்பு ...*
- *பயங்கரமான குழி, உளையான சேறு*
  சங் 40:2,3 ... *தூக்கியெடுத்து ... கன்மலைமீது ...*

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படமுடியாத பாவம் எதையும் உன்னால் செய்யமுடியாது!

- *''நான் பாவிதான், ஆனாலும் நீர் ...''*
- கெட்ட குமாரன் ... அவனது பாவ அறிக்கைப் பட்டியல் முடியுமுன் மன்னிக்கப்பட்டான்!
- பாவியா பாவங்களா?
  தேவன் முதலாவது ''பாவியை'' மன்னிக்கிறார்;
  அதினால் ''பாவங்கள்'' மன்னிக்கப்பட்டுவிடுகின்றன!

**(ஆ) நிகழ்காலம்**

***''நீ பரிசுத்தமாக வாழமுடியாத அளவு பலக்குறைவானவன்!''***

You are too weak to live holy!

- கிறிஸ்துவின் நுகம் இலகுவானது
  மத் 11:28-30 ... ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளுதல்
- *அவரது கட்டளைகள் பாரமானவையல்ல*
  1 யோ 5:3-5 ... அன்பு கலந்த விசுவாச வாழ்வு
- எந்தத் தடங்கலையும் மேற்கொள்ளமுடியும்
  எ.கா.) மத் 19:23-26 ... செல்வம் ... தேவனால் கூடும்
- கிறிஸ்தின்றி/கிறிஸ்துவுடன் — ஒன்றுமில்லை/எல்லாமுண்டு
  யோ 15:5 / பிலி 4:13

- *கிருபைக்குக் கீழ்ப்பட்டிருப்பதால் பாவம் மேற்கொள்ளாது*
  ரோ 6:14
- இயேசு அவனிலும் வல்லவர் (1 யோ 4:4)
  *''உங்களிலிருப்பவர்''*
  *நானல்ல, கிறிஸ்துவே!* ... கலா 2:20

**(இ) எதிர்காலம்**

***''நீ வெற்றியாய் முடிக்கமுடியாத அளவு நிலையற்றவன்!''***

You are too unsteady to make it!

(அதாவது, முடிவுவரை தாக்குப்பிடிக்கமாட்டாய்.)

- *இயேசுதான் நமது விசுவாசத்தை முடிக்கிறவர்* (எபி 12:1)
  (திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட சத்தியம்: வெளி 1:8,11,17)
- *உங்களில் தொடங்கியவர் முடிப்பார் ...*
  பிலி 1:5
- பவுலின் சாட்சி
  2 தீமோ 1:12
  *நான் அவரிடம் ஒப்புவித்ததைக் காக்க வல்லவர்*
- *நம்மை அழைத்தவர் உண்மையுள்ளவர்*
  1 தெச 5:23,24 ... *அவர் அப்படியே செய்வார்!*
- *நீதிமான் ஏழுமுறை விழுந்தாலும் ...* நீதி 24:16
  இறைமக்களுக்கு எந்த விழுகையும் முடிவானதல்ல.
- *வழுவாதபடி நம்மைக் காக்க தேவன் வல்லவர்*
  யூதா 24
  அவரைப் போற்றுவோம்! (வச 25)

■ **முடிவுரை**

(அ) பொய்: நீ இரட்சிக்கப்படமுடியாத பெரிய பாவி.
மெய்: என்னைத் தள்ளமுடியாத அளவு தேவன் இரக்கமுள்ளவர்.



(ஆ) பொய்: நீ பரிசுத்தமாய் வாழமுடியாத அளவு பலவீனன்.
மெய்: என்னை விடமுடியாத அளவு தேவன் பலமுள்ளவர்.

(இ) பொய்: நீ வெற்றியாய் முடிக்கமுடியாத அளவு நிலையற்றவன்.
மெய்: என்னை மறக்கமுடியாத அளவு தேவன் மாறாதவர்.

**இறைவாக்குகள்:**

- *என் கையிலிருந்து உங்களை எவரும் பறிக்கமுடியாது* (யோ 10:28)
- *என் உள்ளங்கையில் உங்களை வரைந்திருக்கிறேன்* (ஏசா 49:16)
- *''என் கண்மணி''* (உபா 32:10; சக 2:8)
- *''அக்கரைக்குப் போவோம் வாருங்கள்''* (மாற் 4:35-41)

  பயணம் (passage) அலசடியாயிருக்கலாம்;
  தரையிறக்கமோ (landing) பாதுகாப்பாயிருக்கும்!
- *இயேசு கிறிஸ்து மாறாதவர்* (எபி 13:8)
  *நேற்றும் ...* *இன்றும் ...* *என்றும் ...*
  (கடந்த காலம்) (நிகழ் காலம்) (எதிர் காலம்)

■

*கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு*
*எப்போதும் வெற்றி உண்டு!*

*சாத்தானின் அதிகாரமெல்லாம்*
*என் நேசர் பறித்துக் கொண்டார்;*
*சிலுவையில் அறைந்துவிட்டார்,*
*காலாலே மிதித்துவிட்டார்.*

— தந்தை S.J. பெர்க்மான்ஸ்

# 11

# சாத்தானின் சதிகள்

## Schemes of Satan

''சாத்தான்'' எனும் பெயர் ''ஷாட்டான்'' (Shatan) எனும் எபிரெய பதத்திலிருந்து வருகிறது; அதன் பொருள் ''எதிரி'' என்பதாகும். ''பிசாசு'' (Devil) எனும் பெயர் ''டையபோலோஸ்'' (Diabolos) எனும் கிரேக்கப் பதத்திலிருந்து வருகிறது; அதன் பொருள் ''குற்றஞ்சாட்டுகிறவன்'' என்பதாகும். சாத்தான் என்ற வகையில் அவன் தேவனுக்கு எதிரி; பிசாசு என்ற வகையில் அவன் தேவமக்களுக்கு எதிரி. தந்திரம், வஞ்சகம் போன்றவையே அவனது பிரதான குணங்கள். பைபிளில் அவன் இப்படித்தான் அறிமுகம் செய்யப்படுகிறான்: ஆதி 3:1, ''தேவனாகிய கர்த்தர் உண்டாக்கிய சகல காட்டு உயிரினங்களை விடச் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது.'' அவனது தூதுவர்கள் தான் ''வஞ்சிக்கும்'' ஆவிகள் (1 தீமோ 4:1). நாம் பிசாசின் ''கண்ணிக்குத்'' தப்பவேண்டும் (2 தீமோ 2:26). முடிவு வரை பிசாசின் தந்திர குணம் தொடரும்; அவன் வஞ்சித்துக்கொண்டேயிருப்பான் (வெளி 20:2,3). அப்போஸ்தலன் பவுல் இறையியலில் மட்டுமல்ல, பிசாசியலிலும் தேறியிருந்தார். பிசாசின் ''தந்திரங்கள்'' நமக்குத் தெரியாதவை அல்லவே என்று அவர் எழுதுகிறார் (2 கொரி 2:11). புதிய ஏற்பாட்டிலுள்ள எடுத்துக்காட்டுகளிலிருந்து பிசாசின் தந்திரங்கள் அல்லது சதித்திட்டங்கள் சிலவற்றை இங்கு படிப்போம் —

### 1. விதையைத் திருடிவிடுதல்
(Stealing the Seed)

விதைக்கிறவன் உவமையை மாற்கு சுவிசேஷத்தில் இப்படி வாசிக்கிறோம்: மாற் 4:3,4, ''கேளுங்கள், விதைக்கிறவன் ஒருவன் விதைக்கப் புறப்பட்டான். அவன் விதைக்கையில், சில விதைகள் வழியருகே விழுந்தன; ஆகாயத்துப் பறவைகள் வந்து அவற்றைப்



பொறுக்கித் தின்றுவிட்டன.'' இதன் பொருளை இயேசுவே விளக்குகிறார்: ''விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான். வசனத்தைக் கேட்டவுடன் ***சாத்தான்*** வந்து, அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுகிறான்'' (வச 14,15).

மக்களுக்கு எதிரான சாத்தானின் மூன்று செயல்பாடுகளில் முதலாவது வருவது ''திருடுதல்'' (யோ 10:10அ). அடுத்து வருவது ''கொல்லுதல்'' மற்றும் ''அழித்தல்.'' பாறை நிலத்தில் முளைக்கும் செடியை அவன் கொன்றுவிடுகிறான்; முள் நிறைந்த நிலத்தில் வளரும் செடியை அவன் கனி தராது அழித்துவிடுகிறான். இந்த உவமைக்கு இயேசு அர்த்தம் கொடுக்கும்போது, இவற்றையெல்லாம் செய்யச் சாத்தான் ''வருகிறான்'' என்கிறார். இதை அவன் எப்படிச் செய்கிறான் தெரியுமா? நாம் கேட்ட வசனத்தை மறக்கச் செய்கிறான்; அல்லது மறுபடி நினைத்துப்பார்க்கத் தடுக்கிறான். விதைகள் திருடப்படாதபடிக் காக்கப்படவேண்டும். இங்குதான் நமது பொறுப்பு வருகிறது. திருப்பாடகன் தேவனுடைய வார்த்தையைத் தனது இருதயத்தில் ''மறைத்து வைத்தார்'' (சங் 119:11). மண் தூவி விதைகளை மறைப்பதற்கு இது ஒப்புமை. தேவனுடைய வார்த்தைகளை மரியாள் தனது இருதயத்தில் ''வைத்துச்'' சிந்தனைபண்ணினார் (லூக் 2:19). ஆரோக்கியமான வசனங்கள் எனும் நற்பொருளை நமக்குள் குடியிருக்கும் பரிசுத்த ஆவியினாலே ''காத்துக்கொள்ளவேண்டும்'' என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதினார் (2 தீமோ 1:13.14). இதை நாம் செய்யும் விதம் இதோ —

**(அ)** விதைகள் புதைக்கப்படும்படி மண்ணைக் கொத்தவேண்டும். திருவசனத்தை நாம் எப்படிக் கேட்கிறோம் என்பதை இது குறிப்பிடுகிறது. இதனை அப்போஸ்தலன் யாக்கோபு தனது நிருபத்தில் விளக்குகிறார்: யாக் 1:21, ''நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயும் இருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்.'' ''தமது வசனத்துக்கு நடுங்குகிறவர்கள்'' பக்கமாகவே கர்த்தரது கண்கள் திரும்புகின்றன (ஏசா 66:2ஆ). இன்னும் கூடுதலாய்த்

தெரிந்துகொள்ளவேண்டுமென்ற விருப்பத்திற்கு மிஞ்சிக் கீழ்ப் படிதலுக்கான ஆர்வம் கூடவேண்டும் (யாக் 1:22). இவ்வித மனப் பான்மை கொண்ட இருதயத்திலிருந்து சாத்தான் இறைவார்த்தை எனும் விதையைத் திருடிக்கொண்டுபோக முடியாது. தேவ வார்த்தையை வாசிக்கும் அல்லது கேட்கும்போதெல்லாம் நாம் சாத்தானை இவ்விதம் தோற்கடிப்போம்.

**(ஆ)** விதை உடைந்து முளைக்கும்படி அதற்குத் தண்ணீர் ஊற்ற வேண்டும். இது கேட்ட வசனங்களை நமக்கு நினைவுபடுத்தவும், திரும்பத் தியானிக்கவும், அவற்றைத் திரும்ப வாசிக்கும் பழக்க மாகும். இப்பயிற்சியில் நமக்கு உதவ ஆவியானவர் உண்டு. இயேசு வானவர் வாக்களித்தது இதுதான்: யோ 14:26, ''நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளன் உங்களுக்கு ***நினைப்பூட்டுவார்***.'' மறுபடியும் வாசிப்பதிலும் திரும்பத் தியானிப்பதிலும் ஏற்படும் தாமதம் பிசாசுக்குச் சாதகம்.

### ௨. அர்ப்பணிப்பை அரைகுறையாக்குதல்
(Curbing the Commitment)

அனனியா-சப்பீராள் தம்பதியரின் சரிதை இக்குறிப்பிற்கு எடுத்துக்காட்டாய்த் திகழுகிறது. திருமறையில் இதனை இவ்விதம் வாசிக்கிறோம்: அப் 5:1-3, ''அனனியா எனும் பெயருள்ள ஒருவனும் அவன் மனைவி சப்பீராளும் தங்கள் நிலத்தை விற்றனர். தன் மனைவி அறிய அவன் விலையில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, ஒரு பங்கைக் கொண்டுவந்து, அப்போஸ்தலர் பாதத்தில் வைத்தான். பேதுரு அவனைப் பார்த்து: அனனியாவே, நிலத்தின் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியிடம் பொய் சொல்லும்படிச் ***சாத்தான்*** உன் இருதயத்தை நிரப்பினதென்ன?'' நமது அநேகக் காரியங்களிலும் சாத்தான் இவ்விதம் மேற்கொள்ளுகிறான். அவன் செயல்படும் விதமாவது —

**(அ)** தேவனது கட்டளைகளின் முக்கியத்துவத்தையும் அவர் எதிர்பார்ப்பவைகளின் முழுமையையும் நாம் காணக்கூடாதவாறு பிசாசு நமது கண்களைக் குருடாக்குகிறான். சவுலரசனின் வாழ்க்



கையில் இதைத்தான் செய்தான். சவுலை அபிஷேகிக்கும்போது சாமுவேல் சொன்ன முதல் வார்த்தைகள்: ''இஸ்ரவேலராகிய தமது மக்கள்மீது உம்மை இராஜாவாக அபிஷேகம்பண்ணக் கர்த்தர் என்னை அனுப்பினார்; இப்போதும் கர்த்தருடைய *வார்த்தைகளின்* சத்தத்தைக் கேளும்'' (1 சாமு 15:1). அமலேக்கியரையும் அவர்களது உடைமைகள் யாவற்றையும் அடியோடு அழித்துவிடவேண்டு மென்று சவுலுக்குத் தேவன் கட்டளையிட்டார். சவுலோ அரைகுறை யாகத்தான் கீழ்ப்படிந்தார். அதற்குக் காரணம் அவரது இரண்டகம் பண்ணும் குணமும் முரட்டாட்டம்பண்ணும் மனநிலையுமாகும் (வச 23). ''ஏன் எல்லாவற்றையும் அழிக்கவேண்டும்? கொஞ்சம் வைத் துக்கொண்டாலென்ன?'' என்பதே அவரது வாதம். அவர் தனது மனச் சாட்சியை அமைதிப்படுத்தித் தேவ சத்தத்திற்குக் காதடைத்தார். இஸ்ரவேலின் முதலரசனைத் தேவனுக்குக் கீழ்ப்படியாதிருக்கச் செய்வதில் சாத்தான் வெற்றிகண்டான்.

**(ஆ)** தேவனது சர்வ ஞானம் மற்றும் அவரது சர்வ வல்லமையை நமக்கு மறக்கச் செய்வது பிசாசின் வேலை. அனனியா-சப்பீராள் சரிதையில் நாம் காண்பது இதுதானே? தேவனது சர்வ ஞானத்தை இத்தம்பதியர் மறந்தபோது, ''இதெல்லாம் தேவனுக்குத் தெரியுமா, என்ன?'' என்று நினைத்துக்கொண்டனர். தேவனது சர்வ வல்ல மையை அவர்கள் மறந்தபோது, ''இது தேவனுக்குத் தெரிந்தாலும் என்னதான் நடந்துவிடும்?'' என்று நினைத்துக்கொண்டனர். பத்சே பாளின் காரியத்தில் இப்படித்தான் பிசாசினால் தாவீது வஞ்சிக்கப் பட்டார்.

பிரியமானவரே, தேவனுக்கு அரைகுறையாய் அர்ப்பணிப்பது ஆபத்தானது. அவரிடம் ஒப்புக்கொடுத்தவற்றை மட்டுமே அவர் காக்கிறார். இதுவே அப்போஸ்தலன் பவுலுக்கு இருந்த மனவுறுதி: ''நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்; அவரிடம் நான் *ஒப்புவித்ததை* அவர் அந்நாள் மட்டும் காக்க வல்லவராயிருக் கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்'' (2 தீமோ 1:12ஆ). நமது அர்ப்பணிப்பின் அளவும் ஆழமும் நமக்கே தெரியும்; யாரும் நமக்குச் சொல்லத் தேவையில்லை.

### 3. சிலுவை இல்லாது சிம்மாசனம்

(Crown without the Cross)

''தன்னல மறுப்பு இல்லாத சீடத்துவம்'' (Discipleship without Self-denial) என்றும் இதனை அழைக்கலாம். ''நான் யார் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்?'' என்று இயேசு தமது சீடரிடம் கேட்டபோது, பேதுருவின் உடனடிப் பதில்: ''நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' (மத் 16:15,16). இது அவரது சொந்த யூகம் அல்ல, விண்தந்தையிடமிருந்து வந்த வெளிப்பாடு என்று இயேசு அவரைப் பாராட்டினார் (வச 17). பாறையான இவ்வெளிப்பாட்டினை அடித்தளமாய்க் கொண்டு தமது சபையைக் கட்டப்போவதாகவும் ஆண்டவர் கூறினார் (வச 18). ஆனால் தாம் அனுபவிக்கப்போகிற பாடுகளைக் குறித்து அவர் முன்னறிவிக்கத் தொடங்கியதும், அவரைப் பேதுரு கடிந்துகொண்டு சொன்னது: ''ஆண்டவரே, இது உமக்கு நேரிடக்கூடாதே, இது உமக்குச் சம்பவிப்பதில்லை'' (வச 21,22). இயேசு அவரை அதட்டிச் சொன்னது: ''எனக்குப் பின்னாகப் போ, ***சாத்தானே!''*** (வச 23). 18ஆம் வசனத்தில் பாறை போலிருந்த பேதுரு 23ஆம் வசனத்தில் சாத்தானின் தூண்டுதலால் ஆட்டங் கண்டுவிட்டார்.

மூன்றாண்டுகட்கு முன்னர் இயேசுவானவரின் நாற்பது நாள் வனாந்திர உபவாச ஜெபத்தையடுத்து இதே தந்திரத்தைச் சாத்தான் கையாடினான். ஆனால் படுதோல்வியடைந்தான். பேதுருவிடம் இப்பொழுது கூறிய அதே வார்த்தைகளைக் கொண்டு அன்று சாத்தானை இயேசு எதிர்த்தார்: ''அப்பாலே போ, ***சாத்தானே!''*** (லூக் 4:8). சிலுவை சுமக்காமல் சிம்மாசனம் ஏற இயேசுவுக்குப் பிசாசு வழி சொல்லிக்கொண்டிருந்தான் (வச 6,7).

(அ) மனித ஞானத்தைச் சிலுவை எதிர்க்கிறது (1 கொரி 1:17,18). (ஆ) பிரமாணக் கொள்கையையும் சடங்காச்சார மார்க்கத்தையும் சிலுவை எதிர்க்கிறது (கலா 5:11; கொலோ 2:14,15). (இ) மாம்ச இச்சைகளைச் சிலுவை எதிர்க்கிறது (கலா 5:24; ரோ 6:6). (ஈ) உலகச் சிந்தையைச் சிலுவை எதிர்க்கிறது (கலா 6:14; பிலி 3:18-20). (உ) பொருளாசையைச் சிலுவை எதிர்க்கிறது (பிலி 2:8). (ஊ) பிரபல



நாட்டத்தைச் சிலுவை எதிர்க்கிறது (எபி 12:2,3). இவ்வசனங்களை வாசித்துத் தியானியுங்கள். இது ஒரு தன்னாய்வாக அமையும். சிலுவையற்ற கிறிஸ்தவம் பிசாசின் போலிச் சரக்கு!

### 4. ஒப்புரவாகுதல் இல்லாத மார்க்கம்

(Religion without Reconciliation)

தவறிழைத்தவர்களை மன்னியாது தங்கள் இருதயங்களில் கோபத்தைத் தக்கவைத்துக்கொள்வோரைச் சாத்தான் சாதகமாக்கிக் கொள்ளுகிறான். இக்காரியத்தில் நம்மை எச்சரிக்கும் இரு திருவசனப் பகுதிகள் இதோ —

□ எபே 4:26-32, ''நீங்கள் கோபப்பட்டாலும் பாவம் செய்யாதிருங்கள்; சூரியன் மறையுமுன் உங்கள் எரிச்சல் தணியட்டும். ***பிசாசுக்கு*** இடங்கொடாமலும் இருங்கள் ... எல்லாவிதக் கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கட்டும். ஒருவருக்கொருவர் தயவாயும், மனவுருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.''

□ 2 கொரி 2:6-11, ''தவறு செய்தவனுக்கு அநேகரால் உண்டான இந்தத் தண்டனையே போதும். ஆதலால் அவன் அதிகத் துக்கத்தில் அமிழ்ந்துபோகாதபடி நீங்கள் அவ்விதம் உங்கள் அன்பை அவனுக்குக் காட்டும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் ... எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன் ... ***சாத்தானால்*** நாம் மோசம்போகாதபடி அப்படிச் செய்தேன்; அவனது தந்திரங்கள் நமக்குத் தெரியாதவை அல்லவே.''

தேவன் அன்பாயிருக்கிறார். அன்புக்கு எதிரான அனைத்தையும் பிசாசு உருவாய்க்கொண்டவன். தேவனுடைய பிள்ளைக்கும் பிசாசின் பிள்ளைக்குமுள்ள வேறுபாடு இங்குதான் காணப்படுகிறது. அன்பின் அப்போஸ்தலன் என்றழைக்கப்பட்ட யோவான் தனது முதல் நிருபத்தில் இவ்விதம் எழுதுகிறார்: ''இதனால் தேவனுடைய பிள்ளைகள் யாரென்றும், ***பிசாசின்*** பிள்ளைகள் யாரென்றும்

வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூரா மலும் இருக்கும் எவனும் தேவனால் உண்டானவனல்ல. நாம் ஒருவரிலொருவர் அன்புகூரவேண்டும் என்பதே நீங்கள் ஆதிமுதல் கேட்ட செய்தியாயிருக்கிறது. ***பொல்லாங்கனால்*** உண்டாயிருந்து தனது சகோதரனைக் கொலை செய்த காயீனைப்போல் இருக்கவேண் டாம்'' (1 யோ 3:10-12). ஒருவருக்கொருவர் அன்பு காட்டுவதில் குறைவு ஏற்படும்போது நமக்கு ஆன்மீகப் பார்வை மங்குகிறது: ''தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளில் இருந்து இருளில் நடக் கிறான்; இருளானது அவனது கண்களைக் குருடாக்கியதால் அவன் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்'' (2:11). எவ் வளவு ஆபத்து, பாருங்கள்!

உபதேசம் என்ற பெயரிலும் கிறிஸ்தவர்கள் நடுவிலும் ஊழியர்கள் நடுவிலும் திருச்சபைச் சரித்திரத்தில் பிசாசு புகுந்து விளையாடியிருக் கிறான். உபதேசத்திலும் ஊழியத்திலும் காணப்படும் வேறுபாடுகள் நம்மிடையே பிரிவினைகளை உண்டாக்கக்கூடாது. எடுத்துக்காட் டாக, பிரபலமான எபேசியர் 4ஆம் அத்தியாயத்தைப் பாருங்கள். வச னம் 4 முதல் 6 வரை உபதேசத்தையடுத்த ஏழு ஒருமைப்பாட்டுக் காரியங்களை வரிசைப்படுத்துமுன், முதல் மூன்று வசனங்களில் அப்போஸ்தலன் அன்பைக் குறித்துப் பேசுகிறார். அவ்விதமே, திருச்சபையின் ஐவகை ஊழியங்களை 7 முதல் 13 வசனங்களில் வரிசைப்படுத்தியதையடுத்து, அத்தியாயத்தை முடிக்கும்போது 31ஆம் 32ஆம் வசனங்களில் மறுபடியும் அன்பைப்பற்றி எழுது கிறார். இவ்வத்தியாயத்தின் நடுவில், சத்தியத்தை ''அன்புடன்'' பேசவேண்டுமென்று வலியுறுத்துகிறார் (வச 15). ''ஆவியின் ஒரு மைப்பாட்டைக்'' காத்துக்கொண்டுதான் ''விசுவாசத்தின் ஒருமைப் பாட்டை'' நோக்கிச் செல்லவேண்டும் (வச 3,11). எதை ''அடைய வேண்டும்,'' அதனை அடையும்வரை எதனைக் ''காத்துக்கொள்ள வேண்டும்'' என்பதைப் புரிந்துகொள்ளும் முதிர்ச்சி நமக்கு அவ சியம். இப்புரிதல் இல்லாததாலேயே எத்தனையோ பிரசங்கிமாரும் இறையியலரும் ஒருவருக்கொருவர் பரம எதிரிகளாகிவிட்டனர். பிசாசுக்குப் பிடிகொடுத்துவிட்டோமே!



சபை வளர்ச்சி இன்று பெந்தெகொஸ்தே வட்டாரங்களிலேயே அதிகம் என அறிவிக்கப்படுவதால், கிறிஸ்தவர்களை மூன்று பிரிவு களாகப் பிரிக்கலாம்: பெந்தெகொஸ்தேயினர், பெந்தெகொஸ்தே யல்லாதவர், பெந்தெகொஸ்தேக்கு எதிரிகள். எந்தப் பிரிவினருக்கும் முழுச்சத்தியம் கிடைத்துவிடவில்லை என்பதே எனது கருத்து. எனவே நாம் ஒருவரையொருவர் அணைத்து ஒருவரிடமிருந்து ஒரு வர் கற்றுக்கொள்ளவேண்டும். நான் கட்டமைப்பில் அல்லது நிர்வா கத்தில் (structural) கூட்டமைப்பு குறித்து அல்ல, ஆன்மீக (spiritual) ஒருமைப்பாட்டைக் குறித்தே பேசுகிறேன். ''ஆவியின் ஒருமை யைக்'' காத்துக்கொள்ளாது ''விசுவாசத்தில் ஒருமைப்பாட்டிற்கு'' வந்து சேர்வது சாத்தியமல்ல (எபே 4:3,11). ஆவியானவரே தமது கனியின் மூலம் ஒருமைப்பாட்டுக்குக் காரணர். அவரது இறுதிக்கால அருள்மாரியானது திருச்சபையில் அன்பைக் கொட்டவேண்டும்; அப்பொழுதுதான் உலகில் அது ஒரு தாக்கம் ஏற்படுத்த முடியும் (யோ 13:35). பிசாசின் தந்திரங்களைத் தோற்கடிக்க வேறு வழியில்லை.

## 5. துக்கத்தில் இருக்கும்போது விழுங்குதல்
(Devouring while Distressed)

கவலை மேற்கொள்ளும்போது எவரும் பலங்குன்றுவர். இதனைப் பிசாசு சாதகமாக்கிக்கொள்கிறான். இவ்விதச் சூழ்நிலைகளை எவ் விதம் கையாளவேண்டுமென்று அப்போஸ்தலன் பேதுரு நமக்கு எழுதியுள்ளார்: 1 பேது 5:7-9, ''தேவன் உங்களை விசாரிக்கிறவரா னதால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிடுங் கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெ னில், உங்கள் எதிராளியாகிய ***பிசாசானவன்*** கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமென்று வகைத்தேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகிலுள்ள உங்கள் சகோதரர் அவ்விதப் பாடுகளை அனுபவித்து வருகிறார்களென்று அறிந்திருக்கிறீர்களே.''

கவலைகள் நம்மைப் பலமிழக்கச் செய்கின்றன. நாம் பலங் குன்றியிருக்கும்போது பிசாசு நம்மைத் தாக்குவான். பிசாசின் இந்தத்

தந்திரத்தை இறைமக்களுக்கு மோசே நினைப்பூட்டினார்: உபா 25:17,18, ‘‘எகிப்திலிருந்து புறப்பட்டு வருகிற வழியில், அமலேக்கு தேவனுக்குப் பயப்படாமல் உனக்கு எதிராக வந்து, நீ ***களைத்துச்*** சோர்ந்திருக்கையில், பின்னால் வருகிற உன் பாளையத்திலுள்ள வலுவற்றோரையெல்லாம் வெட்டினான் என்பதை நினைத்திரு.’’ உடல்நலக் குறைவு, பொருளாதார இழப்பு அல்லது ஆன்மீகத் தோல்வி போன்றவை நம்மைக் கவலைக்குள்ளாக்கலாம். ஜெபத்தில் தேவனிடம் எடுத்துச்செல்ல முடியாத பிரச்னை என்று எதுவும் கிடையாது. அவர் ஒருவரையும் அசட்டைபண்ணுவதில்லை. விரித்த கரங்களுடன் அவர் எப்பொழுதும் கூவியழைக்கும் வார்த்தைகள்: ‘‘வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்’’ (மத் 11:28). இயேசுவின் கரங்களில் விழுந்துவிட்டால்தான் சாத்தானை நாம் வீழ்த்த முடியும்.

துன்பங்கள் வழியாய் நாம் செல்லும்போது, தேவனது தந்தைத்துவத்தையும் அவர் நம்மை விசாரிக்கிறவர் என்பதையும் பிசாசு நம்மை மறக்கச் செய்கிறான் (1 பேது 5:7,10). இறைவாக்குகளை நாம் சந்தேகிக்கச் செய்கிறான். விசுவாசத்தாலேயே அவனை நாம் எதிர்க்க வேண்டும் (வச 9). சுயபரிதாபத்திற்குள் நம்மைப் பிசாசு தள்ளிவிடுவான். நமக்குத்தான் இவ்விதப் பாடு என்று நாம் நினைத்துவிடக் கூடாது (வச 9).

இவ்வத்தியாயத்தை முடிக்கு முன்னர், இங்கு ஓர் எச்சரிப்பை முன்வைக்க விரும்புகிறேன். துன்பத்தின், கண்ணீரின், பள்ளத்தாக்கில் நீங்கள் கடந்துசெல்லும்போது தனது தூதுவர்களாய்ச் சாத்தான் உங்களிடம் அனுப்பும் கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். மூழ்கிக்கொண்டிருப்பவனைப்போல் ஒரு துரும்பு கிடைத்துவிடாதா என்று நீங்கள் அங்கலாய்க்கும் வேளை அது. விதவைகளின் வீட்டைச் சூறையாடி, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணிவந்த மார்க்கத் தலைவர்களுக்கு ஐயோ என்றார் இயேசு (மத் 23:14). ‘‘விதவைகள்’’ என்றால் ‘‘கண்ணீரில் மிதப்பவர்’’ என்று பொருள் கொள்ளலாம். உங்கள் பணப்பையிலேயே கண்ணாயிருக்கும் போலியான ஆறுதல் ஊழியங்களுக்கு எச்சரிக்கை!



# 12

# என்னைத் தீட்டுப்படுத்தமாட்டேன்!

(வாலிபர், நங்கையருக்கு ஒரு செய்தி)

**“I will not defile myself!”**

**முகவுரை**

- நற்செய்தியழைப்பிற்குச் செவிமடுத்து முன்வருபவர்களில் முதியோரைவிட இளைஞரே அதிகம்.

  அதே வேளையில், இளைஞர் நடுவில்
  பின்வாங்குவோரின் எண்ணிக்கையும் அதிகம்.

  பரிசுத்தமான, தேவனுக்குப் பிரியமான, வாழ்க்கை வாழுவதற்கான போராட்டத்திலிருந்து சீக்கிரம் விலகிவிடுகின்றனர்.

- இதில் அதிமுக்கிய இரகசியம் என்னவென்றால் ***தனிப்பட்டவரது தீர்மானமும்*** மனவுறுதியும்தான் —

  எ.கா.) வாலிபன் தானியேல் (தானி 1:3)

  வச 8 ... *தன்னைத் தீட்டுப்படுத்துவதில்லையென்று தீர்மானம்பண்ணிக்கொண்டான்.*
  வச 9 ... *பிரதானிகளின் தலைவனிடம் தானியேலுக்குத் தேவன் தயவு கிடைக்கச் செய்தார்.*

  அதாவது, தன்னைப் பொறுத்தவரை தானியேல் திடமான தீர்மானமெடுத்தபோதுதான் தேவன் அவனுக்குதவினார்.

  உபதேசம்: 1 யோ 5:18

  அ) *தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான்.*
  ஆ) *தீயவன் அவனைத் தொடான்.*

  அதாவது, நமது தீர்மானம் VS. பிசாசின் இயலாமை

**ஒவ்வொரு இளைஞனும் எடுக்கவேண்டிய 5 தீர்மானங்கள் —**

**1. தவறான பாலுறவினால்**
**எனது ''உடலைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.**

பாலியல் உணர்ச்சிகள் தேவன் தந்தவை;
அவற்றை முறைப்படிக் கட்டுப்படுத்துவது நமது பொறுப்பு.

1 கொரி 6:18 ... *வேசித்தனத்திற்கு ''விலகியோடுங்கள்''*

இது தேவனுக்கு விரோதமான பாவம் மட்டுமல்ல,
நமது சொந்தவுடலுக்கு எதிரான பாவம்.
நம்மை நாமே அழிப்பது எத்தனை மடமை!

2 தீமோ 2:22 ... *பாலிய இச்சைகளுக்கு ''விலகியோடு''*

பாலியல் சோதனைகளைப் பொறுத்தவரை
''போராடுவதால்'' அல்ல, ''ஓடுவதாலேயே'' வெற்றி!
(Not fight but flight!)

ஓரினச் சேர்க்கையானது பைபிளில்
முழுக்க முழுக்கக் கண்டிக்கப்பட்டுள்ளது (ரோ 1:24-27)

தூயாவியானவரின் ஆளுகைக்குள் நமது மனப்பாங்கு
கொண்டுவரப்படவேண்டும் (ரோ 8:13; கலா 5:24,25)

- இயேசுவோடு இணைந்தே வாழுங்கள் (1 கொரி 6:15-17)
  *...கர்த்தரோடு இசைந்திருப்பவன் அவரோடு ஒரே ஆவி ...*

பரிசுத்த ஆவியினால் நிறைந்திருங்கள் (வச 19)
*... உங்கள் உடல் ... பரிசுத்த ஆவியின் ஆலயம் ...*

**2. அசுத்த எண்ணங்களால்**
**எனது ''மனதைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.**

அசுத்த எண்ணங்கள் யாவை?

பிலி 4:8 ... உண்மையற்றவை, ஒழுக்கமற்றவை,
நீதியற்றவை, கற்பற்றவை, அன்பற்றவை,
நற்கீர்த்தியற்றவை, புகழற்றவை,
புண்ணியமற்றவை



- சோம்பேறியின் மனது பிசாசின் தொழிற்கூடம்.
  இணையதளத்தில் பாவவுணர்வுகளைத் தூண்டும் பகுதிகளுக்குச் செல்லாதீர்.

திருமறையை அவசரப்படாது தியானிக்க நேரமெடுங்கள் —

சங் 119:11 ... *பாவம் செய்யாதபடி என்னுள்ளில் உம் வசனம்*
:15 ... *தியானிக்கிறேன் ... கண்ணோக்குகிறேன் ...*
:16 ... *மனமகிழ்கிறேன் ... மறவேன்*

திருவசனப் பகுதிகளை மனனம் செய்ய
இளமைப்பருவம்தான் சிறந்தது (2 தீமோ 3:15);
வாழ்நாள் முழுவதும் அது பசுமரத்தாணிதான்!

**3. கெட்ட வார்த்தைகளால்**
**எனது ''வாழ்வைத்'' தீட்டுப்படுத்தமாட்டேன்.**

நமது வாழ்வின் தரம் நமது வாயின் வார்த்தைகளைப்
பொறுத்ததே —

சங் 34:12,13 ... *வாழ்வை விரும்பி ... நல்ல, நீடித்த நாட்களை விரும்புபவன் ... தனது நாவைக் காக்கட்டும்*

இதைப் பேதுரு தனது நிருபத்தில் விரிவாக்குகிறார் —
1 பேது 3:8-12

நாவடக்கம் பூரணத்தின் ஓர் அடையாளம் —

யாக் 3:2 ... *சொல் தவறாதவன் ... பூரண மனிதன் ...*
அதாவது, உங்கள் நாவை நீங்கள் அடக்க முடிந்தால்,
வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் சுயக்கட்டுப்பாடு சாத்தியம்
*''தன் உடல் முழுவதையும் அடக்க ...''*

- கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகருங்கள்.
  சுவிசேஷமே உங்கள் அரட்டையாகட்டும் (அப் 17:17)
  (Gossip the Gospel!)
- நீங்கள் பேசுவதெல்லாம் பிறரைக் கட்டியெழுப்பவேண்டும் —
  எபே 4:29 ... *கெட்ட வார்த்தை வேண்டாம் ... பக்திவிருத்தி*
- அரசியல் சாக்கடை நாற்றப் பத்திரிகைகள் வேண்டாம்;
  ஆபாசப் பத்திரிகைகள் வேண்டாம்.

உங்கள் மனதை எதினால் நிரப்புகிறீர்களோ
அதின்படிதான் உங்கள் வார்த்தைகள் வெளிவரும் —
லூக் 6:45 ... *இதயமாகிய நல்ல கருவூலம் ...*
*இதயத்தின் நிறைவு ... வாய் பேசும்*

**4. கெட்ட தோழமையினால்**
**எனது "பண்பாட்டைத்" தீட்டுப்படுத்தமாட்டேன்.**

கிறிஸ்துவிடம் மனந்திரும்பி வருதல் என்றால், பழைய கட்டுகளை உடைத்துப் புதிய பிணைப்புகளை உருவாக்குதல்.
(Breaking of the old bonds and making new bonds)

கெட்ட தோழமை நம்மைப் பாதிக்காது என்றெண்ணுவது வஞ்சகம் —

1 கொரி 15:33 ... *மோசம் போகாதிருங்கள் ...*
*ஆகாத உறவுகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்.*
:34 ... (மயக்கத்திலிருந்து) விழித்தெழுங்கள் ...
*பாவம் செய்யாதிருங்கள்.*

நமது வயதுள்ளோரிடமிருந்து அழுத்தங்கள் வரும்;
ஆனால் சமரசம் வேண்டாம், உயரிய பண்புகளைக் காத்திடுங்கள்.

- இறைமக்களோடு தவறாது ஐக்கியப்படுங்கள்.

பாபிலோனில் குடிவெறி, வேசித்தனம், சிலைவணக்கம் நிறைந்திருந்தன; ஆனால் தானியேலும் மூன்று வாலிபரும் ஒருவரையொருவர் தாங்கிப் பரிசுத்தத்தில் உறுதியாயிருந்தனர் —

தானி 2:17,18 ... *தானியேல், அனனியா, அசரியா, மீஷாவேல், ... தோழர்*

**5. அவிசுவாசத்தினால்**
**எனது "இதயத்தைத்" தீட்டுப்படுத்தமாட்டேன்.**

சிலுவையில் கிறிஸ்து முடித்தவற்றின் மீதுள்ள எளிய விசுவாசம் உங்கள் இதயத்திலிருப்பது அருமையானது —

1 பேது 1:7 ... *பொன்னிலும் விலையேறப்பெற்ற விசுவாசம்*

- உங்கள் விசுவாசத்திற்கு எதிராகச் செயல்படும் சக்திகள் ஏராளம்
*ஜாக்கிரதை!* (எபி 3:12) ... *அவிசுவாசமுள்ள பொல்லா இதயம்*



*"விசுவாசக் கேடகம்"* கொண்டுதான் சத்துருவின்
*"அக்கினி அம்புகளை"* அணைத்துப்போட முடியும் —
எபே 6:16

விவிலியம் ஒரு விஞ்ஞானப் புத்தகமல்ல;
ஆனால் சரியான விஞ்ஞானம் அதற்கு ஒத்தது.

விஞ்ஞானம் மனிதனது கண்டுபிடிப்பு;
விவிலியம் தேவனது வெளிப்பாடு.

இளம் தீமோத்தேயுவுக்குப் பவுலின் எச்சரிப்பு —

*"தீமோத்தேயுவே, ஞானமென்று பொய்யாய்ப் பெயர் பெற்றிருப்பதற்கு எதிராய் உன்னைக் காத்துக்கொள்"*
(1 தீமோ 6:20 21)

எல்லாக் கேள்விகளுக்கும் திருமறையில் பதில்கள் கிடையாது;
ஆனால் கேள்விகளுக்கெல்லாம் கேள்விக்குப் பதிலுண்டு —

*"இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?"* (அப் 16:30,31)

**முடிவுரை**

இத்தீர்மானங்களைத் தேவனிடம் சமர்ப்பித்து அவரை நம்புங்கள்; இவற்றின்படி நடக்க அவர் உதவுவார் (சங் 37:5; நீதி 16:3).

*"நான் அவரிடம் ஒப்புவித்ததை அந்நாள்வரை காத்துக்கொள்ள அவர் வல்லவர்"* என்று முழங்குங்கள் (2 தீமோ 1:12)

■

*இன்றைக்கு நான் செய்யும் இந்தத் தீர்மானத்தை*
*என்றைக்கும் காத்திட ஆவியால் நிரப்பும்;*
*நொறுக்கும், உருக்கும், உடையும், வனையும்*
*உமக்கே உகந்த தூய சரீரமாய்;*
*ஐம்பொறிகளையும் உமக்குள் அடக்கும்,*
*இயேசுவே, ஆவியால் நிரப்பும்;*
*வெற்றி வாழ்க்கையுள்ள மகனாய்த் திகழ*
*அக்கினி என் உள்ளம் இறக்கும்.*

# 13

# கிறிஸ்து மூலம் விடுதலை

## Liberation through Christ

மனுவுருவெடுத்தபோது இயேசு விண்ணகத்திலிருந்து மண்ணகத்திற்கு இறங்கினார்; இறந்தபோது மண்ணகத்திலிருந்து பாதாளத்துக்கு இறங்கினார்; உயிர்த்தபோது பாதாளத்திலிருந்து மண்ணகத்திற்கு ஏறினார்; உன்னதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது திரும்ப விண்ணகம் ஏறினார். கிறிஸ்து மண்ணுலகிற்கு இறங்கியதாலும் விண்ணுலகிற்கு ஏறியதாலும் கிட்டிய மிகப்பெரிய ஆசீர்வாதம் சிறைப்பட்டோருக்குக் கிடைத்த விடுதலையே. சிறையானோரைத் தமக்குச் சிறையாக்கினார் (எபே 4:8).''மாட்சிமையான விடுதலை!'' (ரோ 8:20).

கிறிஸ்துவின் உயிர்துறப்பு, உயிர்ப்பு மற்றும் உன்னதமேறுதலால் நமக்குக் கிடைக்கும் இவ்விடுதலையின் ஏழு பக்கங்களை இங்கு ஆராய்ந்து அனுபவிப்போம் —

**1. மாம்சீகச் சிறையிலிருந்து விடுதலை** (Carnalism)

கிறிஸ்து நமக்காக மனுவுடலில் பாடுபட்டபடியால் நாம் இனி மனிதரின் தீய ஆசைகளின்படி நடக்கத் தேவையில்லை (1 பேது 4:1,2). இனிக் காமவிகாரம், துராசை, மதுபானம், களியாட்டு, வெறி, சிலைவணக்கம் ஆகியவற்றிற்கு இடமில்லை (வச 3). இனி நாம் பாவத்திற்குத் தொண்டரல்ல (ரோ 6:6).

திருமுழுக்கின் விளக்கம் இதுவே. முழுகுவது கிறிஸ்துவோடு நாம் செத்து அடக்கம் பண்ணப்படுவதற்கு அடையாளம். பாவ உடல் ஒழிந்துபோகும்படி நமது பழைய மனிதன் அவரோடு சிலுவையிலறையப்பட்டாயிற்று (ரோ 6:6). தண்ணீரிலிருந்து வெளிவரும்போது



''மெய் நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவ சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனிதனை'' அணிந்துகொள்ளுகிறோம் (ரோ 6:3-5; எபே 4:24). ஊனியல்பிலும் துன்மார்க்கத்திலும் உழலும் உலகிலிருந்து நோவா தண்ணீரால் காக்கப்பட்டார். அதற்கு ஒப்புமையான ஞானஸ்நானமானது அதே ஆசீர்வாதத்தை இன்று நமக்களிக்கிறது (1 பேது 3:18-22). இனி நாம் ஊனியல்பிற்குக் கடனாளிகளல்ல (ரோ 8:10-12). கிறிஸ்து உயிர்த்தெழுந்துவிட்டதால் பாவத்தின் ஆளுகையிலிருந்து விடுவிக்கப்பட்டோம் (1 கொரி 15:17). கிறிஸ்துவின் இறப்பு நம்மைப் பாவத்தின் தண்டனையிலிருந்தும், அவரது உயிர்ப்பு நம்மைப் பாவத்தின் வல்லமையிலிருந்தும் விடுவிக்கின்றன (1 கொரி 15:3,17). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசிக்கையில் பாவத்திற்கு மறுப்பு தெரிவிக்கும் சக்தி பெறுகிறோம். இயேசுவை உயிரோடெழுப்பிய ''பரிசுத்தமுள்ள ஆவி'' நம்மிலும் வல்லமையாய்ச் செயல்படுகிறது. ''மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும்'' அவரது ''பலத்த சத்துவத்தின் வல்லமையும்'' நமதாகின்றன. இவ்விதம் நாம் பிசாசின் துராசைகளுக்குத் தப்பித் தெய்வீக வாழ்வை அனுபவிக்க ஆசி பெறுகிறோம் (ரோ 1:5; 2 பேது 1:3,4; எபே 1:19,20).

கிறிஸ்து விண்ணகத்தை விடும்போது தமது பிரிவுரையில் தந்தையிடம் இப்படிச் சொன்னார்: ''பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை; ஓர் உடலை எனக்கு ஆயத்தம்பண்ணினீர் ... தேவனே, உமது சித்தத்தின்படிச் செய்ய இதோ வருகிறேன்'' (எபி 10:5-7). அவ்விதமே நாமும் நமது உடலை உயிருள்ள பலியாக அவருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். இப்படிச் செய்வதால் இவ்வுலகின் வேடத்தை எதிர்க்கிறோமென்றும், இறைச்சித்தத்தை ஏற்கிறோமென்றும் சொல்லுகிறோம் (ரோ 12:1,2).

**2. பணப்பிரியச் சிறையிலிருந்து விடுதலை** (Materialism)

உயிர்த்த கிறிஸ்துவைத் தமஸ்கு சாலையில் சந்தித்தது விண்ணுலகின் மாட்சிமையைக் காணும்படியும் மண்ணுலகின் இலாபங்களைக் காண முடியாதபடியும் பவுலின் கண்களைக் குருடாக்கிற்று. ''சிலுவையைக் குறித்தே அல்லாது வேறொன்றையும் குறித்துப்

பெருமிதம் கொள்ளாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்'' என அவர் உறுதி பூண்டார் (கலா 6:14). பொருளாசை பிடித்த பிரசங்கிமாரை நினைத்தபோது அவரால் புலம்பாமல் இருக்க முடியவில்லை. அவர்கள் சிலுவைக்குப் பகைவர் என்று தயக்கமின்றிச் சுட்டிக்காட்டினார் (பிலி 3:18,19).

திருப்தியடைந்தவன் தேன் கூட்டையும் மிதிப்பானாம் (நீதி 27:7). அப்படியே, ஆன்மீக ஆசீர்வாதங்கள் நம்மைத் திருப்தி செய்யும்போது இவ்வுலக இன்பங்கள் நம்மைக் கவர முயற்சித்துப் படுதோல்வியடைகின்றன (கொலோ 3:1-3). சாலேமின் இராஜா தந்த அப்பத்திலும் ரசத்திலும் திளைத்திருக்கும் நாம் சோதோமின் இராஜா அள்ளிக் கொடுப்பதை வேண்டாமெனத் தட்டிவிடுகிறோம் (ஆதி 14:18-23). பணத் தேவதைக்குமுன் பணிய மறுக்கும் நம்மை உலகத்தார் விகற்பமாய்ப் பார்ப்பர் (கொலோ 3:5).

ஆனால் மண்ணுலகின் செழிப்பையும், பொருளாதார நன்மைகளையுமே கடவுள் தரும் பிரதான ஆசீர்வாதமாகக் கருதும் கிறிஸ்தவர் மற்றும் ஊழியர் வர்க்கம் ஒன்று இன்று தோன்றியுள்ளது. பீடங்களிலும் பத்திரிகைகளிலும் அள்ளி வீசப்படுவது இந்தச் சுகபோக வாழ்வுச் சுவிசேஷமே. இதைத் தாராளமாய் வாங்குவோர் திருமறை தெரியாத பாமரரே என்பது எவருமறிந்தது. கிறிஸ்து இறங்கியதும், ஏறியதும் ஏன் என்று அவர்களுக்கு யாரும் தெளிவாகப் போதிக்கவில்லை. இந்நிலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டொன்று நற்செய்திப் புத்தகங்களில் உண்டு —

விண்ணுலக அப்பத்திற்கும் பூவுலக மன்னாவிற்குமுள்ள வேறுபாட்டை இயேசு விளக்கியபோது அவரது சீடர் அநேகர் அவரை விட்டுவிட்டனர். இது ''கடின உபதேசம்'' என்றனர்! இயேசு அவர்களை நோக்கி, ''இது உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ? மனுமகன் தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள் காண்பீர்களானால் எப்படியிருக்கும்?'' என்றார் (யோ 6:58-66). பின்பற்றியோரின் எண்ணிக்கை திடீரென்று சரிந்ததும் இயேசு பதறவில்லை.



பன்னிருவரைப் பார்த்து, ''நீங்களும் போய்விட நினைக்கிறீர்களோ?'' என்றார். ''நித்திய'' ஜீவ வார்த்தைகளே அவர்களுக்குக் கவர்ச்சி எனப் பேதுரு பதிலுரைத்தபோது இயேசு அகமகிழ்ந்தார். இச்சந்தர்ப்பத்திலேயே பணப்பிரியனான யூதாசைப் ''பிசாசு'' என்று அவர் குறிப்பிட்டார் (வச 67-71).

இன்றும் சபையிலுள்ள சதுசேயருக்கு எச்சரிக்கை! அவர்கள் இவ்வுலகிற்காகவே வாழ்பவர்கள். மறுவுலகைப்பற்றிப் பேசினால் அவர்கள் பகடி செய்வார்கள் (அப் 23:8). ஆனால், ''இவ்வுலக வாழ்விற்காக மட்டும் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தால் எல்லா மனிதரையும்விடப் பரிதாபத்திற்குரியவர்களாயிருப்போம். கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்தார்'' எனத் திருவசனம் நம்மை எச்சரிக்கிறது (1 கொரி 15:19,20). விண்ணகக் காரியங்களைவிட மண்ணுலக ஆசீர்வாதங்களைப் பெரிதுபடுத்துகிறவர்களை ''மிருகங்கள்'' என்றுதான் சொல்லவேண்டும் (வச 32).

### 3. சடங்காச்சாரச் சிறையிலிருந்து விடுதலை (Ritualism)

கிறிஸ்துவின் இறப்பு சடங்காச்சார மார்க்கத்திற்குச் சாவு மணி அடித்தது. அவர் உயிர்விட்டபோது தேவாலயத்தின் தொங்குதிரை மேலிருந்து கீழ்வரை இரண்டாகக் கிழிந்தது (மத் 27:51). மகா புனிதத்தலம் என்று பிரத்தியேகமாக இனி ஓர் இடம் கிடையாது. அது எல்லாரும் செல்லக்கூடிய பொதுப் பாதையாயிற்று. மட்டுமல்ல, இறைமக்களிடையே இனி ஆச்சாரியர், ஆச்சாரியரல்லாதோர் என்று இரு வகுப்பினர் கிடையாது. இயேசுவின் பெயரில் எங்கெல்லாம் தேவ மக்கள் கூடுவரோ, அங்கெல்லாம் தேவனது நிறைவான பிரசன்னம் உண்டு. யாரெல்லாம் தேவனது பிள்ளைகளாகிறார்களோ, அதே நொடியில் அவர்கள் தேவனுக்குமுன் ஆச்சாரியர்களாகிவிடுகின்றனர். தேவ மக்கள் ''அனைவரும்'' ஓர் இராஜரீக ஆச்சாரியக் கூட்டம் (1 பேது 2:5,9).

நமது ஆலயங்களில் இன்னும் பலிபீடங்கள் (altars) வைத்திருப்பது எத்தனை துக்கம்! புதிய உடன்படிக்கையின் காலத்தில் அது எவ்வித வேதத் துரோகம்! மட்டரக விக்கிரகாராதனை! கடவுளே

மேலிருந்து கீழ்வரை இரண்டாய்க் கிழித்ததை மனிதன் தைப்பானேன்? சாராம்சம் வந்துவிட்டது, சடங்காச்சாரம் ஒழியட்டும்! திருப்பீடங்கள் அமைப்பது, குறிப்பிட்ட இடங்களுக்குப் புனிதத்துவம் கொடுப்பது, மெழுகுதிரி கொளுத்தித் தூபங்காட்டுவது, சிலுவையை வணங்குவது, குருக்கள் எனப்படுவோர் பிரத்தியேக ஆடைகளணிவது, இவை போன்றவை யாவும் ''செத்த செயல்கள்'' ஆகும் (எபி 9:1-14). நண்பா, ''மரித்தோரை விட்டு எழுந்திரு; அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்!'' (எபே 5:14).

சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தை நம்பும் எவருக்கும் எந்நேரமும் கிருபாசனம் திறந்திருக்கிறது (எபி 4:14-16). முன்னோடியாகிய இயேசு ''நமக்காக'' அங்குச் சென்றுள்ளதால், மனித நடுவர் யாருமின்றி, எளிய விசுவாசத்தினால் அந்நொடியிலேயே தேவனது மெய்ப்பிரசன்னத்திற்குள் நுழையலாம் (எபி 6:19,20). அவர் ''வானங்களிலும் உயர்ந்தவராகிவிட்டதால்'' அடிமட்டத்திலிருந்து (guttermost) அரியணைவரை (uppermost) நம்மை உயர்த்தி முற்றுமுடிய (uttermost) இரட்சிக்க அவர் வல்லவராயிருக்கிறார்! (எபி 7:25-27).

உணவு, பானம், பண்டிகைகள், ஓய்வு நாட்கள் ஆகியவை குறித்துப் பழைய உடன்படிக்கையிலிருந்தோருக்குக் கொடுக்கப்பட்ட சட்டதிட்டங்கள் யாவும் வெறும் நிழல்தான்; அவைகளின் நிசமோ கிறிஸ்துவைப்பற்றியது (கொலோ 2:16,17).

கர்த்தரின் பந்திக்குச் சடங்காச்சார வாசனை கொடுப்பதும் விக்கிரகாராதனையே. கர்த்தர் வருமளவும் அவரது மரணத்தை நினைவுகூருவதற்கு ஏதுவாகக் கொடுக்கப்பட்ட வெறும் அப்பமும், ரசமும்தான் அது. இவ்வடையாளச் சின்னங்கள் (symbols) மூலம் கர்த்தரின் வெற்றியைக் கொண்டாட விசுவாசிகள் எங்கு வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் கூடிவரலாம். அதற்கென்று ''விசேஷித்த'' ஆராதனை முறைமையோ, ஒரு ''முழுநேர'' ஊழியரோ கட்டாயத் தேவையில்லை. அது ''நாம்'' பிட்கிற அப்பமும், ''நாம்'' ஆசீர்வதிக்கிற பாத்திரமும்தானே? (1 கொரி 10:16,17; அப் 2:46).



இவ்வித உபதேசம் தங்களை மட்டுமே ஆச்சாரியரென நினைக்கும் ஆயர்கள், குருக்களுக்கு ஆத்திரத்தை உண்டாக்கும்; ஆனால் ஆண்டவருக்கோ ஆனந்தமாயிருக்கும்!

**4. பிரமாணச் சிறையிலிருந்து விடுதலை** (Legalism)

''கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்'' (ரோ 10:4). நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதிக்கும் விசுவாசத்தினாலாகும் நீதிக்குமுள்ள வேறுபாட்டைக் குறித்துப் பேசும்போது பவுல், ''விசுவாசத்தினாலாகும் நீதியானது: கிறிஸ்துவை இறங்கிவரப்பண்ணும்படி பரலோகத்திற்கு ஏறுகிறவன் யார்? அல்லது கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணும்படி பாதாளத்திற்கு இறங்குகிறவன் யார்? என்று உன் உள்ளத்திலே சொல்லாதிருப்பாயாக என்று சொல்லுகிறது'' என்றெழுதினார் (வச 6,7).

''கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்'' (கலா 3:13). அவர் ''நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடி எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்தார்'' (கொலோ 2:14). கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார்; ஆனால் உயிரோடு எழுந்தார். நியாயப்பிரமாணமோ சிலுவையிலறையப்பட்டு, ஒருபோதும் எழுந்திராதபடி, அகற்றப்பட்டது. புதிய உடன்படிக்கை பழையதோடு கூட்டப்படவில்லை; புதியது பழையதை நிராகரித்துவிட்டது!

மனந்திரும்புமுன் பவுல் சட்டதிட்டவாதியாயிருந்தார். ஆனால் கிறிஸ்துவையும், அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையையும், பாடுகளின் ஐக்கியத்தையும் அறியும்படி, நெடுங்காலமாய்த் தான் கொண்டாடிவந்த பிரமாணத்துவத்தைக் குப்பையென்று உதறித் தள்ளினார் (பிலி 3:4-11). ரோமர் நிருபத்தையடுத்து ஒவ்வொரு கிறிஸ்தவனும் கலாத்தியர் நிருபத்தைக் கருத்தாய்ப் படிக்க வேண்டும். இல்லையேல், விசுவாசத்தினால் நீதிமான்களாக்கப்பட்ட நாம் பின்வாசல் வழியாய் நுழைந்து கிறிஸ்துவுக்குள்ளான நமது சுதந்திரத்தைத் திருடிவிடும் கள்ளப் போதகர்களால் வஞ்சிக்கப்பட்டு விடுவோம் (கலா 2:4).

சிலர் தொழுகைக்காய்க் கூடிவரச் சனிக்கிழமையைத் தெரிந்து கொள்ளுகின்றனர்; வேறு சிலர் ஞாயிற்றுக்கிழமையைத் தெரிந்து கொள்ளுகின்றனர்; இன்னும் சிலருக்கு எந்த நாளென்றாலும் பரவாயில்லை. அவரவர் தங்கள் தங்கள் விருப்பம், வசதியின்படித் தெரிந்துகொள்ளட்டும். சிலர் தயக்கமின்றி பன்றியிறைச்சியும் நண்டு நத்தையும் சாப்பிடுகிறார்கள்; வேறு சிலர் ஆட்டிறைச்சி, மாட்டி றைச்சி, மீன் மட்டும் சாப்பிடுகிறார்கள்; இன்னும் சிலர் சைவ உணவு மட்டுமே சாப்பிடுகிறார்கள். அவரவர் தங்களுக்கான உணவு வகை களைத் தெரிந்துகொள்ளட்டும். இதற்காகவே ''கிறிஸ்து இறந்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார். இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்த்துக்கட்டுகிறதென்ன?'' (ரோ 14:1-10).

ஆன்மீகப் பழக்கங்களான தசமபாகம், உபவாசம் போன்ற காரியங் களும் கிறிஸ்தவர்மீது சட்டங்களாகத் திணிக்கப்பட முடியாது. மேலான உடன்படிக்கையிலிருக்கும் நாம் பழைய ஏற்பாட்டு மக்களை எல்லாக் காரியங்களிலும் மிஞ்சவேண்டும்; ஆனாலும் எவ்வளவு கொடுக்கவேண்டும், எவ்வளவு உபவாசிக்கவேண்டும் என்பதெல் லாம் தனி நபர்களின் தீர்மானத்திற்கு விடப்படவேண்டும். யோவா னது சீடர் மற்றும் பரிசேயரின் சீடரைப்போல இயேசுவின் சீடர் ஏன் உபவாசிப்பதில்லை என்ற கேள்விக்குப் பதிலாகத்தான் இயேசு, ''ஒருவனும் புது ரசத்தைப் பழைய துருத்திகளில் ஊற்றிவைக்க மாட்டான்'' என்றார் (மாற் 2:18-22).

### 5. தோல்விச் சிறையிலிருந்து விடுதலை (Defeatism)

பரமேறிய கிறிஸ்துவின் வரமாகிய பரிசுத்த ஆவியானவர் இறங்கியவுடன் பேதுருவுக்கும் மற்ற சீடருக்குமிருந்த தோல்வி மனப் பான்மை பறந்தோடியது. குழம்பி நின்ற யூத சமுதாயத்தை நோக்கிப் பேதுரு ஆணித்தரமாய், ''இந்த இயேசுவைக் கடவுள் எழுப்பினார்; இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம். அவர் கடவுளது வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, தந்தை அருளிய வாக்குப்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்'' என்று முழங்கினார்! (அப் 2:32,33).



இயேசு ஏறிச் சென்றிராவிடில் ஆவியானவர் இறங்கி வந்திருக்க மாட்டார். அவர்களை விட்டுத் தாம் சீக்கிரம் கடந்து செல்வாரென்று இயேசு தமது சீடருக்குச் சொல்லத் துவங்கியதும் பயம் அவர்களைக் கலக்கியது. ஆனால் அவரோ, ''நான் போகிறது உங்களுக்குப் பய னுள்ளதாயிருக்கும்; நான் போகாதிருந்தால், துணையாளர் உங்க ளிடத்தில் வரார்'' என்று உறுதியளித்தார் (யோ 16:7).

எனவே கிறிஸ்து பரமேறியதால் நமக்குக் கிட்டிய மிகப்பெரிய ஆசீர்வாதம் துணையாளராகிய ஆவியானவர் தமது வல்லமை வரங்களுடன் இகமிறங்கியதே. ''கிறிஸ்து உன்னதத்திற்கு ஏறி ... மனிதருக்கு வரங்களை அளித்தார் ... அவர் சிலரைத் திருத்தூது வராகவும், சிலரை இறைவாக்கினராகவும், சிலரைச் சுவிசேஷக ராகவும், சிலரை ஆயராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்'' (எபே 4:8-13). இப்படிச் சபைக்குப் பொதுவாக மட்டுமல்ல, ஒவ்வொரு விசுவாசிக்கும் தனித்தனியே வரங்கள் அளித்தார் (ரோ 12:4-6; 1 கொரி 12:7). சத்துருவைத் தோற்கடிக்கவும் தனது அழைப்பையும் பணியையும் நிறைவேற்றவும் இவ்விதம் சபைக்குத் தேவையான அத்தனையும் கொடுக்கப்பட்டாயிற்று.

கல்லறையிலிருந்து வெற்றியுடன் வெளிவந்த கிறிஸ்து, ''எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆகையால் புறப் பட்டுப் போங்கள்'' என்ற பேராணையைத் தமது சீடருக்குக் கொடுத் தார். அவர் மேலே சென்றார்; சீடர் முன்னே சென்றனர். அவர் அவர் களை எங்கும் வெற்றிபெறப்பண்ணினார். (மாற் 16:19,20; 2 கொரி 2:14). அவர்கள் நரகைச் சூறையாடி நகர்களிலும் நாடுகளிலும் சபை நிறுவினர். பாதாளத்தின் வாசல்கள் அவர்களது படையெடுப்பைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. ''பாதாளமே, உனக்கு எங்கே வெற்றி?'' என்று கேலியாய் இடி முழங்கினர் (மத் 16:18; 1 கொரி 15:55,57).

ஆனால் இன்றையச் சபையோ உலகிற்குமுன் நடுங்கி நாணி நிற்கிறது. ஏனென்றால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிலும் விண் ணேறுதலிலும் வெளிப்பட்ட தேவ வல்லமையைக் காணும்படிக் கிறிஸ்தவர்களின் மனக்கண்கள் இன்னும் திறக்கப்படவில்லை (எபே 1:17-23).

**6. பிரிவினைச் சிறையிலிருந்து விடுதலை** (Factionalism)

கிறிஸ்து இறங்கினதாலும் ஏறினதாலும் ''எல்லாரிலும் எல்லாம்'' ஆனதால், ''கிரேக்கர் என்றும் யூதர் என்றும், விருத்தசேதனம் பெற்றவர் என்றும் விருத்தசேதனம் பெறாதவர் என்றும், அடிமை என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் வேறுபாடில்லை'' (கொலோ 3:11). தமது சபையில் அவர் முதல்வரும் ஆண்டவருமாயிருக்கிறபடியால், அங்கு நாடு, இனம் அல்லது சமூக அடிப்படையில் வேறுபாட்டிற்கு இடமில்லை. விண்ணகமேறிய ஆண்டவரின் மாட்சிக்குமுன் எல்லாரும் சமம். யாரும் அலட்டிக்கொள்ளவோ, யாரையும் அலட்சியப் படுத்தவோ வழியில்லை.

ஒருபோதும் சேர்ந்துவர முடியாதென ஒருவேளை இரு வகுப்பினரிருந்தால் அவர்கள் யூதரும் புறவினத்தாருந்தான். யூதர் புறவினத்தாரை நாய்களென்று அழைக்குமளவுக்குப் புறக்கணிப்பர்; அரை யூதரான சமாரியரிடங்கூட தண்ணீர் வாங்கிக் குடிக்கமாட்டார்கள் (யோ 4:9). ஒரு சமாரியக் கிராமத்தை விலகிச் செல்ல முடியுமானால் கூடுதல் சில மைல்கள் நடக்கவும் யூதர் தயங்கார்! ஆனால் பிரிவினையாக நின்ற இந்த நடுச்சுவரைக் கிறிஸ்து இடித்தெறிந்தார் (எபே 2:14). இருவகுப்பினருக்குமிடையே இருந்த ''பகையைக்'' கொன்றார் (வச 16).

இனம், தரம், நிறம், இப்படியெல்லாம் தங்களுக்குள் பிரிந்து கிடக்கும் கிறிஸ்தவக் குழுக்கள் கிறிஸ்துவில் சரிவர அடித்தளமிடப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும் (எபே 2:19-22). ''பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்?'' என்று கொரிந்துவின் பிரிவினைக்காரரைப் பவுல் சாத்தினார் (1 கொரி 1:10-13). நமது சத்துவமின்மைக்கும் சாட்சியின்மைக்கும் முக்கியக் காரணம் நமது தனிக்காட்டுத்தனமும் சபைப் பிரிவினைப் பாகுபாடுகளுமே என்பதை இந்தியக் கிறிஸ்தோராகிய நாம் இன்னும் சரிவர உணரவில்லை. நமது சொந்த சாம்ராஜ்யங்களைக் கட்டும் வெறிகளை உதறித்தள்ளி, மன்னாதி மன்னரும் கர்த்தாதி கர்த்தருமானவரை உயர்த்துவதில் உற்சாகங்கொள்ளுவோமா?

**7. பாதக நோக்குச் சிறையிலிருந்து விடுதலை** (Pessimism)

அவிசுவாசத்திற்கு இன்னொரு சொல்தான் பாதக நோக்கு. பாதகச் சிந்தையின் உடனடி விளைவு பயமாகும். இயேசு சிலுவையிலறை



யப்பட்டதும் சீடர்கள் பயத்தினால் கதவடைத்துக்கொண்டனர். ஆனால் உயிர்த்தெழுந்த கர்த்தர் ''உங்களுக்குச் சமாதானம்'' எனக் கூறி உள்ளே நுழைந்தார்! அவர்களது பயத்தைப் பறக்கடிக்க அவர்கள்மீது தூயாவியை ஊதினார். உள்ளே இருந்துவிடாது வெளியே புறப்பட்டுச் செல்லும்படி உற்சாகப்படுத்தினார் (யோ 20:19-22).

இன்றும் சபைக்குக் கிறிஸ்துவின் செய்தி அதுவே: ''பயப்படாதே, நான் முதலாமவரும் முடிவானவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன். இறந்தேன், ஆனாலும், இதோ, என்றென்றும் இருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய சாவிகளை உடையவராயிருக்கிறேன்'' (வெளி 1:17,18).

உயிர்த்தெழுந்து நாற்பது நாள் கழித்து இயேசு விண்ணேறியபோது, அக்கலிலேய மனிதரைத் திரும்பவும் பயமும் பாதகச் சிந்தையும் கவ்வின. எனவே வெண்ணுடை அணிந்த இருவரை (மரணத்தைக் குறிக்கும் கருப்புடையல்ல) கடவுள் அனுப்பி இதுபோன்ற வார்த்தைகளைச் சீடர்களுக்குக் கூறச்செய்தார்: ''ஏன் எல்லாம் இழந்ததுபோல் இப்படி அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? அவர் போனபடியே திரும்ப வருவார். நீங்கள் போய் அவர் கொடுத்த வேலையைத் தீவிரமாய் முடியுங்கள்'' (அப் 1:9-11).

**முடிவுரை**

இவ்விதம் கிறிஸ்துவின் மூலம் வெளிப்படும் வல்லமை நமது நலனுக்கும் கடவுளது விருப்பத்திற்கும் எதிராயுள்ள அனைத்திலிருந்தும் நம்மை விடுவித்துள்ளது. எல்லாவிதச் சிறைவாசங்களும் ஒழிந்தன. நண்பரே, ''அடிமை நிலையிலிருந்து கிறிஸ்து நம்மை விடுவித்து நமக்கு அளித்துள்ள உரிமை வாழ்வில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தனம் எனும் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளாதீர்கள்!'' (கலா 5:1)

# 14

# சாத்தானை முறியடிப்பது எங்ஙனம்?

## How to overpower Satan

தீமையைவிடத் தீமையானவை மூன்றுண்டு. ஒன்று, சாத்தான் இருக்கிறான் என்பதில் அவநம்பிக்கை. இரண்டாவது, அவனது செயல்களை அறியாமை. மூன்றாவது, அவனது வலிமையைப்பற்றி அலட்சியம். வேதாகமம் பழைய ஏற்பாட்டிலும் புதியதிலும், உபதேசம் மூலமாகவும் உதாரணங்கள் வாயிலாகவும், வெளிப்படையாகவும் மறைமுகமாவும், சாத்தானின் தன்மையையும் திட்டத்தையும் வெளிப்படுத்துகிறது. புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களில் மட்டும், ''சாத்தான்'' (எதிரி) என்ற சொல் 36 தடவையும், ''பிசாசு'' (குற்றஞ் சாட்டுகிறவன்) என்பது 33 தடவையும் வருகிறது. ''பிசாசு இல்லை என்பதைப்போல் மோசமான பிசாசு இல்லை'' என்று ரால்ப் எர்ஸ்கின் என்ற பக்தன் இறைமக்களைத் துல்லியமாய் எச்சரித்தார்!

தூயாவியானவர் திருவசனத்தில் மானிடராகிய நாம் விளங்கிக் கொள்ளும்படி சாத்தானின் சதிகாரக் குணத்தை மிருகங்கள், பறவைகளுக்கு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். ஒரு ''சர்ப்பமாக'' அவன் தேவ மக்களை வஞ்சிக்க முயலுகிறான் (ஆதி 3:1; 2 கொரி 11:3; வெளி 12:9); ஓர் ''ஓநாயாக'' அவன் கடவுளின் மந்தையை விரட்டியடிக்க எத்தனிக்கிறான் (யோ 10:12; மத் 10:16); ஒரு ''சிங்கமாக'' அவன் இறைவனின் பிள்ளைகளை விழுங்கிவிடத் திரிந்தலைகிறான் (1 பேது 5:8); ஒரு ''காட்டுப் பறவையாக'' அவன் ஆண்டவரது அறுவடையை அழிக்க வகைதேடுகிறான் (மத் 13: 4,19); ஒரு ''வலுசர்ப்பமாக'' அவன் தேவ குமாரனையே அழித்துவிடத் திட்டமிடுகிறான் (வெளி 12:1-9).

''உலகிலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்'' என்று திருத்தூதுவர் யோவான் தனது நாட்களிலிருந்த விசுவாசிகளுக்கு எழுதினார் (1 யோ 4:4). இதற்குப் பொருள் கடவுள் ஒருவரே வலிமையிலும் ஞானத்திலும் சாத்தானை மிஞ்சியவர் என்பதாகும். சாத்தானின் விழுகைக்கு முன்னரும் கடவுள் அவனைவிட உயர்ந்த வரும் பெரியவருமாகவே இருந்தார். எனவேதான் சாத்தான் இறையாசனத்திற்கு ''ஏறுவேன்'' என்று முயற்சித்தான் (ஏசா 14:12-15). அவன் கீழே விழத்தள்ளப்பட்ட பிறகும் தனது வலிமையை இழந்துவிடவில்லை; தனது நிலையைத்தான் இழந்தான். தனது களங்கமின்மையைத்தான் இழந்தானே தவிர, அறிவை இழக்கவில்லை (எசேக் 28:15-17; யூதா 6). நம்மைப் பொருத்தவரை, அவனை மேற்கொள்ள நம்மில்தானே இயல்பான வலிமை எதுவும் கிடையாது. பிரதான தூதனாகிய மிகாவேல்கூட ஒருமுறை பிசாசோடு போராடக் கர்த்தரின் உதவி நாடினான் (யூதா 9). அப்படியானால் இச்சத்துருவை முறியடிக்க நாம் எவ்வளவாய்க் கடவுள்மீது சார்ந்திருக்கவேண்டும்! இறைமக்கள்மீது அவன் தொடுக்கும் தாக்குதல்கள் பல்வகையானவை. சாத்தானிலும் ஞானம் படைத்த சர்வ ஞானியாகிய கடவுள் அவனது ஒவ்வொரு தாக்குதலையும் தாக்குப்பிடித்து அவனைத் தாக்கத் தகுந்த படைக்கலன்களைத் தந்துள்ளார். இவ்வத்தியாயத்தில் சாத்தானின் பொதுவான ஏழு தாக்குதல்களையும், அவனை நீங்கள் எப்படி முறியடிக்கலாம் என்பதையும் கவனிப்போம் —

### 1. சாத்தான் உங்களுக்குச் சவாலிடும்போது ...

பாலைவனத்தில் இயேசு சந்தித்த மூன்று அடிப்படையான சோதனைகளில் இரண்டு அவரது குமாரத்துவத்தின்மீது வந்த சவால். சோதிக்கிறவன் அவரை அணுகி, ''நீர் இறைமகன் ***என்றால்*** இந்தக் கற்கள் அப்பமாகும்படிக் கட்டளையிடும் ... நீர் இறைமகன் ***என்றால்*** கீழே குதியும் ...'' (மத் 4:3,6). அச்சவால் இயேசுவுக்கு மட்டுமல்ல, அவர் பாலைவனத்திற்குள் நுழைவதற்குச் சற்று முன்னர்தான் அவரது தந்தையாகிய கடவுள் சொன்ன வார்த்தைகளாகிய ''இவர் எனது நேச குமாரன்; இவரில் பிரியமாயிருக்கிறேன்'' (மத் 3:17) என்பவைமீதும் வீசப்பட்டதாகும். சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இயேசுவைப் பார்த்த வழிப்போக்கர்களின் நாவுகளிலும் பிசாசு இதே வார்த்தைகளைப் போட்டான்: ''நீ இறைமகன் ***என்றால்,*** சிலுவையிலிருந்து இறங்கி வா'' (மத் 27:40).

எந்தப் பரிசுத்தவானையும் இச்சோதனையைக்கொண்டு தாக்காமல் பிசாசு விடுவதில்லை. கடவுளின் தந்தைத்துவம், நமது குமாரத்துவம் ஆகிய இரண்டையும் குறித்து தேவப் பிள்ளை ஒவ்வொருவருக்கும் அவன் சவால் விடுகிறான். உங்கள் ஆன்மீக வாழ்வின் துவக்கக் காலத்திலும், துன்பங்களில் துவளும் துக்க நாட்களிலும் இச்சோதனை கடுமையாயிருக்கும். ‘‘உன்னைப் போன்றதொரு பாவி திடீரென்று எப்படிக் கடவுளின் பிள்ளையாகிவிட முடியும்? நீ கடவுளின் பிள்ளையென்றால் இதெல்லாம் உனக்கு நேரிடுவானேன்?’’ இவ்விதக் கேள்விகள் இரவு பகலாய் உங்களைச் சாடும்.

இச்சோதனையில் சாத்தானை நீங்கள் முறியடிக்க வேண்டுமானால், நீங்கள் தேவனது பிள்ளை என்ற நிச்சயத்தை இடையறாது உங்களுக்கு நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும். எழுதப்பட்ட திருவசனத்தினாலும், உள்ளத்தில் தூயாவியானவரின் குரலினாலுமே இந்த நிச்சயம் உங்களுடையதாகும் (யோ 1:12; ரோ 8:16). இப்பகுதியில் தம்மைத் தாக்கிய பிசாசை முறியடிக்க இயேசு அவனது முகத்தில் திருவசனம் எனும் குண்டைத் தூக்கியெறிந்தார். ‘‘எழுதியிருக்கிறதே ... இப்படியும் எழுதியிருக்கிறதே’’ என்றார் அவர் (மத் 4:4,7). நீங்களும், ‘‘நான் கிறிஸ்துவை விசுவாசித்து அவரை ஏற்றுக்கொண்டுள்ளபடியால், கடவுளின் பிள்ளையாகும் உரிமையைப் பெற்றுக்கொண்டேன் என்று எழுதியிருக்கிறதே’’ எனலாம் (யோ 1:12).

இயேசுவோடு இருந்த பரிசுத்த ஆவியானவரின் துணை அவருக்கு இன்னொரு படைக்கலனாயிருந்தது. அவர் ‘‘ஆவியானவரால்’’ பாலைவனத்திற்குள் நடத்திச் செல்லப்பட்டார் என்றும், அங்கிருந்து ‘‘ஆவியானவரின் வல்லமையோடு’’ திரும்பினார் என்றும் வாசிக்கிறோம் (மத் 4:1; லூக் 4:14). பாடுகளைக் குறித்து ரோம் நகர் விசுவாசிகளோடு பேசிக்கொண்டிருக்கையில் திருத்தூதுவன் பவுல் கூறியது: ‘‘நாம் கடவுளின் பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நமது ஆவியோடு சான்று பகர்கிறார்.’’ எனவே பிசாசின் அச்சுறுத்தல் எதற்கும் பயப்படாதீர்கள். கடவுள் உங்களுக்கு ‘‘அப்பா,’’ அவர் உங்களது ‘‘தந்தை!’’ (ரோ 8:15-18). கடவுளின் குடும்பத்தில் நமக்குக் கிடைத்துள்ள இந்தச் சுவிகாரத்தை ரத்து



செய்யவோ, நாம் அவரது குமாரர் என்ற அத்தாட்சியைக் குலைத்துப் போடவோ எவராலும் எப்பொழுதும் முடியாது, முடியாது, முடியவே முடியாது!

### உ. சாத்தான் உங்கள்மீது குற்றஞ்சாட்டும்போது ...

கடவுளின் குடும்பத்தில் நீங்கள் ஒரு மகனாய் அல்லது மகளாய் இருக்கிறீர்களென்ற நிச்சயத்தில் நீங்கள் அசைக்கப்பட முடியாதிருந்தால், பிசாசு உங்கள் பழைய பாவங்கள் மற்றும் இன்றையத் தோல்விகளைக் கொண்டு உங்களைக் குற்றஞ்சாட்டுவான். அவனது பெயரே ‘‘சகோதரர்மீது குற்றஞ்சாட்டுகிறவன்’’ என்பதே (வெளி 12:10). இதை அவன் ‘‘பகலும் இரவும்’’ செய்துகொண்டேயிருக்கிறான். இதை எதிர்த்து ‘‘எப்பொழுதும்’’ கிறிஸ்து நமக்காய்ப் பரிந்து பேசிக்கொண்டேயிருக்கிறார் (எபி 7:25). இடையறாது பழி சுமத்துகிறவன் பிசாசு; இடைவிடாது பரிந்து பேசுகிறவர் கிறிஸ்து! அல்லேலூயா!

அவர்களது பழைய பாவங்களை அவர்களுக்கு நினைவுபடுத்திப் பிசாசு அநேக விசுவாசிகளை முடமாக்கிவிட்டான். இக்காரியத்தில் கடவுளின் மக்களுக்கு இருக்கும் அறியாமையை அவன் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளுகிறான். தீர்க்கன் ஓசியா மூலம் வெளிவந்த கடவுளின் புலம்பலைக் கவனியுங்கள்: ‘‘என் மக்கள் அறிவில்லாமையினால் அழிந்துபோகிறார்கள்’’ (ஓசி 4:6அ).

தனது பாவங்கள் என்னவானது என்பதைவிட முக்கியமான அறிவு கிறிஸ்தவனுக்கு வேறில்லை. தான் காணாமற்போனதை அவன் உணர்ந்து, கண்டபடி நடப்பதிலிருந்து மனந்திருந்தி, கிறிஸ்துவைத் தனது இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்ட அதே நொடியில் அவனது பாவங்கள் யாவும் நீக்கப்பட்டன. அவனது பாவங்களைக் கடவுள் தமது முதுகிற்குப் பின்னால் எறிந்துவிட்டார்; மேகத்தைப்போல் அகற்றிவிட்டார்; கிழக்குக்கும் மேற்குக்குமுள்ள தூரமாய் விலக்கிவிட்டார்; ஆழ்கடலில் அமிழ்த்திவிட்டார் (ஏசா 38:17; 44:22; சங் 103:12; மீகா 7:19ஆ) . நமது பாவங்களை அவர் மன்னித்ததோடல்லாது மறந்தும்விட்டார். தாம் அவைகளை இனி நினைப்பதேயில்லை என்று பலமுறை சொல்லியிருக்கிறார் (எரே

31:34ஆ). நினைக்கமாட்டேன் என்று கடவுள் சொல்பவைகளை நினைக்க உங்களுக்கு என்ன உரிமை? உங்கள் கடந்த காலத்தைப் பிசாசு உங்களுக்கு நினைப்பூட்டினால் அவனது எதிர்காலத்தை அவனுக்கு நினைப்பூட்டுங்கள்! அவனது துவக்கம் தெளிவாயில்லாவிட்டாலும் அவனது முடிவும் அழிவும் உறுதியாயிற்று (மத் 25:41; வெளி 20:10).

நீங்கள் ஒருபோதும் பாவமே செய்யாததுபோல கிறிஸ்துவின் இரத்தம் உங்களைப் பனியைப்போல வெண்மையாக்கிற்று (ஏசா 1:18). ''நீதிமானாக்கப்படுதல்'' என்பதின் பொருள் இதுதான். நீங்கள் வெறுமனே மன்னிக்கப்படவில்லை; முழுவதும் நீதிமானாக்கப்பட்டுவிட்டீர்கள். பரிசுத்தமான கடவுளின் அனைத்து நிபந்தனைகளையும் கிறிஸ்து நிறைவேற்றி அவரைத் திருப்திப்படுத்திவிட்டார். இயேசுவின் இரத்தம் உங்களைக் கழுவியதோடு உங்களை மூடிக்கொண்டுமிருக்கிறது எனப் பிசாசிடம் சொல்லுங்கள் (வெளி 12:11). இயேசுவின் இரத்தத்திற்கு எதிரான விவாதம் பிசாசிடம் கிடையவே கிடையாது.

மறுபடி பிறந்த ''பின்னர்'' நாம் செய்யும் பாவங்களைப்பற்றி என்ன? நீங்கள் கடவுளின் பிள்ளையாவதற்கு முன்னரோ பின்னரோ எப்பொழுது பாவம் செய்தாலும் அதற்குப் பரிகாரமும் நிவாரணமும் இயேசுவின் இரத்தமே! ஏற்கனவே செய்யப்பட்ட பாவங்களை மட்டுமல்ல, இனி செய்யப்படக்கூடிய பாவங்களையும் கிறிஸ்து தமது உடலில் சுமந்துவிட்டார். ''முடிந்தது!'' ஆதாம் பாவம் செய்தபிறகு அல்ல, உலகம் தோன்றுவதற்கு முன்னரே உலகின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி அடிக்கப்பட்டுவிட்டார். உலகம் முடிந்த பின்னரும் யுகாயுகமாய் இந்த நற்செய்தியே பாடலாய்த் தொனிக்கும் (வெளி 15:3). தனக்குப் பாவமில்லை என்று எந்த விசுவாசியும் சொல்ல முடியாது. அவன் அப்படிச் சொன்னால் அது தன்னையே ஏமாற்றுவதாகும் (1 யோ 1:8). செய்யவேண்டியவற்றைச் செய்யாதது எனும் பாவங்கள் (sins of omission) வெளிப்படையாய்த் தெரியாமலிருக்கலாம்; ஆனால் அவைதான் செய்யக்கூடாதவற்றைச் செய்தது எனும் பாவங்களைவிட (sins of commission) அதிகமாயிருக்கும். இம்மானுவேலின் இரத்த வெள்ளத்தில் அமிழ்ந்து



அங்கேயே இருப்பதுதான் பாதுகாப்பிற்கு ஒரே வழி. உங்கள் பாவங்களை உணர்ந்தவுடன் மன்னிப்பிற்காய்க் கடவுளிடம் கதறுங்கள். கிறிஸ்து அவரிடம் உங்களுக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறபடியால் விசுவாசத்தோடும் தைரியத்தோடும் அவரிடம் செல்லுங்கள். இது பாவம் செய்துகொண்டேயிருப்பதற்கு உரிமம் அல்ல; பரிசுத்த வாழ்விற்கான முயற்சியை விட்டுவிடாதிருக்க ஓர் ஊக்குவிப்பே (1 யோ 2:1).

''கடவுள் நம் சார்பில் இருக்கும்போது நமக்கு எதிராக இருப்பவர் யார்? கடவுள் தேர்ந்துகொண்டவர்களுக்கு எதிராய் யார் குற்றம் சாட்ட இயலும்? அவர்கள் குற்றமற்றவர்கள் எனக் காட்டுபவர் கடவுளே. அவர்களுக்கு யார் தண்டனைத் தீர்ப்பு அளிக்க இயலும்? இறந்து, ஏன், உயிருடன் எழுப்பப்பட்டு கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கும் கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறார் அன்றோ?'' (ரோ 8:31-34). பிசாசு உங்கள்மீது குற்றம்சாட்டும்போது அவன் காதில் இந்த வேதப் பகுதியைக் கத்துங்கள். வாலைச் சுருட்டிக்கொண்டு உயிர் தப்ப ஓட்டம்பிடிப்பான்! நீங்கள் வெற்றிமேல் வெற்றிபெற்று வெளி நடப்பீர்கள்!

### 3. சாத்தான் உங்களுக்குச் சோர்புண்டாக்கும்போது ...

கடவுளின் மக்களுக்கு எதிராய்ப் பயன்படுத்தும் அனைத்து ஆயுதங்களிலும் மிகவும் சக்தி வாய்ந்தது சோர்புறச்செய்வது என்பதே சாத்தான் கண்டுபிடித்தது. பழைய ஏற்பாட்டிலோ புதியதிலோ எந்தப் பரிசுத்தவானும் இதற்குத் தப்ப முடியவில்லை. அப்படியில்லையென்றால், கர்மேல் மலையில் வீரதீரச் சாகசம் புரிந்த தீர்க்கன் எலியா அடுத்த நாளே கோழையிலும் கோழையாய்ச் சூரைச்செடியின் கீழ் படுத்துக்கிடந்ததை எப்படி விளக்க முடியும்? பொதுவாக, கடவுளோடு கொண்ட மலையுச்சி அனுபவம் அல்லது அவரது அரசிற்காய்ப் புரிந்த அருஞ்செயல் ஒன்றை அடுத்தே சோர்பின் குப்பை மேட்டில் புதைக்கப்படுவோம் என்பதே தேவ மனிதரின் சாட்சி.

திருத்தூதுவர் பவுலுக்குத் தெய்வீக வெளிப்பாடுகள் ஏராளமாயிருந்தன. ஆனால் அவரது உடலில் ஒரு முள் அவரைக் குத்திக்

கொண்டேயிருந்தது. அவர் அதைத் தன்னைக் குத்திக் கொடுமைப் படுத்தும் ''சாத்தானின் தூதன்'' என்றழைக்கிறார் (2 கொரி 12:7). அது தன்னைவிட்டு நீங்கிவிடவேண்டுமென எவ்வளவாய் விரும் பினார்! அதைக் குறித்து ஏனோதானோவென்று அவர் ஜெபித்து விட்டுவிடவில்லை; சாத்தானின் அந்த அம்பு அவரைவிட்டு முழுவதும் நீங்கிவிடும்படித் திரும்பத் திரும்பக் கடவுளிடம் ''வேண் டிக்கொண்டார்.'' அந்தப் பிரச்னையிலிருந்து பவுலை விடுவிப்ப தற்குப் பதிலாக, அதைச் சமாளிப்பதற்கான பலத்தைக் கடவுள் அவருக்குக் கொடுத்தார். பாடு பாடுதான், ஆனால் தேவ கிருபையால் கண்ணீர் களிப்பாயிற்று! (வச 8,9,10). பிசாசுக்கு இது இன்னொரு தோல்வி! சோர்பின் பள்ளத்தாக்கில் புதைந்து புலம்பிக்கொண்டிராது பவுல், ''வலுவற்றிருக்கும்போது வலுவுற்றிருக்கிறேன்'' என்று பாடிக்கொண்டு குதித்தெழுந்தார்!

இதற்கு முந்திய தலைமுறைகளுக்கு வாழ்க்கை என்பது நமக்கிருப்பதைவிட இலகுவாயிருந்தது. விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் இன்று உச்ச நிலை அடைந்துள்ளன. சாதனங்களும் சாதகங்களும் இன்றுபோல் என்றுமே இருந்ததில்லை. ஆனால் இறுக்கங்களும் இளைப்புகளும் நிறைந்த வாழ்வே விளைவு. நமது மூதாதையர் அறியாத வியாதிகளெல்லாம் இன்று சர்வ சாதாரணம். இவையெல்லாவற்றையும் சாத்தான் பயன்படுத்தி இறைமக்களைச் சோர்பில் அமிழ்த்திவிடுகிறான். ஆனால் நேற்றைய, இன்றைய, நாளையப் பிரச்னைகளுக்குப் பதில் தரும் திருமறை, கடவுள்தான் நம்மைக் கவனிக்கிறவராகையால், நமது எல்லாக் கவலைகளையும் அவர்மேல் வைத்துவிடும்படி நமக்குப் போதிக்கிறது. இல்லையேல் ''எவனை விழுங்கலாமென்று வழிதேடிச் சுற்றித்திரிகிற கர்ச்சிக்கிற சிங்கம் போன்ற'' பிசாசிற்கு நாம் எளிதில் இரையாகிவிடுவோம் (1 பேது 5:7,8). ஜெபிப்பதால் பிரச்னைகளுக்கு நிவாரணமும், வேதனைகளிலிருந்து விடுதலையும் கிடைத்துவிடும் என்று சொல்ல முடியாது; ஆனால் நம்மால் புரிந்துகொள்ளமுடியாத தெய்வீக சமா தானத்தையே ஜெபம் வாக்களிக்கிறது (பிலி 4:6,7). பிசாசை எதிர்த்து நிற்பதற்குத் தேவையான சக்தியாய் மாறுவது கர்த்தருக்குள்ளான இந்த மகிழ்ச்சியே. பரிசுத்தவான்கள் அத்தனை பேரும் உங்களைப்



போலவே பாடுபடுகின்றனர் என்ற அறிவே இன்னொரு ஊக்கம் (1 பேது 5:9). கவலை உங்களைக் கவலைப்படுத்துவதை நிறுத்தும் வரை கவலையைக் கவலைக்குள்ளாக்குங்கள்! *(18ஆம் அத்தி யாயத்தை வாசியுங்கள்.)*

கடவுளுடைய பிள்ளைகளைச் சோர்புறச் செய்வதில் தீவிர மாயிருப்பது மட்டுமல்ல, உற்சாகப்படுத்துவோருக்கு எதிராகவும் சாத்தான் விறுவிறுப்பாய்ச் செயல்படுகிறான். தெசலோனிக்கேயா நகரிலுள்ள பரிசுத்தவான்கள் பலவிதப் பாடுகள், உபத்திரவங்கள் வழியாய்ச் செல்லும்போது அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் சாத் தானின் இந்தத் திட்டத்தைப் பவுல் சுட்டிக்காட்டினார்: ''நாங்கள் உங்களிடம் வர விரும்பினோம். அதிலும் பவுலாகிய நான் ஒருமுறை அல்ல, இருமுறை உங்களிடம் வரத் திட்டமிட்டேன். ஆனால் ***சாத் தான்*** எங்களைத் தடுத்துவிட்டான் ... சோதிப்பவன் உங்களைச் சோத னைக்குட்படுத்திவிட்டானோ என்று அஞ்சினேன்'' (1 தெச 2:18; 3:4,5). நீங்கள் ஒரு பர்னபாவாக (= ஊக்குவிப்பின் மகனாக) இருந் தால், பெயல்செபூலினால் நீங்கள் தாக்கப்படுவது திண்ணம். ஆனா லும் திட மனதோடு முன் செல்லுங்கள். பரிசுத்த ஆவியானவரும் தேற்றி ஊக்குவிப்பவரானதால் அவர் உங்களுக்குப் பக்கபலமாய் இருப்பார்!

### 4. சாத்தான் உங்களைப் பிரிக்கும்போது ...

பிரித்தாள்வதே சாத்தானின் தொன்றுதொட்ட தாக்குமுறை. தேவ மக்களது ஒருமனத்தின் சக்தியை நன்கறிந்த அவன் திறமையாகவும் தந்திரமாகவும் அவர்கள் நடுவில் பிரிவினையெனும் விதைகளை விதைத்துவிடுவான். ''நியாயமான'' காரணம் என்ற பெயரில் குழுக் களிலிருந்து விசுவாசிகளைப் பிரித்துவிடும்போது அவர்களைத் தாக்குவது அவனுக்கு எளிதாகிவிடுகிறது. மந்தையிலிருந்து சிதறிச் செல்லும் ஆடுகள் பீறுகிற ஓநாய்களுக்கு விரைவில் இரையாகி விடும். வல்லமையான இரு ஊழியர்கள் நெடுங்காலம் சேர்ந்திருப் பது அவனுக்குப் பிடிக்காது, பொறுக்காது. ஏனென்றால், ஒருவனை விட இருவர் அவனை எதிர்ப்பது அவனுக்கு ஆபத்து என்று அவ னுக்குத் தெரியும் (பிர 4:9-12).

ஆபேலைக் காயீன் கொலை செய்தான். மனுக்குலச் சரித்திரத்தி லேயே இதுதான் முதல் கொலையாகும். இன்று TVயில் ஏதோ ஏராளம் கொலைக்குற்றப் படக்காட்சிகளைப் பார்ப்பதால் கொலைகள் பெருகி விட்டன எனலாம். ஆனால் காயீனுக்கு இன்னொருவனைக் கொலை செய்யவேண்டுமென்ற எண்ணம் எங்கிருந்து வந்தது? அவனை அவ்விதம் செய்யத் தூண்டியது யார்? திருத்தூதுவர் யோவான் இதற் குப் பதில் தருகிறார்: ''காயீன் பொல்லாங்கனால் உண்டானவன்'' (1 யோ 3:12அ). அடுத்தவர்மீது பழி சுமத்தும் கலையை நமது முதல் பெற்றோருக்குக் கற்பித்தது சாத்தான். அவர்களது முதல் மகனைப் பொறாமையின் ஆவியினால் அவன் நிரப்பினான். அவன் யூதாஸ் காரியோத்திற்குள் நுழைந்து அவனது ஆண்டவரையே காட்டிக் கொடுக்க முன்தள்ளினான் (லூக் 22:3,4). இவ்விதம், கணவன் மனைவிக்கு இடையிலென்றாலும் சரி, பரிசுத்தவான்கள் நடுவி லென்றாலும் சரி, சமுதாயத்திலென்றாலும் சரி, உறவுப் பிரச்னைகள் யாவற்றிற்கும் மூலகாரணன் சாத்தான்தான். நாம் நம்மை ஞானிகள் என்றெண்ணிக்கொண்டு பொறாமைக்கும் தன்னலத்திற்கும் இடங் கொடுத்தால், அது பேய்த்தனமானது (யாக் 3:14,15). பொய்யனும் பொய்யப்பனுமான அவன், இல்லாத ஒன்றை நம்பும்படி மக்களை ஏவி, அவர்கள் எதைப் பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் சந்தே கிக்கச் செய்கிறான். இவ்விதப் போராட்டத்தில் நாம் அவனை எப்படி முறியடிக்கலாமென்று தமது வசனத்தில் கடவுள் நமக்குப் போதித் துள்ளார் —

❒ எபேசியர் 4:26,27, ''கோபப்பட்டாலும் பாவம் செய்யாதிருங் கள்; பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்; ***பிசாசிற்கு*** இடம் கொடாதிருங்கள்.'' நெடுநேரம் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகும்கூட கோபத்தை வைத்துக்கொண்டிருப்பது, அது நியாயமான கோபமாயிருந்தாலும், பிசாசிற்கு இடம் கொடுப்பதாகும். ஆண்டவ ருடைய கோபம்கூட ''ஒரு நிமிடம்''தான் (சங் 30:5). அவரது கோபத் தினால் சாயங்காலத்தில் அவர் நம்மை அழவைக்கலாம்; ஆனால் அவரது தயவினால் விடியற்காலத்திலேயே மகிழ்ச்சியை அனுப்பி விடுவார்! நாம் கடவுளைவிடப் பரிசுத்தவான்களோ? பெரியவர்



களோ? பாவத்தையே பாராத சுத்தக் கண்ணராகிய கடவுள் நம்மீது தமது கோபத்தை எப்பொழுதும் வைத்திருப்பாரானால் யார்தான் சகிக்க முடியும்? கடவுளின் சாட்சியைக் கேளுங்கள்: ''அற்ப காலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்கு வேன்'' (ஏசா 54:8). கசப்பை உங்கள் இருதயத்தில் வேர்விட நீங்கள் அனுமதித்தால் நீங்கள் தேவ கிருபையை இழந்துபோவீர்கள். கசப்பு இருக்குமிடத்தில் பரிசுத்தம் தங்க முடியாது (எபி 12:14,15).

❒ 2 கொரிந்தியர் 2:10,11, ''நீங்கள் ஒருவனை மன்னித்தால் நானும் அவனை மன்னிக்கிறேன். நான் மன்னிக்கவேண்டியது ஏதா வது இருந்தால் அதை உங்கள் பொருட்டுக் கிறிஸ்துவின் முன்னி லையில் மன்னித்துவிட்டேன். இவ்வாறு ***சாத்தான்*** நம்மை வஞ்சிக்க இடம் கொடுக்கமாட்டோம். அவனது தந்திரங்கள் நமக்குத் தெரியா தவை அல்லவே!'' கொரிந்து சபையில் ஒருவன் தனது மாற்றாந் தாயோடு முழுக்க முழுக்க விபச்சாரத்தில் வாழ்ந்துகொண்டிருந்தான். அவன்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கச் சபையாருக்குப் பவுல் அறி வுறுத்தினார். அவனது உடல் வேதனைப்பட்டாலும் பரவாயில்லை, அவனது ஆன்மா இரட்சிக்கப்படும்படி அவனைச் சாத்தானிடம் ஒப்புக்கொடுங்களென்றும் அவர்களிடம் கூறினார் (1 கொரி 5:1-5). அப்போஸ்தலனது உத்தரவை எழுத்தின்படியே அவர்கள் பின் பற்றினர். ஆனாலும், பவுலுக்கிருந்த தந்தையுள்ளம் பாவம் செய்த அவன் ''அதிக துக்கத்தில் அமிழ்ந்து'' போவதைக் காணச் சகிக்காது (2 கொரி 2:6,7). விசுவாசிகள் தங்களது அன்பை மனந்திரும்பிய அவனுக்கு மறுபடியும் காட்டப் பவுல் அவர்களிடம் வேண்டினார் (வச 8). அவர்கள் அவனுக்கு மன்னிப்பைக் கூறத் தாமதித்திருந்தால், சாத்தான் அச்சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாக்கியிருப்பான். ''அறுவை சிகிச்சை வெற்றிகரமாய் முடிந்தது; ஆனால் நோயாளி இறந்துபோனான்'' என்ற நிலைதான் ஏற்பட்டிருக்கும். பிசாசு எப் பொழுதுமே அழிப்பவன்தான்; ஆண்டவரது வழிகளோ மீட்பவை. ''இரட்சகர்களாய்'' இருக்கும்படியே இறைமக்கள் அழைக்கப்பட் டுள்ளனர்!'' (ஒப 21அ).

❐ ‘‘சத்தியம் பிரிக்கத்தான் செய்யும்!’’ ‘‘சமாதானத்தை அல்ல, பட்டயத்தை அனுப்பவே இயேசு வந்தார்!’’ கிறிஸ்தவ வட்டாரங் களில் மிகவும் தவறாய்ப் பயன்படுத்தப்படும் வாசகங்களில் இவை சில. சபைகளில் பிரிவினை உண்டாக்குவோர் இந்த வாசகங்களையே சொல்லிக்கொண்டு தாங்கள் செய்வது சரியென்பர். நம்மெல்லாரை யும்விட உலகத்திலுள்ள பழமொழிகளும் வேதங்களும் பிசாசுக்கு அதிகம் தெரியும். ‘‘நீ ஞானத்தால் நிறைந்தவன்’’ என்று கடவுளே லூசிபரைக் குறித்துச் சாட்சியிட்டுள்ளார் (எசேக் 28:12). ஆனால் பிசாசு எப்பொழுதுமே வசனங்களையும் வாசகங்களையும் தவறாய்த் தான் மேற்கோள் காட்டுவான். அவன் ‘‘எழுதியிருக்கிறதே’’ என்று சொன்னால், திருப்பி அவனிடம் ‘‘இப்படியும் எழுதியிருக்கிறதே’’ என்று நமக்குச் சொல்லத் தெரியவேண்டும் (மத் 4:6,7). அப்படியே, நாம் சத்தியத்தைப் பேசவேண்டும் என்பது உண்மைதான்; ஆனால் அதை ‘‘அன்பினால்’’ பேசவேண்டுமே (எபே 4:15அ). மட்டுமல்ல, இயேசு குறிப்பிட்ட பிரிக்கும் பட்டயம் என்பது அவரது பிள்ளை களுக்கு நடுவே அல்ல; கடவுளின் அழைப்பிற்குக் கீழ்ப்படிய விழை பவர்களுக்கும் அதை எதிர்ப்பவர்களுக்கும் இடையிலேயே செயல் படும் (மத் 10:34-39). இல்லையேல், ‘‘சமாதானம் பண்ணுகிறவர் கள் பாக்கியவான்கள்’’ என அவர் எப்படிப் போதிப்பார்? பிரிவினை உண்டுபண்ணுபவர்கள் கடவுளின் ஆவியைக் கொண்டிராதவர்கள்; மனித இயல்பின்படி நடப்பவர்கள்; அவர்கள் பிசாசிற்கு ஏஜெண்டு கள்; அவர்களைக் குறித்துக் கவனமாயிருங்கள்! (யூதா 19). ‘‘அவர்களை விட்டுவிலகுங்கள்’’ (ரோ 16:17).

❐ கலாத்தியர் 5:19-21இல் வரிசைப்படுத்தப்பட்ட ஊனியல்பின் பதினேழு செயல்களில் ஒன்பதும், வசனங்கள் 22,23லுள்ள ஆவி யின் ஒன்பது கனிகளில் ஒன்பதும் உறவுக்கடுத்தவைகளே. கவனத் தோடும் கண்டிப்போடும் நாம் ஆவியின் கனிகளை நமது வாழ்வில் விளைவித்தால், பிசாசின் களைகளாகிய ஊனியல்பின் செயல்களைத் தூயாவியானவரின் நெருப்பு கொண்டு எரித்து ஒழித்துவிடலாம்.

### 5. அவன் உங்களை ஏமாற்றும்போது ...

*Satan is no Myth* என்ற தனது நூலில் ஆஸ்வால்டு சான்டர்ஸ் (1902-1992) என்ற பக்தன் சாத்தானின் திட்டங்களிலுள்ள போலித்தனத்தை அம்பலப்படுத்தியுள்ளார்: சாத்தானும் ஒரு திரித்



துவம் வைத்திருக்கிறான்: பிசாசு, மிருகம், கள்ளத் தீர்க்கதரிசி (வெளி 16:13); அவனுக்கும் சொந்த சபை ஒன்றுண்டு: ‘‘சாத்தானுடைய கூட்டம்’’ (வெளி 2:9); அவனுக்கும் ஊழியக்காரர் இருக்கிறார்கள் (2 கொரி 11:14,15); அவனுக்கும் ஓர் இறையியல் தத்துவம் உண்டு: ‘‘பிசாசுகளின் உபதேசங்கள்’’ (1 தீமோ 4:1); அவனும் பலி செலுத் தும் முறைமை ஒன்று வைத்திருக்கிறான்: ‘‘அஞ்ஞானிகள் பேய் களுக்கே பலியிடுகிறார்கள்’’ (1 கொரி 10:20); அவனுக்கும் அப்பம் பிட்கும் ஆராதனை என்று உண்டு: ‘‘பேய்களுடைய பாத்திரம் ... பேய்களுடைய பந்தி’’ (1 கொரி 10:21); அவனது ஊழியர் அவனது செய்தியையே பிரசங்கிப்பர்: ‘‘வேறொரு சுவிசேஷம்’’ (கலா 1:7,8); அவனுக்கும் ஒரு சிங்காசனம் உண்டு (வெளி 13:2); அவனை வணங்கும் கூட்டமும் உண்டு (வெளி 13:4).

திருச்சபையில் பெரும்பாலும் கண்டுபிடிக்கப்படாத வியாதி வஞ்சகமே. வஞ்சகத்தின் கொடுமை என்னவெனில், வஞ்சிக்கப் பட்டவர்களுக்கு அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியாது. இந்த யுகத்தின் இறுதியை நாம் நெருங்க நெருங்க வஞ் சிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே இருக்கிறது. இயேசுவின் சீடர்கள் அவரைப் பார்த்து, ‘‘உமது வருகைக்கும் உலக முடிவுக்கும் அறிகுறி என்ன?’’ என்று கேட்டபோது, அவர் தந்த பதி லில் முதல் வாக்கியமே, ‘‘ஒருவனும் உங்களை *வஞ்சியாதபடி* எச் சரிக்கையாயிருங்கள்’’ என்பதே (மத் 24:3,4). தேர்ந்துகொள்ளப்பட்ட வர்களுங்கூட வஞ்சிக்கப்படக்கூடும் என்றும் அவர் கூறினார் (வச 24). வஞ்சகத்திலிருந்து மீளுவது சுலபமல்ல. வருமுன் காப்பதுதான் மேல். எனவேதான் இயேசு, ‘‘இதை முன்னதாகவே நான் உங்க ளுக்குச் சொல்லிவிட்டேன்’’ என்றார் (வச 25). வஞ்சகத்திற்குத் தப்ப சில வழிமுறைகளை இங்கு குறிப்பிடுகிறேன் —

❐ கிறிஸ்தவ வாழ்வின் பல்வேறு பக்தி முயற்சிகளில் திருமறைத் தியானத்திற்கே முதலிடம் கொடுங்கள். ‘‘பேசுவதைவிடக் கேட்ப தற்காகவே’’ திருப்பிரசன்னம் செல்லவேண்டுமென்கிறது திருமறை (பிர 5:1). கடவுள் எல்லாவற்றையும்விட, தமது பெயர்ப்புகழையும் விட, தமது வார்த்தையை மேன்மைப்படுத்தியுள்ளார் (சங் 138:2). நீங்கள் தேவனோடு தனித்துச் செலவிடுவது ஒருமணி நேரமா யிருக்குமென்றால், அதில் 40 நிமிடங்களை வேதத் தியானத்திற்கும்

20 நிமிடங்களைத் துதிப்பதற்கும் வேண்டுவதற்கும் செலவிடுங்கள். சட்டமென்று கீழ்ப்படிவதற்கான 11ஆம் கட்டளையல்ல இது; வஞ்சகத்திலிருந்து நீங்கள் காக்கப்பட வசனத் தியானம் எவ்வளவு முக்கியம் என்பதையே இங்கு வலியுறுத்துகிறேன்.

❒ சமநிலையுடையவராயிருங்கள். மற்ற சத்தியங்களை விட்டுவிடுமளவிற்கு ஏதோ ஒரு சத்தியத்தை அளவுக்குமீறி வலியுறுத்திக்கொண்டிராதீர்கள். தெய்வீக சத்தியத்தின் குறிப்பிட்ட பகுதியொன்றை ஒருபுறச் சாய்வாக வலியுறுத்துவதே பெருவாரியான வஞ்சகத்திற்கு மூல காரணம். எனவேதான் கடவுள் திருச்சபைக்குப் பலவகை ஊழியங்களை வரமளித்துள்ளார். அப்போஸ்தலத் தரிசனத்தோடும், தீர்க்கதரிசனக் கண்ணோட்டத்தோடும், சுவிசேஷகனின் தாகத்தோடும், மேய்ப்பனின் பாரத்தோடும், போதகனின் அறிவோடும் உங்களுக்கு நீங்கள் இணைப்பு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்விதம் ''எல்லாவற்றிலும்'' நீங்கள் வளராவிடில் பிசாசின் தந்திரங்கள், சூழ்ச்சிகள் மற்றும் ஏமாற்று வழிகளில் நீங்கள் சிக்கிக்கொள்வது திண்ணம் (எபே 4:11-15). துர்வுபதேசத்திற்குப் பிசாசு உங்கள் காதுகளைத் திறக்குமுன் ஆரோக்கிய உபதேசத்திற்கு உங்களைச் செவிடாக்குவான்.

❒ வேதத்திற்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகள் மற்றும் அனுபவங்கள் மீதுள்ள நாட்டத்தை அகற்றுங்கள். கடவுளுக்குப் பிரியமான வாழ்க்கை வாழ்வதற்குத் திருமறையில் தெளிவாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளவையே போதும். இரகசியங்கள் இறைவனுக்குரியவை (உபா 29:29). திருமறைக்கு அப்பாற்பட்டவற்றைத் தோண்டித் துருவுவது ''தேவனுடைய ஆழங்களுக்கு'' உங்களை எடுத்துச் செல்வதற்குப் பதிலாகச் ''சாத்தானின் ஆழங்களில்'' உங்களைப் போட்டுவிடும் (1 கொரி 2:10; வெளி 2:24). விவிலியத்தில் போதனையினாலும் எடுத்துக்காட்டுகளினாலும் உபதேசிக்கப்படாத எந்த அனுபவத்தையும், அது ஆன்மீகத் தோற்றமளித்தாலும், அணைத்துக்கொள்ள நாம் கடனாளிகளல்ல. ''அடைப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும்'' (பிர 10:8). பில்லிசூனியம் மற்றும் மாயாஜாலம் சம்பந்தப்பட்ட எதற்கும் ஒதுங்கி ஓடிவிடுங்கள். இவைகளுக்குப்பின் பொல்லாத ஆவிகள் உண்டு (உபா 18:9-12; ஏசா 8:19).



*(''வஞ்சகம்'' குறித்த 31 & 32ஆம் அத்தியாயங்களையும் வாசியுங்கள்.)*

**6. சாத்தான் உங்களை எதிர்க்கும்போது ...**

கிறிஸ்து முதன்முதல் திருச்சபை என்ற சொல்லை உச்சரித்த அதே வேளையில் நரகத்தையும் குறிப்பிட்டார். பேதுருவிடம் சொல்லப்பட்ட அந்த வார்த்தைகளைக் கவனியுங்கள்: ''இந்தப் பாறையின் மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாயில்கள் அதின் மேல் வெற்றிகொள்ளா'' (மத் 16:18). வேறு வார்த்தைகளில் சொன்னால், திருச்சபை கட்டப்படுதலும் சாத்தானோடு போரிடுதலும் இணையாகவே செல்லும். இறையரசுப்பணி எதையும் சாத்தான் காணாது விட்டுவைக்கமாட்டான். இறையரசுக்குக் கிடைக்கும் இலாபம் எதுவும் அவனது அரசிற்கு ஏற்படும் இழப்பு என்பது அவனுக்குத் தெரிவதால் முழுக்க முழுக்க அவன் திருப்பணிகளை எதிர்ப்பான். உண்மையாய்ச் செய்யப்படும் எந்த ஊழியமும் அவனது கண்களுக்குத் தப்பாது. தனது சிறைக்கைதிகளை அவ்வளவு எளிதில் இருளிலிருந்து ஒளிக்குள் செல்ல விட்டுவிடமாட்டான். எனவே இறைப்பணியில் எதிர்ப்பு வந்தால் நாம் ஆச்சரியப்படக்கூடாது; வராவிட்டால்தான் ஆச்சரியப்படவேண்டும்! மிஷனரி பவுல் எழுதியது எனக்கு அதிகம் பிடிக்கும்: ''எபேசு நகரில் பெரிதும் சாதகமுமான வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது; எதிரிகளும் அநேகர் இருக்கிறார்கள்'' (1 கொரி 16:9). ஊழியத்தில் வரும் எதிர்ப்புகளைச் சமாளிப்பதற்கான சில ஆலோசனைகளை ஆதிச்சபையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம் —

❒ நற்செய்தியைக் கேட்போர் எதிர்க்கும்போது அவர்கள்மீது ஒருபோதும் கோபப்படாதீர்கள். அவர்கள் சத்துருவுக்குப் பலியானவர்கள், அவ்வளவுதான். ''சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடி, இவ்வுலகின் தெய்வம் அவர்களது மனக்கண்களைக் குருடாக்கிவிட்டது'' (2 கொரி 4:4). திரும்பத் திரும்ப உத்தமமாய் ஜெபத்துடன் சுவிசேஷத்தைப் பறைசாற்றிக்கொண்டே இருங்கள். சுவிசேஷந்தான் அதைக் கேட்போர்மீது ''வெளிச்சம் உண்டாகட்டும்'' எனக் கட்டளையிடும் வல்லமை!

❒ எதிர்ப்பவரது வாயடைக்கும் அளவில் கடவுளின் வல்லமை அபரிமிதமாய் வெளிப்பட ஜெபியுங்கள் (அப் 4:14). அப்போஸ்தலர் 4:24-30இல் எழுதப்பட்டுள்ள ஆதி விசுவாசிகளின் மாதிரி ஜெபம் மனனம் செய்யத் தகுந்தது. வெள்ளம்போல் சத்துரு வரும்போது, அவனுக்கு எதிராகக் கர்த்தருடைய ஆவியானவர் போர்க்கொடி உயர்த்திக் கடவுளது சேனை புதிய இடங்களைப் பிடிக்க அதை நடத்திச்செல்வார் (ஏசா 59:19ஆ).

❒ சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க உங்களுக்கு அதிகாரம் எங்கிருந்து கிடைத்துள்ளது என்பதை உங்களுக்கே அடிக்கடி நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள். இதோ கிறிஸ்துவின் பேராணை: ''விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக் கிறது; ஆகையால் புறப்பட்டுப்போங்கள்'' (மத் 28:18,19). அவர் நிறுத்தச் சொன்னாலொழிய நாம் நிறுத்தவோ திரும்பிவரவோ மாட் டோம்! பவுல் எவ்விதம் தீமோத்தேயுவுக்கு இக்கருத்தைப் புகுத்தினார் பாருங்கள்: ''கடவுள் முன்னிலையில் ... கிறிஸ்துவின் ஆளுகையை முன்னிட்டு நான் ஆணையிட்டுக் கூறுவது: திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு'' (2 தீமோ 4:1,2). கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பக்கூடாதென்று அன்றையத் தலைவர்கள் அப்போஸ்தலரிடம் கண்டிப்பாய்க் கூறியபோது, அவர்கள் கொடுத்த பதில்: ''உங்க ளுக்குச் செவிசாய்ப்பதா? கடவுளுக்குச் செவிசாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்'' (அப் 4:18,19).

❒ பயப்படாதீர்கள்! பயமுறுத்தல்களுக்கு அஞ்சுவது இயல்புதான். ஆனால் கீழ்க்காணும் உண்மைகளை மனதிலிருத்திக்கொண்டால் இந்தப் பயத்தை மேற்கொள்ளலாம்: கடவுள் நியமித்துள்ள காலத் திற்கு முன்னர் நீங்கள் சாகவே மாட்டீர்கள்; மக்கள் உங்கள் உடலைக் கொல்லலாம், உங்கள் ஆன்மாவைத் தொட முடியாது; கிறிஸ்துவின் பெயருக்காக நீங்கள் துன்புறுத்தப்பட்டால் பேறுபெற்றவர்கள்; உங்களை ஒருவன் தொட்டால் அவன் கடவுளின் கருவிழியைத் தொட்டுவிட்டான் என்று பொருள்; இறையரசிற்காய் நீங்கள் உயிர்விட நேர்ந்தால், உங்கள் குடும்பத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டியது உங்கள் விண்ணகத் தந்தையின் பொறுப்பு; நீங்கள்



படும் எல்லாப் பாடுகளுக்கும் பரலோகில் உங்களுக்குப் பரிசுகள் காத்திருக்கின்றன. துன்புறுத்தப்பட்ட சீடரை மகிழ்ச்சிப் பெருக்கில் நடனமாடச் செய்தது இந்த நினைவுகளே (அப் 13:49-52). பிசாசு வெட்கமடைந்தான்! கடவுள் சிரித்தார்!

**7. சாத்தான் உங்களோடு போராடும்போது ...**

சத்திரத்தின் முற்றத்திலிருந்து சிலுவையின் மரணம் வரை இயேசுவைப் பிசாசு விட்டானில்லை. உங்கள் கதையும் கருவறை முதல் கல்லறை வரை அப்படியே இருக்கும். உங்களை அழித்துவிட முழு மூச்சாய்ப் பிசாசு முயலுவான். எனவேதான் கிறிஸ்தவ வாழ்வே ஒரு போராட்டம் எனப்படுகிறது. தனது வாழ்வின் முடிவுக்கட்டத்தில் திருத்தூதுவர் பவுல், ''நல்ல போராட்டத்தைப் போராடினேன்'' எனச் சாட்சியிட்டார் (2 தீமோ 4:7). எபேசியர் 6:10-17இலுள்ள ஆன்மீகப் போராட்ட விவரிப்பில் இதை அழகாய்ச் சித்தரித்திருக்கிறார் —

''கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவரது வலிமையா லும் ஆற்றலாலும் வலுவூட்டப் பெறுங்கள். நீங்கள் பிசாசின் ஏமாற்று வழிகளை எதிர்த்து நிற்கும் வலிமை பெறும்படி கடவுள் அருளும் எல்லாப் படைக்கலன்களையும் அணிந்துகொள்ளுங்கள் ... பொல்லாத நாள் வரும்போது, எதிர்த்து நின்று, அனைத்தின்மீதும் வெற்றி பெறும்படி ... இடைக் கச்சை ... மார்புக் கவசம் ... மிதியடிகள் ... கேடயம் ... தலைச்சீரா ... போர் வாள் ... எடுத்துக்கொள்ளுங்கள்.''

ஏனோதானோ என்று இருக்காதீர்கள். பிசாசின் தீக்கணைகள் தாக்கிவிட உங்கள் வாழ்வின் எப்பகுதியையும் திறந்துவைக்காதீர்கள். எப்பொழுதும் விழிப்புடனிருங்கள். உங்கள் வாழ்வின் எல்லையெங் கும் பாதுகாப்புடனிருங்கள். உங்கள் சித்தத்திற்கு எதிராய் உங்களைப் பிசாசு செயல்பட வைக்கமுடியாது. உண்மையோடும் நெறியோடும் நடந்துகொள்ளுங்கள். நற்செய்தியைப் பகிர்ந்துகொள்ள எப்பொழு தும் ஆயத்தமாயிருங்கள். விசுவாசத்தில் வளர்ந்திடுங்கள். உங்கள் சிந்தனை வாழ்வைக் கடவுளின் ஆட்சிக்குக்கீழ் கொண்டு வாருங்கள். திருவசனத்தால் நிறைந்திருங்கள். எல்லாவற்றையும் செய்து முடித்த வர்களாய், ''நில்லுங்கள்!'' ''சமாதானத்தின் கடவுள் சீக்கிரம் சாத் தானை உங்கள் கால்களின்கீழ் நசுக்கிப்போடுவார்!'' (ரோ 16:20). போர் முடிந்துவிடும்!

# 15

# கர்த்தரின் சேனைகள்

## Armies of the Lord

தேவனது பெயர்களில் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ளவற்றில் ஒன்று ''சேனைகளின் கர்த்தர்'' என்பதாகும். இக்கோணத்தில் பலமுறை நாம் அவரைக் குறித்துப் படித்திருக்கிறோம். இப்பொழுது ''கர்த்தரின் சேனைகளைச்'' சற்று கவனிப்போம்.

இறையரசுக் கட்டுமானப் பணியில் இறைவனோடு நாம் உடன் பங்காளிகளாயிருக்கிறோம். கட்டுதலும் போரிடுதலும் சேர்ந்தே செல்லும் (மத் 16:18; நெகே 4:17). மதிலைத் திரும்பவும் கட்டியெழுப்ப இஸ்ரவேலருக்கு 52 நாட்கள்தான் பிடித்தன; ஆனால் அவர்கள் பாதியில் சோர்படைந்தனர். அவர்களது தரிசனத்தை நெகேமியா புதுப்பிக்க வேண்டியதிருந்தது (நெகே 4:19,20). அப்படியே ஆலயம் கட்டப்பட்டுக்கொண்டிருக்கையில், ''பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்... செருபாபேலின் கரங்களே இந்த ஆலயத்திற்கு அடித்தளமிட்டன; அவைகளே இதை முடித்துத் தீர்க்கும்'' எனச் செருபாபேலைச் ''சேனைகளின் கர்த்தர்'' உற்சாகப்படுத்தினார் (சக 4:6,9). இடையில் மனச்சோர்பையும் மனச்சிதறலையும் தவிர்த்து நமது பணியை வலுப்படுத்த நமது அடிப்படைகளைத் திரும்பத் திரும்பத் தெளிவுபடுத்திக் கொள்ளுவோம். நமது படையின் பன்னிரு அம்சங்களை இங்கு கவனிப்போம் —

### 1. நமது தளபதி: *கிறிஸ்து* (Our Commander)

நமது வாழ்வும் பணியும் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலால் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். தனித்தும் குழுவாகவும் கீழ்ப்படிதல்



அவசியம். பலியைவிடக் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமு 15:22). இறைப்பணியைவிட இறைச்சித்தமே முக்கியம் (மத் 7:21-23). தேவனது நித்திய ஏக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பதிலாக நமக்கு வேலை திருப்தி என்பதற்காகவே ஊழியம் செய்வதும் சாத்தியம். எந்த அளவுற்குக் கிறிஸ்துவின் ஆளுகைக்கு அடிபணிகிறோமோ அந்த அளவிற்குத்தான் சாத்தான்மீது அதிகாரம் செலுத்த முடியும். போலிச் சீடரைப் பிசாசு உரிந்துவிடுவான் (அப் 19:13-16). தேவனுக்குப் பயப்படுகிறவன் மனிதருக்குப் பயப்படான். அவன் சிங்கம்போல் தைரியமாயிருப்பான் (நீதி 28:1). கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தின்கீழ் கொண்டுவரப்படாத நமது வாழ்க்கைப்பகுதி எதுவும் பிசாசுக்குப் பதுங்குமிடமாகும் (யாக் 4:7; எபே 4:27). நமது சேனையதிபருக்குக் கண்மூடித்தனமாய்க் கீழ்ப்படிதல் பாதுகாப்பானது, வெற்றிக்கு வழிவகுப்பது; ஏனெனில் அவர் தவறாத சர்வஞானி.

### 2. நமது கொடி: *அன்பு* (Our Flag)

நம்மீது பறக்கும் கர்த்தரின் கொடி நேசமாகும் (உன் 2:4). அன்பு எனும் தென்றல் வீசாவிட்டால் மூச்சுத் திணறும். பெந்தெகொஸ்தேக்கும் ஆதிச்சபையின் அமோக வளர்ச்சிக்கும் இரகசியம் ஒருமனமே. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; துண்டுபட்டால் இல்லை வாழ்வு. விசுவாசிகளின் ஒற்றுமையே ஆண்டவரின் விண்ணப்பமும் அப்போஸ்தலரின் விருப்பமுமாயிருந்தது (யோ 17:21,23; பிலி 2:1,2). தன்னலமும் மாய்மாலமுமே பெரும்பாலான உறவுப் பிரச்னைகளுக்குக் காரணமாகும். கடவுள் அன்பாயிருக்கிறார்; அவரில் அன்பாயிருக்கிறவன் மற்றவர்கள்மீதும் அன்பாயிருக்கவேண்டுமென்பதே இன்றைக்குரிய அன்றையச் செய்தியாகும். ஒற்றுமை என்றால் ஒன்றுபோலிருத்தல் என்று பொருள்படாது. நமது வேறுபாடுகளை மூடி வைத்துவிட்டு வேலையை முடித்துவிடுவோம். கொடியானது நாட்டின் அடையாளச் சின்னமாகும். நமது அன்பைக் கவனித்தே உலகமானது நாம் கிறிஸ்தவர்களென அடையாளங் காணும் (யோ 13:34,35). யுத்தக்களத்தில் வீரர்கள் ஒருவரையொருவர் கவனியாதிருப்பதெப்படி?

### 3. நமது இசை: *ஆராதனை* (Our Music)

எதிரிகளுக்கு விரோதமாய் அணிவகுத்துச் செல்கையில் பக்தியுள்ள அரசர்கள் படை வீரருக்குமுன் பாடகர்களை நிறுத்தினார்கள் (2 நாளா 20:21). சர்வ வல்லவரை உயர்த்தும்போது சத்துருவை இறக்குகிறோம். ஆராதனை முழக்கத்திற்குமுன் தாக்குப்பிடிக்கக் கூடிய தடங்கல்கள் ஏதுமில்லை (யோசு 6:5). தொழிலாட்களை அமர்த்துமுன் தொழுகைக்காரரையே பிதாவானவர் தேடுகிறார் (யோ 4: 23,35). முன்னதாகவே வெற்றியைப் பறைசாற்றிவிடுவதே துதியாகும். சாதகச் சிந்தையுடன் முன்செல்ல அது நம்மை ஊக்குவிக்கிறது. அழகிய பாதங்கள் கொண்ட செய்தியாளனின் முழக்கமே ''உன் தேவன் அரசாளுகிறார்!'' என்பதே (ஏசா 52:7; ரோ 10:15). நமக்கு முன்னிருக்கும் வேலை மலை போன்றதுதான்; அதற்காய்த் தொழுகையைப் பலியாக்கிவிடக்கூடாது. துதியின் ஆர்ப்பரிப்பினாலேயே மலையானது சமநிலமாகும் (சக 4:7). *துதிப்போம், அல்லேலூயா பாடி!*

### 4. நமது கட்டுப்பாடு: *பரிசுத்தம்* (Our Discipline)

உண்மை, நேர்மை எல்லாம் இன்று கிறிஸ்தவ ஊழியங்களில் அபூர்வமாகி வருகின்றன. மாய்மாலம், ஊழல் ஆகியவை வழக்கமாகிவிட்டன. தமது சிநேகிதர் வீட்டிலேயேதான் நமது கர்த்தர் காயப்பட்டுக்கொண்டிருக்கிறார் (சக 13:6). பரிசுத்தமே நமது கோஷமாகட்டும். ''கர்த்தருக்குப் பரிசுத்தம்'' என்பது அடுப்படிப் பானைகள்மீதும் (இல்வாழ்வு), பலிபீடப் பாத்திரங்கள் மீதும் (சபை வாழ்வு), குதிரைகளின் மணிகள்மீதும் (ஊழிய வாழ்வு) பொறிக்கப்படட்டும் (சக 14:20,21). ''சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்'' என்ற ஆரவாரிப்பின் நடுவில்தானே நமக்கு மிஷனரி அழைப்பு வந்தது! (ஏசா 6:3,8). பிசாசு போலி அற்புதங்களைச் செய்துவிடுவான்; ஆனால் அவனால் பரிசுத்தமான மக்கள் போன்ற நகல் எடுக்க முடியாது. ''பரிசுத்த மனிதன் எவனும் கடவுள் கையிலுள்ள பயங்கர ஆயுதம்'' என்று முழங்கினார் பழம் பரிசுத்தர் ஒருவர். பரிசுத்தமில்லையேல் நமது வாழ்க்கை தோட்டா இல்லாத துப்பாக்கி அல்லது கூர்மை இல்லாத வாள் போன்றதுதான்.



### 5. நமது போஷகர்: *தேவன்* (Our Supply)

நமது ஊழியங்கள் வளர வளர நமது பொருளாதாரத் தேவைகளும் பெருகுகின்றன. நமக்குக் கிரமமாகவும் தாராளமாகவும் காணிக்கை அனுப்பும் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவ நண்பர்களுக்காய்த் தேவனைத் துதிப்போம். ஆனால் இவர்களெல்லாம் வாய்க்கால் மட்டுமே என்பதையும் தேவனே ஊற்றுக்காரணர் என்பதையும் மறந்துவிடக் கூடாது. தேவை சிறிதாயினும் பெரிதாயினும் உன்னதத்தையே நோக்கிப் பார்க்கவேண்டுமென்பது கர்த்தரின் பணியில் அரிச்சுவட்டுப் பாடமாகும். ''வானத்தையும் பூமியையும் உண்டாக்கின ***கர்த்தரிடத்திலிருந்து*** எனக்கு ஒத்தாசை வரும்'' (சங் 121:2). ''என் ***தேவன்*** உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்'' என்று உறுதி கூறினார் பவுல் (பிலி 4:19). நமது தேவைகளுக்காய்த் தேவனை நோக்கிப் பார்க்கத் தவறினால் பணம் சேகரிக்க வியாபார முறைகளைக் கையாளத் தொடங்கிவிடுவோம். ஒருவேளை தேவன் வறட்சியான காலங்களை நமக்கு அனுமதிப்பாரானால் அதிலும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளமிருக்கும். படை வீரர்களின் தேவைகளைச் சந்திப்பது தளபதியின் கடமையன்றோ? அப்படியானால் நமது சேனையதிபனை நாம் நம்ப முடியாதோ?

### 6. நமது ஆயுதம்: *பைபிள்* (Our Weapon)

எபேசியர் 6:14-17இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஆறு ஆயுதங்களில் ''தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்'' ஒன்றுதான் எதிரியைத் தாக்குதலுக்கானது. திருவசனத்திற்கு மிஞ்சிப் பேசப் பிசாசிடம் ஒன்றுமில்லை (மத் 4:3-11). படைவீரர்கள் நன்கு சாப்பிட்டு திடகாத்திரமாயிருக்கவேண்டும். தேவ வசனமே நமது அனுதின மன்னா. நமது தினசரி வேலை எதுவும் வேதத் தியானத்திற்குப் போட்டியாய் வரக்கூடாது. நமது ஊழிய முறைகள் யாவும் வேதத் தத்துவங்களிலேயே வேரூன்றியிருக்கவேண்டும். இல்லையேல் அவை புயலையும் வெள்ளத்தையும் சமாளிக்க முடியாது (மத் 7:24-27). வசனத்திற்கு மாறுபாடாகவோ மீறியோ செல்லத் துணியாதிருப்போம். எவ்வளவு என்பதல்ல, எப்படிச் செய்கிறோமென்பதே காரியம். பலன்கள் அதிகமாயிருக்கவேண்டுமென்ற உற்சாகத்தில் பெலிஸ்

தியரின் முறைகளைக் கையாளாதிருப்போம். திருவசனத்தின் இரு பக்கக் கூர்மை நமது உள்ளந்திரியங்களை ஊடுருவி நம்மைக் கழுவி நம்மை நேராய் நிற்கச் செய்யட்டும் (எபி 4:12).

### 7. நமது பலம்: *தூயாவியானவர்* (Our Strength)

அப்போஸ்தலர் 1:8 நமது ஊழியங்களின் அடித்தளத் தரிசன வசனமாயிருக்கவேண்டும். ஆவியில் ஆரம்பம்பண்ணியதை மாம் சத்தில் முடிக்கும் மடமைக்கெதிராய் நம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டும் (கலா 3:3). ஆரம்பத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற எவ்வளவு வாஞ்சித்தோமோ அதேபோல் எப்பொழுதும் ஆவி யினால் நிறைந்திருக்கவும் கவனம் செலுத்தவேண்டும் (எபே 5:18). இயற்கைக்கப்பாற்பட்டது இறைப்பணியில் இயல்பாயிருக்க வேண் டும். அற்புத அடையாளங்களுக்காய் ஆதிச்சபை ஏறெடுத்த ஜெபமே நமக்கு மாதிரியாயிருக்க வேண்டும் (அப் 4:24-31). ஆவியின் வரங் கள் வலியுறுத்தப்பட்டு அப்பியாசிக்கப்படவேண்டும். அவைகளெல் லாம் டாம்பீகமல்ல, இன்றியமையாத் தேவை! நமது கூட்டங்கள், நிகழ்ச்சிகள் யாவற்றிலும் ஆவியானவர் நம்மீது அசைவாடி நம்மை நடத்த அவருக்கு முழு விடுதலை கொடுக்கவேண்டும். ஆவியான வரைத் துக்கப்படுத்தும் அல்லது அவித்துப்போடும் எதையும் சகித்துக்கொள்ளக்கூடாது. ஆவியிருந்தால் நாம் வீர சேனை; ஆவி யில் லையேல் நாம் உலர்ந்த எலும்புகள், அவ்வளவுதான் (எசேக் 37:1,2,9,10).

### 8. நமது திட்டம்: *இறைநடத்துதல்* (Our Strategy)

ஒவ்வொரு படையிலும் பல அணிகள் இருக்கும். எல்லா அணி களுக்கும் ஒரேவித வேலையிராது. அந்தந்த அணிக்கென்று தளபதி குறிப்பிட்டுள்ள பணியையே அது நிறைவேற்றவேண்டும். இத்தத் துவம் இன்று கிறிஸ்தவ ஊழியங்களில் மறக்கப்பட்டுள்ளது துக்கம். எல்லாரும் எல்லாவற்றையும் செய்ய முயலுகின்றனர். ''ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?'' என்ற கேள்வியோடு அப்போஸ்தலன் பவுலின் ஊழியம் தொடங்கியது (அப் 9:6). ஒவ் வொரு ஊழியத்திற்கும் நியமிக்கப்பட்ட தடமும் வரம்பும் உண்டு.



நமக்கென்று போடப்பட்டுள்ள கோடுகளைத் தாண்டக்கூடாது (ரோ 12:3; யோவேல் 2:7,8). கடந்தகால அனுபவங்களும் நமது அறிவும் நமக்கு ஒரு வழிகாட்டியாய் இருக்கலாம்; ஆனால் அவைகள் நமக்கு வழிநடத்துதலாய் மாறமுடியாது. தேவனது சிந்தையைப் புரிந்து கொண்டு அவரிடமிருந்து ஆணைகளைப் பெற அவசரப்படாமல் பொறுமையாய் ஜெபத்தில் அவர்முன் காத்திருக்கவேண்டும். யுத் தங்களுக்குச் செல்லுமுன் தாவீது கர்த்தரிடம் விசாரித்தார் (1 சாமு 23:2,4; 30:8; 2 சாமு 2:1; 5:19,23). நமது தலைவர்களுக்கு மேலி ருந்து வழிநடத்துதல் கிடைக்கவில்லையென்றால் நமது ஊழியங் களுக்கு எதிர்காலமில்லை.

### 9. நமது பாதுகாப்பு: *விசுவாசம்* (Our Protection)

சாத்தானின் பிடியிலிருந்து ஆத்துமாக்களை விடுவிக்க நாம் முயலும்போது அவன் நம்மை அவித்துப்போடக் குறி வைக்கிறான். ''எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசம் எனும் கேடகத்தை'' நாம் பிடித்துக் கொள்ளாவிட்டால், தீய சக்திகளின் அம்புகளுக்கு நாம் பலியாவது திண்ணம் (எபே 6:16). நமக்காய் மரித்த, உயிர்த்த, உன் னதத்தில் அமர்ந்திருக்கிற இயேசுவைத் தேவ குமாரன் என்று விசு வாசிப்பதே உலகை வெல்லும் வெற்றியாகும் (1 யோ 5:4,5). நம் மைப் பயமுறுத்தும் எல்லாச் சூழல்களிலும் ''கர்த்தர் நம் பக்கம் இருந் தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்?'' என அறிக்கையிடு வோம் (ரோ 8:31). பூவுலகிலோ அதற்கு மேலேயோ கீழேயோ இருக்கும் எந்தச் சக்தியும் கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது. எல்லாவற்றிலும் நாம் அவராலே முற்றும் வெற்றி பெறுகிறவர்களாயிருக்கிறோம் (ரோ 8:36-39). கர்த்தரே நமது கோட்டையும் அடைக்கலமுமானவர். ஆனாலும் ஆள் சேதமில்லாத யுத்தமில்லை. ''இரத்தச்சாட்சிகளின் இரத்தமே சபையின் வித்து.'' துன்புறுத்தப்படும்போதெல்லாம் சபை வளரத்தான் செய்திருக்கிறது. நிலத்தில் விழும் ஒரு விதை எவ்வளவு விளைச்சலைத் தருகிறது!

### 10. நமது எதிரி: *சாத்தான்* (Our Enemy)

சாத்தான்தான் நமது எதிரி என்பது அவ்வளவு தெளிவாய்த் தெரிந் தாலும் பல நேரங்களில் நாம் உடன் கிறிஸ்தவர் மற்றும் ஊழியருக்கு

எதிராகவே போரிடுகிறோம். நமக்கிருக்கும் கர்த்தர் ஒருவரே; அப் படியே நமக்கிருக்கும் எதிரியும் ஒருவனே. நாம் ஒன்றித்திருக்க வேண்டுமென்பதற்கு அதுவும் ஒரு காரணமன்றோ? இரண்டாவதாக, யுகா யுகமாய் மக்களை, அதிலும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை, வஞ்சித்துவந்திருக்கும் சாத்தானைக் குறைவாய் எடைபோட்டுவிடக் கூடாது. இயேசு தமது சீடரிடம் திரும்பத் திரும்ப ''விழித்திருங்கள்'' என எச்சரித்தார். எதிர்பாராத வேளையில் எதிர்பாராத திசையிலிருந்து தாக்குவது பிசாசுக்கு வாடிக்கை. பீறிப்போடும் ஓநாய்களுக்குத் தப்ப நமக்குப் பிற விசுவாசிகளும், மேய்ப்பர்போல் நம்மை நடத்தும் தலை வர்களும் தேவை (பிர 4:12; எபி 13:17). கடைசியாக, தேவனுக்கு விரோதமான பகையாகிய உலகச் சிந்தையிலிருந்து நாம் நம்மைத் தற்காத்துக்கொள்ளவேண்டும் (யாக் 4:4). தேவ மக்களிடையே மிக வும் பலசாலிகளைக்கூட வீழ்த்திவிடப் பிசாசு பயன்படுத்தும் பண ஆசையைக் குறித்து எச்சரிக்கையாயிருப்போம்!

### 11. நமது கூட்டாளிகள்: *சகஊழியங்கள்* (Our Allies)

மிஷனரிப் பணியில் பிற இயக்கங்களோடு பங்காளித்துவம் என்று வெறுமனே மாநாடுகளில் பேசிப் பயனில்லை. ஒருவன் விதைக்க வும் மற்றவன் அறுக்கவும் அழைக்கப்படுகிறான். விளைந்த தானியம் ஒரே களஞ்சியத்திற்குத்தான் செல்வதால் விதைப்பவனும் அறுப்ப வனும் சேர்ந்து மகிழுகிறார்கள் (யோ 4:36-38). தேவன் விளையச் செய்யாவிடில் நடுகிற பவுலாலும் நீர்ப்பாய்ச்சுகிற அப்பொல்லோ வாலும் ஒன்றும் சாதிக்க முடியாது (1 கொரி 3:6,7). எந்தவொரு சபைக்கும் குழுவுக்கும் முழுச் சத்தியமும் கிடைத்துவிடவில்லை; ஆதலால் ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு ஊழியத்திலும் பலமான அம்சங்களும் பலங்குன்றிய காரி யங்களும் உண்டு. யோவாப் தன்னைச் சீரியருக்கெதிராகவும் தனது சகோதரன் அபிசாயை அம்மோனியருக்கெதிராகவும் யுத்தத்தில் நிறுத்திக்கொண்டான். அவன் அபிசாயைப் பார்த்து, ''என்னைவிடச் சீரியர் பலங்கொண்டால் நீ எனக்குத் துணை நில்; உன்னைவிட அம்மோன் புத்திரர் பலங்கொண்டால் நான் உனக்குத் துணை நிற்பேன்'' என்று உற்சாகப்படுத்தினான் (1 நாளா 19:10-13). நற்



செய்திப்பணிக்கு இந்தியாவிலுள்ள சவால்களைத் தனித்துச் சமாளிக்க எந்தவோர் ஊழியத்தாலும் முடியாது. மட்டுமல்ல, கூட்டுச் சேர்ந்து பணியாற்றினால் ஒருவர் செய்ததையே செய்வதையும், ஒருவர் செய்வதில் குறுக்கிடுவதையும் தவிர்க்கலாம்.

### 12. நமது இலக்கு: *இறையரசு* (Our Goal)

கிறிஸ்துவின் பெயரைச் சொல்லிக்கொண்டு இன்று சுய சாம் ராஜ்யங்கள் பல கட்டப்படுகின்றன. ஊழியத்தில் நமது உள்நோக்கங் கள் புனிதமானவையா, அவை சுயநோக்கு அற்றிருக்கின்றனவா எனத் தேவனறிவார். ''முதலாவது இறையரசை நாடுங்கள்'' என்று இயேசு போதித்தார் (மத் 6:33). கீழ்த்தரமான நோக்கங்களைக் களைந்துவிடுவோம். தேவனுக்காய், நமக்காயல்ல, பெரிய காரியங் களைச் செய்வோம்! கீழ்க்கண்ட கேள்விகளை நமது செயல்பாடுகள் குறித்துக் கேட்டுப்பார்த்தால் நமது குறியானது இலக்கை நோக்கிச் சரியாயிருக்கும். இச்செயல் இறையரசின் தத்துவம் எதற்கும் மாறு பாடாயிருக்கிறதா? இது இறையரசிற்கு இலாபமாயிருக்குமா? இது இறையரசின் சத்தியங்களை நிலைநிறுத்துமா? இது இறையரசின் குடிமகன் எவனுக்கும் இடையூறாய் இருக்குமா? ''நன்றாய்ச் செய் தாய்'' என்று முடிவிலே அரசர் என்னைப் பாராட்டுவாரா? இறையர சைக் குறித்த ஒரு விண்ணப்பமும் ஒரு போற்றுதலும் கர்த்தருடைய ஜெபத்திலுண்டு: ''உமது இராஜ்யம் வருவதாக ... இராஜ்யம் உம் முடையதே!'' இராஜ்யங்கள் அனைத்தும் கர்த்தருடையதாய் மாறும் வரை கர்த்தரின் சேனைகள் அமர்ந்திருப்பதில்லை. முடிவுவரை நாம் உண்மையாயிருப்போம். நாம் அவரோடு அரசாளுவோம்.

''யேகோவா-நிசி'' என்ற கருப்பொருளில் அன்புத் தம்பி எசேக்கியா பிரான்சிஸ் அவர்கள் 1982இல் இயற்றிய பாடல் அடுத்தப் பக்கத்தில் உள்ளது. பாடி உற்சாகங்கொள்ளுங்கள் —

*யேகோவா நிசி, யேகோவா நிசி,*
*யேகோவா நிசியை, யேகோவா நிசியை*
*யேற்றிப்பாடுவோம்;*
*எங்கள் கொடி வெற்றிக் கொடியே!*

*வீறு கொண்டெழுவீர் இயேசு வீரரே,*
*மாறு கொண்டு மன்னர் முன்னே செல்கிறார்;*
*சீறியெழும் சிங்கங்கள் நாம் அல்லவோ?*
*மீறுமெதிரி சதிகளுக்கு மிரளவா?*
*யூத சிங்கம் யுத்த சிங்கமே!*

*கர்த்தர் துணைநின்று யுத்தம் செய்வாரே,*
*கலங்கி நிற்கக் காரணங்கள் இல்லையே;*
*கைகளைத் தளர்ந்திடாமல் தாங்கியே*
*கர்த்தர் இயேசு சத்ய ஆவி நிற்கிறார்;*
*கர்த்தர் வல்ல யுத்த வீரரே!*

*சத்ரு வெள்ளம் போல ஏறி வருகிறான்,*
*சத்ய ஆவி வேகம் கொடியை ஏற்றுவார்;*
*கோலியாத்தின் வேஷமிங்கு செல்லுமா?*
*கோஷமிடும் இளைஞரின் முன் நில்லுமா?*
*கர்த்தர் நாமம் வல்ல கோட்டையே!*

*ஆவியில் நிறைந்து ஜெபம் செய்வோமே,*
*ஆயுதங்களணிந்து களம் செல்வோமே;*
*ஆர்ப்பரித்தலங்கமதை வீழ்த்தியே*
*ஆவிகளின் சேனைகளை வெல்வோமே!*
*கொடிகள் ஏந்தும் படைகளல்லவோ?*

*நமக்கிருக்கும் இந்தப் பலம் போதுமே;*
*நாதன் இயேசு அனுப்புவதால் போவோமே!*
*பட்டயமோ புயபலமோ தேவையா?*
*பரம தேவ ஆவி நம்மில் இல்லையா?*
*ஜீவ தேவ சேனையல்லவா?*

*முடிந்ததென்று முழங்கி நிற்கும் வீரனே,*
*முற்றுமவனை முறியடித்த தீரனே,*
*சிலுவையில் சிரம் நசித்த சீலனே,*
*சிலுவைக் கொடியை ஏற்றும் தேவ பாலனே,*
*வெற்றி வாகை சூட்டிப் பணிகிறோம்!*



# 16

# தடங்கல் ஓட்டம்

## Hurdles Race

**முகவுரை**

- தேவனுக்காய் முழுக்க முழுக்க வாழ, உழைக்க, விரும்பும்போது, நாம் தாண்டவேண்டிய தடங்கல்கள் ஏராளம்!

செங்கடலைக் ''கடப்பதைவிட'' (Passover)
யோர்தானைத் ''தாண்டுவது'' (Crossover) சிரமமே!

ஏழு முக்கிய தடங்கல்களைக் கவனிப்போம் —

**1. ஆன்மீகத் தோல்விகள்** (Spiritual Failures)

இதற்கு முழு நிவாரணம் ரோமர் 8இல்தான் உண்டு.

- கிறிஸ்துவிலுள்ள நமது நிலையைச் சந்தேகித்தல் (வச 15)
  நிலை vs. நடை Standing vs. State
- பலவீனங்கள், குறிப்பாக ஜெப வாழ்வில் (வச 26)
- குற்றச்சாட்டுகளும் குற்றவுணர்வுகளும் (வச 31-34)
- தேறிவிடுவோமா? (வச 35-39) ...
  *முற்றிலும் ஜெயங்கொள்வோர்*

வேகத்தைக் குறைக்காதீர் —
செயல்பட்டுக்கொண்டேயிருங்கள் —
*''கனிதரும் கொடிக்குக் கிளை நறுக்குதல்''* (யோ 15:2)

ஆன்மீகப் பயிற்சிகளைக் கிரமப்படுத்துங்கள்.

ஜெபத்திலும் வேதத் தியானத்திலும் தளர்வு தோன்றினால் —
ஏசா 50:10 ... நம்பி முன்செல்லுங்கள்!

51:2 ... ஆபிரகாம்-சாராளைப் பாருங்கள் ...
எத்தனை காலம் காத்திருந்தனர்!

**2. பொருளாதார நெருக்கடிகள்** (Financial Difficulties)

இதற்கு முழு நிவாரணம் ஆபகூக் 3தான் —

மாற்று மருந்து —

- தொழுவோம் (வச 18) —
  கருத்து: *இரட்சிப்பு* (எ.கா. லூக் 1:46,47)
  வேறெதுவும் உற்சாகமூட்டாது (1 பேது 1:6-9)
- தொண்டாற்றுவோம் (வச 19) —
  குறிப்பாக, திருப்பணி —
  *''அநேகரைச் செல்வந்தராக்குகிறோம்''* (2 கொரி 6:10)

அ) சிந்தனையில் திருத்தம் —

வாழ்வோ தாழ்வோ, நிறைவோ குறைவோ,
இதை வைத்துத் தேவனது பிரியத்தை நிர்ணயிக்கமுடியாது.

ஆ) செயல்களில் திருத்தம் —

தேவனுக்குக் கொடுப்பது.
கடின உழைப்பு.
செலவில் சிக்கனம் / கண்டதெல்லாம் வாங்குதல்.
எதற்கெடுத்தாலும் கடன் (ஓர் அடிமைத்தனம்).

**3. சமூகவுறவில் சச்சரவுகள்** (Social Conflicts)

- திருச்சபையில் / திருப்பணியில்
- வேலைத்தலத்தில்
- அயலகத்தில்
- குடும்பத்தில் / பிள்ளைகளோடு

எ.கா.) இறையுள்ளத்திற்கு இசைந்த தாவீதுக்கு
வாழ்நாளெல்லாம் இப்பிரச்னைகள்தான் —
அவனது சங்கீதங்களைப் பாருங்கள்.



- *''உங்களால் முடிந்தவரை யாவரோடும் சமாதானம்''*
  (ரோ 12:18)

*''ஒருவனது வழிகள் தேவனுக்குப் பிரியமானால்,
அவன் சத்துருக்களும் ...''*
இது உத்திரவாதமா?

சத்தியம்: நாம் தேவனோடு சமாதானமாய் வாழும்போது,
மனிதரோடு சமாதானமாயிருப்பது எளிதாகிறது.

- நண்பர் அல்லது குடும்பத்தினர்
  மீகா 7:5-7

100 சதவீதம் தீர்வு காணக் காத்திராதீர்! —
முன்சென்றுகொண்டேயிருங்கள் —
எ.கா) 1 கொரி 7:29-31

**4. வேலைத்தலத்தில் பிரச்னைகள்** (Vocational Problems)

- வேலை அதிகம், சம்பளம் (லாபம்) குறைவு
- வேலையில்/தொழிலில் திருப்தியின்மை
- பாராட்டுதலே கிடையாது.
- பாரபட்சம்
- பொறாமை — எ.கா.) யோசேப்பு, தானியேல்
- புரிந்துகொள்ள மறுக்கும் அதிகாரிகள் (1 பேது 2:18,19)

☐ இயேசு: 18 ஆண்டுகள் அலமாரி போன்றவை செய்தார்;
அற்புதம் செய்தது 3 ஆண்டுகள்தான்!

☐ நெகேமியா: திருப்பணியில் தீவிரங்காட்டிய முழுநேரப்
பணியாளனல்லாதவன் (நெகே 4:1,7,8; 6:2,3,10-12, ...)

☐ நாம் சேவிப்பது ''தேவனையே'' என்ற உணர்வு —
எபே 6:5-8 ... திருப்பணியோ பிற பணிகளோ!
*''உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும்''*
(1 கொரி 10:31)

☐ பதவியுயர்வு தேவனிடமிருந்தே (சங் 75:6,7) —
எவரும் நம்மை உயர்த்தவோ இறக்கவோ முடியாது.

**5. மனக் கவலைகள்** (Mental Worries)

- கடந்த கால நிகழ்வுகள், எதிர்காலம் குறித்த அச்சம்
- மனத்தொய்வு
- குழப்பம்
- முழுக்கவனத்துடன் வேலை செய்ய முடியாமை
- அலைக்கழிக்கும் சொப்பனங்கள்
- ஏமாற்றங்கள்
- நிச்சயமற்றவை
- கேள்விகள் ... எப்படி? ... ஏன்?
- துக்கத்தின் மேல் துக்கம்

☐ சோம்பலை அகற்றுங்கள்
— விரும்பியதை விறுவிறுப்பாய்ச் செய்யுங்கள்.
*''உன் கைக்கு நேரிடுவது எதுவோ அதை ...''* (பிர 9:10)

☐ சாப்பிடுதல், உடுத்தல், பொழுதுபோக்குகள், குடும்ப நேரம் (பிர 9:7-9)

மனநெருக்கத்தை அகற்றுபவைகளில் ஈடுபடுங்கள்.
*''கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சியை''* இழக்காதீர் (நெகே 8:10)

☐ பிலி 4:7,8,9 ... *தேவ சமாதானம் ... சமாதானத்தின் தேவன்*
திருமறை ஒன்றில்தான் இவையனைத்தும் உண்டு.
வேறு எதையும் வாசிக்கவோ, பார்க்கவோ கூடாதா?
பாவச் சிந்தனைகளைத் தூண்டாத எதுவும் சரியே!

**6. திருப்பணியில் போராட்டங்கள்** (Ministerial Struggles)

- துவக்க உற்சாகம் குறைதல் ... *''ஆதி அன்பு''* (வெளி 2:4)
- அளவுக்கு மீறிய எதிர்பார்ப்புகள்
- தலைவர்கள் & சக ஊழியர்
- கனியின்மை
- நாளாவட்டத்தில் பாதகச் சிந்தை



☐ தேவன் எதிர்பார்ப்பது உத்தமமும், நிலைத்திருப்பதுமே.

☐ உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்.

☐ *விதைப்பவன் ஒருவன், அறுப்பவன் ஒருவன்* (யோ 4:37)

☐ நமது சாதனைகளில் 25 சதவீதம்தான் தேவன் காட்டுவார்.

☐ ஒப்புமைகளால் அழுத்தம் —
''அவர் சித்தம்,'' ''நமது திறன்'' இவற்றின்
அடிப்படையிலேயே வரங்கள்.
தாலந்துகள் 5 ... 2 ... 1
*''உன்னைச் சிறக்கச் செய்பவர் யார்?''* (1 கொரி 4:7)

☐ எரிந்து சாம்பலாகிவிடாதபடி விடுப்பு எடுங்கள் —

புத்துணர்வு, புத்துயிர் ... *''தனித்துப் போவோம் வாருங்கள்''* (மாற் 6:31)

எ.கா.) ஒரு சில நாட்கள் வாசிப்பதிலும், இசைத்தட்டுகள் கேட்பதிலும், இப்படிப்பட்டவைகளில் செலவிடுங்கள்.

சரியான விகிதம் — வேலை:ஓய்வு = 6:1 (யாத் 20:8-11)
பயிர் நிலத்திற்கே அப்படித்தான்! (லேவி 25:1-5)

ஊழியர்களுக்கு ஞாயிற்றுக்கிழமையும் வேலைதானே.
எனவே வருடாந்திர விடுமுறை கட்டாயம்.

**7. உடல்நலக் கேடுகள்** (Physical Sufferings)

- நமக்கோ, குடும்பத்தினருக்கோ

☐ சுகத்துக்கான இறைவாக்குகளை உரிமைபாராட்டுங்கள்.

☐ விரும்புமளவு உங்களால் செயலாற்ற முடியாவிடில் குற்றவுணர்வு அடையாதீர்கள்.

☐ அது சிட்சையானால் பாடம் கற்றிடுங்கள்

☐ நமது பலக்குறைவில் தேவனது அசாதாரண வல்லமை —
''பவுலின் முள்'' (2 கொரி 12:7-10)

பலவிதப் பிரச்னைகளோடுதான் கடந்த 50 ஆண்டுகளுக்குமேல்
நெடுகவே நான் ஊழியம் செய்துவந்திருக்கிறேன்;
ஆனால் யேகோவாவே போதுமானவராயிருந்திருக்கிறார்:

1. ஆன்மீகத் தோல்விகள்
   — *யேகோவா-சிட்கெனு* (சுத்திகரிப்பவர்)
2. பொருளாதார நெருக்கடிகள்
   — *யேகோவா-யீரே* (கவனித்துக்கொள்ளுபவர்)
3. சமூகவுறவில் சச்சரவுகள்
   — *யேகோவா-ரா* (மேய்ப்பர்)
4. வேலைத்தலத்தில் பிரச்னைகள்
   — *யேகோவா-ஷம்மா* (இறைப்பிரசன்னம்)
5. மனக் கவலைகள்
   — *யேகோவா-ஷாலோம்* (சமாதானம் தருபவர்)
6. திருப்பணியில் போராட்டங்கள்
   — *யேகோவா-நிசி* (வெற்றி வேந்தர்)
7. உடல்நலக் கேடுகள்
   — *யேகோவா-ரப்பா* (சுகமளிப்பவர்)

■

*சோர்ந்து போகாதே, மனமே,*
*சோர்ந்து போகாதே — போராட*

*கண்டுன்னை அழைத்த தேவன்*
*கைவிடுவாரோ?*

*துன்பங்கள் தொல்லைகள் உன்னைச்*
*சூழ்ந்துகொண்டாலும் — அன்பர் உன்னைத்*
*தேற்றும் நேரம் ஆனந்தமல்லோ?*

*சோதனைகளைச் சகிப்போன்*
*பாக்கியவானல்லோ? — ஜீவ கிரீடம்*
*சூடும் நேரம் என்ன பேரின்பம்!*



# 17

# நாம் ஏன் பயப்படத் தேவையில்லை?

## Why we need not fear

பயப்படாதவர் எவருமிலர்! எல்லாருமே பயப்படுகிறோம். இயேசு மனுவுருவெடுத்தது தேவ மக்களுக்குத் தேவப் பிரசன்னத்தை இறக்கிக் கொண்டுவந்தது. ''இம்மானுவேல் ... தேவன் நம்மோடிருக்கிறார்'' (மத் 1:22,23). ''அந்த வார்த்தை மனுவுடலாகி ... நமக்குள்ளே குடிகொண்டார்'' என்று அப்போஸ்தலன் யோவான் இதனை விவரித்தார் (யோ 1:14). இதுவே நாம் பயப்படத் தேவையில்லை என்பதற்குப் பிரதான காரணம்: பரமன் நம்மோடிருக்கிறார்! (சங் 118:6; எபி 13:5,6).

யேகோவாவின் ஏழு உடன்படிக்கை நாமங்களில் (Covenantal names) வெளிப்படுத்தப்பட்ட மீட்பின் ஆசீர்வாதங்களே நமது பயங்களுக்கு மாற்றுமருந்தாகும். இவை ஒவ்வொன்றும் ***கிறிஸ்துவின் பிறப்பை*** ஒட்டிய சம்பவங்களில் பிரதிபலிக்கின்றது. வாழ்நாளெல்லாம் நம்மை அடிமைப்படுத்தும் பயத்திலிருந்து நம்மை விடுவிக்கவே இயேசு சதையும் இரத்தமும் உடையவரானார் (எபி 2:14,15).

### 1. யேகோவா-யீரே (Jehovah-Jireh)

பலிக்காகப் பராபரன் ஓர் ஆட்டுக்குட்டியைக் கொடுத்த இடத்திற்கு ஆபிரகாம் ''யேகோவா-யீரே'' எனப் பெயரிட்டார் (ஆதி 22:14). ''கர்த்தர் பார்த்துக்கொண்டார்'' என்று ஆனந்த முழக்கமிட்டு அவர் மலையிலிருந்து இறங்கினார். இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு இயேசு, ''ஆபிரகாம் எனது நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு களிகூர்ந்தான்'' என்றார் (யோ 8:56).

மரியாளின் மகனுக்கு இரட்சகர் எனப் பொருட்படும் ''இயேசு'' என்ற பெயரைக் கொடுக்க தேவதூதன் யோசேப்புக்குச் சொன்னான்.

ஆம், தமது மக்களை அவர்களது பாவங்களிலிருந்து இரட்சிப்பதே கிறிஸ்துவின் தலையாய பணியாகும் (மத் 1:21). எனவே நமக்குத் தண்டனைத் தீர்ப்பே இல்லை (ரோ 8:1). உங்கள் வாழ்விலுள்ள ஏதாவதொரு தோல்வியையோ குறைவையோ சுட்டிக்காட்டி உங்களை மனமடிவாக்கப் பிசாசுக்கு இடங்கொடாதீர். தேவாட்டுக்குட்டியானவர் உங்கள் பாவங்கள் யாவற்றையும் சுமந்து தீர்த்துவிட்டாரே. கயவனின் பொய்களை அவிசுவாசியுங்கள். கல்வாரியின் பொக்கிஷங்களை அறிக்கையிடுங்கள். *''நீங்கிற்றே, நீங்கிற்றே, நீங்கிற்றே; என் பாவப் பாரமெல்லாம் நீங்கிற்றே''* எனக் கத்திப் பாடுங்கள்! பயப்படாதிருங்கள்!

குற்றவுணர்வுக்கு மனச்சாட்சி செலுத்தும் வரியே பயம் என்பது. பாவம் செய்யுமுன் ஆதாமுக்குப் பயமேது? (ஆதி 3:8-11). கிறிஸ்துவின் மரணமோ நமது பாவத்திற்குரிய தண்டனைக்கான முழுக் கிரயத்தையும் செலுத்திவிட்டது. அவரது இரத்தம் எல்லாவிதக் குற்றவுணர்விலிருந்தும் நம்மை மீட்டுவிடுகிறது (எபி 9:14). இப்பொழுது நாம் எல்லாப் பயங்களிலிருந்தும், பயங்களிலெல்லாம் பயமாகிய மரண பயத்திலிருந்தும், விடுவிக்கப்பட்டுவிட்டோம் (எபி 2:14,15).

**௨. யேகோவா-ரப்பா** (Jehovah-Rapha)

எகிப்தியர்மீது கர்த்தர் கொண்டு வந்த வியாதிகள் பயங்கரமானவை. அப்பொழுதுதான் அந்த அடிமைத்தன நாட்டிலிருந்து அடியெடுத்து வைத்திருந்த இஸ்ரவேலரின் மனக்கண்களில் எகிப்தியர் பட்ட பாடு அப்படியே பதிந்திருந்தது. எனவே அவர்களால் பயப்படாமலிருக்க முடியவில்லை. ஆனால் தேவன் தமது மக்களுக்கு ஓர் அற்புதத்தையும் அறிவிப்பையும் கொடுத்து உற்சாகப்படுத்தினார். மாராவின் கசப்பான தண்ணீரை மதுரமாக்கினார். அத்துடன், ''நானே உன் பரிகாரியான கர்த்தர்'' என வாக்கருளினார் (யாத் 15:23-26). ''யேகோவா-ரப்பா'' என்பதின் பொருள் இதுவே.

கிறிஸ்துவின் பிறப்பு ஆன்மீக ரீதியிலும் உடல் ரீதியிலுமான இரட்டை அற்புதமாகும். தேவன் மனிதனானார்; இது ஓர் ஆன்மீக அற்புதம். ஆணுதவியில்லாது ஒரு கன்னி கருவுற்றாள்; உடல்



ரீதியின்படி இது கூடாத காரியம். எனவே இயேசுவில் நமக்கு ஆன்மீக இரட்சிப்பும், உடலுக்குரிய சுகமும் உண்டு. தமது சாவினால் அவர் நமது ஆன்மா, உடல் ஆகிய இரண்டையும் விலைகொடுத்து வாங்கிவிட்டார். அவரது இரத்தம் நம்மைச் சுத்திகரிக்கிறது; அவரது இரணங்கள் நம்மைச் சுகப்படுத்துகின்றன (ஏசா 53:5; மத் 8:16,17).

இயேசுவின் பிரசன்னத்தில் ஆரோக்கியம் வெளிப்பட்டதால் மக்கள் அவரைத் திரளாகச் சூழ்ந்தனர். அவர் இன்றும் மாறாதிருக்கிறார். அவரது சுகமளிக்கும் வல்லமை குறைந்துபோகவில்லை. ஆரோக்கியம் பிள்ளைகளின் ஆகாரமன்றோ? உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் பயப்படாதிருங்கள். கன்னிக் கர்ப்பம் கணவனின்றி எவ்விதம் கருத்தரிக்குமென வினவிய மரியாளுக்குத் தூதனளித்த பதில், ''தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை'' என்பதே! (லூக் 1:37). அவளது இனத்தாளாகிய எலிசபெத்து தனது முதிர்வயதில் பெற்ற அற்புதத்தையும் தேவதூதன் மேற்கோள் காட்டினான் (வச 36). ஆம், அன்று வேதாகமக் காலங்களிலும் இன்றும் தேவன் செய்பவற்றைக் கவனித்துப்பார்த்து விசுவாசத்தில் நாம் பலப்படவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார்.

வியாதியாயிருக்க யாருமே விரும்புவதில்லை. தீராத நோய் தனக்கு வந்துவிட்டதென்று தெரிந்தால் அஞ்சா நெஞ்சனும் அரண்டு போவான். கவலையும் பயமும் வியாதிக்காரனை இன்னும் மோசமாக்கும் என்கின்றனர் மருத்துவர். எனவேதான் வியாதிப்பட்ட பலரை நோக்கி இயேசு, ''பயப்படாதே'' என்றார். தலைமுடி கழிவதோ கருமையிழப்பதோ பெரிய காரியமல்ல. ஆனால், அதைக் குறித்தும் இயேசு சொன்னதைக் கவனியுங்கள்: ''உங்கள் தலைமுடி எல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது, ஆகையால் பயப்படாதிருங்கள்'' (லூக் 12:7).

ஏதோ நமக்குப் புரியாத காரணங்களினால் தேவன் நம்மைச் சுகமாக்காதிருந்தாலும் நாம் பயப்படத் தேவையில்லை. ஏனென்றால், நாம் அவர் கைகளில் பத்திரமாயிருக்கிறோம். *(21 & 22ஆம் அத்தியாயங்களை வாசியுங்கள்.)*

**3. யேகோவா-நிசி** (Jehovah-Nissi)

அமலேக்கியரை முறியடித்ததற்காக மோசே ஒரு பலிபீடம் கட்டி, ''கர்த்தரே என் வெற்றிக்கொடி'' என்று பொருள்படும் யேகோவா-நிசி எனும் பெயரை அதற்குச் சூட்டினார் (யாத் 17:15).

பாலகன் இயேசுவைக் கொல்ல ஏரோது தீட்டிய திட்டம் தோல்வி கண்டது. நமக்கு விரோதமான எந்த ஆயுதமும் வாய்க்காது என்பது இறைவாக்கு (ஏசா 54:17). யுத்தம் நமதல்ல, நாதனுடையது. எனவே எதிரியின் அம்புகளுக்கு நாம் அஞ்சவேண்டியதில்லை.

நம்மைவிட எதிரி பலசாலியாயிருக்கலாம். ஆனால் தேவனுக்கு முன் அவன் எம்மாத்திரம்? உலகிலிருப்பவனிலும் உள்ளிலிருப்பவர் பெரியவரன்றோ? (1 யோ 4:4). தீர்க்கதரிசனத்தில் பாலகன் இயேசுவுக்குப் பெயர் ''வல்லமையுள்ள தேவன்'' என்பது! அரசாட்சி அவர் மீதிருக்கிறது. அவரது ஆளுகைக்கு மீறியது எதுவுமில்லை (ஏசா 9:6,7). நமக்கு விரோதமான சத்துருவின் சதித்திட்டங்கள் யாவற்றையும் தேவன் சங்காரம்பண்ணுவார். மந்திரத்திற்கோ பில்லிசூனியத்திற்கோ தேவ மக்கள் பயப்படவேண்டியதில்லை. ''ஐயோ, பிசாசு என்ன செய்துவிட்டான்'' என்றல்ல, ''ஆஹா, தேவன் என்னென்ன செய்தார்'' என்றே நம்மைக் குறித்துச் சொல்லப்படும் (எண் 23:23).

பயமுறுத்தல்கள் வந்தால் நெகேமியாவின் மனப்பான்மையால் நிறையுங்கள். அவர் பயப்பட மறுத்தார். ''தேவனே, என் கைகளைத் திடப்படுத்தும்'' என ஜெபித்தார் (நெகே 6:9-11). பயமே தோல்வியின் துவக்கம். யோசபாத், தாவீது போன்றோர் மிகப் பயங்கரச் சூழல்களையும் சமாளித்தது கடவுளிடம் விசுவாசத்தோடு திரும்பியதாலேயே (2 நாளா 20; சங் 55). ''நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்று தேவனே சொல்லியிருக்கிறார். அதற்கு மறுமொழியாக, ''கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனிதன் எனக்கு என்ன செய்வான்?'' என்று தைரியமாகச் சொல்லுவோம் (எபி 13:5,6).

சிலவேளை நம்மைச் சிறையாக்க தேவன் பிசாசை அனுமதிக்கலாம். அவ்விதச் சமயங்களிலும், ''பயப்படாதே ... ஜீவக் கிரீடத்தை உனக்குத் தருவேன்'' என்பதே அவரது செய்தி (வெளி 2:10). சிறையிலிருந்து சிம்மாசனம்!



**4. யேகோவா-ஷாலோம்** (Jehovah-Shalom)

கிதியோன் செய்யவேண்டிய பணிக்காய் அவரை ஆயத்தப்படுத்தும்போது கர்த்தர் அவருக்குத் தோன்றி, ''உனக்குச் சமாதானம்; பயப்படாதே'' என்றார். அங்கு அவர் ஒரு பலிபீடம் கட்டி ''கர்த்தரே சமாதானம்'' என்று பொருள்படும்படி அதற்கு யேகோவா-ஷாலோம் என்று பெயரிட்டார் (நியா 6:23,24).

பெத்லகேமின் பாலகனை ஏசாயா ''சமாதானப்'' பிரபு என்றழைத்தார் (ஏசா 9:6). நமது கால்களைச் ''சமாதானத்தின்'' வழியில் நடத்த உன்னத அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறதென சகரியா தீர்க்கதரிசனமாய்ப் பாடினார் (லூக் 1:79). மேய்ப்பருக்கு இயேசுவின் பிறப்பை அறிவித்த பரம சேனையினர் பூமியிலே ''சமாதானம்'' என்றனர் (லூக் 2:14). மரியாளின் குழந்தையைக் கையிலேந்திய சிமியோன் தேவனைத் துதித்துச் சொல்லியது: உமது அடியேனை இப்பொழுது ''சமாதானத்தோடே'' போகவிடுகிறீர் (லூக் 2:28,29).

நீதிமானாக்கப்படுதலின் முதல் ஆசீர்வாதம் சமாதானமாகும் (ரோ 5:1). உயிர்த்தெழுந்த கிறிஸ்து திரும்பத் திரும்ப ''உங்களுக்குச் சமாதானம்'' என்று தமது சீடரை வாழ்த்தினார். ஷாலோம்! (யோ 20:19,21, 26). தமது சொந்த சமாதானத்தையே வாக்களித்து, ''உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக'' என்றார் அவர் (யோ 14:27).

சமாதானத்தைப் பயம் குலைக்கும். பதட்டமும் பயமும் பயனற்றவை. நிலைமையை அவை முன்னேற்றவே முடியாது (மத் 6:27). ஆனால் நாம் தேவனிடமாய்த் திரும்பும்போது புரியமுடியாததாய்ச் சமாதானம் உள்ளில் கரைபுரளும் (பிலி 4:6,7). கிறிஸ்துவின் மார்பில் சாய்ந்து அவரது கரங்களில் விழுந்துவிடும்போது பயம் பஞ்சாய்ப் பறக்கும். பூரண சமாதானம் நம்மை நிறைக்கும் (ஏசா 26:3). தேவனுக்குத் துவக்கமுதல் முடிவு தெரியும். எனவே அவர் பதறுவதில்லை. நாமும், கிறிஸ்து நமது படகிலுண்டென்று நினைவுபடுத்திக்கொண்டால், புயலைப் பார்த்துப் புன்சிரிக்கலாம். ''அக்கரைக்குப் போவோம்'' என்று அவர் சொல்லியிருக்க நடுக்கடலில் மூழ்கிவிடுவோமோ?

**5. யேகோவா-ரா** (Jehovah-Raah)

இயேசுவின் பிறப்பு முதலாவது அறிவிக்கப்பட்டது மேய்ப்பருக்கே என்பது குறிப்பிடத்தக்கது! அவர்களுக்கு உடனே செய்தி கிடைத்தது (லூக் 2:7-11). கிறிஸ்து பிறந்த இடத்தைத் தேவதூதன் ''தாவீதின் ஊர்'' என்றழைத்தான். தாவீதின் சங்கீதங்கள் அனைத்திலும் கிறிஸ்துவைப் பிரமாதமாக, யாவருக்கும் பிரியமாகச், சித்தரிப்பது 23ஆம் சங்கீதமே. யேகோவா-ரா! ''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்!'' மேய்ப்பரான இயேசு மிகப் பொருத்தமாக தமது பூவுலக வாழ்வை அரண்மனையிலல்ல, புல்லணையில் துவக்கினார்.

''நான் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்'' என்று கர்த்தரது மேய்ப்பின் உன்னத ஆசீர்வாதத்தைச் சங்கீதம் 23:4இல் தாவீது உற்சாகமாய்ப் பாடினார். பயமில்லை, ஏனென்றால் இம்மானுவேல்! தனிமை, அன்பு கலந்த ஆலோசனையின்மை, கனிவான தலைமையின்மை, இவைதான் இன்று நமது பெருங்குறைகள். மனதில் நெருக்கம், சங்கடம் ஆகியவையே இவ்விறுவிறுப்பான உலகின் பங்கு. உத்தம உதவியாளர் குறைவு. ஆன்மாவின் ஆழ்ந்த ஏக்கங்களும், இதயத்தின் இடையறா விருப்பங்களும் சந்திக்கப்படாமலே இருக்கின்றன. உள்மனிதன் வாடுகிறான். வெற்றிடம் பெரிதாகிக்கொண்டே போகிறது. நமது மேய்ப்பர் என்ற பாணியில் கிறிஸ்துவோடு பழகும்போதுதான் இப்பிரச்னைகளுக்கெல்லாம் பதில் காணமுடியும். அந்த அருமையான இருபத்திமூன்றாம் சங்கீதத்தில் சொல்லப்பட்டுள்ள அத்தனை ஆசிகளும் அப்பொழுது நமதாகும்.

உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி. மனிதர் பயத்தால் பீடிக்கப்பட்டு எதிர்காலத்தைக் குறித்த நிச்சயமின்றித் தவிக்கின்றனர். ஆனால் இறைமக்கள் தாழ்ச்சியடையார்! கர்த்தர் அவர்கள் மேய்ப்பராச்சுதே! பணத்தையும் பொருளையும் கிறிஸ்தவன் தொடரத் தேவையில்லை; நன்மையும் கிருபையும் ''அவனைத்'' தொடரும்! (சங் 23:6). நேற்று அவனைப் பராமரித்த கர்த்தர் இன்றும் நாளையும் அவனுக்குப் போதுமானவர். அவரது புல்லுள்ள இடங்கள் காய்ந்துபோவதில்லை! (வச 2).



**6. யேகோவா-சிட்கெனு** (Jehovah-Tsidkenu)

''இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது தாவீதுக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழும்பப்பண்ணுவேன். அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் (யேகோவா-சிட்கெனு) என்பதே'' (எரே 23:5,6; 33:15,16). கன்னியின் வயிற்றில் உருவானவர் ''பரிசுத்தமுள்ளவர்'' என்றழைக்கப்பட்டார் (லூக் 1:35).

தேவனுக்குமுன் நீதிமான் ஒருவனுமில்லை. நமது நீதியெல்லாம் அழுக்குத்துணியாயிருக்கிறது. நாமெல்லாருமே கெட்ட குமாரர்தான். நம்மீது பாவத்தின் துர்நாற்றம் உண்டு. நாம் தேவனிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள அருகதையற்றோர். அவரோ நம்மைப் புறம்பே தள்ளிவிட முடியாத அளவு நம்மை நேசிக்கிறார். அவரிடம் சென்றதும் நீதியின் உடையை நமக்கு அணிவிக்கிறார்! கிறிஸ்துவே நமது நீதியும் பரிசுத்தமுமாகிவிடுகிறார் (1 கொரி 1:31).

கிறிஸ்துவல்லாது நம்மில் நல்லது ஏதுமில்லை. பிசாசோ இந்தமையக் கருத்தை நாம் மறந்துவிடும்படிச் செய்து, நாம் எவ்வளவு நல்லவர்களாயிருக்கிறோமோ அந்த அளவுதான் தேவன் நம்மீது பிரியமாயிருக்கிறாரென நினைக்க வைக்கிறான். இதனால் ஒவ்வொரு தோல்வியும் நம்மை அதிகமதிகமாய் எதிர்மறையான பயத்தினால் நிரப்புகிறது. நம்மால் கரையேற முடியாதென்று நினைத்துவிடுகிறோம். ஜெபம், தியானம் எல்லாம் வறட்டுப் பழக்கங்களாய் மாறி, கர்த்தருக்குள்ளான மகிழ்ச்சி குன்றிப்போகிறது.

பரிசுத்தத்தைக் குறித்த ''கட்டளையை'' மட்டுமே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருப்போரே மகிழ்ச்சியற்ற கிறிஸ்தவராவர். அவர்கள் பரிசுத்தத்தைக் குறித்த ''வாக்குத்தத்தத்தை'' மறந்துவிடுவர். ''நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல நீங்களும் பரிசுத்தராயிருங்கள்'' — இது நாணயத்தின் ஒரு பக்கம்தான். அதின் மறுபக்கத்தையும் பாருங்கள் —''நானே உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்!'' யேகோவா-சிட்கெனு! ''நீதிமான்கள் சிங்கத்தைப்போல் தைரியமாயிருக்கிறார்கள்'' (நீதி 28:1). கிறிஸ்துவினால் உங்களுக்குண்டான

நீதியைக் குதூகலமாய்ப் பாடுங்கள். சத்துருவின் குற்றச்சாட்டு களுக்குச் செவியடையுங்கள். ஒருபோதும் பயப்படாதிருங்கள்!

**7. யேகோவா-ஷம்மா** (Jehovah-Shammah)

பெத்லகேமின் ஆசீர்வாதம் புதிய எருசலேமில் உச்ச நிலையடைகிறது. பரிசுத்த பாலகன் இம்மானுவேல் — ''கர்த்தர் நம்மோடிருக்கிறார்'' — எனப்பட்டார். பரிசுத்த பட்டணம் யேகோவா-ஷம்மா — ''கர்த்தர் அங்கேயிருக்கிறார்'' — எனப்படும் (எசேக் 48:35).

ஆண்டவரது பிரசன்னத்தில் ஆனந்தம் பிரவாகிக்கும். கர்த்தரின் மகிழ்ச்சி எல்லாப் பயத்தையும் விரட்டியடிக்கும். ''ஒரு நதியுண்டு; அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தை ... மகிழ்விக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார் ... ஆகையால் நாம் பயப்படோம்'' (சங் 46:4,5). மதகுகள் அலைக்கழித்தாலும், மலைகள் அதிர்ந்தாலும் இறைப்பிரசன்னத்தின் நிச்சயம் நமது கால்களை உறுதிப்படுத்தும் (வச 2,3).

ஒரு சில வேளைகளில் கடவுள் தம்மை மறைக்கலாம், ஆனால் மறைந்துபோகமாட்டார்! காரியங்கள் மோசமாகிக்கொண்டே போகும்போது ''உன் தேவன் எங்கே?'' என்று எல்லாத் திசைகளிலிருந்தும் கேள்வியெழும்பும். விசுவாசத்தினால் நடக்கக் கற்றுக்கொடுக்கவே கடவுள் இவ்வித இருண்ட வேளைகளை நமக்கு அனுப்புகிறார். நாம் ஒருபோதும் கைவிடப்படாதிருக்கும்படியே இயேசு ஒரு நொடி கைவிடப்பட்டார்.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் பிரிவு வார்த்தைகள் எவ்வளவு உறுதியளிக்கின்றனவென்று பாருங்கள்: ''இதோ, உலகத்தின் முடிவு வரை எல்லா நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' (மத் 28:20). இந்த உலகில் அவர் நம்மோடிருக்கிறார். இனிவரும் உலகில் நாம் அவரோடிருப்போம் — என்றென்றுமாய்! ஒருபோதும் தனியாயிரோம்!

அப்பபடியானால், பயமேன்?



# 18

# சோர்புண்டாக்கும் அம்புகள்

## Arrows of discouragement

**முகவுரை**

- சோர்பு — பிசாசின் மிக வலுவான ஆயுதம்
- விவிலியத்தில் அடிக்கடி வரும் செய்தி: *''கலங்காதிருங்கள்!''*
  உபா 1:21 / யோசு 1:9 / 1 நாளா 28:20
  கிறிஸ்து ஒருபோதும் சோர்படையவில்லை (ஏசா 42:4).
  நாமும் சோர்படையக்கூடாது (எபி 12:3).
- ''சோர்பு'' = நம்பிக்கை இழத்தல்
  = இதயம் துவளுதல்
  = பயந்து நடுங்குதல்
  = தடைகளால் விரக்தியடைதல்
  = உற்சாகம் இழத்தல்

தனது ***பொய்களால்*** பிசாசு நம்மைச் சோர்படையச் செய்கிறான்.
அவன் எல்லாப் பொய்களுக்கும் தந்தை.
அவனது பொய்கள் பெரும்பாலும் பாதி உண்மைகளாம் —

அதாவது, சத்தியத்தின் ஒரு பகுதி மட்டும்.
அது சரியாயிருக்கலாம், ஆனால் சத்தியமல்ல.
எ.கா.) ஆதி 3:5,22

**ஏழு பொய்கள்: ''சோர்புண்டாக்கும் அம்புகள்''** —

**1. பரிசுத்த வாழ்க்கையானது வாழமுடியாத அளவு கடினம்.**

- ஆம், *அநேக உபத்திரவங்கள்* வழியாய் ... அப் 14:21,22
  அடுத்த பக்கம்: *''அவர்கள் விசுவாசித்திருந்த கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தார்கள்''* (வச 23)

2 தீமோ 1:12 ... *நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னாரென்று ...*

- *நான் நிர்ப்பந்தமான மனிதன் ... மரண சரீரம்* (ரோ 7:22-24)
  அடுத்த பக்கம்: (வச 25-8:2) ... *கிறிஸ்து ... விடுதலை*

- எச்சோதனையும் மேற்கொள்ள முடியாததல்ல (1 கொரி 10:13)
  இச்சிக்க (வச 6), பாலியல் பாவம் செய்ய (வச 8),
  முறுமுறுக்க (வச 10) வரும் சோதனை.

- சில தடைகளை மேற்கொள்ள மனிதனின் பொறுப்பு —
  ... *செல்வம் ... ஒட்டகம்* ... (மத் 19:21-24)
  அடுத்த பக்கம்: (வச 25,26) ...
  *தேவனால் எல்லாம் கூடும்.*
  *''மனுவுடலுள்ள யாவருக்கும் கர்த்தர்...செய்யக்கூடாதது*
  *உண்டோ?''* (எரே 32:27)

- *''கோதுமையைப்போல் புடைப்பு''* ...
  திரும்பத் திரும்ப, கூடிக்கொண்டே ...
  ஆனால் அடுத்த பக்கம்: *''உனக்காய் வேண்டிக்கொண்டேன்''*
  (லூக் 22:31,32)
  *''ஒருவன் பாவம் செய்தால் ... பரிந்து பேசுகிறவர்''*
  (1 யோ 2:1)

**2. தேவனது வழிகள் புரிந்துகொள்ள முடியாத புதிர்.**

- புதிய ஏற்பாட்டில் பதிலளிக்கப்பட்டதொரு பழைய
  ஏற்பாட்டுக் கேள்வி — ஏசா 40:13,14/1 கொரி 2:16
  *(கிறிஸ்துவின் சிந்தை)*
  பழைய ஏற்பாட்டில் முடியாதது புதிய ஏற்பாட்டில்
  சாத்தியமாயிற்று!

  அப்படியே, யோபு 11:7-9 vs. 1 கொரி 2:9,10
  *(தேவ ஆவியானவர்)*
  மறைபொருள்கள்தான் தேவனுக்குரியவை (உபா 29:29).
  தேவையானதெல்லாம் வெளிப்படுத்தப்பட்டாயிற்று!



- சிட்சை தாங்கமுடியாது வேதனை —
  சங் 73:13-17 ... *பரிசுத்த ஸ்தலத்தில் நுழையும்வரை ...*

- இன்னலுறும்போது இறைவனெங்கே?
  யோபு 23:1- 3,8,9 ... *தேவனுக்குமுன் அமர்ந்து ...*
  *அவரைக் காணேன்; அவரோ என்னை அறிவார்* (வச 10)

- நடத்துதலுக்கடுத்த காரியங்களில் (சங் 77:13,19 /
  ஆனாலும் நடத்துகிறார், வச 20)

  எங்கேயென்று தெரியாது ஆபிரகாம் புறப்பட்டார்;
  ஆனால் நடத்துவது ''யார்'' என்பது அவருக்குத் தெரியும்.

  சீடர்: *நீர் போகிற இடம் எங்களுக்குத் தெரியாது.*
  *வழியை எப்படி அறிவோம்?*
  இயேசு: *''நானே'' வழி* (யோ 14:5,6)

**3. குடும்ப வாழ்க்கை ருசிக்கமுடியாத அளவு சிக்கல்.**

- கடைசிக் காலத்தின் அடையாளங்களில் ஒன்று —
  மல் 4:5,6 ... *பிதாக்கள் ... பிள்ளைகள் ...*
  2 தீமோ 3:1,2 ... *பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை ...*

எனவேதான் மூத்த அப்போஸ்தலராகிய பவுலும் பேதுருவும்
கணவன்-மனைவி, பெற்றோர்-பிள்ளைகள்
உறவுகள் குறித்து அவ்வளவு எழுதினர்.

■ பிரச்னைகள் அதிகம்தான்; ஆசீர்வாதங்களை எண்ணுங்களேன் —

☐ இக்கட்டான வேளையில் வாழ்க்கைத்துணையின் உதவி:
(பிர 4:9-12) — 4 நன்மைகள்

வாழ்க்கைத்துணையை இழக்கும்வரை இது புரியாது.
கணவன் அல்லது மனைவியை இழந்தோரின் சாட்சி —
''அவர்/அவள் உயிரோடிருந்தால்
மன்னிப்பு கேட்டிருப்பேனே!''

உங்கள் வாழ்க்கைத்துணை பற்றிய நல்ல காரியங்களைப் பட்டியலிடுங்கள்.

*எண்ணிப்பார் நீ பெற்ற பாக்கியங்கள்;*
*கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்*
*ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்;*
*கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.*

வாழ்க்கைத்துணைமீது நீங்கள் ஏற்படுத்தும் புனிதத் தாக்கத்தை நினைத்து மகிழுங்கள் (1 கொரி 7:14) — பொறுமை

எ.கா.) யோபு தனது மனைவியைத் திருத்தினார் (யோபு 2:9,10)
முடிவில் (42:13-16) — அவரது குமாரத்திகள்:
Miss Universe! Miss World! Miss India!

□ பிள்ளைகளால் வரும் ஆசிகளைச் சுதந்தரியுங்கள்.

சங் 127:3-5... அவர்களுக்காய்த் தவறாது ஜெபியுங்கள்.
சூசன்னா வெஸ்லி (18 பிள்ளைகள்) —
ஒவ்வொருவருக்காகவும் தினமும் ஜெபித்தார்.

சாதகச் சிந்தையுடனிருங்கள் —
முட்கள் நடுவில் ரோஜா ✓
ரோஜாவைச் சுற்றி முட்கள் ×

***எச்சரிப்பு:***

குடும்பத்திலிருந்தே அனைத்து சந்தோஷத்தையும் எதிர்பார்த்தால் ஏமாற்றமடைவீர்கள்.
*''கர்த்தருக்குள்'' சந்தோஷமாயிருங்கள்!*

**4. உண்மையாயிருக்கமுடியாத அளவு வேலைத்தலங்களில் ஊழல்.**

பாரபட்சம் / இனவெறி / இடவெறி

- 1 பேது 2:11-20
  பொய்க்குற்றம் சாட்டுவோர் (வச 12)
  புத்தியற்ற தலைவர்கள் (வச 15)
  கடுமையான அதிகாரிகள் (வச 18)

இவ்விதச் சூழலில்தான் கடவுளை *''மகிமைப்படுத்த''* வேண்டும்.



- ஊழல்வாதிகள் செல்வத்தைக் குவிக்கலாம்;
  ஆனால் நேர்மையானோரின் பங்கு *''பூரண சமாதானம்''* —
  சங் 37:7,8,10,11,37

  சமாதானத்தை அனுபவியுங்கள்:
  ஏமாற்றுவதுதான் பாவம்; ஏமாறுவது பாவமல்ல!

- எகிப்தில் யோசேப்பு — விபசாரத்திற்குச் சோதனை.
  ஆனால் திருவசனம் அவரைக் காப்பாற்றியது
  (சங் 105:16-22)
  — பொய்க் குற்றச்சாட்டு

- பாபிலோனில் தானியேல் — விக்கிரகாராதனை.
  தனது தியான ஒழுங்குகளைக் கடைப்பிடித்தார் (தானி 6:10)

**5. கவரமுடியாத அளவு திருச்சபையில் மாய்மாலம்.**

- இன்று இருக்கும் சபை அன்று இருந்த சபைபோல் இல்லை என்பது ஊரறிந்த இரகசியம்!

  சண்டைகள்... பிரிவினைகள் ... நீதிமன்ற வழக்குகள் ...
  தேர்தல் ஊழல்கள் ... பணம் பதுக்கல் ... செத்த நிலை ...
  மூச்சு முட்டும் நிலை ... செய்தியற்ற பிரசங்கிமார் ...

  சபையென்றாலே சங்கடமாயிருக்கிறது ...
  ஆனால் இயேசு சபையை நேசிக்கிறார் ...
  எ.கா.) லவோதிக்கேயா சபை (வெளி 3:16,19,20)

- தூயாவியானவர் சபையைக் கண்டித்துணர்த்துகிறார், திருத்துகிறார்; ஆனால் ஒருபோதும் கண்டனத் தீர்ப்பு செய்யார்
  எண் 23:21-23

— 20ஆம் அத்தியாயத்தில் மலையை அடித்ததற்காய் மோசேயிடம் தேவன் கோபப்பட்டபோதிலும்!

— 21ஆம் அத்தியாயத்தில் முறுமுறுத்தோரிடம் பாம்புகளை அனுப்பியபோதிலும்.

திருச்சபையைத் தூங்கிக்கொண்டிருக்கும் அழகி எனலாம் ...
அது சீக்கிரம் சிங்கம்போல் எழும்பும் ... (வச 24).

திருச்சபையின் எதிர்கால மகிமை (ஏசா 60)
(ஏசா 60:1ஐ எபே 5:14உடன் ஒப்பிடுக.)

- திருச்சபை ***இப்பொழுது*** கறை திரை இல்லாது இல்லை!
ஆனால் கிறிஸ்து அதை அப்படி மாற்றுவார் — எபே 5:25-27

சீர்திருத்தமும் ஆதிநிலையேகுதலும் முற்றுப்பெறவில்லை.
களிகூருங்கள்! ஆட்டுக்குட்டியானவருக்குத் திருச்சபை மணமுடிக்கப்படவிருக்கிறது! —
அவள் கட்டாயம் ஆயத்தமாவாள்! (வெளி 19:7,8)

**6. பின்பற்றமுடியாத அளவு பிரசங்கிமாரிடம் வணிகநோக்கு.**

- அதிக லாபமுள்ள தொழில்கள்:
அன்று திரையுலகு...அடுத்து அரசியல்...இன்று மார்க்கவுலகு

ஒரு காலத்தில், ஊழியத்திற்காய்ப் பணம்;
இப்போதோ, பணத்திற்காய் ஊழியம்!

இயேசுவின் காலத்தில்,
12இல் ஒருவன்தான் திருடன்;
இன்றோ,
12இல் ஒருவன்தான் உண்மையானவன்!

- ஆனாலும் இதயம் சோர்புற வேண்டாம் ...
பொருளாசை இல்லாத ஊழியர் இன்னும் இருக்கின்றனர் (அப் 20:33-35) ... *நான் ஒருவனது வெள்ளியையும் இச்சிக்கவில்லை*

நல்ல முன்மாதிரிகளைப் பின்பற்றுங்கள் (பிலி 3:17-19)

— எளிய வாழ்க்கை மேற்கொண்டுள்ள பிரசங்கிமார்

— மேய்ப்பனது உள்ளம் கொண்டுள்ள பாஸ்டர்கள்

— தியாகவுணர்வுடன் உழைக்கும் மிஷனரிகள்
(இப்படிப்பட்டோர் இந்தியாவெங்கும் ஆயிரமாயிரம்)



அமெரிக்க டாலரையும் ஜெர்மானிய யூரோவையும் முத்தமிடாத 7000 பேரைத் தேவன் இன்னும் வைத்திருக்கிறார் — ரோ 11:3-5

**7. உலக நற்செய்திப்பணி முடிக்கமுடியாத அளவு பெரியது.**

- 2000 ஆண்டுகளுக்கு மேலாகியும் இந்தியாவில் பாதிப்பேர் இன்னும் சுவிசேஷத்தைக் கேட்கவில்லை.

குறைந்தது 10,000 பேரைக் கொண்ட
219 இந்திய மொழிகளில் 75இல்தான் முழு வேதமும்,
75இல்தான் புதிய ஏற்பாடும் இருக்கிறது —

ஆனால், மும்பை நகர் மட்டும் ஆண்டுக்கு 400
திரைப்படங்கள்! அதாவது, நாளொன்றுக்கு ஒன்றுக்கு மேல்!

இதையெல்லாம் காட்டிப் பிசாசு நம்மைத் தீவிர நற்செய்திப் பணியில் இறங்காதவாறு சோர்புறச் செய்கிறான்.

ஆனால் உற்சாகமூட்டும் தகவல்:
உலகில் அதிவேகமாய் வளரும் மார்க்கம்:
கிறிஸ்தவம் — வளர்ச்சி விகிதம் 6.9%
இஸ்லாம் — 2.7%; இந்து மதம் — 2.2%;
புத்த மதம் — 1.7%

1960இல் உலகில் 100 பேருக்கு
4 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
1970இல் உலகில் 100 பேருக்கு
5 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
1980இல் உலகில் 100 பேருக்கு
6 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
1990இல் உலகில் 100 பேருக்கு
9 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.
2000இல் உலகில் 100 பேருக்கு
12 கிறிஸ்தவ விசுவாசிகள்தான் இருந்தனர்.

இன்றோ, உலகிலுள்ள 7 பேரில் ஒருவன் கிறிஸ்தவன்!
எதிர்ப்புகளைக் கண்டு பல சமயங்களில் நாம் துவண்டுவிடுகிறோம்;

ஆனால் —

1 கொரி 16:9 ... *திறந்த வாசல்கள் ... அநேக எதிரிகள்*
எதிர்ப்பின் காலமே வாய்ப்பின் நாள்!
போராட்டம் இருக்கத்தான் செய்யும்;
ஆனால் கட்டிட வேலை நடந்துகொண்டிருக்கும் (மத் 16:18).

- சகல இனத்தாருக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் (மத் 24:14)
- பூவுலகு கர்த்தரை அறிகிற அறிவினால் நிறையும் (ஏசா 11:9; ஆப 2:14)

**முடிவுரை**

(1) Holy life too difficult to live.
(2) God's ways too misterious to understand.
(3) Family life too problematic to enjoy.
(4) Workspots too corrupt to remain sincere.
(5) Church too hypocritical to be attractive.
(6) Preachers too commercial to follow.
(7) World evangelisation too big to be accomplished.

நமக்கெதிரான எந்த ஆயுதமும் வாய்க்காது.
பிசாசின் மிகச் சக்திவாய்ந்த ஆயுதம்: சோர்புண்டாக்குதல்
நமது மிக முக்கிய ஆயுதம்: விசுவாசம்

*''எல்லாவற்றிற்கும் மேலாக''* ... விசுவாசம் (எபே 6:16).
அது சோர்புண்டாக்கும் *அக்கினி அம்புகளை ''அவிக்கும்''*

நீங்கள் விசுவாசிக்கவேண்டியது —

1. தேவனது உதவியோடு பரிசுத்த வாழ்வு சாத்தியம்.
2. நமக்குத் தேவையானதைத் தேவன் வெளிப்படுத்துகிறார்.
3. நமது நன்மைக்காகவே தேவன் குடும்பத்தை ஏற்படுத்தினார்.
4. சீரழியும் உலகிற்கு நாம்தான் உப்பு.
5. திருச்சபையே கிறிஸ்துவின் மணமகள்.
6. உண்மை ஊழியர் இன்னும் உண்டு.
7. பூவுலகு கர்த்தரை அறிகிற அறிவினால் நிறையும்.



# 19

# பொல்லாத ஆவிகளை மேற்கொள்வது எப்படி?

## How to overcome evil spirits

கிறிஸ்தவ வாழ்க்கை தொடக்கம் முதல் முடிவு வரை ஒரு போராட்டம்தான். எனவேதான், ''நல்ல ***போராட்டத்தைப்*** போராடினேன் ... ஓட்டத்தை முடித்தேன்'' என அப்போஸ்தலன் பவுல் சான்று பகன்றார் (2 தீமோ 4:7). நமது போராட்டம் ''மாம்சத்தோடும் இரத்தத்தோடும்'' அல்ல, அது தீய சக்திகளோடு (எபே 6:12). அதாவது, மனிதர்களோடு அல்ல, தீய ஆன்மீகச் சக்திகளோடு போராட்டம். சாத்தான் ஒருவன்தான்; அவனது சகாக்களோ அநேகர். அவைகள்தான் பொல்லாத ஆவிகள். நாமனைவரும் ஐந்து முக்கியமான பொல்லாத ஆவிகள் அல்லது பிசாசின் ஆவிகளோடு போராடவேண்டும் —

| | |
|---|---|
| 1. வஞ்சிக்கும் ஆவிகள் | (Deceiving spirits) |
| 2. மனத்தொய்வுண்டாக்கும் ஆவிகள் | (Depressing spirits) |
| 3. அழிக்கும் ஆவிகள் | (Destroying spirits) |
| 4. குறிசொல்லும் ஆவிகள் | (Divinatory spirits) |
| 5. அதிகாரவர்க்க ஆவிகள் | (Dynastic spirits) |

### 1. வஞ்சிக்கும் ஆவிகள்

கடைசி நாட்களில் இந்த ஆவிகள் தீவிரமாய்ச் செயல்படும். அப்போஸ்தலன் பவுலின் முன்னறிவிப்பு இதோ: 1 தீமோ 4:1, ''ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களில் சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்.'' இது உபதேச வஞ்சகம் எனப்படும். ''ஒளியின் தூதர்'' போல இந்த ஆவிகள் கள்ளப் போதகர்கள் மூலம் செயல்படுவார்கள் (2 கொரி 11:13-15). அவர்கள் ''இருளின்'' தூதர்களாயல்ல, ''ஒளியின்''

தூதர்கள்போல் தோன்றுவார்கள் என்பதை மனதிற்கொள்ளுங்கள். அவர்கள் ''நீதி வாழ்வையே'' பிரசங்கிப்பது போலவும் இருக்கும். இங்குதான் பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் பரிசுத்த ஆகமங்கள் மூலமாகவும் நாம் நிதானிக்க அவசியப்படுகிறது.

பிசாசின் வஞ்சகக் குணம் முதலாவது ஏதேன் தோட்டத்தில் வெளிப்பட்டதைக் காண்கிறோம். ஏவாளோடு அவனது உரையாடலைக் கூர்ந்து கவனியுங்கள் (ஆதி 3:1-5). ''தேவன் சொன்னதுண்டோ?'' என்று கேட்டு அவளைத் திருவசனத்தைச் ''சந்தேகிக்கச்'' (doubt) செய்தான். ''அதைத் தொடவும் வேண்டாம்'' என்று அவர் சொன்னாரென்று அவளைச் சொல்ல வைத்து அவளைத் திருவசனத்தைச் ''திரிக்கச்'' (distort) செய்தான். இது தேவன் சொன்ன கட்டளையுடன் கூட்டுதல் ஆகும். ''நீங்கள் சாகமாட்டீர்கள்'' என்று சொல்லித் திருவசனத்தை ''மறுத்தான்'' (deny). சர்ப்பம் என்ற சொல்லுக்கு ''மினுங்குவது'' என்றொரு பொருளுண்டு! இவ்வளவு அழகான பெயரைக் கொடுத்ததும் ஆதாம்தான்! காலா காலமாய்ச் சாத்தானின் பிரதான தாக்குதல் தேவனுடைய வார்த்தையின்மீதே இருந்து வந்திருக்கிறது. முடிவான வெற்றியில் இயேசுவின் பெயரே ''தேவனுடைய வார்த்தை'' என்றிருப்பதில் ஆச்சரியமில்லையே (வெளி 19:13). வஞ்சிக்கும் இந்த ஆவிகளைப் பரிசோதிப்பதும் அடையாளம் காண்பதும் எப்படியென்று பார்ப்போம். கீழ்வரும் கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள் —

***(அ)** அவை தெய்வீக ஆண்டவரை (Divine Lord) அறிக்கை செய்கின்றனவா?* இதைக் குறித்து அப்போஸ்தலன் யோவானின் தெளிவான போதனை: 1 யோ 4:2,3, ''தேவ ஆவியை நீங்கள் எதினால் அறியலாம் என்றால்: மனுவுடலில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணும் எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது. மனுவுடலில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல; வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திக்கிறிஸ்துவின் ஆவி அதுவே; அது இப்பொழுதே உலகில் இருக்கிறது.'' யேகோவா சாட்சிக்காரர் மற்றும் மார்மன் கூட்டத்தினர் போன்ற ஓரக்கொள்கையினர் கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தை ஒப்புக்கொள்வதில்லை.



***(ஆ)** அவை தெய்வீக வாழ்வைக் (Divine Life) கொண்டவையா?* பிசாசு அறிமுகப்படுத்தும் சரக்குகள் கவர்ச்சியாயிருக்கலாம்; ஆனால் அவன் பரிசுத்தமும் நீதியுமான வாழ்க்கைக்கு எதிராளி. மாறாக, பிசாசினால் இவ்வுலகிற்குள் வந்துள்ள ''கேட்டிற்கு'' நாம் தப்பி, ''தெய்வீக சுபாவத்திற்குப்'' பங்குள்ளவர்களாகும்படி ''மகா மேன்மையும் மகத்துவமுமான திருவாக்குகள்'' நமக்குத் தரப்பட்டுள்ளன (2 பேது 1:4). வேரானது புனிதமாயிருந்தால்தான் கிளைகள் புனிதமாயிருக்கும் (ரோ 11:16ஆ). ஊற்று தெளிந்திருந்தால்தான் அதிலிருந்து சுரக்கும் தண்ணீர் ருசியாயிருக்கும் (யாக் 3:11). நல்ல மரம்தான் நல்ல கனி கொடுக்கும் (மத் 7:17,18). தீமையே உருவானவனான பிசாசு அவனைப் பின்பற்றுவோரின் வாழ்வில் பரிசுத்தத்தை விளைவிக்க முடியாது.

***(இ)** அவை தெய்வீகச் சட்டத்தை (Divine Law) மதிக்கின்றனவா?* ஆரோக்கிய உபதேசத்தையும் அதைப் போதிப்பவர்களையும் பிசாசு எதிர்த்துக்கொண்டேயிருப்பான். கள்ளப் போதகர்களால் ஏற்கனவே அவன் கிறிஸ்தவத்தை நிரப்பிவிட்டான் (2 தீமோ 4:3,4). திருவசனத்தை உத்தமமாய்ப் போதிப்பவர்களைவிடக் கள்ளத் தீர்க்கர்களும் கள்ளப் போதகர்களும்தான் எப்பொழுதும் அதிகம். ''அநேக'' என்ற பதம் பைபிளில் பெரும்பாலும் கள்ளத் தீர்க்கர்கள் மற்றும் கள்ளப் போதகர்களைப்பற்றிப் பேசும்போதே வருகிறது. திருமறைக்கும் கூடுதலான உபதேசங்களுக்குக் காதடைத்துவிடுங்கள். பைபிளோடு எதையும் கூட்டுவதும், அதிலிருந்து எதையும் அகற்றுவதும் பேராபத்து. ''தேவன்மீது நம்பிக்கை வேண்டும்; அதே சமயத்தில் கவனமும் அவசியம்.'' *(இந்த மூன்று கேள்விகளும் புகழ்வாய்ந்த அமெரிக்கத் திருமறைப் போதகராகிய ஜான் மெக்கார்தர் கொடுத்தவை.)*

வஞ்சிக்கும் ஆவிகளை அடையாளங்கண்ட பின்னர் அவற்றை மேற்கொள்ளும் விதமாவது —

**(அ)** திருவசனத்தால் உங்களை நிறைத்துக்கொள்ளுங்கள். திருவார்த்தை கிடைத்ததும் அதை ''உட்கொண்டேன்'' என்றார் தீர்க்கன் எரேமியா (எரே 15:16). அவர் மூலமாகவே தேவன் நமக்கு விடும் சவால்: ''கோதுமைக்குமுன் பதர் எம்மாத்திரம்?'' (23:28,29). இந்த வசனப்பகுதியில் சொப்பனங்களையும் தரிசனங்களையும் பதருக்

கும், தமது வார்த்தையையோ கதிருக்கும் தேவன் ஒப்பிடுகிறார்! **(ஆ)** இரண்டாவதாக, தெய்வ பக்தியுள்ள தலைவர்களுக்கு அடங்கியிருங்கள். மேய்ப்பனில்லா ஆடுகள் போலிருக்கவேண்டாம். அப்படியிருந்தால் நீங்கள் வழிவிலகிப்போய்ப் பீறும் ஓநாய்களுக்கு எளிதில் பலியாவீர்கள். நம்மை மேய்த்துப் பராமரிக்கும் தலைமைத்துவம் குறித்து அப்போஸ்தலன் யோவானின் வார்த்தைகளே முடிவானவை: 1 யோ 4:6, ''நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்; தேவனால் உண்டாயிராதவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறதில்லை; இதனால் சத்திய ஆவி இன்னதென்றும் வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம்.'' **(இ)** மூன்றாவதாக, நவீனமான, விநோதமான, உபதேசங்களுக்கு விலகியிருங்கள். இவ்வித உபதேசங்கள் நம்மைப் பொருளாதாரச் சிந்தையிலேயே அமிழ்த்திவிடும்; கேடான பண ஆசையில் சிக்கிவிடுவோம் (1 தீமோ 6:3-5).

### ௨. மனத்தொய்வுண்டாக்கும் ஆவிகள்

பிரச்னைகள் மற்றும் சோதனைகள் வழியாய்ச் செல்லும்போது பிசாசு நம்மில் மனத்தொய்வை உண்டாக்குகிறான். இங்கு கவனமாயிருக்கவேண்டுமென்று அப்போஸ்தலன் பேதுரு நம்மை எச்சரித்துள்ளார்: 1 பேது 5:7-9, ''தேவன் உங்களை விசாரிக்கிறவரானதால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மீது வைத்துவிடுங்கள். தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமென்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்.'' நம்மைப்போல் இவ்விதம் எவரும் பாடுபடுவதில்லை என்று பிசாசு நமது காதுகளில் ஓதும் பொய்யை நம்பக்கூடாது (வச 9ஆ). பின்மாற்றக்காரர் கர்த்தரிடம் திரும்பி வரும்போது, இறைமக்கள் அவர்களை அன்பின் ஆவியுடனும் மன்னிப்பின் சிந்தையுடனும் அணைத்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல், சாத்தான் இதனைச் சாதகமாய்ப் பயன்படுத்தி, மனந்திரும்பி வருபவனை ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்திவிடுவான் (2 கொரி 2:7).

மனத்தொய்வுண்டாக்கும் ஆவிகளை மேற்கொள்ளும் வழிகள்:



**(அ)** தேவனுடைய ''அன்பைத்'' தியானித்துக்கொண்டிருங்கள். தேவன் நமது பக்கம் இருந்தால், யார் நமக்கு எதிராய் இருக்க முடியும்? கிறிஸ்து நமக்காய் மரித்திருந்தால் யார் நம்மீது குற்றஞ்சாட்ட முடியும்? கிறிஸ்து இயேசுவிலுள்ள ''தேவ அன்பை விட்டு'' ஒரு சக்தியும் நம்மைப் பிரிக்க முடியாது (ரோ 8:31-39). நமக்கு நடப்பவை நல்லதோ, கெட்டதோ, எல்லாவற்றிலும் நாம் வெற்றிமேல் வெற்றியடைவோம். நீங்கள் எதையும் செய்து உங்கள் மீதுள்ள தேவ அன்பைக் கூட்டவும் முடியாது, குறைக்கவும் முடியாது!

**(ஆ)** கிறிஸ்துவின் ''இரத்தத்தின்'' வல்லமையைச் சொந்தமாக்குங்கள். இரவும் பகலும் பிசாசானவன் தேவப் பிள்ளைகள்மீது குற்றஞ்சாட்டிக்கொண்டேயிருக்கிறான். நமது பாவக்கறை யாவும் கழுவப்பட்டாயிற்று. நமது பாவத்திற்கு முழுக் கிரயத்தையும் கிறிஸ்து செலுத்திவிட்டார் என்ற உண்மையை நமக்கும் பிசாசுக்கும் நினைவுபடுத்துவதே அவனை மேற்கொள்ள ஒரே வழி. தேவன் நமது பாவங்களை ஆழ்கடலில் அமிழ்த்திவிட்டார், கிழக்குக்கும் மேற்குக்கும் எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரம் அவற்றை விலக்கிவிட்டார், ஆகாயத்தின் மேகத்தைப்போல் அவற்றை அகற்றிவிட்டார், தமது முதுகுக்குப்பின் அவற்றை எறிந்துவிட்டார் (ஏசா 38:17; 44:22; சங் 103:12; மீகா 7:19ஆ). அறிக்கைபண்ணப்பட்ட பாவங்கள் மன்னிக்கப்பட்டாயிற்று, மறக்கப்பட்டாயிற்று!

**(இ)** தேவனைத் துதித்துக்கொண்டேயிருங்கள். ''கண்ணீரின் பள்ளத்தாக்கு'' வழியே நாமெல்லாரும் ஏதோ ஒரு காலத்தில் கடந்து சென்றேயாகவேண்டும் (சங் 84:6). மிகுந்த சிரமத்துடனும், கண்ணீருடனும்தான் ஊடுருவிச் செல்லவேண்டிய முட்புதரான பள்ளத்தாக்கு அது. எருசலேமுக்கும் ரெவிதீம் பள்ளத்தாக்குக்கும் இடையில் இது ஒரு பகுதி என்று கருதப்படுகிறது. தேவனைத் துதித்துக்கொண்டிருப்பதாலேயே இந்தக் கண்ணீர்ப் பள்ளத்தாக்கைத் தண்ணீர்த் தடாகங்களாய் மாற்றலாம் (வச 4,6). துதியுடன் நாம் தேவசமுகத்திற்குமுன் நின்றால் நமது பலக்குறைவிலும் நாம் ''பலத்தின் மேல் பலம்'' அடைவோம் (வச 5,7). குழந்தையின்மையினால் அன்னாளின் மனது கசந்திருந்தது. தனது இருதயத்தைத் தேவனுக்குமுன் ஊற்றிவிட்ட பின்னரோ அவள் ''துக்க முகமாய் இருக்கவில்லை''

(1 சாமு 1:10,18). மனத்தொய்வு எனும் கூண்டிலிருந்து துதியானது உங்களை விடுவித்துப் பறப்பதற்குப் புதிய சிறகுகள் கொடுக்கும்.

**(ஈ)** திருமறைத் தியானத்தைக் கூட்டுங்கள். சங்கீதக்காரனின் அறிக்கையே உலகெங்கும் பரிசுத்தவான்களின் அனுபவமாயிற்று: சங் 119:92, ''உமது வேதம் எனது மனமகிழ்ச்சியாய் இராதிருந்தால் என் துக்கத்தில் அமிழ்ந்துபோயிருப்பேன்.'' மேலும் அவர் கூறியது, ''நான் நாடோடியாய்த் தங்கும் வீட்டில் உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின'' (வச 54). மனத்தொய்வின் வேளைகளில் பைபிளை வாசிக்கவோ தியானிக்கவோ தோன்றாது. பரவாயில்லை, வாசித்துக் கொண்டேயிருங்கள். தேவனுடைய வார்த்தை உங்களை உயிர்ப் பித்து எழுப்பும் (சங் 19:7அ,8அ).

**(உ)** இறைமக்களின் சகவாசம் நாடுங்கள். அமலேக்கியருக்கு எதிராய் மக்கள் போரிட்டுக்கொண்டிருந்தபோது தேவனது கோலைக் கையில் பிடித்துக்கெண்டு மோசே மலையுச்சியில் நின்றார். மோசேயின் கைகள் உயர்ந்திருந்தபோது இஸ்ரவேலர் வென்றனர்; சோர்ந்துபோய் அவரது கைகள் தளர்ந்தபோதோ அமலேக்கியர் வென் றனர். மோசேயின் கரங்களைத் தாங்கிப்பிடிக்க ஒரு பக்கம் ஆரோனும் ஒரு பக்கம் ஊரும் நின்றனர் (யாத் 17:8-12). நாம் உட்காருவதற்குக் கல் ஒன்று இருந்தால் போதாது; போர் வலுக்கும்போது நம்மைத் தாங்கும் கரங்களும் வேண்டும். மனத்தொய்வின் காலத்தில் இறை மக்களது சகவாசத்திலிருந்து ஒதுங்கி நிற்க வரும் சோதனை பேரா பத்து (பிர 4:9-12). மனோதத்துவ ரீதியான ஆலோசனையையும் (psychiatric counselling) சீக்கிரம் நாடவேண்டும்.

### 3. அழிக்கும் ஆவிகள்

''திருடவும், கொல்லவும், அழிக்கவுமே'' திருடன் வருவான் என்றார் இயேசு (யோ 10:10அ). வியாதிகள், பைத்தியம், மரணம் போன்றவற்றிற்குத் தங்களது தாக்குதல் அல்லது சில வேளைகளில் ஆக்கிரமிப்பு மூலம் இந்த ஆவிகள் காரணமாகின்றன. இக்கட்டத்தில் நாம் நினைவிலிருத்தவேண்டிய இரு காரியங்கள் —

**(அ)** எல்லா வியாதிகளுமே பொல்லாத ஆவிகளால்தான் வரு கின்றன என்று சொல்லிவிட முடியாது. சரிவிகித உணவின்மை,



போதுமான ஓய்வின்மை, உடற்பயிற்சிக் குறைவு, முதிர் வயது போன் றவையும் நோய்களுக்குக் காரணங்களாகலாம். பிரசவ வேதனை, முடி கொட்டுதல், பல் விழுதல், பார்வையிழப்பு போன்றவை இயற்கை ரீதியானவை. தீமோத்தேயுவுக்கு வயிற்றில் ஒரு பிரச்னை இருந்துவந்தது. அவனது உணவுப்பழக்கத்தில் ஒரு மாற்றம் ஏற் படுத்திக்கொள்ளப் பவுல் அவனுக்கு அறிவுறுத்தினார் (1 தீமோ 5:23). **(ஆ)** சாவு இன்னும் ஒழிக்கப்படவில்லை என்பதையும் நாம் நினைவில் வைக்கவேண்டும். கிறிஸ்துவின் மறுவருகையின்போது தான் ''கடைசி எதிரியாக'' அது அழிக்கப்படும் (1 கொரி 15:26). புதிய வானம் புதிய பூமியில்தான் தேவனாகிய கர்த்தர் மரணத்தை வெற்றியாக விழுங்குவார் (ஏசா 25:8). அப்பொழுதுதான் நமது கண்ணீர் யாவையும் அவர் துடைப்பார்.

அழிக்கும் ஆவிகளை வெல்ல நமக்கு மூன்று ஆயுதங்கள் தரப்பட்டுள்ளன —

*(அ) கிறிஸ்துவின் அதிகாரம்.* தம்மை விசுவாசிப்போர் அவரது பெயரால் பிசாசுகளைத் துரத்த முடியுமென இயேசு வாக்களித்தார் (மாற் 16:17). முதலாவது இந்த அதிகாரத்தைப் பன்னிரு சீடருக்குக் கொடுத்தார்; அடுத்து எழுபது சீடருக்குக் கொடுத்தார்; இப்பொழுது அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுத்துவிட்டார். பெரிய இயந்திர சக்தியுடன் விரைந்து வரும் ஒரு வாகனத்தை எலும்பும் தோலுமா யிருக்கும் போலீஸ் ஒருவரால் நிறுத்த முடிகிறது. எப்படி? வாகனத் திற்கு இருப்பது ''பலம்'' (power); காவலருக்கு இருப்பது ''அதி காரம்'' (authority). கடவுளுடைய பிள்ளைகளாக நம்மனைவருக்கும் பிசாசின் சகல ''வல்லமைக்கும்'' மேலாக ''அதிகாரம்'' கொடுக்கப் பட்டிருக்கிறது (லூக் 10:19).

*(ஆ) தேவனுடைய ஆவி.* ''சத்துரு வெள்ளம்போல் வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு எதிராய்க் கொடியேற்றுவார்'' (ஏசா 59:19). தேவனுடைய ஆவியினாலே இயேசு பிசாசுகளைத் துரத்தினார் (மத் 12:28). எப்பொழுதும் பரிசுத்த ஆவியால் நிறைந் திருங்கள். காலியாயிருக்காதீர்கள் (லூக் 11:24-26). பரிசுத்த ஆவி யின் நிறைவே பிசாசின் ஆக்கிரமிப்புக்கு எதிரான காப்பீடு.

*(இ) தேவனுடைய வார்த்தை.* தமது வார்த்தையினால் இயேசு பிசாசுகளைத் துரத்தினார் (மத் 8:16). தேவனுடைய வார்த்தைக்கு எதிராய்ப் பிசாசு வாதிட முடியாதென்பது இயேசுவுக்குத் தெரியும். ''எழுதியிருக்கிறதே'' என்று சுட்டிக்காட்டியே தமக்கு அடுத்தடுத்து வந்த சோதனைகளைத் தமது ஊழியக் காலத்தின் தொடக்கத்திலேயே இயேசு மேற்கொண்டார் (மத் 4:3-10). தனது வேலைக்காரன் சுகமடைவதற்காக அந்த நூற்றுக்கதிபதி இயேசுவின் வார்த்தைமீது வைத்திருந்த விசுவாசத்தை ஆண்டவர் எவ்வளவாய்ப் பாராட்டினார்! (8:8-10).

கிறிஸ்துவின் அதிகாரம், தேவனுடைய ஆவி மற்றும் தேவனுடைய வார்த்தை ஆகிய மூன்று ஆயுதங்களையும் திறம்படப் பயன்படுத்தவேண்டுமானால் விசுவாசம், ஜெபம், உபவாசம் ஆகியவை கூட்டப்படவேண்டும் (மத் 17:19-21). ஜெபத்தில் நாட்கள் செலவழிப்பது கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு நமது அர்ப்பணிப்பை ஆழப்படுத்தும்; தேவ ஆவியானவரது பலத்தில் நம்மைப் புதுப்பிக்கும், திருவசனத்தைச் சரிவரக் கையாள நமது மனதைப் பிரகாசிப்பிக்கும்.

### 4. குறிசொல்லும் ஆவிகள்

இந்த ஆவிகள் எதிர்காலத்தில் நடக்கப்போகிற சில காரியங்களை முன்னறிவிக்கும், என்ன செய்யவேண்டுமென்று சொல்லும், அற்புதங்கள் நடப்பிக்கும், தரிசனங்கள் காட்டும், மந்திர சக்திகளை வெளிப்படுத்தும், இப்படிப் பல. ஆனால் அவை தேவனால் உண்டானவை அல்ல. இந்த ஆவிகளைக் குறித்து நாம் கலங்கவேண்டியதில்லை; ஏனெனில், திருவசனத்தில் நமக்கிருக்கும் உறுதி: ''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை'' (எண் 23:23). அடுத்து வரும் வாக்கியங்களையும் கவனியுங்கள்: ''தேவன் என்னென்ன செய்தார்'' என்று யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும்! ''பிசாசு என்னென்ன செய்தான்'' என்று அல்ல! ஆனாலும், இங்கு நமக்குச் சில எச்சரிப்புகள் தேவைப்படுகின்றன —

**(அ)** பிரதானமாகத் திருவார்த்தையிலிருந்தே உங்கள் வாழ்க்கைக்குத் தேவையான நடத்துதலை நாடுங்கள். ''மாயவித்தைக்காரரையும் குறிகாரரையும்'' தேடிச் செல்லக்கூடாது (ஏசா 8:19). உயிருள்ள தேவனை ஆராதிக்கும் நாம் இறந்துபோனவர்களோடு தொடர்பு கொள்ள முயலக்கூடாது. ''வேதமும் சாட்சி ஆகமமும்'' சேர்ந்துள்ள, அதாவது ''உபதேசமும் உதாரணங்களும்'' கலந்துள்ள, திருமறையையே எக்காரியத்திலும் தெளிவுபெறத் தியானிக்கவேண்டும் (வச 20). இதுவே நமது கால்களுக்குத் தீபமும் நமது பாதைக்கு வெளிச்சமுமாய் அமையும் (சங் 119:105).

**(ஆ)** கவர்ச்சியான அல்லது பரவசப்படுத்தும் எதையும் கண்டு மயங்கிவிடாதீர்கள். பரவசப்படுத்தும் யாவும் பரமனிடமிருந்தே வருகிறதென்று நினைத்துவிடக்கூடாது. மோசேயையும் ஆரோனையும் போல எகிப்தின் மந்திரவாதிகளும் சில அதிசயங்களைக் காட்ட முடிந்ததே! (யாத் 7,8). பொய்யான அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் சொப்பனங்களைக் கொண்டு தேவன் அவர்மீதுள்ள நமது அன்பு எவ்வளவு முழுமையானது என்று நம்மைப் பரிசோதிக்கிறார் (உபா 13:1-3). தேவனே நமக்குப் போதும் என்றிருக்கிறோமா என்று அவர் அறிய விரும்புகிறார்.

**(இ)** மறைவானவற்றில் ஆர்வம் காட்டாதிருங்கள். தனது வாழ்வின் இறுதியில் மோசே ஆற்றிய உரைகள் ஒன்றில் அவர் இஸ்ரவேலரிடம் சொன்னது: ''மறைவானவை நமது தேவனாகிய கர்த்தருக்கே உரியவை; வெளிப்படுத்தப்பட்டவையோ இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படி, நமக்கும் நமது பிள்ளைகளுக்கும் உரியவை'' (உபா 29:29). பைபிளில் தேவன் நமக்குத் தந்துள்ள யாவற்றையும் தியானிக்கவும், ஆராயவும், அப்பியாசிக்கவும் வாழ்நாள் முழுவதும் போதாதே! ஏதேனில் எத்தனையோ பழ மரங்கள் உண்டே; விலக்கப்பட்ட ஒரே மரத்தை நாடிச் செல்வானேன்? (ஆதி 2:16,17).

**(ஈ)** மாயாஜாலம், பில்லிசூனியம், விக்கிரகாராதனை போன்றவற்றோடு எவ்விதத் தொடர்பும் வைக்காதிருங்கள். எபேசு நகரில் நற்செய்திப்பணி எழுச்சி உண்டானது. சரித்திராசிரியர் லூக்கா கொடுக்கும் அறிக்கை: அப் 19:18-20, ''விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செயல்களை வெளிப்படுத்தி அறிக்கையிட்

டார்கள். மாய வித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புத்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கும் முன்பாக எரித்தார்கள்; அவற்றின் கிரயத்தைக் கணக்குப் பார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசுகள் எனக் கண்டனர். இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது.'' ''கர்த்தாவே, எங்கள் நகர்களிலும் கிராமங்களிலும் இவ்விதம் மறுபடியும் செய்யமாட்டீரா?'' பிரம்மாண்டமான நற்செய்திக் கூட்டங்களில்கூட இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கக் காணோமே!

**(உ)** தரிசனங்கள் மற்றும் சொப்பனங்கள் பின்னால் போய்விடாதிருங்கள். பார்த்தது ஒரு தூதன்தான் என்றாலும் இயேசுவைப் பார்த்துவிட்டோம் என்று முடிவுகட்டிவிடுவோம்! இயேசுவோடு எவ்வளவோ நெருங்கியிருந்தவரும், எத்தனையோ வெளிப்பாடுகள் பெற்றிருந்தவருமான யோவானே தூதனை இருமுறை வணங்கி விட்டாரே (வெளி 19:10; 22:8,9). இவ்விதச் சோதனைகளுக்கு நாம் தப்புவது சுலபமா? கவனமாயிருங்கள்!

### 5. அதிகாரவர்க்க ஆவிகள்

இந்த ஆவிகளைப் புரிந்துகொள்ள நமக்குதவும் சிறந்த வேதப் பகுதி எபேசியர் 6:10-12. ''துரைத்தனங்கள்'' என்றால் பல்வேறு பொல்லாத ஆவிகளின் கூட்டங்களின் தலைவர்கள். ''அதிகாரங்கள்'' என்றால் தாக்குதல்களை முன்னின்று நடத்தும் அதிகாரிகள். ''இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகள்'' என்றால் சாத்தானது உடன் தலைவர்கள். இருட்டுச் செயல்களை இயக்குபவர்கள் இவர்களே. ''பொல்லாத ஆவிகளின் சேனைகள்'' என்பது எல்லாத் தீய சக்திகளையும் குறிக்கும். இது குழப்பமான பாடம். இதன் விபரங்களுக்குள் நாம் செல்லவேண்டிய அவசியமில்லை. அது நேரத்தைத் தான் வீணடிக்கும். தீய சக்திகளைப் பகுத்தாய்வு செய்ய முற்படுவது நம்மைச் ''சாத்தானின் ஆழங்களுக்குள்'' கொண்டுபோய்விடும் (வெளி 2:24).

எபேசியர் நிருபத்தில் ஆன்மீகப் போராட்டம் குறித்த இம்முக்கிய பகுதி இல்லம், குடும்பம், திருச்சபை, நற்செய்திப்பணி ஆகியவற்



றின் சூழமைவில் கொடுக்கப்பட்டுள்ளது (5:22-6:9; 6:18-24). அப்படியானால், குடும்பங்களையும் சபைகளையும் ஊழியங்களையும் சாத்தானின் தாக்குதலிலிருந்து காப்பாற்ற நமக்கு வரும் அழைப்புதான் இது. அதைச் செய்வது எவ்வாறு? தேவனது ''சர்வ'' ஆயுதங்களையும் அணிந்துகொள்ளுங்கள். ''சர்வ'' எனும் பதம் இப்பகுதியில் இருமுறை வருகிறது (6:11ஆ,13ஆ). இந்த ஆயுதங்களைக் குறித்து நடைமுறை ஆலோசனைகள் தருகிறேன் —

**(அ)** ''இயேசுவே கிறிஸ்து'' எனும் சத்தியத்தில் பலமாக அடித்தளமிடப்படுங்கள். இதுதான் ''இடைக்கச்சை.'' **(ஆ)** நீதிநெறியான வாழ்க்கை வாழுங்கள். இதுதான் ''மார்புக் கவசம்.'' **(இ)** நற்செய்தியறிவிப்பில் தீவிரமாயிருங்கள். இதைத்தான் ''காலணிகள்'' குறிப்பிடுகின்றன. **(ஈ)** சோதனை, வேதனை வேளையில் விசுவாசத்தில் உறுதியாயிருங்கள். இதுதான் ''கேடயம்.'' **(உ)** தேவனது மாபெரும் இரட்சிப்பில் மனமகிழ்ந்திருங்கள். இதுதான் ''தலைக் கவசம்.'' **(ஊ)** திருவசனத்தால் எதிரியைத் தாக்குங்கள். இதுதான் பட்டயம். **(எ)** எல்லாப் பரிசுத்தவான்களுக்காகவும் பாவிகளுக்காகவும் இடைவிடாது ஜெபித்துக்கொண்டேயிருங்கள்.

### முடிவுரை

பொல்லாத ஆவிகளின் இப்பட்டியல் முழுமையானதல்ல. இன்னும் எத்தனையோ உண்டு. ஆனால் இவை எல்லாவற்றையும் எதிர்க்க நம்மோடு தெய்வீக ஆவிகள் உண்டு. அவை நல்ல ஆவிகள், பரிசுத்தமான ஆவிகள். அவை எவையென்றால், ஆவியாயிருக்கிற பிதாவாகிய தேவன் (யோ 4:24), கிறிஸ்துவின் ஆவியாக நம்மோடிருக்கும் குமாரனாகிய தேவன் (ரோ 8:9), மற்றும் பரிசுத்த ஆவியானவராகிய தேவன் (அப் 5:3,4). நமக்குத் தேவதூதர்களாகிய ஆவிகளும் உண்டு (எபி 1:13,14). ஆன்மீகப் போராட்டத்தில் இன்று நமது பிரதான தேவை கண் திறப்புதான். எதிரிகளால் சூழப்பட்டிருந்த போது தனது வேலைக்காரனின் கண்களைத் திறக்கும்படித் தீர்க்கன் எலிசா தேவனிடம் வேண்டினார் (2 இரா 6:15-17). உண்மை என்னவெனில், ''நம்மோடு இருப்பவர்கள் அவர்களோடு இருப்பவர்களை விட எண்ணிக்கையிலும் அதிகம், பலத்திலும் அதிகம்!''

‘‘அனைத்துப்’’ பொல்லாத ஆவிகளையும் மேற்கொள்ளவேண்டு மானால் தேவனது ‘‘அனைத்து’’ ஆயுதங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டும் —

*கர்த்தரிலும் தம் வல்லமையிலும்*
*கிருபையாய் யாவரும் பலப்படுவோம்;*
*தீங்கு நாளிலே சாத்தானை எதிர்த்து நின்று*
*திராணியுடன் போர் புரிவோம்.*

*சர்வாயுத வர்க்கத்தை எடுத்துக்கொள்வோம்,*
*சாத்தானின் சேனையை முறித்திடுவோம் — அவர்*
*சத்துவ வல்லமையால்.*

*மாமிசம், இரத்தத்துடனுமல்ல,*
*துரைத்தனம், அதிகாரம், அந்தகாரத்தின்*
*லோகாதிபதியோடும் பொல்லா ஆவியோடும்*
*போராட்டம் நமக்கு உண்டு.*

*சத்தியமாம் கச்சையைக் கட்டியே,*
*நீதியின் மார்க்கவசம் தரித்தே,*
*சமாதானத்தின் சுவிசேஷ பாதரட்சை*
*நாம் கால்களில் தொடுத்துக்கொள்வோம்.*

*இரட்சண்யமாம் தலைச் சீராவும்*
*எக்ஷணமும் அணிந்து கொள்ளுவோம்;*
*தேவ வசனமென்னும் ஆவியின் பட்டயம்*
*தேவை அதைப் பிடித்துக்கொள்வோம்.*

*எந்தச் சமயத்திலும் சகல*
*வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும்*
*பரிசுத்தர் கட்காகவே ஆவியினால்*
*மன உறுதியுடன் ஜெபிப்போம்.*

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014



# 20

# சிலுவை மூலம் கவலைகளை மேற்கொள்ளுதல்

## Overcoming Worries thro’ the Cross

**முகவுரை**

இயேசு தமது ஆவியை விட்டபோது பல காரியங்கள் நிகழ்ந்தன —

| | |
|---|---|
| மத் 27:50-53<br>மாற் 15:38 | உடனடி நிகழ்வுகளை இவ்விரண்டு சுவிசேஷகர்கள் மட்டும் எழுதியுள்ளனர். அவர்கள் ***முதலாவது*** குறிப்பிடுவது, *‘‘தொங்குதிரை கிழிந்தது!’’* |

இங்குதான் புதிய ஏற்பாடு துவங்குகிறது!
மகா பரிசுத்தத் தலத்திற்கு வழி திறக்கப்பட்டாயிற்று!
எனவே *கிருபாசனத்தருகே தைரியமாய் வாருங்கள்* (எபி 4:16)

**நமது கவலைகளுக்குச் சிலுவை மூலம் பரிகாரம்:**

**1. பாவத்தைக் குறித்த கவலை**

*‘‘பிதாவே, **இவர்களை** மன்னியும்’’* என்று இயேசு ஜெபித்தார் (லூக் 23:34)

- நாம் பாவிகள், எனவே பாவம் செய்கிறோம்;
  எனவேதான், ‘‘***இவர்களை’’*** *மன்னியும் என்றார்!*
- நமது எல்லாப் பாவங்களையும் இயேசு சுமந்துவிட்டார் —
  கடந்தகால, நிகழ்கால, வருங்காலப் பாவங்கள்.
  அது *‘‘ஒரே தரம்’’* கொடுக்கப்பட்ட பலி.
- இப்போது நமது பாவங்கள் எங்கே?
  கடல் — ஆழம்    கிழக்கு-மேற்கு — அகலம்
  வானம் — உயரம்    முதுகு — நீளம்
  (மீகா 7:19ஆ; ஏசா 44:22; சங் 103:12; ஏசா 38:17)
  (தேவனது நாற்பரிமாண அன்பு, எபே 3:17-19)

- இனிக் குற்றவுணர்வு இல்லை — தண்டனைத் தீர்ப்பு இல்லை—
- இயேசுவின் இரத்தத்தால் கழுவப்படமுடியாத எப்பாவத்தையும் உங்களால் செய்யமுடியாது!

  *கருஞ்சிவப்பு ... பஞ்சு, பனி போல் வெண்மை ...*
  *''வழக்காடுவோம், வாருங்கள்!''* (ஏசா 1:18)

- உங்கள் கடந்த காலத்தைப் பிசாசு உங்களுக்கு நினைப்பூட்டினால், அவனது எதிர்காலத்தை அவனுக்கு நினைப்பூட்டுங்கள்!

ஆம், ***பாவத்தைப்பற்றிய*** கவலை சிலுவையால் ஒழிந்தது!

**உ. எதிர்காலம் குறித்த கவலை**

தனது எதிர்காலத்திற்காய் அந்தக் கள்ளன் வேண்டினான்.
இயேசுவின் பதில்: ***''மெய்யாகவே, மெய்யாகவே, ...''***
(லூக் 23:43)

- எதிர்காலம் நமக்கு வைத்திருப்பது ''யாது'' என்றறியத் தேவையில்லை; எதிர்காலத்தை வைத்திருப்பவர் ''யார்'' என்றறிந்தால் போதும் ...

  அவரே அல்பா, அவரே ஓமெகா.
  அவரே துவக்குபவர், அவரே முடிப்பவர்.

துவக்க முதல் முடிவை அறிந்தவர் (ஏசா 46:10)

- நம்மில் நற்செயலைத் துவங்கியவர் ...
  இதை *''நம்பி''* வாழ வேண்டும் (பிலி 1:5,6)
- நீங்களும் தேவனும் சேர்ந்து சந்திக்க முடியாத பிரச்னை எதுவும் வராது —
  1 கொரி 10:13 ... எச்சோதனையும் அதற்குப் பெரிதல்ல!
- மரணத்திற்குப் பயப்படாதிருங்கள்!
  எபி 2:14,15 ... *''வாழ்நாளெல்லாம்'' ... மரண பயம் ... அடிமைத்தனம்*
  தேவன் குறித்த காலத்திற்குமுன் சாகமாட்டீர்கள்.
  உங்கள் தலையின் மயிர்கள் எண்ணப்பட்டுள்ளன.
  நீங்கள் கடவுளின் கண்மணி.



ஆம், ***எதிர்காலம்*** பற்றிய கவலை சிலுவையால் ஒழிந்தது!

| | |
|---|---|
| Fanny Crosby: | *யேசுவைப் பாடிப் போற்றுகிறேன்,* |
| *(Blessed* | *நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்;* |
| *assurance ...)* | *மீட்பரை நம்பி நேசிக்கிறேன்,* |
| | *நீடுழி காலம் ஸ்தோத்தரிப்பேன்!* |

**3. குடும்பம் பற்றிய கவலை**

*''இதோ உன் மகன், உன் தாய்''* என்ற இயேசுவின் கூற்று குடும்பங்கள்மீது தேவனது கரிசனையின் வெளிப்பாடு
(யோ 19:26,27)

- உங்களைவிட உங்கள் குடும்பம்மீது தேவனுக்குக் கரிசனை.
  எ.கா.) நோவாவும் குடும்பமும் — பெருவெள்ளம்
  ராகாபும் குடும்பமும் — எரிகோ
  சகேயுவும் குடும்பமும் — *''இவ்வீட்டுக்கு இரட்சிப்பு!''*
  சிறையதிகாரியும் குடும்பமும் — *''நீயும் வீட்டாரும்''*
- உங்கள் கவலை யாது?
  இரட்சிக்கப்படாத கணவனா?
  ஒத்துழைக்காத மனைவியா?
  கீழ்ப்படியாத பிள்ளைகளா?
  தொந்தரவு தரும் உறவினரா?

நிவாரணம்: அவர்களுக்காய் ***ஜெபியுங்கள்!***
இயேசு: *''உங்கள் பிள்ளைகளுக்காய் அழுங்கள்''* (லூக் 23:28)

- கடைசிக் காலம்: குடும்பங்களில் பிசாசின் விளையாடல்.
  பரிசுத்த ஆவியானவரின் எதிர்ப்பு —
  மல் 4:5,6 ... *பிதாக்கள்... பிள்ளைகள்...*

**4. குழப்பங்கள் பற்றிய கவலை**

இயேசுவின் கதறல்: *''என் தேவனே ... என் தேவனே?''*
(மத் 27:46)

எதையும் தாங்கியவர் இந்தப் பிரிவைத் தாங்கமுடியவில்லை!

இதுதான் சிலுவையிலிருந்து வந்த மையக் கதறல்.
மற்றவையெல்லாம் கூற்றுக்கள்; இது ஒன்றுதான் கேள்வி!

இக்கேள்விக்குத் தேவன் பதில் தரவில்லை,
மாறாக, இச்சூழலில் கடந்து செல்ல அவருக்குப் பலமும் கிருபையும் அருளினார்.

- வாழ்வின் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடையாது போகலாம் —

| | | |
|---|---|---|
| ஏன்? | — கூடாதா? | (Why not?) |
| ஏன் நான்? | — வேறு யார்? | (Who then?) |
| ஏன் இப்பொழுது? | — வேறு எப்போது? | (When then?) |
| ஏன் இது? | — வேறு எது? | (What then?) |

- நமது கேள்விகளுக்குப் பதில்தர தேவன் கடமைப்பட்டவரல்ல; ஆனால் போதுமான கிருபையளிக்கிறார் —
  இருட்டில் பயிற்சி (ஏசா 50:10)

தேவன் விளக்கினாலும் நமது குருவி மூளைக்குப் புரியுமோ?
*''நானறியேன்; அவரறிவார்!''* (யோபு 23:8-10)
ஜான் வெஸ்லி: தேவன் நம்மோடிருப்பதே காரியம்!

## 5. வியாதி, பொருளாதாரம் பற்றிய கவலை

*''தாகமாயிருக்கிறேன்''* — உடலில் வேதனை / தேவை (யோ 19:28)

ஏசா 53:4 ... *பாடுகள்* = வியாதிகள்
*துக்கங்கள்* = வேதனைகள் (மத் 8:16,17)

- உடலுக்கும் கிறிஸ்துவே இரட்சகரென விசுவாசியுங்கள். பொதுவாக,
  ஜெபத்தைக் கேட்டு ஆண்டவர் சுகமாக்குவார்;
  எப்பொழுதும் அவ்விதம் நடக்காது போகலாம்!
  எ.கா.) *பவுலின் முள் ... என் கிருபை ... என் பலம்*

- நமது உடல் இன்னும் *சாவுக்குரியதுதான்* —
  இப்பொழுது *''முதற்கனிகள்''* மட்டுமே (ரோ 8:23)
  லாசரு மறுபடியும் இறந்தான்! இருமுறை அடக்கம்!



நவீன காலச் சுவிசேஷச் செய்திகளால் ஏமாந்துபோகாதீர் —
''வியாதிகளே இருக்காதா?''

நமக்குப் ''பாவமே'' இல்லை என்று சொன்னால்,
நம்மையே ஏமாற்றுகிறோம்.
நமக்கு ''வியாதியே'' இல்லை என்று சொன்னால்,
நம்மையும் பிறரையும் ஏமாற்றுகிறோம்.
புதிய வானம் புதிய பூமி: *வியாதி, மரணம் இல்லை*
(வெளி 21:1-4)

சிலுவையினாலும் உயிர்த்தெழுதலினாலும், நாம்
ஒரு நாள் முற்றிலும் மகிமையான உடலைப் பெறுவோம்.

- பணத் தேவை குறித்த கவலை — பல தற்கொலைகள்.
  இயேசு: *எதை உண்போம் ... கவலைப்படாதீர்* (மத் 6:25-34)
  *உங்கள் பரம பிதா அறிவார் ...*

## 6. வேலை/தொழில் பற்றிய கவலை

*''முடிந்தது''* என்றார் இயேசு — நமது வேலைகளையும்
முடிக்க உதவுவாரென்பதற்கு நிச்சயம் (யோ 19:30)

உங்கள் திறமையின்மை, பலமின்மை, குறைபாடுகள்
போன்றவை குறித்துக் கவலைப்படாதீர்.

மாணவர்கள்: படிப்பைக் குறித்த கவலை

நாம் விசுவாசிக்கவேண்டியவை —

☐ நமது திறனுக்கேற்பத்தான் தேவன் பொறுப்பு தருகிறார்.
*5 தாலந்துகள், 2 தாலந்துகள், 1 தாலந்து* (மத் 25:14-30)

☐ நாம் உண்மையாயிருப்பதே தேவனது விருப்பம் —
*''நல்லது, உண்மையும் உத்தமமுமான ஊழியனே''*

☐ நாம் எல்லாவற்றையும் செய்துவிட அவர் விரும்புவதில்லை;
நமக்குக் கொடுக்கப்பட்டதையே செய்யவேண்டும் —
இந்தியாவுக்கு இயேசு வரவில்லை,
ஆப்பிரிக்காவிற்கும் செல்லவில்லை!

□ நம்மால் முடிந்ததையே செய்ய அவர் எதிர்பார்க்கிறார் —
*''தன்னால் இயன்றதைச் செய்தாள்''* (மாற் 14:8)
இரு தாலந்துள்ளவன் ஐந்து கொண்டுவரவேண்டியதில்லை.

**முடிவுரை**

இக்கவலைகளையும் மற்ற கவலைகளையும் மேற்கொள்ள
ஒரே வழி அர்ப்பணிப்பே —

*''பிதாவே, உமது கரங்களில் ...''* (லூக் 23:46)

| | |
|---|---|
| முதலாவது, *''பிதாவே''* என்றார் | அதாவது, |
| நடுவில், *''என் தேவனே''* என்றார் | தேவன் |
| முடிவில், *''பிதாவே''* என்றார் | நமது அப்பா! |

பிதாவானவரின் ***தந்தைத்துவத்தை*** விசுவாசித்துப்
போற்றுவதே கவலைகளை மேற்கொள்ளும் வழி.

பவுல்: *நான் விசுவாசித்திருக்கிறவரை அறிவேன்* (2 தீமோ 1:12)
யூதா: *வழுவாதபடி உங்களைக் காக்க தேவன் வல்லவர்* (யூதா 24)
இயேசு: *நீங்கள் என் கையில் இருக்கிறீர்கள் ...*
*நீங்கள் என் பிதாவின் கையில் இருக்கிறீர்கள் ...*
*உங்களை ஒருவரும் பறிக்கமுடியாது* (யோ 10:28,29)

கவலை உங்களைத் தொந்தரவுபடுத்த விடாதீர்;
கவலை உங்களைத் தொந்தரவுபடுத்தாதவரை
கவலையைத் தொந்தரவுபடுத்துங்கள்!

■

*சிலுவையின் நிழலில் அனுதினம் அடியான்*
*சாய்ந்திளைப்பாறிடுவேன்.*

*எவ்விதக் கொடிய இடருக்கும் அஞ்சேன்;*
*இயேசுவைச் சார்ந்து நிற்பேன் — ஆ, ஆ*
*அவனியில் வியாகுலம் வந்தால்,*
*அவரையே நான் அண்டிக்கொண்டால்,*
*அலைமிக மோதிடும் அந்நாள்*
*ஆறுதல் அளிப்பதாய்ச் சொன்னார்!*



# 21

# தெய்வீக சுகம் பெறுவது எப்படி?

## How to Receive Healing

வியாதியாயிருக்க விரும்புவோர் எவருமில்லை; ஆனால் வியாதியே வராதிருப்போரும் எவருமில்லை. தெய்வீக சுகமளிக்கும் கூட்டங்களுக்குத்தானே பெருங்கூட்டம்? திரள்திரளாய் மக்கள் இயேசுவிடம் சென்றதற்கு ஒரு முக்கிய காரணம் அவர் மூலம் வெளிப்பட்ட சுகமாக்கும் வல்லமையே. அவரது ஊழியம் தேவனது பரிபூரண சித்தத்தைப் பிரதிபலித்தது. கிறிஸ்து இன்றும் மாளாது, மாறாது இருப்பதால், ஈராயிரம் ஆண்டுகட்குமுன் அவர் இவ்வுலகில் உலவிவந்தபோது அவர் மூலம் சுகமடைந்தோர் போலவே நாமும் சுகம் பெறலாம்.

பிதாவானவராகிய தேவன் சுகமளிப்பவர்; ''நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'' என்று தமது மக்களோடு அவர் உடன்படிக்கை செய்துகொண்டார் (யாத் 15:26). குமாரனானவராகிய தேவன் சுகமளிப்பவர்; நமது நோய்களை அவர் சிலுவையில் சுமந்து தீர்த்தார் (மத் 8:17). தூயாவியானவராகிய தேவன் சுகமளிப்பவர்; குணமளிக்கும் வரங்களை அருளுவதோடு அவர் சாவுநோக்கி நடைபோடும் நமது உடல்களை உயிர்ப்பிக்கவும் செய்கிறார் (1 கொரி 12:9; ரோ 8:11). இவ்விதம் திரித்துவத்தின் மூவரும் நமது ஆரோக்கியத்தில் ஆர்வங்கொண்டு ஆவன செய்கின்றனரென்பது எத்தனை மகிழ்ச்சி!

சுகம் என்பது தேவனிடமிருந்து இலவசமாக வந்தாலும், சுகத்துக்கடுத்த திருமறைப் பகுதிகளை ஆராயும்போது, சுகம்பெற சில நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேண்டுமென்பது தெளிவு —

**1. கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள்.**

(Receive Christ as your Saviour.)

ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுமுன் வியாதி இருந்ததில்லை. எனவே உடல் சுகத்திற்குமுன் ஆன்மீக ஆரோக்கியத்தைத் தேவனிடம் நாடவேண்டும். தேவன் நமக்குச் செய்யும் உபகாரங்களைத் தாவீது சரியாய் வரிசைப்படுத்தினார். முதலாவது மன்னிப்பு, அடுத்தது சுகமளிப்பு (சங் 103:2,3). கல்வாரியைச் சித்தரிக்கும் போது தீர்க்கன் ஏசாயாவும் இதே வரிசையைக் கையாண்டார் (ஏசா 53:5). திமிர்வாதக்காரன் ஒருவனிடம் இயேசு முதலாவது, ''உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன'' என்றும், அடுத்து, ''உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ'' என்றும் கூறினார் (மத் 9:1-7).

தெய்வீக சுகம் என்பது கடவுளது ''பிள்ளைகளின் அப்பம்'' (மத் 15:26). நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்து அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போதுதான் தேவனுடைய பிள்ளைகளாகிறீர்கள் (யோ 1:12). அதுவரையில்லை. உங்கள் பாவங்களுக்காய்க் கிறிஸ்து உயிர்விட்டு, உயிர்த்தெழுந்தாரென விசுவாசிக்கையில் பாவமன்னிப்பின் நிச்சயமும், நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறீர்களென தூயாவியானவரின் சாட்சியும் உங்களுக்குக் கிடைக்கும் (ரோ 10:9,10; 8:15,16). அப்பொழுது நீங்கள் தேவனைப் பார்த்து, ''அப்பா, பிதாவே'' எனக் கூப்பிட முடியும்!

மக்களைச் சுகப்படுத்துமுன் இயேசு அவர்களுக்கு இறையரசைக் குறித்துப் பிரசங்கித்தார் (மத் 4:23). சுகம் என்பது இறையரசின் குடிமக்களுக்குரிய இறையரசின் ஆசீர்வாதமாகும். அந்த அரசுக்குள் ஒருவன் மறுபடியும் பிறக்கும்போதுதான் அதின் குடியுரிமை நன்மைகளை முழுமையாய் அனுபவிக்க முடியும்.

இப்படிச் சொல்வதால் ஒருவன் தன்னைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும்வரை அவர் அவனைச் சுகமாக்கமாட்டாரென்று பொருள்படாது. தேவன் அன்பாயிருக்கிறார். அவர் நல்லோருக்கும் தீயோருக்கும் வெயிலையும் மழையையும் அனுப்புகிறார். ஆனால் அவரது மகனை நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாக நாம் ஏற்றுக்கொள்வதைப்போல் அவரைத் திருப்திப்படுத்துவது



வேறில்லை. அப்படியே, அவர் நம்மைத் தமது பிள்ளைகள் என்று அழைப்பதிலும் மேலான அன்பு வேறில்லை! (1 யோ 3:1).

**2. உங்கள் வாழ்வை அலசிப்பாருங்கள்.**

(Review your life.)

ஏற்கனவே நீங்கள் விசுவாசியாயிருந்து வியாதிப்பட்டால் உங்கள் வாழ்வைச் சீர்தூக்கிப்பாருங்கள். உடல் நலமும் ஆன்மீக நிலையும் பின்னிப்பிணைந்தவை. ''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்'' என்று அப்போஸ்தலன் யோவான் எழுதினார் (3 யோ 2).

எல்லா வியாதியையும் தேவனது சிட்சை என்று சொல்ல முடியாவிடினும், அது தமது மக்களைத் திருத்த தேவன் பயன்படுத்தும் பிரம்புகளில் ஒன்றாகும் (உபா 28:58,59). ''களிப்பான வேளைகளில் தேவ சத்தம் மெல்லியதாகவும், கண்ணீரின் காலங்களில் அது பேரோசையாகவும் கேட்கும்'' என்றார் C.S. லூயி (1898-1963) என்ற பக்தன்.

புறங்கூறிய பாவத்திற்காகத் தேவன் மிரியாமைத் தொழுநோயினால் வாதித்தார். அவள் ஏழு நாட்கள் மனந்திரும்பியபின் சுகமடைந்தாள் (எண் 12). யோபுவுக்கு வந்த வேதனை அவரது மனந்திரும்புதலை ஆழப்படுத்தி, பரிசுத்தரைக் குறித்த அவரது அறிவை உயர்த்தியது (யோபு 42:5,6). பெதஸ்தாவில் 38 ஆண்டுகள் வியாதியாயிருந்தவனைச் சுகப்படுத்தியபின் இயேசு அவனை ''அதிகக் கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவம் செய்யாதே'' என்று எச்சரித்தார் (யோ 5:14). தனது பாவத்தை மறைத்துவைத்தவரைக்கும் தாவீது உடல்நலம் அனுபவிக்க முடியவில்லை (சங் 32:3,4; 38:3).

உங்கள் உடல் ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறது. உடலைக் கெடுத்தால் உடல்நலம் கெட தேவன் அனுமதிப்பார் (1 கொரி 6:18, 19; 3:16,17). உடலை மனநிலை பாதிக்கிறதென்பதை நவீன மருத்துவம் திரும்பக் கண்டுபிடித்துள்ளது. கேடான நடத்தை உடலிலுள்ள தடுப்புச் சக்திகளையே தகர்த்துவிடும். சீக்கிரம் மனந்திரும்பினால் சீக்கிரம் சுகம்பெறுவோம்.

**3. தவறிழைக்கப்பட்டவரோடு ஒப்புரவாகுங்கள்.**
(Reconcile with the wronged.)

''நீங்கள் சுகமடையும்படி உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்'' (யாக் 5:16). புதிய ஏற்பாட்டுச் சபையில் ஆரோக்கியத்திற்காகத் தேவன் வைத்துள்ள சிகிச்சைகளில் ஒன்றாக அப்போஸ்தலன் யாக்கோபு இதைக் குறிப்பிடுகிறார்.

பொறாமை, வெறுப்பு, கோபம் போன்றவையே பெரும்பாலான வியாதிகளுக்குக் காரணம் என மருத்துவக்கலை கூறுகிறது. ''நல்ல இருதயம் உடலுக்கு வாழ்வு; பொறாமையோ எலும்புருக்கி'' என்று அன்றே எழுதிவிட்டார் ஞானி சாலொமோன் (நீதி 14:30). உங்கள் இருதயத்திலிருந்து கசப்பான வேர்கள் யாவற்றையும் பிடுங்கி எறிந்துவிடுங்கள். உறவு முறிந்துள்ள யாவரோடும் சமாதானம் பண்ண நீங்களே முதலடி எடுத்து வையுங்கள் (மத் 5:23,24). பகையைப் பேணுவது உங்களுக்குத்தான் கேடு. தாராளமாக யாவரையும் மன்னித்துவிடுங்கள்.

எல்லாச் சண்டை சச்சரவோடும் கொரிந்து நகர் விசுவாசிகள் திருவிருந்தில் பங்குபெற்றனர். அதில் பிட்கும் அப்பம் கிறிஸ்துவின் உடலைக் குறிக்கிறதென்றும் அவர்கள் ஒவ்வொருவரும் அதில் உறுப்பினரென்றும் அவர்கள் நினைக்கவுமில்லை, நிதானிக்கவுமில்லை. எனவே வியாதிகளும் இறப்புகளுமே அவர்களுக்குத் தேவனது நியாயத்தீர்ப்பாயிற்று (1 கொரி 11:17-20, 28-32). நாம் எச்சரிக்கப்படவே இது எழுதப்பட்டுள்ளது. நாம் அவரது உடலைச் சேதப்படுத்தும்போது அவர் நமது உடலைச் சேமப்படுத்துவாரென எதிர்பார்ப்பது எப்படி?

விசுவாசிகளோடு மட்டுமல்ல, பாதிக்கப்பட்ட அவிசுவாசிகளோடும் நீங்கள் ஒப்புரவாகவேண்டும். குற்றமற்ற மனச்சாட்சிக்கு நிகரான மருந்தேது? உறவுகள் நன்றாயிருந்தால் உள்ளக் களிப்பு நிறைந்திருக்கும். ஆனந்தமும் ஆரோக்கியமும் ஒன்றையொன்று பெற்றெடுக்கும்.



பாதிக்கப்பட்ட நபரை நேரில் சந்திக்க முடியாவிடில் மன்னிப்புக் கோரிக் கடிதம் எழுதுங்கள். எக்காரணத்தையிட்டும் ஒத்திப்போட வேண்டாம்.

**4. திருவசனத்தின்மீது சார்ந்திருங்கள்.**
(Rely on the Word of God.)

ஆபிரகாமும் சாராளும் தேவ வாக்குகளை விசுவாசித்தபோது மலட்டுத் தன்மையிலும் செத்த நிலையிலுமிருந்த தங்கள் உடல்களில் சுகமும் பலமும் பெற்றனர் (ரோ 4:19-21). மரியாள் தேவனது வார்த்தையை அப்படியே விசுவாசித்தபோது ஆணுதவியின்றி கருவுற்றாள் (லூக் 1:37,38). இன்றும் நாம் விசுவாசிக்கும்போது மருத்துவத்தால் முடியாத அற்புதங்களைச் செய்யும் வல்லமை இறைவார்த்தைக்கு உண்டு.

''தேவன் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கினார்'' என்று இஸ்ரவேலர் சுகம்பெற்ற அனுபவத்தைக் குறித்து வாசிக்கிறோம் (சங் 107:20). கிறிஸ்து தமது வார்த்தையினால் மக்களை விடுவித்தார், குணமாக்கினார் (மத் 8:16). ஒரு நூற்றுக் கதிபதியின் விசுவாசத்தைப் பிரமாதம் என்று இயேசு பாராட்டினார். அவனது விசுவாசம் கிறிஸ்துவின் வார்த்தையில் மட்டும் சார்ந்திருந்ததே அதற்குக் காரணம் (மத் 8:8-10).

சுகத்திற்கான தேவ வாக்குகளால் திருமறை நிறைந்திருக்கிறது. திரும்பத் திரும்ப அவற்றை வாசித்து அவற்றின்மீது நில்லுங்கள். திருவசனத்தின் மூலமாகவே விசுவாசம் வருகிறது (ரோ 10:17). இயேசு ''உபதேசித்துக்கொண்டிருந்தபோது'' சுகமளிக்கும் வல்லமை வெளிப்பட்டதாம் (லூக் 5:17). ''இனிய சொற்கள் தேன்கூடுபோல் ஆத்துமாவுக்கு மதுரமும் எலும்புகளுக்கு மருந்துமாகும்'' (நீதி 16:24).

நோயின் காரணத்தினால் கருத்தூன்றித் திருமறையைத் தியானிக்க முடியாவிடில் மனனமாய் உங்களுக்குத் தெரிந்துள்ள இறைவாக்குகளை நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைப்பூட்டுவது விசுவாசிகளுக்குள்ளிருக்கும் ஆவி

யானவரின் செயலாகும் (யோ 14:26). கிரமமாக திருவசனங்களை மனனம் செய்தலின் நடைமுறைப் பயனொன்று இங்கு தெளிவு.

### 5. பிறரது ஜெபங்களை நாடுங்கள்.
(Request the prayers of others.)

சபையில் இன்று பரிசுத்த ஆவியானவர் வைத்துள்ள குணமாக்கும் வரங்களுக்காகவும் அற்புதங்களைச் செய்யும் சக்திக்காகவும் தேவனைத் துதிப்போம் (1 கொரி 12:9,10,28). முடிந்தபோதெல்லாம் இவ்வித வரம் பெற்ற ஊழியரது ஜெப உதவியை நாடுங்கள். சுகமளிக்கும் கூட்டங்களில் பங்குபெறுங்கள். தங்கள் பகுதிகளுக்கு வந்த பேதுரு, பிலிப்பு, பவுல் ஆகியோரின் சுகமாக்கும் ஊழியங்களை மக்கள் பயன்படுத்திக்கொண்டனர் (அப் 5:15,16; 8:5-8; 28:8,9). ஆனால் துர்ப்பாக்கியமாக இன்று சுகமளிக்கும் ஊழியங்கள் பல வியாபாரமயமாகிவிட்டன. எப்படியாவது சுகம் பெறவேண்டுமென்ற தத்தளிப்பில் யாரும் உங்களை ஏமாற்றிவிட இடங்கொடுத்துவிடாதிருங்கள்.

விசுவாசமுள்ள ஜெபத்தை ஏறெடுக்கும்படி ''சபையின் மூப்பர்களை'' வரவழைக்கவேண்டுமென்பதே வியாதிப்பட்டோருக்குக் கொடுக்கப்பட்ட தெளிவான ஆலோசனையாகும் (யாக் 5:14,15). புதிய ஏற்பாட்டில் ''மூப்பர்'' என்றால் ''மேய்ப்பர்'' என்று பொருள். இரண்டும் ஒன்றுதான். அவர்களுக்குப் பகட்டான வரங்களில்லாதிருக்கலாம். ஆனால் சபையை மேய்ப்பதற்குக் கண்காணிகளாய் அவர்களை வைத்தது ஆவியானவரானதால் அவர்களது ஜெபத்தை அவர் கனம்பண்ணுகிறார் (அப் 20:17,28). சபையில் ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டவர்களைப் பரலோகம் தாங்கி ஆதரிக்கிறது (மத் 18:17,18).

சபைத் தலைவர்கள் மட்டுமல்ல, விசுவாசிகளும் வியாதிப்பட்டோருக்கு ஜெபித்துதவலாம். ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்: என் நாமத்தினால் ... வியாதியுள்ளோர்மீது கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சுகமாவார்கள்'' என்று உயிர்த்தெழுந்த கிறிஸ்து ஆணித்தரமாய்ச் சொன்னார் (மாற் 16: 17,18). விசுவாசிகளில் எவரையும் அலட்சியமாய் எண்ணவேண்டாம். பெரிய அப்போஸ்தலனாக மாற இருந்தவருக்குச் சுகமளிப்பு ஊழியம் செய்ய தேவன் சாதா சீடனொருவனைத்தான் தெரிந்துகொண்டார்! (அப் 9:10,17,18). வியாதியுள்ளோருக்காக மூப்பர் ஜெபிப்பதைக் குறிப்பிட்டபின், ''நீங்கள் சுகமடையும்படி ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்'' என்று யாக்கோபு எழுதினார் (யாக் 5:16).



### 6. உங்கள் விசுவாசத்தை அப்பியாசியுங்கள்.
(Release your faith.)

சுகத்தைப் பெற்றுக்கொள்ள விசுவாசம் அடிப்படையானதாகும். தந்தையாயிருக்கிற தேவனை விசுவாசித்து அவரிடமிருந்து நன்மையானவைகளை எதிர்பாருங்கள் (மத் 7:9-11). சிலுவையில் கிறிஸ்து செய்து முடித்ததை விசுவாசியுங்கள். எல்லா வியாதிகள்மேலும் அவருக்கு அதிகாரம் உண்டு (ஏசா 53:4,5; அப் 3:15,16). பரிசுத்த ஆவியானவரின் தடுக்கமுடியா வல்லமையை விசுவாசியுங்கள். பிசாசின் எல்லாப் பிடிகளிலிருந்தும் அவர் உங்களை விடுவிக்க முடியும் (அப் 10:38).

மற்றவர்கள் உங்களுக்காக ஏறெடுக்கும் ஜெபங்களைக் கர்த்தர் கேட்கிறார் என்பது உண்மைதான். ஆனாலும் முடிவாக நீங்கள் ''உங்கள்'' விசுவாசத்தினாலும் தேவனை நெருங்கிச் சேரவேண்டுமென அவர் எதிர்பார்க்கிறார். தீர்க்கன் ஏசாயா தனக்கருகிலிருந்தாலும் எசேக்கியா இராஜா முழுவதும் ஏசாயாவின் ஜெபத்தில் சார்ந்துவிடாது, தானும் கண்ணீரோடு தேவனிடம் மன்றாடினார். அப்பொழுது கர்த்தர் அவரிடம், ''***உன்*** விண்ணப்பத்தைக் கேட்டேன், ***உன்*** கண்ணீரைக் கண்டேன்; இதோ நான் உன்னைக் குணமாக்குவேன்'' என்றார் (2 இரா 20:1-5).

எதிர்மறையான வார்த்தைகள் விசுவாசத்தைக் கொல்லும். இறைவாக்குகளையே அறிக்கையிட்டுக்கொண்டிருங்கள். கடந்த காலத்தில் ஏதாவது பாதகமாக நடந்திருந்தால் அதையெல்லாம் நினைத்துக்கொண்டிராதேயுங்கள். அநேக ஊழியரும் மக்களும் புற்றுநோயினால் வருந்திக்கொண்டிருந்த எனது தாயாருக்காய்

(1924-1981) ஜெபித்தார்கள். ஆனாலும் அவர்களது நிலை மோசமாகி அவர்கள் இறந்தார்கள். எனது தம்பியின் இரு சிறிய குமாரத்திகள் இவற்றைக் கவனித்துக்கொண்டிருந்தனர். ஒரு நாள் மூத்தவளின் கைவிரலில் தவறுதலாகக் கத்தி பட்டுவிட்டது. இரத்தத்தைக் கண்டு பயந்து அவள் ஜெபிக்கத் துவங்கினாள். உடனே இளையவள் அவளைப் பார்த்து, ''ஏய், ஜெபம் பண்ணாதே; ஜெபம் பண்ணினால் நீயும் பாட்டியம்மா போலவே செத்துவிடுவாய்'' என்றாள்! பிரிய மானவரே, இவ்விதச் சிறுபிள்ளைத்தனம் வேண்டாம். இப்போதையத் தேவைக்காகப் புதிய எதிர்பார்ப்புடன் தேவனை நோக்குங்கள். அவர் இறந்தோரின் தேவனாயிராமல் உயிருள்ளோரின் தேவனாயிருக் கிறார்! அவர் ஆபத்துக் காலத்தில் ''அநுகூலமான,'' அப்போதைக் கேற்ற, துணையாய் (present help) இருக்கிறார் (சங் 46:1). அவரது வல்லமையை மட்டுப்படுத்தவேண்டாம்.

முறுமுறுக்காதிருங்கள். கவலைக்கும் குழப்பத்திற்கும் இடங் கொடாதிருங்கள். தேவனைத் துதித்துக்கொண்டேயிருங்கள் (சங் 30:4,5). போதுமான அளவு விசுவாசிக்க முடியாவிட்டாலும், அந்தச் சிறுவனின் தகப்பனைப்போல, ''விசுவாசிக்கிறேன், ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்'' என உங்கள் உணர்வு களைத் தேவனிடம் கொட்டிவிடுங்கள் (மாற் 9:24). தேவன் புரிந்து கொள்ளுகிறார்!

பல சமயங்களில் சுகம் உடனே வராமல் படிப்படியாக வரும் (லூக் 17:14). தேவனது தாமதங்கள் மறுப்புகள் அல்ல. லாசருவின் சம்ப வத்தில் காண்கிறதுபோல் உங்கள் விசுவாசத்தைப் பெருகப்பண்ணி கூடுதல் மகிமையை வெளிப்படுத்த நினைத்து தேவன் அவ்விதம் தாமதிக்கலாம் (யோ 11:6,40). பல்லாண்டுகளாய் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாலும் தளர்ந்து விட்டுவிடாதிருங்கள். 38 வருடம் வியா தியாயிருந்தவனைப் பார்த்து இயேசு, ''நீ சுகமாகவேண்டுமென்று ***விரும்புகிறாயா?''*** என்று கேட்டாரல்லவா? ''ஆம்'' என்றதும் அவன் ஆரோக்கியமானான் (யோ 5:5-8). இத்தனை காலமாய் சுகத்திற்காக ஜெபிக்கவேண்டுமோவென்று சொல்லி மக்கள் உங்களை ஊக்க மிழக்கச்செய்யலாம். நீங்களோ பர்திமேயுவைப்போல விடாப்பிடி யுடனிருங்கள் (மாற் 10:48).



**7. மருத்துவ உதவி பெறுங்கள்.**
(Resort to medical help.)

தமது மக்களுக்கு ஆரோக்கியத்தை வரப்பண்ண தேவன் இயற்கை யான ஏதுக்களையும் தெய்வீக வல்லமையையும் பயன்படுத்துகிறார். மருத்துவ உதவி நாடுவதைக் கண்டனம் செய்யும் திருவசனம் ஒன்றுகூட திருமறையில் இல்லை. நோயாளிகளுக்கு வைத்தியர் வேண்டுமென்று இயேசுதாமே கூறிவிட்டார் (மத் 9:12).

''கட்டுப்போடுவது நான்; குணமாக்குவதோ தேவன்'' என்றார் டாக்டர் அம்புரோஸ் பாரரே என்பவர். எசேக்கியா இராஜா சுகமடைந் ததில் இது எவ்வளவு அழகாய்க் காணப்படுகிறது, பாருங்கள்! அவ ரது கண்ணீர் ஜெபத்தைக் கேட்ட தேவன் அவரைக் குணமாக்கு வேன் என்று தீர்க்கன் ஏசாயா மூலம் சொல்லியனுப்பினார். ''பின்பு ஏசாயா: அத்திப்பழத்து அடையைக் கொண்டுவாருங்கள் என்றார்; அதை அவர்கள் கொண்டுவந்து, பிளவையின்மேல் பற்றுப்போட்ட போது அவர் பிழைத்தார்'' (2 இரா 20:5,7). தேவமக்களின் தலை வனொருவனுக்கு மூலிகை மருந்தொன்றைச் சிபாரிசு செய்ததால் தேவனது குணமாக்கும் வல்லமையைத் தீர்க்கதரிசி மட்டுப்படுத்தி னாரோ? அப்படியே, சபையிலுள்ள இளந்தலைவன் ஒருவனுக்குத் திராட்சை ரசத்தை மருந்தாய்ச் சாப்பிடும்படி ஆலோசனை சொன் னதால் தேவனது அற்புதம் செய்யும் வல்லமையை அப்போஸ்தலன் மட்டுப்படுத்தினாரோ? (1 தீமோ 5:23).

தனது பணத்தையெல்லாம் மருத்துவர்களிடம் செலவழித்துவிட்ட வளை இயேசு கண்டனம் பண்ணவில்லை. அவளைத் தேற்றிக் குண மாக்கினார் (மாற் 5:25,26,34). மருத்துவக் கலையினால் சாதிக்க முடியாதவை ஏராளமுண்டு. மட்டுமல்ல, எந்தவொரு வியாதியும் நிலையும் நேரடியாகப் பிசாசின் செயலால் உருவாகியிருக்குமானால், அதைவிடப் பெரிய தேவ வல்லமையே முழு விடுதலை தரமுடியும் (மாற் 9:17,20,25; லூக் 13:11-13). மேலும், ஒரு வியாதியானது கர்த்தரின் தண்டனையாயிருக்குமானால், மனந்திரும்புதலே முக்கிய மருந்து. இங்குதான் ஆசா இராஜா தவறிவிட்டார். அவர் பின்வாங் கியபோது வியாதிப்பட்டார். மனந்திரும்புதலோடு தேவனிடம் திரும்பாது அவர் மருத்துவரை மட்டும் நாடினார் (2 நாளா 16:7-12).

மருந்தே எடுக்கக்கூடாதென்று தீர்மானித்து உறுதியாய் நிற்பீர்களானால் நல்லது. கர்த்தர் உங்கள் விசுவாசத்தைக் கனப்படுத்துவாராக. ஆனால் அற்புதங்கள் எப்போதும் நடந்துவிடுவதில்லை. அன்றன்றுள்ள அப்பத்திற்காக நாம் ஜெபிக்கவேண்டுமென்று போதித்த இயேசு அந்த அப்பத்திற்காக நாம் வேலை செய்யவேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார். எப்பொழுதும் காகங்கள் கறித்துண்டுகளையும், தூதர்கள் அப்பங்களையும் கொண்டுவருவரென எதிர்பார்க்க முடியுமா?

லூக்கா போன்ற ''பிரியமான'' வைத்தியருக்காய்த் தேவனைத் துதிப்போம் (கொலோ 4:14). காயங்களில் எண்ணெயும் ரசமும் ஊற்றும் ''நல்ல'' சமாரியருக்காய்த் தேவனைத் துதிப்போம் (லூக் 10:34).

**8. தரித்திரருக்கும் வேதனையிலிருப்போருக்கும் உதவுங்கள்.**
(Relieve the poor and the suffering.)

சுய பரிதாபம் வேண்டாம். அது உங்கள் நிலைமையை இன்னும் மோசமாக்கும். உங்களைவிட அதிகமான பாடுகளிலும் வேதனைகளிலும் இருப்போருக்கு உதவுங்கள். சிலுவையில் துடித்துக்கொண்டிருந்த இயேசு பட்டயம் துளைத்துக்கொண்டிருந்த மரியாளின் இருதயத்தை எண்ணிப் பார்த்தார் (லூக் 2:35; யோ 19:25-27). யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது தேவன் அவரது சிறையிருப்பை மாற்றினார் (யோபு 42:10). மாறாக, மேசையிலிருந்து விழுந்த அப்பத்துண்டுகளுக்கு லாசருவோடு சண்டையிட்ட நாய்களைத் துரத்தத் தவறிய அந்தச் செல்வந்தன் துடிதுடிக்கையில் ஒரு சொட்டுத் தண்ணீரும் அவனுக்கு மறுக்கப்பட்டது (லூக் 16:19-31).

அவதியுறும் எளியோர்க்கு நாம் செய்யும் நன்மைகளை எளியோரின் தேவன் தமக்கே செய்ததாகக் கணக்கில் வைக்கிறார் (மத் 25:34-40). மரண இருளின் பள்ளத்தாக்கில் நாம் நடக்கையில் அவரது நன்மையும் கிருபையும் நிச்சயம் நமக்குக் கிடைக்கும் (சங் 23). ''சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார் ... படுக்கையில் வியாதியாய்க்



கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்; அவனுடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப்போடுவார்'' (சங் 41:1,3).

திரளாய்ச் சேர்த்துவைத்திருப்பவைகளை ஒரு நேர உணவுமில்லாத திரள்களுக்குப் பங்கிடுங்கள். இதனால் உங்கள் ஜெபத்திற்குப் பதில் சீக்கிரம் வரலாம். உணவில்லாதோர், உடையில்லாதோர், உறைவிடமில்லாதோர் ஆகியோரை ஆதரித்தால் ''உங்கள் சுகவாழ்வு சீக்கிரம் துளிர்க்கும்'' (ஏசா 58:7,8). கொடுக்கமுடியாத அளவு நாம் யாரும் எளியவரல்ல. நம்மிலும் செல்வந்தரைவிட நம்மிலும் எளியவரே அதிகம். இறைவனது புன்னகை உங்கள் பக்கம் திரும்பும்படி யாராவது ஒருவரது வேதனையைக் குறைக்கக் குறிப்பாய் ஏதாவதொன்றைச் செய்யுங்கள்.

**9. முக்கியமானவற்றிற்கு வாழ்வில் முதலிடம் கொடுங்கள்.**
(Rearrange your priorities.)

எல்லாம் செய்துவிடவேண்டுமென விரும்புவது மனித இயல்பு. ஆனால் எல்லாரும் எல்லாவற்றையும் செய்யத் தேவன் விரும்புவதில்லை. அவனவன் தன் தன் அழைப்பிற்குள் நின்றுகொள்ளவேண்டும். இல்லையேல் நாம் செய்வதெல்லாம் மைல் அளவு நீளமும், ஆனால் அங்குல அளவு ஆழமுமாகத்தான் இருக்கும் (2 கொரி 10:13,14). வியாதிகள் பல சமயங்களில் நமக்குத் தேவனிடமிருந்து வரும் ''நில், கவனி!'' எனும் செய்தியாகும்.

அழைப்பு எதுவாயிருந்தாலும் எந்த மனிதனுக்கும் கீழ்க்கண்ட முக்கிய வரிசையே சரியென சர்வ வல்லவரின் வசனமும் மூதாதையரின் ஞானமும் ஒத்துக்கொள்வதாய்த் தெரிகிறது. முதலாவது, கடவுள்; இரண்டாவது, குடும்பம்; மூன்றாவது, வேலை அல்லது ஊழியம். பத்துக் கட்டளைகளிலேயே இவ்வரிசையைக் கவனிக்கிறோம். முதல் நான்கு கட்டளைகளும் கடவுளோடு நமக்குள்ள உறவையும், ஐந்தாம் கட்டளை குடும்ப உறவையும், கடைசி ஐந்து சமூக உறவுகளையும் பற்றிப் பேசுகின்றன (யாத் 20:1-17). அப்படியே மூப்பருக்கும் உதவிக்காரருக்கும் இருக்க வேண்டிய தகுதிகளடங்கிய பட்டியல்களும் இவ்வரிசையை நிலைப்படுத்துகின்றன (1 தீமோ 3:1-13). இறைவனோடும் இல்லத்தாரோடும் நேரம் செலவழிக்க முடியாத

அளவு வேலை செய்பவனுடைய பணியைப் பரலோகம் பாராட்டு வதில்லை. உலகிற்கு ஆசீர்வாதமாக மாறுமுன் ஆபிரகாம் தேவ னுக்குச் சிநேகிதனும், தனது குடும்பத்திற்கு நல்ல தகப்பனுமானார் (ஆதி 15:6; யாக் 2:23; ஆதி 18:17-19).

கிரமமான தியான வாழ்வு ஆரோக்கியத்திற்கு அடிகோலும். ''உன் னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான் ... வாதை உன் கூடாரத்தை அணுகாது'' (சங் 91:1,10).

ஒருமனம் நிறைந்த இல்லமே சொர்க்கத்திற்கு அடுத்தது! அங்கு அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் ஆகிய ஆவியின் கனிகள் நிறைந் திருக்கும் (கலா 5:22,23). அது அழகான தோட்டம்போலிருக்கும். அங்கு மனைவி திராட்சைக்கொடியைப் போலவும் பிள்ளைகள் ஒலிவமரக் கன்றுகளைப் போலவும் இருப்பார்களாம்! (சங் 128:2-4). கடுகடு என்றிருப்போரைவிட களிப்பாயிருப்போரே வியாதியை எளிதாய் மேற்கொள்ள முடியும் என்பது மருத்துவர் கண்டறிந்தது.

### 10. அமர்ந்து ஓய்வெடுங்கள்.
(Rest and relax.)

சீக்கிரம் எரிந்து காலியாகிவிடக்கூடாது என்பதற்காகவும் தேவன் ஏதாவதொரு வியாதி அல்லது அசவுகரியத்தை அனுமதித்து நமது வேகத்தைக் குறைக்கலாம். கிறுக்குப் பிடித்து ஓடும் இவ்வுலகின் எலிப் பந்தயத்தில் நாமும் சேர்ந்து காலத்துக்குமுன் சாவதை அவர் விரும்புவதில்லை. வியாதிப் படுக்கையில் தாங்கள் செலவழித்த நாட்கள் தேவன் தந்த கட்டாய ஓய்வு என்று எத்தனை பரிசுத்தரும் ஊழியரும் சொல்லியிருக்கின்றனர்! அளவுக்குமீறிப் பயிரிடப்பட்ட நிலத்திற்குக்கூட தேவன் கட்டாய ஓய்வு கொடுத்தாரே! (லேவி 26:33-35).

படுக்கையிலிருக்கும்போது நல்ல இசை, பாடல்களைக் கேளுங் கள். உங்களுக்குள் ஒரு புத்துணர்வு உண்டாகும். ஒரிசாவிலிருக்கும் போது 1992இல் நான் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டிருந்த நாட்களில் மாலைதோறும் எங்கள் மிஷனரிப் பிள்ளைகளில் ஒரு வனாகிய சுவர்ணராஜ் தனது கிட்டாருடன் எனக்குப் பிடித்தமான



பாடல்கள் பாடியதை என்னால் மறக்க முடியாது. வாசிக்க முடியாத அளவு வியாதிப்படவில்லையெனில் அலமாரியில் நெடுங்கால மாய்த் தூங்கிக்கொண்டிருக்கும் புத்தகங்களை எடுத்து வாசியுங்கள்.

நோய்வாய்ப்பட்ட காலங்களில் பக்தர் பலர் நேர்த்தியான பாடல் களை இயற்றியுள்ளனர். எசேக்கியா இராஜா வியாதிப்பட்டு சுகமான போது அழகான பாடலொன்றை எழுதிவைத்தார் (ஏசா 38:9-20). நெடுகவே சுகவீனமாயிருந்து முப்பத்தெட்டு வயதில் மரித்த அகஸ்டஸ் டாப்லேடி (1740-1778) என்பவரால்தான் *''பிளவுண்ட மலையே''* என்ற பாடல் எழுதப்பட்டது. பயங்கர விபத்துக்குள்ளாகிக் கடும் வேதனையில் மரித்த டட்லி டிங் (1825-1858) என்பவரின் பிரிவு வார்த்தைகளின் அடிப்படையில்தான் *''நல் மீட்பர் பட்சம் நில் லும்''* எனும் பாடல் எழுதப்பட்டதாகும். வீட்டிலோ மருத்துவமனை யிலோ படுக்கையிலிருக்கும் நாட்களில் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) ஊழியருக்கான நலத்திட்டங்கள் பலவும், ஊழியத்திற்கான நடத்துதல்கள் பலவும் நான் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்டேன். எல்லாம் நன்மைக்கே! (ரோ 8:28).

### சுகம் நிச்சயமா?

பொதுவாக, நாம் வேத வசன நிபந்தனைகளை நிறைவேற்றும் போது சுகம் பெறுவோம். ஆனால் சில சமயங்களில் தேவன் சுகத் தைக் கட்டளையிடுவதில்லை. காரணமறியோம். அதற்கு வேதத்தில் குறிப்பிடத்தகு எடுத்துக்காட்டுகளுண்டு. தனது சுகவீனத்திலிருந்து பெரிய அப்போஸ்தலன் பவுலுக்கு விடுதலை கிடைக்கவில்லை (2 கொரி 12:7-10). அவரது நம்பிக்கையை வெகுவாய்ப் பெற்றிருந்த உடன் ஊழியன் தீமோத்தேயுவின் வயிற்றுப் பலவீனம் நீங்கவில்லை (1 தீமோ 5:23). துரோப்பீமு என்ற இன்னொரு உடன் ஊழியன் மீது பவுலின் குணமாக்கும் வரம் செயல்பட முடியவில்லை (2 தீமோ 4:20). எலியாவின் ஆவியும் பலமும் இரட்டிப்பாய்ப் பெற்றிருந்த எலிசா வியாதியில்தான் இறந்தார் (2 இரா 13:14). ஆனால் ஒரு மனிதனின் பிரேதம் எலிசாவின் கல்லறையில் அவரது எலும்புகள் மேல் பட்டபோது அம்மனிதன் உயிர்பெற்றெழுந்தான்! (வச 20,21). எனவே பவுலோடு சேர்ந்து *''கிறிஸ்து எனக்கு வாழ்வு; சாவு எனக்கு இலாபம்!''* என முழங்குவோம்!

# 22

# நீங்கள் சுகம் பெறாவிட்டால் ...

## If you are NOT healed ...

''தெய்வீக சுகமளிப்பு'' ஊழியத்தில் இன்று காணப்படும் புதிய உற்சாகத்திற்காய்க் கடவுளைத் துதிப்போம். நமது தேவன் சுகமளிப்பவர் (யாத் 15:26). அவர் ஒருபோதும் மாறுவதில்லை. ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' (எபி 13:8).

பரலோகம் ஒன்றில்தான் கடவுளது சித்தம் பூரணமாய் நிறைவேற்றப்படுவதால் அங்கு வியாதியே கிடையாது. எவ்வித வியாதியிலிருந்தும் சுகம் பெறவும் நீடித்து வாழவும் மனிதனுக்கு இருக்கும் விருப்பம் கடவுள் தந்ததாகும். ஆனால் பக்தியுள்ளோர் நடுவிலும் பக்தியற்றோர் நடுவிலும் வியாதி பெருகிக்கொண்டுதானிருக்கிறது.

மனிதரை வேதனையிலிருந்து விடுவிக்க உதவும் மருத்துவக் கலையின் எல்லா முன்னேற்றங்களுக்காகவும் ஆண்டவரைத் துதிப்போம். அப்படியே நோயுற்றோருக்குத் தமது பிரசன்னத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்த கடவுள் திருச்சபைக்கு ''வரங்களை'' அருளியுள்ளார் (1 கொரி 12:28). திருச்சபைச் சரித்திரம் முழுவதிலும், குறிப்பாக இந்நாட்களில், கடவுள் இந்த மகிமையான சுகமளிப்பு ஊழியத்தில் பலரைப் பயன்படுத்தி வருகிறார். மற்ற கூட்டங்களைவிடச் சுகமளிப்புக் கூட்டங்களுக்கே திரளாய் மக்கள் செல்லுகின்றனர். *ஆனால் சுகம் பெற்றவரைவிட சுகம் பெறாதவரின் எண்ணிக்கையே அதிகம் எனும் உண்மையை மறுக்க முடியாது.* ஒவ்வொரு நற்செய்திக் கூட்டத்திற்கும், ஒவ்வொரு ஊழியனிடமும் சென்றும் அவர்கள் சற்றும் முன்னேற்றம் காணாமல் பெரிதும் சோர்படைகின்றனர். இதுதான் பெருங்கூட்டத்தின் நிலை. அவர்கள்மீது மனதுருகி இச்செய்தியை அவர்களுக்காகவே எழுதுகிறேன்.





**1. சோர்ந்துபோக வேண்டாம்.**

கடவுள் இன்னும் சிம்மாசனத்தில்தான் இருக்கிறார்! அவரிடம் சொல்லுவதற்கு முன்னரே உங்கள் உடலின் தேவைகளைப் பரலோகத்திலிருக்கும் உங்கள் தந்தை நன்கறிவார். ''உங்கள் வாழ்க்கைக்காகவும் ... உடலுக்காகவும் கவலைப்படாதிருங்கள் ... இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று உங்கள் விண்ணகத் தந்தை அறிந்திருக்கிறார்'' என்றார் இயேசு (மத் 6:25-32). ''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்பதே இறைவாக்கு (எபி 13:5). கிறிஸ்து ''உங்களுக்குள்'' இருக்கிறார் (கொலோ 1:27). அவரே தந்தையானவர் உங்களுக்குத் தந்த முதல் தேற்றரவாளன் (ஆற்றித் தேற்றுகிறவர்). அப்படியே பரிசுத்த ஆவியானவரும் ''உங்களுக்குள்'' குடிகொண்டுள்ளார் (யோ 14:16,17). அவர் தந்தையானவரின் இரண்டாம் தேற்றரவாளன். இவ்விரு தேற்றரவாளரும் உங்களோடும் உங்களுக்குள்ளும் இருக்கையில் உங்களுக்கு வேறென்ன வேண்டும்? எதற்காகப் பயப்படவேண்டும்?

உங்கள் புலம்பல், சோர்பு யாவையும் இயேசு நன்குணர்கிறார். இறந்துவிட்ட லாசருவின் இனத்தாரோடு அவரும் அழுதார். நீங்கள் அவர் கைகளில் இருக்கிறீர்கள். அவரது கைகளிலிருந்து எதிராளியாகிய பிசாசானவன் உங்களைப் பறித்துக்கொள்ளமுடியாது. ''உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்'' (1 யோ 4:4). நீங்கள் காணாவிடினும் தேவதூதர்கள் உங்களைச் சூழவுண்டு (2 இரா 6:17). நீங்கள் உணராவிடினும் அவர்கள் உங்களுக்கு உதவி செய்து நிற்கின்றனர் (எபி 1:14). உங்கள் ஜெபங்கள் பதிலளிக்கப்படாததுபோல் காணப்படலாம்; உங்கள் கதறல்கள் கேட்கப்படாதது போல் இருக்கலாம்; இறைவாக்குகள் நிறைவேறாததுபோல் தோன்றலாம். ஆனால் தாமதத்திற்குப் பொருள் மறுப்பு என்று எண்ண வேண்டாம். உங்கள் கதறல் கடவுளது புத்தகத்திலும் உங்கள் கண்ணீர் அவரது பாத்திரத்திலும் இருக்கின்றன (சங் 56:8).

**2. உங்களைக் குற்றஞ்சாட்டிக்கொள்ள வேண்டாம்.**

ஜெபத்தின் மூலம் இன்னொருவர் சுகம் பெறும்போது, உங்களுக்கோ சுகம் கிடையாதிருக்கும்போது, உங்களுக்குப் போதுமான விசுவாசமில்லாததே காரணம் என உடனே முடிவுகட்டிவிட வேண்டாம். சுகம்பெற விசுவாசம் தேவையெனினும், கடவுள் பிரதானமாக மக்களைக் குணமாக்குவது தமது அன்பினாலும் கருணையினாலுமே. ''இயேசு அவர்கள்மேல் *மனதுருகி*, அவர்களில் நோயாளிகளாயிருந்தவர்களைச் சுகமாக்கினார்'' என்று திருமறையில் வாசிக்கிறோம் (மத் 14:14). ''தாவீதின் குமாரனே, எனக்கு *இரங்கும்''* என்று குருடனான பர்திமேயு கூப்பிட்டான். தனது உடன் ஊழியன் ஒருவனைக் குறித்துத் திருத்தொண்டன் பவுல் எழுதியது: ''அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான்; ஆகிலும் தேவன் அவனுக்கு *இரங்கினார்''* (பிலி 2:27). விசுவாசிக்கமுடியாத அளவு பலவீனமாயிருந்தால், ஆண்டவரைப் பார்த்து, ''விசுவாசிக்கிறேன், ஆண்டவரே; என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்'' என்று தயங்காமல் சொல்லிவிடுங்கள் (மாற் 9:24).

தெய்வீக சுகமளிப்பு ஊழியத்தில் முன்னணியிலிருக்கும் ஊழியர் பலர் சுகம்பெற்றது ஓர் அற்புதத்தினாலல்ல, மருத்துவ சிகிச்சையினாலேயே. குணமாக்கும் ஊழியத்தில் வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட்ட கேத்தரீன் குல்மேன் (1907-1976) அம்மையார் புற்றுநோயினால் மரித்தார். தேவாவியின் வரத்தை இரட்டிப்பாய்ப் பெற்று ஏராளம் அற்புதங்கள் செய்த தீர்க்கதரிசி எலிசா வியாதிப்பட்டுத்தான் மரித்தார் (2 இரா 13:14,20). அப்படியானால் இவர்களுக்கெல்லாம் விசுவாசம் இல்லை என்று பொருளா?

திருத்தொண்டன் பவுலுக்கு உடலில் ஒரு முள் இருந்தது. அது ஒரு வியாதியல்ல என்று பல பிரசங்கிகள் வாதாடுகின்றனர், பலவித விளக்கங்கள் தரப்படுகின்றன. ஆனால் ஒன்று நிச்சயம்: அந்த முள்ளானது அவனது ஆவியிலோ ஆன்மாவிலோ இருந்த பிரச்னை அல்ல, உடலில் இருந்தது (2 கொரி 12:7). அதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் கொடுத்துக்கொள்ளலாம்! விசுவாசத்திலும் ஜெபத்திலும் பவுல் வல்லவர். ஆனால் உடலுக்கடுத்த இப்பிரச்னை



யிலிருந்து அவர் விடுவிக்கப்படவில்லை. அவரது கைக்குட்டைகளைத் தொட்டே பலர் சுகம் பெற்றனர் (அப் 19:12). ஆனால் அவரோடு அவ்வளவு நெருங்கி ஊழியம் செய்த தீமோத்தேயுவின் வயிற்று நோய் நீங்கவில்லை (1 தீமோ 5:23).

நீங்கள் சொல்லும் வார்த்தைகள் பாதகமாயிருப்பதாலேயே நீங்கள் இன்னும் சுகம் பெறவில்லையென்று இன்னொரு பிரசங்கி சொல்லுவார்! அப்படியானால் யோபுவின் (அப்படி அழைக்கப்படும்) பாதக அறிக்கைகளை வாசித்துப் பாருங்கள். முடிவில் கடவுள் அவரது எல்லா வார்த்தைகளையும் குறித்து அவரது நண்பர்களிடம் என்ன சொன்னார் தெரியுமா? ''என் தாசனாகிய யோபு பேசினதுபோல் நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் (சரியாய்ப்) பேசவில்லை'' (யோபு 42:7). கடவுள் அவரைக் குணமாக்கினார்! கையில் வலி இருக்கும்போது ''எனக்கு வலி இல்லை'' என்று சொல்லாதீர்கள்! அது பொய்! அதுதான் ''பாதக'' அல்லது ''முரண்பாட்டு'' அறிக்கையாகும்! உள்ளதை உள்ளபடியே கடவுளிடம் சொல்லுங்கள். தந்தை தனது பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பதும் விரும்புவதும் அதுவே!

**3. உங்களைத் தூய்மைப்படுத்த கடவுளிடம் கேளுங்கள்.**

எல்லா வியாதியும் நமது வாழ்விலுள்ள பாவத்தின் நேரடி விளைவு என்று சொல்லிவிடமுடியாது. வியாதிக்குக் கடவுள் காரணரல்லர்; ஆனால் நமது கவனத்தைப் பெற்றுக்கொள்ள வேதனையைக் கடவுள் நமக்கு அனுமதிக்கிறார்.

முப்பத்தெட்டு ஆண்டு வியாதிப்பட்டிருந்தவனை இயேசு சுகமாக்கியபோது, ''இதோ, நீ சுகமானாய்; அதிகக் கெடுதியானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் *பாவம்* செய்யாதே என்றார்'' (யோ 5:14). யாத்திராகமம் 15:26இலுள்ள சுகத்துக்கான வாக்குத்தத்தம் இறைக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலெனும் நிபந்தனையின்மீது உள்ளது. கர்த்தரது பந்தியில் தகுந்த ஆயத்தமின்றிப் பங்குபெற்றதால் வியாதிப்பட்டும் இறந்தும்போன பல விசுவாசிகளைக் குறித்துப் பவுல் எழுதினார் (1 கொரி 11:29,30). மூப்பரின் விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியைக் குணமாக்கும் என்றெழுதிய யாக்கோபு, ''அவன் *பாவம்* செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்'' என்றும் குறிப்பிடுகிறார் (யாக் 5:15).

உங்கள் இருதயத்தைக் கடவுள் அலசிப்பார்க்கும்படி உங்கள் வாழ்க்கையைக் கடவுளுக்குமுன் திறந்துவையுங்கள். உணர்த்தப்படு பவைகளைக் கடவுளிடம் அறிக்கையிடுங்கள். கிறிஸ்துவின் இரத்தம் எல்லாப் பாவங்களிலிருந்தும் உடனே உங்களைத் தூய்மையாக்கும் (1 யோ 1:7). மன்னிக்கப்பட முடியாத அளவு மோசமான பாவம் எதுவுமில்லை (ஏசா 1:18). யாருக்காவது தவறிழைத்திருக்கிறீர் களாவென யோசித்துப்பாருங்கள்; அவரோடு ஒப்புரவாகி உங்கள் மனச்சாட்சியைச் சுத்தம்பண்ணுங்கள்.

ஒருவேளை பயங்கரமான பாவம் எதுவும் இல்லாதிருக்கலாம்; ஆனால் கடவுளது பரிசுத்த பாதையிலிருந்து நீங்கள் விலகிக்கொண் டிருப்பீர்கள். இதோ திருப்பாடகனின் சாட்சி: ‘‘நான் உபத்திரவப்படு வதற்குமுன் வழிதப்பி நடந்தேன்; இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன் ... நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளு கிறேன்’’ (சங் 119:67,71). ‘‘எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோ ஷமாய்த் தெரியாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்’’ என்று திருமறை போதிக்கிறது (எபி 12:11).

போதிய ஓய்வின்மை, சரிவிகித உணவின்மை, இன்னும் இயற்கை விதிகள் பலவற்றை மீறுவதும் வியாதிக்குக் காரணங்களாகும். இதற்கு ஆவன செய்யுங்கள்.

**4. கடவுளது மடியில் சாய்ந்திருங்கள்.**

சுகம் கிடைக்கவில்லை என்பதால் சுகத்திற்காக ஜெபிப்பதையோ அற்புதத்தை எதிர்பார்ப்பதையோ நீங்கள் நிறுத்தவேண்டியதில்லை. அற்புதம் செய்யக் கடவுளுக்கு எந்நேரமும் பிந்திய வேளையல்ல. பிள்ளை பெறமுடியாத வயதானபோது கடவுள் ஆபிரகாமுக்கு ஒரு மகனைக் கொடுத்தார் (ஆதி 21:2). திமிர்வாதக்காரனை 38 ஆண்டு கள் வேதனைக்குப்பின் இயேசு சுகமாக்கினார் (யோ 5:5,8,9). ஆனால் ஆண்டவர்மீது சார்ந்திருக்கவும், பொறுமையாய் அவருக்குக் காத்திருக்கவும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அவர் ஏகாதிபத்தியர். அவர் எதையும் செய்யலாம்.



தனது உடலிலிருந்த பிரச்னையை நீக்கும்படி திருத்தொண்டன் பவுல் வேண்டினார். கடவுளோ, ‘‘உன் பலக்குறைவில் என் பலம் உன்னைத் தாங்கும்; என் கிருபை உனக்குப் போதும்’’ என்று வாக்க ளித்தார். முள்ளில்லாதிருப்பதைவிட முள்ளுடனிருப்பதே அவருக்கு நலம் என்று கடவுள் அறிந்திருந்தார் (2 கொரி 12:7-10). கிரமமான தோர் மருத்துவ சிகிச்சையுடன் தனது வயிற்றுப் பலவீனத்தை தீமோத்தேயு சமாளிக்கவேண்டியதிருந்தது (1 தீமோ 5:23). பாடு களின் கிண்ணம் தம்மைவிட்டு நீங்கிவிட இயேசு விரும்பினார்; ஆனால் விண்தந்தையானவரின் விருப்பத்திற்கு அதை விட்டு விட்டார் (மத் 26:39).

‘‘எல்லாவற்றிலும்’’ கடவுளைத் துதிப்பதே கிறிஸ்து இயேசுவுக் குள் நம்மைக் குறித்த இறைச்சித்தமாயிருப்பதால் அதைக் கற்றுக் கொள்வோம் (1 தெச 5:18). ஏனென்றால், ‘‘அவருடைய தீர்மானத் தின்படி அழைக்கப்பட்டவர்களாய்க் கடவுளிடத்தில் அன்புசெலுத்து கிறவர்களுக்கு அனைத்தும் (நன்மையாகவோ தீமையாகவோ காணப்படும் யாவும்) நன்மைக்கேதுவாகவே நடக்கிறதென்று அறிந் திருக்கிறோம்’’ (ரோ 8:28). உங்கள்மீது கிறிஸ்துவின் வல்லமை தங்கியிருக்கும்படி உங்கள் பலக்குறைவுகளிலும் மிகவும் சந்தோஷ மாய்ப் பெருமிதம் கொள்ளுங்கள் (2 கொரி 12:9).

வேதனையின் வழியாய் நடந்து செல்ல நாம் அனுமதிக்கப்படு வதின் இன்னொரு காரணம், நம்மைப்போல் பாடுபடும் பிறருக்கு மனதுருக்கத்துடன் ஆறுதல் கூறி உதவிசெய்யும் மனப்பக்குவம் பெறுவதற்காகவே. ‘‘கடவுளால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறு தலினாலே ... எந்தவித உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர் களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திறனுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்’’ என்று திருத்தூதுவன் பவுல் எழுதினார் (2 கொரி 1:4).

சுகமாயிருந்தாலும் சுகவீனமாயிருந்தாலும் நாம் கடவுளது கரங் களில் மாணிக்கங்களாம். இடைவிடாது துதித்தலாலும், தவறாது சாட்சி பகர்வதாலும் நாம் அவருக்காய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்க

வேண்டும். எவ்வளவோ உடல் வேதனைகள் நடுவிலும் கடவுளுக் காய் எரிந்து பிரகாசித்த பக்தர்களின் சரிதைகளால் சரித்திரம் நிரம்பியிருக்கிறது. மிஷனரி டேவிட் பிரெய்னார்டு (1718-1747) குதிரையில் எவ்வழியாய்ச் சென்றாரென்று பனித்தரை மீது அவர் துப்பியுள்ள இரத்தத்தை வைத்துச் சொல்லிவிடுமளவு அவர் நோயுற்றிருந்தார். பக்தன் ராபர்ட் முர்ரே மச்செயினுக்கு (1813-1843) மோசமான இதய நோய் இருந்தது. பிரசங்க வேந்தன் சார்லஸ் ஸ்பர்ஜனுக்குப் (1834-1892) பல வியாதிகள் இருந்தன. தனது ஊழிய நாட்களின் பெரும் பகுதியை ஏமி கார்மைக்கல் அம்மையார் (1861-1951) படுக்கையில் செலவழித்தார். நாம் முடிவாய் அறிவ தென்ன?— ***வாழ்வோ, மாள்வோ*** எதுவானாலும் கிறிஸ்து நமது உடலில் மகிமைப்படுவார் (பிலி 1:20).

இன்றைய உலகில் வியாதியே இல்லாதவர் எவருமில்லை. எல்லாருக்கும் ஏதோவொரு சுகவீனமோ பலவீனமோ இருக்கத்தான் செய்கிறது. இதைக் குறித்துத் திருத்தூதுவன் பவுல் கூறுவதைக் கவனியுங்கள்: ''நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும் கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண் ணுலகில் உண்டு. அது மனிதக் கையால் கட்டப்படாதது, அது நிலை யானது என்று அறிந்திருக்கிறோம். இக்கூடாரத்தில் குடியிருக்கும் நாம் விண்ணுலகு சார்ந்த நமது வீட்டைப் பெற்றுக்கொள்ள ஏங்கிப் பெருமூச்சு விடுகிறோம்'' (2 கொரி 5:1,2).

சாகவிருக்கும் நமது உடல்களை உயிர்ப்பிக்க (அல்லது ஊக்கு விக்க) இன்று தூயாவியானவர் நம்மில் குடிகொண்டுள்ளார் (ரோ 8:11). ஆனால் கிறிஸ்து திரும்பி வரும்போது, அவர் நமது உடல் களை மறுரூபமாக்கி (பிலி 3:20,21), வியாதியோ, வேதனையோ, கண்ணீரோ இல்லாத மகிமையான நாட்டிற்குள் அழைத்துச் செல்வார் (வெளி 21:4). அதுவரை நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையும், தந்தையாகிய கடவுளின் அன்பும், தூயாவியானவரின் துணையும் நிச்சயமாக நம்மோடு இருக்கும்!



# 23

# பாடுபடும்போது சொல்லவேண்டியது ...

## What to Speak when you Suffer

''பேசுகிறதற்குப் பொறுமையாயிருங்கள்'' (யாக் 1:19). பூரணத் தின் அடையாளம் பொறுமையானால், பூரண வாழ்வின் மகுடம் பேசுவதில் பொறுமையே. கவனக்குறைவான சொற்களே நமது பெரும்பாலான பிரச்னைகளுக்குக் காரணம். அவசரப்பட்டுக் கடின வார்த்தைகள் பேசிவிடுவது சகவுறவுகளைப் பாதிக்கின்றது. பொறு மையற்ற வார்த்தைகளால் இறைவனோடுள்ள உறவும் பாதிக்கப் படுகிறது. நமது செயல்களைவிடச் சொற்களாலேயே அவர் அதிகம் சினமடைகிறார். ஏனெனில், உள்ளத்தின் எண்ணங்களையே உதடு கள் கொட்டுகின்றன (மத் 12:34).

எல்லாம் அமைதியாகவும் நாமும் அமரிக்கையாகவும் இருக்கை யில் நமது நாவைக் கட்டுப்படுத்துவது எளிது; அதற்குச் சிறப்பான முயற்சி தேவையில்லை. ஆனால் நாம் கோபத்தால் சீறும்போதோ, வேதனையால் துடிக்கும்போதோ, பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசிவிடுகிறோம். இவ்வித வேளைகளில் பேசுபவைகளைக் கடவுள் கேட்டும் கேளாமலும் இருப்பதில்லை. அவற்றைக் கவனமாய்க் கணிக்கிறார். யோபுவின் சரிதை இவ்வுண்மையை அழகாய்ச் சித்தரிக் கிறது. அச்சரிதையின் முடிவில் கடவுள் சொன்னது கண்டிப்பான காரியம். அவர் யோபுவின் நண்பன் எலிப்பாஸ் என்பவனைப் பார்த்து, ''உன் மீதும், உன் இரு நண்பர் மீதும் எனக்குச் சினம் பற்றி எரிகிறது. ஏனெனில், என் ஊழியன் யோபு போன்று நீங்கள் என்னைப்பற்றிச் சரியாகப் பேசவில்லை'' (யோபு 42:7).

இயேசுவைத் தவிர உடலிலும் உள்ளத்திலும் யோபுவைப் போலத் துன்புற்றது எவருமில்லை. ''யோபுவின் பொறுமையைப்'' பின்பற்ற விவிலியம் நம்மை அழைக்கிறது (யாக் 5:10,11). அவர் பாடுபடும்

போது பேசியது நமது ஆழ்ந்த தியானத்திற்குத் தகுந்தது. சர்வ வல்லவரால் அங்கீகாரமும் பாராட்டுதலும் பெற்ற அவரது வார்த்தை களின் அடிப்படையில், பாடுகளின் நெருப்பில் நாம் கடந்து செல்கை யில் சொல்லவேண்டியவற்றை இங்கு நான் தொகுத்துள்ளேன் —

**1. ''யாவற்றிற்காகவும் கடவுளைத் துதிக்கிறேன்!''**

*''ஆண்டவர் கொடுத்தார், ஆண்டவர் எடுத்தார், அவர் பெயர் போற்றப்பெறுக!''* (யோபு 1:21ஆ)

இது பொதுவாக அடக்க ஆராதனைகளில் வாசிக்கப்படும் வசனம். இன்று நாம் இதை ஒரு விவிலிய வாசகமாய் வாசிக்கலாம். ஆனால் முதல் முதலாக யோபுவின் வாயில் இவ்வார்த்தைகள் பிறந்தபோது, அவை உண்மையாகவே உள்ளத்தின் ஆழத்திலிருந்து தோன்றி யவை. யோபுவின் இழப்புகள் சாதாரணமானவையல்ல. அவரது கால்நடைகள், அவற்றைப் பராமரிப்பவர்கள் மற்றும் அவரது பிள்ளைகளின் இழப்பு, அதுவும் ஒன்றன்பின் ஒன்றாக, விரைவில்! (யோபு 1:13-19). இதுவும் போதாதென்று அருவருப்பான வியாதியும் அவரைத் தொற்றிக்கொண்டது.

''ஆண்டவர் கொடுத்தார்'' என்று யோபு சொன்னது சரி; ''ஆண் டவர் எடுத்தார்'' என்று அவர் சொன்னதோ தவறு எனச் சாதக அறிக்கை என்ற உபதேசத்தைப் பரப்புகிறவர்கள் சாதிக்கிறார்கள். ஆண்டவரல்ல சாத்தானே யோபுவின் ஆசீர்வாதங்களை எடுத்து விட்டான் என்கின்றனர். இவ்விதப் பொருளாக்கம் எவ்வளவு தவறு என்பதைப் புரிவது எளிது. அடுத்த வசனத்திலேயே, ''இவை அனைத்திலும் யோபு பாவம் செய்யவுமில்லை; கடவுள்மீது குற்றம் சாட்டவுமில்லை'' என்று தூயாவியானவரே எழுதி வைத்துவிட்டார் (வச 22). அடுத்த அத்தியாயத்தில் மறுபடியும் வேதம் கூறுவதாவது: ''இவை அனைத்திலும் யோபு தனது வாயால் பாவம் செய்ய வில்லை'' (2:10ஆ). கடவுளே எல்லாவற்றிற்கும் மேற்பட்ட ஏகாதிபத்தியர் என்பதும் சாத்தான் அவரது வேலைக்காரன்தான் என்பதுமே யோபுவின் அறிவு! இப்பழம் பரிசுத்தனின் இறையியல் நுட்பம்தான் என்னே! இந்த அறிவினால்தான் அவரால் எல்லாச் சூழலிலும் எல்லாக் காரியங்களுக்காகவும் கடவுளைப் போற்ற முடிந்



தது. ''எல்லாச் சூழ்நிலையிலும் என்ன நடந்தாலும் நன்றி கூறுங்கள்; இதுவே கிறிஸ்து இயேசுவுக்குச் சொந்தமான நம்மைக் குறித்துக் கடவுளின் விருப்பமாயிருக்கிறது'' என நாம் போதிக்கப்பட்டிருக் கிறோம் (1 தெச 5:18). வேதனைகளினாலும் பிரச்னைகளினாலும் நாம் நசுக்கப்படும்போது கடவுளைத் துதிக்கவேண்டுமென்று நமக்குத் ''தோன்றாது.'' பரவாயில்லை, அப்பொழுதும் அவரைத் துதியுங்கள். துதிக்கவேண்டுமென்று தோன்றாவிட்டாலும் துதியுங் கள்; துதிக்கவேண்டுமென்று தோன்றும்வரை துதியுங்கள்!

**2. ''கடவுள் அனுமதிக்கும் எதையும் ஏற்றுக்கொள்ளுகிறேன்!''**

*''கடவுளின் கரங்களிலிருந்து நல்லவைகளை மட்டுந்தான் பெற வேண்டுமோ, தீமையான எதையும் பெறக் கூடாதோ?''* (யோபு 2:10)

இந்தியன் ஏர்லைன்ஸ் விமானமொன்றில் நான் பயணித்துக் கொண்டிருக்கையில் எனது இருக்கைக்குப் பின்புறமிருந்த இரு சிறுவர், ''இந்தியன் ஏர்லைன்ஸிலேயே பறக்கவேண்டும்; வேறே பணியாளர் யாரும் இவ்வளவு அன்பாயிருப்பதில்லை'' எனக் கத் தினர். என்னவென்று பார்த்தால், அந்த விமானப் பணிப்பெண் இச் சிறுவருக்குக் கூடுதல் சில சாக்லேட்டுகளைக் கொடுத்திருக்கிறாள்! துர்ப்பாக்கியமாக, சராசரிக் கிறிஸ்தவர் பலரது தத்துவமும் இவ்வளவு குழந்தைத்தனமாகவே இருக்கிறது! அவர்களுக்குக் கடவுள் ஒரு கிறிஸ்மஸ் தாத்தா, அவ்வளவுதான்! கீழ்க்கண்ட திருவசனங்களைக் கூர்ந்து கவனிக்குங்கால், நல்லவையாய்த் தோன்றுபவை மட்டுமே கடவுளிடமிருந்து வருபவை என்ற நமது நம்பிக்கைக்கு என்ன ஆதாரமுண்டு?

''வாழ்க்கை இன்பமாய் இருக்கும்போது மகிழ்ச்சியோடிரு; துன்பம் வரும்போது சிந்தனை செய்; அடுத்து என்ன நடக்கும் என்பதை நீ தெரிந்துகொள்ளாவண்ணம் கடவுள் இன்பத்தையும் துன்பத்தையும் மாறிமாறி வரவிடுகிறார்'' (பிர 7:14).

''யோனாவின் தலைக்கு நிழலாயிருக்கவும், அவரது மனச் சோர்பை நீக்கவும், கடவுளாகிய ஆண்டவர் ஓர் ஆமணக்குச் செடி முளைக்கக் கட்டளை கொடுத்தார் ... மறுநாளிலோ பொழுது விடியும்

நேரத்தில் கடவுள் ஒரு புழுவுக்குக் கட்டளை கொடுத்தார். அது அந்த ஆமணக்குச் செடியை அரிக்கவே, செடி உலர்ந்துபோயிற்று'' (யோனா 4:6,7).

''நான் ஆண்டவர்; வேறு எவரும் இல்லை. நான் ஒளியை உண் டாக்குகிறேன்; இருளையும் படைக்கிறேன்; நல்வாழ்வை அமைப் பவர் நான்; தீமையைப் படைப்பவரும் நானே; இவை அனைத்தை யும் செய்யும் ஆண்டவர் நானே!'' (எசா 45:7).

கடவுளே ஏகாதிபத்தியர் என்றும், எதுவுமே அவரது கட்டுப்பாட் டிற்கு மீற முடியாது என்றும், அவரது அனுமதியின்படியே நடக்கும் என்றும் நாம் உறுதியாக ஏற்றுக்கொண்டால்தான், திருத்தூதுவன் பவுலுடன் சேர்ந்து துன்பமோ துக்கமோ எதுவும் நமது நன்மைக் கென்று நடக்கும் எனப் பாடலாம் (ரோ 8:28,36). இந்த நிச்சயம்தான் நமக்கு அசையா நம்பிக்கையளித்து ''உபத்திரவத்தில் பொறுமையா யிருக்க'' நம்மைத் தைரியப்படுத்துகிறது (ரோ 12:12). நமது பிரச்னைகள், பாடுகளைக் குறித்து மக்கள் யூகித்து ஆயிரம் சொல்ல லாம். நாமோ, ''ஆண்டவருடைய கைதான் இதைச் செய்ததென்று அறியாதவன் யார்?'' என நம்மை நாமே கேட்டுக்கொண்டு முன் செல்லலாம் (யோபு 12:9).

### 3. ''நான் திருத்தப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கிறேன்!''

*''அறிவு புகட்டுங்கள்! அமைதியடைவேன்; என்ன தவறிழைத் தேன்? எடுத்துக்காட்டுங்கள்''* (யோபு 6:24).

நாம் பாடுபடுவதில் கடவுள் மகிழ்வதில்லை. பொல்லாதவர்களா கிய நாமே நமது பிள்ளைகள் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் இருக்கவேண்டுமென விரும்பும்போது விண்தந்தையானவர் தமது பிள்ளைகளுக்காக அவ்விதம் விரும்புவது அதிக நிச்சயமல்லவா? ஆனாலும், பாடுகளே நம்மைத் திருத்திக் கடவுளின் வழிகளை நமக்குப் போதிப்பதற்கு நிகரற்ற சாதனமாயிருக்குமானால், அந்தப் பிரம்பைக் கையாடாமல் விண்தந்தை நம்மைக் கெடுப்பாரோ?

திருப்பாடகனின் சொந்த சாட்சியே தங்கள் தலைமுறைகளில் கடவுளோடு நெருங்கி வாழ்ந்த தீர்க்கர்கள், மூதாதையர்கள் மற்றும்



மக்கள் யாவரின் சாட்சியுமாகும். அவர் கடவுளைப் பார்த்துச் சொன் னது: ''எனக்குத் துன்பம் விளைந்தது என் நன்மைக்காகவே; அதனால் உமது விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன் ... நீர் என்னைத் தண்டிக்குமுன்பு நான் தவறிழைத்தேன்; ஆனால் இப்போது உமது வாக்கைக் கடைப்பிடிக்கிறேன்'' (சங் 119:71, 67). எதிர்க்காற்றுகள் நம்மீது வீசும்போது இவ்வித வார்த்தைகளை அவ்வளவு எளிதாக உடனே நமது உதடுகள் பேசிவிடா. ஆனால் கடந்தகாலப் பாடுகளின் விளைவை நினைவுபடுத்திப்பார்த்தால், நாம் கசப்பெண்ணம் கொள் ளாமல் பொறுமையினால் நிறைவோம். எபிரெயர் நிருப ஆக்கியோன் பொறித்து வைத்த பொன் எழுத்துக்கள் இதோ: ''தண்டித்துத் திருத்தப் படுவது இப்போது மகிழ்ச்சிக்குரியதாய் இராமல், துயரத்திற்குரிய தாகவே தோன்றும். ஆனால் பின்னர், இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியையும் நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர்'' (எபி 12:11).

நீண்ட ஆண்டுகள் வகுப்பறையிலிருந்து முறையாகப் படிப்பதற் கும் கண்டிப்பான பயிற்சிக்கும் பதிலாக இந்நாட்களில் நமக்குக் குறுகிய காலப் பாடத்திட்டங்களும் அஞ்சல்வழிக் கல்வியும் உண்டு. நேரத்தைச் சேமிக்கவும் வசதியைக் கூட்டவுமே இவ்வித மாற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் கடவுளைப் பொருத்தவரையில் அவர் அவசரப்படுகிறவரே அல்ல. காலங்கள் அவர் கரத்தில்தான்! வாழ்க்கையின் முக்கிய பாடங்களை ஒரே நாளில் படித்துவிட முடி யாது. பொறுமையும் தாக்குப்பிடித்தலும் இன்றியமையாதவை. எனவேதான் பழம் பரிசுத்தர் பாடுகளை ஒரு பாடசாலை என்றனரோ?

### 4. ''கடவுளின் தயவிற்கு நான் அருகதையற்றவன்!''

*''ஆண்டவரே, மனிதர் எம்மாத்திரம், நீர் அவர்களை ஒரு பொருட்டாய் எண்ண? உமது இதயத்தை அவர்கள் மேல் வைக்க?''* (யோபு 7:17).

நான் உத்தமமாய் நடக்கவில்லையா? பின்னை ஏன் கடவுள் என்னை இவ்வளவு பாடுபட விடுகிறார்? இத்தனை ஆண்டுகளும் உண்மையாய் நான் அவரைச் சேவிக்கவில்லையா? பின்னை ஏன் அவர் இந்தப் புயலை எனது வாழ்வில் அனுமதித்தார்? மக்களோ

டுள்ள எனது ஈடுபாடுகளில் நான் தன்னலமற்றுத் தியாகவுணர்வுடன் நடந்துகொள்ளவில்லையா? பின்னை ஏன் எனக்கு இவ்வளவு பெரிய இழப்பை அவர் வரப்பண்ணினார்? தேவபக்தியற்ற பொழுதுபோக்கு ஒன்றையும் அனுபவியாது அவரையே அதிகமாய் நான் நேசிக்கவில்லையா? பின்னை ஏன் அவர் இவ்வளவு கோபத்தோடு என்னைத் தண்டிக்கிறார்? நாம் பாடுபடும்போது இவ்விதக் கேள்விகள் உள்ளத்தையும் உதடுகளையும் ஆக்கிரமிக்கும்.

மேலே குறிப்பிட்ட கேள்விகள் நியாயமாய்த் தோன்றினாலும், அவை சரியல்ல. நமது சிந்தனையை நாம் திருத்தவேண்டும். நமது காணிக்கையோ சேவையோ கடவுளுக்கு ஒன்றையும் கூட்டாது. அவர் தம்மில்தாமே முழுமையில் முழுமையானவர். நம்மிடமிருந்து அவருக்குத் தேவை என்று ஒன்றுமில்லை (அப் 17:25; சங் 50:7-13). நாம் அவரை விட்டுவிட்டால் அவர் அப்படியே தலையில் கைவைத்து உட்கார்ந்துவிட மாட்டார். அவருக்குப் பணிசெய்வதால் நாம் அவருக்குத் தயவு காட்டவில்லை. மாறாக, நம்மை அவர் அழைத்ததே நமக்குப் பாக்கியம். திரும்பவும் சொன்னால், நாம் அவருக்குத் தேவையில்லை; அவர்தான் நமக்குத் தேவை. பவுலைப் போன்றதொருவர் செய்த அறிக்கையே சரியானது: ''நான் திருத்தூதுவன் என்றழைக்கப்படத் தகுதியற்றவன் ... ஆனால் இப்போது நான் இந்த நிலையில் இருப்பது கடவுளின் அருளால்தான் ... திருத்தூதுவர்கள் எல்லாரையும்விட நான் மிகுதியாய்ப் பாடுபட்டு உழைத்தேன். உண்மையில் நானாக உழைக்கவில்லை; என்னோடிருக்கும் இறையருளே அவ்வாறு உழைக்கச் செய்தது'' (1 கொரி 15:9,10; எபே 3:7,8).

கிருபையின் காலத்தில் வாழும் நம்மைவிட யோபுவுக்குக் கடவுளின் கிருபையைக் குறித்த அறிவு மிகத் தெளிவாயிருந்திருக்கிறது! அவர் சொன்னது: ''கடவுளுக்குப் பதிலுரைக்கவும், எதிர்நின்று அவரோடு விவாதிக்கவும் நான் எம்மாத்திரம்? நான் நேர்மையாக இருந்தாலும் அவரோடு வழக்காடாமல், என் நீதிபதியிடம் இரக்கத்தையே கெஞ்சுவேன்'' (யோபு 9:14,15). வாழ்வில் முட்கள் அதிகரிக்க அதிகரிக்க கடவுளின் கிருபையின் அருமையும் அதிகமதிகமாய்ப் புரியும் (2 கொரி 12:9).



**5. ''இருட்டிலும் நான் கடவுளை நம்புகிறேன்!''**

*''ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் கடவுள் செய்கிறார். இதோ, என் அருகே அவர் கடந்து செல்கையில் நான் பார்க்க முடியவில்லை; நழுவிச் செல்கையில் நான் உணர முடியவில்லை''* (யோபு 9:10,11).

''ஏன் ... என்ன'' என்ற கேள்விகளே நாம் பாடுபடும்போது நமது நிலையைத் தடுமாறச்செய்து, நாம் பொறுமையற்ற வார்த்தைகளைக் கொட்டச் செய்கின்றன. ''யார்'' எல்லாவற்றையும் தமது கையில் வைத்திருக்கிறார் என்று மட்டும் நாம் உணர்ந்துவிட்டால் அலை மோதினாலும் அமைதியிருக்கும்.

கடவுள் ஒளியாய் இருக்கிறார்; அவர் ஒளியில் இருக்கிறார். இது தெய்வீக வெளிப்பாட்டின் ஒரு பக்கம்தான். ஞானி சாலமோனுக்கு அடுத்த பக்கமும் தெரிந்திருந்தது. அவர் ஒரு முறை பிரார்த்தனையில் இவ்விதம் சொன்னார்: ''ஆண்டவரே, நீர் கருமையான மேகத்தில் உறைவதாகக் கூறினீர்'' (1 இரா 8:12). இவ்வுலகில் மன்னர்கள் அமர்ந்திருக்கும் இடத்தில் மினுக்கும் பகட்டும் நிறைந்திருக்கும். மன்னாதி மன்னனைப் பொருத்தவரை அது வித்தியாசமாயிருக்கும். ''ஆண்டவர் ஆட்சி செய்கிறார் ... மேகமும் காரிருளும் அவரைச் சூழ்ந்துள்ளன'' (சங் 97:1,2).

கிறிஸ்தவ வாழ்வை முற்கால ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்புறத்திலிருந்து உட்புறம் வழியாய் மகா புனிதத்தலத்திற்குள் செல்லும் நடைக்கு ஒப்பிடலாம். வெளிப்புறத்தில் சூரியவொளியும், உட்புறத்தில் விளக்கொளியும் உண்டு; அதையும் கடந்து மகா புனிதத் தலத்திற்குள் சென்றால் அங்கு ஒரு ஒளியும் கிடையாது. அங்கே புலனறிவு எதைக்கொண்டுமல்ல, விசுவாசத்தைக்கொண்டே நடக்கவேண்டும் (2 கொரி 5:6). விண்ணகத்திலும் சூரியவொளியோ விளக்கொளியோ இராது; ஆண்டவரே அங்கு வெளிச்சமாயிருப்பார் (வெளி 22:5). நாம் விசுவாசத்தில் நடந்து, கேள்விகள் கேட்பதை நிறுத்தி, அலைமோதும் மனதை அமைதிப்படுத்தக் கற்றுக்கொண்டால், நிலைமை அதிமோசமாக இருந்தாலும் அது மண்ணுலகில் விண்ணுலகாகும்.

மனிதர் என்ற நிலையில் நாம், ''என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' எனக் கதறலாம். ஆனால் தாமதிக்காமல் உடனே, ''தந்தையே, உமது கரங்களில் என் ஆவியை ஒப்படைத்து விடுகிறேன்'' என்று அர்ப்பணித்துவிடவேண்டும் (மத் 27:46; லூக் 23:46). அமெரிக்காவிலுள்ள பிரபலமான வீட்டன் கல்லூரியில் நெடுங்காலம் முதல்வராயிருந்த Dr. ரேமண்ட் எட்மன் (1900-1967) என்பவர் இதை ''இருட்டின் ஒழுங்கு'' என்றழைக்கிறார் (ஏசா 50:10).

**6. ''எனது பாடுகளுக்குத் தகுதியானவரைச் சேவிக்கிறேன்!''**

*''கடவுள் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக் கையாயிருப்பேன்''* (யோபு 13:15).

''கடவுள் உன்னைச் செழிப்பிக்கும்போது அவருக்குச் சங்கீதம் பாடு; அவர் உன்னைச் சங்கடப்படுத்தும்போது அவரைச் சபித்து விடு!'' இதுதான் திருமதி யோபு அம்மையாரின் தத்துவம் (யோபு 2:8-10). அநேகக் கிறிஸ்தவர்களின் மனப்பான்மையும் இப்படியே இருப்பது வருந்தற்குரியது. நாம் ஒருவேளை ஆண்டவரை நேரடி யாய்ச் ''சபிக்காமல்'' இருக்கலாம்; ஆனால் அவரைப் போற்றத் தவ றும்போது செய்வது என்னவோ? இயேசுவிடமிருந்து பெற்றுக்கொள் ளும் நன்மைகளுக்காகவே நாம் அவரைப் பின்பற்றினால், அது காரியக்கார மார்க்கமும் உறவுமாகும். பிரச்னைகளும் போராட்டங் களும் இருந்தும் அவரைப் பின்பற்றுவதே உண்மையான ஆராதனை யும் கலப்படமற்ற பக்தியுமாகும்.

அரசன் நேபுகாத்நேச்சாரிடம் அந்த மூன்று எபிரெய வாலிபர் பேசியது அவனது திட்டத்தைப் பலவீனப்படுத்திற்று. கண்ணியமாக ஆனால் கம்பீரமாக அவர்கள் கொடுத்த பதில்: ''நாங்கள் வழிபடு கின்ற எங்கள் கடவுள் எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர் ... அப்படியே அவருக்கு மனமில்லாமல் போனாலும், அர சரே, நாங்கள் உம்முடைய தெய்வங்களை வழிபடமாட்டோம்!'' (தானி 3:17,18). முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களிடமிருந்த துணிவும் இதுவே. அவர்களது அயரா நற்செய்தியறிவிப்புப்பணிக் காய் அவர்கள் உதைக்கப்பட்டபோது, இயேசுவின் பெயருக்காய்த் தாங்கள் பாடுபடுவதற்குக் கிடைத்த பாக்கியத்தை எண்ணிக் குதூ கலித்தார்கள் (அப் 5:40,41).



கடைசிக் காலத்தின் கடைசிக் கட்டத்திற்குள் வரவர நமக்கு இன்ப நாட்களைவிட துன்ப நாட்கள் அதிகமாயிருக்கும்போலத் தோன்று கிறது. அதனால் நாம் முறுமுறுத்துக் கடவுளைக் குற்றஞ்சாட்டக் கூடாது. ஏனெனில், அடிப்படையாகவே நாம் கிறிஸ்துவை விசுவா சிப்பதற்கு மட்டுமல்ல, அவருக்காகப் பாடுபடவுமே அழைக்கப்பட்டி ருக்கிறோம் (பிலி 1:29). ''பாடுபடும் சிலாக்கியம்'' (Privilege of Suffering) என்று ஒரு மொழியாக்கம் இதைக் குறிப்பிடுகிறது. விறுவிறுப்பான கிறிஸ்தவன் பிசாசின் கோபத்திற்கு ஆளாகியே தீருவான். பிசாசு அவனை உடலிலும், மனதிலும், ஆன்மீகத்திலும், பொருளாதாரத்திலும், சமூக வாழ்விலும் விரட்டி விரட்டித் தாக்கு வான். கிறிஸ்து நமக்காக உயிர் கொடுத்திருப்பாரானால், நாம் படும் பாடு எதுவும் பெரிதல்ல, நாம் செய்யும் தியாகம் எதுவும் பிரமாத மல்ல!

**7. ''வரவிருக்கும் மாட்சியை எதிர்நோக்கியிருக்கிறேன்!''**

*''என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் இறுதியில் மண்மேல் எழுவார் என்றும் நான் அறிவேன். என் தோல் இவ்வாறு அழிக்கப் பட்டபின், நான் சதையோடு இருக்கும்போதே கடவுளைக் காண் பேன். நானே அவர் என் பக்கத்தில் நிற்கக் காண்பேன்; என் கண்களே காணும்; வேறு கண்கள் அல்ல; என் நெஞ்சம் அதற்காக ஏங்கு கின்றது''* (யோபு 19:25-27).

மரணத்திற்கும் மயானத்திற்கும் அடுத்து இருப்பதே பலங்குன்றிய நமது கரங்களுக்கும் தளர்ந்த நமது முழங்கால்களுக்கும் வலுவூட்டும் விசையாகும். மரணத்திற்குப்பின் வாழ்க்கை இல்லையெனில் நமது பாடுகளில் பொறுமையிழக்க நியாயமான காரணமுண்டு. வெளிநாடு ஒன்றிற்குச் செல்லவேண்டுமானால் விசா கிடைப்பதற்காக எத்தனை மணிநேரம் பொறுமையாய்க் காத்திருக்கிறோம்! விசா கிடைத்ததும் எவ்விதம் அகமகிழ்கிறோம்! நாளை நாம் நுழையப்போகும் மாட்சி நிறை நாட்டிற்காக இன்று எவ்வளவாய்க் காத்திருக்க வேண்டும்! ''இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப்போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை'' (ரோ 8:18). அல்லேலூயா!

எந்தச் சூழலிலும் நாம் பொறுமை இழக்கும்போது, நற்குணங்கள் ஒவ்வொன்றாய் நம்மை விட்டகலும்; துர்க்குணங்கள் தலைதூக்கும். திரும்ப எடுத்துக்கொள்ள முடியாத வார்த்தைகளைப் பேசிவிட்டோமே எனப் பின்னர் தலையிலடித்துக்கொள்வோம். அமரிக்கையும் நம்பிக்கையுமாயிருந்தால், ''நான் போகும் வழி கடவுளுக்குத் தெரியும்; அவர் என்னைச் சோதித்த பின்னர் நான் பொன்னாய்த் துலங்குவேன்'' எனக் கூறலாம் (யோபு 23:10).

முடிவாக, ரோமர் 5:3-5இல் பவுலடியார் எழுதியதைக் குறிப்பிடுகிறேன்: ''உபத்திரவம் பொறுமையையும், பொறுமை தகைமையையும், தகைமை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, துன்பங்களிலும் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறோம். இந்த எதிர்நோக்கு ஒருபோதும் நம்மை ஏமாற்றாது!''





**24**

# பாடுகளும் தற்கொலையும்
## Suffering & Suicide

பொதுவாகச் சொல்லவேண்டுமானால், எல்லாப் பாடுகளுக்கும் அடிப்படைக் காரணன் சாத்தான்தான். ''திருடவும், கொல்லவும், அழிக்கவுமேயல்லாது வேறெதற்கும் திருடன் வரமாட்டான்'' என்று இயேசு சொன்னது இதனால்தான் (யோ 10:10அ). அதற்கு எதிரிடையாகத் தமது பணியை இவ்விதம் குறிப்பிட்டார்: ''நானோ ஆடுகளுக்கு வாழ்வு உண்டாகவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'' (வச 10ஆ). அதே வேளையில் ஒவ்வொரு துன்பத்திற்கும் நேரடிக் காரணம் சாத்தான்தான் என்றும் சொல்வதற்கில்லை. இயேசுவானவரின் விடுதலை ஊழியத்திலிருந்து சில எடுத்துக்காட்டுகள் மூலம் இதனை விளங்கிக்கொள்ளலாம் —

■ செவிடும் ஊமையுமான தனது மகனை ஒரு தந்தை இயேசுவின் சீடரிடம் கொண்டுவந்தார். அவர்களால் அவனைக் குணமாக்க முடியாதபோது அந்தத் தந்தை இயேசுவிடம் சொன்னது: ''போதகரே, ஊமையான ஓர் ஆவி பிடித்த என் மகனை உம்மிடம் கொண்டு வந்தேன். அது அவனை எங்கே பிடித்தாலும் அங்கே அவனை அலைக்கழிக்கிறது; அப்பொழுது அவன் நுரை தள்ளி, பல்லைக் கடித்து, சோர்ந்துபோகிறான் ... இவனைக் கொல்லும்படி அது பல தடவை தீயிலும் தண்ணீரிலும் தள்ளிற்று'' (மாற் 9:17,18,22). சிறு வயது முதல் இப்பிரச்னை இப்பையனுக்கு இருந்திருக்கிறது. ''ஊமையும் செவிடுமான ஆவியே, இவனை விட்டுப் புறப்பட்டுப் போ, இனி இவனுக்குள் நுழையாதே'' என்று அந்த அசுத்த ஆவியை இயேசு அதட்டினார் (வச 25). அவன் உடனடி விடுதலை பெற்றான். இந்தப் பையனைப் பொருத்தமட்டில், அவனை ஊமையும் செவிடுமாக்கியது ஓர் அசுத்த ஆவி. செவிடும் ஊமையுமான எல்லாரும்

அசுத்த ஆவியினால்தான் அப்படியிருக்கின்றனர் என்று சொல்லிவிட முடியாது. எல்லாரும் நெருப்பிற்குள்ளும் தண்ணீருக்குள்ளும் தள்ளப்படுவதில்லை. இது போன்ற இன்னொரு நபரைச் சுகமாக்கியபோது இயேசு பொல்லாத ஆவி என்று எதனையும் விரட்டவில்லை. அச்சம்பவம் இதே சுவிசேஷத்தில் உள்ளது (7:32-37).

■ இன்னோர் எடுத்துக்காட்டு பலவீனத்தையடுத்தது. பதினெட்டு ஆண்டுகளாய்ப் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு பெண்மணி இருந்தாள்; அவள் எவ்வளவும் நிமிரக்கூடாத கூனியாயிருந்தாள் (லூக் 13:11). ஆண்டவர் அவள்மீது தமது கரங்களை வைத்து நொடிப்பொழுதில் சுகமாக்கினார் (வச 12,13). அவள் பதினெட்டு ஆண்டுகள் ''சாத்தானால் கட்டப்பட்டிருந்தாள்'' என்றே இயேசு கூறினார் (வச 16). முப்பத்தெட்டு ஆண்டுகள் பலவீனத்தால் வியாதிப்பட்டிருந்த ஒருவன் பெதஸ்தா குளத்தின் அருகே கிடந்தான் (யோ 5:5). இவனைச் சுகமாக்குகையில் சாத்தானைப்பற்றி ஆண்டவர் எதுவும் பேசவில்லை; மாறாக, அவனைப் பார்த்து, ''உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நட ... இனிப் பாவம் செய்யாதே'' என்று சொல்லிவிட்டார் (வச 8,11,14).

நோய்வாய்ப்படுவதற்குப் பல காரணங்கள் உண்டு. போதுமான ஓய்வில்லாது வேலை வேலை என்றிருப்பது ஒரு காரணமாயிருக்கலாம். பவுலின் உடன் ஊழியரில் ஒருவராகிய எப்பாப்பிரோதீத்து என்பவர் இறந்துபோவார் எனுமளவிற்கு வியாதியாயிருந்தார். ஏனெனில், உடல் நலத்தின்மீது கரிசனையின்றி கிறிஸ்துவுக்காய் ஓயாது உழைத்துவந்தார் (பிலி 2:25-30). இங்கு யாரும் சாத்தானைக் குற்றஞ்சாட்டவில்லை. ''தேவனுடைய'' இரக்கமே நாடப்பட்டது (வச 27). முதிர்வயதிற்கடுத்த வியாதிகளும் உண்டு. உடலுறுப்புகளும் தேய்ந்துபோகும்தானே! பார்வையிழப்பு, பற்கள் ஆட்டம், காது கேளாமை போன்ற முதிர்வயதுப் பிரச்னைகளைச் சாலொமோன் சுட்டிக்காட்டியுள்ளார் (பிர 12:1-7). எத்தனையோ அற்புதங்கள் செய்த தீர்க்கன் எலிசா வியாதிப்பட்டுத்தான் இறந்தார் (2 இரா 13:14அ,20அ).

வியாதியின் காரணம் நபருக்கு நபர் வேறுபடும். இதனை நாம் நிதானிக்கவேண்டும். நிதானிப்பு அல்லது பகுத்தறிதல் என்பது ஒரு



''வரமாக'' எல்லாருக்கும் அருளப்படுவதில்லை (1 கொரி 12:10). ஆனால் ஆவியின் நிறைவு பெற்ற அனைத்து விசுவாசிகளும் பகுத்தறிதல் எனும் ''கலையில்'' வளரவேண்டும் (எபி 5:14). ஒரு வேதனை அல்லது வியாதி சாத்தானிடமிருந்துதான் வந்துள்ளது என்று நமக்கு உறுதியாய்த் தெரிந்தாலும் நாம் அவனைக் குற்றஞ்சாட்டவோ தூஷிக்கவோ கூடாது. யோபுவைத் தாக்கியது சாத்தான்தான் (யோபு 2:7). ஆனால் அதற்கு மேலும் மிஞ்சியும் இருந்த தேவனது கரமே யோபுவின் மனதைப் பற்றியிருந்தது. ''கர்த்தர்'' கொடுத்தார், ''கர்த்தர்'' எடுத்தார், என்றார் அவர் (1:21). ''தேவனிடமிருந்து'' நன்மை பெற்றுள்ள நாம் ''அவரிடமிருந்து'' தீங்கையும் பெற வேண்டாமோ என்று தனது மனைவியிடம் யோபு சவாலிட்டார் (2:10). யோபுவின் சரிதையானது, சொல்லப்போனால், கடவுளுக்கும் பிசாசுக்கும் நடந்த யுத்தம்; யோபுவின் உடலே யுத்தக்களமாயிற்று. இரண்டு யானைகள் மோதிக்கொண்டால் நசுங்கி நாசமாவது கீழிருக்கும் புல் தரைதானே? இவ்விதமே, தனது உடலிலிருந்த முள்ளைப் பவுல் ''சாத்தானின்'' தூதன் என்றார் (2 கொரி 12:7). ஆனால் அவர், ''சாத்தானே, வெளியே போ'' என்று அதட்டவில்லை; மாறாக அவர் ''கர்த்தரிடம்'' சென்றார் (வச 8). இறுதிக் காலத்திற்கென்று கிறிஸ்துவிடமிருந்து நமக்குத் தெளிவான அறிவுரை ஒன்றுண்டு. சாத்தானை அதட்டிக்கொண்டே அலைவதல்ல, சாகும் வரை உண்மையாயிருப்பதே நமது அழைப்பு, பொறுப்பு (வெளி 2:10). அப்படியானால், நாம் கொல்லப்படலாம் என்பதுதானே பொருள்? நம்மைச் சிறையிலடைப்பது ''பிசாசு'' என்றிருந்தாலும், நாம் அவனைக் குற்றஞ்சாட்டாமல் உண்மையையும் உத்தமத்தையும் தக்க வைத்துக்கொள்ள வேண்டும்.

கவலையும் வேதனையும் அளவுக்கு மீறும்போதும், அதனை எவ்விதம் சமாளிப்பது என்று நமக்குப் புரியாதிருக்கும்போதும், இதற்குமேல் இருந்து பயனென்ன என்ற கேள்வி எழும்பத்தான் செய்யும். தற்கொலை ஒன்றே நிவாரணம் எனும் எண்ணம் தோன்றும். வலிப்பு நோயுள்ள ஒரு பையன் அடிக்கடி நெருப்பிலும் தண்ணீரிலும் விழுந்தான் (மத் 17:15). அவனிலிருந்த அசுத்த ஆவியை இயேசு விரட்டிய பின்னர்தான் அவன் இயல்பு நிலை

திரும்பினான் (வச 18). மிருகங்களைக்கூட தற்கொலை செய்து கொள்ளப் பிசாசுகள் தூண்டலாம் என்பதை நாமறிவோம் (லூக் 8:30,33).

தற்கொலை கூடாது என்ற நேரடிப் போதனை திருவிவிலியத்தில் இல்லை; ஆனாலும், ''தற்கொலை திருச்சித்தமே அல்ல'' எனப் போதிக்கும் எடுத்துக்காட்டுகளும் தத்துவங்களும் அதில் உண்டு. இதோ அவற்றில் சில: **(அ)** அபிமெலேக்கு (நியா 9:50-57). இஸ்ரவேலில் மூன்றாண்டு அரசனாயிருந்தான்; துன்மார்க்கத்தின் விளைவே அவனது தற்கொலை. **(ஆ)** சவுலரசன் (1 சாமு 31:4; 1 நாளா 10:4). புத்தி இழந்து, நிலை தடுமாறியபோது தனது ஈட்டிமேல் விழுந்து செத்தான். **(இ)** அகித்தோப்பேல் (2 சாமு 17:23). தாவீதுக்கு எதிரான தனது சதி தோல்வியுற்றபோது தூக்கிலிட்டுக்கொண்டான். **(ஈ)** சிம்ரி (1 இரா 16:16-20). இரதங்களின் தளபதி: கடவுளுக்கு விரோதமான தனது செயல்களைத் தொடர்ந்து தன்னையே எரித்துக்கொண்டான். **(உ)** புதிய ஏற்பாட்டில் ஒரேயொரு எடுத்துக்காட்டு: யூதாஸ்காரியோத்து (மத் 27:5). குற்றவுணர்வு தாங்காது தூக்கிலிட்டுக்கொண்டான். இயேசு அவனைக் ''கேட்டின் மகன்'' என்றார். தமது பிரதான ஆச்சாரிய ஜெபத்தில் இதனைக் குறிப்பிட்டார்: யோ 17:12, ''பிதாவே, நான் அவர்களோடு இருந்தபோது நீர் எனக்கு அளித்த உமது பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்து வந்தேன்; நன்கு பாதுகாத்தேன். அவர்களில் எவரும் அழிவுறவில்லை. மறைநூலில் எழுதியுள்ளது நிறைவேறும் வண்ணம் அழிவுக்குரியவன் மட்டுமே அழிவுற்றான்!'' ''யூதாசு திருத்தொண்டையும் திருத்தூதுப்பணியையும் விட்டகன்று தனக்குரிய இடத்தை அடைந்துவிட்டான்'' எனப் பேதுரு குறிப்பிட்டார் (அப் 1:24).

மேற்குறிப்பிட்ட எவரும் தற்கொலை செய்துகொண்டபோது ''பக்தியுள்ள'' நிலையிலிருக்கவில்லை. மட்டுமல்ல, பக்தியுள்ளவன் எவனும் தற்கொலை செய்ததாக விவிலியத்தில் சான்றும் இல்லை. இஸ்ரவேலை ஆசீர்வதிக்கையில், தீர்க்கன் பிலேயாம் சொன்னது: ''நீதிமான் இறப்பதுபோல் இறப்பேனாக; எனது முடிவு அவனது முடிவு போன்றிருப்பதாக'' (எண் 23:10).



மேற்கூறிய எடுத்துக்காட்டுகளைப் பார்க்குங்கால், தற்கொலை எவ்விதம் ஒரு தீர்வாக முடியும்? ''பரிசுத்தரின் இறப்பு கர்த்தர் பார்வையில் அருமை'' என்று வாசிக்கின்றோமே! (சங் 116:15). அது தற்கொலையாய் இருக்கமுடியாதே! ஆனால், அதே வேளையில், செத்துவிட்டால் நல்லது எனும் எண்ணம் வருவது அசாதாரணமல்ல —

■ கடவுளுக்குமுன் ***மோசேயின்*** கதறலைக் கவனியுங்கள்: எண் 11:14,15, ''நான் தனியாக இம்மக்கள் அனைவரையும் கொண்டு செல்லவே முடியாது; இது எனக்கு மிகப்பெரிய பளு. இப்படியே எனக்குச் செய்வீரானால் உடனே என்னைக் கொன்றுவிடும்; உமது பார்வையில் எனக்குத் தயை கிடைத்தால் இந்தக் கொடுமையை நான் காணாதிருக்கட்டும்!'' மோசேயின் ஆவி ஒடுங்கி, ஓய்ந்துபோன வேளையில் அவர் கொட்டிய வார்த்தைகள் இவை.

■ தீர்க்கன் ***எலியா*** ஒரு முறை இவ்வித எண்ணத்திற்குள் வந்தார். 1 இரா 19:4. அவர் பாலை நிலத்தில் ஒரு நாள் முழுவதும் பயணம் செய்தார். அங்கே ஒரு சூரைச்செடியின் அடியில் அமர்ந்துகொண்டு, தாம் சாகவேண்டுமென்று பின்வருமாறு மன்றாடினார்: ''ஆண்டவரே, நான் வாழ்ந்தது போதும்; என் உயிரை எடுத்துக்கொள்ளும்; நான் என் மூதாதையரைவிட நல்லவன் அல்ல!'' யேசபேலின் அச்சுறுத்தலால் அவர் உயிர் தப்ப ஓடியபோது இப்படிச் சொன்னார்.

மோசே மற்றும் எலியா ஆகிய இப்பெரும் தீர்க்கர்கள் சொன்னதைக் கவனித்தீர்களா? கடவுளோ அவர்களது வேண்டல்களுக்குச் செவிசாய்க்காமல், மோசேயை அவரே அடக்கம்பண்ணினார்; இறப்பில்லாமல் எலியாவை எடுத்துக்கொண்டார்!

■ ***யோபுவும்*** இப்படியே விரும்பினார். யோபு 7:15,16, ''நான் குரல்வளை நெரிக்கப்படுவதையும், வேதனையைவிடச் சாவதையும் விரும்புகிறேன். வெறுத்துப்போயிற்று; என்றென்றும் நான் வாழப்போவதில்லை; என்னை விட்டுவிடும். ஏனெனில் என் வாழ்நாட்கள் காற்று போன்றவை.'' யோபுவுக்கு வந்த சோதனையும் வேதனையும் கொஞ்சநஞ்சமா? யோபுவின் புத்தகத்தில் மரணத்தைப்பற்றிய குறிப்புகள் நிறையவுண்டு: 3:21,22; 6:11; 10:18,19.

■ தனது பிறந்த நாளைத் தீர்க்கன் ***எரேமியா*** சபித்தார் (எரே 20:14-18). அவருக்கு வந்த மனச்சங்கடம் எவ்வளவாய் அவரைப் பாதித்தது பாருங்கள்: ''தாய் வயிற்றில் நான் இருந்தபோதே, ஏன் என்னைக் கொல்லவில்லை? என் தாயே எனக்குக் கல்லறையாய் இருந்திருப்பாளே!'' எரேமியா கொடுத்த இறைவார்த்தைகள் கடின மானதாயிருந்ததால், அவரது ஊழியம் பிரபலமாயில்லை; நாளுக்கு நாள் எதிர்ப்பு கூடிக்கொண்டே வந்தது; எனவேதான் அவர் இவ்விதம் புலம்பினார்.

■ ***யோனாவின்*** மனத்தளர்வு நமக்குத் தெரியாததல்ல. யோனா 4:8, ''கதிரவன் எழுந்தபின், கடவுளின் கட்டளைப்படி, கிழக்கிலிருந்து அனல் காற்று வீசிற்று. கடும் வெயில் யோனாவின் தலையைத் தாக்கவே அவருக்கு மயக்கம் உண்டாயிற்று. வாழ்வதைவிடச் சாவதே எனக்கு நல்லது என்று அவர் சொல்லி, தமக்குச் சாவு வர வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்.'' நிழல் தந்த செடி பட்டுப் போயிற்று, தலையை வலி பிளந்தது.

இம்மனிதரெல்லாம் சாவை ''விரும்பினர்,'' ஆனால் எவருமே சாக ''முயலவில்லை.''

தீரா வியாதியினால் உங்கள் உடல் அழிந்துகொண்டிருக்கலாம். இந்நிலையில் நாம் நினைவுகூரவேண்டியது பக்தன் யோபுவின் வார்த்தைகள்: யோபு 19:25-27, ''என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், இறுதியில் மண்மேல் எழுவார் என்றும் நான் அறிவேன். என் தோல் இவ்வாறு அழிக்கப்பட்டபின், நான் சதையோடு இருக்கும் போதே கடவுளைக் காண்பேன்; அவர் என் பக்கத்தில் நிற்பதை நானே காண்பேன்; என் கண்களே காணும்; வேறு கண்கள் அல்ல; என் நெஞ்சம் அதற்காக ஏங்குகின்றது.'' இதுவே தொன்றுதொட்டுப் பரிசுத்தவான்களின் ஏக்கமாய் இருந்துவந்திருக்கிறது. இதைக் குறித்துப் பவுலடியார் எழுதியது: 2 கொரி 5:1-3, ''நாம் இவ்வுலகில் கூடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்துபோனாலும் கடவுளிட மிருந்து கிடைக்கும் வீடு ஒன்று விண்ணுலகில் நமக்கு உண்டு. அது மனிதக் கையால் கட்டப்படாதது, நிலையானது என்பது நமக்குத் தெரியும் அல்லவா? இக்கூடாரத்தில் குடியிருக்கும் நாம் விண்ணுலகு சார்ந்த நம் வீட்டைப் பெற்றுக்கொள்ள ஏங்கிப் பெருமூச்சு விடு



கிறோம். அதைப் பெற்றுக்கொண்டால் நாம் உறைவிடமற்றவர்களாய் இருக்கமாட்டோம்.'' தேவனை முகமுகமாய்ச் சந்திக்க ஏங்கும் ஆத்துமாவின் தவிப்பை இங்கு பார்க்கிறோம்.

வேலையில் சிக்கலா? தொழிலில் இழப்பா? முயற்சிகளில் தோல்வியா? தனது வேலைத்தலத்தில் ஒரு திடீர்ப் பிரச்னையைச் சந்தித்த பிலிப்பிய சிறையதிகாரியைக் குறித்து அப்போஸ்தலர் 16இல் வாசிக்கிறோம். சிறைக்கதவுகள் திறந்திருப்பதைக் கண்ட அவர் தனது வாளை உருவித் தற்கொலை செய்ய முயன்றார். கைதிகள் தப்பியிருந்தால் தனது வேலையும் போகும், தலையும் போகும் என்பது அவருக்குத் தெரியும். ஆனால் உரத்தக் குரலில் பவுல் கூறியது, ''நீர் உமக்குத் தீங்கு எதுவும் செய்துகொள்ளாதீர்'' (வச 23-34). ஆம், இதே செய்தி நம்மெல்லாருக்கும் உரத்தக் குரலில் வருகிறது! தேவ ஊழியரின் சொல் கேட்டுத் தற்கொலை செய்ய முயன்றதை நிறுத்தியதால் அந்தச் சிறையதிகாரியின் முழுக் குடும்பமே மீட்படைய ஏதுவுண்டாகியது.

சாட்சியாபுரத்தைச் சேர்ந்த தேவசகாயம் உபாத்தியாயரது (1830-1900) பாடல் எவ்வளவு அர்த்தமுள்ளது! —

*நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி,*
*நீயுனக்குச் சொந்தமல்லவே!*

*நீயுனக்குச் சொந்தமல்லவே,*
*நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்.*

*சிலுவை மரத்தில் தொங்கி மரித்தாரே;*
*திருரத்தம், ரத்தம் திருவிலாவில் வடியுது பாரே;*
*வலிய பரிசத்தால் கொண்டாரே;*
*வான மகிமை உனக்கீவாரே —*

*பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே;*
*உலகை விட்டுப் பிரியினும் அவர்க்கே மரிப்பாயே;*
*உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்,*
*உயர்பதவியில் என்றும் நிலைப்பாய் —*

**25**

# இன்றைய இழுபறிகள்

## Tensions of Today

### முகவுரை

மோதலில் இரு அரசுகள் ... அப் 26:18 / எபே 5:8-10

சாத்தான் நம்மை ''நிறுத்த'' முடியாவிடில்,
நம்மைத் ''திசைதிருப்புவான்!''

அவன் நம்மை ''அழிக்க'' முடியாவிடில்,
''வழிவிலகச்'' செய்வான்!

- எபே 4:20,21 ... *கிறிஸ்துவை அவ்விதம் கற்கவில்லை.*
- 1 கொரி 11:16 ... *எங்களுக்கு அவ்வித வழக்கமில்லை.*
- பிலி 3:17,18 ... அப்போஸ்தல முறைமை vs.
  பெருபான்மையினரது போக்கு
  *''அநேகர்''* என்போர் பொதுவாகத் தவறாகவே இருப்பர்.
- நமது தெரிந்தெடுப்பே வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும்.
  தேவனது அழைப்பு + மனிதனது தெரிந்தெடுப்பு

**சிக்கலான பன்னிரு தெரிந்தெடுப்புகள் —**

**1. இன்றைய இலாபமா, இறுதியான இலக்கா?**
(Immediate or Ultimate? Today or Tomorrow?)

கலப்பினத் தென்னை மரங்கள்—சீக்கிரம் காய்ப்பு, சீக்கிரம் ஓய்வு.

ஆதி 25:26-34 ... ஏசா / யாக்கோபு ... முதற்பேறுரிமை ... பசி
சங் 37:1,2,10,11,37,38 ... *சீக்கிரம் ... கொஞ்ச நேரம் ... முடிவு*
எபி 12:11-13 ... சிட்சை (வெளியே குதித்துவிடாதீர்கள்!)



**2. திரளா, தரமா?** (Quantity or Quality? Size or Sort?)

அப் 9:31 ... *பெருக்கம் ''அத்துடன்'' தேவபயம்*
லூக் 2:52 ... முதலாவது *''ஞானம்,''* அடுத்து *''வளர்த்தி''*
ஆதி 11:3 ... *மாற்றுக்கள் (கல்லுக்குப் பதில் செங்கல் ...
சாந்துக்குப் பதில் நிலக்கீல்)*
உபா 22:11 ... *ஆட்டுமயிர்* (ஆபேல்) ... *பஞ்சுநூல்* (காயீன்)
1 கொரி 3:10-17 ... எது என்பதா, எப்படி என்பதா?
முடிவை வைத்து முறை சரியாகாது!

**3. ஆன்மீகத் தோற்றமா, வசன அடிப்படையா?**
(Spiritual or Scriptural? Subjective or Objective?
Feelings or Facts?)

லூக் 17:20-25 ... *இதோ இங்கே ... இதோ அங்கே ...*
இயற்கைக்கப்பாற்பட்ட, உணர்ச்சி ததும்பும்
யாவும் தேவனிடமிருந்துதான் எனக் கூறமுடியாது.

1 நாளா 13:7-10; 15:11-15
புதிய வண்டி: பெலிஸ்தியர் முறை — (1 சாமு 6:2,7)
தோள்களில் சுமப்பது: தேவனது முறை — (யாத் 25:14)

2 தீமோ 2:5 ...தூக்கு நூலோ ரசமட்டமோ இல்லாது
கட்டிடம் கட்டினால் எப்படி?

மேலெழுந்தவாறு ஒரு சில வசனங்களைக் குறிப்பிடுவதல்ல,
திருமறையிலுள்ள தேவனது சிந்தையைப் புரிந்துகொள்ளுதல் —
அப் 15:1,13-20 ... எருசலேம் சங்கம்

கேள்விக்குரியவைகளையும், திருமறைக்கு அப்பாற்பட்டவை
களையும் ஒதுக்குங்கள்.

**4. பலமா, பரிசுத்தமா?**
(Power or Purity? Gifts or Fruits? Charisma or Character?)

2 கொரி 12:12 ... அப்போஸ்தலனின் அடையாளங்கள் ...
*''பொறுமை''*
பொறுமையே பூரணத்தின் அடையாளம்.

1 கொரி 13:1-3 ... *நவ நாவுகள் ... தீர்க்கதரிசனம்* vs. *அன்பு*

உற்சாகமா, நன்னெறியா? Enthusiasm or Ethics?
உண்மை / நேர்மை — பாலியல், பணம், பதவி.
பெண், பொன், புகழ்.

**5. லவுகீகமா, நித்திய நோக்கா?**
(Earthly or Eternal? Physical/material or Spiritual?)

1 கொரி 15:19 ... *இம்மைக்காக மட்டும் ...*
எபி 11:8-10 ... *கோபுரங்களிலிருந்து ஆபிரகாம் கூடாரங்களுக்குச் சென்றார்; ஒரு நகருக்காய்க் காத்திருந்தார்.*

ஆரோக்கியமும் ஆனந்தமுமா, பரிசுத்தமா?
(Health or Holiness?)

3 யோ 2 (ஆத்துமச் செழிப்பு)

— குஷ்டரோகி பரலோகம் போய்விடுவான்;
பாவியால் முடியாது!

— *பரிசுத்தமில்லாமல் எவரும் தேவனைத் தரிசிக்கமுடியாது.*

**6. இறைப்பணியா, இறைச்சித்தமா?** (God's Work or God's Will?)

வேலையில் நமக்குத் திருப்தியா, இறைவனுக்குப் புகழ்ச்சியா?
மத் 7:21-23 ... *அற்புதங்கள் ... தீர்க்கதரிசனம் ... தேவ சித்தம்*

*''தேவ சித்தப்படித் தாவீது தனது தலைமுறையைச் சேவித்தார்''*
(அப் 13:36)

இறைச்சித்தம் முதலாவது; இறைப்பணி அடுத்தது —
எ.கா.) பவுல் (அப் 22:13-15)

தேவன் உங்களிடம் எதிர்பார்ப்பதையே செய்யுங்கள்.

**7. ஊழியமா, குடும்பமா?** (Fellowship or Family?)

தேவனுடைய சபை vs. சொந்தக் குடும்பம்
1 தீமோ 3:4,5 ... *சொந்த வீடு ... தேவனது சபை*



- வீட்டிலே பிரசங்கியாயிராதீர்.
- தீர்க்கன் சாமுவேல் (1 சாமு 7:15-8:3)
- குடும்ப ஜெபம்
- குடும்பம்தான் இறைப்பணிக்காய்ப் பயிலவும் பயிற்சிபெறவும் பாடசாலை (எபே 5:21-33)

(அ) கீழ்ப்படிந்திருத்தல்
(ஆ) தலைமைத்துவம்
(இ) போஷித்தல்

**8. மனிதரது பாராட்டா, தேவனது அங்கீகாரமா?**
(Applause of men or Approval of God?)

யோ 5:44 ... *தேவனால் வரும் மகிமை ...*
*எப்படி விசுவாசிப்பீர்கள்?*
12:42,43 ...*தேவனால் வரும் மகிமையைவிட மனிதரால் ...*
எபே 6:5-8 ... *பார்வைக்கு ஊழியம் ... மனப்பூர்வமாய் ...*

மனிதரது பாராட்டுக்காக வேட்டை.
சந்தைவெளிகளில் வந்தனங்கள்.
கூடுகைகளில் முக்கிய இடங்கள்.
இயேசு: எ.கா.) *''நல்ல போதகரே ...*
*என்னை நல்லவரென்று அழைப்பானேன்?''*

தம்மைப் புகழ்ந்த நிக்கொதேமுக்கு இயேசுவின் பதில்:
(யோ 3:1-5)

பவுல் (அப் 16:16-18) — பொல்லாத ஆவியின் அறிக்கை!

**9. போட்டியா, ஒத்துழைப்பா?**
(Competition or Cooperation? Comparison or Complementation?)

1 சாமு 18:6-9 ... *சவுலின் 1000 ... தாவீதின் 10000*
யோ 4:1-5 ... இயேசு vs. யோவான்
1 கொரி 3:3-9 ... *ஜென்ம சுபாவம் ... பவுல் ... அப்பொல்லோ*
2 கொரி 10:12-15 ... *ஒப்பிட மாட்டோம் ... எங்கள் அளவு ...*

**10. புறத் தோற்றமா, அக நிலையா?**
(External or Internal ? Outside or Inside?)

மத் 23:25-28 ... *பாத்திரங்கள் ... கல்லறைகள் ...*

2 கொரி 5:11,12 ... *தோற்றம் ... இருதயத்திலல்ல ...*
(மாய்மாலம்)

இதில் எப்பொழுதும் கவனம் காட்டுங்கள்.
ஒருவருக்கொருவர் பொறுப்பாயிருங்கள் (பிர 4:9-12)
ஐக்கியத்தில் பாதுகாப்பு; தனிமையாய் இருக்காதீர்.
சுயாதீனம் vs. சகச்சார்பு (Independent vs. Interdependent)

**11. ஊழிய நெருக்கமா, தனித் தியானமா?**
(Ministerial pressure or Private devotions?)

மாற் 1:32-36 ... *சுகமாக்கினார் ... அதிகாலை ... ஜெபம்*

தனித்திருப்பதை இயேசு எவ்வளவாய் வாஞ்சித்தார்! —
மத் 14:12-14 ... யோவானின் மரணம்
:21-23 ... 5000 பேருக்கு உணவளித்தபின் ...
லூக் 6:10-13 ... சுகமாக்கினார் ... பன்னிருவர் தெரிந்தெடுப்பு

பில்லி கிரஹாம்: ''எனக்கு இன்னொரு வாழ்க்கை தரப்பட்டால், பிரசங்கிப்பதைக் குறைத்து வேதத் தியானத்தைக் கூட்டுவேன்!''

**12. ஊழியக் கிராக்கியா, சொந்த அழைப்பா?**
(Popular demand or Personal calling?)

2 கொரி 10:12-18 ... *அளவு ... மிஞ்சி வராமல் ...*
*மேன்மை பாராட்டாமல்*

ரோ 12:3-8 ... *எண்ணவேண்டியதற்கு மிஞ்சி ...*
*விசுவாச அளவு*

1 கொரி 7:20,24 ... பிற ஊழியங்களைக் காப்பியடிக்காதீர் ...
*உங்கள் அழைப்பில் நிலைத்திருங்கள்*

எ.கா.) சபை மேய்ப்பராகும் சுவிசேஷகர்.
சுவிசேஷகராகும் தீர்க்கதரிசிகள்.

**முடிவுரை**

- சரியான தெரிந்தெடுப்புகள் சுலபமல்ல— *''நெருக்கமான வாசல்''*
- திருத்தம் + தவறாய்க் கற்றதைக் களைதல் + மாற்றம்



# 26

# நான் பிசாசாயிருந்தால் ...

## If I were a devil ...

*1. நான் பிசாசாயிருந்தால்,*

மரணத்திற்குப்பின் வாழ்வேதுமில்லை; எனவே விருப்பம் போல் வாழலாம் என்று மனிதருக்குச் சொல்லுவேன்.

*2. நான் பிசாசாயிருந்தால்,*

எம்மதமும் சம்மதம்; எதை நம்புகிறோமோ அதில் உண்மை யாயிருக்கவேண்டும், அவ்வளவுதான் என்ற தத்துவத்தைப் பரப்புவேன்.

*3. நான் பிசாசாயிருந்தால்,*

நிறையப் பிரசங்கியுங்கள்; தியான நேரம் அதிகமாயிருக்க அவசியமில்லை; தேவைக்கேற்ப ஜெபித்துக்கொள்ளுங்கள் என்று பிரசங்கிகளுக்கு அறிவுறுத்துவேன்.

*4. நான் பிசாசாயிருந்தால்,*

நற்செய்திக் கூட்டங்களில் முன்வருவோர் காதுகளில் அவர்கள் இரட்சிக்கப்பட முடியாத கொடும்பாவிகள் என்று ஓதுவேன்.

*5. நான் பிசாசாயிருந்தால்,*

கிறிஸ்தவ வாழ்வு மிக அரிது; அதுவும் இன்றையச் சமுதாயத்தில் அது சாத்தியமேயில்லை என்று வெற்றி வாழ்வு வாழ முயலுவோரை மனம் தளரப்பண்ணுவேன்.

*6. நான் பிசாசாயிருந்தால்,*

பாவம், நியாயத்தீர்ப்பு, நரகம் ஆகியவை குறித்தெல்லாம் அதிகம் பேசாது, தங்கள் செய்தியில் சாதகமாயிருக்க வேண்டுமென்று சுவிசேஷகருக்குப் போதிப்பேன்.

*7. நான் பிசாசாயிருந்தால்,*

பைபிள் குழப்பம் நிறைந்த ஒரு சரித்திரப் புத்தகம்; அதை தேவ வசனம் என்று சொல்லமுடியாது என இறையியல் கல்லூரி மாணவருக்குச் சொல்லுவேன்.

*8. நான் பிசாசாயிருந்தால்,*

ஒரு மிஷனரிக் கன்வென்ஷன் விடாது பங்குபெற்று, வாலிபரிடம் தங்கள் வாழ்வை மிஷனரிப் பணிக்கு அர்ப் பணிக்க எண்ணுவது அர்த்தமற்றது; யார்தான் உலகை இரட் சிக்க முடியும் என்று முணுமுணுத்துக்கொண்டிருப்பேன்.

*9. நான் பிசாசாயிருந்தால்,*

சபையை எவ்வளவு பிரிக்க முடியுமோ அவ்வளவு பிரித்து, ஒவ்வொரு பிரிவின் தலைவரிடமும் அவர் சத்தியத்திற் காகத்தானே நிற்கிறார் என்று உற்சாகப்படுத்துவேன்.

*10. நான் பிசாசாயிருந்தால்,*

மோட்சம் நரகம் என்றெல்லாம் ஒன்றும் கிடையாது; மத மானது மக்களைக் கவர்ந்து தன்னகத்தே வைத்துக்கொள்ளக் கண்டுபிடித்த கற்பனைக் கதைதான் என்று மக்களிடம் திட்ட மாய்ச் சொல்லுவேன்.

*11. நான் பிசாசாயிருந்தால்,*

பணம்தான் பத்தும் செய்யும்; எனவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு சம்பாதித்துச் சேர்க்கவேண்டுமென்று மக்களை ஊக்குவிப்பேன்.

*12. நான் பிசாசாயிருந்தால்,*

திருமணத்திற்குப் பிறகு விருப்பம்போல் போக முடியாது, வயதும் ஆகிவிடும், எனவே இப்பொழுதே விருப்பமான பாலுறவு இன்பங்கள் அத்தனையையும் எப்படி வேண்டு மானாலும் அனுபவித்துக்கொள்ளவேண்டுமென்று வாலிபர் நங்கையரைத் தட்டிக்கொடுப்பேன்.

*13. நான் பிசாசாயிருந்தால்,*

டேவிட் லிவிங்ஸ்டன், C.T. ஸ்டட், ஹட்சன் டெய்லர் போன்



றோரெல்லாம் அர்த்தமில்லா வெறியர்கள்; இவர்களது சரிதைகளையெல்லாம் வாசித்து நேரத்தை வீணடிக்கக் கூடாதென்று கிறிஸ்தவருக்குச் சொல்லுவேன்.

*14. நான் பிசாசாயிருந்தால்,*

இனி முயற்சித்துப் பயனில்லை என்று பின்மாற்றக்காரர் செவிகளில் சொல்லிக்கொண்டேயிருப்பேன்.

*15. நான் பிசாசாயிருந்தால்,*

தற்கொலைதான் மேல், அதுதான் எளிய வழி; மரணத்திற்குப் பின்னர்தான் ஒன்றுமில்லையே என்று பிரச்னைகளில் சிக்கியுள்ளோருக்கு ஆலோசனை கூறுவேன்.

*16. நான் பிசாசாயிருந்தால்,*

பிள்ளைகளுக்குப் பைபிளைப் போதிக்கக்கூடாது; வளரும் போது அவர்களாகவே தங்களுக்கு விருப்பமானதைத் தெரிந்துகொள்ள விட்டுவிடவேண்டுமென்று பெற்றோ ருக்குப் போதிப்பேன்.

*17. நான் பிசாசாயிருந்தால்,*

ஏதோ அவ்வப்போது புகைப்பது, குடிப்பது, போதை மருந்தெடுப்பது எல்லாம் தவறல்ல என்று மக்கள் மனதில் போட்டுவிடுவேன்.

*18. நான் பிசாசாயிருந்தால்,*

இன்றைக்கு வயிற்றுக்கே உணவில்லாதிருக்கும்போது இறப்புக்குப் பின்னுள்ள வாழ்வைப்பற்றிப் பேசிப் பய னென்ன? எனவே சுவிசேஷ ஊழியத்தைவிட சமூக சேவையே அதிகம் செய்யவேண்டுமென்று சபைகளை உற்சாகப்படுத்துவேன்.

*19. நான் பிசாசாயிருந்தால்,*

பிரசங்கிகள் மகாராஜாவை அல்லவோ சேவிக்கிறார்கள்; எனவே உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றிற்கு டாம் பீகமாய்ச் செலவழிக்க அவர்களை நடத்துவேன்.

*20. நான் பிசாசாயிருந்தால்,*

திருமுழுக்கு வெறும் வெளிச்சடங்குதான்; எனவே அது அவசியமில்லை என்று போதிப்பேன்.

*21. நான் பிசாசாயிருந்தால்,*

அற்புதங்கள் மற்றும் இரத்த சாட்சிகளின் காலமெல்லாம் கடந்துவிட்டது, எனவே இன்று பெரிய காரியங்களை எதிர் பார்க்கவோ, முயற்சிக்கவோ கூடாதென்று கிறிஸ்தவரிடம் சொல்லுவேன்.

*22. நான் பிசாசாயிருந்தால்,*

இன்று அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளெல்லாம் கிடையாது; நவநாவுகளில் பேசுதல் போன்ற வரங்களெல்லாம் நின்று போயின என்று உத்தமக் கிறிஸ்தவர் மனதில் பதிப்பேன்.

*23. நான் பிசாசாயிருந்தால்,*

பூரணர் ஒருவருமில்லை; பாவத்தில் விழுவது இயல்புதான்; பரிசுத்தமாய் வாழ முயலுவதில் பயனென்ன என்று விசுவாசி களுக்குப் போதிப்பேன்.

*24. நான் பிசாசாயிருந்தால்,*

களங்களில் கனியில்லாதிருக்கச் செய்து மிஷனரிகளுக்குச் சோர்புண்டாக்கி, திரும்பிவிடுவது மேல், அல்லது இறை யியல் கல்லூரிக்குச் சென்று இன்னொரு பட்டம் பெற்றுப் பார்க்கலாம் என்று ஆலோசனை கூறுவேன்.

*25. நான் பிசாசாயிருந்தால்,*

குடும்ப ஜெபம் போன்றவையெல்லாம் பழங்காலப் பழக்கங்கள், இன்றைக்குப் பொருந்தாதவை. அது ஓய்வு நாள் பள்ளிக்குரிய வேளையாயிருந்தாலும் பொது அறிவைப் பெருக்கிக்கொள்ள பிள்ளைகள் தொலைக்காட்சி பார்க்கலா மென ஆலோசனை கூறுவேன்.

*26. நான் பிசாசாயிருந்தால்,*

மக்களைக் கவரச் சபை ஆராதனைகளில் கலை நிகழ்ச்சிகள், வேடிக்கை விளையாட்டுகள் ஆகியவற்றைத் தயங்காது கூட்டிக்கொள்ளும்படி ஆயர்களுக்குச் சொல்லுவேன்.



*27. நான் பிசாசாயிருந்தால்,*

ஒரு கமிட்டி மீட்டிங் விடாது பங்குபெற்று, அங்கத்தினரை முடிவில்லாத ஜெபமற்ற விவாதங்களுக்குள் நடத்திக் கொண்டேயிருப்பேன்.

*28. நான் பிசாசாயிருந்தால்,*

ஆண்டு முழுவதும் ஊழியரைப் பயணங்களிலும், கூட்டங் களிலுமே நேரத்தைச் செலவழிக்கச் செய்து, குடும்பத் திற்கும் தனி ஜெபத் தியானத்திற்கும் நேரமேயில்லை எனும் நிலைக்குக் கொண்டுவருவேன்.

*29. நான் பிசாசாயிருந்தால்,*

கிறிஸ்து திரும்ப வருகிறார் என்றெல்லாம் விசுவாசிக்கக் கூடாதென்று மக்களுக்குச் சொல்லி, உலகம் இன்றுபோல் என்றும் இருக்கும் என்று அவர்களுக்கு வாக்குப்பண்ணு வேன்.

*30. நான் பிசாசாயிருந்தால்,*

என்னைத் தள்ளி எறிந்துவிட்ட தேவனது தீர்மானங்களைச் சிதறடிக்கப் புதுப் புதுத் திட்டங்களைத் தீட்டிக்கொண்டே யிருப்பேன்!

27

# பொல்லாத இந்நாட்களில் பிழைப்பது எப்படி?

## How to Survive these Evil Days

செய்தித்தாள்களைப் படிக்கவே விருப்பமில்லை. தலைப்புகள் பெரும்பாலும் ஊழல்கள், போராட்டங்கள், மோதல்கள், ஏமாற்றுதல்கள், கலவரங்கள், கற்பழிப்புகள், சேதங்கள், யுத்தங்கள், வெள்ளங்கள், நிலநடுக்கங்கள், இப்படித்தான். ஆதிக் கிறிஸ்தவரைவிட இறுதிக் காலத்தின் இறுதிக்குள் அதிகம் நெருங்கி வந்துவிட்டோம். பெந்தெகொஸ்தே தினத்தைப் பேதுரு ''கடைசி நாட்கள்'' எனக் குறிப்பிட்டால் நாமிருப்பது ''கடைசி நிமிடங்கள்'' எனலாம். வரவர நிலைமை மோசமாகிக் கொண்டுதானிருக்கிறது. நம்பிக்கை குறைகிறது. உலகத் தலைவர்கள் தடுமாறுகின்றனர். நாளையை நினைத்தாலே நடுக்கம்.

ஆனால் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு தேவன் பக்கம் சேர்ந்துவிட்டவன் பதறான். புயலோ, பெருவெள்ளமோ கவலையில்லை, நங்கூரம் பாய்ச்சிவிட்டான். உலகச் செய்திகள் அவனுக்கு ஆச்சரியமில்லை. அவன் காணுவதெல்லாம் திருமறையின் நிறைவேறுதல்தானே. ''கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும்'' என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது (2 தீமோ 3:1).

எல்லாம் கடவுள் கையில்தான். அவரே சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறார். அவரே கர்த்தாதி கர்த்தர், மன்னாதி மன்னர். ''தேவபக்தியுள்ளோரைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும்'' அவர் அறிந்திருக்கிறார் (2 பேதுரு 2:9). பொல்லாத இந்நாட்களில் பிழைக்கும் வழியை அவர் நமக்குப் போதிக்கிறார் —

### 1. எப்படியாவது பரிசுத்தமாய் இருந்துவிடுங்கள்.

உலகம் அசுத்தத்திலிருந்து அசுத்தத்திற்குச் செல்கையில் தேவன் தமது மக்கள் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தம் அடையக் கட்டளையிட்டுள்ளார் (வெளி 22:11). பரிசுத்த ஏணியில் ஒருபோதும் இறங்கி விடக்கூடாது. ''பாவியொருவன் எவ்வளவு பரிசுத்தமடையமுடியுமோ அவ்வளவு என்னைப் பரிசுத்தமாக்கும்'' எனப் பக்தன் ராபர்ட் முரே மச்செயின் (1813-1843) ஜெபித்தார்!



எகிப்திலிருந்து புறப்பட்டோர் இச்சை, சிலை வணக்கம், வேசித்தனம், கடவுளைப் பரீட்சித்தல், முறுமுறுப்பு போன்ற பாவங்களால் வனாந்தரத்தில் மடிந்தனர். ''இவைகளெல்லாம் எடுத்துக்காட்டுகளாக அவர்களுக்கு நிகழ்ந்தன; உலகின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி இவை எழுதப்பட்டும் இருக்கின்றன'' (1 கொரி 10:6-11).

சோதனைகள் பெருகுகின்றன. காற்றே பாவத்தால் நிறைந்திருக்கிறது. ஆனாலும் ஒவ்வொரு சோதனைக்கும் தப்பும் வழியை தேவன் தந்துள்ளார் (1 கொரி 10:13). எந்தச் சூழலுக்கும் அவர் கிருபை போதும். தேவன் நம்மில் செயலுக்கான விருப்பத்தை உண்டாக்குகிறார்; நாமும் அவருடன் செயல்படவேண்டும் (பிலி 2:12,13). சூழலையோ சமுதாயத்தையோ பழிசாட்டவேண்டாம். எகிப்தில்தானே யோசேப்பு தூய்மையைக் காத்துக்கொண்டார்! பாபிலோனில்தானே தானியேல் பரிசுத்தமாயிருந்தார்! எதிர்நீச்சல் போடத் துணியுங்கள். அது இலகுவல்ல, இயலாததுமல்ல.

எல்லாரும் செய்கிறார்கள் என்பதே பொதுவான சாக்கு. ஆனால் நாம் அரச குருக்களின் கூட்டமன்றோ? (1 பேதுரு 2:9). ''கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவில் குற்றமற்றவர்களும் ... மாசற்ற பிள்ளைகளுமாய்'' சுடர்களைப் போல பிரகாசிக்க அல்லவோ அழைக்கப்பட்டுள்ளோம்? (பிலி 2:14,15).

நமது நகர்கள் சோதோம் கொமோராபோல் மாறுகின்றன. பாவமே நாகரீகமாகிவிட்டது. ஓரினச் சேர்க்கை சட்டபூர்வமாகிவிட்டது. விபசாரம் தண்டனைக்குரிய குற்றமில்லை என்றாகிவிட்டது. ''பிற்காலத்தில் அவபக்தியாக நடப்பவர்களுக்கு'' எடுத்துக்காட்டாயிருக்கவே இந்நகர்கள்மீது அன்று தேவ கோபம் இறங்கிற்று (2 பேதுரு 2:6). நாம் அப்படியானால் ''எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்!'' (3:11). இதுவே சவால்.

தூய வாழ்வின் இரகசியம் மனதில்தானிருக்கிறது. உலகம் போகும் போக்கில் போக மறுரூப மனது மறுக்கும் (ரோ 12:2). உங்கள் மனதை எப்பொழுதும் கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழ் வைத்துக் கொள்ளுங்கள். சோதனைக்காரனின் ஏவுதல்களுக்கு இசையாதீர்கள். உன்னதமானவரின் உயர் மறைவில் அடைக்கலம் புகுந்துவிடுங்கள். அவர் நாமத்திற்குள் ஓடி ஒளித்துக்கொள்ளுங்கள்.

*''தூய்மை பெற நாடு''* என்று பக்தன் பாடினார். 18ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட இப்பாடல் ஆங்கிலத்தில் *''தூய்மை பெற நேரமெடு'' (Take time to be holy)* என்றுள்ளது. இதயத்தை ஆராயவும், சுத்திகரிப்பும் வல்லமையும் பெறவும் தினமும் சில நிமிடங்களாவது ஒதுக்கிவையுங்கள்.

**2. ஜெபத்திற்கெனத் திட்டமான நேரம் ஒதுக்குங்கள்.**

கடைசிக்காலத்தைக் குறித்துப் பேசும்போதெல்லாம் இயேசு ஜெபத்தில் விழித்திருப்பதை வலியுறுத்தினார்: ''அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்'' (மாற் 13:33; மத் 25:13).

என்றுமேயில்லாத வேகத்தில் உலகம் சென்றுகொண்டிருக்கிறது. வேலைகளைத் துரிதமாய்ச் செய்து முடிக்க எவ்வளவு நவீன சாதனங்களிருப்பினும் நமது முன்னோர்களுக்கு இருந்த அளவு நமக்கு நேரமில்லை. எல்லா நாளும் அப்படித்தானிருக்கிறது. இதில் பலியாவது ஜெப நேரம்தான். சுருக்க ஜெபத்திலேயே சமாளிக்கப் பார்க்கிறோம். ஜெபிக்க முடியாத அளவு வேலையிருக்குமானால் நிலைமை கவலைக்கிடம்!

''தினம் காலை இரு மணிநேரமாவது ஜெபிக்காவிடில் அந்நாளில் பிசாசு ஜெயமெடுத்துவிடுகிறான்'' என்றார் மார்ட்டின் லூத்தர் (1483-1546). வேலை கூடக்கூட ஜெபமும் கூடவேண்டும். ஏனெனில், கூடுதல் வல்லமையும், பலமும், ஞானமும் பெறுவது கூடுதல் ஜெபத்தினாலேயே. ஊழியமோ, வேறு வேலையோ, அதற்காக ஜெபத்தைப் பலியாக்குவது மடமை. தேவப்பாணியில் செயல்படக் கற்பது ஜெபத்தில்தான்.



தேவப் பிள்ளைகளே பிசாசின் குறி. அனைத்து ஆயுதமணிந்திருந்தாலும் ''எந்தச் சமயத்திலும் ஜெபம்பண்ணி'' விழித்திராவிடில் உறுதியாய் ''நிற்க'' முடியாது (எபே 6:11-18). ''தீங்கு நாளின்'' அம்புகளுக்குத் தப்ப வேறு வழியில்லை.

நேரம் ''எடுத்து'' வைக்காவிடில் ஜெபிக்க நேரம் ''கிடைக்காது.'' தாவீதரசனைவிட அவர் காலத்தில் யாருக்கு வேலை அதிகம்? அவரே ஜெபத்திற்கென வேளைகளைக் குறித்து வைத்திருந்தார் (சங் 55:17). நேபுகாத்நேச்சார் மன்னனுக்குப் பணி செய்வதில் தானியேலுக்கு வேலை அதிகம்தான். ஆனாலும் தினம் மூன்றுவேளை ஜெபத்தில் அவர் தவறவேயில்லை (தானி 6:10). இவ்வித ஜெபப் பழக்கங்களுக்கு அடிமையாவோம்!

வேலை மிகுந்த இந்நாட்களில் பகல் வேளையில் ஜெபத்திற்கென ஒரு மணி நேரமாவது கிடைப்பது அரிதாகையால், அதிகாலையை ஜெபத்திற்கென ஒதுக்கிவிடவேண்டும். காலை முதல் மாலை வரை மக்கள் அவரை நெருக்கிக்கொண்டிருந்ததால் இயேசு இம்முறையையே கையாடினார் (மாற் 1:35).

நம்மை விசுவாசத்தில் அசைத்து அசுத்தத்தில் அமிழ்த்த புதுப் புதுத் திட்டங்களைப் பிசாசு தீட்டியவண்ணமிருக்கிறான். தப்புவதற்கு ஜெபமொன்றே வழி. முழங்காலில் பலவீனமாயிருந்தால் அவனது தாக்குதல்களுக்குப் பலியாவது நிச்சயம். ''தீமையினின்று எங்களை இரட்சியும்'' என்று இயேசு ஜெபிக்கக் கற்பித்தார்.

**3. திருவசனத்தில் ஊறியிருங்கள்.**

முடிவு நெருங்க நெருங்க போர் வலுக்கிறது. ''பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலம் மட்டும் உண்டென்று அறிந்து மிகுந்த கோபங்கொண்டிருக்கிறான்'' என்று வாசிக்கிறோம் (வெளி 12:12). கிறிஸ்தவனின் போராயுதங்களில் ''தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்'' ஒன்றே தாக்கும் ஆயுதமாகும் (எபே 6:17).

தேவ மக்களை அவரது வார்த்தையைச் சந்தேகிக்கச் செய்வதே ஆதிமுதல் பிசாசின் சதியாகும் (ஆதி 3:1). அறிவு பெருகிய இக்

காலத்தில் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பத்தையும் கொண்டு கிறிஸ்தவர்க்குத் திருமறையின் மீதுள்ள எளிய விசுவாசத்தை அசைக்க அவன் முயல்கிறான். பைபிள் ஒரு விஞ்ஞானப் புத்தகம் அல்ல; ஆனால் சரியான விஞ்ஞானம் அதற்கு ஒத்தேயிருக்கும். மனித அறிவு அழியும்; தேவ வசனமோ என்றும் நிற்கும் (1 பேது 1:24,25).

எங்கும் இளைஞரும் முதியோரும் ''ஒரே tension'' என்கின்றனர். வாழ்க்கை எளிமையாயிருந்த முற்காலத்தில் இதைக் கேள்விப்பட்டது யார்? தேவ வசனம் மட்டுமே அமைதி மற்றும் சமாதானம் நல்கும். ஏனெனில் வசனமே உண்மையுள்ளது, ஒழுக்கமுள்ளது, நீதியுள்ளது, கற்புள்ளது, அன்புள்ளது, நற்கீர்த்தியுள்ளது, புண்ணியமானது, புகழுடையது. நமது மனது அதைச் சிந்தித்துக்கொண்டேயிருக்கும் போதுதான் ''தேவ சமாதானம்'' நம்மோடிருக்கும்; ''சமாதானத்தின் தேவன்'' நம்மோடிருப்பார்! (பிலி 4:7-9).

வாழ்வின் எத்துறையிலும் பிரச்னைகளும் கவலைகளும் அத்து மீறிய வண்ணமிருக்கின்றன. நாளாக ஆக இருள்தான் அதிகரிக்கிறது. ''சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும்'' மாறுமுன்னே இப்படி! (அப் 2:20). நமது நோய்க்குத் திருப்பாடகன் தரும் கை மருந்து இதோ: ''உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன் ... நான் நாடோடியாய்த் தங்கும் வீட்டிலே உமது பிரமாணங்கள் எனக்குக் கீதங்களாயின'' (சங் 119:92,54).

வெள்ளம் வருகிறது, புயல் வீசுகிறது. ''அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக'' கடவுள் பூமியையும் வானத்தையும் இன்னும் ஒருதரம் அசைத்துக்கொண்டிருக்கிறார். வசனமாம் கற்பாறையில் நமது வாழ்வும் ஊழியமும் அடித்தளமிடப்படாவிடில் அழிவை அளவிடமுடியாது (மத் 7:24-27; எபி 12:25-27).

சர்ப்பமானது மண்ணுலகில் துர்வுபதேசங்களை வெள்ளமாய் ஊற்றிக்கொண்டேயிருக்கிறது. ''தேவ வசனத்தினாலும், ஜெபத்தி



னாலும்'' மட்டுமே எதிர்த்து வெல்ல முடியும் (1 தீமோ 4:1-5). மக்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விரும்பாது, சத்தியத்திற்குப் பதிலாகக் கதை விரும்பும் காலம் வந்துவிட்டது (2 தீமோ 4:1-4). நாமோ திருவசனத்தைப் பயிற்சித்துக்கொண்டே, பறைசாற்றிக் கொண்டே இருக்கவேண்டும்.

ஆன்மீகம், அரசியல், சமுதாயம், இப்படி எந்தத் துறையின் பிரச்னைக்கும் பதில் பைபிளில் உண்டு. பைபிள் பழைமையாய்ப் போவதில்லை. மனிதருக்குள் கிறிஸ்து எப்படியோ அப்படியே புத்தகங்களுக்குள் பைபிளும்! விவிலியமானது தேவனது புத்தகம் மட்டுமல்ல; அது புத்தகங்களுக்கெல்லாம் தேவனாம்!

**4. உங்கள் குடும்பத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.**

குடும்பம் தேவனது நித்திய எண்ணம். படைப்பின் அடிப்படைக் கூட்டே குடும்பம்தான். அதைச் சீரழிக்கச் சத்துரு தன்னாலியன்ற அத்தனையையும் செய்கிறான். குடும்பங்கள் பெருவாரியாக உடைந்துகொண்டிருக்கின்றன. திருமண உடன்பாடுகள் உருக்குலைகின்றன. கணவன் மனைவி ஒருவரோடொருவர் பொறுமையிழந்து, கசந்து கொள்கின்றனர். பிள்ளைகளுக்குப் பெற்றோர்மீது வெறுப்பு. இவையெல்லாம் முடிவுக்கு அடையாளங்கள் எனக் கீழ்வரும் பகுதிகள் அறிவிக்கின்றன —

''இதோ கர்த்தரின் பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன் நான் உங்களிடம் எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து உலகைச் சபித்துத் தண்டிக்காதபடி, அவன் பிதாக்களின் இருதயத்தைப் பிள்ளைகளிடமும், பிள்ளைகளின் இருதயத்தை அவர்கள் பிதாக்களிடமும் திருப்புவான்'' (மல் 4:5,6). பழைய ஏற்பாட்டில் இவ்விரு இறுதி வசனங்கள் ஆவியானவரின் இறுதிக்கால ஊழியத்தைக் குறிப்பிடுகின்றன. புதிய ஏற்பாட்டில் முன்னுரைக்கப்பட்டது: ''கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில் மனிதர் தற்பிரியராயும் ... தாய் தந்தையர்க்குக் கீழ்ப்படியாதவர்களாயும் ... இயல்பான அன்பில்லாதவர்களாயும் ... இருப்பார்கள்'' (2 தீமோ 3:1-3).

*குடும்பம் காக்கப்பட கீழுள்ள எளிய வழிமுறைகளைப் பின்பற்றுங்கள் —*

நிதானமாக ஒருவரோடொருவர் நேரம் செலவழித்துக் கணவனும் மனைவியும் அன்பிலும் கண்ணியத்திலும் நெடுகவே வளரவேண்டும். சேர்ந்து ஜெபியுங்கள், தியானியுங்கள், நன்மைகளை அனுபவியுங்கள். உண்மை, மன்னிப்பு, சகிப்பு இவையே அன்பின் அடையாளங்கள். 1 கொரிந்தியர் 13:4-7ஐ அடிக்கடி வாசித்துக் காரியங்களைச் சரிசெய்துகொள்ளுங்கள்.

பிள்ளைகளுக்குப் பெற்றோர் எஜமான்களாயல்ல, எடுத்துக்காட்டுகளாயிருக்கவேண்டும். பிள்ளைகளைப் பயமுறுத்தவோ, அளவுக்கு மீறி திருத்தவோ கூடாது. திருமறையின்படி, தந்தையர்தான் அதிகப் பொறுப்பெடுக்கவேண்டும் (எபே 6:4). இக்காலங்களில் பெற்றோர் பிள்ளைகளுக்குத் தங்களைக் கொடுப்பதைவிட மற்ற அத்தனையையும் கொடுத்துவிடுகின்றனர். இதுதான் சரிவுக்குக் காரணம்.

எதற்கும் குடும்ப ஜெபம் பலியாகக்கூடாது. தொலைக்காட்சிப் பெட்டியோ, குடும்ப ஜெப நேரத்தைக் கொள்ளையாடும் வேறு எந்த பொழுதுபோக்கோ அது தூக்கியெறியப்படவேண்டும். குடும்ப ஜெபமே குடும்ப ஜெயம்! இங்கிலாந்தின் அத்தனை இறையியல் நிபுணர்களிடமும் கற்றதைவிடத் தனது தாயிடமிருந்தே அதிகம் கற்றதாக ஜான் வெஸ்லி (1703-1791) சாட்சியிட்டார்.

பெற்றோராகிய நாம் இந்த இறுதிக்கால இறைவாக்கை நமது பிள்ளைகளுக்காக உரிமைபாராட்டுவோம்: ''கடைசி நாட்களில் நான் மனுவுடல்கொண்ட யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்'' (அப் 2:17).

மகிழ்ச்சியான குடும்பம் முன்னதாக அடைந்த பரலோகமாம்! இங்குச் சிலாக்கியமும் பொறுப்பும் சமநிலைப்படுத்தப்படவேண்டும்.



**5. ஒருவருக்கொருவர் ஆதரவாயிருங்கள்.**

''அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகரின் அன்பு தணிந்து போகும்'' (மத் 24:12).

நம்பிக்கையின்மை, ஒருமனமின்மை, ஏமாற்றுதல், பிரிந்துபோதல் இதுவே இன்று வாடிக்கை. உறவுகளின் ஆழத்தில் சுயநலமும் தந்திரமும்தான். நேர்மைக்குப் பதிலாக மாய்மாலம். வெளிப்படைக்குப் பதிலாக சதி. ஒருவரையொருவர் நம்புவதில்லை. எதிலும் சந்தேகம். இது உலகைப்பற்றிய விபரம் மட்டுமல்ல, சபையும் அப்படித்தான். இங்கு நாம் சபையைக் குறித்துப் பேசுகிறோம்.

சபையானது ஓர் இராஜ்யமாம். ''தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அந்த இராஜ்யம் நிலைநிற்கமாட்டாதே.'' சபையானது ஒரு வீடாம். ''தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே'' (மாற் 3:24,25). நாம் எப்படி? துண்டுபட்டும் வாழ்வுண்டோ?

''நீங்கள் கவனமாய் நடந்து ... **நாட்கள்** பொல்லாதவைகளானதால் ... தெய்வ பயத்தோடே **ஒருவருக்கொருவர்** கீழ்ப்படிந்திருங்கள்'' (எபே 5:15,16,21). ''ஒருவருக்கொருவர் விரோதமாய் முறையிடாதிருங்கள்; இதோ நியாயாதிபதி வாசற்படியில் நிற்கிறார்'' (யாக் 5:9). ''ஒருவரையொருவர் கவனித்து ... நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்லவேண்டும்'' (எபி 10:24,25).

வேறு வழியின்றி உலகம் சபையை நோக்கிப் பதிலுக்காக இன்று பார்த்துக்கொண்டிருக்கையில் ஆயிர வருட ஆட்சியைக் குறித்துப் பேசிப் பயனென்ன? மாளும் உலகில் துவளும் சபை என்று ஒருவர் திருச்சபையை விமர்சித்தார்! பூமிக்கு உப்பு நாம்தானே? ''உங்களுக்குள் உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானம் உள்ளவர்களாயுமிருங்கள்'' (மாற் 9:50).

உள்ளூர் விசுவாசிகளோடு அடிக்கடி கூடுங்கள். ஐக்கியம் உண்மையானதாயிருக்கட்டும். கரிசனையோடு ஒருவருக்காயொருவர்

ஜெபியுங்கள். உதட்டளவு பாசம் வேண்டாம். விசுவாசம் செயலாகட்டும். பிறர் பாரத்தைச் சுமந்திடுங்கள். மகிழ்வோரோடு மகிழுங்கள். அழுவோரோடு அழுங்கள். ஆன்மீக மற்றும் பொருளாதார ஆசிகளைப் பகிருங்கள். ஒருவரையொருவர் மன்னியுங்கள். புறங்கூறுதல் வேண்டாம். கதை திரித்தல் ஒழியட்டும். பிறர் குற்றங்களை வெளிப்படுத்தாதிருங்கள். நமது அன்பினால் உலகம் நம்மைக் கிறிஸ்தவரென அடையாளங்காணட்டும். *அன்பே பிரதானம்* எனப் பாடுவது நல்லது; அன்பே பிரயாசமாகவும் இருக்கவேண்டும். பிறர் குறைகளைச் சகியுங்கள். குறைவற்றோர் யார்? தலைமைப் பொறுப்பிலிருந்தால் உடன் பணியாளரை ஆட்டிப்படைக்காதீர்கள், ஆசீர்வதியுங்கள்.

''எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று ... எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்'' (1 பேது 4:7,8).

**6. உங்கள் மனதை மேலுலகில் வையுங்கள்.**

பூவுலகுக்குப் பயனில்லாது போகுமளவு பரலோகச் சிந்தையா, அல்லது பரலோகுக்குப் பயனில்லாது போகுமளவு பூவுலகச் சிந்தையா? நம்மைப் பொறுத்தவரை இரண்டாவதுதான் உண்மை.

பஞ்சத்தின் பரிதாபம் என முன்பு சொல்வதுண்டு. இப்போது அது பணத்தின் பரிதாபம் என்றாகிவிட்டது. செல்வந்தர் மகிழ்ச்சியாயில்லை. பணம் கடல்நீர் போன்றது. குடிக்கக் குடிக்கத் தாகம்தான். ஆனாலும் இந்தக் காற்றைப் பிடிக்க ஓடும் ஓட்டத்தை நிறுத்த மனிதருக்கு அறிவு வரவில்லை. ''போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்'' என்கிறது திருமறை (1 தீமோ 6:6). ''பணக்காரனாகவேண்டுமென்று முயற்சியாதே ... இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப் போல சிறகுகளைத் தனக்கு உண்டுபண்ணிக்கொண்டு ... பறந்து போகும்'' (நீதி 23:4,5).

இவ்வுலகில் சிக்கியவன் அடுத்தவுலகைக் குறித்துச் சிந்தியான். கர்த்தரின் வருகை நெருங்கிற்று. எதைத் திட்டமிட்டாலும் இதை



நினைவிற்கொள்வோம். இந்த நினைவில்லாதவர்கள் ''கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர் ... அவர்கள் பூவுலகுக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது. அங்கேயிருந்து ... இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்'' (பிலி 3:18-20).

தேவைக்கும் அதிகமாய்த் தேவன் நமக்குக் கொடுத்திருப்பாரானால், அது தேவையில் அங்கலாய்ப்போருக்குக் கொடுத்துவிடவே. ''நன்மை செய்யவும், நற்செயல்களில் நிறைவானவர்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும் ... வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல அடித்தளமாய் இச்செல்வத்தைச் சேர்த்து வைக்கவும்'' செல்வந்தருக்குக் ''கட்டளை'' வருகிறது (1 தீமோ 6:17-19). அந்திக் கிறிஸ்து வசம் விட்டுச் செல்வதற்காகவா நமது செல்வம்?

**7. சந்திக்கப்படாதோரைத் தீவிரமாய்ச் சந்தியுங்கள்.**

கிறிஸ்துவின் சுவிசேஷமே முடிவான பதில். சமாதானப் பிரபுவின் செய்தி எங்கும் பறைசாற்றப்பட வேண்டும். அது மார்க்கபக்தியான எருசலேமோ, அரசியலில் தேர்ந்த ரோம் நகரோ, அறிவுபடைத்த கொரிந்துவோ எங்கும் அப்போஸ்தலன் பவுல் துணிந்து திருவசனத்தைப் பிரசங்கித்தார். நாமும் நமது நாடெங்கும், நானிலமெங்கும் அப்படியே செய்யவேண்டும். எல்லாருக்கும் சுவிசேஷத்தைக் கேட்க வாய்ப்பு கொடுக்கவே கர்த்தரின் வருகை தாமதித்துக்கொண்டிருக்கிறது (2 பேது 3:9). உலகெங்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டபின் முடிவு வரும் (மத் 24:14).

எங்கிருந்தாலும், எப்பணி செய்தாலும் கிறிஸ்துவுக்காய்ச் சாட்சி பகருங்கள். மக்களின் தேவைகள் மற்றும் பிரச்னைகளில் ஈடுபடுங்கள். கிறிஸ்துவே பதில் என அறிவியுங்கள். நற்செய்தி கூறுவதில் வெட்கம் வேண்டாம். நற்செய்தி ஒன்றே வழி. பாவமும் பாரமும் நிறைந்த பாழுலகுக்குச் சிலுவையே தேவன் தந்த கூட்டல் அடையாளம். உலகம் முழுவதையும் கிறிஸ்துவிடம் கொண்டுவர முடியாமலிருக்கலாம்; ஆனால் உலகம் முழுவதுக்கும் கிறிஸ்துவைக் கொண்டுச் செல்லலாமே!

நற்செய்தி ஊழியங்களிலும், மிஷனரிப் பணிகளிலும் தீவிர ஈடுபாடு கொள்ளுங்கள். உங்கள் ஜெபத்தால் இவைகளைத் தாங்குங்கள். தாராளமாய்ப் பொருளுதவி செய்யுங்கள். இதற்குமேல் முடியாது எனுமளவு செய்துவிடுங்கள். உங்கள் வாழ்வு முழுவதையுமே மிஷனரிப்பணியில் ஊற்றிவிடுவது குறித்தும் சிந்தியுங்கள். ''எங்கு, எங்ஙனம் வாழ்கிறேன் என்பது எனக்குக் கவலையில்லை; ஆத்துமாக்களை ஆதாயம்பண்ணினால் அதுவே போதும்'' என்று மொழிந்தார் டேவிட் பிரெய்னார்டு (1718-1747). சமுதாயம் கெட்டழிகிறது; நாம்தான் உப்பு. உலகம் இருளடைகிறது; நாம்தான் வெளிச்சம் (மத் 5:13,14). நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்!

■

*காலம் கடந்திடும் முன்னர் கருத்துக் கொள்வார் வாருமே,*
*ஞாலத்தில் இயேசுவின் நாமம் எடுத்துச் செல்லச் சேருமே;*
*சுத்தக்கரத்தை உயர்த்திப் பரிசுத்தர் யாரும் சேருமே,*
*பாவத்தில் சாகும் ஜனத்தைத் தடுத்து நிறுத்தக் கூடுமே — இன்றே*

*சீஷர்கள் யாவரும் ஒன்றாய் ஜோதியாய்த் திகழ்ந்திடுவார்,*
*இரத்த சாட்சிகளின் கூட்டம் வெற்றி முழக்கம் செய்யும்;*
*ஜெபித்தோர், சிரத்தை எடுத்தோர், ஆனந்தப் பாடல் செய்குவார்,*
*இராஜாதி இராஜன் இயேசுவே நீதியாய் அரசாளுவார் — இன்றே*

*நீ வாழும் இப்பூமி நாசம் ஆகும் காலம் வருதே,*
*உலகின் கடைசிச் சந்ததி நீயாக இருக்கலாமே;*
*எழும்பு, எழும்பு, தெபொராள்; பாராக்கே, விழித்துவிடு,*
*தேவைக்கு ஏற்ற பெலனை இன்றைக்கே பெற்றெழும்பு — இன்றே*



# 28

# விசுவாசிகளுக்குத் தோல்வியே வராதா?

## Can believers ever have failures?

*''கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணுகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்'' (2 கொரி 2:14).*

*''இவை எல்லாவற்றிலும் நாம் நம்மில் அன்புகூருகிறவரால் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்'' (ரோ 8:37).*

இவை போன்ற திருவசனங்களை மேலெழுந்தவாறு வாசிப்பது சராசரியான கிறிஸ்தவன் எவனையும் தன் வாழ்வில் தோல்வி என்பதே வராது என்று எண்ணச் செய்யும். தமது பிள்ளைகள் தோல்வியிலேயே வாழவேண்டுமென்பது கடவுளின் சித்தமில்லை எனினும் அவர்களது நலனுக்காகவே அவர்கள் வாழ்வில் அவர் தோல்விகளை அனுமதிக்கிறார். தோல்வி எனும் பாடசாலைக்கு எவரும் தப்பியதில்லை என்பதே திருமறையில் வர்ணிக்கப்பட்டுள்ள தேவ மனிதர் யாவரது வாழ்க்கைச் சரிதைகளிலும் தெளிவு. விசுவாசிகளின் தந்தை எனப்படும் ஆபிரகாம், பன்னிரு அப்போஸ்தலரின் முக்கிய தலைவரான பேதுரு, சபைச் சத்தியங்களின் பிரதான உபதேசியாகிய பவுல், இப்படி யாரென்றாலும் சரி, அவர்கள் தோல்விகளைத் தழுவாமலில்லை. எனது சொந்த வாழ்விலும் பணியிலும் வெற்றிகள் ஏராளம், தோல்விகள் குறைவு. ஆனால் கிறிஸ்துவோடு நான் நடந்துள்ள 56 ஆண்டுகளில் (2018) எனது வெற்றிகளைவிடத் தோல்விகளிலிருந்தே அதிகம் கற்றிருக்கிறேனென்று உண்மையாய்ச் சொல்ல முடியும். இதைப் பகுத்துப் பார்க்குங்கால் கடவுள் நமது வாழ்வில் தோல்விகளை அனுமதிப்பதற்குக் குறைந்தது ஐந்து காரணங்களாவது எனக்குத் தோன்றுகின்றன —

### 1. நம்மை இன்னும் தாழ்மைப்படுத்த

''அழிவுக்கு முந்தியது அகந்தை; வீழ்ச்சிக்கு முந்தியது மனமேட்டிமை'' (நீதி 16:18). நமக்கு எல்லாம் நலமாகவும் வெற்றியா

கவும் நடக்கும்போது பெருமையால் நிறைவது இயல்பு. கடவுளின் கிருபை மனிதனின் பெருமைக்கு எதிரானது (1 பேது 5:5ஆ). தமது கிருபையை நமக்கு அருளாது இருக்கமுடியாத அளவு அவர் கிருபையுள்ளவர். நம்மைப் பணியச் செய்து அவர்முன் தாழ்மை யுடன் நடக்கவைக்கத் தோல்வி ஒன்றுதான் வழியென்றால் அதை நமது வாழ்வில் அனுமதிக்க அவர் தயங்கமாட்டார். தேவ கிரு பையை இழப்பதைவிட விழுந்து மறுபடி எழுந்திருப்பது மேல்.

### 2. நம்மை இன்னும் ஞானமுள்ளவர்களாக்க

நமது வாழ்க்கையில் தோல்வியென்பதே இல்லாதிருக்குமானால் நமது கில்லாடித்தனமும் அறிவுமே நமது வெற்றிகளுக்குக் காரணம் என்று எண்ணத் துவங்கிவிடுகிறோம். ''தன் பார்வைக்கு ஞானியா யிருப்பவனைக் கண்டாயானால், அவனைவிட மூடனைக் குறித்து அதிக நம்பிக்கையாயிருக்கலாம்'' என்கிறது திருமறை (நீதி 26:12). ''உங்களையே புத்திமான்களென்று எண்ணாதிருங்கள்'' என்றும் அது அறிவுறுத்துகிறது (ரோ 12:16). தோல்விகள் நம்மை நமது வழிகளை ஆராய்ந்துபார்க்கச் செய்து, நாம் அறியாததைவிட நாம் அறிந்தது சொற்பம் என்று நம்மை அறியச் செய்கின்றன.

### 3. நம்மை இன்னும் கருணையுள்ளவர்களாக்க

பிறர்மீது கொடூரமாகவும் தங்கள்மீது கனிவாகவும் நடந்துகொள் பவரைத் தேவன் கண்டிப்பாய் நடத்துகிறார். ''சகோதரரே, ஒருவன் ஏதேனும் குற்றத்தில் அகப்பட்டுக்கொண்டால், ஆவிக்குரியவர் களாகிய நீங்கள் கனிந்த உள்ளத்தோடு அவனைத் திருத்துங்கள்; நீங்களும் சோதனைக்கு உள்ளாகாதவாறு கவனமாயிருங்கள்'' என்று திருமறை நம்மை எச்சரிக்கிறது (கலா 6:1). ஒருவிதத்தில் சொன் னால் பேதுரு தவறியதாலேயே தனது சகோதரருக்கு ஆசீர்வாத மாயிருக்கும் தகுதி பெற்றார் (லூக் 22:32). சர்வ வல்லவர் சகல ''ஆறுதலின்'' தேவன்; அவர் ''இரக்கங்களின்'' பிதா. நமது சோத னைகளிலும் உபத்திரவங்களிலும் அவர் நம்மைக் கனிவாய் நடத்து கிறார். அவரது கனிவிரக்கத்தை நாம் ருசிபார்க்கும்போதுதான் நம்மைப்போல் தத்தளிக்கும் உடன் சகோதர சகோதரிகளை எப்படி நடத்தவேண்டுமென்று நமக்குப் புரிகிறது (2 கொரி 1:3,4). இயேசு



தாமே எல்லாப் பகுதிகளிலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டதால் நமது பலக்குறைவுகளைக் குறித்து அவர் மனதுருக்கத்துடன் ''பரித பிக்கிறார்'' (எபி 4:15).

### 4. நம்மை இன்னும் பரிசுத்தப்படுத்த

''நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்'' (நீதி 24:16அ). அவன் நீதிமானாயிருப்பதால் ''ஏன் விழுந்தேன்?'' என்று ஒவ்வொரு முறையும் அலசிப்பார்த்து அதற்கான காரணங் களைத் தவிர்க்கிறான். இப்படிச் செய்வதால் நடைமுறை வாழ்வில் அதிகமதிகமாய்ப் புனிதமடைகிறான். உண்மையான ஆன்மீகத் துக்க மானது நம்மிலே ''கவனத்தையும், வெறுப்பையும், பயத்தையும், ஆவலையும், பக்தி வைராக்கியத்தையும், கண்டிப்பையும்'' உரு வாக்குகிறது (2 கொரி 7:10,11). தோல்விகளிலிருந்து நாம் கற்கும் பாடங்கள் எதிரியின் தாக்குதல்களுக்கு எதிராக விழிப்பாயிருக்க நமக்குப் போதிக்கின்றன.

### 5. நம்மை இன்னும் சகச்சார்புள்ளவர்களாக்க

நாம் தனியாகவே எல்லாவற்றையும் சாதித்துவிடமுடியாது; பிறரது உதவி நமக்குத் தேவை என்பதைப் பயங்கரமான தோல்வி களைச் சந்திக்கும்வரை நாம் உணர்வதில்லை. கிறிஸ்துவின் உட லில் எந்த உறுப்பும் தனியாகத் தன்னில்தானே நிறைவானதல்ல. ஒவ்வொரு உறுப்பிற்கும் பிற உறுப்புகளின் உதவி தேவை (எபே 4:15,16). சோதனையின் வேளையில் இயேசு தமது சீடரின் சக வாசத்தை நாடினார். பேதுருவோ அனைவரும் இயேசுவை விட் டோடினாலும் தான் மட்டும் அவரை விடுவதேயில்லையென பெரு மையடித்துக்கொண்டார். சோதனையில் வெற்றியாய் வெளிவந்தது யாரென நாமறிவோம்!

நண்பரே, வாழ்க்கையின் தோல்வி எதுவும் உங்களைத் தீர்ப்பு ணர்வுக்குள் (condemnation) நடத்தவேண்டாம் (ரோ 8:1). தோல்வி என்பது முடிவானதல்ல. தோல்வியானது சுமக்க முடியாத பளு வாகலாம்; அல்லது உங்களுக்குப் பறக்க செட்டைகளைத் தரலாம். ஹென்றி போர்டு என்பவரின் வார்த்தைகளில் சொன்னால், ''கூடு தல் தெளிவோடு திரும்பவும் துவங்குவதற்குத் தோல்வி ஒரு வாய்ப் பேயன்றி வேறல்ல!''

# 29

# தனித்தே போராடாதிருங்கள்!

## Do not fight alone!

சாத்தான் ஒரு சேனையாயிருக்கிறான். அவனது சேவகர்கள்தான் எண்ணிலடங்கா பொல்லாத ஆவிகள். நாம் அவனுடன் தனித்துப் போராடினால் தோல்வியையே தழுவுவோம். தனது அபூர்வ ஞானத்துடன் சாலொமோன் அரசன் இவ்விதம் எழுதியுள்ளார்: ''ஒருவராயிருப்பதைவிட இருவர் கூடியிருப்பது மேல்; அவர்களது முயற்சியினால் அவர்களுக்கு நல்ல பலன் கிடைக்கும் ... ஒருவரை யாராவது மேற்கொள்ள வந்தால், இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரி நூல் எளிதில் அறுந்துபோகாது'' (பிர 4:9,12). இச்சத்தியத்தை வலியுறுத்தும் திருமறைப் பகுதிகள் நிறையவுண்டு —

■ யேகோவா தேவனுக்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு பெயர் ''சேனைகளின் கர்த்தர்'' என்பது. ''சேனைகள்'' என்று பன்மையிலிருப்பதைக் கவனியுங்கள். இறைமக்கள் அச்சுறுத்தப்பட்டபோதெல்லாம், தமது தீர்க்கர்கள் மூலம் தேவன் தமது பெயராகிய ''சேனைகளின் கர்த்தர்'' என்பதை நினைவுபடுத்தி வந்திருக்கிறார். இப்பெயர் எரேமியாவில் 88 தடவையும், சகரியாவில் 14 தடவையும் சொல்லப்பட்டுள்ளது. ஏவாளை ஆதாமுக்குத் தேவன் எப்பொழுது, எதற்காகக் கொடுத்தாரென்று உங்களுக்குத் தெரியுமா? அறிவு மரத்திலிருந்து பழம் பறித்துச் சாப்பிடக்கூடாதென்ற கட்டளையை அவனுக்குக் கொடுத்தவுடன் (ஆதி 2:16-18). அவர்களைச் சாத்தான் எவ்விதம் சோதிப்பானென்று தேவன் முன்னறிந்திருந்தார். சோதனைக்காரனை இருவரும் ஒரு குழுவாக எதிர்கொள்ள முடியுமென்றே அங்கு ஏவாள் இருந்தாள். ஆதாம் விபசாரத்தில் விழுந்துவிடக்கூடாது என்பது ஏவாள் கொடுக்கப்பட்டதின் நோக்கமல்ல. அங்குதான் வேறு பெண்ணே கிடையாதே!



■ எமோரியரின் ஐந்து அரசர்களுடன் யோசுவா தொடுத்த யுத்தத்திலும் இச்சத்தியம் விளங்குகிறது (யோசு 10:5). இந்த வசனப்பகுதியில் ''யோசுவாவும் ***அவனோடு*** மக்களும்'' என்ற சொற்றொடர் ஆறு முறை காணப்படுகிறது (வச 7,29,31,34,36,38). இச்சரிதையின் உச்சக்கட்ட முடிவைக் கவனியுங்கள்: ''நாடு முழுவதையும் யோசுவா பிடித்தான்'' (வச 40-42). ஆன்மீகப் போராட்டத்தில் ஐக்கியமாய்ச் செயல்படும்போது வெளிப்படும் பலத்திற்கு அளவேயில்லை.

■ லேவியராகமம் 26:8இல் பரவசமூட்டும் ஒரு வாக்கு: ''உங்களில் ஐந்து பேர் நூறு பேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறு பேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்!'' ஐக்கியம் அல்லது கூட்டு முயற்சி என்று வரும்போது பெருக்கல் வாய்ப்பாடு தோற்றுவிடும்! எவ்வளவு சீக்கிரம் இச்சத்தியத்தை நாம் கற்றுக்கொள்கிறோமோ அவ்வளவு வெற்றிகளை நமது வாழ்விலும் பணியிலும் நாம் காண்போம்.

■ சீரியரோடும் அம்மோனியரோடும் தாவீது பண்ணிய யுத்தம் நமக்குத் தெரியும். இவ்விரு சேனைகளுக்கு எதிராய்ப் போராட யோவாபையும் சிறந்த சேவகர்களையும் தாவீது அனுப்பிவைத்தார். யுத்த வீரரில் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு பங்கைச் சீரியருக்கு எதிராய் யோவாப் நிறுத்தினார்; மீதியுள்ளோரை அம்மோனியருக்கு எதிராகத் தனது சகோதரன் அபிசாயிடம் ஒப்புவித்தார். அபிசாயிடம் யோவாப் சொன்னது ஆன்மீகப் போராட்டத்தில் பயனுள்ளதொரு படிப்பினையை நமக்குத் தருகிறது: ''என்னைவிடச் சீரியர் பலங்கொண்டால், நீ எனக்குத் துணை நில்; உன்னைவிட அம்மோனியர் பலங்கொண்டால் நான் உனக்குத் துணை நிற்பேன். தைரியமாயிரு; ***நாம் நமது*** மக்களுக்காகவும் ***நமது*** தேவனுடைய நகர்களுக்காகவும் திடன்கொண்டிருப்போம்'' (1 நாளா 19:8-13). யோவாபுக்கும் அபிசாயிக்கும் முன்பாக அம்மோனியரும் சீரியரும் முறிந்தோடினர்.

■ தமது 70 சீடரை இயேசு இரண்டிரண்டு பேராக அனுப்பியது காரணமில்லாமல் அல்ல. இராஜ்யத்தின் செய்தியை அறிவிக்க அவர்களை அனுப்பினார் (லூக் 10:1). அது வெறுமனே நற்செய்

தியைப் பறைசாற்றுவதற்கும் கூடுதலானது. அதுவே ஒரு போராட்டம்தான். அவர்களை அனுப்பிவிட்டு, இயேசு வானிலிருந்து மின்னல்போலச் சாத்தான் விழக் கண்டார் (வச 18). நற்செய்தியறிவிப்புப் பணிகளில் அளவுக்குமீறித் தனித்தியங்குவதே அறுவடைக் குறைவுக்கு முக்கிய காரணம். இறைப்பணி என்றாலே அது குழுப் பணியாகத்தானிருக்கவேண்டும்.

■ தமது சீடரின் பலக்குறைவு இயேசுவுக்கு நன்றாகவே தெரியும். ஆனாலும் அது ''அந்தகார அதிகாரத்தின் வேளை'' என்பதால் அவர்கள் தம்முடன் இருக்கவேண்டுமென்று கெத்செமனே தோட்டத்தில் விரும்பினார் (லூக் 22:53). ஜெபத்தில் அவரோடு அவர்கள் விழித்திருக்கத் தவறினாலும், தம்மோடு இருந்தாலே போதும் என்று விரும்பினார். அவர்களிடம் அவர் சொன்ன வார்த்தைகள்: ''எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னுடன் நிலைத்திருந்தவர்கள் நீங்களே. ஆகையால் என் பிதா எனக்கு ஓர் இராஜ்யத்தை ஏற்படுத்தியது போல, நானும் ஏற்படுத்துகிறேன். நீங்கள் என் இராஜ்யத்திலே என் பந்தியில் விருந்துண்டு, இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்களையும் நியாயந்தீர்ப்பவர்களாய்ச் சிங்காசனங்கள்மீது உட்காருவீர்கள்'' (வச 28-30). இராஜ்யம், விருந்து, சிங்காசனங்கள்!

■ திருச்சபையைக் கட்டுதலும், எதிரியோடு போராட்டமும் இணைந்தே செல்லும். ஆனால் பாதாளத்தின் வாசல்கள் இறைமக்களின் கூட்டாகிய ''சபையை'' மேற்கொள்ள முடியாது (மத் 16:18). தனித்து அலையும் ஆடுகள் எளிதில் ஓநாய்களுக்கு இரையாகும். ''ஒருவருக்கொருவர்'' என்ற சொல்லுடன் தொடங்கும் புதிய ஏற்பாட்டு அறிவுரைகள் ஏராளம். எடுத்துக்காட்டாக, ''ஒருவரையொருவர் தேற்றுங்கள்'' (1 தெச 5:11); ''ஒருவருக்காயொருவர் ஜெபம் பண்ணுங்கள்'' (யாக் 5:16). நமது எதிரி நம்மெல்லாருக்கும் பொது வானவனானதால் நாம் ''உடன் சேவகர்'' என்றழைக்கப்படுகிறோம் (பிலி 2:25). எனவேதான், ''தீமையினின்று (அல்லது தீயவனிடமிருந்து) ***எங்களை*** இரட்சித்துக்கொள்ளும்'' என்று ஜெபிக்க இயேசு நமக்குக் கற்பித்துள்ளார் (மத் 6:13).

திருச்சபைதான் கிறிஸ்துவின் திருவுடல். ''ஓர் உறுப்பு வேதனைப்பட்டால் எல்லா உறுப்புகளும் அதனுடன் சேர்ந்து வேதனைப்



படும்'' (1 கொரி 12:26). எடுத்துக்காட்டாக, ஒரு விரலில் புண் வந்துவிட்டால் அது முழுவுடலையும் பாதிக்கும். நமது வாழ்வில் கொடிய போராட்டங்கள் வழியே செல்லும்போது பிற சகோதர சகோதரிகளின் சகவாசத்தை நாடவேண்டும். அப்படியே, எவராவது பாடுபடுவதைக் கண்டால் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்காது அவர்களது பாடுகளில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும். யோர்தானுக்கு இப்பக்கத்திலுள்ள மேய்ச்சல் நிலப்பகுதியிலேயே தங்களை விட்டுவிடவேண்டும்; யோர்தானைக் கடக்க அழைத்துச் செல்லவேண்டாம் என்று ரூபன் புத்திரரும் காத் புத்திரரும் மோசேயிடம் வேண்டினர். சொகுசு வட்டத்திற்குள்ளேயே இருந்துவிட வேண்டுமென்ற அவர்களது மனப்பான்மையை அவர் கடிந்து கொண்டார். அவர்களிடம் அவர் சவால் விட்டுக் கேட்டது: ''உங்கள் சகோதரர் யுத்தத்திற்குப் போகையில் நீங்கள் இங்கே (சும்மா) இருந்துவிடுவீர்களோ?'' (எண் 32:6,23).

சாத்தானும் அவனது இருட்டரசும் பிரிந்திருக்கவில்லை. பிரிவினையில்லாத சபைதான் அவனைத் தோற்கடிக்க முடியும் (மத் 12:25,26). ஆன்மீகப் போராட்டம் குறித்த புதிய ஏற்பாட்டு வசனப் பகுதியாகிய எபேசியர் 6:10-20 ஒரு தனி நபருக்கல்ல, ஒரு கூட்டத்தினருக்கே எழுதப்பட்டது — ''கடைசியாக என் ***சகோதரரே,*** கர்த்தரிலும் அவர் சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்'' (வச 10). எதிரியோடு போராடுவதற்கு விசுவாசிகளை மேய்ப்பர்களும் போதகர்களும் நடைமுறையில் பழக்குவிக்கவேண்டும். இல்லையேல் இஸ்ரவேலில் ஒரு காலத்திலிருந்த அவல நிலையே திரும்ப வரும். ''யுத்த நாள் வந்தபோது, சவுலுக்கும் அவன் குமாரன் யோனத்தானுக்கும் தவிர, சவுலோடும் யோனத்தானோடும் இருந்த மக்களில் ஒருவர் கையிலும் பட்டயமும் ஈட்டியும் இல்லாதிருந்தன'' (1 சாமு 13:22). தெபொராளுடனும் பாராக்குடனும் சேர்ந்து நாம் புலம்பவேண்டியது: ''யுத்தம் வாசல்வரை வந்தது; இஸ்ரவேலில் நாற்பதினாயிரம் பேருக்குள் கேடகமும் ஈட்டியும் காணப்பட்டதுண்டோ?'' (நியா 5:8).

முக்கியமற்றவர்களாய்த் தோன்றும் சகோதர சகோதரிகளை அலட்சியப்படுத்தாதிருங்கள். பிரச்னைகள் வழியாய் நாம் செல்லும்போது

இப்படிப்பட்டவர்கள்தான் நமக்கு பேருதவியாயிருப்பார்களென்பது பல சமயங்களில் நமக்குத் தெரிவதில்லை. காத் அரசனுக்குப் பயந்து அதுல்லாம் எனும் குகைக்குள் தாவீது ஒளிந்திருந்தார் (1 சாமு 22:1). அவருக்கு ஆதரவாக அவரிடம் சேர்ந்துகொண்டோர் யாரென்று பாருங்கள்: ''ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், திருப்தியற்றவர்கள் யாவரும் அவரோடு கூடிக்கொண்டார்கள் ... அவர்கள் ஏறத்தாழ 400 பேர்!'' (வச 2)

■

*எக்காளம் ஊதிடுவோம்,*
*எரிகோவைத் தகர்த்திடுவோம்,*
*கர்த்தரின் நாமம் உயர்த்திடுவோம்,*
*கல்வாரிக் கொடியேற்றுவோம்.*

*கிதியோன்களே, புறப்படுங்கள்,*
*எதிரிகளைத் துரத்திடுங்கள்,*
*தீபங்களை ஏற்றிடுங்கள் — தெருத்*
*தெருவாய் நுழைந்திடுங்கள்.*

*சிம்சோன்களே, எழும்பிடுங்கள்,*
*வல்லமையால் நிரம்பிடுங்கள்,*
*சீறிவரும் சிங்கங்களை*
*சிறைப்பிடித்துக் கிழித்திடுங்கள்.*

*தெபொராள்களே, விழித்திடுங்கள்,*
*உபவாசித்து ஜெபித்திடுங்கள்;*
*எஸ்தர்களே, கூடிடுங்கள்,*
*இரவுகளைப் பகலாக்குங்கள்.*

— தந்தை S.J. பெர்க்மான்ஸ்



# 30

# அபாய அறிவிப்புகள்

## Danger Signals

**மனிதரைக் குறித்து எச்சரிக்கை!**

□ ''ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன். ஆகையால் பாம்புகளைப்போல சுயமதியுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்'' (மத் 10:16).

□ ''உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிற தற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால் உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்தி லிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது'' (யோ 15:18,19).

□ ''உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்கு எதிரியாகிறான்'' (யாக் 4:4).

□ ''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளு டைய வழியில் நில்லாமலும், பகடிபண்ணுவோர் உட்காரும் இடத் தில் உட்காராமலும் ... இருக்கிற மனிதன் பாக்கியவான்'' (சங் 1:1,2).

□ ''நீங்கள் அவனவன் தன் தன் சிநேகிதனுக்கு எச்சரிக்கையா யிருங்கள்'' (எரே 9:4).

□ ''நாசியிலே சுவாசமுள்ள மனிதனை நம்புவதை விட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்?'' (ஏசா 2:22).

□ ''இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை. மனிதரது உள்ளத்திலிருப்பதை அவர் அறிந்தி ருந்தபடியால், மனிதரைக் குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்க வேண்டியதாயிருக்கவில்லை'' (யோ 2:24,25).

**உங்கள் இருதயத்துக்கு எச்சரிக்கை!**

□ ''எல்லாவற்றையும்விட இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியக்கூடியவன் யார்? கர்த்தராகிய நானே இருதயத்தை ஆராய்கிறவர்'' (எரே 17:9,10).
□ ''மனிதருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், பொறாமையும், பழிப்புரையும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டுவரும். பொல்லாதவையாகிய இவையெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனிதனைத் தீட்டுப்படுத்தும்'' (மாற் 7:21-23).
□ ''எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதிலிருந்து ஜீவ ஊற்று புறப்படும்'' (நீதி 4:23).
□ ''நம்முடைய இருதயமே நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருந்தால், நாம் தேவனிடத்தில் தைரியம் கொண்டிருக்கலாம்'' (1 யோ 3:20,21).

**மாய்மாலத்தைக் குறித்து எச்சரிக்கை!**

□ ''நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்'' (லூக் 12:1).
□ ''மாயக்காரரே, உங்களுக்கு ஐயோ! ... வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள். அவை வெளியே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் எல்லாவித அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். அப்படியே நீதிமான்கள் என்று வெளியே காணப்படுகிறீர்கள்; உள்ளத்திலோ மாயத்தினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கிறீர்கள்'' (மத் 23:13-28).
□ ''நீண்ட அங்கிகளை அணிந்துகொண்டு திரியவும், சந்தை வெளிகளில் வந்தனங்களை அடையவும், ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களில் உட்காரவும், விருந்துகளில் முதன்மையான இடங்களில் இருக்கவும் விரும்பி, விதவைகளின் வீடுகளைப்



பிடுங்கி, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் கடுமையான தீர்ப்பு அடைவார்கள்'' (லூக் 20:46,47).
□ ''மனிதன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'' (1 சாமு 16:7).
□ ''மனிதருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது'' (லூக் 16:15).

**பின்மாற்றத்தைக் குறித்து எச்சரிக்கை!**

□ ''உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு ... நீ புசித்துத் திருப்தியாகி, உனக்கு உண்டானவையெல்லாம் பெருகும்போதும், உன் இருதயம் மேட்டிமையாகி ... என் சாமர்த்தியமும் என் கைப்பலமும் இந்தச் செல்வத்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிரு'' (உபா 8:11-17).
□ ''சகோதரரே, உயிருள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்'' (எபி 3:12).



□ ''உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு'' (லூக் 11:35).
□ ''சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவம் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களுக்காய்ச் செலுத்தக்கூடிய வேறொரு பலி இனி இராது ... தேவனுடைய குமாரனைக்

காலின் கீழ் மிதித்துத் தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தம் என்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிய தண்டனையைப் பெறவேண்டியவன் என்பதை யோசித்துப்பாருங்கள்'' (எபி 10:26-29).

□ ''நீ குளிராக அல்லது அனலாக இல்லாது வெதுவெதுப்பாயிருப்பதால் உன்னை வாந்திபண்ணிப்போடுவேன்.'' ''ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து மனந்திரும்பி, துவக்கத்தில் செய்த செயல்களைச் செய்வாயாக'' (வெளி 3:16; 2:5).

### பொருளாசையைக் குறித்து எச்சரிக்கை!

□ ''பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு நிறைய செல்வம் இருந்தாலும் அது அவனுக்கு வாழ்வு அல்ல ... உங்களுக்கு உள்ளவைகளை விற்றுப் பிச்சை கொடுங்கள். பழமையாய்ப் போகாத பணப்பைகளையும் குறையாத செல்வத்தையும் பரலோகத்திலே உங்களுக்குச் சம்பாதித்து வையுங்கள். அங்கே திருடன் அணுகுகிறதுமில்லை, பூச்சி கெடுக்கிறதுமில்லை; உங்கள் செல்வம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்'' (லூக் 12:15-34).

□ ''போதுமென்கிற மனதுடனேகூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம் ... பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை நாடி, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள் ... இவைகளை விட்டோடு'' (1 தீமோ 6:6-11).

□ ''விக்கிரகாராதனையான பொருளாசை'' (கொலோ 3:5).

□ ''பொருளாசையுள்ள எல்லாருடைய வழியும் இதுவே; இது தன்னையுடையவர்களின் உயிரை வாங்கும்'' (நீதி 1:19).

□ ''பொருளாசையை வெறுக்கிறவன் நீண்ட காலம் வாழுவான்'' (நீதி 28:16).

### பைபிளைப் புரட்டுவது குறித்து எச்சரிக்கை!

□ ''நமக்குப் பிரியமான சகோதரனாகிய பவுலும் தனக்கு அருளப்பட்ட ஞானத்தினாலே இப்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்.



அவன் சொன்னவற்றில் சில காரியங்கள் புரிவதற்குக் கடினமாயிருக்கின்றன; கல்லாதவர்களும் உறுதியில்லாதவர்களும் மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறதுபோலத் தங்களுக்குக் கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள். ஆதலால் பிரியமானவர்களே, அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுக்கப்பட்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' (2 பேது 3:15-17).

□ ''போலியான ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' (கொலோ 2:8).

□ ''உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் எல்லாவற்றையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல; அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக'' (1 யோ 2:26,27).

□ ''மறைவானவை நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவை; வெளிப்படுத்தப்பட்டவையோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவை'' (உபா 29:29).

### கள்ளத் தீர்க்கர்கள், கள்ளப் போதகர்களுக்கு எச்சரிக்கை!

□ ''எங்களை விரோதிக்க வாய்ப்பு தேடுகிறவர்களுக்குச் வாய்ப்பு கிடையாதபடி, தங்களைக் குறித்துப் பெருமையடிக்கும் காரியத்தில் அவர்கள் எங்களைப்போலக் காணப்படும்படி, நான் செய்வதையே இன்னும் செய்வேன். அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள் ... அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேடத்தைப் போட்டுக்கொள்வானே'' (2 கொரி 11:12-14).

□ ''கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய

கனிகளினாலேயே அவர்களை அறிவீர்கள்; ... அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம் அல்லவா? ... அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்கு சொல்லுவேன்'' (மத் 7:15-23).

□ ''கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்படி அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். நீங்களோ எச்சரிக்கையாயிருங்கள்'' (மாற் 13:22,23).

□ ''உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப் பண்ணுவார்கள்'' (2 பேது 2:1).

□ ''அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ளச் சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையுமே உங்களுக்குத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள்'' (எரே 14:14).

**நாய்களுக்கு எச்சரிக்கை!**

(அதாவது, சடங்காச்சாரப் பிரமாணங்களுக்குத் திரும்புகிறவர்கள்)

□ ''நாயானது தான் கக்கினதைத் தின்னத் திரும்பினது'' (2 பேது 2:22). ''நாய்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். பொல்லாத வேலையாட்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள். சுன்னத்துக்காரருக்கு எச்சரிக்கையாயிருங்கள்'' (பிலி 3:2).

□ ''நான் இடித்துப்போட்டவைகளையே மறுபடியும் கட்டினால் பிரமாணத்தை மீறுகிறவனென்று காணப்படுவேன்'' (கலா 2:18).

□ ''ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங் களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். திரு மணம் செய்யாதிருக்கவும், விசுவாசிகளும், சத்தியத்தை அறிந்த வர்களும் நன்றியுணர்வோடு அநுபவிக்கும்படி தேவன் படைத்த உணவுப் பொருட்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள்'' (1 தீமோ 4:1-3).



□ ''உண்பதையும் குடிப்பதையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வு நாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக'' (கொலோ 2:16).

□ ''ஆவியினாலே ஆரம்பம்பண்ணின நீங்கள் இப்பொழுது மாம்சத்தினாலே முடிவு பெறப்போகிறீர்களோ? நீங்கள் இத்தனை புத்தியீனரா?'' (கலா 3:3).

□ ''நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாகப் பிரி வினை உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகுங்கள்'' (ரோ 16:17).

**முன்னெச்சரிப்பு முழுப் பாதுகாப்பு!**

''பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக் கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுக்கப் பட்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச் சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங் கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டா வதாக. ஆமென்'' (2 பேது 3:17,18).



## பகுதி 2

# உபதேசமும் ஊழியமும்

# Christian Doctrine & Ministry



**31**

# வஞ்சிக்கப்படக்கூடிய பகுதிகள்

## Areas of Deception

ஒலிவ மலையில் இயேசு உட்கார்ந்திருந்தபோது அவரது சீடர் அவரிடம் தனித்து வந்து, ''உமது வருகைக்கும் உலகின் முடிவுக்கும் அடையாளம் என்ன?'' என்று வினவினார்கள் (மத் 24:3). அடையாளங்களை வரிசைப்படுத்துமுன் அவர் அவர்களுக்குக் கொடுத்த முதல் எச்சரிப்பு ''வஞ்சகம்'' என்பதைப்பற்றியே. அவர் கொடுத்த பதிலின் முதல் வரி: ''ஒருவனும் உங்களை ***வஞ்சியாதபடி*** எச்சரிக்கையாயிருங்கள்'' (வச 4). இவர்கள்தான் இயேசுவின் முதல் வரிசைச் சீடர்கள். அவர்களே வஞ்சிக்கப்படக்கூடுமானால், நாம் எவ்வளவு விழிப்பாயிருக்கவேண்டும்! இயேசுவானவர் மட்டுமல்ல, ஆவியானவரும் வஞ்சகத்தைக் குறித்து ''வெளிப்படையாய்'' எச்சரித்துள்ளார்: 1 தீமோ 4:1, ''ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களில் சிலர் ***வஞ்சிக்கும்*** ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்.''

சபைகளைக் குறித்துப் பவுலுக்கிருந்த கரிசனையும் கவலையும் அவர்கள் வஞ்சிக்கப்படக்கூடாது என்பதுதான். எடுத்துக்காட்டாக, அவர் கொரிந்தியருக்கு எழுதியதைப் பாருங்கள்: ''சர்ப்பமானது தனது தந்திரத்தினால் ஏவாளை ***வஞ்சித்ததுபோல,*** உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையிலிருந்து விலகும்படிக் கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்'' (2 கொரி 11:3). ஆங்கில வேதாகமத்தில் ''எப்படியாவது'' என்ற பதமும் இவ்வசனத்திற்குள் இருக்கிறது. அதாவது, ''பல்வேறு வழிகளில்'' வஞ்சகம் ஏற்படலாம் என்ற கருத்து இதிலுள்ளது. அன்று ஏதேன் தோட்டத்தில் இருந்ததைவிடச் சர்ப்பத்திற்கு இன்று அறிவும் அனுபவமும் எவ்வளவோ

கூடிவிட்டன. அன்று ஏவாளுக்குத் தீதானதொரு பாவத்திற்கான சோதனை அல்ல, தேவனுடைய வார்த்தையிலிருந்து ''விலகச் செய் யவே'' சோதனை வந்தது. நமது ஆதிப் பெற்றோரே வஞ்சிக்கப்பட முடியுமானால், நாம் வஞ்சிக்கப்படுவது எவ்வளவு எளிது! ''தெரிந்து கொள்ளப்பட்டவர்களும்'' வஞ்சிக்கப்பட முடியும் என்பதே இயேசு வின் கருத்து (மத் 24:24). வஞ்சிக்கப்படுவது என்றால் ''மயக்கப் படுவதாம்'' (கலா 3:1). ''தடுக்க முடியாத கவர்ச்சியினால் ஒரு பிடிப் புக்குள் வந்துவிடுதல்'' என்ற பொருள் விரிவாக்க வேதாகமத்தில் *(Amplified Bible)* சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒருவன் தனது விருப்பப்படிச் செய்ய முடியாத ''பிடிப்பு, மயக்கம், கண்ணி'' என்று இதனைத் தீமோத்தேயுவுக்குப் பவுல் விளக்குகிறார் (2 தீமோ 2:26).

*Cruden's Complete Concordance* என்ற வேதாகமச் சொல்லக ராதியின் உதவியுடன் ''வஞ்சகம்'' (deception) என்பதைக் குறிப்பிடும் ஏழு வசனப் பகுதிகளைப் புதிய ஏற்பாட்டில் கண்டுபிடித்தேன். இவைதான் நாம் வஞ்சிக்கப்படக்கூடிய பொதுவான பகுதிகள். இவை ஒவ்வொன்றையும் இங்குச் சுருக்கமாக ஆராய்வோம் —

### 1) கொலோசெயர் 2:4-9

''ஒருவனும் நயவசனிப்பினால் உங்களை ***வஞ்சியாதபடி*** இதைச் சொல்லுகிறேன். லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தி னாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடி எச்சரிக்கையாயிருங்கள் ... அது மனிதரின் பாரம்பரிய நியாயத்தை யும் உலக வழிபாடுகளையும் பற்றியதேயன்றி கிறிஸ்துவைப் பற்றிய தல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் உடல் ரீதி யில் அவருக்குள் வாசமாயிருக்கிறது.''

நாம் வஞ்சிக்கப்படாதிருக்க மூன்று காரியங்களை எப்பொழுதும் நினைவிற்கொள்ளவேண்டுமென இவ்வசனப்பகுதி நமக்குச் சொல்லுகிறது. (i) *கிறிஸ்துவின் அதிவுன்னதம்* (Supremacy of Christ). எல்லாத் துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் அவரே தலை வராயிருக்கிறார் (வச 10). மார்க்கவுலகில் ஏற்படக்கூடிய பக்திப் பரவசமும் சில வேளைகளில் கிறிஸ்துவைப்பற்றிய நமது தரி



சனத்தை மங்கலாக்கலாம். கிறிஸ்துவுக்கு ஒன்று, மோசேக்கு ஒன்று, எலியாவுக்கு ஒன்று என மூன்று கூடாரங்களை மறுரூப மலையில் போடச் சீமோன் பேதுரு விரும்பியபோது அவர் மறந்தது கிறிஸ்து வின் அதிவுன்னதத்தையே. (ii) *கிறிஸ்துவின் பரிபூரணத்துவம்* (Sufficiency of Christ). ''அவருக்குள் தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் உடல் ரீதியாக குடியிருக்கிறது'' (வச 9அ). ''என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்'' என்றார் இயேசு (யோ 14:9). தேவ னது தீர்க்கதரிசன வெளிப்பாடுகள் கிறிஸ்துவில் நிறைவடைகின் றன (எபி 1:1-3). (iii) *கிறிஸ்துவின் மையத்துவம்* (Centrality of Christ). இந்த வசனப்பகுதியில் ''கிறிஸ்து'' என்று எத்தனை முறை சொல்லப் பட்டிருக்கிறதென்று கவனியுங்கள் (கொலோ 2:5.6.8.9). நமது விசு வாசத்தில் கிறிஸ்து மையமாயிருக்கும்போதுதான் நாம் வஞ்சகங் களுக்குத் தப்பலாம். இதற்கு எதிரானவை, ''லௌகீக ஞானம், மாய மான தந்திரம், உலக வழிபாடுகள்'' (வச 8). தத்துவ ஞானம் என்ற அடிப்படையிலான மதங்களும், பல தெய்வங்கள் வணக்கமும், மாயையான கொள்கைகளும் நிறைந்துள்ள இந்தியா போன்றதொரு நாட்டில் நாம் கவனமாயிருக்கவேண்டும்.

நமது ஆன்மீக வளர்ச்சி ''கிறிஸ்துவுக்குள்'' காணப்படவேண்டும். நாம் கிறிஸ்துவை ''ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.'' நாம் அவருக்குள் ''நடந்துகொள்ளவேண்டும்.'' அவருக்குள் ''வேரூன்றி,'' அவர்மீது ''கட்டப்பட்டு,'' அவருக்குள் ''உறுதிப்படவேண்டும்'' (கொலோ 2:6,7). எபேசு சபைக்குப் பவுலடியார் எழுதியதிலும் இதே கருத்து வெளிப்படுகிறது: எபே 4:14,15, ''நாம் இனிக் குழந்தைகளாயிரா மல், மனிதருடைய சூதும் ***வஞ்சிக்கிறதற்கு*** ஏதுவான ***தந்திரமும்*** உள்ள போதகமாகிய பலவிதக் காற்றினால் அலைகள்போல அடி பட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு தலையாகிய ***கிறிஸ்துவுக்குள்*** எல்லாவற்றிலும் நாம் வளருகிறவர்களாயிருக்கவேண்டும்.''

பக்கவாட்டுக் கவர்ச்சிகள் குறித்துக் கவனமாயிருங்கள்! புதிய ஏற்பாட்டு நிருபங்களைத் திரும்பத் திரும்பத் தியானியுங்கள். ''கிறிஸ்துவுக்குள்'' எனும் பதம் எத்தனை முறை வருகிறதென்று

கவனித்தால் ஆச்சரியப்படுவீர்கள். யேகோவா சாட்சிக்காரர் போன்ற துர்வுபதேசக்காரர் கிறிஸ்துவின் மையத்துவத்தையும் தெய்வீகத்தையும் மறுதலிப்பர். கிறிஸ்தற்ற கிறிஸ்தவம் குறித்து எச்சரிக்கை! ஓர் அமெரிக்க சபை மேய்ப்பர் எழுதிய புத்தகத்தின் பிரதிகள் இலட்சக் கணக்கில் விற்பனையாயின. ஆனால் அதில் கிறிஸ்துவைப்பற்றி அதிகம் பேச்சில்லை. ஏன் அப்படி என்று அந்த மேய்ப்பரிடம் கேட்கப் பட்டபோது, அவர் கொடுத்த பதில், ''அது என் வேலையல்ல!'' இதில் துக்ககரமான காரியம் என்னவெனில், அமெரிக்காவிலேயே இதுதான் மிகப்பெரிய சபையென்று கணிக்கப்படுகிறது!

கிறிஸ்துவின் உபதேசத்தில் அவரது உயிர்த்தெழுதல் தவிர்க்க முடியாதது. இயேசுவானவர் லட்டு தருவார், அல்வா தருவாரென் றெல்லாம் பிரசங்கிப்பது சுவிசேஷச் செய்தியாகிவிடாது. நமது பிர சங்கத்தில் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இடம்பெறாவிடில் அது வஞ்சகத்திற்கு வழிநடத்தும். இதோ பவுலிடமிருந்து வரும் எச்சரிப்பு: ''***மோசம்போகாதிருங்கள்*** (வஞ்சிக்கப்படாதிருங்கள்); ஆகாத சேர்க்கை நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்'' (1 கொரி 15:33). அடுத்துள்ள வாழ்வில் நம்பிக்கையில்லாது ''மிருகங்கள்'' போல வாழுபவரோடு நெருக்கவுறவு கொண்டிருப்பதையே ''ஆகாத சேர்க்கை'' என்கிறார் பவுல் (வச 32). உயிர்த்தெழுதலை மறு தலிப்பது மதியீனம் (வச 36). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைச் சொல்லாது பிரசங்கிப்பதெல்லாம் வீண் (வச 14). விண்ணகத்தில் நாளைய வாழ்வுக்கான ஆயத்தமே மண்ணகத்தில் இன்றைய வாழ்வு.

**2) எபேசியர் 5:6-10**

''இப்படிப்பட்டவைகளின் பொருட்டு கீழ்ப்படியாமையின் பிள் ளைகள்மேல் தேவ கோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினால் ***மோசம் போக்காதபடி*** எச்சரிக்கையா யிருங்கள். அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். முற்காலத்தில் நீங்கள் இருளாயிருந்தீர்கள்; இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்ச மாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள் ளுங்கள் ... கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள்.''



நமது நடக்கை எப்படியிருக்கவேண்டுமென்று இவ்வசனப் பகுதியில் அப்போஸ்தலன் எழுதுகிறார். இருட்டுச் செயல்களும் கீழ்ப்படியாமையும் இங்கு கண்டிக்கப்பட்டுள்ளன. வெளிச்சத்தில் நடந்துகொள்வது என்றால் என்ன? அது ''நற்குணம், நீதி, உண்மை'' ஆகியவற்றை நமது வாழ்வில் கடைப்பிடிப்பதாம் (வச 8-10). ஒளிக்கும் இருளுக்குமுள்ள வேறுபாட்டினை மறந்து சாம்பல் நிறப் பகுதியில் வாழ்ந்துவருவது வஞ்சகம்.

பிரியமானவர்களே, தேவ பக்திக்கு நேராக வழிநடத்தாத எந்த உபதேசமும் கேள்விக்குரியது. இதைக் குறித்து அப்போஸ்தலன் யோவானின் தெளிவான வார்த்தைகள்: 1 யோ 3:7, ''பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் ***வஞ்சிக்கப்படாதிருங்கள்;*** நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்.'' நீதியைக் குறித்துப் பேசி நீதியாய் வாழாவிடில் அதுதான் வஞ்சகம். நாம் கிறிஸ்துவுக்குள் நீதிமான் களாக்கப்பட்டிருக்கிறோம். அது நமது நிலை (standing). நாம் நீதி யாய் வாழவும் வேண்டும். அது நமது நடை (state). தேவனுக்குமுன் நமக்குக் கிடைத்துள்ள நிலை நமது சிலாக்கியம்; அவருக்குமுன் நமது நடை நமது பொறுப்பு. ஒன்றிலிருந்து அடுத்ததைப் பிரித்து விடாதிருங்கள். இங்குதான் ''மிகைப்படுத்தப்பட்ட கிருபை'' (hyper-grace) எனும் உபதேசம் வஞ்சகமானது என்கிறோம். ஆயிரங்கள் இவ்வுபதேசத்தினால் வஞ்சிக்கப்பட்டு வருகின்றனர்.

வாழ்க்கையில் நமது நோக்கமே பரிசுத்தம் என்றிருக்கவேண்டும். பரிசுத்தத்திற்கு நேராய் நடத்தாத உபதேசத்தைப் போதிக்கிறவர்களை விட்டு விலகும்படித் தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதினார் (1 தீமோ 6:3,5ஆ). நடைமுறைப் பரிசுத்தத்தின் விளைவே உண்மையான சந்தோஷம். ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்'' என்றார் இயேசு (மத் 5:8). பாக்கியவான்கள் என்றால் பேறுபெற்றோர் அல்லது மகிழ்ச்சியுடையோர் என்று பொருள். பரிசுத்தமாய் வாழும் அனைவரும் பரவசமாயிருப்பர்; பரவசமாயிருக்கும் யாவரும் பரிசுத்த மாய் வாழுகிறார்கள் என்று சொல்ல முடியாது. நமது கூட்டங்களில் இப்பொழுதெல்லாம் பரிசுத்தத்தைவிட பரவசத்தையே முக்கியப்

படுத்துகிறோம். அது வஞ்சகம். மலைப்பிரசங்கத்தைத் தனி நபர்கள் அடிக்கடித் தியானிக்கவேண்டும்; பிரசங்கபீடங்களிலிருந்து அது வியாக்கியானிக்கப்படவேண்டும். அது ஒரு தன்னாய்வாய் அமையும். அதுதான் இறையரசுக்கேற்ற வாழ்க்கை. ''இராஜ்யம்'' எனும் சொல் மலைப்பிரசங்கத்தில் எத்தனையோ முறை வருகிறது (மத் 5:3,10,19; 6:10,13,33; 7:21). இராஜ்யம், இராஜா என்றெல்லாம் கிறிஸ்தவ வட்டாரங்களில் இன்று பேச்சு அதிகம்; இராஜ்யத்திற்கேற்றவாறு நடக்கையில் மாற்றமோ அபூர்வம். இது வஞ்சகம்.

''நீதியற்று வாழ்வோர் தேவனுடைய இராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? ***வஞ்சிக்கப்படாதிருங்கள்''*** என்று அப்போஸ்தலன் பவுல் நம்மை எச்சரித்துள்ளார் (1 கொரி 6:9). இயேசுவின் இரத்தத்தால் ''கழுவப்பட்டவர்களாகவும்,'' அவரது பெயரால் ''நீதிமான்களாக்கப்பட்டவர்களாகவும்,'' தேவனுடைய ஆவியினால் ''பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும்'' நாம் நடந்துகொள்ளவேண்டும் (வச 11). தேவனுக்குக் கீழ்ப்படிதல் நோக்கி நடத்தாத வேத ஆராய்ச்சியும் நம்மை நாமே வஞ்சிப்பதாகும். இதோ, அப்போஸ்தலன் யாக்கோபின் நேரடிப் போதனை: யாக் 1:22, ''நீங்கள் உங்களை ***வஞ்சியாதபடித்*** திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மட்டுமல்ல, அதின்படிச் செய்கிறவர்களாயுமிருங்கள்.''

**3) கலாத்தியர் 6:3**

''ஒருவன், தான் ஒன்றுமில்லாதிருந்தும், தன்னைப் பெரிதாக எண்ணினால், தன்னைத்தானே ***வஞ்சிக்கிறான்.''***

தன்னையே உயர்த்திக்கொள்ளவும் முன்னேற்றிக்கொள்ளவும் எவரும் எடுக்கும் முயற்சிக்கு எதிராக எச்சரிப்பு இங்கு தரப்பட்டுள்ளது. இதோ, பவுலின் சவால்: 2 கொரி 3:1, ''எங்களை நாங்களே மறுபடியும் மெச்சிக்கொள்ளத் தொடங்குகிறோமோ? அல்லது சிலருக்கு வேண்டியதாயிருப்பதுபோல், உங்களுக்குச் சிபாரிசுக் கடிதங்களை அனுப்பவும், உங்களிடமிருந்து சிபாரிசுக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்குத் தேவையோ?'' 4:2,5, ''தேவனுக்கு முன்பாக எல்லா மனிதருடைய மனச்சாட்சிக்கும் எங்களை



உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம் ... நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவின் பொருட்டு உங்கள் ஊழியக்காரர் என்றும் பிரசங்கிக்கிறோம்.'' சேவை செய்யும் மனப்பான்மையே இங்கு வலியுறுத்தப்படுகிறது. மார்க்கவுலகின் நட்சத்திரக் கலாச்சாரத்திற்கு எச்சரிக்கை! தங்களைத் தாங்களே உயர்த்தி முன்னேற்றிக்கொள்ள விழையும் ஊழியர்கள் உங்களை அடிமைப்படுத்திவிடுவார்கள். அவர்களைச் சிறையாக்கி, கொள்ளையடித்து, கைவசப்படுத்திக்கொள்ளும் பிரசங்கிமாரைச் சகித்துக்கொண்டிருந்த கொரிந்திய விசுவாசிகளைப் பவுல் கண்டித்தார் (11:19,20). அவர்களது முகத்தில் ஒருவன் அறைந்தாலும் அதைக்கூட அவர்களால் உணர முடியாத மயக்க நிலையில் அவர்கள் கிடந்தார்கள்! எந்த ஊழியனையாவது நீங்கள் கதாநாயக வணக்கம் செய்துகொண்டிருந்தால், நாளடைவில் நீங்கள் கண் பார்வையிழந்து அன்னாருக்கு அடிமையாகிவிடுவீர்கள்.

தன்னைத்தான் உயர்த்துவது பேய்க்குணம். இதனால்தான் லூசிபர் விழுந்தான். அவனுக்குச் சொல்லப்பட்ட தேவ வார்த்தை: ஏசா 14:12-15, ''அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ... நான் வானத்துக்கு ஏறுவேன் ... நான் ... நான் ... நான் ... உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.'' சாத்தானால் மனுக்குலத்திற்கு முன்வைக்கப்பட்ட முதல் சோதனையே இது தானே: ஆதி 3:5, ''நீங்கள் தேவர்களைப்போல் இருப்பீர்கள்.'' சாத்தானின் இக்குணம் மாறுவதேயில்லை. ஏதேன் தோட்டத்தில் இருந்ததுபோலவே கிறிஸ்துவின் மறுவருகையின்போதும் இருப்பான்: 2 தெச 2:3,4, ''எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை ***மோசம்போக்காதபடி*** எச்சரிக்கையாயிருங்கள் ... கேட்டின் மகன் எதிர்த்து நிற்கிறவனாகவும், தேவன் என்னப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாகவும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிறவனாகவும் இருப்பான்.''

கிறிஸ்தவ விசுவாசிகளெல்லாரும் குட்டிக் கடவுள்கள் எனும் நவீன உபதேசங்கள் முளைத்துள்ளன! இவ்வுபதேசத்திற்குச் சாதக மாக சங்கீதம் 82:6ஐ மேற்கோள் காட்டுகின்றனர். இந்த வசனத்தில் ''தேவர்கள்'' என்பதின் பொருள் ''நீதிபதிகள்'' என்பதாகும். எளிய வர்க்கு நீதி நியாயம் மறுக்கப்படுவது கண்டிக்கப்படும் சூழமைவி லேயே இவ்வசனம் வருகிறது (வச 2-4). நாம் ''தேவர்கள்'' அல்ல; மாறாக, உன்னதமானவரின் ''மக்கள்'' (வச 6ஆ). தேவர்களைப் போல் நாம் சாவாமையுள்ளவர்கள் கிடையாது; எல்லா மனிதரை யும்போல் நாம் ''சாவோம்'' (வச 7). நாம் தேவனது பிரதிநிதிகளாய் இவ்வுலகில் நீதி நியாயத்தையே செயல்படுத்த விழையவேண்டு மென்ற கருத்திலேயே ''தேவர்கள்'' என்றழைக்கப்படுகிறோம். அரசு அதிகாரிகளை ரோமர் 13:1,2,4இல் தேவ ஊழியர் என்று பவுல் அழைப்பது இந்தப் பாணியில்தான். நாம் குட்டிக் கடவுள்கள் அல்ல; மாறாக ஒரே தேவனால் ''உண்டாக்கப்பட்டவர்கள்'' (1 கொரி 8:5,6). இதற்கு மாறான எந்த நம்பிக்கையும் அஞ்ஞானமே (வச 4). தேவ னுடைய ''குமாரன்'' என்று அவர் அழைக்கப்படுவது சரியே என்ற வாதத்திற்காகத்தான் சங்கீதம் 82:6ஐ இயேசு மேற்கோள் காட்டினார் (யோ 10:33-36). வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டு, பைபிளின் பொதுவான உபதேசத்தின் அடிப்படையிலேயே எந்த வசனப்பகுதிக் கும் விளக்கம் கொடுக்கவேண்டும்.

லீஸ்திரா நகரில் சப்பாணி ஒருவன்மீது அசாதாரண அற்புதம் ஒன்றை நிகழ்த்தப் பவுலையும் பர்னபாவையும் தேவன் பயன் படுத்தியபோது, ''தேவர்கள் மனுவுடலெடுத்து நம்மிடம் இறங்கி வந்திருக்கிறார்கள்'' என்று மக்கள் பரவசப்பட்டுக் கத்தினர் (அப் 14:8-11). அஞ்ஞான மார்க்கத்தாரின் நம்பிக்கையெல்லாம் இப் படித்தானிருக்கும். இவ்வித நம்பிக்கையைத் தீவிரமாய் எதிர்த்து அப்போஸ்தலர் என்ன செய்தார்களென்று பாருங்கள்: ''அவர்கள் தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொண்டு, கூட்டத்தாருக்குள்ளே ஓடி, உரத்த சத்தமாய்: மனிதரே, ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்றனர்.'' இவையெல்லாம் ''வீணான தேவர்களுக்கு'' அடுத்தவை; இவற்றை யெல்லாம் விட்டு ''ஜீவனுள்ள தேவனிடம்'' திரும்புங்கள் என்றும் பிரசங்கித்தனர் (வச 14,15). திருமறையின் தெளிவான உப



தேசத்தை இங்கு நாம் நினைவுபடுத்திக்கொள்வோம். தாவீதரசன் வியந்து கூறியது: சங் 8:1,4,5, ''எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உமது நாமம் பூவுலகெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக் கிறது! ... மனிதனை நீர் நினைப்பதற்கு அவன் எம்மாத்திரம்? நீர் அவனைத் தேவதூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமை யினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர்.'' ''ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படி அவரது பலத்தக் கைக்குள் அடங்கியிருங்கள்'' என்பதே அப்போஸ்தலன் பேதுரு நமக்குத் தரும் அறிவுரை (1 பேது 5:6).

#### 4) 1 தெசலோனிக்கேயர் 2:3-5

''எங்கள் போதகம் ***வஞ்சகத்தினாலும்*** துராசையினாலும் உண் டாகவில்லை; அது கபடமுள்ளதாயிருக்கவில்லை. சுவிசேஷத்தை எங்களிடம் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமர் என் றெண்ணியபடியே, நாங்கள் மனிதருக்கு அல்ல, எங்கள் இருதயங் களைச் சோதித்தறியும் தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம். உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருபோதும் முகத்துதி யான வார்த்தைகளைச் சொல்லவுமில்லை, பொருளாசை உள்ள வர்களாய் மாயம்பண்ணவுமில்லை; தேவனே சாட்சி.''

இங்கு திருப்பணியில் பொருளாசைக்கு எதிராய் அப்போஸ்தலன் பேசுகிறார். பண ஆசை பிடித்த பிரசங்கிமார் இறைமக்களை வஞ் சித்துவிடுவர். பைபிளில் இது பல முறை எச்சரிக்கப்பட்டுள்ளது —

ரோமர் 16:17,18, ''சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உப தேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர் களைவிட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லு கிறேன். அப்படிப்பட்டவர்கள் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து, இனிய வார்த்தைகள் பேசி, கபடற்றவர்களுடைய இருதயங்களை ***வஞ்சிக்கிறவர்களாய்*** இருக்கிறார்கள்.'' ஒரு நீண்ட கடிதம் எழுதி வாழ்த்துதல்கள் எல்லாம் சொல்லி முடித்த *பின்னர்* ரோம் நகர் விசு

வாசிகளுக்கு இவ்விதக் கண்டிப்பான வார்த்தைகளைப் பவுல் எழுதுகிறார் என்பதை நினைவில் வையுங்கள் (வச 3-16).

பிலிப்பியர் 3:18,19, ''அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்கு எதிரிகள் என்று உங்களுக்குப் பல முறை சொன்னேன்; இப்பொழுது கண்ணீரோடு சொல்லுகிறேன். அவர்களுடைய முடிவு ***அழிவு;*** அவர்களுடைய தேவன் வயிறு; அவர்களுடைய மகிமை வெட்கக்கேடு; அவர்கள் பூவுலகுக்கடுத்தவற்றைச் சிந்திக்கிறார்கள்.''

''இழிவான ஆதாயம்'' தேடும் ஊழியரை அப்போஸ்தலன் பவுல் ''மனதை ***மயக்குகிறவர்கள்''*** என்றழைக்கிறார் (தீத் 1:10,11). ***''வஞ்சகமான*** வார்த்தைகள்'' பேசி இறைமக்களை வசப்படுத்தும் கள்ளத் தீர்க்கர்கள் மற்றும் கள்ளப் போதகர்களின் பொருளாசையை அப்போஸ்தலன் பேதுரு அடையாளங்காண்கிறார் (2 பேது 2:1-3). இறைமக்கள் பலவிதச் சிக்கலான சூழல்களில் தவிக்கும்போதுதான் பிரசங்கிமாரின் வஞ்சக வலைகளில் சிக்கிக்கொள்ளுகின்றனர். ஆவியின் அபிஷேக வரங்களுடன் செயல்படும் ஊழியர் இவ்விதம் இறைமக்களை ஏமாற்றும் மட்டரகத் தொழிலுக்கு இறங்கிவிடக் கூடாது (மத் 10:8). எனதருமை ஊழிய நண்பரே, பிரச்னைகளில் புரண்டுகொண்டிருப்போருக்கு உதவும்போது உங்கள் நோக்கம் தூய்மையாயிருக்கட்டும். ஒரு தாய் போலவும், தந்தை போலவும் உதவுங்கள்! ஆடுகளிடமிருந்து என்ன கறக்கலாம் என்பதையே நோக்கமாய்க் கொள்ளாது, ஆடுகளுக்காய் உங்கள் உயிரையே கொடுக்க ஆயத்தமாயிருக்கும் நல்ல மேய்ப்பனாயிருங்கள். பிரதான மேய்ப்பர் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கிறார்!

**5) கலாத்தியர் 6:6-10**

''திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு அனைத்து ஆசீர்வாதங்களிலும் பகிர்ந்து கொடுக்கட்டும். ***மோசம் போகாதிருங்கள்;*** தேவன் தம்மைக் கேலிபண்ண விடமாட்டார்; மனிதன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான் ... நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போம்; நாம் தளர்ந்துபோகா



திருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் வாய்ப்புக்கேற்றபடி யாவருக்கும், சிறப்பாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்வோம்.''

தானதர்மம் மற்றும் பகிர்ந்தளிப்பு ஆகிய காரியங்களில் தயாளமாயிருக்கவேண்டும் என்ற கருத்தில் வஞ்சகத்திற்கெதிரான இவ்வசனப்பகுதி காணப்படுகிறது. பயனாளிகளாக மூன்று வகையினரை அப்போஸ்தலன் இங்கு குறிப்பிடுகிறார்: திருமறைப் போதகர்கள், விசுவாசிகள், திருச்சபைக்கு வெளியே தேவையிலிருப்போர். பூவுலகுக்கு நன்மை செய்ய முடியாதவர்களாகிவிடும் அளவுக்கு நாம் விண்ணுலகச் சிந்தையுள்ளவர்களாகிவிடக்கூடாது. துதி ஆராதனை போன்ற மார்க்கப் பரவச அனுபவங்களில் திளைத்து தானதர்மத்தை ''மறந்துவிடக்கூடாது'' என்று எபிரெய நிருப ஆக்கியோன் தனது வாசகரை எச்சரிக்கிறார் (எபி 13:15,16). இறுதிக்காலத்தில் தனப்பிரியரும் தற்பிரியரும் பெருகிக்கொண்டேயிருப்பர். இக்காலத்தைக் ''கொடிய காலங்கள்'' என்றழைக்கிறார் பவுல் (2 தீமோ 3:1,2).

பொருளாசையையும் ஆடம்பர வாழ்க்கையையும் மறைப்பதற்காகவே தானதர்மச் செயல்களில் ஈடுபடுவோரும் உண்டு. இதுவும் ஒரு வஞ்சகம். இயேசுவின்மீது ஊற்றுவதற்காய்ப் பரிமள தைலப் புட்டியை அந்த மாது உடைத்தபோது, இந்தப் பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே என்றார் பொருளாளர் யூதாஸ். அதனை யோவான் எப்படிக் கணித்தார் பாருங்கள்: ''அவன் தரித்திரரைக் குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதில் போடப்பட்டதை எடுக்கிறவனானபடியாலும் இப்படிச் சொன்னான்'' (யோ 12:4-6). வஞ்சகம் எப்படியெல்லாம் ரூபமெடுக்கிறது பாருங்கள்! கிறிஸ்தவ ஊழியங்களுக்கும், மிஷனரி இயக்கங்களுக்குங்கூட, இங்கு ஒரு வலையுண்டு. நிறுவனங்களின் பல்வேறு திட்டங்களுக்குப் பணம் சேகரிப்பதற்காக, பஞ்சத்தில் வாடும் மக்களது புகைப்படங்களை விளம்பர நோக்கோடு பயன்படுத்தக் கூடாது. இவ்வித மாயாஜாலங்கள் ஏழைகளின் தேவனுக்குச் சற்றும் பிடிக்காது (மத் 6:1-4).

### 6) 2 தீமோத்தேயு 3:13-17

''பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் ***வஞ்சிக்கிறவர்களாகவும், வஞ்சிக்கப்படுகிறவர்களாகவும்*** மேலும் மேலும் கேடுள்ளவர்களாவார்கள். நீயோ கற்று நிச்சயத்தவைகளில் நிலைத்திரு; அவைகளை யாரிடம் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறாய் ... பரிசுத்த வேத எழுத்துக்கள் ... அவை உபதேசத்திற்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் பயனுள்ளவையாயிருக்கின்றன.''

வஞ்சகத்திற்கெதிரான இவ்வேதப்பகுதி பிரதானமாக உபதேசத்துக்கடுத்தவற்றையே குறிப்பிடுகிறது. சிறுவயது முதல் முதிர்ந்த மனிதனாகும்வரைத் திருவசனத்தால் நம்மை நிறைத்துக்கொண்டேயிருக்க வேண்டும் (வச 15,16). இரட்சிப்பு துவக்கி நற்செயல்கள் வரை யாவும் திருவசனத்தின் அடிப்படையிலேயே காணப்பட வேண்டும் (வச 15,16). திருவசனத்தின்மீது சார்ந்திருக்கும் அளவுக்குத்தான் நமக்குப் பாதுகாப்பு. எல்லாக் காலத்திற்கும் எல்லாக் கலாச்சாரத்திற்கும் பைபிள் பொருத்தமானதால் அதனைத் திருத்தத் தேவையுமில்லை, திருத்தவும் முடியாது. பரவசங்களை நாடிச் செல்லாதீர். திருவசனத்தின் செயல்பாடுகள் பொதுவாக அமைதியாகவே இருக்கும்; புல்லின்மீது இறங்கும் பனித்துளிகள் போன்றவை அவை (உபா 32:1,2). சொப்பனங்கள், தரிசனங்கள், தீர்க்கதரிசனங்கள் ஆகியவற்றைத் தேவன் தரலாம்; ஆனால் அவற்றின் பின்னால் ஓடாதீர். திருவசனத்திலேயே ஒட்டிக்கொண்டிருங்கள் (எரே 23:25-29). ஆசீர்வாதங்களை அல்ல, ஆசீர்வதிக்கிறவரையே கும்பிடவேண்டும். பரவச அனுபவங்கள் கர்த்தரிடமிருந்து நமது கவனத்தைத் திருப்பக்கூடியவை (வச 27). ஆரோக்கிய உபதேசம் எப்பொழுதும் ஆண்டவரையே மையப்படுத்தியிருக்கும்.

### 7) மத்தேயு 24:3,4,5,11,24

''உமது வருகைக்கும் உலகின் முடிவுக்கும் அடையாளம் என்ன?'' என்று இயேசுவிடம் சீடர் வினவினர். அவர் கொடுத்த பதிலின் முதல் வாக்கியம்: ''ஒருவனும் உங்களை ***வஞ்சியாதபடி*** எச்சரிக்கையாயிருங்கள்'' (வச 4). அவர் தொடர்ந்து அவர்களிடம் சொன்னது:



''அநேகர் வந்து, என் பெயரை வைத்துக்கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லி அநேகரை ***வஞ்சிப்பார்கள்*** ... அநேகம் கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை ***வஞ்சிப்பார்கள்*** ... கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத் தீர்க்கர்களும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் ***வஞ்சிக்கப்*** பெரிய அற்புதங்களையும் செய்வார்கள்.''

நிசமானதைவிடப் போலியானது சில சமயங்களில் அதிக நிசமாகத் தெரியும். நிசமான பூக்களுக்கும் பிளாஸ்டிக் பூக்களுக்கும் வேறுபாட்டைக் கண்டுபிடிப்பது சில வேளைகளில் கடினமாகிவிடுகிறதல்லவா? வெளித்தோற்றத்தினால் ஏமாந்துபோகாதீர். பார்ப்பதற்குத் தண்ணீர் சுத்தமாகத் தெரியலாம்; ஆனால் சில பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே உறுதியாய்ச் சொல்ல முடியும். இறுதிக்கால வஞ்சகங்கள் குறித்துக் கூடுதல் கவனம் தேவை (2 தெச 2:1-3). இந்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ள முன்னெச்சரிப்புகள் நமது பாதுகாப்பிற்காகவே. முன்னெச்சரிக்கப்பட்டால்தான் ஆயுதமணிந்து தாக்குதலுக்கு ஆயத்தமாயிருப்போம். வஞ்சிக்கப்பட்டவனின் 10 அடையாளங்களை அடுத்த அத்தியாயம் பட்டியலிடுகிறது.



# 32

# வஞ்சிக்கப்பட்டவனின் அடையாளங்கள்

## Signs of Deception

''உமது வருகைக்கும், உலகின் முடிவுக்கும் அடையாளம் என்ன?'' என்று சீடர்கள் இயேசுவிடம் கேட்டனர். அதற்கு இயேசு கொடுத்த 51 வசனப் பதிலின் (மத் 24) முதல் வாக்கியம், ''ஒருவனும் உங்களை ***வஞ்சியாதபடி*** எச்சரிக்கையாயிருங்கள்'' என்பதே. ''அநேகர்'' வஞ்சிக்கப்படுவார்களென்றும் அவர் கூறினார். பகுத்தறிதலில் விசுவாசிகள் வளரவேண்டுமென்று பவுல் ஜெபித்தார் (பிலி 1:9). வஞ்சிக்கப்படுதலை அடையாளங்காண இதோ சில வழிமுறைகள். வஞ்சிக்கப்பட்ட ஊழியர் அல்லது மக்களில் கீழ்க்கண்ட ஒன்று அல்லது கூடுதல் அடையாளங்களைக் காணலாம் —

1. தான் மிகவும் வித்தியாசமானவன் என்று வஞ்சிக்கப்பட்டவன் நினைக்கத் துவங்குகிறான். மற்ற யாருக்கும் கிடைக்காத, அல்லது பெரும்பாலானோர் தவறவிட்ட, ஒரு வெளிப்பாடு தனக்குக் கிடைத்துவிட்டதென அவன் எண்ணுகிறான்.

2. எழுதப்பட்டுள்ள திருவசனத்தைவிடச் சொல்லப்படும் வார்த்தைகளிலேயே அவன் அதிகம் ஆர்வம் காட்டுகிறான். திருமறைக்கு மிஞ்சிய வெளிப்பாடுகளைத் தேவனிடமிருந்து வரும் புதிய காரியம் என்று அணைத்துக்கொள்ளுகிறான்.

3. சொப்பனங்கள், தரிசனங்கள், சத்தங்கள், மற்றும் பகட்டானதும் உடலுக்கடுத்ததுமான உணர்ச்சிவசக் காரியங்களில் அவன் அலாதிப் பிரியங்கொள்ளுகிறான். நூதனங்களிலேயே அவனுக்கு நாட்டம் அதிகம்.

4. அவன் ஒருபுறம் சாய்ந்துவிடுகிறான். மற்றவை மறக்கப்படுமளவிற்கு ஏதாவதொரு உபதேசம் அல்லது அனுபவத்தையே திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறான். இது திருமறையைத் திருக்குவது என்று அவன் அறியான்.

5. பக்குவப்பட்ட வேத போதகர்கள், முதிர்ச்சியடைந்த தலைவர்கள் ஆகியோரின் ஆலோசனையை அவன் நாடுவதுமில்லை, அவர்களது மேற்பார்வைக்குள் அடங்குவதுமில்லை. எல்லாமே நேரே பரலோகத்திலிருந்து தனக்குக் கிடைத்துவிடுகிறதென்று அவன் எண்ணுகிறான். முடிவை வைத்து முறை சரியென்று சாதித்துவிடுவான்.

6. ஏதோ விளக்கம் கூறி தன் வாழ்விலுள்ள சில பாவங்களுக்கு அவன் சாக்குபோக்கு சொல்லிவிடுகிறான். அவன் பொதுவாகப் பிறர்மீது கடினமாகவும், தன்மீதோ இலகுவாகவும் இருப்பான்.

7. திருவசனத்தை ஆழமாய் ஆராய்கிறேன் என்ற போர்வையில் அவன் மறைவான, இரகசியமான காரியங்களில் அசாதாரணப் பிரியம் காட்டுகிறான்.

8. மிஷனரிப்பணியிலும் நற்செய்தி ஊழியத்திலும் அவனது நடைமுறை ஈடுபாடும் விருப்பமும் தணிகிறது.

9. யாராவது அவனது தவறுகளைச் சுட்டிக்காட்டினால் அதை நல்மனதுடன் அவன் ஏற்பதில்லை. ''நான் சத்தியத்திற்காகப் பாடனுபவிக்கிறேன்'' என்று பிசாசு அவனை நம்பச் செய்கிறான்.

10. தான் வஞ்சிக்கப்பட்டுள்ளது அவனுக்குத் தெரியாது; அதை ஒத்துக்கொள்ளவும் மாட்டான். வெற்றிகள் அவனது கண்களைக் குருடாக்கிவிட்டன. ''நான் தவறு என்றால் தேவன் எனது ஊழியத்தை இவ்விதம் ஆசீர்வதிப்பது எப்படி?'' என்பதே அவனது விவாதம்.

# 33

# உபதேசங்களைச் சோதிப்பது எப்படி?

## How to test Doctrines

''சொல்லாலும் செயலாலும் சத்தியத்திற்கு ஆதரவாகவும் துர்வு பதேசத்திற்கு எதிராகவும் நிற்கிறோமென நாம் தெளிவாக்காவிடில் அடுத்தத் தலைமுறைக்கும் சுவிசேஷத்திற்கும் இடையே சுவர் எழுப்புகிறோம்'' என்றார் கிறிஸ்தவ ஞானி பிரான்சிஸ் ஷேபர் (1912-1984)!

*''**வேற்றுமையான உபதேசங்களைப்*** போதியாதபடிக்குக் ... கட்டளையிடு'' என்பதே தீமோத்தேயுவுக்குப் பவுலின் முதல் செய்தி யாகும் (1 தீமோ 1:3). அப்படியே தனது இரண்டாம் நிருபத்தின் இறுதியிலும் இப்படி எழுதினார்: ''அவர்கள் ஆரோக்கியமான உப தேசத்தைப் பொறுக்க மனதில்லாது, விருப்பமானவைகளையே கேட்க விரும்பி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகும் காலம் வரும்'' (2 தீமோ 4:3,4). அந்தக் காலம் வந்துவிட்டதல்லவா?

ஆதிச்சபையின் அமோக வளர்ச்சிக்கு நான்கு காரணங்களில் அவர்கள் அப்போஸ்தலரின் ''உபதேசத்தில்'' உறுதியாகத் தரித் திருந்ததே முதற்காரணம் (அப் 2:42). ''உபதேசத்தைப்பற்றிக் கவ லைப்படவேண்டாம், ஊழியம் செய்தால் போதும்'' என்பது ''பந் தைப்பற்றிக் கவலைப்படவேண்டாம், விளையாடினால் போதும்'' என்பதற்குச் சமம்! பீட்டர் லூயிஸ் என்பவர் இதைச் சொன்னார்.

கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத் 24:24), கள்ள அப்போஸ்தலர் (2 கொரி 11:13), கள்ளச் சகோதரர் (கலா 2:4), கள்ளப் போதகர் (2



பேது 2:1) என்றெல்லாம் தேவையில்லாமல் பைபிள் குறிப்பிட வில்லை. எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்க நாம் கட்டளை பெற் றுள்ளோம். ''*எல்லாவற்றையும்* சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற *எல்லா வற்றையும்* விட்டுவிலகுங்கள்'' (1 தெச 5:21,22). சோதித்துப் பாருங்கள்; நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்; விட்டு வில குங்கள்! அதின் விளைவு அல்லது கனி என்ன என்பதே எந்த உபதேசத்திற்கும் அமிலச் சோதனையாகும். ஏனென்றால் ''நல்ல மரமானது கெட்ட கனி கொடாது, கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதனதின் கனியினால் அறியப்படும்'' (லூக் 6:43,44). உபதேசத்தை மட்டுமல்ல, உபதேசிகளையும் சோதித்துப் பார்க்கவேண்டும். ''தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங் களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக் கையின் முடிவை (விளைவை) நன்றாகச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்'' (எபி 13:7).

எந்தப் போதனையையும், ஊழியத்தையும் தழுவுமுன் கீழ்க்கண்ட ஏழு கேள்விகளைக் கேட்டுப்பார்க்கிறேன் —

### 1. இவ்வுபதேசம் அல்லது ஊழியம் இரட்சிப்புக்கு வலியுறுத்துவது கிருபையா, கிரியையா?

இதுதான் மிகவும் அடிப்படையானதாகும். ஏனென்றால் ''கிருபை யினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானது அல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமை பாராட்டாதபடி இது கிரியைகளினால் உண்டானது அல்ல'' (எபே 2:8,9). ''நற்செயல்களினால்'' அல்ல, ''நற்செயல்களுக்காய்'' இரட்சிக்கப்பட்டோம். குதிரைக்குமுன் வண்டியைக் கட்டக்கூடாது!

இரட்சிப்புக்குக் கிரியைகளை வலியுறுத்தும் உபதேசத்திற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருகிறேன். மூத்த சகோதரன் ஒருவருடன் வந்து கொண்டிருந்த வாலிபனொருவனிடம், நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா என வினவினேன். ''சிலுவையை நோக்கி நடந்துகொண்டிருக் கிறான்'' என்று இவனுக்காக மூத்த சகோதரன் பதிலளித்தார்.

''எவ்வளவு காலமாக?'' எனக் கேட்டேன். ''மூன்று மாதம்'' என்று பதிலளித்தார். அதாவது, இந்த வாலிபன் சிறுவயது முதல் செய்த ''எல்லாப்'' பாவங்களையும் ''ஒவ்வொன்றாக'' அறிக்கையிட்டு, தவ றிழைத்த ''ஒவ்வொருவரோடும்'' காரியங்களைச் சரிசெய்துகொண் டிருக்கிறானாம். இன்னும் முடிக்கவில்லையாம்! ஒருநாள் வரும், அப்பொழுது இந்த மூத்த சகோதரன் அந்த வாலிபனைப் பார்த்து, ''இப்பொழுது நீ பாவங்களையெல்லாம் அறிக்கை செய்துவிட்டாய், சரிசெய்ய வேண்டிய காரியங்களையெல்லாம் முடித்துவிட்டாய். இனி தேவனிடம் இரட்சிப்புக்காக ஜெபி'' என்பார்! பிரியமானவரே, மனிதரோடு ஒப்புரவாகுதலென்பது வேத உபதேசம்தான்; ஆனால் அது இரட்சிப்பின் வெளிப்பாடுதானே ஒழிய இரட்சிப்புக்கு நிபந் தனையல்ல. நொடிப்பொழுதில் எவரும் இரட்சிக்கப்படலாம். ஆயக் காரன் ஆலயத்துக்குள் பாவியாக நுழைந்தான்; பரிசுத்தனாக, ''நீதி மானாக்கப்பட்டவனாக,'' வெளிவந்தான்!

இதுபோலவே, மத்தேயு 28:19ஐக் குறிப்பிட்டு, ''சீடருக்கு'' மட்டுமே திருமுழுக்கு கொடுக்கலாம் எனக் கூறுவர். அவர்களது அறி வின்படி, புதிய ஏற்பாட்டிலுள்ள சீடத்துவத்தின் அத்தனை நிபந்தனை களையும் நிறைவேற்றி முடித்தவனே சீடனாம். ஆனால், ''சீடன்'' எனும் சொல்லின் அடிப்படைப் பொருள் ''மாணவன்'' அல்லது ''இணைந்தவன்'' என்பதாகும். அதாவது அவன் இயேசுவுடன் இணைந்து அவரைப் பின்பற்றத் துவங்கியிருக்கிறான். பாலர் வகுப்பிலிருந்தாலும் பட்டப் படிப்பிலிருந்தாலும் மாணவன்தானே! எனவே, ''சேருங்கள், முழுக்குங்கள், போதியுங்கள்'' என்பதே பேரா ணையின் முக்குறிப்புகளாகும்.

இன்னும் சிலர் ஞானஸ்நானத்தை இரட்சிப்புக்கு ஒரு நிபந்த னையாக்கி விடுவர். கிறிஸ்து முடித்த புண்ணியச் செயலை விசுவாசிப்பதால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படுகிறோம். உள்ள னுபவத்தின் வெளியடையாளமாகவே ஞானஸ்நானம் இதைத் தொடர்கிறது.

தேவனைப் பொருத்தவரை இரட்சிப்பு என்பது எல்லாமே ''கிருபை!'' நம்மைப் பொருத்தவரை அது எல்லாமே ''விசுவாசம்!'' ஒன்றையும் கூட்டாதீர், குறைக்காதீர், கவனம்!



### ௨. இவ்வுபதேசம் என்னை நடத்துவது விடுதலைக்குள்ளா, அடிமைத்தனத்திற்குள்ளா?

''நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள்'' (கலா 5:1). மோசேயின் பளுவான நுகத்தடியுடன் ஒப்பிட்டு, *''என்* நுகம் மெதுவாயும் *என்* சுமை இலகுவாயுமிருக் கிறது'' என்றார் இயேசு (மத் 11:28-30). பிரமாணப் பிரசங்கிகள் பொதுவாக மூன்று காரியங்களில் தங்கள் சட்டதிட்டங்களைத் திணிப்பார்கள் —

#### *அ) ஆசரிப்பு (Days)*

எந்தவொரு நாளை அல்லது நாட்களை ஆசரிக்க விசுவாசி களுக்குக் கட்டளை கிடையாது. தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்துடன் பழைய உடன்படிக்கையின் நாட்களுக்கடுத்த ஆசரிப்புச்சட்டங்களை இணைத்துக்கொள்ள வஞ்சிக்கப்பட்ட கலாத்திய விசுவாசிகளுக்குப் பவுல் இவ்விதம் எழுதினார்: ''இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பலமற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிற தெப்படி? நாட்களையும், மாதங்களையும், காலங்களையும், வருஷங் களையும் பார்க்கிறீர்களே'' (கலா 4:9,10). பழைய ஏற்பாட்டில் ஓய்வு நாள் சனிக்கிழமை, இப்பொழுதோ அது ஞாயிற்றுக்கிழமை என்று சில கிறிஸ்தவர் கருகின்றனர். அப்படியல்ல! எந்தவொரு நாளையும் ஆசரிக்க நமக்கு இன்று பிரமாணம் கிடையாது. ஆசரிக்க அல்லது ஆசரிக்காமலிருக்க நமக்கு முழுச் சுயாதீனம் உண்டு. ஆசரித்தால் அது கர்த்தருக்கென்று; ஆசரிக்காவிட்டாலும் அது கர்த்தருக்கென்று தான்! (ரோ 14:5,6). இவ்வித மகிமையான விடுதலைக்காக அல்லேலூயா முழங்குங்கள். ஆனாலும் தேவனைக் கனப்படுத்தும் படி வாரத்தின் ஏழு நாட்களில் ஒரு நாளை அவருக்காகவே செல விடுவது ஆரோக்கியமான, ஆசீர்வாதமான பழக்கம்.

#### *ஆ) ஆகாரம் (Diet)*

அப்படியே, பழைய ஏற்பாட்டிலுள்ள ஆகாரத்துக்கடுத்த பிரமா ணங்கள் புதிய உடன்படிக்கையின்கீழ் இருக்கும் நமக்குக் கட்டல்ல.

‘‘எல்லா வகை உணவையும் உண்பவன் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறபடியால் கர்த்தருக்கென்று உண்கிறான்; உண்ணாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று உண்ணாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறான்’’ (ரோ 14:6). முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெற விரும்புவோர் இறைச்சியோ, இனிப்போ, காரமோ சாப்பிடக்கூடாது என்றதொரு புதிய ‘‘வெளிப்பாட்டை’’ சில ஆண்டு கட்குமுன் ஓர் ஊழியக்காரி கொண்டுவந்தார்கள்! பிரியமானவரே, ‘‘பலவித அந்நிய போதனைகளால் அலசடிப்பட்டுத் திரியாதிருங்கள். ஆகாரங்களினால் அல்ல, கிருபையினாலே இருதயம் திடப்படுகிறது நல்லது; ஆகாரங்களில் முயற்சி செய்கிறவர்கள் பலனடையவில்லையே’’ (எபி 13:9).

### *இ) ஆடை (Dress)*

கண்ணியமாயிருக்கும் எந்த நாகரீக ஆடையையும் தயங்காமல் அணியலாம். அகலக் கால்சட்டையை (Bell bottom) பிரசங்கியாகிய நான் எப்படி அணியலாம் என (1980) ஒரு நண்பர் ஒருமுறை என்னைத் திட்டியேவிட்டார். அது வசதியாயிருக்கிறதென்றாலும் விட்டாரில்லை. அதே நண்பரை ஈராண்டு கழித்து அகலக் கால் சட்டையில் பார்த்தேன். அப்பொழுது இறுக்கமான கால்சட்டை நாகரீகமாகிவிட்டது! முகப்பவுடர் மட்டும் போடும் சிலருக்கு உதட்டுச் சாயம் பூசும் மங்கையர் பயங்கர பாவிகளாய்த் தோன்றுவர். பவுடர் முகத்தின் தோற்றத்தையும் சாயம் உதட்டின் தோற்றத்தையும் நன்றாக்குகிறது; அவ்வளவுதான் வித்தியாசம் என அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர். சில சபைகளில் தலைமுடிக்குச் சாயம் போடுதல், நகையணிதல் எல்லாம் பாவமென்றே கருதப்படுகின்றது. இன்னும் சிலருக்கு, பூ வைப்பது பாவம்; ஆனால் பூப்போட்ட தாவணி அல்லது உடையணிவதில் தவறில்லை! இதிலென்ன வித்தியாசம்? மலர்ந்த பூ முப்பரிமாணமுள்ளது; வரைந்த பூ இருபரிமாணம்! ஒன்று இயற்கைப் பூ, அடுத்தது செயற்கைப் பூ! அவ்வளவுதான்! தனி நபரது விருப்பங்களுக்கு விட்டுவிட வேண்டிய காரியங்களை உபதேசங்களாக்கிவிடாதிருங்கள்.

‘‘பிரமாண மார்க்கம் கட்டாயம் பெருமைக்கு வழி நடத்தும்’’ என்றார் பக்தன் வாட்ச்மன் நீ (1903-1972). எவ்வளவு உண்மை!



### 3. இவ்வுபதேசம் பரிசுத்தத்திற்கு வழிநடத்துகிறதா, கவலையீனமாய் நடக்கச் செய்கிறதா?

‘‘ஒருவன் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாமல், வேற்றுமையான உபதேசங்களைப் போதிக்கிறவனானால் ... இப்படிப்பட்டவர்களை விட்டு விலகு’’ (1 தீமோ 6:3-5).

உத்தம உபதேசம் எப்பொழுதும் பரிசுத்த வாழ்வுக்கே நடத்தும் என்பது பழம் பரிசுத்தரின் ஆணித்தரமான கருத்தாகும். ‘‘நன்னெறிக்கு நடத்துவதே நல்லுபதேசத்தின் நோக்கு’’ என்றார் A.W. டோசர் (1897-1963). ‘‘உபதேசக் கோளாறினால் நடத்தைக் கோளாறுண்டாகும்’’ என்றார் R. A. டோரி (1856-1928). ‘‘உபதேசம் வாய்க்கல்ல, வாழ்வுக்கு’’ என்றார் ஜான் கால்வின் (1509-1564).

பரிசுத்தத்தில் வளருவதே நம்மைக்குறித்த தேவசித்தம். ‘‘பரிசுத்தமாயிருக்கிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்’’ (வெளி 22:11). பரிசுத்தமற்ற கிறிஸ்தவன் பைபிள் போதிக்கும் அத்தனைக்கும் முரண்பட்டவன்.

ஒரு பிரசங்கத்தைக் கேட்டபின், அல்லது ஒரு புத்தகத்தை வாசித்தபின், நீதியின்மேல் எனது பசிதாகம் கூடியிருக்கிறதா என்று சோதித்துப் பார்ப்பேன். நமது ஆத்துமாவிலிருந்து ஆகாததை அகற்றும் கூர்மை இருபுறமும் கருக்குள்ள பட்டயத்திலும் கூர்மையான வேத வசனத்திற்கே உண்டு. வசனமானது நம்மை எச்சரித்து, ‘‘பிழைகளுக்கும், மறைவான குற்றங்களுக்கும், துணிகரமான பாவங்களுக்கும், பெரும் பாதகத்துக்கும்’’ நம்மை விலக்கிக் காக்கிறது (சங் 19:11-13).

கள்ளப் போதகர்கள் மக்களிருதயத்திலிருக்கும் தேவபயத்தைக் கொன்றுவிடுவர். விடுதலை என்ற பெயரில் பாவம் செய்ய விடுவிப்பு கொடுத்துவிடுவர். தன்னைப் பிரியப்படுத்த அல்ல, தேவனைப் பிரியப்படுத்தவே கிறிஸ்தவன் விடுதலை பெற்றிருக்கிறான்! சில பிரசங்கிகளுக்கு ‘‘எப்படிச்’’ செய்கிறோம் என்பதைவிட ‘‘என்ன’’ செய்கிறோம் என்பதே முக்கியம். அவர்களுக்கு முறையல்ல, முடிவுதான் முக்கியம். இவ்விதப் போதனைகளினால்தான் ஊழி

யங்களில் எல்லாவித அட்டூழியங்களும் தலைவிரித்தாடுகின்றன. பிரியமானவரே, பரிசுத்தத்திற்குக் கிரயம் செலுத்த வேண்டும். பரிசுத்தமாகுதல், தன்னல மறுப்பு ஆகிய பிரசங்கங்களுக்கெல்லாம் கிராக்கியில்லாததால் பரிசுத்த வாழ்வுக்குச் சவால்விடும் ஊழியரின் எண்ணிக்கை குறைந்துவருகிறது. மக்களைப் பரிசுத்தமாக்குவதல்ல, பரவசமாக்குவதே நிகழ்ச்சிகளின் நோக்காகிவிட்டது. ஆனால் சர்தையிலும் தங்கள் உடைகளைக் கறைப்படுத்திக்கொள்ளாத ''ஒரு சிலர்'' உண்டு! அவர்கள்தான் முக்கியமானவர்கள். அவர்களோடு சேர்ந்துகொள்ளுங்கள்!

### 4. இவ்வுபதேசம் வலியுறுத்துவது விவிலியத்தையா, வெறுமனே உணர்ச்சிகளையும் அனுபவங்களையுமா?

விசுவாசத்தில் வளருவதே கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சி யாகும். ஆசரிப்புக்கூடாரத்தில் அருமையானதொரு விளக்கமுண்டு. வெளிப்பிரகாரத்தில் சூரியவொளியும், உட்பிரகாரத்தில் விளக் கொளியும், மகா பரிசுத்த ஸ்தலத்திலோ இருள் மட்டுமே உண்டு. மகா பரிசுத்த ஸ்தலத்தில் தரிசித்து அல்ல, விசுவாசித்தே நடக்க முடியும் (2 கொரி 5:6).

மறுரூப மலையில் கிறிஸ்துமீது மகிமை இறங்கியதையும், பிதா வின் சத்தம் உண்டானதையும் நேரில் கண்ட, கேட்ட உன்னத அனுபவம் பேதுருவுக்கிருந்தது. ஆனால் கிறிஸ்துதான் மேசியாவென நிரூபிக்க ''அதிக உறுதியான'' தீர்க்கத்தரிசன வசனத்தையே முதன்மையாக வைக்கிறார் (2 பேது 1:16-21). தாங்கள் கண்ட தரிசனங்கள், கேட்ட சத்தங்கள், பறந்துசென்ற அனுபவங்கள் இவை களையே ''தவறாதவை'' எனச் சாதிக்கும் ஊழியர் கூட்டம் இன்று ஏராளம். மக்கள் அதை நம்பாவிடில் தேவ கோபம் இறங்குமெனவும் பயங்காட்டுவர்! மாறாக, ஏராளம் தரிசனங்களும் வெளிப்பாடுகளும் பெற்றிருந்த பவுலின் தாழ்மையைப் பாருங்கள்: ''நானறியேன், தேவனறிவார்; நானறியேன் தேவனறிவார்'' எனத் திரும்பத் திரும்பச் சொல்லுவதைக் கவனியுங்கள். மட்டுமல்ல, அவர் பெருமிதம் கொள்வது ''பலக்குறைவுகள், நிந்தைகள், நெருக்கங்கள், துன் பங்கள், இடுக்கண்கள்'' போன்றவை மீதுதான் (2 கொரி 12:1-11).



''நான் ஒன்றுமில்லை'' என்பதே அவரது முடிவான கொள்கை! நவீன மேடைகளிலுள்ள அகங்காரப் பிரசங்கிகளையல்ல, பவுலையே நான் பின்பற்றுவேன்.

நமது தேவன் அற்புதங்களின் தேவன். இன்று நமக்கு அடை யாளங்கள் தேவைதான். ஆனால் ''வசனத்தை வலியுறுத்தாத உபதேசமெதுவும் தினமும் அற்புதங்களைச் சோனாமாரியாய்ப் பொழிந்தாலும் அது எனக்குத் தேவையில்லை'' என்றார் மார்ட்டின் லூத்தர்! அப்படியே, தீர்க்கதரிசனம் உரைத்தல் ஆவியின் வரமா னாலும், உரைக்கப்பட்டது திருவசனத்துக்கு உடன்பட்டிருக்கிறதா என நிதானிக்குமுன் அதை ஏற்றுக்கொள்ளவேண்டியதில்லை (1 கொரி 14:29). நான் தரிசனம் எதுவும் கண்டதில்லை, சத்தம் எதுவும் கேட்டதில்லை; ஆனால் இரண்டும் உண்டு என்றறிவேன்; அதை எழுதப்பட்ட திருவசனத்திற்கு அடுத்துதான் வைப்பேன் (எரே 23:28,29).

### 5. இவ்வுபதேசம் தேவனது மகத்துவத்தை ஆராதிக்க வழிநடத்துகிறதா, மனிதனின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறதா?

''நீங்கள் தேவர்களைப்போல் இருப்பீர்கள்'' என்பதே மனிதனுக்கு வந்த முதல் சோதனை (ஆதி 3:5). சத்துருவானவன் தனது முறை களை மாற்றிக்கொண்டாலும் அவனது முக்கிய சோதனை இதுவே. இயேசுவுக்கு வந்த மூன்று சோதனைகளின் அடிப்படைக் கருத்து இதுவே. நினைவிருக்கிறதா?

மனிதனை மையமாகக்கொண்ட இத்துர்வுபதேசத்திற்கு எடுத்துக் காட்டுகள் ஏராளம். தேவனைக் கேள்வி கேட்பது ஓர் எடுத்துக் காட்டாகும். நமக்கு என்னதான் நிகழ்ந்தாலும் ஏன் என்று கேட்க உரிமையில்லை. நமக்குப் பதில் சொல்ல தேவனுக்குக் கட்டாய மில்லை. ''ஏன் கூடாது?'' என்று திருப்பிக் கேட்டுவிடுவார்! அப் படியே, நாம் ஒருபோதும் தேவனுக்குக் ''கட்டளையிட'' முடியாது. ஜெபிக்கலாம், மன்றாடலாம், அவ்வளவுதான். ஏசாயா 45:11ஐத் தவறாக அர்த்தப்படுத்துகிறோம். ''என் கரங்களின் செயல்களைக் குறித்து எனக்குக் கட்டளையிடுவீர்களோ?'' என்பதுதான் சரியான மொழியாக்கம். முன்னும் பின்னுமுள்ள வசனங்களை வாசித்துப்

பார்த்தால் இந்தக் கருத்து தெளிவாகும். தேவப்பிள்ளைகள் எனும் உறவில் நமக்குரிய ஆசீர்வாதங்களை ''உரிமைபாராட்டிக்'' கேட்க லாம். ஆனால் அதுவும் கல்வாரிப் புண்ணியங்களின் அடிப்படையில் தான்! ''அற்புதம் உங்கள் வாயில்தானிருக்கிறது'' என்று பிரசங்கிகள் மக்களைப் பார்த்துச் சொல்லக் கேட்டிருக்கிறேன். நான் இதை விசுவாசிப்பதில்லை. அற்புதம் தேவனது கையிலிருக்கிறது. அதைச் செய்வதும் செய்யாததும் அவரது விருப்பம். அவர் ஏகாதிபதி. விருப்பம்போல் மாற்றிக்கொள்ளப்படும் தத்துவங்களைக் குறித்துக் கவனம்!

ஆசீர்வதிக்கிறவரைவிட ஆசீர்வாதத்தைப் பற்றியே பேசும் உப தேசமும் சீரானதல்ல. ஆபிரகாமின் நகைப்பு ஈசாக்குதான். முதிர் வயதில் பிறந்த குழந்தையுடன் ஆபிரகாமும் சாராளும் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்திருப்பார்கள். அக்குமாரனையே பலியிடத் தேவன் பணித்தார். மகனை ஆபிரகாம் பலிபீடத்தில் கிடத்தியபோது தான் பலியாட்டைக் கண்டார்! இப்பொழுது ஆசீர்வாதமல்ல, ஆசீர்வதிக்கிறவரே அவருக்கு முக்கியம்!

இருபத்திநான்கு மூப்பருக்கும் கிரீடம் அணிவித்தவர் தேவனே. ஆனால் தேவனொருவரே தகுதியுள்ளவரானதால் அவர் பாதத்தில் கிரீடங்களைக் கழற்றி வைத்தனர். உண்மையான தீர்க்கதரிசியாகிய யோவான் ஸ்நானகனின் கோட்பாடு, ''அவர் பெருகவும் நான் சிறுகவும் வேண்டும்'' என்பதே! உண்மையான போதகனாகிய பவு லின் கோட்பாடு, ''நான் தினமும் சாகிறேன்'' என்பதே! புரிகிறதா?

### 6. இவ்வுபதேசம் என்னைத் தீவிர நற்செய்திப்பணிக்குள் நடத்துகிறதா, சோம்பேறியாய் உட்கார வைக்கிறதா?

அப்போஸ்தலன், தீர்க்கதரிசி, சுவிசேஷகன், மேய்ப்பன், போதகன் ஆகிய எந்த ஊழியனானாலும் அவனது பணி ''சுவிசேஷ ஊழியத் தின் வேலைக்காக'' இறைமக்களை ஆயத்தப்படுத்துவதேயாகும் (எபே 4:12,13). ''ஊழியமில்லா உபதேசம் கனியில்லா மரம்; உப தேசமில்லா ஊழியம் வேரில்லா மரம்'' என்றார் டால்பட் சேம்பர்ஸ் (1819-1896).



பாவிகளை இரட்சிக்கவே கிறிஸ்து உலகிற்கு வந்தார். பாவிகளைச் சந்திக்கப் பரிசுத்தவான்களை இயக்கவே ஆவியானவர் வந்தார். தேவனது நிகழ்ச்சி நிரலில் இன்று முக்கியமானது உலகு நற்செய்தி மயமாக்கப்படுவதே. ''அப்பொழுது முடிவு வரும்.'' வேதத்தின் இறுதி அழைப்பும் நற்செய்திப்பணியின் அழைப்பே! ''வாருங்கள், பருகுங்கள்!'' (வெளி 22:17).

நேராகவோ மறைமுகமாகவோ நற்செய்திப்பணியைத் தாக்கும் பிரசங்கிகள், போதகர்களைக் குறித்து எச்சரிக்கை! ஆத்துமாதாய உற்சாகத்தை அணைத்துப்போடப் பொதுவாக இரு உபதேசங்கள் திரித்துக் கையாளப்படுகின்றன. ஒன்று முன்குறித்தல் (Predestination) எனும் உபதேசம், அடுத்தது பூரணமாகுதல் (Perfection) எனும் உபதேசம். யாரெல்லாம் இரட்சிக்கப்படுவரென தேவனுக்குத் தெரியும்; எப்படியாவது அவர்களை அவர் இரட்சித்துவிடுவார்; நாம் அதில் ஒன்றும் செய்வதற்கில்லை என்பது முதல் விவாதம். ஆனால் ''எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட ... தேவன் சித்தமுள்ளவராயி ருக்கிறார்'' என்றும் ''எல்லா'' மனிதருக்காகவும் நாம் விண்ணப்பங் களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங் களையும் ஏறெடுக்கவேண்டுமென்றும் நாம் போதிக்கப்பட்டிருக் கிறோம் (1 தீமோ 2:1-4). காலையில் விதைக்கவேண்டும், மாலை யில் தளரக்கூடாது. ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். எது வாய்க்கும் என்று நாம் அறியோமே! (பிர 11:1-6).

பூரண உபதேசவாதிகள் இவ்விதம் விவாதிப்பார்கள்: ''நீயே பூரணமாகாதிருக்கையில் பிறருக்குப் பிரசங்கிக்கச் செல்லுவா னேன்?'' ஆனால், இவ்வுலகிலிருக்கையில் ஒருவரும் பூரணப்படு வதில்லை என்பதுதான் உண்மை. நடைமுறை வாழ்வை அழுத்திக் கூறும் அப்போஸ்தலன் யாக்கோபு கூறியுள்ளதைக் கேளுங்கள்: ''நாம் எல்லாரும் அநேகக் காரியங்களில் தவறுகிறோம்!'' (யாக் 3:2). உலக மெங்கும் பரவிச்சென்ற சீடர்களில் பூரணர் ஒருவருமில்லை. மேலை நாடுகளிலிருந்து இந்தியா வந்த ஒரு மிஷனரியும் பூரணரல்ல. அவர் கள் நாடுகளிலுமிருந்த பூரண உபதேசவாதிகளுக்குச் செவிமடுக்

காமல் இந்தியாவிற்கு வந்த மிஷனரிகளுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். மற்றபடி எனது பூட்டனார் விக்கிரகங்களை விட்டுத் திரும்பியிருக்கமாட்டார்; நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறக்கும் சிலாக்கியம் பெற்றிருக்கமாட்டேன்!

''வேறே ஆடுகள்,'' ''மற்ற பட்டணங்கள்,'' இதுவே இயேசுவின் இதயக் கதறலாயிருந்தது. கிறிஸ்துவின் இச்சிந்தையைத் தரித்து, பிற உபதேசங்களைத் தறிப்போம்! நற்செய்திப்பணியை ஊக்குவிக்காத எந்த உபதேசமும் வேண்டாம், வேண்டவே வேண்டாம்!

**7. இவ்வுபதேசம் அல்லது ஊழியம் ஆன்மீக ஒருமனத்திற்குள் நடத்துகிறதா, பிரிவினை உண்டாக்குகிறதா?**

சபையிலுள்ள அனைத்து ஊழியர்களின் நோக்கமும் விசுவாசிகளை ''ஆவியின் ஒருமைக்குள்'' காத்து ''அறிவின் ஒருமைக்குள்'' வழிநடத்துவதே (எபே 4:3,11). ''நான் இவர்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் ... அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்க ... வேண்டிக்கொள்கிறேன்'' என்றார் இயேசு (யோ 17:20,21).

பிரிவினைகளெல்லாம் பொதுவாக நபர்களைச் சுற்றித்தான். ''பவுலைச் சேர்ந்தவன் ... அப்பொல்லோவைச் சேர்ந்தவன் ... கேபாவைச் சேர்ந்தவன்!'' இது தவிர்த்து நான்காவது குழு ஒன்றுமுண்டு ''கிறிஸ்துவைச் சேர்ந்தவன்'' சபைப்பரிவு பாகுபாடற்றவன்? சபைக்குப் பெயர் வைத்தது தேவன்; பெயர் பிரித்தது மனிதன்! (What God nominated, man has denominated!) பிரிவினை பாவம். சபைப் பிரிவு பாகுபாடுகளை முழுக்க முழுக்க எதிர்த்துப் பேசிவிட்டு முடிவில் பல சபைகளில் திருப்தியில்லாது வெளிவந்தோரையெல்லாம் சேர்த்து இன்னொரு சபைப்பிரிவு உண்டாக்கும் பிரசங்கிகள் பலருண்டு. இதற்கு முடிவேயில்லை!

ஒரு சில உபதேச வலியுறுத்தல்களினாலும் பிரிவினைகள் உண்டாகின்றன. தேவனது ''முழு'' ஆலோசனையில் ஒருசில ''பகுதிகள்'' மட்டும் அளவுக்கு மீறி அழுத்தப்பட்டு மற்றவை விட்டுவிடப்படு



கின்றன. இது ஓரத்திற்கும் பிரிவினைக்கும்தான் வழிநடத்தும். சமநிலை இழக்கப்படுகிறது. ''தேனைக் கண்டுபிடித்தாயானால் அளவாய்ச் சாப்பிடு; அளவில்லாது சாப்பிட்டால் வாந்திபண்ணுவாய்!'' (நீதி 25:16). நல்லதோர் அறிவுரையல்லவா?

பிரிவினைகளுக்கு வழிவகுத்த ஒருபுறச்சாய்வுக்கான எடுத்துக் காட்டுகள் சபைச் சரித்திரத்தில் ஏராளம். எப்பொழுது பார்த்தாலும் ஞானஸ்நானம், ஞானஸ்நானம் என்று பேசிக்கொண்டிருந்ததால் பாப்திஸ்து சபை! சபையில் பெண்கள் பேசுவதையே எப்பொழுது பார்த்தாலும் எதிர்த்துக்கொண்டிருந்ததால் பிரதரன் சபை! எப்பொழுதும் பாஷை, பாஷை என்றதால் பெந்தெகொஸ்தே சபை! ஓய்வுநாள் ஓய்வுநாள் என்றதால் ஏழாம் நாள் ஓய்வுக்காரர் சபை! இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்!

ஐந்து குருடர் ஒரு யானையைத் தடவிப்பார்த்து அது என்ன என்று சொல்லத் துவங்கினார்களாம். ஒருவன் அது ஒரு சுவர் என்றானாம். அடுத்தவன் அது ஒரு கயிறு என்றானாம் ... மன்னிக்கவும், உங்களுக்குத்தான் கதை தெரியுமே! மறந்துவிட வேண்டாம்!



# 34

# திசை திருப்பும் உபதேசங்கள்
## Disturbing Doctrines

**முகவுரை**

இயேசுவின் பிறப்பு சாத்தானின் ராஜ்யத்திற்கு ஓர் அச்சுறுத்தல்.
தனது சிறைக்கைதிகளை இழந்துவிடுவேனோ எனும் பயம்.
எனவே அவன் முயன்றது —

- குழந்தை இயேசுவைக் கொல்ல ...
- ஆலயக் கோபுரத்திலிருந்து அவரைக் கீழே தள்ள ...
- சிலுவைக்குப் போகாது அவரைத் தடுக்க ...
- அவர் உயிர்த்தெழவில்லையென வதந்தி பரப்ப ...
- துன்புறுத்தல், இரத்தசாட்சி மரணங்கள் மூலம் ஆதிச்சபையின் நற்செய்திப்பணியை நிறுத்த ...
- வழிவிலகிச் சோரம்போகச் சபையைத் திசைதிருப்ப ...

(எ.கா. வெளி 2 & 3)

ஆனால் அவன் முழு வெற்றியடையவில்லை.
*''பாதாளத்தின் வாசல்கள் திருச்சபையைக் கட்டுதலை மேற்கொள்ள முடியவில்லை''* (மத் 16:18)

சாத்தானின் இன்றையத் தந்திரம் —
சில வேதவுபதேசங்களை ஓரக் கொள்கைகளாய் வலியுறுத்தி,
நற்செய்திப்பணியைச் சாரமற்றதாக்கி,
இறைமக்களது மிஷனரித் தரிசனத்தை மங்கச் செய்வது.

இதை நமது நவீனப் பிரசங்கபீடங்களிலிருந்து செய்கிறான் —
2 கொரி 11:14,15 ... *ஒளியின் தூதன் & நீதியின் ஊழியர்*



இவ்வுபதேசங்கள் முழுவதும் தவறாயிருக்காது;
ஆனால் பாதிதான் சரியாயிருக்கும்!
இவை கவர்ச்சியாயிருந்தாலும் மிஷனரிப் பணியின்
முக்கியத்துவத்திலிருந்து நம்மைத் திசைதிருப்பும் —
மாற் 13:10 ... *சுவிசேஷம் ... முந்தி ... பிரசங்கிக்கப்படவேண்டும்*

**திசை திருப்பும் உபதேசங்கள்** —

**1. பூரணப்படுதல் உபதேசம்** (Perfection Doctrine)

நாம் தேவனைப்போலப் பரிசுத்தமாகிப் பூரணமடைய
வேண்டுமென்பது அவர் சித்தம்.
ஆனால், தேவ மக்கள் பூரணப்படும்வரை மற்றவர்களுக்குப்
பிரசங்கிக்கக்கூடாதென்று இவ்வுபதேசத்தின் ஓர் ஓரம்
வலியுறுத்துகிறது. தகுதியில்லை என்ற உணர்வையே
இது இரத்த நாளங்களுக்குள் செலுத்திவிடுகிறது.

எ.கா.) 99 ஆடுகள் vs. 1 ஆடு
என்பதைத் தவறாய் வியாக்கியானப்படுத்துதல்.

அதாவது, உள்ளேயிருக்கும் 99 ஆடுகள் பூரணப்படாதிருக்க,
வெளியேயிருக்கும் ஒன்றைப்பற்றிக் கவலையேன்?

ஆனால் இந்தியாவில், ஒன்றுதான் உள்ளே, 99 வெளியே!

- பூரணப்படுதலின் 3 நிலைகள்

(1) குறிப்பிட்ட வேளையில் — நீதிமானாக்கப்படுதல்
நடப்பது (crisis) (குணப்படுதல்).
*நாம் பாவமே செய்யாதவர்போல் ...*

(2) நெடுகவே நடப்பது — பரிசுத்தமாகுதல் (கிறிஸ்தவ வாழ்வு)
(process) *நாம் பாவம் செய்யாதபடி ...*

(3) குறிப்பிட்ட வேளையில் — மகிமைப்படுதல் (மறுவருகை)
நடப்பது (crisis) *நாம் பாவம் செய்யமுடியாதபடி ...*

எங்ஙனம்? (1) கல்வாரியில் முடிக்கப்பெற்றது
(2) பெந்தெகொஸ்தே வல்லமை
(3) மறுவருகையின் மகிமை

பூரணப்படுதல்: ''நிலையிலிருந்து நடைக்கு''
(கொலோ 2:9,10 / மத் 5:48) (From standing to state)

■ உடனே சாட்சி பகரத் துவங்கியோர் —

- ☐ சமாரியப் பெண்மணி (யோ 4:28-30)
- ☐ பிசாசு பிடித்திருந்தவன் ... *''போய் அறிவி''* (மாற் 5:19)
- ☐ அவர்களது குறைவுகளோடு சீடர்கள் (மத் 28:16-20)
- ☐ அப்போஸ்தலன் பவுல் ... *''உடனே''* (அப் 9:19,20)

பேராயர் ஸ்டீபன் நீல்:
''ஒரு பிச்சைக்காரன் இன்னொரு பிச்சைக்காரனிடம் சோறு எங்கே கிடைக்கிறது என்று சொல்வதே நற்செய்தியறிவிப்பு!''

சேவை செய்யவே இரட்சிக்கப்பட்டோம்!
சேவை செய்யவே பரிசுத்தமாக்கப்பட்டோம்!
Saved to Serve! Sanctified to Serve!

**உ. வளவாழ்வு உபதேசம்** (Prosperity Doctrine)

*''ஜீவனைக் கொடுக்கவும் அது பரிபூரணப்படவுமே''*
இயேசு வந்தார் என்பது உண்மை (யோ 10:10)

ஆனால் பாடுகளும் தியாகமும் இல்லாத வாழ்வை
அவர் வாக்குப்பண்ணவில்லை.

''ஆரோக்கியம் & ஆஸ்தி'' (Health & Wealth)
''கேட்பதெல்லாம் கிடைக்கும்'' (Name it, Claim it!)

கிறிஸ்தவ வரலாற்றில் பிரபலமான உபதேசம் இதுவே; ஏனெனில் இது கொஞ்சத்திற்கு நிறைய வாக்களிக்கிறது.

பாடுகளும் தியாகமும் இல்லாது மிஷனரிப்பணியேது? —
1 கொரி 4:9-13



சுகபோக வாழ்வு உபதேசக்காரர் எபிரெயர் 11இன் முதல் பகுதியை வலியுறுத்திப் பின்பகுதியை விட்டுவிடுகின்றனர் (வச 35-38)

- ப.ஏ. vs. பு. ஏ. (உபா 28:1-14 vs. *ஆன்மீக ஆசிகள், விசுவாசத்தில் செல்வந்தர்*)

■ செழிப்பு நிறைவு மிஷனரிப்பணியுடன் இணைக்கப்பட வேண்டும் —

☐ கூடாரங்களில் வாழ ஆபிரகாம் கோபுரங்களை விட்டார்.
(அவரது வீட்டிலேயே 318 வேலைக்காரர் பிறந்தனர் என்றால் கற்பனை செய்துபாருங்கள்! — ஆதி 14:14)
(அமெரிக்காவை விட்டு ஆப்பிரிக்கா செல்வது இந்தியாவை விட்டு அமெரிக்கா செல்வதிலும் கடினம்!)

☐ *''என் தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்''*
பிலி 4:19 ... மிஷனரிச் சிந்தையுள்ளோர் (வச 15,16)

☐ *''உன் ஆத்துமா வாழ்வதுபோல ...''*
3 யோ 2 ... மிஷனரிகளைத் தாங்குவோர் (வச 5-8)

அதாவது, பிறரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது நமது வாழ்க்கையை மேம்படுத்தும்!

ஆனால், சுகபோக வாழ்வுப் பிரசங்கிமார் தலைவாங்கிகள் நடுவில் அல்ல, வசதி படைத்தோர் நடுவிலேயே ஊழியம் செய்வர்!

— கோடீஸ்வரனாயிருந்த C.T. ஸ்டட் (1862-1931)
ஒரு மின்விளக்குகூட இல்லாது ஆப்பிரிக்கக் காடுகளில் எளிய வாழ்க்கை நடத்தினார்.

— அநேக மிஷனரிகளின் உடல் நலம் கெட்டிருக்கிறது ...
மலேரியா / வயிற்றுப்புண் / சிறுநீரகக் கல் / மூளைக் காய்ச்சல்...

ஹாலிவுட் பாணியில் வாழும் சுவிசேஷகரைத் தொலைக்காட்சியில் பார்ப்பதைவிட, மிஷனரிகளின் சரிதைகளை வாசியுங்கள்.

**3. வல்லமை உபதேசம்** (Power Doctrine)

ஆவியானவரின் வல்லமையிலும் வரங்களிலும் மக்களுக்குள்ள புத்தார்வத்திற்காய்த் தேவனைத் துதிப்போம்.

அதே வேளையில், பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை மறந்துவிடக்கூடாது —

□ அப் 1:8 ... வசதிப்படி சாட்சி சொல்வதல்ல,
தீவிர நற்செய்திப்பணி,
திட்டமிட்ட மிஷனரி ஊழியம் —
*''எருசலேம் முதல் உலகின் **முடிவெல்லை** வரை''*

□ ஆவியின் வரம் —
அப் 2:38,39 ... ***''தூரத்திலுள்ள** யாவருக்கும் ...''*

□ பவுலின் வல்லமை ஊழியம் —
ரோ 15:19-21 ... *''எருசலேம் துவக்கி இல்லிரிக்கம் வரை ...
கிறிஸ்துவின் பெயர் **சொல்லப்பட்டிராத**
இடங்களில்''*

உங்கள் பைபிளின் கடைசிப் பக்கங்களில் அவரது மிஷனரிப் பயணங்களைப் பாருங்கள்!

□ தீமோத்தேயுவுக்குப் பவுல் —
2 தீமோ 1:7,8,11 ... *பலமுள்ள ஆவி ... கட்டுகள் ...*
***புறவினத்தார்***

தொலைவிடங்களில், நெடுங்காலமாய், உத்தமமாய் உழைத்துவரும் மிஷனரிகளைச் சில ''வல்லமை'' உபதேச ஊழியர் பகடிபண்ணுவர். இம்மிஷனரிகளது பணியில் ***அற்புதங்கள்*** இல்லையாம்!

- யோவான் — *''எலியாவின் ஆவியும் வல்லமையும்''* —
ஆனால் அற்புத அடையாளங்கள் இல்லை.
யோ 10:41 ... அற்புதங்கள் இல்லை, ***செய்தி*** இருந்தது!

வனாந்திரத்தில் ஒரு ''குரல்!''

செத்துப்போன எவரையும் அவர் எழுப்பவில்லை;
செத்துக் கிடந்த நாட்டையே எழுப்பிவிட்டார்!



- ஏமி கார்மைக்கல் அம்மையார் (1861-1951) அற்புதம் செய்ய வில்லை; ஆனால் கோவில் விபசாரப் பழக்கத்தை எதிர்த்தார்.
- வில்லியம் கேரி (1761-1834) உடன்கட்டையேறுதலை நிறுத்தினார்.
- Dr. ஐடா ஸ்கடர் (1870-1959) ... மூட நம்பிக்கைகளினால் அவதியுறும் பெண்களுக்கு மருத்துவ உதவி.
- டேவிட் லிவிங்ஸ்டன் (1813-1873) அற்புதம் எதுவும் செய்ய வில்லை; ஆனால் இருண்ட ஆப்பிரிக்காவிற்குள் நுழைய வழிவகுத்தார்.
இன்று திருச்சபை வளர்ச்சி அதிகம் ஆப்பிரிக்காவில்தான்.

இந்த மிஷனரிகளெல்லாம் அந்தகார சக்திகளுக்கெதிராய்ப் போராடினர்!

ஆனால் புகழ்பெற்ற இந்திய வல்லமை சுவிசேஷகர் ஒருவர் என்னிடம், ஆதிவாசிப் பகுதிகளுக்குள் போவது ஆபத்து, என்றார்!

□ ஆன்மீகப் போராட்டம் —
எபே 6:10-20 ... *காலணிகள் ... பட்டயம் ... கட்டுகள்*

□ பாம்புகள், கரடிகள் நிறைந்துள்ள காடுகளில் வசிக்க விசுவாசம்
மாற் 16 / அப் 28 (மால்டா தீவினர்)

□ சிரிப்பதற்கும், கீழே விழுவதற்கும், உறுமுவதற்கும், ஊர்வதற்கும், குரைப்பதற்குமா வல்லமை?

**4. துதி விண்ணப்ப உபதேசம்** (Praise & Prayer Doctrine)

திருச்சபை ஆதிநிலையடையும் காலத்தில் வாழ்கிறோம். துதிப்பதும், ஜெபிப்பதும் ஆதிநிலைக்கு வரவேண்டிய உபதேசமும்ஆன்மீகப் பயிற்சியுமாகும்.

இதிலும்கூட ஒன்றுக்காய் ஒன்றை விட்டுவிட்டோம்.

''தொழிலே தொழுகை'' என்கின்றனர் அவிசுவாசிகள்! விசுவாசிகளோ தொழுகையையே தொழத் துவங்கிவிட்டனர்!

கீழ்க்கண்ட வசனங்களைப் பாருங்கள் —

- எபி 13:15,16 ... *ஆனால் நன்மை செய்ய மறவாதிருங்கள்*
- 1 பேது 2:5 ... *பரிசுத்த ஆசாரியர்* ... ஆராதிக்க (Praise)
  :9 ... *ராஜரீக ஆசாரியர்* ... அறிவிக்க (Proclaim)

  பரிசுத்த கரங்கள் உயரட்டும்... அழகிய பாதங்கள் நடக்கட்டும்!
- நெகே 8:10 ... *கர்த்தருக்குள் மகிழ்ச்சி ... பங்குகளை அனுப்புங்கள்*
- ஆமோஸ் 6:1அ,5,6 ... *சீயோன் ... ஐயோ ... வாத்தியங்கள் ... யோசேப்பு*
- காயப்பட்டுக் கிடந்தவனைக் கவனிக்க முடியாத அளவு ஆசாரியனும் லேவியனும் மார்க்கத்தில் விறுவிறுப்பு (லூக் 10:30-32)
- அப் 2:47 ... *தேவனைத் துதித்து ... மனிதரிடம் தயவு ... கர்த்தர் சேர்த்து வந்தார்.*
- சங் 67:1,2 ... தேவனுக்காய் நாம் பிரகாசிக்கும்படி அவர் முகப்பிரகாசம் நம்மீது.

தொழுகை என்பது நம்மைப் பரவசப்படுத்த அல்ல, நம்மைப் பக்குவப்படுத்திப் பலப்படுத்திப் பாழுலகிற்குள் அனுப்பவே.

அப்படியே ***ஜெபமும்*** —

ஜெபத்தைத் தொடர்ந்து புறப்பட்டனர் (லூக் 10:2,3).
பரிசுத்த பர்வதம் ... *இங்கேயிருப்பது நமக்கு நல்லது;*
இங்கிருந்து இறங்குவது மக்களுக்கு நல்லது! (மாற் 9:1-27)

## 5. தீர்க்கதரிசன உபதேசம் (Prophecy Doctrine)

தீர்க்கதரிசனம் சொல்லுதல் ஆவியானவரின் அழகிய வரம். மக்களோ ''தனிப்பட்டதும்'' ''முன்னறிவிப்பதுமான'' தீர்க்கதரிசனங்களிலேயே அளவுக்கு மீறிய ஆர்வம் காட்டுகின்றனர் —

பழைய ஏற்பாடு — பிரதானமாக முன்னறிவிப்பு (foretelling)
புதிய ஏற்பாடு — முக்கியமாக நேரடியறிவிப்பு (forthtelling)



அப் 2:17... *மனுவுடலுள்ள யாவர்மீதும் ...*
குறிப்பிட்ட குழுமீது மட்டுமல்ல.

''வாலிபரும் நங்கையரும்'' தங்கள் முதியோர் எப்பொழுது சாவார்கள் என்றா தீர்க்கதரிசனம் உரைப்பர்?

அவர்களது தீர்க்கதரிசனம் யாது?
*''தேவனது மகத்துவங்கள்''* (வச 11)
*''இயேசுவைப்பற்றிய சாட்சி''* (வெளி 19:10)

- முதல் மிஷனரிகளே தீர்க்கதரிசிகள்தான்!
  அப் 13:1-4 ... *பவுல் ... பர்னபா ...*
- பவுல் ஒரு தீர்க்கதரிசி — எனவேதான் தீர்க்கதரிசினிகளும் தீர்க்கன் அகபுவும் அவரை நிறுத்த முடியவில்லை —
  *''அழுது என் இதயத்தை உடைக்காதீர்!''*
  (உணர்ச்சிவசம்) (அப் 21:8-14)
  பவுல் செய்ததுதான் சரி: அப் 23:11
- இன்று நமக்குத் தேவையான தீர்க்கதரிசனங்கள் —

☐ ''இந்த மொழியில் பைபிள் இல்லை;
இந்தச் சபை அதின் பொறுப்பை எடுக்கட்டும்!''

☐ ''தேவைக்கு அதிகமாக இவரிடம் பணமிருக்கிறது; அந்த ஆதிவாசியினருக்காய் இவர் அதை முதலீடு செய்யட்டும்.''

☐ ''இப்பகுதியில் நிறைய சபைகள்;
இந்தச் சபை இவ்விடத்தை விட்டு யாத்திரிகர்கள்,
சாதுக்களைச் சந்திக்க இமயக் காடுகளுக்குச் செல்லட்டும்.''

## 6. முன்குறித்தல் உபதேசம் (Predestination Doctrine)

ரோ 8:30 ... *எவர்களை முன்குறித்தாரோ ...*

யாரெல்லாம் தமது அழைப்பை ஏற்பர் என்று தேவனுக்குத் தெரியாமலா இருக்கும்?
*''ஆதிமுதல் அந்தத்தை அறிந்த''* அவருக்கு ஆச்சரியங்கள் இருக்கமுடியுமா?

- அவரது அழைப்போ ***அனைவருக்கும்*** —
  மத் 11:28 ... *பாரம் சுமப்போரே, நீங்கள் எல்லாரும் ...*
  தெரிந்தெடுத்தல் இருப்பதால்தான் நற்செய்திப்பணி!
- ***அனைவரும்*** இரட்சிக்கப்படவேண்டுமென்பது அவர் விருப்பம்
  1 தீமோ 2:1,4,6
  (வச 1) நமது ஜெபம், (வச 4) தேவ விருப்பம், (வச 6) கிறிஸ்துவின் பலி
- ***எல்லா*** மனிதரையும் சந்திக்கவேண்டுமென்பதே அவர் ஆணை
  மாற் 16:15,20

நாம் தெரிந்தெடுக்கக்கூடாது: *''உலகம் எங்கும்''*
*''சர்வ சிருஷ்டி''* *''அவர்கள்* ***எங்கும்*** *புறப்பட்டுச் சென்றனர்.''*

- சுவிசேஷம் கேள்விப்படாது இறப்போரின் நிலை?
  — இது தேவனது வேலை / பொறுப்பு!
  அவர் நீதியுள்ள நியாயாதிபதி ... (ரோ 2:11-16)

பரலோகமும் நரகமும் நித்திய நிசம்.

''எவரையும் நரகத்திற்கு அனுப்பமுடியாத அளவு தேவன் அன்புள்ளவர்'' என்று சொல்லாதீர்.

''எந்தப் பாவியையும் பரலோகத்திற்குள் அனுமதிக்கமுடியாத அளவு அவர் பரிசுத்தர்!''

**7. ஒத்திப்போடுதல் உபதேசம்** (Postponement Doctrine)

இரு சாக்குப்போக்குகள்:

அ) முதலாவது எழுப்புதல் வரட்டும் எனும் வாதம்!
சாதகச் சூழ்நிலைக்காய்க் காத்திராதீர் (பிர 11:4-6)

சுவிசேஷம் என்பது காலப் பயிர் அல்ல —
2 தீமோ 4:1-5 ... நவீன உபதேசங்களுக்கு எச்சரிக்கை!

*சுவிசேஷகனுடைய வேலையைச்* செய்துகொண்டேயிருங்கள்.

எழுப்புதல், சுவிசேஷமயமாக்குதல் ஆகிய இரண்டுக்கும் சேர்த்து உழைக்கவேண்டும் —



எழுப்புதல் = பரிசுத்தவான்களுக்கு
சுவிசேஷமயமாக்குதல் = பாவிகளுக்கு

*''இன்றே இரட்சண்ய நாள்''* ... (2 கொரி 6:2)

ஆ) கிறிஸ்து அவ்வளவு சீக்கிரம் திரும்பமாட்டார் எனும் எண்ணம்!
ஆமோஸ் 6:3,6

ஒவ்வொரு பாவியையும் சந்திக்க நமக்குக் காலம் தரவே தாமதம் (2 பேது 3:9)

அவரது வருகையைத் துரிதப்படுத்துவோம் —
மத் 24:14 ... *எல்லா நாட்டினருக்கும் சுவிசேஷம் ... முடிவு*

**முடிவுரை**

- எந்தவொரு உபதேசத்தையும் அளவுக்குமீறி வலியுறுத்தாதீர்.
- கலப்பையிலிருந்து கையெடுக்காதீர் —
  அப்பொழுது வேறு எதுவும் உங்களைக் கவர்ந்திழுக்காது!
- எத்தனையோ சக்திகள் உங்களைத் திசை திருப்ப முயலும். நெகேமியாவின் முழக்கமே உங்களுடையதாகட்டும் —
  *''நான் இறங்கிவரக்கூடாது!''*

■

*ஆவியின் எழுப்புதல் மண் மீதிலே*
*வாலிபரின் மூலம் இந்நாளிலே*
*பரவியெங்கும் கனிதரவே*
*நெகேமியாக்கள் எழுகின்றனர்!*

*இயேசு ராஜன் கட்டளைப்படியே*
*மாபெரும் பணியைச் செய்கின்றோம்,*
*பெரிய இவ்வேலை விட்டிறங்கமாட்டோம்!*

— மிஷனரி K. பொன்ராஜ் ஐசக்

**35**

# ஆவிகளைச் சோதித்தறிவது எப்படி?

## How to discern the spirits

எழுப்புதல் காலங்களில் ''அந்நிய அக்கினியும்'' சேர்ந்தே எரிவதைச் சபைச் சரித்திரம் நெடுகவே கண்டிருக்கிறது. ஒவ்வொரு தலைமுறையிலுமுள்ள சபையானது இவ்வித அக்கினியைக் குறித்து முன்னெச்சரிக்கப்படவேண்டுமென ஆதி அப்போஸ்தலர் விரும்பியிருந்தனர். முன்னெச்சரிக்கப்பட்டால்தான் முன்னதாக ஆயுதமணிந்து நிற்கலாம். இதனால்தான் அவர்கள் தேவ மக்களை ''வேறொரு இயேசு,'' ''வேறொரு சுவிசேஷம்,'' மற்றும் ''வேறொரு ஆவி'' ஆகியவை குறித்து எச்சரித்தனர் (2 கொரி 11:4). இவ்விதமானதோர் எச்சரிப்பை விடுக்கையில் அப்போஸ்தலன் யோவான் தனது வார்த்தைகளில் தெளிவாயிருந்தார். அவர் சபைக்கு எழுதியது: ''பிரியமானவர்களே, உலகத்தில் அநேகம் கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று ***சோதித்தறியுங்கள்''*** (1 யோ 4:1).

தேவனது உண்மை ஊழியரைவிடக் கள்ளத் தீர்க்கரும் கள்ளப் போதகருந்தான் அதிகம் போலத் தோன்றுகிறது. ''***அநேகம்*** கள்ளத் தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதால் ...'' (1 யோ 4:1). ''கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள் ... அந்நாளில் ***அநேகர்*** என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! ...'' (மத் 7:15,22). ''***அநேகர்*** வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு ... ***அநேகரை*** வஞ்சிப்பார்கள்'' (மத்24:5). ''***அநேகரைப்*** போல நாங்கள் தேவ வசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல் ...'' (2 கொரி 2:17). ''***அநேகர்*** வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்'' (பிலி 3:18). ''பிள்ளைகளே, இது கடைசிக்காலம் ... இப்பொழுதும் ***அநேக*** அந்திக்கிறிஸ்துக்கள் இருக்கிறார்கள்'' (1 யோ 2:18). ஆம், எதிரி



பொதுவாக ''வெள்ளம்'' போலவே வருவான் (ஏசா 59:19). கள்ள ஊழியரைப்பற்றிப் பேசும்போது இயேசு ''மழை,'' ''வெள்ளம்'' மற்றும் ''காற்று'' ஆகிய பதங்களைப் பயன்படுத்தினார் (மத் 7:15,25). அப்படியே அப்போஸ்தலன் பவுல் பலவிதப் போதகக் ''காற்று'' மற்றும் ''அலைகள்'' எனக் குறிப்பிட்டார் (எபே 4:14). இவ்வித ஒப்புமைகளெல்லாம் துர்வுபதேசங்களின் வாரிக்கொண்டுபோகும் தன்மையைச் சித்தரிக்கின்றன. பரிசுத்த ஆவியானவரும் மழைக்கும் காற்றுக்கும் தண்ணீருக்கும் ஒப்பிடப்பட்டுள்ளார். ஆனால் சாத்தான் தந்திரமாய் இவற்றிற்குப் போலிகளை உருவாக்கி, ஆவியானவர்தான் அசைவாடுகிறாரென்று மக்களை நம்பச்செய்வான்.

''கடைசி நாட்கள்'' மற்றும் ''முடிவு காலம்'' போன்ற பதங்களைப் பயன்படுத்துகையில் அவற்றின் பொருளை நாம் சரிவர நினைவிற்கொள்ளவேண்டும். கடைசி நாட்களோ முடிவு காலமோ 2001 அல்லது 2011இல் தொடங்கவில்லை. இயேசுவானவரின் முதல் வருகையும் ஆவியானவர் இறங்கி வந்ததுமே கடைசி நாட்களைத் துவக்கின (எபி 1:1,2; அப் 2:16,17). முதல் நூற்றாண்டையே அப்போஸ்தலன் யோவான் ''கடைசி மணிநேரம்'' (last hour) என்றழைத்தார் (1 யோ 2:18).

புதிய ஏற்பாட்டுச் சபையின் அனைத்துவகை ஊழியர் மூலமாகவும் வேறே ஆவிகள் செயல்படமுடியும் (எபே 4:13). கள்ள அப்போஸ்தலர் (2 கொரி 11:13), கள்ளத் தீர்க்கதரிசிகள் (மத் 7:15), கள்ளச் சுவிசேஷகர் (வேறொரு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்போர்) (கலா 1:6-8), கள்ள மேய்ப்பர் (யோ 10:12), கள்ளப் போதகர் (2 பேது 2:1) என்றெல்லாம் வாசிக்கிறோம். முடிவு காலத்தின் முடிவுக்குள் நாம் வருகையில், வஞ்சிக்கிற ஆவிகள் மிகத் தீவிரமாய்ச் செயல்படும். இது பரிசுத்த ஆவியானவரால் ''வெளிப்படையாய்'' முன்னறிவிக்கப்பட்டுள்ளது (1 தீமோ 4:1). கவனக் குறைவான விசுவாசிகள் இதனால் ''விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்.'' வழிவிலகல் படிப்படியாகவும் அறியாமல் நடப்பதாகவுமிருக்கும் என்ற கருத்து மூல மொழியிலுண்டு. இது திடீரென்றோ முழுமையாகவோ இராமல் கொஞ்சங்கொஞ்சமாய் நடைபெறும். இந்நிலையின்

ஆபத்தை உணர்ந்த அப்போஸ்தலரில் ஒருவராகிய யூதா தனது நிருபத்தில் எழுதவிருந்த பொருளையே மாற்றிவிட்டார். இரட்சிப்பின் ஆசீர்வாதங்களைக் குறித்து ஆறுதலானதொரு நிருபம் எழுத உட்கார்ந்த அவர் ''ஒரே தரம் ஒப்புவிக்கப்பட்ட'' மூல வெளிப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நவீனக் காரியங்களுக்கு எதிராய்த் தைரியமாய்ப் ''போராடக்'' குரலெழுப்பினார் (யூதா 3). அவரது நிருபம் முழுவதையும் வாசித்துப் பாருங்கள்.

வேறே ஆவிகளால் ஆட்கொள்ளப்பட்டுள்ள ஊழியரை அப்போஸ்தலர் அனைவரும் முழுமூச்சாய் எதிர்த்தனர். இவர்களைப் பவுல் தனது நிருபங்களில் எவ்விதம் அழைக்கிறாரென்று கவனியுங்கள்: ''கபடமுள்ள வேலையாட்கள்'' (2 கொரி 11:13), ''கலகக்காரர்'' (கலா 1:7), ''கள்ளச் சகோதரர்'' (2:4), ''மயக்குகிறவர்கள்'' (3:1), ''நாய்கள், பொல்லாத வேலையாட்கள்'' (பிலி 3:2), ''சிலுவைக்குப் பகைஞர்'' (3:18), ''தந்திரக்காரர், கொள்ளைக்காரர்'' (கொலோ 2:4,8), ''வஞ்சிக்கிறவர்கள்'' (2:19), ''பொய்யர்'' (1 தீமோ 4:1), ''இறுமாப்புள்ளவர்'' (6:4), ''கெட்ட சிந்தையுள்ளோர்'' (6:5), ''வீண் பேச்சுக்காரர் ... கள்ளப் போதகர்'' (2 தீமோ 2:16), ''அரிபிளவை'' (2:17), ''பிசாசினால் பிடிபட்டிருப்போர்'' (2:26), ''எத்தர்கள், மோசம்போக்குகிறவர்கள்'' (3:13), ''வீண் பேச்சுக்காரர்'' (தீத் 1:10), ''கவிழ்த்துப்போடுகிறவர்கள்'' (1:11), ''வேதப் புரட்டர்'' (3:10). தனக்கடுத்து ஊழியத்தில் எழுந்து வந்துகொண்டிருந்த தீமோத்தேயுவுக்குப் பவுல் எழுதிய முதல் ஆலோசனையே இதைப் பற்றியதுதான்: ''வேற்றுமையான ***உபதேசங்களைப்*** போதியாதபடி அவர்களுக்குக் கட்டளையிடு'' (1 தீமோ 1:3).

சபையெங்கிலும் இந்நாட்களில் வினோதமான அநேக சம்பவங்களும் அனுபவங்களும் நடப்பதாய்க் கேள்விப்படுகிறோம். தாங்கள் பல்லாண்டுகளாய் ஜெபித்து எதிர்பார்த்த எழுப்புதல் இதுதான் எனக் கூறும் பிரசங்கிமாருமுண்டு. மக்கள் தரையில் விழுகிறார்கள், அடக்க முடியாமல் சிரிக்கிறார்கள், சிலர் வாந்தியெடுக்கிறார்கள், சிலர் கர்ஜிக்கிறார்கள், உறுமுகிறார்கள், மற்றவர்கள் தரையில் ஊருகிறார்கள். எழுப்புதலை அனுபவிக்கிறோம் எனக் கூறப்படும் கூட்டங்களில்



இவை போன்ற பல காரியங்கள் நடக்கின்றன. விசுவாசிகளுக்கு ஒரே குழப்பம். எது தேவனிடமிருந்து வருவது, எது அவரிடமிருந்து வருவதல்ல எனப் பகுத்தறிய முடியுமா?

ஆவியின் வரங்களை முழுக்க முழுக்க விசுவாசிக்கும், அப்பியாசிக்கும், நான் கிறிஸ்துவின் உடலாகிய சபைக்கு இன்று தேவையான அதிமுக்கிய வரம் ''ஆவிகளைப் பகுத்தறிதல்'' என்றே அழுத்திக் கூறுவேன். கிருபாவரங்களின் பட்டியலில் தீர்க்கதரிசன வரத்திற்கு அடுத்ததாக உடனே ''ஆவிகளைப் பகுத்தறிதல்'' சொல்லப்பட்டிருப்பது கவனத்திற்குரியது (1 கொரி 12:10). ஆவியின் மற்ற வரங்களைப் போலவே ஆவிகளைப் பகுத்தறியும் ''வரமும்'' ஒரு சிலருக்கே கொடுக்கப்பட்டாலும், பகுத்தறியும் ''கலையில்'' ஒவ்வொரு விசுவாசியும் தேறவேண்டும் (எபி 5:14). நிசமானதையும் போலியானதையும் சோதித்தறிய தேவன் நமக்குக் குறைந்தது நான்கு ஏதுக்களைத் தந்துள்ளார் —

**1. திருவசனத்தின் மூலம் சோதித்தறிதல்** (Scriptures)

பரிசுத்த ஆவியானவர் இறங்கிய பெந்தெகொஸ்தே நாளானது யூதச் சரித்திரத்தில் அசாதாரணமானதொரு நிகழ்வாகும். மேலறைச் சம்பவங்களைக் கவனித்தோர் மிகுந்த குழப்பமடைந்தனர். தாங்கள் கண்ட வினோதமான காரியங்களைக் குறித்து ''இதெப்படி? ... இதென்னமாய் முடியுமோ?'' என்றெல்லாம் வினவத் தொடங்கினர் (அப் 2:8,12). ''தீர்க்கதரிசியாகிய யோவேலினால் ***உரைக்கப்பட்டபடியே*** இது நடந்தேறுகிறது'' என்று சீடர்களின் புது அனுபவத்தைப் பேதுரு அப்போஸ்தலனால் விளக்கம் கூறமுடிந்தது (வச 16). எழுதப்பட்டிருந்த வேத வசனமே அந்த நாளில் ''கண்டது, கேட்டது'' யாவற்றிற்கும் அவர்களுக்கு முழு அதிகாரமும் அங்கீகாரமும் கொடுத்தது.

இந்நிகழ்ச்சியில் மட்டுமல்ல, தங்கள் வாழ்க்கை மற்றும் ஊழியம் முழுவதிலும் அப்போஸ்தலர் ***''எழுதப்பட்டிருக்கிறது''*** என்னவென்பதையே தங்களது செய்திகள் மற்றும் செயல்பாடுகள் யாவற்றிற்கும் உரைகல்லாய்க் கொண்டிருந்தனர். இதோ சில எடுத்துக்காட்டுகள் —

''விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று ***எழுதியிருக்கிறபடி***, ... விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம்'' (2 கொரி 4:13).

***''எழுதியிருக்கிறபடி*** மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக ...'' (1 கொரி 1:30).

''பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதில் செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று ***எழுதியிருக்கிறபடியால்***, நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்'' (ரோ 12:19; 14:10,11; 15:2,3).

தங்களிடமிருந்து விசுவாசிகள் என்னத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று அப்போஸ்தலர்கள் விரும்பினார்களென்று கவனியுங்கள்: ***''எழுதப்பட்டதற்கு மிஞ்சி*** எண்ணவேண்டாம் என்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொள்ளவும் ...'' (1 கொரி 4:6).

அதிமுக்கியமான இத்தத்துவத்தை அப்போஸ்தலர் எங்கிருந்து கற்றிருப்பர்? தமக்குப் பிதாவானவர் ஆவியை அளவில்லாமல் கொடுத்திருந்தும் ***''எழுதப்பட்டிருப்பதற்கு''*** உள்ளேயே செயல்பட்ட தங்கள் ஆண்டவர் கிறிஸ்துவிடமிருந்துதான் அதைக் கற்றனர். எழுதப்பட்ட திருவசனத்திற்கு மிஞ்சிச் செல்லக்கூடிய ஆவியின் அபிஷேகம் தனக்கிருக்கிறதென்று எவனாகிலும் நினைத்தால் அது என்னே மடமை!

குறிசொல்லுதல் மற்றும் அஞ்சனம் பார்க்குதலுக்கு எதிராய்ப் பேசிக்கொண்டிருந்த தீர்க்கன், ''வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும்'' என்று ஓங்கிச் சொன்னார் (ஏசா 8:19,20). அதாவது, திருவசன உபதேசத்திற்கும் அதற்கு இணையான திருவசன உதாரணங்களுக்குமே நாம் எப்பொழுதும் திரும்பவேண்டும். ''இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால்'' நமக்கு ''விடியற்கால வெளிச்சம்'' இராது. எழுப்புதல் என்றழைக்கப்படும் இன்றையச் சம்பவங்கள் பல இந்தப் பரீட்சைக்கு நிற்காது.

பிரியமானவர்களே, திருவசனத்திற்கு மிஞ்சிய வெளிப்பாடுகள் மற்றும் அனுபவங்களுக்கு எச்சரிக்கை! சில பிரசங்கிமார் யோவான் 20:30ஐச் சுட்டிக்காட்டித் தங்களது விகற்பமான வெளிப்பாடுகளுக்குப் புகலிடம் தேடுகின்றனர்: ''இந்தப் புத்தகத்தில் எழுதியிராத



வேறு அநேக அற்புதங்களையும் இயேசு செய்தார்.'' ஆனால் அடுத்த வசனத்தில்தானே யோவான் சொல்வதை இந்நவீன அனுபவக்காரர் வாசிக்கத் தவறிவிடுகின்றனர்: ''இயேசு, தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவர் நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும் இவைகள் எழுதப்பட்டிருக்கின்றன'' (வச 31). வேறு வார்த்தைகளில் சொன்னால், கிறிஸ்துவுக்குள்ளான நமது வாழ்க்கைக்குத் தேவையானது எழுதப்பட்டிருப்பதற்குமேல் ஒன்றுமில்லை, எழுதப்பட்டதே போதும்! ''அமைதியிலிருந்து (அதாவது, எழுதப்படாதவைகளிலிருந்து) விவாதியாதே'' என்பது வேத வியாக்கியானச் சட்டங்களில் முக்கியமானதொன்று (Do not argue from silence.) பைபிள் எங்கே நிறுத்துகிறதோ அங்கே நிறுத்திவிடவேண்டும். ''உன் பிதாக்கள் நாட்டின பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே'' (நீதி 22:28).

கி.மு. 200க்கும் கி.மு.100க்கும் இடையில் apocrypha (= மறைக்கப்பட்டவை) எனும் பல நூல்கள் எழுதப்பட்டன. எவரும் இவைகளைத் திருவசனமென்று ஒத்துக்கொண்டதேயில்லை. ஆனால் மரித்தோருக்காய் ஜெபிப்பது, நற்செயல்கள் மூலம் பாவ மன்னிப்பு பெறுவது போன்ற தங்களது செயல்பாடுகளைத் தற்காப்பதற்காய், சீர்த்திருத்தவாதிகளுக்கு எதிராய், ரோமன் கத்தோலிக்கர் 1546இல் மேற்குறிப்பிட்ட புத்தகங்களை விவிலியத்தோடு சேர்த்துவிட்டனர். எனவேதான் பழைய ஏற்பாட்டில் அவர்களுக்கு நம்மைப் போல் 39 அல்ல, 46 புத்தகங்கள் உண்டு. ஆனால் ரோமன் கத்தோலிக்கரே பின்னர் ஏற்றுக்கொண்ட புதிய ஏற்பாட்டில் ஒரு முறைகூட இந்த ''மறைக்கப்பட்ட'' ஆகமங்கள் மேற்கோள் காட்டப்படவில்லை!

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை நான் ஒரு புராட்டஸ்டன்ட்! ''புராட்டஸ்டன்ட்'' என்றால் ''தேவ கிருபைக்கும் தேவ வசனத்திற்கும் முரண்பாடானவைகளை எதிர்க்கிறவன்'' என்று பொருள். விவிலியம் பிரதானமானது (supreme) என்பது மட்டுமல்ல, விவிலியமே போதுமானது (sufficient) என்பதும் எனது முழக்கம். கிறிஸ்தவர்களே, ''புதிய'' காரியம் என்றெல்லாம் சொல்லப்படுபவைகள் பின்னே போகாதீர்கள்! புதிய உடன்படிக்கையில் எழுதப்பட்ட ஆசீர்வாதங்களே பரிபூரணமாயிருக்கின்றன. அவைகளிலேயே

திருப்தியடைந்திருங்கள். நவீனக் கவர்ச்சிகளை நாடிப்போகத் தேவையில்லாத அளவு ''நமக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்'' ஜீவத்தண்ணீரை இயேசு கொடுத்துவிட்டாரே! (யோ 4:14). இங்குதானே ஏவாள் தோல்வியடைந்தாள்! அவளைத் திருப்திப்படுத்த அத்தோட்டத்தில் அவ்வளவு இருந்ததே. அவளோ ''புசிப்புக்கு நல்லதும்,''அதாவது உடலுக்கு உணர்ச்சிவச அனுபவங் களைத் தருகிறதும்; ''பார்வைக்கு இன்பமும்,'' அதாவது பரவசமூட்டு வதற்கான பகட்டு நிறைந்ததும்; ''புத்தியைத் தெளிவிக்கிறதுமான,'' அதாவது புதுப்புது வெளிப்பாடுகள் தருகிறதுமான விலக்கப்பட்ட கனியைச் சாப்பிடும்படி வரம்பைத் தாண்டினாள்.

ஆம், மாற்றப்படாத இயல்பான சுபாவமுள்ள மனிதனுக்கு எப்பொழுதுமே புதிது புதிதான நவீனங்களில்தான் நாட்டம் அதிகம் (அப் 17:21). ஆனால் நமதாண்டவரோ பழமையாய்ப் போகாதவர். ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (ஆகையால்) பலவித அந்நிய ***போதனைகளால்*** அலசடிப்பட்டுத் திரியாதிருங்கள்'' (எபி 13:8,9).

பிரியமானவர்களே, பெரோயா நகர்வாசிகளைப்போல, நீங்களும் வாசிப்பது, கேட்பது அல்லது காண்பது எதுவும் வசனத்திற்கு ஒத்திருக்கிறதா எனச் சோதித்துப் பாருங்கள். பவுல் பிரசங்கித்ததை அவர்கள் அப்படியே விழுங்கிவிடவில்லை (அப் 17:11). உபதேசத் தைக் கற்றுக்கொள்ளும் காரியத்தில் கொஞ்சம் சந்தேகம் இருப்பது நல்லதே! திருவசனத்தில் நேரடியாகச் சாட்சிகளோடு போதிக்கப் படாத எந்த உபதேசத்தையும், வெளிப்பாட்டையும் அல்லது அனு பவத்தையும் ஏற்றுக்கொள்ள நாம் கடமைப்பட்டவர்களல்ல.

**௨. பரிசுத்த ஆவியானவர் மூலம் சோதித்தறிதல்** (Holy Spirit)

பரிசுத்தாவியானவரைக் கர்த்தராகிய இயேசு நமக்கு உதவி யாளராகவும் வழிகாட்டியாகவும் அறிமுகப்படுத்தினார். ''சத்திய ஆவி'' என்ற வகையில் அவர் நம்மை எல்லாச் சத்தியத்திற்குள்ளும் நடத்துவார் (யோ 16:13).



பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகள் அனைவருக்குள்ளும் குடி கொண்டுள்ளார்; தாகமாயிருக்கிறவர்களை நிரப்புகிறார். நாம் கேட் கும் உபதேசமோ நாம் காணும் வெளிப்பாடோ தேவனிடமிருந்து வராததாயிருந்தால் நமக்குள்ளேயே ஒருவித எதிர்ப்புணர்வும் அமைதிக்குலைவும் ஏற்படும். இதைத்தான் அப்போஸ்தலன் யோவான் இப்படி எழுதினார்: ''உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். நீங்கள் அவராலே பெற்ற ***அபிஷேகம்*** உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை, அந்த அபி ஷேகம் எல்லாவற்றையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல; அது உங்களுக்குப் போதித்த படியே அவரில் நிலைத்திருப்பீர்களாக'' (1 யோ 2:26,27). தமது பிள்ளைகளின் வளர்ச்சிக்காய்த் தேவன் சபையில் நியமித்திருக்கும் போதக ஊழியத்தை யோவான் இங்கு குறிப்பிடவில்லை. ''உங்களை *வஞ்சிக்கிறவர்களைக்* குறித்து'' என்று அவர் குறிப்பாய் எழுதியதைக் கவனியுங்கள்.

''வஞ்சிக்கிற ஆவிகள்'' மற்றும் ''பிசாசின் உபதேசங்கள்'' குறித்து நம்மைத் தீர்க்கதரிசனமாய் முன்னெச்சரித்தவர் ***பரிசுத்த ஆவியானவரே*** (1 தீமோ 4:1). ஆனால் இன்று விவேகமுள்ள ஒரு விசுவாசி ஆவிக்குரிய கூட்டமொன்றில் நடக்கும் வினோதமான காரியங்களை நிதானிக்க முற்பட்டால் உடனே அவன் ஆவியைத் துக்கப்படுத்துகிறானென்று குற்றஞ்சாட்டப்படுகிறான்! மன்னிக் கப்பட முடியாத பாவத்தை அவன் செய்துவிட்டானென்று அச்சுறுத் தப்படுகிறான்! இதுதான் லூசிபருக்குக் கொண்டாட்டம். கேள்விக் குரிய வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ளத் தயங்குவதல்ல, அவை களை அப்படியே அணைத்துக்கொள்வதுதான் பரிசுத்த ஆவியான வரைத் துக்கப்படுத்தும். ஏனெனில், அவர் ''சத்திய'' ஆவியாச்சுதே!

ஆவியானவரை அவிக்கும் மூன்று செயல்களைப் பவுல் 1 தெசலோனிக்கேயர் 5:19-22இல் வரிசைப்படுத்துகிறார்: (1) தீர்க்கதரிசனங்களை ஒட்டுமொத்தமாய்க் கண்டனம் செய்தல்; (2) எல்லாக் காரியங்களையும் நல்லதா போலியா என்று சோதித்துப்

பார்க்கத் தவறுதல்; (3) கேள்விக்குரிய காரியங்களை அணைத்துக் கொள்ளுதல். தெசலோனிக்கேயரின் சபை வாழ்வில் கிரேக்க அஞ் ஞான மார்க்கம் எங்கோ உட்புகுந்துவிட்டதோ என்ற அச்சம் பவுலுக் கிருந்தது (3:5). அலசிப்பார்க்கும் சிந்தனையாளர்களை அமைதிப் படுத்த இன்றைய நவீன எழுப்புதலைப் பரப்புவோர் மேலே குறிப் பிட்டுள்ள முதல் செயலை மட்டும் சுட்டிக்காட்டுவர். ஆனால் மென் மையான தேவப் புறாவானவரைப் பெருமளவில் துக்கிக்க வைப்பது அடுத்த இரு செயல்களே என்பது எனது கருத்து. நமக்குள் குடியிருக் கும் ஆவியானவரின் உந்துதலால் காரியங்களை அலசிப் பார்க்காமல் அசதியாய் அங்கீகரிக்கும் போக்கு முடிவில் அவரை அவித்துப் போடும். பரிசுத்த ஆவியானவர் அவித்துப்போடப்பட்டவுடன் மற்ற ஆவிகளெல்லாம் ஆரவாரிக்கும். எவ்வளவு பயங்கரம்!

மற்ற ஆவிகளோடு நாம் சரசம் பண்ணுவதைப் பார்த்துக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் சும்மா இருக்கமாட்டார். அவர் சீறியெழுவார். காதலுக்குக் கண்ணில்லை என்பர். கேள்விக்குரிய அனுபவங்கள்மீது முதற்பார்வையிலேயே நாட்டம் ஏற்பட்டுவிட் டால் பின்னர் திருத்தும் உபதேசங்களெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குபோல்தான். எனவேதான் ''எல்லாவற்றையும்'' சோதித் துப்பார்த்து உசிதமற்றதாய்த் ''தோன்றுகிற'' காரியங்களைக்கூட அகற்றிவிடவேண்டுமாம்.

### 3. பரிசுத்தர் மற்றும் மேய்ப்பர் உதவியுடன் சோதித்தறிதல் (Saints & Shepherds)

ஒரு கிறிஸ்தவனும் தன்னில்தானே நிறைவானவன் அல்ல. ஒரு சபையும் தன்னில்தானே நிறைவானது அல்ல. நம்மெல்லாருக்கும் ஒருவருக்கொருவர் தேவை. நாம் வியாதிப்படும்போது நமது உடல் முழுவதும் கிருமிகளுக்கெதிராய்ப் போரிடுகிறது. அதேபோல பொல் லாங்கனின் ''காற்றுகளையும் அலைகளையும்'' எதிர்த்து நிற்க நமக்குக் கிறிஸ்துவின் உடலாகிய உள்ளூர்ச் சபையும் அகிலவுலகச் சபையும் தேவை. ''நாம் இனிக் குழந்தைகளாயிராமல் ... தந்திரமுள்ள போதக மாகிய பலவிதக் காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலை கிறவர்களாயிராமல்'' பக்திவிருத்தியடைந்து பலப்பட்டு வளருவதற்



காகவே பல்வேறு ஊழியர்கள் வரங்களாய்த் திருச்சபைக்கு உயிர்த் தெழுந்த கர்த்தரால் அருளப்பட்டுள்ளனர் (எபே 4:11-16). ''ஞானம், அறிவு, பகுத்தறிதல்'' ஆகிய வரங்கள் நிறைந்த தலைவர்களை நமக்குப் பகுத்தறிதலில் உதவும்படி நாடவேண்டும்.

புறவின விசுவாசிகளும் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டு மென்று கிளம்பிய புயலைத் தடுத்து நிறுத்தும்படிக் கூடிய எருசலேம் சங்கத்தில் இப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாய் நிற்கிறது (அப் 15). யாதொரு வேறுபாடுமின்றிப் புற வினத்தார் மீதும் தேவன் பரிசுத்த ஆவியானவரை அருளினதைக் கண்டதாய் அப்போஸ்தலன் பேதுரு ''அறிக்கையிட்டார்'' (வச 6-9). இச்சம்பவத்தை அப்போஸ்தலன் யாக்கோபு ''எழுதப்பட்டதிலிருந்து'' ''வியாக்கியானித்தார்'' (வச 13-17). இதன் மூலம் கருத்தொற்றுமை உண்டானது (வச 22,28). இதனால் விசுவாசிகள் ''ஆறுதலும் ஆனந்தமும்'' அடைந்து ''திடப்பட்டார்கள்'' (வச 30-32).

மூப்பர்களோடும் தலைவர்களோடும் கலந்தாலோசிக்கவேண்டு மென்பது சபைச் சரித்திரத்தை ஆராய்வதையும் உள்ளடக்கும். ''புதிய'' காரியங்கள் எனத் தோன்றியவை பல போலி மார்க்கங்களாகவே (Cults) முடிவடைந்திருக்கின்றன என்பதே சபைச் சரித்திரத்தின் சான் றாகும். எழுப்புதலின் காலங்களில் தேவனது செயல்பாடுகளுக்கு முரணாய்ச் செயல்படப் பிசாசும் அவனது ஆவிகளும் கொந்தளித்துக் குதிக்கும். நிசமானதும் போலியானதும் பெரும்பாலும் ''கலந்தே'' காணப்படும் என்பதே சென்ற காலங்களின் எழுப்புதல் வீரர் பலரின் சாட்சி. இதுவே 17ஆம் நூற்றாண்டின் மாபெரும் உயிர்மீட்சியில் பயன்படுத்தப்பட்ட பிரசங்கியாகிய ஜோனத்தான் எட்வர்ட்ஸ் என்பவரும், 1904இன் வேல்ஸ் நாட்டு எழுப்புதலின் முக்கிய பாத் திரமாகிய ஈவான் ராபர்ட்ஸும் முடிவில் கூறியதாகும். எனவே திரு வசன வரம்புகளை மீறி அந்நிய அக்கினிகளை உள்ளே கொண்டு வராதபடி விசுவாசிகளை இந்த பக்தர்கள் எச்சரித்தனர்.

''கலப்பு (mixture) என்பதுதான் மிகுந்த ஆபத்தானது. முழுப் பொய்யைவிடப் பாதி உண்மையே கூடுதல் சேதம் விளைவிக்கும்'' என்றார் ஒருவர். ''சத்தியத்தைவிடச் சத்தியமாய்த் தோன்றுமளவு

அசத்தியமானது அலங்கரிக்கப்பட்டிருக்கும்'' என இரண்டாம் நூற்றாண்டின் விசுவாச வீரர் இரேனியஸ் கூறினார்!

கேள்விக்குரிய இன்றைய அனுபவங்களுக்குச் சாதகமாய்ப் பேசும் சிலர் பொதுவாகச் சொல்வது, ''கனிகளைப் பாருங்களேன்'' என்பதாகும். கனிகள் என்றால் அது வாழ்க்கை மாற்றத்தையும் வாழ்க்கை முறையையும் மட்டும் குறிப்பிடாது. இந்துவாயிருந்தும் எத்தனையோ கிறிஸ்தவர்களைவிடச் சிறந்த வாழ்க்கை நடத்தித் திரள்களுக்கு நன்மைசெய்த மகாத்மா காந்தியைப்பற்றி நாம் என்ன சொல்ல முடியும்? சுவிசேஷத்தைக் கலப்படம் பண்ணினாலும் ஒரு சில நல் விளைவுகளைத் தரக்கூடிய அளவு அதில் சக்தியுண்டு. இது நம்மைத் தவறாய் நடத்திவிடக்கூடாது. இன்று பத்து சதவீதம் கூடச் சுத்த சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவில்லை என்பதே எனது கணிப்பு. அப்படியானால், அற்புத சுகங்களும், அடையாளங்களும், ஆசீர்வாதங்களும் மக்களுக்குக் கிடைக்கின்றனவே, அதெப்படி? பதில் எளிது. நாம் சரியாய், செம்மையாய், செயல்படுவதினால் அல்ல, இத்தனைக் குறைபாடுகளும் தவறுகளுமிருந்தாலும் மக்களைக் கடவுள் நேசிக்கும் ஒரே காரணத்தினால் நமது ஊழியங்களை அவர் பயன்படுத்துகிறார். ''நான் *மக்களுக்காய்ப்* பரிதபிக்கிறேன்'' என்று இயேசு சொல்லித் தமது சீடரின் தந்திர ஆலோசனையைத் தாண்டிச் சென்றார் அல்லவா? (மத் 14:15,16; 15:32).

இறைவனின் சித்தத்திற்குச் சம்பந்தப்படாமலே எத்தனையோ காரியங்களை இயேசுவின் பெயரால் பேசலாம், செய்யலாம். இது கற்பனை செய்யக் கடினம்தான். ஆனால் நியாயத்தீர்ப்பின் நாளில் தீர்க்கதரிசிகள், அற்புதங்கள் செய்வோர் மற்றும் பிசாசு துரத்துவோர் அநேகருக்கு ''நான் உங்களை அறியேன்'' என்ற கர்த்தரின் கடின வார்த்தைகள் பரலோகத்தின் கதவடைக்கும் (மத் 7:22,23). இதெப்படி? இவர்கள் தேவனுடைய ''வேலையைச்'' செய்ததாய்க் கூறினாலும் அவருடைய ''சித்தத்தைச்'' செய்யத் தவறியவர்கள் (வச 21). அவர்கள் ஒருவேளை தாங்கள் இறையரசைக் கட்டிக்கொண்டிருக்கிறோமென்று சொன்னாலும் ''இயேசு சொல்லிய வார்த்தைகளின்படி'' செய்யப்படாத எந்த ஊழியமும் மணல்மேல் கட்டப்பட்ட கட்டிடந்தான் என்பதை மறந்துவிட்டனர் (வச 26).



''ஆட்டுத் தோலைப் போர்த்துவரும் பீறுகிற ஓநாய்கள்'' எளிய விசுவாசிகளை எளிதில் ஏமாற்றிவிடும் (மத் 7:15). அனுபவமும், முதிர்ச்சியும், ஞானமுமுள்ள மேய்ப்பர்களும் போதகர்களுமே ஆடுகளைப் பாதுகாக்க முடியும். போலியை அடையாளங்காட்ட அவர்கள் தைரியங்கொள்ளவேண்டும். யாரோவொரு பிரபலப் பிரசங்கியின் கோபத்திற்கு ஆளாகிவிடுவோமென்றோ, செல்வாக்குள்ள ஒரு சில விசுவாசிகளை இழந்துவிடுவோமென்றோ பயந்து அவர்கள் வாய் திறவாது இருந்துவிடக்கூடாது (அப் 20:17, 29-31). ''நீதியின் ஊழியர்'' போல் வேஷம்போடும் ''கள்ள அப்போஸ்தலரின்'' முகத்திரைகளைக் கிழித்தெறிய ஞானமும், அறிவும், பகுத்தறிதல் திறனுமுள்ள ஊழியர் எவ்வளவாய்த் தேவை! (2 கொரி 11:13-15)

### 4. பொது அறிவின் மூலம் சோதித்தறிதல் (Common Sense)

மற்ற அநேகப் பாதுகாவல்களைவிடப் பொது அறிவே அதிகப் பாதுகாப்பானது என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம். ''பொது அறிவானது அறிவு தருமானால் வேறே அறிவு தேடாதே'' என்ற ஞானமொழி ஒன்றுண்டு. (If common sense makes sense, don't look for any other sense!)

''இதை அலசியெல்லாம் பார்க்காதீர்; மனித அறிவைக் கொண்டு இதையெல்லாம் புரிந்துகொள்ள முயற்சிக்காதீர்; இவையெல்லாம் இயற்கைக்கு அப்பாற்பட்டவை'' என்றெல்லாம் நம்மிடம் வஞ்சகர் சொல்லுவார்கள். ஆனால் இவ்வித விவாதம் மதியீனம். ஏனெனில், தேவன் நமக்குத் ''தெளிந்த புத்தியுள்ள'' ஆவியைக் கொடுத்திருக்கிறார் (2 தீமோ 1:7). கிறிஸ்தவ அர்ப்பணிப்பில் நமது மனதைப் ''புதிதாக்கத்தான்'' அழைக்கப்படுகிறோமே தவிர அதைப் ''புதைத்துவிடப்'' போதிக்கப்படவில்லை (ரோ 12:1,2). ''நன்மை தீமை இன்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சி செய்யும் ஞானமும் அறிவும் உடையவர்களே'' முதிர்ச்சியடைந்தவர்களாம் (எபி 5:14).

வேறொரு சுவிசேஷத்தைத் தழுவிக்கொண்டு ''மயக்க'' நிலையில் இருந்த கலாத்திய விசுவாசிகளைப் பவுல் ''புத்தியில்

லாத'' கலாத்தியரே என்று கடிந்துகொண்டார் (கலா 3:1). ஆவியில் ஆரம்பம்பண்ணின அவர்கள் உடலுக்கடுத்த சடங்காச்சாரத்தின்பின் செல்லத் தொடங்கினர் (வச 3). வஞ்சிக்கப்பட்டவர்கள் பிசாசின் கண்ணியிலிருந்து தப்ப வேண்டுமானால் ''மயக்கம்'' தெளிந்து சுய ''நினைவுக்குள்'' வரவேண்டுமாம் (2 தீமோ 2:26). கள்ளப் போதகர் களைக் குறித்து 2 பேதுரு 2இல் பேதுரு எழுதியுள்ள கண்டனமே புதிய ஏற்பாட்டில் மிகக் கண்டிப்பானதும் நீண்டதுமாகும். அதற்கு முந்தியதும் அடுத்ததுமான அத்தியாயங்களில் அவர் விசுவாசிகளின் ''மனதையே'' நினைப்பூட்டி எழுப்ப முயன்றார் (1:14; 3:2). எனவே நலம் பொலம் ஒன்றும் சொல்லாமல் மனதில் நடுநிலையாய் இருப்பது ஆன்மீகமல்ல, அறிவீனம்! (Neutrality is not spirituality but stupidity.)

மக்களுக்காய்ப் பிரசங்கியார் ஜெபித்தபோது அவர்கள் வாந்தி யெடுக்கத் தொடங்கிய மேலை நாட்டு நற்செய்திக் கூட்டமொன்றை ஒளித்தட்டு மூலம் பார்த்தேன். தொழுகைக்காய்க் கூடுமிடங்களில் என்னே அவலட்சணம்! (ஏசா 28:8). பிசாசினால் மூளை பாதிக்கப் பட்டுக் காக்காய் வலிப்பினால் ''நுரை'' தள்ளுவதோடு ''வாந்தி'' எடுப்பதை ஒப்பிடுவது சரியா? (மத் 17:14-18; மாற் 9:14-27). நமக்கு உணர்வில்லையா? அறிவில்லையா? (மத் 15:16,17). ''சுபா வமே'' நமக்குப் போதிக்கிறதில்லையா? (1 கொரி 11:15).

எழுப்புதல் வந்திருக்கிறதென்று சொல்லப்படும் சில கூட்டங் களில் மக்கள் கர்ஜிக்கிறார்களாம். இது யூதா கோத்திரச் சிங்கத்தின் சத்தமாம்! இவற்றையெல்லாம் ''பரிசுத்த ஆவியானவரின் மிருகச் சத்தங்கள்'' (Animal Sounds of the Holy Spirit) என வியாக்கியானிக்கும் புத்தகங்களும் உண்டு. கிறிஸ்தவர்களே, நாம் எங்கே விரைந்து கொண்டிருக்கிறோம்? அடுத்து, தரையில் ஊருதலும் பாம்புபோல் சீறுதலும் நடக்கிறதாம். அடுத்து என்னதோ?

நண்பரே, இப்படிப்பட்ட ''புதிய'' அசைவாட்டம், ''புதிய'' வெளிப் பாடுகள் எல்லாம் உங்களைத் திருப்திப்படுத்தாது; உள்ளான மனிதனைப் பக்திவிருத்தியும் ஆக்காது. இவையெல்லாம் ''தண்



ணீரற்ற கிணறுகள்,'' ''மழையற்ற மேகங்கள்'' (2 பேது 2:17). பிரிய மானவர்களே, ''பூர்வ'' பாதைகளுக்குத் திரும்புங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்! (எரே 6:16).

## முடிவுரை

இவையெல்லாவற்றையும் சொன்னபிறகு, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாம் ''நிதானிக்கத்தான்'' அழைக்கப்பட்டிருக் கிறோமே தவிர ''நியாயந்தீர்க்க'' அல்ல. நியாயத்தீர்ப்பு தேவனது வேலை. நிதானிப்பது மட்டுமே நமது பொறுப்பு. நமது அறிவு குறைவுள்ளது. இச்செய்தியில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள பரிசோத னைகளில் எந்தவொரு அனுபவமும் நிகழ்வும் தேறாவிடில், அதை அப்படியே கவனியாது விட்டுவிடுங்கள். இவ்விதக் காரியங்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்குவிக்கும் அல்லது வலி யுறுத்தும் ஊழியரோடும் மக்களோடும் நெருங்கிய தொடர்பு வைத் துக்கொள்ளாதீர்கள். 1 தெசலோனிக்கேயர் 5:21,22இல் பவுல் கொடுத்த ஆலோசனையே முடிவானது —

**அலசிப்பாருங்கள்** — எல்லாவற்றையும்!
**அணைத்துக்கொள்ளுங்கள்** — நல்லவற்றை மட்டும்!
**அகற்றிவிடுங்கள்** — கேள்விக்குரியதையெல்லாம்!
**ஆமென்!**



# 36

# விடுதலை ஊழியம் எனக்குக் கிடைக்குமா?

## Can I get a Deliverance Ministry?

நீங்கள் ஓர் ஆத்துமாதாயக் கிறிஸ்தவராயிருந்தால் ஏற்கனவே விடுதலை ஊழியத்தைத்தான் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஏனென்றால் பாவத்திலிருந்து இரட்சிப்படைவதே இயேசு மனுக்குலத்திற்குக் கொண்டுவந்த மிகப்பெரிய விடுதலையாகும் (மத் 1:21). நோயுற்றோருக்காய் ஜெபித்துப் பிசாசுகளைத் துரத்தும் ஊழியத்தைச் செய்வோர் மட்டுமே விடுதலை ஊழியத்தைச் செய்கிறார்கள் என்பது தவறான கருத்து. திருமறை கூறும் முழுமையான விடுதலை ஊழியத்தில் இது ஒரு பகுதி மட்டுமே. திருமறையின்படியான விடுதலை ஊழியத்தில் குறைந்தது ஏழு அம்சங்கள் உண்டு —

### 1. நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை

கிறிஸ்து நம்மைப் பழைய ஏற்பாட்டுப் பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்திருந்தாலும் எண்ணற்ற கிறிஸ்தவர் கிறிஸ்து இயேசுவிலுள்ள சுதந்தரத்தை அனுபவியாதே வாழ்கின்றனர் (ரோ 8:2,3; கலா 5:18). ''தொடாதே, ருசியாதே, தீண்டாதே'' எனும் பிரமாணக் கொள்கையின் நுகத்தடியாலே அழுந்திக்கொண்டிருக்கின்றனர் (கொலோ 2:20-22; கலா 5:1). நியாயப்பிரமாணத்திற்கும் கிருபைக்குமுள்ள வேறுபாட்டைப் புரியாதிருப்பதே இதற்குக் காரணம் (யோ 1:17). அவர்கள் ஒருபோதும் இரட்சிப்பின் மகிழ்ச்சியால் பொங்குவதில்லை. எப்பொழுதுமே சோர்பாகவும் மந்தமாகவும் இருப்பர். பவுலின் நிருபங்களாகிய ரோமர், கலாத்தியர், கொலோசெயர் ஆகியவற்றிற்கு நடைமுறையில் அவர்களுக்கு விளக்கம் கொடுப்பதொன்றே இந்நிலையிலிருந்து அவர்களை விடுவிக்க வழி.



### 2. பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை

பாவத்தின் ''தண்டனையிலிருந்து'' விடுதலை என்பது மறுபிறப்படையும் அந்நொடியிலேயே முழுமையாய்க் கிடைப்பது; ஆனால் பாவத்தின் ''வல்லமையிலிருந்து'' விடுதலை என்பது ஒவ்வொரு நாளும் அப்பியாசித்து அனுபவிப்பதாகும். இதுதான் ஆவிக்குள்ளாக நடந்துகொண்டு ஊனியல்பின் செயல்களை மேற்கொள்வதெனச் சொல்லப்பட்டுள்ளது (கலா 5:16-25). ''நிலையின் படி'' (standing) நாம் ஏற்கெனவே கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறோம் (கொலோ 2:10); ஆனால் ''நடையின்படியோ'' (state) நாம் பூரணத்தை எட்ட வளருகிறோம் (கொலோ 1:28). நமது பாவ சுபாவம் இம்மண்ணுலக வாழ்வில் நம்மை விட்டு எடுத்துப்போடப்படுவதில்லை; ஆனால் நமக்குள் வாழும் கிறிஸ்துவின் மூலமாகவும் அவரது ஆவியானவரின் மூலமாகவும் அதின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படலாம். விடுதலை தரும் இச்சத்தியத்தைப் புரிந்துகொள்ளும்வரை விசுவாசிகள் குற்றவுணர்வுடனும் (guilt) ஆக்கினைச் சிந்தையுடனுமே (condemnation) பரிதாபமாய் வாழ்ந்துகொண்டிருப்பர் (ரோ 8:1,33,34).

### 3. வியாதியின் சாபத்திலிருந்து விடுதலை

எல்லா வியாதிகளும் தனி நபரது வாழ்க்கையிலுள்ள பாவத்தின் நேரடி விளைவுதான் என்று சொல்ல முடியாதெனினும் நமது ஆதிப்பெற்றோர் பாவம் செய்வதற்குமுன் வியாதியோ மரணமோ இருந்ததில்லை. நற்செய்தியைப் பிரசங்கிக்க இயேசு தமது சீடர்களை அனுப்பிய வேளைகளில் பிணியாளிகளைச் சுகமாக்கவும் அவர்களைப் பணித்தார் (மத் 10:7,8; லூக் 9:2). ''குணமாக்கும் வரங்கள்'' என்பது எல்லாருக்கும் கொடுக்கப்படாவிட்டாலும் எந்த விசுவாசியும் பிணியாளிகள்மீது கரம் வைத்து ''விசுவாசமுள்ள ஜெபத்தை'' ஏறெடுக்கலாம் (1 கொரி 12:30; மாற் 16:18; யாக் 5:15,16). கிறிஸ்துவின் மனவுருக்கச் சிந்தையுடன் செய்யப்படும் மருத்துவப்பணி எதுவும் அற்புத சுகத்திற்குக் குறைவானதல்ல. எப்படியாயினும் சுகமளிப்பவர் தேவனே.

### 4. பிசாசின் கொடுமையிலிருந்து விடுதலை

மெய்த்தேவனை அறியாதோரின் வாழ்க்கையில் பிசாசு புகுந்து விளையாடுகிறான். ''பிசாசின் செயல்களை அழிப்பதற்காகவே''

மனுமகன் இயேசு வந்தார் (1 யோ 3:8ஆ). பிசாசுகளைத் துரத்துவதில் சிலர் தேவனால் மிகவும் சிறப்பாய்ப் பயன்படுத்தப்படுகின்றனர். ஆனால் சத்துருவின் ''வல்லமை'' (power) மீது எல்லாக் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கும் ''அதிகாரம்'' (authority) உண்டு (லூக் 10:19). கிறிஸ்துவின் எழுபது சீடர் சற்றும் எதிர்பாராதபோதும் பிசாசுகள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தன (வச 17). நம்மிலிருக்கிறவர் உலகிலிருக்கிறவனிலும் பெரியவராச்சுதே (1 யோ 4:4). ஆவியானவரால் நிறைந்திருந்து மக்களைப் பிசாசின் கொடிய பிடிப்புகளிலிருந்து விடுவியுங்கள் (அப் 10:38). பிசாசுகளைத் துரத்துவது எப்படி என்று முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள். பிசாசுகளைத் துரத்தப் புறப்படுகையில் ஒரு குழுவாய்ச் செல்லுங்கள். *(அடுத்த அத்தியாயத்தை வாசியுங்கள்.)*

### 5. சமூகக் கட்டுகளிலிருந்து விடுதலை

ஏழைகள், அனாதைகள் மற்றும் விதவைகளின் நியாயத்திற்காய்ப் போராடி கொடுமைப்படுத்துவோரிடமிருந்து அவர்களைத் தப்புவிக்கும்படி தேவ மக்களைப் பழங்காலத் தீர்க்கதரிசிகள் அறைகூவியழைத்தனர் (ஏசா 1:17; ஆமோ 5:15,24). ''நான் அநியாயக்காரருடைய கடைவாய்ப் பற்களை உடைத்து, அவர்கள் பறித்ததை அவர்கள் பற்களிலிருந்து பிடுங்கினேன்'' என்று யோபு சாட்சிபகர்ந்தார் (யோபு 29:17,12-16). ராஜாராம் மோகன்ராயுடன் (1772-1833) சேர்ந்து மிஷனரி வில்லியம் கேரி (1761-1834) ''உடன்கட்டையேறுதல்'' எனும் தீய பழக்கத்திற்கெதிராய்க் குரலெழுப்ப, அரசு அதற்குத் தடைச்சட்டம் விதிக்கச் செய்தார். அப்படியே மிஷனரி ஏமி கார்மைக்கல் அம்மையார் (1861-1951) கோயில்களில் சிறுமிகளைப் பிடித்துவைப்பதற்கு எதிராய்ப் போராடினார். இவ்விதத் துணிச்சலான செயல்களுக்காகவே நாம் ''அபிஷேகம்'' பெற்றிருக்கிறோம் (ஏசா 61:1). மக்களது கண்கள் திறக்கப்பட்டு அவர்கள் மூட நம்பிக்கையின் பயங்களிலிருந்து விடுவிக்கப்பட உங்களாலான அத்தனையையும் செய்யுங்கள் (ஏசா 42:6,7). சிறைக்கு உள்ளே அல்ல, வெளியேதான் நிறைய, பெரிய குற்றவாளிகள் இருக்கின்றனர். அகப்பட்டவர்கள் உள்ளே; அகப்படாதவர்கள் வெளியே! சிறைவாசிகளுக்குப் பணியாற்றுவது கிறிஸ்துவின் சிந்தை (லூக் 4:18; எபி 13:3).



### 6. கெட்ட பழக்கவழக்கங்களிலிருந்து விடுதலை

திட்டமான மறுபிறப்பனுபவத்தை அடுத்தும் பலர் புகைத்தல், குடித்தல், போதை மருந்தெடுத்தல் போன்ற அடிமைப்படுத்தும் பழக்கங்களிலிருந்து வெளிவர முடியாதிருக்கின்றனர். ''ஏன் என்று சொல்ல வேண்டாம்; எப்படி என்று காட்டுங்கள்'' என்பதே இம்மக்களின் கதறல். இவர்களுக்கு உதவவேண்டுமானால் உங்களுக்கு நிறைய பொறுமையும் கனிவிரக்கமும் தேவை. ஒருபோதும் அவர்களைக் குற்றஞ்சாட்டி ஏற்கெனவே நொந்துபோயிருக்கும் அவர்களைத் தாக்க வேண்டாம். வேதத் தியானம், வசன மனனம், ஆவியின் நிறைவு, விசுவாசிகளுடன் நெருங்கிய தொடர்பு, கனிவான மேய்ச்சல், நல்ல புத்தகங்கள் வாசிப்பு, வேலைகளில் விறுவிறுப்பு போன்றவையே அவர்கள் விடுதலை பெற்று வெளிவர ஏதுக்கள். எப்பொழுதுமே விடுதலை என்பது உடனடியாய்க் கிடைத்துவிடுவதல்ல. இவ்வித நபர்களுக்கு உதவத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட சமூக நல இயக்கங்களுக்குக் கைகொடுங்கள். இவ்விதப் பங்கேற்பு ஆவிக்குரியதல்ல என்று சொல்லமுடியாது.

### 7. உபதேச வஞ்சகங்களிலிருந்து விடுதலை

உபதேச வஞ்சகம் என்பது பயங்கரமான பிடிப்பாகும். ''பிசாசின் கண்ணியாகிய'' இதிலிருந்து ஒருவன் தப்பவேண்டுமானால் அவன் ''மயக்கம்'' தெளியவேண்டுமெனப் பவுல் கூறுகிறார் (2 தீமோ 2:24-26). ''பிசாசின் உபதேசங்களைத்தான்'' அநேகப் பிரசங்கிமார் ''வஞ்சிக்கிற ஆவிகளின்'' அபிஷேகத்தோடு கொடுத்துக்கொண்டிருக்கிறார்களென்பது மக்கள் பலருக்குத் தெரிவதில்லை (1 தீமோ 4:1). லூசிபரின் இப்பிரதிநிதிகளை எதிர்த்து, மக்கள் ''அறிவில்லாமையால் அழியாதபடி'' அவர்களை வஞ்சக வலைகளிலிருந்து விடுவிக்கத் தைரியமான வேதப் போதகர்கள் தேவை (ஓசி 4:6). இந்நாட்களில் பிரசங்கம் அதிகம், போதகம் குறைவு. பீடங்களிலிருந்து திரள்களுக்குப் போதிக்காவிட்டாலும், தனி நபர்களுக்கும் சிறு குழுக்களுக்கும் ஆரோக்கிய உபதேசங்களைப் பகிர்ந்துகொள்ள உங்களை அர்ப்பணியுங்கள். இன்றையச் சபைக்கு அத்தியாவசியமாய்த் தேவைப்படும் விடுதலை ஊழியம் இதுவே.

# 37

# பிசாசுகளைத் துரத்துதல்

## Driving out Demons

1965ஆம் ஆண்டு நான் மாணவனாயிருக்கும்போது முதன்முறை யாகப் பிசாசுகளைத் துரத்தும் அனுபவம் எனக்குக் கிட்டியது. இளம் வாலிபனாகவும், ஆன்மீகக் குழந்தையாகவுமிருந்த எனக்குப் பிசாசு களைப் பற்றிய அறிவு மிகவும் குறைவு. மாலைத் தியானத்திற்காகக் காடுகளுக்குள் செல்வது எனது வழக்கம். ஒரு நாள் ஒரு மூதாட்டி அலறிக்கொண்டு சாலையில் கிடப்பதைக் கண்டேன். எனக்கு ஒரு பக்கம் பயம்தான். ஆனாலும் என்னைத் தைரியப்படுத்திக்கொண்டு, இயேசுவின் நாமத்தில் பிசாசை அதட்டினேன். மறுநாள் மாலை அவள் தெளிவுடன் அங்கு நடமாடிக்கொண்டிருந்தாள். கரங்கூப்பி எனக்கு நன்றி தெரிவித்தாள். அவளுக்கு நற்செய்தியைப் பகிர்ந்தேன்.

சில வாரங்களுக்குப்பின் பில்லிசூனியக் கட்டினால் அவதியுற்றுக் கொண்டிருந்த தனது அண்டை வீட்டுக் குடும்பத்தினரைப்பற்றி எனது ஜெபத்தோழன் என்னோடு பகிர்ந்துகொண்டார். அவ்வீட்டி லுள்ள அனைவரும் திடீரென்று அசாதாரணமாய்ச் சிரிப்பார்களாம், குரங்குகள்போல் உடலைச் சொறிவார்களாம், பல இரவுகள் தூக்கமே யில்லையாம். எனது நண்பனும் நானும் நன்கு ஜெபித்துவிட்டு அக்குடும்பத்தைச் சந்திக்கச் சென்றோம். அவர்களுக்கு இயேசுவை அறிவித்து, அசுத்த ஆவிகளை அதட்டினோம். உடனே விடுதலை பெற்றனர். இரவில் நன்கு தூங்கினர்.

**அதிகாரமா, வல்லமையா?** (Authority or Power?)

பிசாசுகளைக் குறித்துத் தெளிவாக அறிந்துகொள்ளும்படி இவ் விரு தொடர்ந்த அனுபவங்களும் பைபிளை ஆராய எனக்கு ஊக்க மூட்டின. பிசாசுகளுக்கிருப்பது வல்லமை, விசுவாசிகளுக்கிருப்பதோ



அதிகாரம்; அதிகாரத்திற்கு முன் வல்லமை தலைவணங்கும்— இதுவே நான் கண்டறிந்த முதல் சத்தியம். சத்துருவின் சகல ''வல்ல மையையும்'' மேற்கொள்ள உங்களுக்கு ''அதிகாரம்'' கொடுக்கிறேன் என்றார் இயேசு (லூக் 10:19). மெலிந்த காவல்துறை ஊழியர் ஒரு வரால் விரைந்துவரும் சக்திமிகுந்த வாகனத்தை நிறுத்த முடிகிறது; ஏனென்றால் அவருக்கிருப்பது அதிகாரம்! இருப்புப்பாதை அதிகாரி ஒருவரால் விரையும் எஞ்சினைக் கொடிகாட்டி நிறுத்த முடிகிறது; ஏனென்றால், அவருக்கிருப்பது அதிகாரம்! பரிசுத்தவான்களிலேயே பலங்குன்றியவனும் பிசாசுகளைத் தலைதெறிக்க ஓடச்செய்யலாம்!

**இறையியலும், பிசாசியலும்** (Theology & Demonology)

இறையியல் என்பது தேவனைக் குறித்த அறிவாகும். பிசாசியல் என்பது சாத்தானையும் அவனது தூதர்களையும் குறித்த அறிவாகும். பிசாசுகள் இருக்கின்றனவா என்பதே பல சபைகளுக்குச் சந்தேகம். பல வேதாகமக் கல்லூரிகளில் இறையியல் கற்றுக்கொடுக்கப் படுகிறது; பிசாசியல் குறிப்பிடப்படுவதேயில்லை. இதைச் சத்துரு சாதகமாக்கிக்கொண்டு கிறிஸ்தவத்திற்குள் புகுந்து விளையாடிக் கொண்டிருக்கிறான். மனிதனது வீழ்ச்சியை விளக்குமுன்னரே சாத் தானின் குணத்தை வேதம் அப்பட்டமாக்குகிறதென்பதை அறியீர் களா? (ஆதி 3:1). பிசாசின் தந்திரங்கள் தங்களுக்குத் தெரியாதவை களல்ல என்றனர் அப்போஸ்தலர் (2 கொரி 2:11). நாம் தெரியா திருக்கலாமோ? திருமறையிலிருந்து பிசாசுகளைக் குறித்து ஏராளம் அறிந்துகொள்ளலாம். இதோ சில அடிப்படை உண்மைகள்—

**(அ)** பிசாசுகளுக்கு மனித அறிவுக்கு அப்பாற்பட்ட ஞானமுண்டு. ''நீ ஞானத்தால் நிறைந்தவன்'' என்று லூசிபரைக் குறித்துச் சொல்லப்பட்டது (எசேக் 28:12). பிசாசுகளுக்கு மனுக்குலத்தோடு பல்லாயிரமாண்டு அனுபவமுண்டு. எங்கே தாக்கினால் மனிதன் விழுவானென்று அவைகளுக்கு நன்றாகவே தெரியும். தந்திரமே சாத்தானின் முதற்குணம் (ஆதி 3:1).

**(ஆ)** பிசாசுகளுக்கு அசாதாரணமான பலம் உண்டு. அசுத்த ஆவியுள்ள ஒருவனால் இரும்புச் சங்கிலிகளையும் விலங்குகளையும்

தகர்த்தெறிய முடிந்தது. ஒருவனும் அவனை அடக்க முடியவில்லை (மாற் 5:1-4). பொல்லாத ஆவி பிடித்திருந்த இன்னொருவனால் ஏழு வாலிபரைக் காயப்படுத்தி நிர்வாணமாய்த் துரத்திவிட முடிந்தது (அப் 19:14-16).

**(இ)** பிசாசுகளுக்கு அழிப்பதே தொழில். ''திருடவும், கொல்லவும், அழிக்கவுமே'' வரும் திருடன் என்று இயேசு பிசாசைக் குறிப்பிட்டார் (யோ 10:10). ஊமையாக்குவது (மத் 9:32,33), குருடாக்குவது (மத் 12:22), அங்கவீனமாக்குவது (லூக் 13:11-13,16), வலிப்புண்டாக்குவது (மத் 17:15-18), புத்தியிழக்கச் செய்வது (லூக் 8:27), இப்படிப் பல சேதங்களை அசுத்த ஆவிகள் உண்டாக்கும். தங்கள் பிடிப்பிற்குள் வந்தவர்களைத் தற்கொலை செய்யத் தூண்டுவதும் அசுத்த ஆவிகளுக்குப் பிரியம் (மாற் 9:22).

**(ஈ)** பிசாசின் பட்டாளம் நேர்த்தியான அமைப்புள்ளது. துரைத்தனங்கள், அதிகாரங்கள், லோகாதிபதிகள், சேனைகள் என்று சத்துருவுக்கு வரிசைகள் உண்டு (எபே 6:12). மட்டுமல்ல, அவனது இராஜ்யம் பிரியாது நிற்கிறது (மத் 12:26).

**(உ)** பிசாசுகளுக்கு அற்புதம் செய்யும் சக்திகளுண்டு. தவறாது குறி சொல்லும் ஆவிகளெல்லாம் உண்டு (அப் 16:16). கடைசிக் கால விசுவாசத் துரோகத்தை முன்னறிவிக்கும்போது சாத்தானின் பொய்யான அற்புதங்களைக் குறித்துப் பவுல் எழுதினார் (2 தெச 2:9).

### **தூதறிவிப்போம், துரத்துவோம்!** (Evangelism & Exorcism)

பிசாசு துரத்துவதை நற்செய்திப்பணியிலிருந்து பிரிக்கவியலாது. பன்னிருவரைப் பணிக்கும்போது, ''பிரசங்கியுங்கள் ... சுகமாக்குங்கள் ... பிசாசுகளைத் துரத்துங்கள்'' என்றார் இயேசு (மத் 10:7,8). நற்செய்திப் பேராணையிலும் பிசாசுகளைத் துரத்துதலை இயேசு இணைத்தார் (மாற் 16:15-17). நற்செய்திப் புத்தகங்களில் காணப்படும் இயேசுவின் மாதிரியை அப்போஸ்தலரும் ஆதிச் சபையினரும் அப்படியே பின்பற்றியதை நடபடிகளில் காண்கிறோம்.



இறையரசின் செய்தியைப் பறைசாற்றுவதே நற்செய்திப்பணியாம். பிசாசுகளைத் துரத்துகையில் இறையரசின் வல்லமை வெளிக்காட்டப்படுகிறது: ''நான் தேவனது விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவ இராஜ்யம் உங்களிடம் வந்திருக்கிறதே'' என்று தமது ஊழியத்திற்கு நிரூபணமாய் இயேசு அறிவித்தார் (லூக் 11:20).

ஒன்று அல்லது பல அசுத்த ஆவிகள் ஒரு மனிதனின் உடலில் குடி புகுந்து தங்கள் விருப்பம்போல் அவனை ஆட்டிப்படைக்கும் நிலையே பிசாசு பிடித்தல் எனப்படும். முழு மனிதனுக்கும் ஊழியம் செய்யாத பட்சத்தில், முழுச் சுவிசேஷத்தையும் பிரசங்கிக்கிறோம் என்று சொல்ல முடியாது. பிசாசு துரத்தப்படும்வரை பிசாசு பிடித்தவன் தெளிவான மன நிலையில் நற்செய்தியைக் கேட்க முடியாது (மாற் 5:15).

பிசாசு பிடித்தவர்களை விடுதலையாக்குவது எப்படியென இங்கு கற்றுக்கொள்வோம்.

### **1. ஆவியைப் பகுத்தறியுங்கள்!** (Discerning)

ஏமாற்றுவதில் பிசாசுக்கு நிகரில்லை. எளிதில் தன்னை அடையாளங் காட்டமாட்டான். பிசாசுகளைத் துரத்தச் செல்லுவோரை ஏமாற்றப் பல வேடங்கள் போடுவான். தன்னை ஒளியின் தூதனாகவும், தனது ஊழியரை நீதியின் ஊழியராகவும் காட்டுவான் (2 கொரி 11:14,15). பகுத்தறியும் கலையில் வளர நம்மைப் பொருத்தவரை நாம் மூன்று காரியங்களைச் செய்யவேண்டும் —

**(அ)** முதலாவது, நற்செய்திகளிலும், நடபடிகளிலும் ஆண்டவரும் அப்போஸ்தலரும் பிசாசுகளை எவ்விதம் அடையாளங்கண்டு துரத்தினார்களென்று படியுங்கள். இதோ சில வசனக் குறிப்புகள்: மத் 8:28-34; 9:32,33; 12:22-29; 17:14-20; மாற் 1:21-28; 7:25-30; லூக் 8:2; 11:14; 13:10-17; அப் 8:7; 16:16-18. நமது படிப்பினைக் கென்றே இச்சம்பவங்கள் விபரமாக எழுதப்பட்டுள்ளன.

**(ஆ)** அடுத்து, ஞானத்திற்காக ஜெபியுங்கள். பிசாசு விரட்டும் ஊழியத்தில் ஆவிகளைப் பகுத்தறிதலே மிகத் தேவையான வரமாகும். அதை விரும்பி தேவனிடம் குறிப்பாய்க் கேளுங்கள். அந்த

அடிமைப் பெண் சொன்னதெல்லாம் அப்படியே உண்மையாயிருந் தாலும் அவளுக்குள்ளிருப்பது குறி சொல்லும் ஆவி என்று பவுல் கண்டுகொண்டார் (அப் 16:16-18). தமது பிள்ளைகளுக்கு இவ்வரத்தைக் கொடுக்கத் தேவன் விரும்புகிறார். ஆனால் நாம் நமது ஜெபத்திலும் தியானத்திலும் கவனக் குறைவாயிருந்தால் பகுத் தறிவில் வளர்வதரிது. ''இளைப்படைந்தவனுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படி கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார்'' என்று தீர்க்கதரிசனத்தில் இயேசு சாட்சியிட்டுள்ளார் (ஏசா 50:4).

**(இ)** மூன்றாவது, விடுதலை ஊழியத்தில் தேவனால் சிறப்பாய்ப் பயன்படுத்தப்படும் ஊழியரைக் கவனியுங்கள். இயேசு பிசாசுகளை எவ்விதம் துரத்தினாரென சீடர்கள் கூர்ந்து கவனித்தனர். கேள்விகள் கேட்டுப் பல காரியங்களைக் கற்றுக்கொண்டனர் (மத் 17:18,19). பிசாசுகளைத் துரத்துவதில் பேதுருவும் பவுலும் தேவனால் வல்ல மையாய்ப் பயன்படுத்தப்பட்டனர் (அப் 5:15,16; 19:11,12). இன் றும் இது போன்ற ஊழியருண்டு. அவர்களிடமிருந்து நடைமுறைப் படிப்பினைகள் பல பெறலாம். ஆவியைப் பகுத்தறிந்தவுடன்—

**2. பிசாசைத் துரத்துங்கள்!** (Driving)

***அ) அதிகாரத்தினால்***

துவக்கத்தில் குறிப்பிட்டபடி பிசாசுக்கு விரோதமான நமது பிர தான ஆயுதம் கிறிஸ்துவினால் நாம் பெற்ற அதிகாரமே. பிதாவானவர் குமாரனுக்கு அதிகாரம் கொடுத்தார் (மத் 28:18; மாற் 1:27). கிறிஸ்து அந்த அதிகாரத்தை முதலில் பன்னிருவருக்கும் (மத் 10:1; மாற் 6:7), அடுத்து அந்த 70 பேருக்கும் (லூக் 10:1,19), இறுதியாக அனைத்து விசுவாசிகளுக்கும் கொடுத்துவிட்டார் (மாற் 16:17). தேவன் நமக் களித்துள்ள நிலையினாலேயே இந்த அதிகாரத்தை நாம் அனுபவிக்க முடிகிறது. நமது பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. என வேதான் பிசாசுகள் நமக்குக் கீழ்ப்படிகின்றன (லூக் 10:18-20). நாம் கிறிஸ்துவின் அரசுத் தூதுவர்களாயிருக்கிறோம். எனவேதான் தோற் கடிக்கப்பட்ட எதிரி நமக்குமுன் பணிகிறான் (2 கொரி 5:20அ).



ஆனால் நமது நிலையின்படியான இந்த அதிகாரம் நடைமுறை யில் செயல்படுவது எந்த அளவு நாம் கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு அடிபணிந்துள்ளோம் என்பதைப் பொருத்தே உள்ளது. நூற்றுக்கதி பதியின் வேலைக்காரன் சுகமான சம்பவத்தைவிட இத்தத்துவத்தைச் சிறப்பாக விளக்குவது வேறொன்றுமில்லை. தான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருந்தும் தனது சேவகர் தனக்குக் கீழ்ப்படிகிறார்களென்று அவன் சொன்னபோது, பிதாவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருந்த இயேசுவின் அதிகாரத்தையே அவன் அவ்விதம் சுட்டிக்காட்டினான் (மத் 8:8,9). இயேசு தமது பிதாவுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்ததால், பிசாசுகளும் இயேசுவுக்கு முணங்காமல் கீழ்ப்படிந்தன. கீழ்க்கண்ட வசனங்கள் மாறாத இச்சத்தியத்தைத் தெளிவுபடுத்துகின்றன —

''உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரிய வந்திருக்கிறது ... தேவன் சீக்கிரம் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடுவார்'' (ரோ 16:19,20).

''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில் லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' (யாக் 4:7).

''ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்துவேன்'' (சங் 81:13,14).

நாம் பிசாசுகளைத் துரத்துவது ''நமது'' பரிசுத்தத்தினாலல்ல. எனினும், பிசாசுக்கு ''நம்மிடம் ஒன்றுமில்லை'' என நிச்சயித்துக் கொள்ளவேண்டும் (யோ 14:30). கீழ்ப்படியாமையிலும், இரகசிய பாவத்திலும் வாழ்ந்துகொண்டு பிசாசுகளைத் துரத்த முயல்வது பேரா பத்து. ஸ்கேவாவின் குமாரருக்கு நேர்ந்தது தெரியுமல்லவா? (அப் 19:14-16). பாளையத்திலிருந்து சாபத்தீடானது அகற்றப்படும்வரை ஆயி போன்ற சிறிய எதிரியையும் வெல்ல முடியாது! (யோசு 7). ஒளியில் நடந்து இயேசுவின் இரத்தத்தால் நெடுகவே சுத்திகரிக்கப் படுவது பிசாசுக்கெதிரான நமது சாட்சியை வலுப்படுத்தும் (வெளி 12:11). இயேசுவின் இரத்தம், இயேசுவின் நாமம் என்று மந்திரம் போல் சொல்லுவது ஒன்றையும் சாதிக்காது. நல் மனச்சாட்சி அத்தி

யாவசியம் (எபி 9:14). இப்படிச் சொல்வதால், பூரணமடைந்த பின்னரே பிசாசு விரட்டச் செல்லவேண்டும் என்றும் நினைத்துவிடக் கூடாது.

*ஆ) விசுவாசத்தினால்*

அதிகாரத்தோடு விசுவாசமும் வேண்டும். பிசாசு பிடித்த இளை ஞனைச் சீடர்கள் விடுவிக்க முடியாமற்போனதற்கு இயேசு சொன்ன முதற்காரணம் அவர்களது அவிசுவாசமே (மத் 17:19,20). பிசாசு துரத்துவதை மலையை நகர்த்துவதற்கு ஒப்பிட்டுப் பேசினார். ''மலையைப் பார்த்து'' கட்டளை கொடுங்கள் என்று சீடருக்குப் போதித்தார். ஆம், நாம் நேரடியாகப் பிசாசுக்கு ஆணையிடவேண் டும். இதோ, மாதிரிக்குச் சில கட்டளைச் சொற்கள்: ''அசுத்த ஆவியே இந்த மனிதனை விட்டுப் புறப்பட்டுப் போ!'' ''நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட் டளையிடுகிறேன்!'' (மாற் 5:8; அப் 16:18). தேவன் அதிகாரத்தை நமக்குத் தருகிறார்; ''நாமே'' விரட்டவேண்டும். உங்களைச் செய்யச் சொல்லியிருப்பதைச் செய்யத் தேவனிடம் சொல்லாதிருங்கள்!

உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் விசுவாசம் வலுவடைகிறது (மத் 17:20,21). தேவ வல்லமையைக் காண விரும்பினால் உபவாச ஜெப வேளைகளைத் தவறவிடக்கூடாது. எப்பொழுதும் ஆவியினால் நிறைந்திருங்கள். கர்த்தருக்குமுன் காத்திருந்து, அபிஷேகத்தைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள் (அப் 10:38). தினமும் போதுமான நேரம் தேவப் பிரசன்னத்தில் செலவிடுங்கள். ''உன்னதமானவரின் மறை விலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான் ... சிங்கத்தின் மேலும், விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்'' (சங் 91:1,13).

செயல்படுத்துவதால் விசுவாசம் வளருகிறது. தங்களது விசுவா சத்தைப் பெருக்கும்படி வேண்டிய சீடருக்கு இயேசு தந்த பதில் அது தான் (லூக் 17:5,6). நாம் செயலில் குதிக்கும்போது கர்த்தர் நம்மை உற்சாகப்படுத்தவே செய்கிறார். ''ஆண்டவரே, உமது நாமத்தினால் பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகின்றன'' என்று வியப்புடன் அந்த



70 பேர் திரும்பி வந்தனர் (லூக் 10:17). அப்படியானால், அப்படி நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்றுதானே பொருள்! ஆனாலும் அவர்கள் செயல்பட்டார்கள்! அதுவே இரகசியம்.

திருவசனத்திலுள்ள திருவாக்குகளைத் தியானிப்பதால் விசுவாசம் வளம் பெறுகிறது. வார்த்தையினால் இயேசு பிசாசுகளைத் துரத்தி னார் (மத் 8:16). தேவ வசனம் நம்மில் நிலைத்திருக்கும்போதுதான் பொல்லாங்கனை மேற்கொள்ளும் பலவான்களாகிறோம் (1 யோ 2: 14ஆ). திருவசனத்தால் நிறைந்திருங்கள். சத்துருவைச் சந்திக்கும் போது சரியான வசனத்தை ஆவியானவர் உங்களுக்கு நினைப் பூட்டுவார்.

**பிசாசு விரட்டுகையில் செய்யக்கூடாதவை:**

*அ) பயப்படாதீர்கள்!*

சத்துருவின்மேல் தமது சீடருக்கு அதிகாரம் கொடுக்கையில் ''ஒன் றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது'' என்று இயேசு வாக்களித்தார் (லூக் 10:19). உலகிலிருக்கிறவனிலும் நமது உள்ளிலிருக்கிறவர் பெரியவரல்லவா? (1 யோ 4:4). பில்லிசூனியக் கட்டிலிருப்போரை விடுவிக்க முற்படுகையில் எண்ணாகமம் 23:23ஐ நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்: ''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை.'' தைரிய மாயிருங்கள். காயப்பட்ட சர்ப்பம் உங்கள் மீது சீறும். ஆனால் கர்த்த ருடைய தூதன் உங்களைச் சூழப் பாளையமிறங்குவார் (சங் 34:7).

*ஆ) பிசாசுகளோடு உரையாடாதீர்கள்!*

சிலரிடம் இயேசு பெயரைக் கேட்டார், அவ்வளவுதான் (மாற் 5:9). பிசாசுகளைப் பேசவும் அவர் அனுமதிக்கவில்லை (லூக் 4:41). ''இனி இவனைப் பிடிக்கமாட்டேன்,'' ''இங்கிருந்து பாதாளத்திற்குப் போய்விடுவேன்'' என்றெல்லாம் அசுத்த ஆவிகளிடம் வாக்குமூலம் வாங்குவது அர்த்தமற்றது. ஆயிரம் வாக்குப்பண்ணி அத்தனையை யும் அவை மீறிவிடும். அவற்றின் தலைவன் பொய்க்குப் பிதாவாச் சுதே! (யோ 8:44). அவனது தூதர்கள் பொய்யின் ஆவிகளாய்த் தானே இருப்பார்கள்? புகழ்பெற்ற இந்தியச் சுவிசேஷகர் ஒருவர்

தினம் மாலைக்கூட்டம் முடிந்ததும் பிசாசுகளோடு உரையாடியும், வாக்குவாதம்பண்ணியும் நேரம் செலவிட்டார். முடிவில் அவர் வஞ்சிக்கப்பட்டு ஆயிரங்களை வழி பிசகச்செய்தார்.

### *இ) பிசாசைச் சபிக்காதீர்கள்!*

பிசாசை அதட்டலாம், சபிக்கக்கூடாது. அதற்கு நமக்கு உரிமை இல்லை. பிரதான தூதன் மிகாவேலும் பிற தேவ தூதர்களுங்கூட பிசாசையோ அவனது தூதர்களையோ தூஷிக்க அஞ்சினர் (2 பேது 2:11; யூதா 9). அப்படியே, பிசாசைக் கட்டுவதற்கும் பைபிளில் நேரடியான தெளிவான கட்டளையில்லை. ஆயிரமாண்டு ஆட்சியின் போது ஒரு தூதன் அதைச் செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிறது (வெளி 20:1,2). தெளிவாக நமக்குக் கட்டளையிடப்பட்டவைகளை மட்டும் செய்வோம். வரம்பை மீறக்கூடாது. அடாததை நாம் செய்ய முனைந்தால் பிசாசுக்கு அசட்டுச் சிரிப்புதான்! (40ஆம் அத்தியா யத்தை வாசியுங்கள்.)

### *ஈ) பிசாசு பிடித்தவனைக் கொடுமைப்படுத்தாதீர்கள்!*

ஏற்கனவே பிசாசு அவனைப் பாதியாக்கி வைத்திருக்கிறான். நீங் கள் வேறு அவன் முடியைப் பிடித்திழுப்பது, அடிப்பது, கண்ணுக்குள் எண்ணெய் விடுவது, நெற்றியில் கை வைத்துக் கீழே தள்ளுவது, இப்படியெல்லாம் செய்யாதீர்கள். அதுபோல கூச்சலும் அவசிய மில்லை. பிசாசு என்ன செவிடா?

### *உ) தனித்துச் செல்லாதீர்கள்!*

இயேசு தமது சீடரை இரண்டிரண்டு பேராக அனுப்பினார். ஒரு வரைவிட இருவர் எப்பொழுதுமே மேல். பிசாசுகளைத் துரத்துவதில் குழுவாகச் செயல்படுவதே சிறந்த ஊழிய முறை. ''அவர்கள்'' பிசாசு களைத் துரத்துவார்களென்றார் இயேசு (மாற் 16:17). பாதாளத்தின் வாசல்கள் ''சபையை'' மேற்கொள்வதில்லை (மத் 16:18).

### *ஊ) அஞ்ஞான முறைகளைக் கையாளாதீர்கள்!*

பிசாசு பிடித்தவனை ஜெபிக்கப்பட்ட தண்ணீரைக் குடிக்கச் சொல்லுவது, சுவர் தரையெல்லாம் அதைத் தெளிப்பது, இவை யெல்லாம் அஞ்ஞானிகளின் பழக்கங்கள். வேண்டவே வேண்டாம்.



பிசாசைத் துரத்தியதும் விடுதலை பெற்றவனுக்கு நாம் செய்ய வேண்டிய அடுத்த முக்கிய ஊழியம் துவங்குகிறது—

### **3. விடுதலை பெற்றவனைச் சீடனாக்குங்கள்!** (Discipling)

விடுதலை பெற்றவன் பாவத்திலிருந்து உண்மையாய் மனந் திரும்பவேண்டும். அவன் கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்க நடத்தப்படவேண்டும். அப்போஸ்தலர் மனந்திரும்புதலைப் பிரசங்கித்துப் பிசாசுகளைத் துரத்தினர் (மாற் 6:12,13). அவன் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறச்செய்ய வேண்டும்.

விக்கிரகங்களையும் பிசாசின் செயல்களுக்கடுத்த பொருட்களை யும் எறிந்துவிடுவது அவசியம். பல இடங்களில் விக்கிரகங்களையும் பிசாசுகளையும் விவிலியம் சம்பந்தப்படுத்திப் பேசுகிறது (சங் 106: 36-38; 1 கொரி 10:19,20). எபேசுவிலே மனந்திரும்பிய மந்திர வாதிகள் விலையுயர்ந்த தங்கள் புத்தகங்களையும் பொதுவிடத்தில் எரித்துப்போட்டனர் (அப் 19:19).

விடுதலை பெற்றவன் ஆவியினால் நிரப்பப்பட ஜெபியுங்கள். பிசாசுகள் திரும்ப நுழைய வாய்ப்பில்லாதுபோகவேண்டும் (மத் 12:43,45). ஆவியின் நிறைவைப் பெற்றால்தான் அவன் பயமும் வீண் கவலையுமின்றி தேவனைத் துதித்து மகிழ்ந்திருக்க முடியும் (எபே 5:18-20). தனது கவலைகளைக் கர்த்தர்மீது வைத்துவிடத் தெரியாதவனே கர்ஜிக்கும் சிங்கத்திற்கு இரையாவான் (1 பேது 5: 7-9). நெடுங்காலப் பிடிப்பிலிருந்து விடுதலை பெறுபவர்கள் சாதக மாய்ச் சிந்திக்கப் பழகும்படி கிறிஸ்தவ மனோதத்துவ மருத்துவரிடம் (Christian Psychologist) உதவி பெறுவதும் நல்லது.

பைபிளைத் தியானிக்கும் முறையை அவனுக்குப் போதியுங்கள். படிப்பறிவற்றவனானால், கிறிஸ்துவில் அவனுக்குண்டான நிலை யையும், வெற்றியைக் குறிப்பிடும் வசனங்களையும், பாதுகாப்புக் கான இறைவாக்குகளையும் ஒவ்வொன்றாய் அவன் மனனம் செய்ய உதவுங்கள். சத்துருவுக்கெதிராக ஆவியின் பட்டயத்தைப் பயன் படுத்த அவனைப் பழக்குவியுங்கள் (எபே 6:17).

அவனை விசுவாசிகளின் ஐக்கியம் ஒன்றில் இணைத்துவிடுங்கள். அது அவனுக்கு இன்றியமையாதது (பிர 4:12). தனித்துச் செல்லும் ஆடு பீறும் ஓநாயிடம் தப்புவதரிது.

விடுதலை பெற்றவன் தேவனுக்கடுத்தவைகளில் தீவிர ஈடு பாடுகொள்ளச் செய்யுங்கள். ''நீ உன் இனத்தாரிடம் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவி'' என்று பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப் பட்டவனிடம் இயேசு சொன்னார். அவன் உடனே போய்ப் பத்து நகர்களை (= தெக்கப்போலி) நற்செய்திமயமாக்கினான்! (மாற் 5:19,20). மகதலேனாள் மரியாள் இன்னொரு சிறந்த எடுத்துக்காட்டு. இயேசு அவளிடமிருந்து ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் இயேசுவின் நற்செய்திக்குழுவில் ஒரு தீவிர அங்கமானாள் (லூக் 8:1,2). உயிர்த்தெழுந்த கர்த்தரை முதலாவது சந்தித்து அச்செய் தியைப் பரப்பியது அவள்தான்! (மாற் 16:1,9,10).

### *இன்றே துவங்குங்கள்!*

இந்தியக் கிராமங்களிலும், பழங்குடியினர் பகுதிகளிலும் பிசாசு பிடித்திருப்போர் ஏராளம். சீயோனிலிருந்து இரட்சகர்கள் வருவார் களென அவர்கள் ஆண்டாண்டாய்க் காத்திருக்கிறார்கள்! இயேசுவின் நாமத்தில் அவர்களிடம் விரையுங்கள். ''கட்டுண்டவர்களுக்கு கட்ட விழ்த்தலைக் கூற'' கர்த்தருடைய ஆவியானவர் உங்கள்மேல் இருக் கிறார் (ஏசா 61:1). Devil Driver எனும் D.D. பட்டத்தைப் பரலோகம் உங்களுக்களிக்கிறது. சர்வகலாசாலை எதுவும் அளிக்க முடியாத இப் பட்டம் சர்வலோகம் எங்கும் அங்கிகரிக்கப்படும்!

## விசுவாசிகளுக்குப் பிசாசு பிடிக்குமா?

கீழ்வரும் தெளிவான திட்டமான தேவ வாக்குகளை நோக்குங் கால், எப்படித்தான் தேவனது பிள்ளை ஒருவனுக்குப் பிசாசு பிடிக் குமோ என்று நினைத்தும் பார்க்கமுடியவில்லை —

''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை; இஸ்ரவே லுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை'' (எண் 23:23).



''சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ள உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட் டாது'' (லூக் 10:19).

''என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கின்றன ... அவை களை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒரு வனாலும் கூடாது'' (யோ 10:27-29).

''உலகத்திலிருக்கிறவனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்'' (1 யோ 4:4).

விசுவாசியொருவன் பிசாசுகளால் வாதிக்கப்படலாம்; அவனது வாழ்க்கையின் சில பகுதிகளில் பிசாசுகளால் வெகுவாய்ப் பாதிக் கவும்படலாம்; ஆனால் ஒருபோதும் அவன் ஓர் அவிசுவாசியைப் போல் பிசாசினால் பிடிக்கப்படமுடியாது. நாம் பிசாசினால் வஞ்சிக் கப்படலாம், நெருக்கப்படலாம், ஆனால் பிடிக்கப்படமுடியாது (மத் 24:24; 1 பேது 5:8,9). ஆவியானவரின் நடத்துதலைப் பின்பற்றத் தவறும்போது பிசாசுகள் நமது எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் ஆகியவற்றைப் பாதிக்கும். ஒருமுறை பேதுரு தனது சிந்தனையில் சாத்தானால் ஆட்டிப்படைக்கப்பட்டார் (மத் 16:23). அனனியா, சப்பீ ராளைப் பெந்தெகொஸ்தேக்குப் பின்னுள்ள ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம் (அப் 5:3,9). ஆனால் இவையொன்றும் பிசாசு பிடித்த லோடு சேராது.

நமது உடல் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரும் அசுத்த ஆவிகளும் சேர்ந்து குடியிருக்க முடியாது (2 கொரி 6:15,16). ஆவியானவரை நாம் எதிர்க்கலாம், துக்கப்படுத்தலாம், அணைத்துவிடலாம்; ஆனால் பாவம் செய்யும் போது அவர் நம்மை விட்டுப் போய்விடுவதில்லை. பழைய உடன் படிக்கையின் காலத்தில்கூட, தாவீது பாவம் செய்தபின், பரிசுத்த ஆவியைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும்படி அவர் ஜெபிக்கவில்லை. மாறாக, ''உமது பரிசுத்த ஆவியை என்னிலிருந்து எடுத்துக்கொள்ளா மலிரும்'' என்றுதான் மன்றாடினார் (சங் 51:11).

தேவாலயத்தைக் குறித்து இயேசு பக்திவைராக்கியம் கொண்டிருந்தார் (மத் 21:12,13). அப்படியே ஆவியானவரும் நமது உடல்களைக் குறித்து வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார். இயேசுவின் விலைமதியா இரத்தத்தால் கிரயங்கொள்ளப்பட்ட ஓர் உடலைத் தேவனது பரம எதிரிக்காக ஆவியானவர் காலி செய்யமாட்டார் (1 பேது 1:18,19; எபே 4:30). வாடகைக்காரரைக் கிளப்புவதே இந்நாட்களில் கடினம்! ஒரு குறைந்த சக்தியானது தேவனாகிய சொந்தக்காரரைக் காலிசெய்து வெளியனுப்புவது சாத்தியந்தானோ? ''வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்'' என்றிருக்கிறதே (ஏசா 59:19).

விசுவாசிகள் எப்பொழுதும் ஆன்மீகப் போராயுதங்களணிந்து எதிரியை முறியடிக்க விழிப்புடனிருக்கவேண்டுமென எபேசியர் 6:10-18 போன்ற பகுதிகள் வலியுறுத்துகின்றன. ஆவியானவராலும் வசனத்தாலும் நிறைந்திருப்பது பிசாசு பிடித்தலுக்கு எதிரான ஆயுள் காப்பாகும். விசுவாசிகள் பின்வாங்கி, மற்ற விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து தங்களைத் துண்டித்துக்கொண்டு, பாவக்காரியங்களிலும் மந்திரக் காரியங்களிலும் ஈடுபட்டு, வசன எச்சரிப்புகளுக்கும் ஆவியானவரின் சத்தத்திற்கும் நெடுகவே செவியடைக்கும்போது, அவர்கள் தாங்களாகவே ஆபத்தான எல்லைக்குள் நடைபோடுகிறார்கள்.

விசுவாசிகள் சிலருக்குப் பிசாசு பிடித்திருப்பதாகச் சில தகவல்கள் அங்குமிங்கும் இந்நாட்களில் சொல்லப்படுகின்றன. பல காரியங்களை இங்கு அலசிப்பார்க்கவேண்டியதிருப்பதால் அவ்வளவு சுலபமாக இதற்கு விளக்கம் கொடுத்துவிடமுடியாது. புதிய உடன்படிக்கை அமுலான பின்னர் விசுவாசிகளுக்குப் பிசாசு பிடித்ததென்று தெளிவான எடுத்துக்காட்டு ஒன்றுகூட திருமறையில் இல்லாத பட்சத்தில், ஆங்காங்கே கேள்விப்படும் சம்பவங்களை வைத்துக்கொண்டு, உபதேசச் சத்தியமாக ஒன்றையும் நிலைநாட்டமுடியாது.

விசுவாசிகளுக்குப் பிசாசு பிடிக்குமா? பிடிக்காது, ஆனால் விழித்திருங்கள்!



# 38

# ஜெப ஊர்வலம்

## Prayer Walks

மன்றாட்டு ஜெபம் மற்றும் ஆன்மீகப் போராட்டம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியோடு பட்டணங்களிலும் மாநகர்களிலுமுள்ள தெருக்களைச் சுற்றி அணிவகுத்து நடந்து ஜெபித்துவரும் பழக்கமும் தோன்றியுள்ளது. இது ஜெபப் பவனி அல்லது ஜெப ஊர்வலம் அல்லது ஜெப நடை (Prayer Walk) என்றழைக்கப்படுகிறது. அநேகக் கிறிஸ்தவருக்கு இது கவர்ச்சியாயிருந்தாலும் இது திருமறைப் போதனைக்கு உகந்ததாயிராததால் மற்ற சிலருக்குக் கேள்வியாயிருக்கிறது. இந்த ஜெப ஊர்வலங்கள் கூடிக்கொண்டே வருவதால், வேதாகமக் கண்ணோட்டத்தில் இதை அலசிப்பார்ப்பது அவசியமாகியுள்ளது.

இயேசுவைப் பொருத்தவரை, ஜெபமானது பிரதானமாக மறைவிலேயே செய்யப்படவேண்டியதென்பது முதலாவது சுட்டிக்காட்டப்பட வேண்டும். அவரது காலத்து மார்க்கவாதிகள் சிலர் ''வீதிகளின் சந்திகளில்'' வேண்டுமென்றே நின்று ஜெபிக்கும் பழக்கத்தை அவர் வன்மையாய்க் கண்டித்தார். ''நீ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் நுழைந்து, உன் கதவைப் பூட்டி, மறைவாயிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது மறைவிலுள்ளதைப் பார்க்கும் உன் பிதா வெளிப்படையாய் உனக்குப் பலனளிப்பார்'' என இயேசு போதித்தார் (மத் 6: 5,6). இரகசிய ஜெபமே ஜெபத்தின் இரகசியம் என்பதே இயேசுவின் கோட்பாடு. பொதுவிடங்களில் அவர் ஜெபித்ததாய் நாம் வாசிப்பதரிது. மாறாக, இப்புனிதப் பயிற்சிக்காய்த் தனிமையான இடங்களைத் தேடிச் சென்றார். நோயாளிகளுக்காய்க்கூட அவர் ஒருபோதும் பொதுவிடங்களில் ஜெபித்ததாய்த் தெரியவில்லை. அவர்களைக் குணமாக்கினார், அவ்வளவுதான்.

சிற்றூர்களையும் பெருநகர்களையும் நற்செய்திமயமாக்க இயேசு எழுபது சீடரை அனுப்பியபோது, ''நான் உங்களுக்கு இருளில் சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின் மேலிருந்து பறைசாற்றுங்கள்'' என்றார் (மத் 10:27). அதாவது, ஜெபமானது மறைவிடங்களில் ஏறெடுக்கப்படவேண்டும்; அதைத் தொடர்ந்து வெளியிடங்களில் நற்செய்தி அறிவிக்கப்படவேண்டும். எதிர்ப்பு நிறைந்த பகுதிகளிலும் இம்முறையையே பின்பற்றவேண்டுமென்பது இயேசுவின் போதனை (வச 28).

நகர்களைச் சுற்றி ஜெப ஊர்வலம் வந்ததாக அப்போஸ்தலர் நடபடிகளில் எங்கும் நாம் வாசிப்பதில்லை. ஏதென்ஸ் நகரானது விக்கிரகங்களால் நிறைந்திருந்ததைக் கண்ட பவுலின் ஆவி சினமடைந்தது. உடனே அவர் விக்கிரகாராதனையின் ஆவிக்கெதிராய்ப் போராட ஜெப ஊர்வலமொன்றை நடத்திவிடவில்லை. மாறாக, சந்தைவெளிகளில் தினமும் மக்களோடு தர்க்கித்துப் ''பேசினார்'' (அப் 17:16,17). பேதுரு சிறையிலடைக்கப்பட்டபோது, விசுவாசிகளெல்லாரும் அணிவகுத்து அல்லேலூயா கோஷமிட்டுக்கொண்டு சிறை மதில்களைச் சுற்றி ஜெபப் பவனி வரவில்லை. அவர்கள் கதவுகளைப் பூட்டிக்கொண்டு வீடுகளுக்குள்ளிருந்து ஜெபித்துக்கொண்டிருந்தார்கள்; ஆண்டவர் அற்புதமாய்ப் பேதுருவை விடுவித்தார் (அப் 12:5,12,17).

ஜெப ஊர்வலத்திற்கு ஆதாரமாக அடிக்கடி மேற்கோள் காட்டப்படும் பைபிள் சம்பவம் இஸ்ரவேலர் ஏழு நாள் எரிகோ மதிலைச் சுற்றி வந்ததாகும் (யோசு 6). ஆனால் இச்சம்பவம் புதிய ஏற்பாட்டு யுகத்திலுள்ளோருக்கு ஆன்மீகப் போராட்ட ஜெபத்தைப் போதிப்பதற்காய் எழுதப்பட்டதல்ல. எபேசியருக்குப் பவுல் எழுதிய நிருபத்திலேயே இதற்குரிய முழுமையும் முடிவுமான உபதேசமுண்டு. அவர் எழுதியுள்ளபடி, பொல்லாத சக்திகளின் முக்கிய இருப்பிடம் ''வான மண்டலங்களில்'' இருக்கிறது (எபே 6:12). கிறிஸ்து ''எல்லாத் துரைத்தனத்திற்கும், அதிகாரத்திற்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்திற்கும் ... மேலாய் ... உன்னதங்களில்'' உட்கார்ந்திருக்கிறார்



(1:20,21). அவர்மீது விசுவாசம் வைத்திருக்கும் நாம் அவரோடு ''உன்னதங்களில்'' வீற்றிருக்கிறோம் (1:3). இப்படியிருக்க, போராட்டமானது சமதளத்தில் அல்ல. மேலிருந்து நாம் எதிரியைத் தாக்குகிறோம். அமலேக்கியருக்கெதிராக தேவ மக்கள் போர்புரிந்த காட்சி இத்தத்துவத்தைத் தெளிவாய் விளக்குகிறது. மலையுச்சியிலிருந்த மோசேயும் ஆரோனும் ஊரும் மன்றாட்டு வீரரைக் குறிக்கின்றனர்; அமலேக்கியரோடு அடிவாரத்தில் போர்புரிந்த யோசுவாவும் இஸ்ரவேலரும் நற்செய்தியறிவிப்பாளரைக் குறிக்கின்றனர் (யாத் 17).

ஒரு நகரைக் கைப்பற்றுவதற்காய் ஆண்டவர் கொடுத்த இராணுவத் திட்டத்தை மட்டுமே எரிகோ சம்பவம் விளக்குகிறது. அது ''துதியின்'' சத்தமல்ல, வெறும் முழக்கம் மட்டுமே. கேள்விகேட்காமல் தம்மை விசுவாசித்து, தமக்குக் கீழ்ப்படியவேண்டும் என்பதையே தேவன் இங்கு இஸ்ரவேல் மக்களுக்குப் போதித்து அவர்களைப் பயிற்றுவித்துக்கொண்டிருந்தார். எரிகோவை ''ஆசீர்வதிக்க'' அல்ல; சபிக்கப்பட்ட அந்நகரை ''அழிக்கவே'' அவர்கள் சென்றிருந்தனர்! அது இரட்சிப்புக்கான முகாம் அல்ல, அழிவுக்கான முற்றுகை! பெரும்பாலான கிறிஸ்தவருக்குக்கூட திருமறை விளங்காதிருக்கும் இக்காலத்தில், கிறிஸ்தவரல்லாதோர் இவ்வித ஜெப ஊர்வலங்களைக் குறித்துக் கேள்விப்படும்போது அவற்றைத் தீவிரவாதச் செயல்களாகவே கணிப்பர். அவர்களைச் சுவிசேஷத்திற்கு நேராகக் கவருவதற்குப் பதிலாக, அவர்களுக்கு வெறுப்பைத்தான் ஏற்றிவிடுவோம்.

எருசலேமில் இயேசு வெற்றிப் பவனி வந்ததும் ஜெப ஊர்வலத்திற்கு எடுத்துக்காட்டல்ல. ''ஓசன்னா'' என்றால் ''ஆண்டவரே, எங்களை விடுவியும்'' என்று பொருள். ரோமரின் கொடுங்கோலாட்சியிலிருந்து விடுவிக்கப்பட யூதரின் இதயக்கதறல் அது.

அப்படியானால், ''ஆடவர்கள் கோபமும் தர்க்கமும் இல்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம் பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்'' என்று பவுல் 1 தீமோத்தேயு 2:8இல் எழுதியதின் பொருளென்ன? இந்த வேதப்பகுதி

‘‘திருச்சபையில்’’ ஆடவரும் பெண்டிரும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைத்தான் போதிக்கிறதே தவிர நவீன கால ஜெப நடைகளை ஆமோதிக்கவில்லை (வச 9-12). ‘‘எல்லா இடங்களி லேயும்’’ என்ற சொற்றொடருக்குப் பொருள் ‘‘எங்கெல்லாம் சபை கூடிவருகிறதோ அங்கெல்லாம்’’ என்பதுதான் (1 கொரி 1:2). இந்த வேதப்பகுதியின் போதனை திருச்சபையில் இருக்கவேண்டிய அதி காரம் மற்றும் தலைமைத்துவத்தைப் பற்றியதே தவிர தெரு ஜெபத் தைப் பற்றியதல்ல. ‘‘பரிசுத்த கரங்களை உயர்த்தி’’ என்பது ஆன்மீக அதிகாரத்தைப் பயன்படுத்துவதையே குறிக்கும். மட்டுமல்ல, இந்த வசனத்தை ஜெப ஊர்வலங்களுக்கு ஆதரவாகப் பயன்படுத்தினால், பெண்களுக்கு இங்கு இடமேயில்லை!

போதுமான அளவு நாம் இன்னும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வில்லை என்பதே எனது நம்பிக்கை. விதை விதைப்பதற்கு மாற்று எதுவும் கிடையாது. ஜெபம் எவ்வளவுதான் முக்கியமானதும் வல்ல மையானதுமாயிருந்தாலும் கிரமமாய், சோர்ந்துபோகாமல் நற்செய் தியைப் பிரசங்கிப்பதற்கு அது பதிலானதாகாது. பெருக விதைக் காமல் சிறுக விதைப்பதே அறுவடை குறைவாயிருப்பதற்குக் காரணம் (2 கொரி 9:6). ஜெப ஊர்வலங்கள் உற்சாகமாயிருக்கலாம்; ஆனால் அது வேலையைச் சாதிக்காது. அன்றைய இரட்சணிய சேனையினர்போல விசுவாசிகள் திறந்தவெளிப் பிரசங்கத்திற்காய்த் தைரியமாய்ப் புறப்பட்டுச் செல்லவேண்டும். ஜெப ஊர்வலமல்ல, சுவிசேஷப் பவனியே இன்றையத் தேவை. உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் ‘‘பிரசங்கம்பண்ணுங்கள்’’ என்று இயேசு சொல்லி யிருக்கிறார் (மாற் 16:15). ‘‘எந்தப் பட்டணத்தில் நுழைந்தாலும் ... பிரசங்கியுங்கள்’’ என்றார் அவர் (மத் 10:7, லூக் 10:8,9). எழுபது சீடர் ‘‘பிரசங்கிக்கும்படி’’ அனுப்பப்பட்டனர். அவர்கள் பிரசங்கித்துக் கொண்டிருக்கையில் சாத்தான் கீழே விழுவதை இயேசு கண்டார்! (லூக் 10:18).

தனி நபர்களாகவும், குழுக்களாகவும் நாம் சமுதாயங்களுக்குள் ஊடுருவிச் சென்று நற்செய்தியைப் பகிர்ந்துகொள்வோம். கிறிஸ்து வின் உபதேசத்தினால் பட்டணங்களை ‘‘நிரப்புவோம்’’ (அப் 5:28).



நாடுகளிலும் கண்டங்களிலுமுள்ள ‘‘யாவரும்’’ சுவிசேஷத்தைக் கேட்டுவிடும்படி மாதக் கணக்கில் வருடக்கணக்கில் இடையறாது நற்செய்தியை அறிவித்துக்கொண்டேயிருப்போம் (அப் 19:10). வீடு கள்தோறும் சந்திப்பு ஊழியம் செய்ய விரைவோம் (அப் 20:20). இப்படி ஓர் இடம் விடாது அறிவித்துக்கொண்டேயிருந்தால்தான் ‘‘உலகத்தைக் கலக்குகிறவர்கள்’’ எனும் பட்டப்பெயர் நமக்குக் கிடைக்கும் (அப் 17:6). இது கடினமெனினும் இது ஒன்றே வழி. வேறெதுவும் பகட்டாயிருக்கும், பரவசமாயிருக்கும், ஆனால் பயன ளிக்காது. கிறிஸ்தவரல்லாத ஒருவரிடம் நமது வாயைத் திறந்து சுவி சேஷத்தைப் பகிர்ந்துகொள்வதையோ, இல்லந்தோறும் நற்செய்தி யறிவிப்பதையோவிட ஜெப ஊர்வலங்களில் கலந்துகொள்வது எளிது. எதிலுமே எளிதானதையே தெரிந்துகொள்வதில் கிறிஸ்தவர் களாகிய நாம் கெட்டிக்காரர். ஜெப ஊர்வலங்களில் கலந்துகொள்ள வெறுமனே ஓர் உற்சாகமிருந்தால் போதும்; ஆனால் நற்செய்தி யறிவிப்புப் பணியில் திறம்படச் செயல்படவேண்டுமானால் ஆவி யின் அபிஷேகம் இன்றியமையாதது.

கால் மிதிக்கும் தேசமெல்லாம் கிடைக்குமென்பது பழைய ஏற் பாட்டு இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்ட தேசிய வாக்குத்தத்த மாகும். அது பூகோள சம்பந்தப்பட்டது (உபா 11:24; ஆதி 13:14, 15). இந்த நற்செய்தி யுகத்தில் நமக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது இடங்களல்ல, இனங்களே. ‘‘எங்கெல்லாம்’’ என்றல்ல, ‘‘எவரெல் லாம்’’ என்பதே (யோசு 1:3; மாற் 16:16). மக்களிடம் செல்லும்போ தும், நாம் சந்திக்கும் யாவரும் நமது செய்தியை ஏற்றுக்கொண்டு விடமாட்டார்கள். அப்படித் திருவாக்கு எதுவும் கிடையாது. விசா லமான வழிக்குப் பதிலாக நெருக்கமான வாசலை வெகு சிலரே தெரிந்துகொள்வர். உலகைக் கிறிஸ்தவமயமாக்க அல்ல; நற்செய்தி மயமாக்கவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம். ‘‘கிறிஸ்துவுக்கு இந் தியா’’ என்பது வறட்டுக் கூச்சல்; ‘‘இந்தியாவிற்குக் கிறிஸ்து’’ என் பதே அர்த்தமுள்ள கோஷம்.

ஜெப ஊர்வலங்கள் தேவையற்றவை என்றே நான் சொல்லு வேன். அந்தந்த இடங்களில் ஜெபித்தாலும் அறைகளிலிருந்து

ஜெபித்தாலும் ஒன்றுதான். ''நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (எரே 23:23). நமது இருதயங்கள் தேவனுடைய இருதயத்தோடு எவ்வளவு நெருங்கியிருக்கின்றன; அழியும் மாந்தருக்கான அவரது பாரத்தை நாம் எவ்வளவு பகிர்ந்துகொள்கிறோம் என்பதே காரியம் (ரோ 9:1-3). ஜெபப் பவனிகள் அல்லது ஊர்வலங்கள் நடத்தச் செலவிடும் நேரத்தையும் பலத்தையும் தீவிர நற்செய்தியறிவிப்பு முயற்சிகளில் செலவிட்டால் கிறிஸ்துவின் பேராணையை வெகு சீக்கிரம் நிறைவேற்றிவிடலாம்.

ஜெப ஊர்வலங்கள் நடத்திய நகர்களில் ஏற்பட்ட ஆன்மீக அசைவைக் குறித்து சில பிரசங்கிமார் சாட்சி கூறலாம். ஆனால் ஆன்மீக வஞ்சகம் பிரவாகித்துவரும் இக்காலங்களில் திருமறையில் தெளிவாகப் போதிக்கப்படாத செயல்பாடுகளில் ஈடுபடாதிருப்பதே பாதுகாப்பு. ஜெப ஊர்வலங்களைப் பொருத்தவரை, இவ்வத்தியாயத்தில் சுட்டிக்காட்டியபடி, ஜெபத்தைக் குறித்த அடிப்படையான சில வேதாகமத் தத்துவங்கள் தள்ளப்பட்டுள்ளன. குறிகள் நியமித்து மும்முரமாய் நற்செய்தியறிவிப்பில் ஈடுபடாதபடி நம்மைத் திசை திருப்புவதற்கான பிசாசின் தந்திரங்களில் (?) இதுவும் ஒன்றாயிருக்கலாம். நாம் விழிப்பாயிராவிடில் போராட்டத்தில் தோல்வியடைந்து, ''செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் செய்யத் தகாதவைகளையே செய்துவந்தோம்'' என்று அறிக்கையிட்டுக்கொண்டே இருக்கவேண்டியதுதான்!

■

*ஜாதி மத பேத முற்றும் நீங்கிட,*
*ஜோதியாய்ப் பிறந்து லோகப் பாவம் போக்கிட,*
*கல்வாரியில் மரித்தே உயிர்த்தெழுந்த*
*கர்த்தரின் நற்செய்தி சாற்றுவோம்!*



# 39

# சாத்தானின் கோட்டைகள்

## Bringing down strongholds

''எந்தெந்த ஆவிகள் எங்கெங்குச் செயல்படுகின்றன'' (spiritual mapping) என்பதைக் கண்டுபிடிக்கும் முயற்சி இன்று ஆன்மீகப் போராட்டம் குறித்துப் பேசப்படும் வட்டாரங்களில் பரவலாக மேற்கொள்ளப்படுகிறது. இம்முயற்சியில் ஈடுபடுபவர்கள் வந்து சேரும் முடிவுகள்: ''இந்த இடத்தில் கொலை ஆவி தாண்டவமாடுகிறது; இந்த இடத்தை விபசார ஆவி கைப்பற்றியிருக்கிறது; இந்த இடத்தை இந்தத் தேவதை அல்லது அந்தப் பிசாசு ஆட்கொண்டிருக்கிறது; போன்றவை.'' இம்முயற்சியில் ஈடுபடுவோர் சுட்டிக்காட்டும் ஆவிகளுக்கு ஆகாபின் ஆவி, யேசபேலின் ஆவி என்றெல்லாம் பெயர்களும் சூட்டுகின்றனர். இவையெல்லாம் ''பிராந்திய ஆவிகள்'' (territorial spirits) என்றழைக்கின்றனர்.

ஒரு கொலைகாரனைப் பார்த்து, ''நீ செய்த கொலைக்குக் கொலையின் ஆவியே காரணம்'' என்று சொன்னால் அவன் ''ஆமென்'' என்று சொல்லிவிட்டுச் சந்தோஷமாய்ப் போய்விடுவான்; ஏனெனில் அவனது செயலுக்கான தார்மீகப் பொறுப்பு அவனுக்கு இல்லாமல் போகிறது. அதே விதமாக, ஒரு விபசாரக்காரனைப் பார்த்து, ''நீ செய்த தவற்றிற்கு விபசார ஆவியே காரணம்'' என்று சொன்னால் அவனும் ''ஆமென்'' போட்டுவிட்டுச் சந்தோஷமாய்ப் போய்விடுவான்; ஏனெனில் அவனது முறைகேட்டிற்கான தார்மீகப் பொறுப்பு அவனுக்கு இல்லாமல் போகிறது. ஆனால் பைபிள் போதிப்பது என்ன? யாக்கோபு 1:13-15, ''சோதிக்கப்படுகிற எவனும் 'நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன்' என்று சொல்லாதிருக்கட்டும் ... அவனவன் தன் தன் சொந்த ஆசையினால் இழுக்கப்பட்டு, சிக்கி, சோதிக்கப்படுகிறான். பின்பு ஆசையானது கருவுற்றுப் பாவத்தைப் பிறப்

பிக்கும்; பாவம் முழு வளர்ச்சியடையும்போது மரணத்தைப் பிறப் பிக்கும்.'' இதைச் சொல்லியவுடன் அப்போஸ்தலன் எச்சரிப்பது: ''என் பிரிய சகோதரரே, *மோசம் போகாதிருங்கள்''* (வச 16). நம்மைச் சோதிப்பது தேவன் அல்ல, பிசாசுதான், என்றா இப்பகுதி கூறுகிறது? நமது தோல்விகளுக்கான பழியையெல்லாம் சாத்தான்மீது நாம் சுமத்திவிட்டால் நாம் ''மோசம்'' போவோம்; அதாவது வஞ்சிக்கப் படுகிறவர்களாவோம்.

எந்த ஆவி எங்குச் செயல்படுகிறதென்று கண்டுபிடிப்பதில் பய னென்ன? திருமறையைப் பொருத்தவரை, பிசாசின் ஆதிக்கம் இல் லாத இடம் எதுவும் உலகில் கிடையாது. இதை எவ்வளவு தெளிவாய் அப்போஸ்தலன் யோவான் சுட்டிக்காட்டியுள்ளார் பாருங்கள்: ''நாம் தேவனால் உண்டாயிருக்கிறோம் என்றும், உலகம் *முழுவதும்* தீய வனுக்குள் கிடக்கிறது என்றும் அறிந்திருக்கிறோம்'' (1 யோ 5:19). கர்த்தருடைய நாளில்தான் விக்கிரகங்கள் யாவும் அடியோடு ஒழியும். இதனை முன்னறிவிக்கும் தீர்க்கதரிசனப் பகுதிகள் இதோ: ஏசா 2:2,12,18, ''கடைசி நாளில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் நிறுவப்பட்டு, மலைகளுக்கு மேல் உயர்த்தப்படும்; எல்லா இனத்தவரும் அதற்கு ஓடிவருவார்கள் ... கர்த்தருடைய நாளானது பெருமையும் மேட்டிமையுமானவை யாவற் றின்மேலும் வரும் ... விக்கிரகங்கள் கட்டோடு ஒழிந்துபோகும்.'' இது ''யூதாவையும் எருசலேமையும் குறித்த தீர்க்கதரிசனம்'' (வச 1). இன் னொரு தீர்க்கதரிசனம்: சக 13:2, ''அந்நாளில் நான் விக்கிரகங்களின் பெயரும் நாட்டில் இராதபடி அழிப்பேன்; அவை இனி நினைக்கப் படுவதில்லை.'' இது ''தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்குமான'' தீர்க்கதரிசனம் (வச 1). தீர்க்கதரிசனத்திற்குத் தவறான அர்த்தங்கள் கொடுத்து செய்யத் தகாதவைகளில் மாட்டிக் கொள்ளாதீர்கள்.

ஆன்மீக அரண்கள் பிரதானமாக நகர்களிலும் பிராந்தியங்களிலும் அல்ல, மக்களுடைய ''மனதிலேயே'' எழுப்பப்பட்டிருக்கின்றன. அப் போஸ்தலன் பவுலின் இக்கூற்றைக் கவனியுங்கள்: 2 கொரி 10:3-5, ''நாங்கள் உலகில்தான் வாழ்கிறோம்; எனினும் எங்கள் போராட்டம்



உலகைச் சார்ந்தது அல்ல. எங்கள் போராயுதங்கள் உலகுக்கேற்றவை யாயிராமல், அரண்களைத் தகர்த்தெறிகிறதற்குத் தேவ பலமுள்ள வையாயிருக்கின்றன. அவைகளால் நாங்கள் ***தர்க்கங்களையும்,*** தேவனை அறிகிற ***அறிவுக்கு*** விரோதமாய் எழும்பும் எல்லா மேட்டி மையையும் தகர்த்து, எந்த ***எண்ணத்தையும்*** கிறிஸ்துவுக்குள் கீழ்ப் படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.'' 2 கொரி 4:3,4, ''எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிற வர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவ சாயலான கிறிஸ்து வின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர் களுக்குப் பிரகாசமாயிராதபடி, இவ்வுலகின் தேவனானவன் அவர் களுடைய ***மனதைக்*** குருடாக்கினான்.'' இதற்கு நிவாரணம் என்ன? ''நாங்கள் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தர் என்று பிரசங்கிக்கிறோம்'' (வச 5). சுவிசேஷத்தின் மகிமையைக் காண முடியாதபடி மக்களைக் குருடாக்கியிருக்கும் அவர்களது தவறான ***சிந்தனைகளையே*** நாம் தகர்த்தெறியவேண்டும்.

அத்தேனே நகரில் பவுல் இதை அழகாய்ச் செய்தார் (அப் 17). அந்நகரில் பெருகியிருந்த விக்கிரகாராதனை அவரில் ஒரு கிளர்ச்சி யுண்டாக்கியது (வச 16). பரிசுத்த கோபம்! அவர் என்ன செய்தார்? ''ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தை வெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினமும் ***உரையாடினார்''*** (வச 17). அங்கு வணங்கப்பட்டுவந்த எந்தத் தெய்வத்தின்மீதும் அவர் ஆன்மீகப் போர் தொடுக்கவில்லை. எந்த ஆவியின் பெயரையும் சொல்லி அதின் சக்திகளைத் தகர்த்தெறிய முயற்சிக்கவில்லை. ''எப்பிக்கூரர்''அல்லது ''ஸ்தோயிக்கர்'' போன்ற கிரேக்க ஞானிகளின் ஆவியைப் பவுல் கடிந்துகொள்ளவில்லை (வச 18). அவர்களுக்கு எளிமையாக ''இயேசுவையும் உயிர்த்தெழுதலையும்'' பிரசங்கித்தார். அவர்கள் அதனைப் ''புதிய உபதேசம்'' என்றும் ''நூதனக் காரியங் கள்'' என்றும் அழைத்தனர் (வச 19,20). தத்துவ ஞானத்தின் வழி யாகவே மக்களைப் பிசாசு அடக்கியாளுகிறான் என்பதைப் பவுல் அறிந்திருந்தார். கொலோசேயிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர் கொடுத்த எச்சரிப்பு: ''போலி ***மெய்யியலாலும்*** (philosophy) வீணான

ஏமாற்றுப் பேச்சாலும் உங்களை யாரும் கவர்ந்துகொள்ள விடாதீர்கள்; அவை கிறிஸ்துவை அல்ல, ***மனித மரபுகளையும்*** (traditions) உலகின் பஞ்சபூதங்களையும் சார்ந்தவை; அவற்றைக் குறித்துக் கவனமாயிருங்கள்.''

உலகத் தத்துவங்களைச் ''*சத்திய* ***வசனத்தால்''*** எதிர்கொண்டால் அவற்றால் பிடிபட்டிருக்கிறவன் விடுதலை பெறுவான் (2 கொரி 6:7). தேவன் விடும் சவால்: எரே 23:28,29, ''என் ***வார்த்தை*** அக்கினியைப் போலவும், கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலவும் இருக்கிறதல்லவோ?'' பரிசுத்தமுள்ள திருவார்த்தைக்கு முன் எந்தத் தத்துவ ஞானமும், தீர்க்கதரிசனமும், சொப்பனமும் நிற்க முடியாது. விசுவாசிக்கிற மக்களை விடுவிப்பதற்குச் ''சுவிசேஷமே'' தேவனுடைய வல்லமையாயிருக்கிறது (ரோ 1:16). சுவிசேஷத்தின் வல்லமை வெளிப்படும்போது யூதப் பாரம்பரியமோ கிரேக்கத் தத்துவ ஞானமோ தாக்குப் பிடிக்க முடியாது! எந்த ஆவி எங்கே செயல்பட்டாலென்ன? கிறிஸ்துவின் சுவிசேஷம் ஒரு சிங்கம். அதை அவிழ்த்துவிடுங்கள்; வேலையை முடித்துவிடும்!

தானியேலின் மன்றாட்டு ஜெபத்தைக் குறித்து வாசிக்கும்போது ''பெர்சியா அதிபதி'' என்றொருவனைச் சந்திக்கிறோமே, அது யார்? மூன்று வாரங்கள் தானியேல் உபவாசித்து ஜெபித்துக்கொண்டிருந்தார் (தானி 10:2). அதைக் குறித்து அவர் சொல்வதைக் கேட்போம்: தானி 10:10-13, ''இதோ, ஒருவன் கை என்னைத் தொட்டு, என் முழங்கால்களும் என் உள்ளங்கைகளும் தரையை ஊன்றியிருக்க என்னைத் தூக்கி வைத்தது. அவன் என்னைப் பார்த்து: பிரியமான மனிதனாகிய தானியேலே, நான் இப்போது உன்னிடம் அனுப்பப்பட்டு வந்தேன்; ஆதலால் நான் உனக்குச் சொல்லும் வார்த்தைகள் மீது கவனமாயிருந்து, காலூன்றி நில் என்றான். இந்த வார்த்தையை அவன் என்னிடம் சொல்லுகையில் நடுக்கத்துடன் எழுந்து நின்றேன். அப்பொழுது அவன் என்னைப் பார்த்து: தானியேலே, பயப்படாதே; நீ அறிவை அடையவும், உன்னைத் தேவனுக்குமுன் தாழ்மைப்படுத்துகிறதற்கும் உன் மனதைச் செலுத்திய முதல் நாள் துவக்கி



உன் வார்த்தைகள் கேட்கப்பட்டன. உன் வார்த்தைகளின் பொருட்டு நான் வந்தேன். பெர்சியா இராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் எனக்கு எதிர்த்து நின்றான்; ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாவேல் எனக்கு உதவியாக வந்தான்.'' இச்சம்பவத்தை நாம் கூர்ந்து கவனிக்கையில், ''பெர்சியாவின் அதிபதியே, கீழே இறங்கி வா'' என்று தானியேல் கட்டளை கொடுத்ததாக வாசிக்கவில்லை. அவரோ, *''ஆண்டவரே,* கேளும்; *ஆண்டவரே,* மன்னியும்; *ஆண்டவரே,* கவனியும்'' என்று தேவனையே நோக்கிப் பேசிக்கொண்டிருந்தார். ''உமது நகருக்கும் உமது மக்களுக்கும் உமது பெயர் சூட்டப்பட்டிருக்கிறதே'' என்றுதான் மன்றாடிக்கொண்டிருந்தார் (தானி 9:19). தேவனையே நோக்கிப் பேசிக்கொண்டு, ஜெபித்துக்கொண்டு, தனது பாவத்தையும் அறிக்கையிட்டுக்கொண்டேயிருந்தார் (வச 20,21).

பேரரசுகளும் தத்துவங்களும் வரும், போகும். நமது கவனமோ ஜெபத்தைக் கேட்கும் தேவன்மீதே பதிக்கப்பட்டிருக்கவேண்டும். பெர்சியா அதிபதியை அடுத்து கிரேக்க அதிபதி வருவான் (தானி 10:20). பெர்சியா தத்துவத்தைவிடக் கிரேக்கத் தத்துவம் இன்னும் மோசம்! ஆனால் எதுவுமே ''சத்திய எழுத்துக்குமுன்'' நிற்க முடியாது (வச 21). எபேசியர் 6இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஆறு போராயுதங்களில் ''அதிகாரங்களுக்கும் துரைத்தனங்களுக்கும்'' எதிராகத் *தாக்கும்* ஒரே ஆயுதம் ''தேவனுடைய வசனமாகிய ஆவியின் பட்டயமே'' (எபே 6:12,17). இதன் பொருள் என்னவெனில், நாம் ஜெபித்துக்கொண்டேயிருக்கவேண்டும், சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டேயிருக்கவேண்டும். ஆன்மீகப் படைக்கலன்களை வரிசைப்படுத்திய பின்னர் பரிசுத்தவான்களின் இடையறா ''ஜெபத்தைப்'' பவுல் வலியுறுத்துகிறார். அப்படியானால்தான் அவர் தைரியமாய்ப் ''பேச'' முடியும் என்கிறார் (வச 19,20). இயேசுவின் எழுபது சீடர் புறப்பட்டுச் சென்று திருவசனத்தைப் பிரசங்கித்தார்கள், அவ்வளவுதான். சாத்தான் விழுந்தான் (லூக் 10:9,17,18). நாமோ செய்யவேண்டியதைச் செய்யாமல் செய்யத் தகாததையே செய்துகொண்டிருக்கிறோம்!

பிசாசு புகுந்து விளையாடாத நகர் உலகில் ஒன்றுமில்லை. ஏதேன் தோட்டத்திலேயே சாத்தான் தீவிரமாயிருந்தானே! ஒரு நகருக்கோ நாட்டுக்கோ நலம் கொண்டுவருவது ''பலவானைக் கீழே இறக்கு வதால்'' அல்ல; திருச்சபை மனந்திரும்பவேண்டும், ஜெபிக்கவேண் டும், அது ஒன்றே வழி. தேவன் வகுத்த வழிமுறை இதோ: 2 நாளா 7:14, ''என் பெயர் சூட்டப்பட்ட என் மக்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் நாட்டுக்கு நலம் அருளுவேன்.'' எல்லாக் கேடுபாடுகளிலிருந்தும் இந்தியா விடுபட்டு நலம் பெறவேண்டுமானால், இந்தியத் திருச்சபை மனந்திரும்பி யாகவேண்டும். இதற்குக் குறுக்குவழி கிடையாது. உலகிற்கு வெளிச்சமாயிருக்கும்படி அழைக்கப்பட்டுள்ள திருச்சபை போதுமான அளவு பிரகாசமாயிருக்கவேண்டும். உலகிற்கு உப்பாயிருக்கும்படி அழைக்கப்பட்டுள்ள திருச்சபை போதுமான அளவு உவர்ப்புள்ளதா யிருக்கவேண்டும் (மத் 5:13,14).

சிமிர்னா திருச்சபைக்குக் கிறிஸ்து அனுப்பிய செய்தி யாது? ''பிசா சானவன் உங்களில் சிலரைப் பத்து நாள் காவலில் போடுவான்'' (வெளி 2:10). ''அவனைக் கீழே இறக்குங்கள்'' என்றா இயேசு சொன் னார்? இல்லை, மாறாக, ''சாகும்வரை உண்மையாயிரு'' என்றார். சிமிர்னாவிலுள்ள தமது மக்களைச் சிறைக்குச் செல்லாது காப்பது இயேசுவுக்குக் கூடாத காரியமல்ல. அவர்கள் சிறைவாசம் வழியாய்ச் சென்று தங்கள் விசுவாசத்தை நிரூபிக்க இடமளித்தார். தேவனது வழிகள் விளங்கிக்கொள்ள முடியாதவை. தமது மக்களின் விசு வாசத்தை எப்படி வலுப்படுத்தவேண்டுமென்று அவர் அறிவார். கோதுமையைப் போல சீமோன் பேதுருவைச் சாத்தான் புடைப்பதை அவர் தடுக்கமாட்டார். ஆனால் அவரது விசுவாசம் ஒழிந்துபோகாத படி அவருக்காய் ஜெபித்துவிடுவார் (லூக் 22:31,32).

சில கிறிஸ்தவர்கள் ஏசாயா 43:6ஐச் சுட்டிக்காட்டி தனது மக்களை விட்டுவிடும்படி விக்கிரகாராதனை நகர்களுக்கு நாம் கட்டளை கொடுக்கவேண்டுமென்று சொல்லுவர். இந்த வசனம் சொல்லுவ



தென்ன? ''நான் வடக்கை நோக்கி, 'கொடு,' என்றும், தெற்கை நோக்கி, 'வைத்திராதே,' என்றும் சொல்லுவேன்.'' இவ்வசனத்தில் ஆன்மீகப் போராட்டம் குறித்து எதுவும் சொல்லப்படவில்லை. உல கின் நான்கு முனைகளிலிருந்தும் இஸ்ரவேலரை அவர்களது சொந்த நாட்டிற்கு ஆண்டவர் கொண்டுவந்து சேர்க்கப்போவதையே இது குறிப்பிடுகிறது (வச 1-6). நொறுங்கிய மனதுடனும் விறுவிறுப்பு டனும் நற்செய்திப்பணியில் ஈடுபடுவதிலிருந்து நம்மைத் திசை திருப்பவே சாத்தான் எத்தனிக்கிறான். எழுப்புதல் வீரர் ஈவான் ராபர்ட்ஸ் (1878- 1951) அவர்களின் ஜெபமே எல்லாத் தலைமுறைகளுக்கும் பொருத்தமானது: ''ஆண்டவரே, சபையை வளைத்துச் சமுதாயத்தை வளமாக்கும்!'' (Lord, bend the Church and bless the world!) நமது சக்தி யையெல்லாம் உறிஞ்சிவிடும் செயல்பாடுகளுக்குள் நம்மை இழுக் கவே பிசாசு முயலுகிறான். கவனம்!

தனது எதிரிகளுக்கு எதிராய்ப் போர் புரிய நெகேமியா புறப்பட்டுச் செல்லவில்லை. தனது பிரச்னைகளை ஆண்டவருக்குத் தெரிவித் துக்கொண்டே, கட்டிட வேலையைத் தொடர்ந்தார். எதிரிகள் அவ ரைத் திசைதிருப்ப முடியவில்லை (நெகே 4:6-9,20,21). ''எங்கள் தேவன் எங்களுக்காய் யுத்தம் பண்ணுவார்'' என்று சொல்லிக் கொண்டு வேலையைத் தொடர்ந்தார்.

எல்லாமே உடனுக்குடன் நடந்துவிடவேண்டுமென்ற ஆத்திர மனப்பான்மையினாலேயே திருவசனத்திற்குப் புறம்பான செயல் களுக்குள் சறுக்கி விழுந்துவிடுகிறோம். நமது மிஷனரிப் பணிகளில் திருச்சபை வளர்ச்சியை மனதிற்கொண்டு கூட்டங்கூட்டமாக மக்கள் விசுவாசத்திற்குள் வருவதை எதிர்பார்ப்பது நன்று. ஆனால் பைபி ளில் கொடுக்கப்பட்டுள்ள நற்செய்திப்பணி முறைகள் என்றுமே பழைமையாய்ப் போவதில்லை என்பதை நினைவிற்கொள்ளவேண் டும். பவுல் விதைத்துக்கொண்டேயிருக்கவேண்டும். அதனைத் தொடர்ந்து அப்பொல்லோ தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்க வேண்டும். விளையச் செய்பவர் தேவனே. செயற்கை முறைகளைக் கையாண்டால் இஸ்மவேல்களைத்தான் பிறப்பிப்போம். தேவனது செயல்முறைகள் எப்பொழுதுமே எளிமையானவை; அவை விளை

விப்பதோ நித்திய கனிகள். நோவா நீதியைப் பிரசங்கித்தார்; எட்டு பேர்தான் இரட்சிக்கப்பட்டனர். அது தோல்வியா? ஜலப்பிரளயத் திற்கு முன்னிருந்த இராட்சதர்களைக் கீழே இறக்கும் முயற்சியில் நோவா இறங்கவில்லையே! விசாலமான பாதை குறித்தும் நெருக்க மான வாசல் குறித்தும் ஆண்டவர் சொல்லியவைகளை மறக்காதிருப் போம் (மத் 7:13,14). இது எல்லாக் காலத்திற்கும் பொருந்தும்.

சீடர்கள் பயமுறுத்தப்பட்டு, இயேசுவின் பெயரால் எதையும் பிரசங்கிக்கக்கூடாதென்று எச்சரிக்கப்பட்டபோது, அவர்கள் உடனே எந்த ஆவிக்கும் எதிராய் எழும்பவில்லை. அவர்கள் தங்கள் சத்தத் தைத் தேவனுக்கு நேராய் உயர்த்தினர் (அப் 4:24-31). விண்ணை யும் மண்ணையும் படைத்தவரிடமே நேரே சென்றுவிட்டனர். அதிகாரிகளின் மனப்பான்மை அவர்களுக்கு ஆச்சரியமாயில்லை. ''தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்படியேயும், அவரது முன்னறிவின்படியேயுமே'' அக்கிரமக்காரரது கரங்களில் இயேசு ஒப்புக்கொடுக்கப்பட்டார் (2:23). பிரியமானவர்களே, சுவிசேஷத் திற்கு வரும் எந்த எதிர்ப்பும் நம்மை ஆச்சரியப்படுத்தக்கூடாது. எதிர்ப்பு இல்லையென்றால்தான் ஆச்சரியப்படவேண்டும்! இவ்வுலக மன்னர்கள் இறைமக்களுக்கு எதிராகத் திட்டமிடட்டும்; தேவன் ''வானிலிருந்து'' அவர்களைப் பார்த்து நகைப்பார் (சங் 2:2-4). அவர்களது சதித்திட்டங்கள் யாவும் முடிவில் தேவனது திட்டங் களையே நிறைவேற்றிவிடும்.

முதல் வரிசை மிஷனரிகள் சுவிசேஷத்தைச் சுமந்துகொண்டு புறப்பட்டபோது அவர்களுக்கு ரோமச் சாலைகளும் கிரேக்க பைபி ளும் சாதகமாய் அமைந்தன என்பது உங்களுக்குத் தெரியுமா? இஸ்ரவேலரது தேவாலயத்தைப் பாபிலோனியர் தகர்த்துவிட்டதால் ''நகர்தோறும்'' ஜெபாலயங்கள் எழும்பிவிட்டனவே (அப் 15:21). இதுதான் உண்மையான ஆன்மீகப் போர்! இது தேவனால் என்ன செய்ய முடியும் என்பதில் பதிந்திருக்கும் விசுவாசம். அவர் அதிகாரி களையும் பிசாசுகளையும் முறியடிப்பார். யுத்தம் நமதல்ல, கர்த்த ருடையது! யோசேப்பின் சரித்திரம் இதனை அழகாய்ச் சித்தரிக்கிறது.



எத்தனையோ காரியங்கள் அவருக்கு எதிராய் நிகழ்ந்தன. எத்த னையோ நபர்கள் அவருக்கு எதிராய்ச் செயல்பட்டனர். முடிவில் தனது சகோதரரிடம் சொன்னதுதான் கிளைமாக்ஸ்: ''நீங்கள் என்னை விற்றுப்போட்டீர்கள்; ***தேவனோ*** உங்களைக் காப்பாற்றுவதற்காய் என்னை இங்கு அனுப்பிவைத்தார்'' (ஆதி 45:5,8).

இயேசுவானவர் நம்மைப் போராளிகளாக (warriors) அல்ல, பறைசாற்றுகிறவர்களாய் (witnesses) அழைத்திருக்கிறார் (அப் 1:8). ''உலகமெங்கும் புறப்பட்டுப் போய்ச் சாத்தானைக் கீழே இறக்குங் கள்'' என்பதல்ல பேராணை! ''இயேசுவே ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்று எங்கும் சென்று பறைசாற்றவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (மத் 16:16). கற்பாறையான இச்சத்தி யத்தின்மீதுதான் கிறிஸ்து தமது சபையைக் கட்டிக்கொண்டிருக்கிறார். நரகத்தின் சக்திகள் இதனைத் தடுத்து நிறுத்த முடியாது (வச 18). இயேசுவே தேவனுடைய குமாரன் எனும் விசுவாசமே உலகை ஜெயிக்கும் ஜெயம் (1 யோ 5:4,5). இந்த விசுவாசத்தைக் காத்துக் கொண்டு அதனைப் பறைசாற்றுவதுதான் நமது போராட்டம். எனவே தான், ''நல்ல போராட்டத்தைப் போராடினேன்; விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்'' என்று பவுல் வெற்றி முழக்கமிட்டார் (2 தீமோ 4:7).

இச்சத்தியம் நமது தனி வாழ்விலும் அப்பியாசிக்கப்பட வேண்டியது. பவுலின் உடலிலிருந்த முள் ''சாத்தானின் தூதன்தான்'' (2 கொரி 12:7). ''சாத்தானே, உன்னைக் கீழே இறக்குகிறேன்'' என்றாரோ பவுல்? இல்லை, மாறாக, அவர் ''கர்த்தரிடம் வேண்டிக் கொண்டார்'' (வச 8). முடிவாக ஒரு சிந்தனை: தமக்குச் சேவை செய்யத் தேவனுக்குப் பிசாசு தேவை! அவனால் அவருக்கு ஒரு பயனுமில்லையேல், என்றைக்கோ அவனை வறுத்தெடுத்திருப்பார்!

(Pastor Bill Randles அவர்களது
*"Making War in the Heavenlies"* என்ற புத்தகம்
இவ்வத்தியாயத்தை எழுதப் பயன்பட்டது.)

# 40

# பிசாசைக் கட்டுதல்

## Binding Satan

பிசாசை நாம் இன்று கட்டவும் முடியாது; அவனைக் கட்ட முயல்வதும் திருமறையின் உபதேசத்திற்கு எதிரானது. ஆனால் விடுதலை ஊழியங்கள் பல இம்முயற்சியில் ஈடுபடுகின்றன. பிசாசையும் அசுத்த ஆவிகளையும் நாம் கட்டிப்போட்டுவிட்டால், அதற்குப் பிறகு ஆன்மீகப் போராட்டத்திற்கு இடமெங்கே? மல்யுத்தம் அல்லது குத்துச்சண்டையின்போது எதிரியைக் கட்டிப்போடலாமோ?

கிறிஸ்துவின் பூவுலகப் பணியின்போது பிசாசுகளின் மீதான தேவ வல்லமை மிகவும் வெளிப்படையாய்ச் செயல்பட்டது. ''பிசாசின் செயல்களை அழிப்பதற்காகவே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்'' (1 யோ 3:8). பிசாசை இயேசு அதட்டினார், துரத்தினார், ஆனால் ஒருபோதும் கட்டவில்லை. அவரைச் சாத்தான் பாலை நிலத்தில் சோதித்தபோது, அவனை ''அப்பாலே போ, சாத்தானே!'' அல்லது ''எனக்குப் பின்னாலே போ, சாத்தானே!'' என்றுதான் சொன்னார் (மத் 4:10; லூக் 4:8). சோதனையை முடித்தபின் சாத்தான் ''அவரை விட்டு விலகிப் போனான்'' என்றிருக்கிறது (லூக் 4:13). அதாவது, அவன் விடுதலையோடு நடமாட முடிந்தது என்று பொருள். இயேசுவைச் சோதிக்க இன்னொரு சமயத்திற்குக் காத்திருந்தான். திருச்சபையின் ஊழியத் துவக்கக் காலங்களிலும் அசுத்த ஆவிகள்மீது தேவ வல்லமை அபாரமாய் வெளிப்பட்டது (அப் 8:7; 19:12). ஆனாலும் அப்போஸ்தலரோ சீடரோ ஒரு முறை கூடப் பிசாசைக் கட்ட முயலவில்லை. ஏனென்றால் அவர்களது ஆண்டவர் பிசாசுகளைத் ''துரத்துங்கள்'' என்று மட்டும்தான் கட்டளையிட்டிருந்தார் (மத் 10:8; மாற் 16:17).

பிசாசை நாம் என்னவெல்லாம் செய்யலாம் என்பதற்காகத் திருமறை தரும் அறிவுரைகள் குழப்பமற்றவை. நாம் பிசாசுக்கு *இடம் கொடுக்கக்கூடாது* என்று போதிக்கப்பட்டிருக்கிறோம் (எபே 4:27). கோபம், தீய சொற்கள், கசப்பு, புறங்கூறுதல், மன்னியாமை, இன்னும் இது போன்ற பாவங்கள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துவதோடு நமது வாழ்க்கையைப் பாழாக்கப் பிசாசுக்கு இடமும் கொடுக்கின்றன (வச 25-32). அடுத்து, பிசாசுக்கு *எதிர்த்து நிற்கும்படி* அழைக்கப்பட்டிருக்கிறோம் (எபே 6:11). தேவனது அனைத்துப் போராயுதங்களையும் எடுத்துக்கொள்வதற்கான நோக்கம் இதுவே. பிசாசுக்கு எதித்து நிற்கும்படி யாக்கோபு அப்போஸ்தலனும் அறிவுறுத்தியுள்ளார். அப்பொழுது அவன் நம்மை விட்டு ஓடிப்போவான் என்றும் அவர் தமது நிருபத்தில் எழுதியுள்ளார் (யாக் 4:7). நீங்கள் அவனைக் கட்டிவிட்டால் அவனால் ஓட முடியாதே; நீங்கள்தான் அவனை வெளியே தூக்கிக்கொண்டு போகவேண்டும்! பிசாசுக்கு எதிராக *விழித்திருக்கவேண்டும்* என்பது அப்போஸ்தலன் பேதுருவின் உபதேசம் (1 பேது 5:8). அவன் சிங்கம்போல் இரைதேடி எங்கும் சுற்றித் திரிகிறான். அவனது நடமாட்டத்தைத் தடுக்க முடியாது; நாம்தான் விழிப்பாயிருக்க வேண்டும். இவ்வித வேத வரம்புகளை மீறுவது துணிகரம்; அது நம்மைத் தேவையற்ற பிரச்னைகளில் மாட்டிவிடும். பிசாசை எத்தனையோ முறை கட்டிவிட்ட பிரசங்கிமார் உண்டு. பின்னர் அவனை அவிழ்த்துவிட்டது யார்? எப்பொழுதும் போல் விடுதலையாய் அலைகிறானே! முடிச்சு இறுக்கமாயில்லையோ? நமக்குக் கொஞ்சம் பொது அறிவு வேண்டும்!

பேதுருவிடம் இயேசு சொன்னது: ''நான் பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்களை உன்னிடம் தருகிறேன். நீ மண்ணுலகில் கட்டுவது எதுவோ அது விண்ணுலகிலும் கட்டப்பட்டிருக்கும்; நீ மண்ணுலகில் கட்டவிழ்ப்பது எதுவோ அது விண்ணுலகிலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்'' (மத் 16:19). இவ்வாக்கு பிசாசைக் கட்டுவதைக் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. கட்டப்படவும் கட்டவிழ்க்கப்படவும் பிசாசு பரலோகில் இருக்கிறானோ? இறைமக்களுக்கு மண்ணுலகில் இருக்கும் விண்ணக அதிகாரத்தைப்பற்றியே இவ்வசனம் பேசுகிறது. திருச்சபையின் ஒழுங்குக்கடுத்த காரியங்களில் எவரையும் குற்றவாளியா நிரபராதியா எனத் தீர்மானிக்கும் அதிகாரமும் இங்கு வெளிப்படையாய்த் தெரிகிறது (18:17,18). சபைத் தலைமை எடுக்கும் முடிவைப் பரலோகம் அங்கீகரிக்குமாம். ''கட்டுதல், கட்டவிழ்த்தல்''

ஆகிய பதங்கள் அக்காலத்தில் யூதரது நீதிமன்றங்களில் பயன் படுத்தப்பட்டு வந்தவை. திருச்சபை தீர்மானிப்பதைப் பரலோகம் அங்கீகரிக்கும். மட்டுமல்ல, பேதுருவுக்குக் கொடுக்கப்பட்டது ''சங் கிலி'' அல்ல, ''சாவிகள்!'' அவை பரலோகத்தின் திறவுகோல்கள். பெந்தெகொஸ்தேயன்று யூதருக்கு விண்ணரசைத் திறந்துவிட்டது பேதுருவன்றோ? (அப் 2). சமாரிய விசுவாசிகள்மீது பரிசுத்த ஆவி யானவர் வந்திறங்க ஜெபித்தது பேதுருவன்றோ? (அப் 8). கொர் நேலியு குடும்பத்தில் தொடங்கிப் புறவினத்தாருக்கு விண்ணரசைத் திறந்துவிட்டதும் பேதுருவன்றோ? (அப் 10). பரலோக இராஜ் யத்தைப் பூட்டிப்போட்டிருந்த வேதபாரகர் மற்றும் பரிசேயருக்கு எதிரானது இது. அவர்களும் நுழைய மாட்டார்கள்; மக்களையும் நுழைய விடமாட்டார்கள் (மத் 23:13).

''பலவானைக் கட்டுதல்'' என்று மத்தேயு 12:28-30இல் வாசிக்கிறோமே, அது எதைக் குறிப்பிடுகிறது? தேவனுடைய ஆவி யினாலே மக்களை நாம் ''இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத் தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும்'' திருப்பும் செயலே இங்குச் சித்தரிக்கப்பட்டுள்ளது (அப் 26:16-18). தமது நாட்களில் திருடர்கள் எப்படித் திருடுவார்கள் என்ற வழக்கத்தையே இயேசு இங்குச் சுட்டிக்காட்டினார். இன்றும் பல இடங்களில் வீட் டாரைக் கட்டிப்போட்டுவிட்டுத்தானே கொள்ளையடிக்கிறார்கள்? இப்பொருள் குறித்த தெளிவான போதனை திருமறையில் பல இடங்களில் காணப்படும்போது, ஏதோவொரு வசனத்தில் ஓர் எடுத்துக்காட்டாக மட்டும் குறிப்பிடப்பட்டதை வைத்து உபதே சத்தை நிறுவக்கூடாது. சுவிசேஷமே ''தேவ வல்லமை!'' அதைப் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையுடன் பிரசங்கிக்கும்போது அது மக்களைப் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கிறது (ரோ 1:16; அப் 1:8). சாத்தானுடைய வல்லமைக்கும் மிஞ்சிய தேவ வல்லமையால் ஆத்துமாக்கள் விடுவிக்கப்படும்போது சாத்தான் கட்டுண்டவன் போல்தான் நிற்கிறான் (1 யோ 4:4; அப் 13:6-12). இங்குங்கூட நாம் சாத்தானைக் கட்டலாம் என்ற நேரடிப் போதனை இல்லை.

ஆயிரமாண்டு அரசாட்சியின்போதுதான் சாத்தான் கட்டப்படு வான். யோவானுக்கு வந்த தரிசன வெளிப்பாடு இதோ: வெளி



20:1,2,''ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய ***சங்கி லியையும்*** தன் கையில் பிடித்துக்கொண்டு வானத்திலிருந்து இறங்கி வரக் கண்டேன். பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து, அதை ஆயிரம் ஆண்டுகள் கட்டிவைத்தான்.'' கிறிஸ்துவின் சபையாக நமக்கு இருப் பது ''பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள்'' (மத் 16:19). இவை மக்கள் நுழைவதற்காய் விண்ணரசைத் திறந்துவிடுவதற்காகவே. ''பாதாளம் மற்றும் மரணத்திற்குரிய திறவுகோல்கள்'' இயேசுவிடம் மட்டுமே உண்டு (வெளி 1:18). ''பாதாளக்குழியின் திறவுகோல்'' ஒரு தூதனிடம் கொடுக்கப்படும் (வெளி 9:1; 20:1). அவனிடம்தான் சாத்தானைக் கட்டுவதற்கான ''பெரிய சங்கிலி'' இருக்கும். தேவனது தீர்க்கதரிசன நாட்காட்டியின் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டு நடப்போம். திருச்சபையின் பக்திவிருத்திக்காகவும் உலகில் நற்செய்தி பரவுதலுக் காகவும் அயராது உழைப்போம். இதுவே நமது இரட்டைப் பொறுப்பு. நாம் செய்யவேண்டுமென்று தெளிவாய்க் கட்டளையிடப்பட்ட வற்றை மட்டும் செய்வதில் கவனமாயிருப்போம்.



சாத்தானைக் கட்ட நாம் முயலக்கூடாது என்பது மட்டுமல்ல, அவனைப் ***பாதாளத்திற்கு*** அனுப்பிவிடவேண்டுமென்றும் எத்தனிக்கக்கூடாது. ''நீ பாதாளத்திற்குப் போகிறாயா?'' என்று எந்த அசுத்த ஆவியிடமும் கேட்கக்கூடாது. சாத்தான் ஒரு பொய்யன்; ஆயிரம் பொய் சொல்லவும் தயங்கமாட்டான். அசுத்த ஆவிகளை இயேசு ஒருபோதும் பாதாளக்குழிக்குள் அனுப்பவில்லை. ஒரே ஒரு முறைதான் எங்கே போகவேண்டும் என்று குறிப்பிட்டார்; அதுவும்

பன்றிகளுக்குள் (மாற் 5:10-13). அசுத்த ஆவிகளைத் துரத்துவது தான் நமது வேலை; அவை எங்கே போகவேண்டுமென்று நாம் சொல்லக்கூடாது. ஆயிரமாண்டு ஆட்சிக்குப் பின்னர்தான் சாத்தான் என்றென்றுமாய்ப் பாதாளக்குழிக்குள் தள்ளப்படுவான் (வெளி 20:7,10). சாத்தானை ***எரித்துவிடவும்*** முயலக்கூடாது. கிறிஸ்து தமது இரண்டாம் வருகையின்போது இதனைச் செய்வார். இதோ அதற்கான தீர்க்கதரிசனம்: 2 தெச 2:8, ''பின்னர் அந்த அக்கிரமக்காரன் வெளிப் படுவான்; அவனைக் கர்த்தர் தமது வாயின் சுவாசத்தினால் அழித்து, தமது வருகையின் பிரசன்னத்தினால் நாசமாக்குவார்.'' அப்படியே, சாத்தானைச் ***சபிக்கவோ தூஷிக்கவோ*** கூடாது. ஆண்டவருக்கு முன்பாகத் தூதர்கள்கூடச் சாத்தானைத் தூஷணமாய்க் குற்றப் படுத்தத் துணியமாட்டார்கள் (2 பேது 2:10ஆ,11). பிரதான தூத னாகிய மிகாவேல்கூட சாத்தானைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணிவதில்லை (யூதா 9). ஆம், பிசாசைக் கட்டவோ (bind), பாதா ளத்திற்கு அனுப்பவோ (banish), எரிக்கவோ (burn), சபிக்கவோ (blaspheme)) முயலக்கூடாது! பைபிள் வரம்புகளை மீறாதீர்கள் என்று மறுபடியும் உங்களுக்குச் சொல்லுகிறேன்!

சாத்தானை நமது வாழ்விலும் பணியிலும் நாம் முறியடிக்கலாம்; ஆனால் அவன் இருக்கும் நிலையிலிருந்து அவனைக் கீழே இறக்க முடியாது. அதைத் தேவனே செய்வார். சங்கீதம் 110:1இன்படி நாம் அல்ல, ***கர்த்தரே*** சத்துருக்களைத் தமக்குப் பாதபடியாக்குவார். சங்கீதம் 108:13, ''தேவனாலே பராக்கிரமம் செய்வோம்; ***அவரே*** எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார்.'' ரோமர் 16:20, ***''தேவன்*** சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழ் நசுக்கிப்போடுவார்.'' ''சீக்கிரம்'' என்பது இறுதிக்காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது. எடுத் துக்காட்டாக, வெளி 1:1ஐப் பாருங்கள். அப்படியே, ''அவர்'' சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் ஒரு முடிவுக்குக் கொண்டுவருவார் என்று 1 கொரி 15:24-28இல் வாசிக் கிறோம். இதுவே ***''அவர்*** உன் தலையை நசுக்குவார்'' என்ற மேசியா வைக் குறித்த முதலாம் வாக்கின் நிறைவேறுதலாகும் (ஆதி 3:15). சாத்தானுக்கு பைபிள் நன்றாகவே தெரியும். நாம் செய்யக் கூடாததை நாம் செய்ய முயலும்போது அவனுக்குச் சிரிப்புதான் வரும்!



# 41

# பரம்பரை ஆவிகள்

## Generational spirits

திருமறையின் தெளிவான போதனை ஆமோதிக்காத பல நூதன உபதேசங்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றத்தான் செய் கின்றன. பொய்யனும் பொய்யப்பனுமான பிசாசின் வாயிலிருந்து மடை திறந்தாற்போல் இவ்வுபதேசங்கள் வந்து நம்மை மோதும். இவ்வித உபதேசங்களில் ஒன்று: ''தலைமுறை தலைமுறையாகக் குடும்பங்களில் சில பாவங்களும் சாபங்களும் ஓடிக்கொண்டே யிருக்கும்; அந்தச் சங்கிலியை நாம் முறிக்கவேண்டும்.''

''பரம்பரை ஆவி'' என்று எதுவும் இருப்பதாகத் திருமறையில் எங்கும் சான்று இல்லை. இது ஒரு கற்பனை. தம்மைப் ''பகைக்கிற வர்களிடம்தான்'' பிதாக்களின் அக்கிரமங்களை மூன்றாம் நான்காம் தலைமுறை வரை விசாரிப்பதாகப் பழைய ஏற்பாட்டிலேயே தேவன் கூறியுள்ளார் (யாத் 20:5). பெற்றோர் விக்கிரகாராதனைக்காரரா யிருந்தால், அவர்களது பிள்ளைகள் ஜீவனுள்ள தேவனைப் பகைத் தாலன்றி தேவன் அவர்கள்மீது சினமடையார். எசேக்கியேல் 18:1-4 இல் இது எவ்வளவு அழகாய்ச் சித்தரிக்கப்பட்டுள்ளது பாருங்கள் —

''கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: பிதாக்கள் திராட்சைக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப் போயின எனும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் நாட்டைக் குறித்துச் சொல்லுகிறது என்ன? ***இனி*** இஸ்ரவேலில் இந்தப் பழ மொழியைச் சொல்வது இல்லை என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார். இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவை; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது. பாவம்

செய்கிற ஆத்துமாவே சாகும்.'' வார்த்தைகள் இதிலும் தெளிவாயிருக்க முடியுமோ? இச்சத்தியத்தின் நிச்சயத்தை வலியுறுத்த ''என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன்'' என்கிறார் ஆண்டவர்! (வச 3). ஒவ்வொரு நபரும் அவனது செயல்களுக்கே பொறுப்பு; அவனது பெற்றோரின் செயல்களுக்கு அல்ல. ஒவ்வொரு ஆத்துமாவும் தேவனுக்கு அருமையான சொத்து. பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். ஆனால் ஒருவன் நீதியாய் நடந்து, விக்கிரகாராதனையை வெறுத்து, விபசாரத்திற்கு விலகியோடி, அநியாயத்தை அகற்றித் தள்ளி, தேவனுடைய வார்த்தையின்படி நடந்தால், ''அவன் பிழைக்கவே பிழைப்பான்'' என்கிறார் தேவனாகிய கர்த்தர் (வச 5-9). தந்தையானவன் தேவனுடைய வழிகளில் நடந்தும், அவனது மகன் தீய வழியில் சென்றால், அவன் தனது அக்கிரமத்தின் பொருட்டுச் சாவான் (வச 10-13,18).

திராட்சைக்காய்கள் குறித்த இப்பழமொழி தொன்றுதொட்டது என்று எண்ணி, ''இதெப்படி, தகப்பனுடைய அக்கிரமத்தைக் குமாரன் சுமக்கிறதில்லையா?'' என்று கேட்கலாம் (வச 19அ). அதற்குத் தேவனது உடனடிப் பதில்: ''குமாரன் நியாயத்தையும் நீதியையும் செய்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவைகளின்படிச் செய்ததினால் அவன் பிழைக்கவே பிழைப்பான்'' (வச 19ஆ). தொடர்ந்து தேவன் கூறுவது: ''பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். தகப்பனுடைய அக்கிரமத்தைக் குமாரன் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும். துன்மார்க்கனின் துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்'' (வச 20). இந்த வசனப்பகுதியை தேவன் எவ்விதம் நிறைவுசெய்கிறார் பாருங்கள்: ''மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்'' (வச 32). எவ்வளவு இரக்கமும் நீதியுமுள்ள தேவன் என்று பாருங்கள்! ''கிரியைகளினாலேயே நீதி'' என்றிருந்த பழைய உடன்பாட்டுக் காலத்திலேயே பெற்றோர் மற்றும் மூதாதையரின் பாவங்களுக்குப் பிள்ளைகளைத் தேவன் பொறுப்பாக்கமாட்டார் எனில், புதிய உடன்பாட்டின்கீழ் விசுவாசத்தினாலேயே நீதிமான்களாக்கப்பட்டு, கிறிஸ்துவின் நீதியால் தரிப்பிக்கப்படும் நமக்கு இது எவ்வளவு நிச்சயம்! (ரோ 3:21,22).



திராட்சைக்காய்களின் பழமொழியினால் தீர்க்கதரிசி எசேக்கியேல் விளக்கியுள்ள இச்சத்தியம் தீர்க்கன் எரேமியாவாலும் சொல்லப்பட்டது: எரே 31:29,30, ''பிதாக்கள் திராட்சைக்காய்களைத் தின்றார்கள்; பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்று அந்நாட்களில் சொல்லமாட்டார்கள். அவனவன் தன் தன் அக்கிரமத்தின் பொருட்டே சாவான்; எந்த மனிதன் திராட்சைக்காய்களைத் தின்பானோ அவனது பற்களே கூசிப்போகும்!'' ''அந்நாட்கள்'' என்று ''புது உடன்படிக்கையின்'' காலத்தைத் தேவன் சுட்டிக்காட்டுகிறார் (வச 31). பழைய உடன்படிக்கைக்கும் புதிய உடன்படிக்கைக்குமுள்ள வேறுபாடுகள் சரிவரப் புரியப்படாததாலேயே கிறிஸ்தவத்தில் இன்று ஏராளம் குழப்பங்கள் காணப்படுகின்றன.

2 கொரிந்தியர் 5:17இல் அப்போஸ்தலன் பவுல் கூறியது நம்மெல்லாருக்கும் நன்கு தெரியும்: ''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் அவன் புதுப்படைப்பாய் இருக்கிறான். பழையவை ஒழிந்தன, யாவும் புதிதாயின.'' ''புதியன யாவும்'' என்பது இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனோடு ஒப்புரவானதால் கிட்டும் ஆசீர்வாதங்களைக் குறிப்பிடும் (வச 18,19). எல்லாம் ''தேவனால்'' உண்டாயிருக்கிறது — நமது முற்பிதாக்களினால் அல்ல! நாம் ஒரு புது ''சிருஷ்டி'' — பழையதிலிருந்து பரிணமித்து வந்தவர்களல்ல! முழுமையாய் ஒப்புரவாகிவிட்டோம் — இனிக் கடன் ஏதும் கிடையாது! இதுதான் அந்தகாரத்தின் வல்லமையிலிருந்து தேவனது அன்பின் குமாரனின் இராஜ்யத்திற்குள் முழுவதும் மாற்றப்படுதலாம். அவருக்குள் அவரது இரத்தத்தினால் நமக்கு மீட்பும் பாவ மன்னிப்பும் உண்டாயிருக்கின்றன (கொலோ 1:13,14). நமது முன்னோர்களால் பாரம்பரியமாய் அனுசரிக்கப்பட்ட வீணான காரியங்களிலிருந்து கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் நம்மை மீட்டுவிட்டது (1 பேது 1:18, 19). தேவன் நம்மை எகிப்தைவிட்டு ''வெளியே'' கொண்டு வந்துவிட்டார். இனி எகிப்திய மந்திரவாதமும் குறிசொல்லுதலும் நமக்கு விரோதமாய்க் கிடையாது. பிசாசு என்ன செய்கிறான் என்றே சொல்லிக்கொண்டிராமல், ''தேவன்'' என்ன செய்கிறார் என்று அறிக்கையிட்டு அகமகிழுங்கள் (எண் 23:22,23).

நமது பெற்றோரின் பாவங்களுக்கு நாம் பொறுப்பல்ல, அவற்றிற்காய் நாம் தண்டிக்கப்படமாட்டோம் என்றால், ஆசீர்வாதங்களைப் பற்றி என்ன சொல்லுவோம்? எனது தந்தை தேவ பக்தியுள்ளவராயிருந்தால், அந்த ஆசீர்வாதம் எனக்குச் சொந்தமாகுமா? இரட்சிப்பைப் பொருத்தவரை அது கிறிஸ்து இயேசுவின்மீது விசுவாசம் வைக்கும் எந்த நபருக்கும் தேவனருளும் ஈவு. தனிப்பட்ட விசுவாசத்தோடு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் தேவனுடைய ''பிள்ளை'' ஆகும் உரிமை அல்லது அதிகாரம் கொடுக்கப்படுகிறது (யோ 1:12). தேவனுக்குப் பிள்ளைகள்தான் உண்டு, பேரப்பிள்ளைகள் கிடையாது! அவர் தந்தைதான், தாத்தா அல்ல!

அப்படியானால் அப்போஸ்தலர் 16:31இன் பொருளென்ன? ''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.'' ''இரட்சிக்கப்பட நான் என்ன செய்யவேண்டும்?'' என்ற சிறையதிகாரியின் கேள்விக்கு அப்போஸ்தலர் கொடுத்த பதில் இது. பெற்றோர் விசுவாசிகளாகி, தேவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கையில் பெற்றோரின் விசுவாசத்தைப் பின்பற்ற இல்லத்தில் பிள்ளைகளுக்குச் சாதகமான சூழல் உருவாகிறது. சிறையதிகாரிக்கும் அவன் ''வீட்டிலிருந்த யாவருக்கும்'' கர்த்தரது வசனம் போதிக்கப்பட்டது (வச 32). அவன் தனது வீட்டார் ''அனைவரோடும்'' தேவனிடம் விசுவாசமுள்ளவனானான் (வச 34). தனிப்பட்டவரது பொறுப்புக்கு மாற்றோ பினாமியோ கிடையாது. பேழைக்குள் நுழைய நோவாவின் மகன்கள் மறுத்திருப்பார்களெனில் அவர்கள் வெள்ளத்தில் அழிந்திருப்பார்கள். தங்கள் மூதாதையரின் மார்க்கப் பின்னணி குறித்துப் பெருமையடித்துக்கொண்டிருந்த யூதரிடம் திருமுழுக்கினன் யோவான் சொன்னதில் நேரடிச் செய்தியுண்டு: மத் 3:9, ''ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள் சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள். தேவன் இந்தக் கற்களினால் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார்!'' இதை அப்போஸ்தலன் பவுல் இன்னும் தெளிவாக்கியிருக்கிறார்: ''இஸ்ரவேலர் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலர் அல்லவே. அவர்கள் ஆபிரகாமின் சந்ததியாரானாலும் எல்லாரும்



பிள்ளைகள் அல்லவே ... புறம்பாக யூதனானவன் யூதன் அல்ல ... உள்ளத்தில் யூதனானவனே யூதன்'' (ரோ 9:6,7; 2:28,29).

சாபமோ, ஆசீர்வாதமோ, அது மூதாதையரால் அல்ல, இறையழைப்பிற்கு அவனவன் இணங்குவதையே பொருத்தது என்ற சத்தியம் இவ்விதம் நிலைநாட்டப்படுகிறது. எனவே பிரியமானவர்களே, முன்னோரது பாவச் சங்கிலியை உடைத்தெறிதல் எனும் உபதேசமும் செயல்பாடுகளும் கொண்ட எந்த ஊழியனையும் விட்டு ஜீவன் தப்ப ஓடுங்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவோடு தேவனுக்குள் மறைந்திருக்கிறது; நீங்கள் பத்திரமாயிருக்கிறீர்கள் (கொலோ 3:3). பழைய பிரமாணத்தின் சாபத்திலிருந்து நீங்கள் நீங்கலாக்கி மீட்கப்பட்டுவிட்டீர்கள் (கலா 3:13).



# 42

# ஆட்டங்காணும் அடித்தளங்கள்

## Shaken Foundations

**முகவுரை**

மேற்கட்டிடத்தைத்தான் மக்கள் பார்க்கவும் பயன்படுத்தவும் முடியும்; ஆனால் அடித்தளம்தான் கட்டிடத்தின் பலத்தை நிர்ணயிக்கும். அடித்தளத்தில் கோளாறு இருந்தால் அது மேற்கட்டிடத்தில் காட்டிவிடும். மேற்கட்டிடத்தின் கீறல் களைப் பூசினாலும் அது தற்காலிகம்தான்; வேறிடங்களில் கீறல்கள் ஏற்படும்.

- இருவகை அடித்தளங்கள்:

அ) தேவனது அஸ்திபாரம் — இது அசையாதது.
2 தீமோ 2:19 ... *தேவனது உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது.*

ஆ) பூமியின் அஸ்திபாரம் — இது அசையக்கூடியது.
சங் 82:5 ... *தேசத்தின் அஸ்திபாரங்கள் அசைகின்றன.*

- அடித்தளங்கள் குறித்துத் தாவீதின் சவால் —

சங் 11:3 ... *அஸ்திபாரங்களும் நிர்மூலமாகின்றனவே, நீதிமான் என்ன செய்வான்?*

இச்சவாலை *''நீதியைக்''* கொண்டே சந்திக்க முடியும் —

வச 5 ... *கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார்.*
வச 7 ... *கர்த்தர் நீதியுள்ளவர் ... நீதியில் பிரியப்படுவார்*

இன்று கிறிஸ்தவ வாழ்விலும் ஊழியங்களிலும் ஆடிப்போய், அரிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சில அடித்தளங்கள் இதோ —



இந்த அடித்தளங்கள் ஒவ்வொன்றும் பைபிளில் ஒரு **கேள்வியின்** அடிப்படையில் தரப்பட்டுள்ளது —

**1. பாலியல் வாழ்வில் பரிசுத்தம்** (Sexual Purity)

1 கொரி 6:15-20
*''அறியீர்களா? ... அறியீர்களா? ... அறியீர்களா?''*

இப்பகுதியில் கவலையீனம் கர்த்தரோடுள்ள உங்கள் உறவையே பாதிக்கும் —

வச 17 ... *கர்த்தரோடிசைந்திருப்பவன் அவருடன் ஒரே ஆவி*
வச 15 ... *உங்கள் உடல்கள் கிறிஸ்துவின் உறுப்புகள்*
வச 19 ... *உங்கள் உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம்*

பாலியல் பாவங்கள் அவற்றைச் செய்பவனுக்கே விரோதமானவை (வச 18); இப்பாவத்தோடு நாம் விளையாடக்கூடாது —
*வேசித்தனத்திற்கு ''விலகி ஓடுங்கள்''* (வச 18)

எவ்வளவு சீக்கிரம் இந்த அடித்தளத்தைப் பலப்படுத்துகிறோமோ, அவ்வளவு நாம் கீறல்களைத் தவிர்க்கலாம்.

**2. பணக்காரியங்களில் உத்தமம்** (Financial Honesty)

லூக் 16:10-12
*''யார் உங்களை நம்பி ஒப்புவிப்பார்? யார் கொடுப்பார்?''*

| | | |
|---|---|---|
| மண்ணுலகச் செல்வம் | vs. | விண்ணுலகச் செல்வம் |
| பிறரது பொருட்கள் | vs. | நமது பொருட்கள் |

பணக்காரியங்களில் உண்மையாயிருப்பவர்களுக்கே தேவன் தமது இரகசியங்கள், சிந்தையை வெளிப்படுத்துகிறார்.

நாளாவட்டத்தில் பிரசங்கிமார் பலரிடம் செய்திகள் இல்லாது போவதற்கு இது ஒரு காரணம்.

செல்வம் இல்லாது செய்தி இருப்பது
செய்தி இல்லாது செல்வம் இருப்பதற்கு மேல்!

அப்போஸ்தலர்கள் பேச எழுந்தபோதும், எழுத உட்கார்ந்தபோதும்,
இறைவார்த்தைகள் தடையின்றி வந்தன;
பண ஆசைக்கு அவர்கள் விலகியிருந்ததே அதின் இரகசியம்.

இந்தப் பாவத்தோடு நாம் விளையாடக்கூடாது —

*''பண ஆசைக்கு விலகி ஓடு''*
(1 தீமோ 6:10,11)

**3. சகவுறவுகளில் சுமூகம்** (Relationship Cordiality)

1 யோ 4:20,21
*''கண்ட சகோதரனிடம் அன்பு செலுத்தாதவன்*
*காணாத தேவனிடம் அன்பு செலுத்துவது எப்படி?''*

- அன்பின் அடித்தளமற்ற குடும்பம் நிலையானது அல்ல.
- அன்பின் அடித்தளமற்ற சபை கவர்ச்சியானது அல்ல.
- அன்பின் அடித்தளமற்ற ஊழியம் கனியுள்ளது அல்ல.
- அன்பின் அடித்தளமற்ற சமூகம் பாதுகாப்பானது அல்ல.

கீழ்க்கண்ட பிரச்னைகளுக்குப் பரிகாரமாக
நவீன விஞ்ஞானம் எதையும் தர முடிவதில்லை —

குடும்பங்களில் பிளவுகள்
சபைகளில் பிரிவினைகள்
ஊழியங்களில் முறிவுகள்
சமுதாயத்தில் சச்சரவுகள்

*தேவ அன்பு* ஒன்றே நிவாரணம் (ரோ 5:5)

இதனைத் தியானியுங்கள்; சகவுறவுகளில் பயிற்சியுங்கள் —
யோ 13:34; 15:12

சரியான சகவுறவுகளின்றி
தேவனோடு தியான வாழ்வு சரியாயிருக்காது.

**4. குடும்பத்தில் ஒற்றுமை** (Family Unity)

1 தீமோ 3:4,5
*''சொந்தக் குடும்பத்தை நடத்தத் தெரியாதவன்*
*தேவனுடைய சபையை எப்படிக் கவனிப்பான்?''*



சபைக்கும் சமுதாயத்திற்கும் அடிப்படையானது குடும்பமே.
வாழ்வின் போர்க்களத்திற்கு ஆயத்தம் குடும்பமெனும்
பயிற்சிக்களத்திலேயே. அதுவே அடித்தளமானது.

திரித்துவ தெய்வத்துவமே ஒரு குடும்பம்தான் —

தந்தையானவர்
குமாரனானவர்
ஆவியானவர்

அவர்களது ஒருமைப்பாடுதான் குடும்ப ஒற்றுமைக்கு மாதிரி —
எபே 5:22-33; 1 கொரி 11:3

**5. திருமறையின் அதிகாரம்** (Biblical Authority)

மத் 21:42 ... *''நீங்கள் வேதத்தில் ஒருபோதும் வாசிக்கவில்லையா?''*
ரோ 4:3; 11:2; கலா 4:30 ... *''வேத வாக்கியம் என்ன சொல்லுகிறது?''*
யாக் 4:5 ... *''வேத வாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதோ?''*

மனிதரது பாரம்பரியங்களும் இவ்வுலகக் கருத்துக்களும்
திருவசனத் தத்துவங்களை ஓரங்கட்டும் கொடிய காலமிது.

ஆதிமுதலே பிசாசின் தந்திரம் இதுதானே? —
*''தேவன் சொன்னதுண்டோ?''* (ஆதி 3:1)

திருவசனமே அசையாத, உறுதியான, அடித்தளம் —

மத் 7: 24-27 ... *கற்பாறைமீது வீடு ... விழவில்லை*
கெட்டியான பாறை vs. கீழிறங்கும் மணல்
மேற்கட்டிடம் ஒன்றுபோல் தெரியும், ஆனால் ...!

பைபிளோடு எதையும் கூட்டாதீர்; (Do not add.)
பைபிளிலிருந்து எதையும் நீக்காதீர்; (Do not avoid.)
பைபிளில் எதையும் மாற்றாதீர்! (Do not alter.)

புதிய கற்பனைகளும் வேண்டாம்!
*''எழுதியிருக்கிறது''* என்ற வரம்பிற்குள்ளேயே
நின்றுவிடப் பழகுங்கள் (1 கொரி 4:6)

ஊழியம் விரிவடையும்போது, திருமறைத் தியானத்திற்கும் வேதப்போதகத்திற்கும் முன்னுரிமை கிடையாது போகலாம்; இது நிகழுமானால் நமது கட்டிடப் பொருட்கள் *''மரம், புல், வைக்கோல்''* தான் (1 கொரி 3:10-15)

**6. ஆவியானவர்மீது சார்பு** (Spirit Dependency)

கலா 3:3
*''ஆவியில் ஆரம்பம்பண்ணின நீங்கள்*
*மாம்சத்தில் முடிக்கப்போகிறீர்களோ?''*

ஆவியானவர்மீது சார்ந்திருக்கும் அளவே தனி நபரது அல்லது ஊழியத்தின் ஆன்மீகத் தரத்தை நிர்ணயிக்கும் (சக 4:6)

சில ஆண்டுகளின் வெற்றிக்கும் சாதனைக்கும் பின்னர்
தொடர்ந்து தேவாவியானவர் மீது சார்ந்திருப்பது சுலபமல்ல;
இதுதான் பெரும் சவால்!

நாளாவட்டத்தில்,

தேவ நடத்துதலைவிட
நமது அறிவில் சார்ந்துவிடுகிறோம்;
தேவ வல்லமையைவிட
நமது திறமைகளில் சார்ந்துவிடுகிறோம்;
தேவனோடுள்ள ஐக்கியத்தைவிட
மக்களது ஆதரவில் சார்ந்துவிடுகிறோம்.

பொன்மொழி:

சுய நிறைவுள்ளவன் ஜெபிக்க விரும்பான்;
சுய திருப்திக்காரன் ஜெபிக்க மாட்டான்;
சுய நீதிக்காரன் ஜெபிக்க முடியாது!
— லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994)

**7. அறிக்கைகளில் உண்மை** (Reporting Accuracy)

2 கொரி 11:23
*''அவர்கள் கிறிஸ்துவின் ஊழியரா? நான் அதிகம்.*
*... அதிகமாய் ... அதிகமாய் ... அநேகந்தரம் ...''*



எண்ணிக்கையில் பவுல் எவ்வளவு துல்லியம், பாருங்கள் —

வச 24 ... *5 தரம் ... ஒன்று குறைய 40 அடிகள்*
வச 25 ... *3 தரம் மிலாறுகளால் அடிபட்டேன்*
... *ஒருதரம் கல்லெறியுண்டேன்*
... *3 தரம் கப்பல் சேதத்தில் இருந்தேன்*

அவரது சாட்சி: ரோ 15:18

*கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவற்றை*
*அல்லாது வேறொன்றையும் சொல்லத் துணியேன்.*

அப்பப்பா, எத்தனை முறை ஊழியக்காரியங்களை மிகைப்படுத்தி விட்டு, எல்லாம் தேவ மகிமைக்கே என்கிறோம்! — வஞ்சகம்!

பொய்சொல்லும்போதும், மிகைப்படுத்தும்போதும்
*''பொய்க்குப் பிதாவானவனுக்கே''* ஓட்டு போடுகிறோம் (யோ 8:44)

**முடிவுரை**

இக்குறிப்புகளை வைத்துக்கொண்டு அடிக்கடி
உங்கள் ஊழியத்தைப் பரிசோதியுங்கள்;
அடித்தளக் கீறல்களை உடனுக்குடன் சரி செய்யுங்கள்;
இல்லையேல் பிந்திப்போகும்.



**43**

# தூண்களில் கீறல்கள்

## Cracked Pillars

**முகவுரை**

- ஊழியங்களின் வீழ்ச்சிக்குப் பொதுவான காரணங்கள் —
  நீதி 9:1 — *ஏழு தூண்களின்* சரிவு

ஏழும் ஒரே நேரத்தில் சரியாதிருக்கலாம்;
ஒன்றன்பின் ஒன்றாகவும் விழலாம் —
துவக்கம் கீறல்களில்தான்!

**1. தரிசனத்தில் தடுமாற்றம்** (Deviation in Vision)

1 கொரி 7:20,24 ... *அழைக்கப்பட்ட அழைப்பில்*
***நிலைத்திருங்கள்.***

2 பேது 1:10 ... ஆதி அழைப்பிற்குத் திரும்பிவர
அர்ப்பணிப்பைப் ***புதுப்பியுங்கள்***

எ.கா.) ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் தரிசனம் என்ன?
''பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதலும்
புதிய ஏற்பாட்டுப்பாணி நற்செய்திப்பணியும்''
அதின் சின்னத்திலேயே (logo) இது சித்தரிக்கப்பட்டுள்ளது.

தரிசன வசனங்கள்: ப.ஏ. — எசேக் 34:26
பு.ஏ. — அப் 1:8

''வாலிபர்'' என்பதே வலியுறுத்தப்படவேண்டும்.

இது இந்தியாவிலுள்ள எத்தனையோ மிஷனரி இயக்கங்கள்,
ஊழிய நிறுவனங்களைவிட வேறுபாடானது.

(அ) விசுவாசிகளின் பக்திவிருத்தி (Edification)
(ஆ) அவிசுவாசிகளுக்கு நற்செய்தியறிவிப்பு (Evangelisation)



இரண்டாவதில் (ஆ) துவங்கி முதலாவதற்கு (அ) செல்வதல்ல;
மாறாக, முதலாவது (அ), அடுத்து (ஆ).
எழுப்புதலின் (அ) விளைவாகவே நற்செய்திப்பணி (ஆ)
(சங் 51:12,13)

**2. உடல் பலத்தில் சார்பு** (Dependence on flesh)

கலா 3:3 ... *ஆவியில் ஆரம்பம், மாம்சத்தில் முடிவு*
ஆதியிலிருந்த அக்கினியும் ஆர்வமும் காக்கப்படவேண்டும்.

ஜெபத்தில் குறைவுபடுவோமானால் நாம் புய பலத்தில்
சார்ந்துவிடத் துவங்கிவிட்டோம் எனப் பொருள்.

ஜெபிக்க ஜெபிக்க ஆண்டவர் மீது அதிகம் சாருவோம்.

நமக்கு முன்னிருக்கும் பணி மலை போன்றது;
நமக்கு வரும் இறைச்செய்தி: சக 4:6,7

கீழ்க்கண்டவற்றில் சார்ந்துவிடாதீர்! எச்சரிக்கை! —

- ஆள் பலம் / புய பலம் (men / muscle)
  அங்கத்தினர்கள், ஆதரவாளர்கள், வாசகர்கள்,
  பங்கேற்போர், செய்தியாளர்கள், முதலியன.
- பண பலம் / பொருள் நிறைவு (money / materials)
  நாம் செய்வதையெல்லாம் ஆண்டவர் அங்கீகரிக்கிறார்
  என்பதற்குப் பொருளாதார ஆசி நிரூபணம் அல்ல.
  (அப்போஸ்தலர் எவ்வளவு குறைவிலிருந்தனர் !!!)
- செயல்முறைகள் / அறிவுத்திறன் (methods / mind)
  அறிவு சார்ந்த ஆலோசனைகள்,
  கவர்ச்சிகரக் கோஷங்கள்,
  கவர்ந்திழுக்கும் திட்டங்கள்,
  வசப்படுத்தும் அறிக்கைகள், முதலியன.

**3. பரிசுத்தத்தில் இறக்கம்** (Descent in Holiness)

லூக் 1:71 ... *வாழ்நாள் முழுவதும் பரிசுத்தத்தோடு ஊழியம்*

தேவனால் பயன்படுத்தப்பட இது இன்றியமையாதது —
2 தீமோ 2:19-22 ... *அடித்தளம் ... சுத்திகரிப்பு ... பயன்பாடு*

மதிப்பான பாத்திரங்களல்ல; சுத்தமான பாத்திரங்கள்

*''கர்த்தருக்குப் பரிசுத்தம்''* —
இதுவே நமது மேற்கோள் வாசகமாயிருக்கவேண்டும்.

கவலையீனமாயிருந்தால் களைகள் முளைத்துவிடும்.
அவ்வப்போது சரிபார்த்துக்கொள்ளவேண்டும்.

*தேவ பக்தியோடு வாழ ''முயற்சிபண்ணு''* —
1 தீமோ 4:7-9
அடிக்கடி தற்பரிசோதனை அவசியம்.

**4. சகோதரருக்குள் பிரிவினை** (Division among brothers)

மத் 12:25 ... *இராஜ்யம் ... பட்டணம் ... குடும்பம் ...*
அளவு காரியமல்ல.

பெந்தெகொஸ்தேயினர் அல்லாதவரைவிடப் பெந்தெகொஸ்தே
யினர் நடுவிலேயே பிரிவினைகள், பிளவுகள் அதிகம் —
இங்கு எல்லாரும் ''இராஜாக்கள்,'' எல்லாரும் ''ஆசாரியர்கள்!''

கொரிந்து சபையைப் பெந்தெகொஸ்தே சபை எனலாம் —
*வரங்களில் பூரணம்; அன்பில் பூஜ்யம்* (1 கொரி 1:7)
*''நான் பவுலைச் சேர்ந்தவன் ...''* (1 கொரி 3:4)

எனவேதான் ''ஒரே'' ''அதே'' என்ற சொற்கள் திரும்பத் திரும்ப—
1 கொரி 12:4,5,6,8,9,11 ... *ஒரே ... அதே ...*
:12,13 ... *ஒரே ... ஒரே ...*

வரங்களை விளக்கும் 12ஆம், 14ஆம் அத்தியாயங்களுக்கு
நடுவில் அன்பை வலியுறுத்தும் 13ஆம் அத்தியாயம்!

☐ கருத்து வேறுபாடுகள் கட்சிகளை உருவாக்கக்கூடாது.
இந்தியா போன்ற நாட்டில் — இது போன்ற நாட்களில் —
நாம் இன்னும் பிரிந்துகொண்டே போகலாமா?



☐ பிரபலமாக விரும்புவது ஒருமனத்தைக் குலைக்கும் —
மத் 20:20,21,24-28 ... *ஆசனங்கள் ... இராஜ்யம் ...*
*கிறிஸ்துவின் சிந்தை* (பிலி 2:5)

— ஒருமனத்திற்காய் விடாது ஜெபியுங்கள்.
இயேசு அதற்காய் ஜெபித்தார் (யோ 17:20,21)

— பிரிவினையைத் தடுக்க முடிந்ததெல்லாம் செய்யுங்கள்.

**5. உபதேசத்தில் கலப்படம்** (Dilution in Doctrine)

மணல்மீது கட்டப்பட்ட வீடு நமக்குத் தெரியும் —
மத் 7:24-27
நமது ஊழியம் திடமான வேத போதனை மீது நிற்கவேண்டும்.

அடித்தளத்தைப் பலப்படுத்திக்கொண்டேயிருக்கவேண்டும் —
1 தீமோ 4:13 ... *வாசிக்கிறதில் ... போதிக்கிறதில் ...*
2 தீமோ 4:2-4 ... *பிரசங்கம் ... கடிந்துகொள்ளுதல் ...*
*உபதேசம்*

வாசிப்பதையும் படிப்பதையும் நிறுத்தக்கூடாது —
எ.கா.) பவுல் தனது இறுதிக் காலத்திலுங்கூட
2 தீமோ 4:13 ... *புத்தகங்கள் கொண்டுவா*

திருமறைத் தத்துவங்களில் சமரசம் கூடாது, எச்சரிக்கை!
அப்போஸ்தலரது அஸ்திபாரம் (அவர்களது உபதேசம்)
தீர்க்கதரிசிகளது அஸ்திபாரம் (அவர்களது முன்னறிவிப்பு)

உபதேசம்: எப்படிச் செய்யவேண்டும்?
முன்னறிவிப்பு: என்ன செய்ய வேண்டும்?

**6. தலைமைத்துவத்தில் குறைபாடுகள்** (Defects in Leadership)
தலைவர்கள்தான் தூண்கள் (கலா 2:9)

இஸ்ரவேலர் வழிவிலகிப் போனதற்கு ஒரு காரணம்
தலைவர்கள் சீர்கெட்டுப் போயினர் —
எசேக் 22:24-29 (Prophets, Priests, Princes, People)
*(தீர்க்கர்கள் — ஆசாரியர்கள் — பிரபுக்கள் — மக்கள்)*

தலைவர்களுக்கிருக்கும் மூன்று ஆபத்துக்கள் நமக்குத் தெரியும் —

பாலியல் — பெண் (Girls)
பணம் — பொன் (Gold)
பதவி — புகழ் (Glory)

நம்மை நாமே காத்துக்கொள்ள முயலுவதோடு பிறருக்காகவும் ஜெபித்து அவர்களுக்கு இப்பகுதிகளில் உதவவேண்டும்.

ஒருவரையொருவர் ***தாங்க*** வேண்டும்
ஒருவருக்கொருவர் ***ஆலோசனை*** கொடுக்கவேண்டும்
ஒருவருக்கொருவர் ***பொறுப்பாய்*** இருக்கவேண்டும்
அப்பொழுதுதான் இக்கண்ணிகளுக்குத் தப்பலாம்.

ஊழியங்களுக்காய் எரே 33:17,18ஐ உரிமைபாராட்டுவோம்.

பக்தியுள்ள ஊழியர் எழும்பிக்கொண்டேயிருக்கவேண்டும் —
வச 16 ... *நீதி*

எல்லாவற்றிற்கும் மேலாக, தலைவர்கள் தேவனை அறிந்தவர் களாகவும், தேவ சத்தம் கேட்கிறவர்களாகவும் இருக்கவேண்டும். இது இல்லையேல், தாலந்துகள், திறமைகள் எல்லாம் வீண்.

**7. பிரமாண்டத்தில் பிரியம்** (Desire for Bigness)

இன்றைய ஊழியர், ஊழியங்கள்
நடுவில் எலிப்பந்தயம்!
போட்டி மனப்பான்மையிலேயே பணி விரிவாக்கம்.

நமது அழைப்புக்கு உள்ளே நிற்பதோடு,
நமது வரம்புக்கு உள்ளேயே செயல்படவேண்டும் —
2 கொரி 10:12-16

எல்லா ஊழியங்களுக்கும், ஊழியருக்கும், தேவன் ஒரே அளவு கிருபையும் வரங்களும் அருளுவதில்லை —

- ரோ 12:3 ... *கிருபை ... விசுவாச அளவு*
- தாலந்துகள்: 5 ... 2 ... 1 (மத் 25:15) —

அருளப்பட்ட அளவின்படியே
ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.



எனவே, உங்களை அறியாது, அவசியமில்லாது,
ஒப்புமைகளினால் அழுத்தப்படாதீர்.
அடித்தளம் உறுதியாயிருந்தாலும்
அளவுக்குமீறி பளு ஏற்றுவது தூண்களில் கீறல் ஏற்படுத்தும்.

அளவுக்கு மீறி நீட்டியிழுத்தால் அறுந்துபோவோம்!

அப்படியானால், ஏசா 54:2இன் பொருளென்ன?
வளர்ச்சி = நீட்டுதல் ''அத்துடன்'' உறுதிப்படுத்துதல்
Lengthening "and" Strengthening

நீட்டுகிற அளவுக்குப் பலப்படுத்த வேண்டும்.
அதுவே ***வேகத்தை*** நிர்ணயிக்கும்.

இறைப்பணியில் எப்பொழுதும் பெருகுகிறவர்களாயிருக்க வேண்டியது அவசியம்தான்; ஆனாலும் நமக்காய் நியமிக்கப் பட்டதற்கு மிஞ்சிப்போகாது பார்த்துக்கொள்ள நுண்ணிய மனது தேவை.

**முடிவுரை**

இந்த ஏழு தூண்களும் சம முக்கியத்துவமானவை.
எல்லாவற்றிற்கும் சமமான கவனம் செலுத்துங்கள்.

தரிசனம் — ஆவியானவர் — பரிசுத்தம் —
ஒருமனம் — உபதேசம் — தலைமை — அளவு



## 44

# ஜெயங்கொள்வது எப்படி?

## How to be an Overcomer

வெளிப்படுத்தல் புத்தகத்தின் 2ஆம் மற்றும் 3ஆம் அத்தியாயங்களில் சபைகளுக்குக் கிறிஸ்து எழுதிய ஒவ்வொரு கடிதமும் ஜெயங்கொள்ளுகிறவர்களுக்கு ஆசீர்வாதங்ளை வாக்களிக்கிறது. *''ஜெயங்கொள்ளுகிறவன் எவனோ ...''* என்பதுதான் ஒவ்வொரு கடிதத்தின் முடிவு வரி. ஜெயங்கொள்வது எப்படி என்பதற்கு இக் கடிதங்களிலிருந்து 25 நடைமுறை ஆலோசனைகளை இங்கு தொகுத்துள்ளேன் —

1. எல்லா இன்னல்கள், இடையூறுகள் நடுவிலும் பொறுமையுடன் தேவனுக்குப் பணியாற்றுங்கள் (2:2).
2. பொல்லாதவர்களோடு சமரசம்பண்ணாதிருங்கள் (2:2).
3. தங்களைத் தாங்களே அப்போஸ்தலர்களும் தலைவர்களுமாக்கிக்கொண்டு பட்டங்களில் பெருமையடிப்போரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் (2:2).
4. தேவன்மீதும் அவரது வார்த்தைமீதும் அவரது மக்கள்மீதும் உங்களுக்கிருந்த ஆதி அன்பைத் தக்க வைத்துக்கொள்ளுங்கள் (2:4).
5. பின்வாங்கித் தேவனை விட்டு விலகிச் சென்றிருக்கும் பகுதிகளில் மனந்திரும்புங்கள் (2:5).
6. திருச்சபையில் முழுநேரப் பணியாளரல்லாதோரை அசட்டைபண்ணுவோரோடு தொடர்பு வைத்திராதேயுங்கள் (2:6,15).
7. சிறையிலடைக்கப்பட நேர்ந்தாலும் துன்புறுத்தப்படுதல் மற்றும் உபத்திரவங்கள் வழியாய்ச் செல்லும்போதும் மனவுறுதியுடனிருங்கள் (2:9,10).



8. பெயர்க் கிறிஸ்தவர்களிடமிருந்து வரும் கேலிகள், நிந்தைகள் குறித்துத் தைரியமிழக்காதிருங்கள் (2:9ஆ).
9. உங்கள் ஆத்துமாவை அல்ல, உடலை மட்டும் கொல்லத் திறனுள்ளவர்களுக்குப் பயப்படாதிருங்கள். இரத்தசாட்சி மரணம் என்பது படுவேதனையானது எனினும் அது அரிய சிலாக்கியம் (2:13).
10. எல்லாவித விக்கிரகாராதனைக்கும் விலகியிருங்கள் (2:14,20).
11. பாலியல் பாவங்களுக்கு விலகியோடுங்கள் (2:14,20).
12. சோர்ந்துபோகாமல் கர்த்தர் பணியில் பெருகிக்கொண்டேயிருங்கள் (2:19).
13. தேவனுக்குமுன் ஒளிவுமறைவின்றி நடந்து, இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, உங்கள் மனதையும் இருதயத்தையும் எப்பொழுதும் சுத்தமாய்க் காத்துக்கொள்ளுங்கள் (2:23).
14. சாத்தானை அல்ல, தேவனையே சிந்தையிலிருத்துங்கள். மறைவானவைமீது நாட்டங்கொள்ளாதிருங்கள் (2:24).
15. பெயரளவில் அல்ல, உண்மையாகவே நடந்துகொள்ளுங்கள். மாய்மாலம், பகட்டு ஆகியவற்றிற்குச் சற்றும் இடம் கொடுக்காதிருங்கள் (3:1).
16. உங்கள் வாழ்வின் பலங்குன்றிய பகுதிகளை ஜெபத்தின் மூலமாகவும் திருமறைத் தியானத்தின் மூலமாகவும் பலப்படுத்துங்கள் (3:2).
17. கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை எதிர்நோக்கி ஜெபத்தில் விழிப்புடனிருங்கள் (3:3).
18. தேவனுடைய சிறுபான்மையினரோடேயே நில்லுங்கள்; குறிப்பாகப் பரிசுத்தமாய் வாழுவதில் இவ்வித நிலைப்பாடு கொள்ளுங்கள். சமரசத்திற்கு இடங்கொடாதிருங்கள் (3:4).
19. நற்செய்திப்பணிக்குத் திறந்திருக்கும் வாசல்கள் அனைத்தையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். எந்தச் சூழலிலும் கிறிஸ்துவை மறுதலித்துவிடாதிருங்கள் (3:8).

20. உங்கள் பக்கம் மக்களை ஈர்க்கக்கூடிய இறையன்பில் நிலைத் திருங்கள் (3:9).

21. தேவனுக்குப் பிரியமான பிள்ளைகளாய் நடந்துகொள்ள அவருக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து நடந்திடுங்கள் (3:10).

22. உங்களது ஆன்மீகச் செல்வங்களைக் குறித்துக் கவலையீனமாயிராதேயுங்கள். அவற்றை அடிக்கடி உங்களுக்கு நினைவுபடுத்திக்கொள்ளுங்கள் (3:11).

23. ஆவியில் அனலாயிருங்கள். வெதுவெதுப்பான நிலைக்கு வந்துவிடாதிருங்கள் (3:15).

24. தேவனுக்கு முன்பாக அடிக்கடித் தற்பரிசோதனை செய்து, உங்கள் ஆன்மீக வாழ்வின் குறைபாடுகளைச் சரிசெய்ய அவரை நாடுங்கள் (3:17,18).

25. தேவ சித்தம் கேட்டு அதின்படிச் செய்ய உங்கள் இருதயத்தை எப்பொழுதும் திறந்து வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் இதயம் அவருக்கு இன்ப இல்லமாயிருக்கட்டும் (3:20).






**45**

# ''யுத்தம் கர்த்தருடையது!''

## "The Battle is the Lord's!"

''போர் வீரர்'' எனும் நிலையில் நல்ல போராட்டத்தைப் போராட நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்; ஆனால் முடிவாக, ''யுத்தம் நம்முடையது ***அல்ல***, கர்த்தருடையது!'' இச்சத்தியம் திருமறையெங்கும் பரவிக்கிடக்கிறது —

■ காய்ந்த நிலப்பகுதியில் நடப்பதுபோன்று இறைமக்கள் செங்கடலைக் கடந்துகொண்டிருந்தபோது, அவர்களுக்குப் பின்னால் எகிப்தியர் அணிவகுத்து வந்துகொண்டிருந்ததைக் கண்டபோது பீதியடைந்தனர். அவர்களை அமர்த்தி மோசே சொன்னது: ''பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் ... ***கர்த்தர்*** உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்'' (யாத் 14:13,14). இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்துக் கொண்டுவந்தவர் தேவனே. வழியில் என்னதான் நடக்கும், நடக்கட்டுமே! நம்மில் நற்செயலைத் தொடங்கினவர் அதனை முடித்தே தீருவார். நமது விசுவாச வாழ்வைத் துவக்குபவர் ஆண்டவரானால், அதை முடிப்பதும் அவராய்த்தானிருக்கும், பிசாசு அல்ல!

■ கானானுக்குச் சென்று திரும்பிய பன்னிரு வேவுகாரரில் பத்துப்பேர் பாதகமான அறிக்கை கொண்டுவந்தபோது மக்கள் அரண்டுபோனார்கள். ஆனால் அவர்களைப் பார்த்து மோசே சொன்னது: ''நீங்கள் கலங்காமலும் பயப்படாமலும் இருங்கள். உங்களுக்கு முன் செல்லும் ***தேவனாகிய கர்த்தர்*** தாமே எகிப்தில் உங்களோடிருந்து உங்கள் கண்களுக்கு முன்பாகச் செய்தது எல்லாவற்றைப் போலவும், வனாந்தரத்தில் செய்து வந்தது போலவும் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார். ஒரு மனிதன் தன் பிள்ளையைச் சுமந்துகொண்டு

போவதுபோல ... கர்த்தர் உங்களைச் சுமந்துகொண்டு வந்ததைக் காண்பீர்கள்'' (உபா 1:29-31). கானான்தான் வாக்குப்பண்ணப்பட்ட நாடு. அது பூவுலகில் நமது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறிப்பிடுகிறது. சோதனைகள் பெருகத்தான் செய்யும். ஆனாலும் போராட்டத்தில் நாம் தனியாக இல்லாததால் எந்தச் சோதனையும் மேற்கொள்ள முடியாத அளவு இருக்காது. தந்தையாம் தேவன் தமது தோள்களில் நம்மைச் சுமந்து செல்கிறார் (1 கொரி 10:13). ''உங்கள் தேவனாகிய ***கர்த்தர்தாமே*** உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்'' என்று ஏற்கனவே சொன்னதை மோசே மறுபடியும் மக்களுக்கு நினைப் பூட்டினார் (உபா 3:21,22).

■ எமோரியரின் மலைவாழ் மன்னர்கள் யோசுவாவிற்கும் இஸ்ரவேலருக்கும் எதிராய்க் கூடினார்கள். யோசுவா இச்செய்தியைத் தேவனிடம் எடுத்துச்சென்றபோது அவர் உறுதியளித்தது: ''அவர் களுக்குப் பயப்படாதே. உன் கையில் அவர்களை ஒப்புக்கொடுத் தேன்; அவர்களில் ஒருவரும் உனக்கு முன்பாக நிற்பதில்லை'' (யோசு 10:6-8). தாம் சொன்னபடியே தேவன் செய்தார். அவர் அவர் களைக் கலங்கப்பண்ணினார்; அவர்கள் மகா சங்காரமாய் மடங்கடிக் கப்பட்டனர் (வச 10). அமோக வெற்றி! மக்கள் தங்கள் எதிரிகள்மீது நீதியைச் சரிக்கட்டும்வரை சூரியனையும் சந்திரனையும் தரித்து நிற்கும்படி யோசுவா கட்டளையிட்டார். இந்த அபூர்வ அற்புதம் குறித்துத் திருமறை கூறுவது: ''இவ்விதம் கர்த்தர் ஒரு மனிதனு டைய சொல் கேட்ட அந்த நாளைப் போன்றதொரு நாள் அதற்கு முன்னுமில்லை, அதற்கு பின்னும் இல்லை; ***கர்த்தர்*** இஸ்ரவேலுக் காக யுத்தம்பண்ணினார்'' (வச 12-14). பிரியமானவர்களே, இக்கட்டான வேளைகளில், எதிர்பாக்க முடியாததை எதிர்பாருங்கள்! எதிரியின் சோதனைகள் மற்றும் தாக்குதல்களிலிருந்து தமது மக் களை எப்படி விடுவிக்கவேண்டுமென்று தேவன் அறிவார். யோசு வாவின் இச்சரிதையின் உச்சக்கட்ட அறிக்கை வசனங்கள் 40 மற்றும் 42இல் உண்டு: ''யோசுவா தேசம் அனைத்தையும், ராஜாக்கள் அனைவரையும் பிடித்தான் ... இஸ்ரவேலின் ***தேவனாகிய கர்த்தர்*** இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்.'' தனது பிரிவுரையில் மக்களிடம் யோசுவா கூறியது: ''உங்களில் ஒருவன் ஆயிரம்பேரைத்



துரத்துவான்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி ***அவர்தாமே*** உங்களுக்காக யுத்தம்பண்ணுகிறார்'' (23:10).

■ கோலியாத்தைத் தாவீது வென்ற சரிதை இச்சத்தியத்தை இன்னும் அழகாகச் சித்தரிக்கிறது. சவுலரசனிடம் தாவீது சொன்னது: ''என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த ***கர்த்தர்*** இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்'' (1 சாமு 17:37). அவ்விதமே கோலியாத்திடம் தாவீது சொன்னது: ''நீ பட்ட யத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடம் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளின் ***கர்த்தர்*** நாமத்தில் உன்னிடம் வருகிறேன். இன்று ***கர்த்தர்*** உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார் ... கர்த்தர் பட்ட யத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த மக்கள் கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் ***கர்த்தருடை யது''*** (வச 45-47). ஓர் இளம் ஆட்டிடையனாகத் தாவீது இப் பாடத்தைக் கற்றுக்கொண்டார். ஒவ்வொரு போராட்டமும் இன்னும் வலுவான போராட்டத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தும். விஞ்ஞான அறிவும் நவீன சாதனங்களும் பெருகிக்கொண்டேயிருக்கும்போது, தேவன் மீதுள்ள நமது சார்பு தளர்வதற்கு நிறைய வாய்ப்புண்டு (சங் 147:10,11). ஆனால் நாம் போரிடுவது மனிதரோடு அல்ல, ஆன் மீகச் சக்திகளோடு என்பதால் நாம் ***கர்த்தரிலும் அவரது*** சத்துவத்தின் வல்லமையிலுமே பலப்பட்டுக்கொண்டிருக்கவேண்டும் (எபே 6:10-12). கோலியாத்திடமிருந்த படைக்கலன்கள் குறித்துத் தாவீ துக்கு அக்கரையில்லை. ஆன்மீக யுத்தங்களை ஆன்மீக ஆயுதங் களைக் கொண்டே எதிர்கொள்ள முடியும். நம்மைத் தாக்குவோருக்கு எதிராக மாம்சீக ஆயுதங்களைப் பயன்படுத்தத் தோன்றும் சோத னையை நாம் மேற்கொள்ளவேண்டும் (2 கொரி 10:4). சங்கீதம் 24இல் தாவீது பாடியது: ''யார் இந்த மகிமையின் இராஜா? அவர் வல்லமையும் பராக்கிரமமுள்ள ***கர்த்தர்;*** அவர் யுத்தத்தில் பராக்கிர மமுள்ள கர்த்தராமே'' (வச 8).

■ அரசன் யோசபாத்திற்கு எதிராக மோவாபியரும் அம்மோனி யரும் போர் தொடுத்தபோது, அவர் தேவனை நோக்கித் தனது சத்

தத்தை உயர்த்திச் சொன்னது: ''எங்கள் தேவனே, அவர்களை நியாயந்தீர்க்க மாட்டீரோ? எங்களுக்கு விரோதமாக வந்த இந்த ஏராளமான கூட்டத்திற்குமுன் நிற்க எங்களுக்குப் பலமில்லை; நாங்கள் செய்ய வேண்டியது இன்னதென்று எங்களுக்குத் தெரியவில்லை; ஆகையால் எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக்கொண்டிருக்கின்றன'' (2 நாளா 20:1,12). யூதா கோத்திரத்தார் அனைவரும் தங்கள் குழந்தைகள், மனைவிகள் மற்றும் குமாரரோடு கர்த்தருக்குமுன் நின்றுகொண்டிருந்தபோது அவர்களுக்கு ஒரு தீர்க்கதரிசனச் செய்தி வந்தது: ''நீங்கள் அந்த ஏராளமான கூட்டத்திற்கு பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள் என்று கர்த்தர் உங்களுக்குச் சொல்லுகிறார்; இந்த யுத்தம் உங்களுடையது அல்ல, ***தேவனுடையது*** ... இந்த யுத்தத்தைப் பண்ணுகிறது நீங்கள் அல்ல ... நீங்கள் தரித்து நின்று ***கர்த்தர்*** உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்'' (வச 13-17). எனவே யோசபாத் பாடகரைப் படை வீரருக்கு முன்னர் நிறுத்தினார்! என்றுமுள்ள கர்த்தருடைய கிருபையை அவர்கள் புகழ்ந்து பாடியபோது, எதிரிகள் முறிந்தோடினர் (வச 19-22). அநேக ஆன்மீகப் போராட்டங்களில் முடிவான வெற்றியைக் கொண்டுவருவது துதியும் ஆராதனையுமே!

■ எசேக்கியா இராஜாவுக்கு எதிராக அசீரியா இராஜாவாகிய சனகெரிப் பெருமையடித்தான். அவனது பிதாக்கள் முறியடித்த ஜாதிகளின் தேவர்களைவிட இஸ்ரவேலின் தேவன் பெரியவரோ என்று மார்தட்டினான் (2 நாளா 32:14). ஆனால், ''அவனோடிருக்கிறவர்களைவிட நம்மோடிருக்கிறவர்கள் அதிகம்'' என்று மக்களை எசேக்கியா உற்சாகப்படுத்தினார் (வச 7). அத்துடன் அவர் சொன்னது: ''அவனோடிருப்பது மாம்ச புயம்; நமக்குத் துணை நின்று நமது யுத்தங்களை நடத்த நம்முடனிருப்பவர் நமது ***தேவனாகிய கர்த்தர்தானே!''*** (வச 8). எசேக்கியா பரலோகத்திற்கு நேராக ஜெபித்துக் கதறினார். கர்த்தர் ஒரு தூதனை அனுப்பிச் சனகெரிப்பைக் காலிபண்ணினார் (வச 20,21). துன்ப காலத்தில் மக்களை ஊக்குவித்துத் தேற்றும் சபை மேய்ப்பர்களுக்காகவும் ஊழியத் தலைவர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம். தலைவர்கள் தேவனுக்குமுன் தினமும் காத்திருந்து தங்களைத் தாங்களே புதுப்பித்துக்கொள்ளாவிடில் இவ்விதம் மக்களைத் தேற்றுவது சாத்தியமல்ல.



''யுத்தம் கர்த்தருடையது'' என்று நெடுகவே திருமறை போதிக்கிறது என்பதால், நாம் செய்யவேண்டியது இதில் ஒன்றுமில்லை என்று பொருளல்ல. நம்மை அறவே ஒதுக்கிவைத்துவிட்டு ஆண்டவர் யுத்தம் செய்வதில்லை. அப்படி அவர் செய்தால் நாம் ''படைவீரர்'' அல்லவே! யுத்தத்திற்காய்க் குதிரையை ஆயத்தம்பண்ண வேண்டியது நமது கடமை; வெற்றியோ கர்த்தரால் வரும் (நீதி 21:31). ஆண்டவர் நம்மை யுத்தத்தில் ராஜரீகக் கெம்பீரக் குதிரைகளாய் நிறுத்துவார் (சக 10:3). ஆன்மீகப் போராட்டத்தில் ***நமது பொறுப்பினைச்*** சுட்டிக்காட்டும் சில வசனப்பகுதிகளைப் பார்ப்போம் —

■ எருசலேமின் மதில்களை நெகேமியா திரும்பக் கட்டுகிறார் என்பது சன்பல்லாத், தொபியா, அரேபியர், அம்மோனியர் மற்றும் அஸ்தோத்தியர் ஆகியோருக்குத் தெரியவந்தபோது, அவர்கள் அவரைக் கேலி செய்து எப்படியாவது வேலையை நிறுத்திவிட முயன்றனர். நெகேமியாவும் அவரது மனிதரும் ஜெபித்ததோடு மட்டுமின்றி எதிரிகளுக்கு எதிராகப் பகலும் இரவும் காவலை நியமித்தனர் (நெகே 4:8,9). ''நமது தேவன் நமக்காய் யுத்தம் பண்ணுவார்'' என்று தலைவர்களுக்கும் மக்களுக்கும் நெகேமியா நினைப்பூட்டினார் (வச 20). வேலைக்காரரில் பாதிப்பேர் கட்டுமான வேலையில் ஈடுபட்டனர்; அடுத்த பாதிப்பேர் ஈட்டிகளையும், கேடகங்களையும், வில்லுகளையும், கவசங்களையும் பிடித்து நின்றார்கள். ஒரு கையில் சாந்துக் கரண்டி, மறு கையில் ஆயுதம்! இறைப்பணியில் கட்டுதலும் போராடுதலும் இணைந்தே செல்லும் (மத் 16:18). உண்மையான ஊழியர் எவரும் எதிர்ப்புக்குத் தப்பியதாகச் சரித்திரத்தில் சான்றில்லை.

■ அவனது எதிரிகள் யாவரிடமிருந்தும் சவுலின் கையிலிருந்தும் கர்த்தர் தாவீதைத் தப்புவித்த நாளில் கர்த்தருக்குத் தாவீது பாடிய பாட்டு: ''வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குத் தேவன் பழக்குவிக்கிறார் ... யுத்தத்திற்கு நீர் என்னைப் பலத்தால் ஆற்றல்படுத்தி, என்மீது எழும்பியவர்களை எனக்குக் கீழ் மடங்கப்பண்ணினீர்'' (சங் 18:34,39). அதுல்லாம் குகையிலிருந்து வெளிவந்தபோது தாவீது பாடியது: ''என் கைகளைப்

போருக்கும் என் விரல்களை யுத்தத்திற்கும் படிப்பிக்கிற என் கன் மலையாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம்'' (சங் 144:1).

■ நல்ல போராட்டத்தைப் போராடு; விசுவாசத்தைக் காத்துக் கொள்'' என்று இளைஞன் தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதினார் (1 தீமோ 6:12). தனது சொந்த வாழ்க்கையின் முடிவில் அவர் சாட்சியிட்டது: ''நல்ல போராட்டத்தைப் போராடினேன்; விசு வாசத்தைக் காத்துக்கொண்டேன்'' (2 தீமோ 4:7). விசுவாச வீரர்கள், வீராங்கனைகளைக் குறித்து இப்படி வாசிக்கிறோம்: ''அவர்கள் தீயின் கொடுமையைத் தணித்தார்கள்; வாள் முனைக்குத் தப்பினார்கள்; வலுவற்றவராயிருந்தும் வலிமை பெற்றார்கள்; போரில் வீரம் காட்டினார்கள்; மாற்றார் படைகளை முறியடித்தார்கள்'' (எபி 11:34). பொல்லாங்கனை ஜெயித்த வாலிபரை அப்போஸ்தலன் யோவான் தட்டிக்கொடுத்தார் (1 யோ 2:13.14). வெற்றி பெறுவோருக்கு இயே சுவானவர் வாக்குப்பண்ணியிருக்கும் பலன்களையும் பரிசுகளையும் யோவான் வரிசைப்படுத்தினார் (வெளி 2:7.11.17.26; 3:5.12.21).

முடிவாக, நாம் சொல்லவேண்டியது: ''யுத்தம் கர்த்தருடையது; ஆனால் நாமும் போராடவேண்டும். தேவன் இல்லாது நம்மால் எது வும் செய்ய முடியாது; நாம் இல்லாது அவர் எதையும் செய்ய மாட்டார்!'' ஆன்மீகப் போராட்டங்களில் பெரும்பாலும் வெற்றி உடனுக்குடன் கிடைத்துவிடாது. எனவேதான், ''எல்லாவற்றையும் செய்து முடித்தவர்களாய் ***நில்லுங்கள்''*** என்று அறிவுறுத்தப்பட்டி ருக்கிறோம் (எபே 6:13).

■

*தேவன் என் அடைக்கலமே என் கோட்டையும் அரணுமவர்*
*அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்,*
*என் நம்பிக்கையும் அவரே!*

*ஆயிரம் பதினாயிரம் பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்*
*அது ஒருக்காலத்தும் உன்னை அணுகிடாதே,*
*உன் தேவன் உன் தாபரமே!*



# 46

# அடைக்கப்பட முடியாத கதவுகள்

## Doors which cannot be shut!

''இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்ட முடியாது'' (வெளி 3:8). பிலதெல்பியா சபைக்குக் கிறிஸ்து அளித்த இவ்வாக்குத்தத்தம் தேவன்மீதும் அவரது குமாரன் தமது இரத்தத்தைச் சிந்தி நேசித்த ஆத்துமாக்கள் மீதும் பாசங் கொண்ட ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் திரும்பச் சொல்லப்படுகிறது.

கதவுகள் *எங்கும்* திறந்திருக்கின்றன; ஏனென்றால் உலகம் ''எங்கும்'' சென்று ''எல்லாருக்கும்'' சத்தியத்தை அறிவிக்கவே அவ ரால் கட்டளை பெற்றிருக்கிறோம் (மாற் 16:15; 1 தீமோ 2:3-7).

கதவுகள் *இப்பொழுது* திறந்திருக்கின்றன. எனவே காலையும் மாலையும் விதை விதைத்து, வாய்ப்பு கிட்டினாலும் கிட்டாவிட்டா லும் பிரசங்கம்பண்ணவேண்டும் (பிர 11:6; 2 தீமோ 4:2). காலத் தைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் (எபே 5:16). இன்றைக்குச் செய்யக்கூடியதை நாளைக்குத் தள்ளிப்போடக்கூடாது. தள்ளிப் போடுதல் வளர்ச்சிக்குப் பெருந்தடையாகும்.

கதவுகள் *ஒவ்வொரு விசுவாசிக்கும்* திறந்திருக்கின்றன. எனவே தான் தேவன் தம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் தாலந்துகளினா லும் பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் நிரப்புகிறார். வேலை யில்லையென்று ஒருவரும் சும்மா நிற்கவேண்டியதில்லை (மத் 25:14,15; 1 கொரி 12:7-11; மத் 20:1-7).

இரட்சிக்கப்படாத *எண்ணற்றோருக்காகக்* கதவுகள் திறந்திருக் கின்றன. தமது மந்தைக்குள் இன்னும் கொண்டுவரப்படாத ''வேறே ஆடுகளுக்காக'' வாசலாகிய கிறிஸ்து கரிசனை கொண்டுள்ளார் (யோ 10:9,16). அவிசுவாசி ஒவ்வொருவனும் ஒரு மிஷனரிக் களம்; விசுவாசி ஒவ்வொருவனும் ஒரு மிஷனரி.

திறந்த வாசல் பற்றிய வாக்குகள் ஏசாயா தீர்க்கதரிசனத்தில் பல வுண்டு: ''வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப் பாள்களை முறித்து, இருட்டறையிலிருக்கிற பொக்கிஷங்களை யும், ஒளிப்பிடத்திலிருக்கிற புதையல்களையும் உனக்குக் கொடுப் பேன்'' (ஏசா 45:4). ''உன்னிடத்திற்கு மக்களினங்களின் பலத்த சேனையைக் கொண்டுவரும்படிக்கும், அவர்களுடைய ராஜாக்களை அழைத்து வரும்படிக்கும், உன் வாசல்கள் இரவும் பகலும் பூட்டப் படாமல் எப்பொழுதும் திறந்திருக்கும்'' (60:11).

நாடுகளையும், மக்கள் கூட்டங்களையும் விசுவாச ஜெபத்தினால் நாம் உரிமைபாராட்டிக் கேட்கத் தேவன் விரும்புகிறார். ''என்னைக் கேளும், அப்பொழுது மக்களினங்களை உமக்குச் சுதந்தரமாகவும், பூவுலகின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்'' (சங் 2:8). தமது குமாரனுக்குப் பிதா கொடுத்த இவ்வாக்கைக் கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையும் உரிமை பாராட்டலாம். ''திரு வசனம் செல்லும்படியான வாசலை'' தனக்கும் தன் உடன் ஊழிய ருக்கும் திறக்கும்படி ஜெபிக்கப் பவுல் கொலோசே விசுவாசிகளைக் கேட்டுக்கொண்டார் (கொலோ 4:3,4).

திறந்த வாசல் என்றதும் பிரச்னைகளும் எதிர்ப்புகளும் கிடையாது எனப் பொருள்படாது. சொல்லப்போனால் இரண்டும் இணைந்தே செல்லும்! எடுத்துக்காட்டாக 1 கொரிந்தியர் 16:9, ''இங்கே பெரிதும் சாதகமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; எதிர்க்கிறவர் களும் அநேகர் இருக்கிறார்கள்!''

எருசலேமின் மதில்களைக் கட்ட நெகேமியாவுக்குத் திறந்த வாசல் இருந்தது. அனுமதியும், கட்டிடப் பொருட்களும் மனப்பூர்வமாய் அரசனால் வழங்கப்பட்டதைக் குறிப்பிட்டுத் தேவ கரம் தன்மீது நன்மையாயிருந்தது என அவர் அறிவிக்கிறார் (நெகே 2:8,18). ஆனால் உடனேயே சத்துருக்களின் பயமுறுத்தலையும் கேலியையும் அவர் சந்திக்கவேண்டியதிருந்தது (வச 19). அவரது மக்களின் ஒத்துழைப்பும் எதிரிகளின் சூழ்ச்சியும் இணையாய்ச் சென்றன.

''என் சபையைக் கட்டுவேன்'' என்ற இயேசு உடனே, ''பாதா ளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளுவதில்லை'' என்றும் மொழிந் தார் (மத் 16:18). இதின் பொருளென்ன? கட்டுதலும் போராட்டமும் இணைந்தே செல்லும்!



பிரச்னைகளும் எதிர்ப்புகளும் இருக்கும், ஆனால் பணியும் வாய்ப்புகளும் நின்றுபோகாது. இரத்தசாட்சியாய் இறக்கும்வரை பவுலுக்கு எதிர்ப்புகள் வந்துகொண்டே இருந்தன. ஆனாலும் அப் போஸ்தலர் நடபடிகளின் இறுதி வசனத்தைப் பாருங்கள்: ''மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் ... பிரசங்கித்து ... உபதேசித்துக் கொண்டிருந்தார்'' (அப் 28:31). இதுதான் திறந்த வாசல் என்பது!

சில கதவுகள் மூடப்பட்டிருக்கும். மூடப்பட்டிருந்தால் பூட்டப் பட்டிருக்கிறது என்று பொருளல்ல! ''தட்டுங்கள், திறக்கப்படும்'' என்றார் இயேசு! (மத் 7:7). கதவு மூடியிருந்தால் என்ன செய்ய வேண்டுமென பூனைக்குக்கூடத் தெரியும். தள்ளிக்கொண்டு வந்துவிடும்! இந்த எளிய சத்தியத்தைச் சபை அறிந்துகொள்ள வேண்டும். Operation Mobilization எனும் இயக்க நிறுவனர் ஜார்ஜ் வெர்வர் இந்த எடுத்துக்காட்டைச் சொல்லக் கேட்டேன்.

ஆபிரகாமின் அழைப்பில்தான் தேவனது மிஷனரித் திட்டம் துவங்கியது. ''உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள்'' என்று தேவன் அவருக்கு வாக்கருளி னார் (ஆதி 22:17). இதே வாக்கு ரெபெக்காளுக்கு வாழ்த்துதலாய்ச் சொல்லப்பட்டது (24:60). ஈசாக்கு கிறிஸ்துவுக்கு அடையாளமான தால் ரெபெக்காள் சபைக்கு அடையாளமானவள்.

நாமே ஆபிரகாம், ஈசாக்கு ஆகியோரின் ஆன்மீக வழித்தோன்றல் கள்; எனவே நாமும் இவ்வாக்குகளை உரிமை பாராட்டலாம். இதை விசுவாசித்த ஆதிச்சபை ''எங்கும் சென்று'' வசனத்தைப் பிரசங் கித்தது (மாற் 16:20). கர்த்தர் ''புறவினத்தவருக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்தார்'' (அப் 14:27).

நமது வெளிக்கிளம்புதலையும், நற்செய்தி பரப்புதலையும் தடுப்பது போன்ற சூழல்களில் நாம் சிலவேளை சிக்கிக்கொள்ளலாம். அப்போஸ்தலரின் சிறைச்சாலை அனுபவங்கள் இதற்கு எடுத்துக் காட்டு. தமது ஊழியரை வெளிநடத்த சிறைச்சாலைக் கதவுகளை

அற்புத வல்லமையால் தேவன் உடைத்தெறிந்த மூன்று முக்கிய சம்பவங்களை நடபடிகளில் காணலாம். தூதனை அனுப்பினார்; அல்லது பூமியதிர்வை உண்டாக்கினார்; தம் ஊழியரை விடுவித்தார் (அப் 5:19; 12:6,7,10; 16:26). அவர் மாறாதவர். அவரது தூதர் எப்பொழுதும்போல் சுறுசுறுப்பாயுள்ளனர் (சங் 34:7). அவர்கள் மின்னல் வேக விமானங்களைவிட வேகமானவர்கள் (தானி 9:21).

தேவனுக்காய்ச் செயல்படக் குதிக்கையில் இன்னல்கள் நம்மைச் சூழத்தான் செய்யும். ஆனால் ''அந்தகாரத்திலும் மரண இருளிலும்'' இருந்து நம்மை வெளிப்படப்பண்ணி, ''கட்டுகளை'' அறுத்து, ''வெண்கலக் கதவுகளையும் இருப்புத் தாழ்ப்பாள்களையும்'' தேவன் தகர்த்தெறிவார் (சங் 107:13-16).

வழியில் பிரமாண்டமான பிரச்னைகளைச் சந்திக்கலாம். ''கல்லை நமக்காய் எவன் புரட்டித் தள்ளுவான்?'' என்ற கேள்வி நம்மை வாட்டும். ஆனால் நாம் முன்சென்றுகொண்டேயிருந்தால் தேவதூதன் நமக்காகக் கல்லை ஏற்கனவே புரட்டித் தள்ளியிருப்பதைக் காண்போம்! (மாற் 16:3,4; மத் 28:2).

மலை எதிர்ப்படும்போது செய்யவேண்டியதை இயேசு போதித்துள்ளார். ''இடம்பெயர்ந்து போ'' என மலையைப் பார்த்துப் பேசவேண்டும்! உபவாச ஜெபம் அதற்கு ஆயத்தமாகும் (மத் 17:20,21).

பிலதெல்பியா சபைக்குக் கிறிஸ்து அனுப்பிய செய்தியிலிருந்து ***(வெளி 3:7-13)***, திறந்த வாசலை வாக்களிக்கும் கர்த்தர் சபையை ஏழு வித அர்ப்பணிப்புக்கு அழைக்கிறார் என அறிகிறோம் —

### 1. பரிசுத்தம்

''பரிசுத்தமுள்ளவர்'' என்று கர்த்தர் தம்மை அறிமுகப்படுத்துகிறார் (வச 7). பரிசுத்தம் என்பதே நமது முழக்கமாயிருக்கவேண்டும். நாம் என்னதான் சாதித்தாலும் பரிசுத்தமில்லையேல் எல்லாம் வெறுமைதான். எல்லாக் காவலோடும் இருதயத்தைக் காத்துக்கொள்ளவேண்டும்; ஏனெனில் அதினிடத்திலிருந்தே ஜீவ ஊற்று புறப்படும் (நீதி 4:23). பாளையத்தில் பாவம் இருக்கும்போது தோல்வி நிச்சயம்.



தேவனது நாளைய அற்புதத்திற்கு நமது இன்றையப் பரிசுத்தம் தேவை (யோசு 3:5). நமது வாழ்விலும் ஊழியத்திலும் பாவத்தை அனுமதித்தால் தேவ மகிமை விலகுவது திண்ணம். அதற்குப் பிறகு எல்லாம் வறட்டுக் கூச்சல்தான் (1 சாமு 2:17; 3:13; 4:5,21). உடன் விசுவாசிகளும் உடன் ஊழியரும் காணக்கூடாத பின்மாற்றத்தைக் குறித்து எச்சரிக்கை! நமது பாவம் நம்மைத் தொடர்ந்து பிடிக்கும் (எண் 32:23).

### 2. உண்மை

அடுத்து தம்மை ''உண்மையுள்ளவர்'' என்கிறார் கர்த்தர் (வச 7). ஊழியத்தில் ஒருநாளும் நாம் உண்மையைக் கிரயமாக்கிவிடக் கூடாது. உலகம் இருளிலும் ஊழலிலும் இருக்கிறது. நாமே உலகிற்கு வெளிச்சம் (மத் 5:14). நேர்மை, உண்மை இவையெல்லாம் நமக்கே உரிய பண்புகளாயிருக்கவேண்டும். சபையிலும் ஊழியத்திலும் பொய் இருக்கக்கூடாது (அப் 5:4). குறிப்பாக ஊழிய அறிக்கைகளில் மிகைப்படுத்தல் இருக்கவே கூடாது. பாதி உண்மையைச் சொல்லுவதும் அகற்றப்படவேண்டும். இயேசு சத்தியமானவர்; பிசாசு பொய்யன். இரண்டையும் கலக்கக்கூடாது. பணக் காரியங்களில் நமது கைகள் சுத்தமாயிருக்கவேண்டும். அற்பக் காரியங்களிலும் உண்மை அவசியம் (லூக் 16:10,11). கடவுளுடைய பிள்ளைகளாகவும் பணியாளராகவும் நாம் ''அவரது வீடெங்கும்'' உண்மையாயிருக்க வேண்டும் (எபி 3:1,2,5,6).

### 3. கீழ்ப்படிதல்

பிலதெல்பியா சபையானது வசனத்தைக் காத்துக்கொண்டதால் கர்த்தர் அதை மெச்சுகிறார் (வச 8). ஆன்மீகத் தோற்றமுள்ளது யாவும் திருமறைக்கு உகந்ததெனச் சொல்லிவிட முடியாது. என்ன செய்கிறோமென்பதல்ல, எப்படிச் செய்கிறோமென்பதே காரியம். ''ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்'' (2 தீமோ 2:5). முழுக்க முழுக்க வசனத்தின்படி செய்யும்போது மட்டுமே நமது கட்டிடம் புயலையும் வெள்ளத்தையும் தாங்கமுடியும் (மத் 7:24,25). தேவன் தந்த முறையின்படியே நோவா பேழையைக் கட்டினார். ஆசரிப்புக்கூடாரத்தை

மோசே தேவன் தந்த மாதிரியின்படியே அமைத்தார். வசனத்திற்கு மாறான யாவையும் எறிந்துவிடவேண்டும். முடிவை வைத்து முறை சரியென சொல்லிவிடக்கூடாது. வெற்றியாயிருப்பதால் வேதத்தின் படியானது எனக் கூற முடியாது. நமது ஊழிய முறைகளையும் தத் துவங்களையும் அலசிப்பார்க்க போதுமான நேரம் தனித் தியானத் திலும் கூட்டு வேத ஆராய்ச்சியிலும் செலவழிக்கவேண்டும். தேவ பக்தியுள்ள ஆலோசகரைப் பெருக்கிக்கொண்டேயிருக்கவேண்டும். தவறு எனச் சுட்டிக்காட்டப்பட்டால் ஒத்துக்கொள்ளக்கூடிய ஆண்மை நமக்கு இருக்கவேண்டும்.

**4. தைரியம்**

''உனக்குக் கொஞ்சம் பலம் இருந்தும், நீ என் பெயரை மறு தலிக்கவில்லை'' என்றார் கர்த்தர் (வச 8). நம்மைப் பார்த்து அவர் சொல்வது: ''திடன்கொள்ளுங்கள், வேலையை நடத்துங்கள் ... நான் உங்களுடனே இருக்கிறேன் ... என் ஆவியானவரும் உங்கள் நடுவில் நிலைகொண்டிருப்பாராக; பயப்படாதேயுங்கள்!'' (ஆகாய் 2:4,5). சேனைகளின் கர்த்தர் நம்முடனிருக்கையில் மனிதனும், இருளின் சக்திகளும் நமக்கு என்ன செய்யமுடியும்? கொரிந்து நகரில் உண் டான பலத்த எதிர்ப்பை அடுத்து இரவில் தரிசனத்தில் தேவன் பவு லிடம், ''நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே ... இந்தப் பட்டணத் தில் எனக்கு அநேக மக்கள் உண்டு'' என்றார் (அப் 18:9,10). தேவ னுக்காய்ப் பெரிய காரியங்களை முயற்சிப்பதைப் பயம் தடுக்கிறது. யோவான் தவிர பன்னிரு அப்போஸ்தலரும் இரத்தசாட்சிகளாய் இறந் தனர். மரணமானாலும் தைரியமாய்ச் சாட்சிபகரவே பரிசுத்த ஆவி யின் வெடி மருந்து போன்ற வல்லமை நமக்கருளப்பட்டுள்ளது (அப் 1:8; 16:26).

**5. பொறுமை**

''என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டாய்'' (வச 10). பாடுகள் என்பது கிறிஸ்தவ வாழ்க்கை அல்லது ஊழியத்திலிருந்து பிரிக்கமுடியாதது. தேவபக்திக்குக் கிரயமே துன்பம்தான் (2 தீமோ 3:12). திருவசனத்தினால் உண் டாகும் உபத்திரவத்தைக் குறித்து இயேசு விதைக்கிறவன் உவமை



யில் கூறினார் (மத் 13:21). மட்டுமல்ல, ஒழுங்குக்காகவும் படிப் பினைக்காகவும் அன்புள்ள தகப்பன் கையாளும் பிரம்பு என்ற பாடும் உண்டு (எபி 12:7-11). மற்றவர்களுடைய பாடுகளைப் புரிந்து அவர் களுக்கு உதவும் கரிசனையைப் பெறவும் நமக்குப் பாடுகள் வரும் (2 கொரி 1:3-5). சிலவேளை நமக்குப் பாடுகளின் காரணமே புரி யாது (ஏசா 50:10). அப்பொழுது கர்த்தரது வசனத்தைப் பிடித்துக் கொண்டு அவர்மீது சார்ந்திருக்க வேண்டியதுதான். பொறுமைக்குப் பலன் உண்டு. ''யோபுவின் பொறுமையைக்'' குறித்தும் ''இயேசு வின் பொறுமையைக்'' குறித்தும் பைபிள் பேசுகிறது (யாக் 5:11; வெளி 1:9). இருவரும் மேன்மை அடைந்தனர். பொறுமையுள்ள வர்கள் பாக்கியவான்கள்!

**6. மனவுறுதி**

''ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக் குள்ளதைப் பற்றிக்கொண்டிரு'' (வச 11). கிரீடம் என்பது மதிப் புள்ளது, மேன்மையானது. நமது மீட்பு பொன்னினாலும் வெள்ளி யினாலுமல்ல, அதிலும் விலையுயர்ந்த கிறிஸ்துவின் இரத்தத்தால் உண்டானது (1 பேது 1:18,19). நாம் கிறிஸ்துவோடு உன்னதங் களில் உட்கார்ந்திருக்கிறோம் (எபே 1:3). கிறிஸ்துவில் உள்ள நமது நிலையை ஒருபோதும் சந்தேகிக்கக்கூடாது. விண்ணகத் தந்தை யின்முன் நாம் ராஜாக்களும் ஆசாரியருமாக்கப்பட்டோம் (வெளி 1:6). நாம் கிருபாசனத்திற்குத் தைரியமாய்ச் செல்லலாம் (எபி 4:16). ''நமது நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல்'' உறுதியாயிருப்போம் (எபி 10:23). பிசாசின் குற்றச்சாட்டுக்கு செவி யடைப்போம். பரிசுத்தவான்களுக்கும் பொல்லாத ஆவிகளுக்கும் இடையே போர் தொடர்கிறது. இரட்சிப்பின் தலைச்சீரா சரியாய் அணியப்பட்டிருக்கவேண்டும் (எபே 6:11,12,17). சிந்தையானது கிறிஸ்துவிலுள்ள செல்வங்களைத் தைரியமாய் அறிக்கையிட்ட வண்ணமிருக்கவேண்டும்.

**7. சகோதர பாசம்**

''பிலதெல்பியா'' என்ற கிரேக்கச் சொல்லுக்கு ''சகோதர பாசம்'' என்று பொருள். புதிய ஏற்பாட்டில் இன்னும் ஐந்து இடங்களில் இச்

சொல் சகோதர அன்பிற்கு மூலமொழியில் பயன்படுத்தப்பட்டுள்ளது (ரோ 12:10; 1 தெச 4:9; எபி 13:1; 1 பேது 1:22; 2 பேது 1:7). பழுதடைந்த உறவுகளோடு தேவனுக்காய் அதிகம் சாதிக்க முடியாது. தேவையான பகுதிகளிலெல்லாம் ஒப்புரவாகி காரியங்களைச் சரி செய்ய நம்மைத் தாழ்த்துவோம். அதுவரை தேவனுக்கான நமது சேவை ஏற்றுக்கொள்ளப்படாது (மத் 5:23,24). கல்வாரியின் அன்பானது நமது இதயத்தை உருக்கிக் கசப்பு, புறங்கூறுதல், கோபம், வைராக்கியம் ஆகிய யாவையும் அகற்றட்டும். கடவுளது மன்னிப்பை இலவசமாய் அனுபவிக்கும் நாம் பிறரையும் மனப்பூர்வமாய் மன்னிப்போம். ஊழியங்களும் தன்னலமாய்ச் செயல்படாது தங்கள் ஆசீர்வாதங்களைப் பிற ஊழியங்களோடு பகிர்ந்து, வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் கூட்டுறவில் செயல்படவேண்டும். பிறரது குறைகளை வெளியரங்கமாக்காமல் அன்பினால் மூடவேண்டும். போட்டியும், மேன்மைபாராட்டலும் அகலவேண்டும். எல்லாரும் சேர்ந்து நமது சாம்ராஜ்யத்தையல்ல, தேவ இராஜ்யத்தைக் கட்டவேண்டும்.

இந்த ஏழு வித அர்ப்பணிப்புக்குள் வந்து ஆவியானவர் சொல்லுகிறதற்குச் செவிமடுத்து (வச 13) நடந்தால், கர்த்தரிடம் நாம் பெற்றுக்கொண்ட ஊழியத்தை நிறைவேற்றுவதில் வெற்றிகாண்போம். கதவுகள் அடைபடாது!





# 47

# துன்புறுத்தப்படும் மிஷனரிகளுக்கு ஒரு கடிதம்

## A Letter to the Persecuted Missionaries

அன்புள்ள உடன் ஊழியருக்கு,

பாசமும் பரிவும் கலந்த வாழ்த்துக்கள்!

மிஷனரிப் பணிக்களங்களில் நடக்கும் துன்புறுத்தல்களையும் உங்கள் பாடுகளையும் குறித்த செய்திகள் அமைதியான பகுதிகளில் வாழ்ந்து பணியாற்றும் எங்களை எட்டும்போதெல்லாம் எங்கள் இதயங்களில் இரத்தம் கசிகிறது. உடனே கிருபாசனத்திற்கு விரைந்து உங்களுக்குப் புதிய கிருபையும் புதிய பலமும் அருளப்பட அறுப்பின் ஆண்டவரை நோக்கி மன்றாடுகிறோம். ஒரே உடலின் உடனுறுப்புகளாய் உங்களோடு சேர்ந்து அழுகிறோம் (ரோ 12:15; யோபு 30:25; சங் 35:13,14; 1 கொரி 12:26; எபி 13:3). உடனே வந்து உங்களைப் பார்க்க முடியாவிட்டாலும் ஆவியில் உங்களோடுதானிருக்கிறோம் (1 கொரி 5:4). நற்செய்தியின் எதிரிகளால் நீங்கள் எவ்விதத்திலும் அரண்டுவிடக்கூடாதென உங்களுக்காய் ஜெபிக்கிறோம் (பிலி 1:28). அடிபடும்போதும் அச்சுறுத்தப்படும்போதும் சோர்புறுவது இயல்புதான். ஆனால் பன்னிரு சீடரை மிஷனரிப் பணிக்காய் அனுப்புகையில் இயேசு சொல்லியதை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம் —

‘‘ஆன்மாவைக் கொல்ல இயலாமல் உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்சவேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். காசுக்கு இரண்டு சிட்டுக் குருவிகள் விற்பதில்லையா? எனினும் அவற்றுள் ஒன்றுகூட உங்கள் பரம தந்தையின் விருப்பமின்றித் தரையில் விழாது. உங்கள் தலைமுடியெல்லாம் எண்ணப்பட்டிருக்கின்றது. எனவே அஞ்சாதிருங்கள்!’’ (மத் 10:28-31).

இத்திருவசனப் பகுதியின் பொருள் என்னவெனில்: நாம் கடவுளுக்கு அருமையானவர்கள். நம்மைப்பற்றி யாவும் அவருக்குத் தெரியும். நமது வாழ்வின் ஒவ்வொரு சிறு காரியத்தையும் குறித்து அவர் கரிசனை கொண்டுள்ளார். பொதுவாக, அவர் நம்மைத் தமது கருவிழிபோல் காத்துக்கொள்வார். ஆனாலும் அவரது ஏகாதிபத்தியச் சித்தத்தின்படி சில வேளைகளில் பொல்லாத மனிதர் கைகளில் நம்மைத் துன்புற விட்டுவிடுவார். துன்புறுத்தப்பட்டு நாம் கொல்லப்படவும் அவர் அனுமதிக்கலாம். ஆனால் அவரது பிரசன்னம் எப்பொழுதும் நம்முடனிருக்கும். எனவே நாம் கலங்கத் தேவையில்லை.

இந்த உணர்வுதான் அன்று அந்த மூன்று எபிரெய வாலிபரை, உயிரோடு எரிக்கப்படுவார்களென அச்சுறுத்தப்பட்டபோதும், தைரியமாய் உறுதியாய் நிமிர்ந்து நிற்கச் செய்தது. தங்களை விடுவித்துவிட தேவனால் முடியுமென அவர்களுக்குத் தெரியும். ஒருவேளை அவர் அப்படிச் செய்யாவிட்டாலும், தங்கள் விசுவாசத்தை மறுதலிப்பதைவிட அதற்காய் மரிக்கவே அவர்கள் ஆயத்தமாயிருந்தனர் (தானி 3:17,18). ''மேன்மையான உயிர்த்தெழுதலை அடைவதற்காக, விடுதலை பெற மறுத்து, வதையுண்டு மடிந்த'' விசுவாச வீரர் எத்தனையோ பேர்! (எபி 11:35).

நற்செய்திப்பணியில் இயேசு கிறிஸ்துவின் சபை தீவிரமாகிக் கொண்டிருக்கும் வேளையில் பிசாசும் தனக்கு இன்னும் கொஞ்ச நேரம் மட்டுமே உண்டென அறிந்து என்றுமில்லாத அளவு கோபங் கொண்டுள்ளான் (வெளி 12:12). துன்புறுத்துதல் என்பது ஓர் எதிர்ச் செயல்தான். எனவேதான் அது எங்கும் கூடிக்கொண்டேயிருக்கிறது. கிறிஸ்தவர்க்கெதிரான வெளிப்படையான வன்முறைச் செயல்கள் ஆண்டுதோறும் நூற்றுக்கும் அதிகம். இதயம் துவளவேண்டாம்! ''ஏதோ, வினோதமானது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். மாறாக, கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்குகொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள் ... உலகெங்கிலுமுள்ள உங்கள் சகோதர சகோதரிகள் உங்களைப் போலவே துன்பங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளுங்கள்'' (1 பேது 4:12,13; 5:9). இந்தப் போராட்டத்தில் நீங்கள் தனியாக இல்லை!



உங்கள்மீது எறியப்படும் ஒவ்வொரு கல்லும் உங்கள் கிரீடத்தில் ஒரு மாணிக்கமாய்ப் பதியும்! பரம தந்தையின் வலது பக்கம் ''உட்கார்ந்திருந்த'' இயேசுவை எழுந்து ''நிற்கிறவராய்'' ஸ்தேவான் கண்டார் (மாற் 16:19; அப் 7:56). அவ்வளவு மரியாதையுடன் சபையின் முதல் இரத்தசாட்சியானவர் விண்ணில் வரவேற்கப்பட்டார்! உபத்திரவம் கொடுமையாயிருந்தால் விளைவும் மகிமையாயிருக்கும். ஒரு ஸ்தேவானைக் கொன்றார்கள்; தேவனோ ஒரு பவுலை எழுப்பினார்! ஸ்தேவானின் இரத்தசாட்சி மரணமே பவுலின் மனமாற்றத்திற்கு மேடையமைத்தது (அப் 7:57,58). சுவிசேஷத்தை முழுமூச்சாய் எதிர்ப்பவர்களே பொதுவாக அதை முழுபலத்தோடு எடுத்துரைப்பவர்களாகவும் மாறுவர் (அப் 9:20-22).

பாடு பாடுதான்; ஆனால் தெய்வீகக் கண்ணோட்டத்தில் அது ஒரு பாக்கியம் என நீங்கள் நினைவிற்கொள்ள விரும்புகிறோம். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் எல்லார்மீதும் கல் விழுவதில்லை. பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் தங்களது விடாத சாட்சியினால் உதைக்கப்பட்டபோது இயேசுவின் பெயருக்காய் அவ்விதம் பாடுபடத் தகுதி பெற்றதற்காய் அகமகிழத்தான் செய்தார்கள் (அப் 5:40,41). மற்றொரு சம்பவத்தில், பவுலும் பர்னபாவும் ஒரு பிராந்தியத்திலிருந்தே துரத்திவிடப்பட்டபோது அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் மகிழ்ச்சியால் பொங்கினர் (அப் 13:50-52).

நீங்கள் துன்புறுத்தப்படும்போது எவ்விதம் கிறிஸ்துவின் உடலிலுள்ள பிற உறுப்பினர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கிறீர்களென்று உங்களுக்குத் தெரியுமா? உபத்திரவங்களின் செய்திகள் அவர்களைத் தட்டியெழுப்ப ஜெபத்தில் ஊக்கமடையச் செய்கின்றன. அது மட்டுமல்ல, நற்செய்தியறிவிப்பில் அவர்கள் கூடுதல் ஊக்கமும் உற்சாகமும் பெறுகின்றனர். பவுல் சிறையிலடைக்கப்பட்டது பிலிப்பிய விசுவாசிகளுக்கு என்ன செய்ததென்று பாருங்கள். இதோ அவர் அவர்களைக் குறித்து எழுதியது: ''எனக்கு நேர்ந்தவையெல்லாம் நற்செய்தி பரவுவதற்கு ஏதுவாயின ... என் சிறை வாழ்வினால் சகோதர சகோதரிகளுள் பெரும்பாலோர் கடவுள் வார்த்தையை அச்சமின்றி எடுத்துரைக்க மேலும் துணிவு பெற்றிருக்கிறார்கள்!'' (பிலி 1:12-14). தேவ மக்கள் சொகுசாய் வாழ்ந்துகொண்டிருக்கும் இடங்

களிலிருந்து அவர்களைச் சிதறியடித்து நற்செய்தியினால் சந்திக் கப்படாத பகுதிகளுக்கு அவர்களை அனுப்ப சிறந்த முறையாகவும் தேவன் உபத்திரவத்தைப் பயன்படுத்துகிறார் (அப் 8:1,4).

நீங்கள் துன்புறுத்தப்படும்போது உங்கள் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் எவ்விதம் கலங்குகின்றனரென்பதை நாங்களறி வோம். அவர்கள் சும்மா அமைதியாயிருந்துவிட முடியாது. பாலகனாக இயேசு தமது அன்னையின் கரங்களிலிருக்குபோதே, சிமியோன் அவரைப் பார்த்து, ''உனது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாயும்'' என்றார் (லூக் 2:35). காரியங்களை இருதயத்தில் வைத்துச் சிந்தித் துக்கொண்டிருப்பது மரியாளின் வழக்கம் (லூக் 2:51). முப்பதாண்டு களுக்குமேல் அவர் எவ்விதம் மனதில் இவ்விதச் சித்திரவதையுடன் வாழ்ந்திருப்பாரென்று சிந்தித்துப் பாருங்கள்! தனது மகன் சிலுவை யில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும்போது அவர் எவ்வளவாய்த் துடித்திருப்பார்! இயேசு அவள்மீது பரிதாபப்பட்டு யோவானை இன் னொரு மகனாய் அவருக்கு ஈவருளி அவரைத் தேற்றினார் (யோ 19:25-27). மானிட உணர்வுகளையும் வேதனைகளையும் இயேசு நன்கறிவதால் அதே விதமாய் அவர் உங்கள் குடும்பத்தினரையும் தேற்றுவார் (எபி 4:15,16). நீங்களில்லாததால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்ப அவர் இன்னொருவரை அனுப்புவார்.

ஜெபம், உழைப்பு, பாடு எனும் ''கண்ணீர், வியர்வை, இரத்தம்'' ஆகியவை மூலமாகவே இறையரசு வளர்கிறது (வெளி 6:9-11). இரத்தசாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து. ஒரு விதை நிலத்தில் விழும்போது எத்தனை கதிர்கள் விளைந்துவிடுகின்றன! (யோ 12:24,25). கிரஹாம் ஸ்டெயின்ஸ் (1941-1999) மற்றும் அவ ரது இரு புதல்வரின் இரத்தசாட்சி மரணம் (1999) இந்தியாவைக் கிறிஸ்துவின் நறுமணத்தால் நிரப்பிற்று. ''நான் எனது கணவரையும் மகன்களையும் கொன்றவர்களை மன்னிக்கிறேன்'' என்று திருமதி கிளாடிஸ் ஸ்டெயின்ஸ் அவர்கள் பகிரங்கமாய் அறிக்கையிட்டபோது தான் இத்தனை மதங்களும் தத்துவங்களும் நிறைந்துள்ள இந்நாடு முதன்முறையாக ''மன்னிப்பு'' என்ற சொல்லிற்குச் சரியான அர்த் தத்தை நடைமுறையில் புரிந்துகொண்டது!



நீங்கள் உபத்திரவப்படும்போது கிறிஸ்துவின் பாடுகளில் குறை வானவைகளை உங்கள் உடலில் நிறைவாக்குகிறீர்கள் (கொலோ 1:24). கர்த்தராகிய இயேசுவின் அடையாளங்கள் உங்கள் உடலில் பதிக்கப்படுகின்றன (கலா 6:17). மகிமையின் ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார். உபத்திரவப்படுத்துகிறவர்களால் கிறிஸ்து பழிக்கப்படுகிறார்; உங்களாலேயோ மகிமைப்படுகிறார் (1 பேது 4:14). ஒவ்வொரு சோதனைக்கும் வேதனைக்கும் அவரது கிருபை போதுமானதாயிருக்கும். அவர் தரும் பலத்திற்கு மேல் நீங் கள் சோதிக்கப்பட அவர் இடம் தரமாட்டார். கொந்தளிக்கும் கடலின் அலைகளுக்கும் அவர் வரம்பு விதிக்கிறாரே! (யோபு 38:10,11).

தேவன் உங்களுக்குப் பயமுள்ள ஆவியையல்ல, பலமுள்ள ஆவி யையே கொடுத்திருக்கிறார். காலைதோறும் அதை அனல்மூட்டி எழுப்புங்கள்! வெட்கப்படாதீர்கள்! (2 தீமோ 1:6-8). படுவேதனை யையும் சிறைவாசத்தையும் தாங்கமுடியாமல் தீர்க்கன் எரேமியா இனித் தீர்க்கதரிசனம் சொல்லுவதில்லை என்று தீர்மானித்தார். எப் பக்கமும் பயமிருந்தது. ஆனால் அவரது இருதயத்திலிருந்த திரு வார்த்தையோ எலும்புகளுக்குள் அடைபட்டு எரிந்துகொண்டிருந்த நெருப்பு போலிருந்தது. அவரால் அதை அடக்கி வைத்திருக்க முடியவில்லை! துணிந்தெழுந்த அவரது அறிக்கை இதோ: ''கர்த்தரோ பயங்கரமான பராக்கிரமசாலியாய் என்னோடு இருக்கிறார்; ஆகையால் என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் மேற்கொள்ளாமல் இடறுவார்கள்; தங்கள் காரியம் வாய்க்காதபடியால் மிகவும் வெட்கப் படுவார்கள்; மறக்கப்படாத நித்திய அவமானம் அவர்களுக்கு உண்டாகும்'' (எரே 20:1,2,9-11).

எதிர்க்கிறவர்களிடம் கோபப்படாதீர்கள். அவர்களுக்காய் ஜெபி யுங்கள் (மத் 5:44இ). உங்களைத் துன்புறுத்துவோர்க்குப் பதில் செய்வதை ஆண்டவரிடம் விட்டுவிடுங்கள் (2 தெச 1:6-8). இதோ, கிறிஸ்து உங்களுக்கருளும் வாக்கு: ''நீ படப்போகிற பாடுகளைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே ... இறக்கும்வரை உண்மையாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்'' (வெளி 2:10).

இப்போராட்டத்தில் உங்களோடு நிற்கும்,

உங்கள்
சகோதர, சகோதரிகள்.

# 48

# ''உயிருள்ளவரை உண்மையாயிரு!''

## "Be faithful until death!"

**முகவுரை**

- வெளி 2:10 ...*''சாகும்வரை உண்மையாயிரு,*
  *ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன்!''*

  கண்டிக்கப்படாத இரு சபைகளில் ஒன்றாகிய சிமிர்னா சபைக்கு எழுதப்பட்டது இது.

  அடுத்த சபை பிலதெல்பியாவிலுள்ளது.
  இரண்டும் மிஷனரிச் சிந்தையுள்ளவை.

- இறப்புவரை உண்மையாய் *''வாழ''* வேண்டும் என்றே இவ்வசனம் பொதுவாக அர்த்தப்படுத்தப்படுகிறது; ஆனால், இறப்பைச் சந்திக்கவேண்டியதிருந்தாலும் கிறிஸ்துவுக்குச் *''சாட்சி பகர''* வேண்டும் என்பதே இங்கு பொருள்.

  வேறு வார்த்தைகளில்,
  ***இரத்த சாட்சி*** மரணத்திற்கோர் அழைப்பு இது!

  வாட்ச்மேன் நீ:

  ''எல்லாரும் இரத்தசாட்சிகளாய் மரிக்கத் தேவைப்படாது இருக்கலாம்; ஆனால் ஆயத்தமாயிருக்கவேண்டும்!''

  பெர்கமு சபைக்கான அடுத்த கடிதம் குறிப்பிடுவது —
  *''எனக்கு உண்மையுள்ள (இரத்த)சாட்சியான அந்திப்பா''*
  (வெளி 2:12,13)



- பிரபலமற்ற, பிரியமற்ற, இச்சத்தியத்தைப்பற்றிய பல்வேறு வேத வசனங்களைத் தொகுத்துப் பார்ப்போம் —

  தமது பரமேறுதலுக்குச் சற்று முன்னர் இயேசு சொன்ன வார்த்தைகளில் துவங்குவோம் —

  அப் 1:8 ... *''சாட்சிகள்''* = இரத்த சாட்சிகள் (கிரேக்கு)

  *''சாட்சிகள்''* என்பதற்குப் பதிலாக *''இரத்த சாட்சிகள்''* என்று இவ்வசனத்தை வாசித்துப் பாருங்கள்.
  *''வல்லமை''* = *dunamis / dynamite* (வெடிமருந்து)
  *''வல்லமை''* (power) என்பதைத் திரும்பத் திரும்பக் கூறிவிட்டு, *''சாட்சிகள்''* (pain) என்பதின் மூலப்பொருளைக் கவனியாது விட்டோம்.

  ***வேதனையைச் சகிக்கவே வல்லமை!***
  Power to endure pain!

  மற்றப்படி, சீடர்கள் ஏற்கனவே பிரசங்கித்துக்கொண்டும், பிசாசு விரட்டிக்கொண்டும் இருந்தனரே (மாற் 3:14,15)!

- தீமோத்தேயுவுக்குப் பவுல் இதனைத் தெளிவாக்குகிறார் —
  2 தீமோ 1:6-8 ... *''பயம் ... பலம் ... கட்டு ... தீங்கு''*

  பிலாத்துவுக்குமுன் நின்ற இயேசுவைச் சுட்டிக்காட்டி இவ்விளைஞனுக்குச் சவாலிடுகிறார் —

  1 தீமோ 6:12-14 ... *நல்ல அறிக்கை ...*
  யோ 18:37 ... *சாட்சி ... இதற்காகவே வந்தேன் ...*

  வெளிப்படுத்தலில் இயேசுவைப்பற்றிய முதல் அறிமுகம் —

  வெளி 1:5 ... (அ) ***உண்மையுள்ள*** *சாட்சி*
  (ஆ) *மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவர்*
  (இ) *இராஜாக்களுக்கு அதிபதி*

  (ஆ), (இ) பற்றி அதிகம் பேசுவோம்; (அ) விடப்படுகிறது.

- உண்மையுள்ள சாட்சியானவராகிய கிறிஸ்து நம்மை அவருக்கு உண்மையுள்ள சாட்சிகளாயிருக்க அழைக்கிறார் —

2 தீமோ 2:8-13

*பாடனுபவிக்கிறேன்* (வச 9) ... *கட்டுகள்*
*சகிக்கிறேன்* (வச 10)

*''உண்மையுள்ள'' வார்த்தை —*

*மரித்தால் ... பிழைத்திருப்போம் ...*
*சகித்தால் ... அரசாளுவோம் ...*
*மறுதலித்தால் (வெட்கினால்) ... மறுதலிப்பார் ...*
*உண்மையில்லாதவர்கள் ... உண்மையுள்ளவர் ...*

*''தம்மைத்தாமே மறுதலியார்!''*

அதாவது, தாம் யாரென்றும் என்ன செய்வாரென்றும்,
பிலாத்துவின்முன் அறிக்கையிட்டதுபோல்,
சொல்லிக்கொண்டேயிருப்பார்!

- ''இன்னல்'' (hardship) சகிக்கத்தான் அழைப்பு;
''இன்பம்'' (happiness) அனுபவிக்க அல்ல (வச 3)
வேறு வழியில்லை — *தீங்கனுபவிக்க ''வேண்டும்!''*

- இரத்த சாட்சிகளாய் மரிக்க ஆயத்தமாயிருக்க தமது ஊழியக்காலம் முழுவதும் இயேசு சீடரை ஆயத்தப்படுத்தினார் —

மத் 5:11-13,14 ...*உப்பு ... வெளிச்சம் ... நிந்தனை ... துன்பம்*
உப்பு — கரைய வேண்டும்.
வெளிச்சம் — எரிந்து உருகவேண்டும்.
*''எரிந்து பிரகாசிக்கும்'' விளக்கு!*

தனது தலையைப் பறிகொடுத்தவரின் சாட்சியுடன் புதிய ஏற்பாடு துவங்குகிறது (யோ 1:6-8)

- பன்னிருவரைப் பணிக்கும்போது இயேசு சொன்னவை —

***மத்தேயு 10:5-42***

இந்த 38 வசனங்களில் 24 துன்புறுத்தலைப் பற்றியது:
(வச 16-39)



இன்று சுவிசேஷப்பணியின் ***முறைகள்தான்*** பேச்சு;
சாட்சியாயிருப்பதற்கான ***கிரயம்*** பற்றிப் பேசுவது யாரோ?

இப்பகுதியை விபரமாய்ப் பார்ப்போம் —

☐ *''ஜெபாலயங்களில் வாரினால் அடி''* (வச 17)
— பின்வாங்கிய சபை செய்வது

☐ *''அதிபதிகள் & அரசர்கள்''* (வச 18) ... *''புறவினத்தார்''*
— கிறிஸ்தவரல்லாத அதிகாரிகள்

☐ *''ஒப்புவிப்பர் ... எதைப் பேசுவோம் ... ஆவியானவர்''*
(வச 19,20)

இது பிரசங்கபீடத்திற்கான ஆயத்தம் பற்றியல்ல,
தூக்குமேடைக்கான ஆயத்தம் பற்றியது (மாற் 13:9-11)

எதையும் நமது வசதிக்கேற்ப மாற்றிக்கொள்கிறோம் —
போதுமான பிரசங்க ஆயத்தமின்மைக்குப் போர்வையாக
இவ்வசனங்களைப் பயன்படுத்துகிறோம்!

ஆலோசனைச் சங்கத்தாருக்குமுன் கொண்டுவரப்பட்ட பேதுரு, யோவானுக்குத் தேவனருளிய ஞானம் —

அப் 4:13 ... *தைரியம்*

அப்படியே ஸ்தேவான்: 6:10 ... *ஞானம் ... ஆவி ...*

☐ *சகோதரன் ... சகோதரன் ... தகப்பன் ... பிள்ளைகள்*
மத் 10:21,22

குடும்பத்தில் எதிர்ப்புகள், போராட்டங்கள் —
எ.கா.) வச 34-36 ... *பட்டயம்* ... விரோதிகளாகும் இனத்தார்

இது கிறிஸ்தவரல்லாத குடும்பங்களுக்கு மட்டுமுரியதல்ல.
''தீவிரமான சீடத்துவத்தையே''
இப்பகுதி குறிப்பிடுகிறது (வச 37)

*''இறுதிவரை உறுதியாயிருப்பவனே இரட்சிக்கப்படுவான்''*
(வச 22)

பக்தியுள்ள வாழ்வு வாழ்வது மட்டுமல்ல,
சாகவேண்டியதிருந்தாலும் தீவிரமாய்ச் சாட்சிபகர்தல்.

□ *''என்னைப் பெயல்செபூல் என்றழைத்தால் ...''* (வச 24,25)
அப்படியே, *''பச்சை மரம் ... பட்ட மரம்''* (லூக் 23:31)

அதாவது, நமது பாடுகள் இயேசுவின் பாடுகளைவிட
அதிகமாயிருக்கலாம் —

ஒரே வித்தியாசம்:

அவர் நமது பாவங்களுக்காய் மரித்தார்;
நாம் அவருக்காய்ப் பாடனுபவிக்கணும்!

பின்வரும் வசனங்கள் குறிப்பிடுவது இதைத்தான் —

- *அவரது பாடுகளின் ஐக்கியம்* (பிலி 3:10)
- *கிறிஸ்துவின் பாடுகளை நிறைவேற்றுதல்*
(கொலோ 1:24,25)

(பாவங்களுக்காய் அல்ல,
திருச்சபை பூரணப்படுதலுக்காய்ப் பாடுபடுதல்)

- *பாளையத்திற்கு வெளியே அவரிடம் ...* (எபி 13:12,13)
*''பாளையம்''* = குடும்பத்தினர், நண்பர், ஐக்கியத்தினரின்
வசதியான வட்டம்

□ *''ஆன்மாவை அல்ல, உடலைக் கொல்வோர் ... தலைமுடி''*
(மத் 10:28-31)

''உடல் பாதுகாப்பு'' அல்ல,
''ஆன்ம இரட்சிப்பே'' இங்கு உத்திரவாதம்.

வாசியுங்கள்: லூக் 12:4-7; 21:17-19 ... *பொறுமையுடன்*
*''ஆத்துமாக்களைக்'' காத்துக்கொள்ளுங்கள்.*

பேதுருவைச் சிறையிலிருந்து ஆண்டவர் விடுவித்தார்;
யாக்கோபையோ வெட்டப்படவும்,
ஸ்தேவானையோ கல்லெறியப்படவும் விட்டுவிட்டார்.
பின்னர், பேதுருவும் கொல்லப்பட்டார்!



அப்போஸ்தலர் மடிந்த விதங்களைப் பாருங்கள் ...

— *அந்திரேயா:* "X" வடிவச் சிலுவையில் கட்டப்பட்டார்
— *பர்த்தொலொமேயு (நாத்தான்வேல்):* தோலுரிக்கப்பட்டார்
— *யோவானின் சகோதரன் யாக்கோபு:*
எருசலேமில் தலைவாங்கப்பட்டார்
— *கிலெயோப்பாவின் மகன் யாக்கோபு:*
கோபுரத்திலிருந்து தள்ளப்பட்டார்
— *ததேயு எனும் யூதா:* அம்பெறியப்பட்டுக் கொல்லப்பட்டார்
— *மத்தேயு:* வாளால் வெட்டப்பட்டார்
— *பேதுரு:* தலைகீழாய்ச் சிலுவையிலறையப்பட்டார்
— *பிலிப்பு:* தூக்கிலிடப்பட்டார்
— *செலோத்தே எனும் சீமோன்:* 129 வயதில்
சிலுவையிலறையப்பட்டார்
— *தோமா:* சென்னையில் ஈட்டியால் நாம் கொன்றோம்
— *மத்தியா:* கல்லெறிப்பட்டுத் தலை வாங்கப்பட்டார்
— *யோவான்:* நாடு கடத்தப்பட்டு இயற்கை மரணமடைந்தார்
— *பவுல்:* தலைவாங்கப்பட்டார்

இவர்களெல்லாரும் அவிசுவாசத்தோடும் நிச்சயமின்மையோடுமா
மரித்தார்கள்? இல்லை —
*''இவர்களெல்லாரும் **விசுவாசத்தினால்** மரித்தனர்''* (எபி 11:13)

விசுவாசத்தினால் நீதிமான் ''பிழைப்பான், மரிப்பான்!''

அவர்களது முழக்கம்: *''வாழ்வு கிறிஸ்து; மாள்வு லாபம்!''*
(பிலி 1:20,21) — சிறையிலிருந்து, துன்புறுத்தல்பற்றி.

மத்தேயு 10ஐத் தொடர்ந்து கவனிப்போம் —

□ ***பலாபலன்களைச்*** சுட்டிக்காட்டி,
இயேசு இந்தப் பணிப்புரையை முடிக்கிறார் (வச 40-42) —

பாடுபடுவோருக்குரிய பலாபலன்கள் அல்ல,
அவர்களோடு நின்று, அவர்களைத் தாங்கி, அவர்களுடன்
அடையாளப்படுத்திக்கொள்வோருக்கு உரியவை.

அழுத்திக் கூறுவதைக் கவனியுங்கள் — (வச 42)

*''பலனடையாது போவதில்லையென்று*
***மெய்யாகவே** உங்களுக்குச் சொல்லுகிறேன்!''*

துன்புறுத்தப்படுவோரோடு அடையாளப்படுத்திக்கொள்ளுதல் என்பது முக்கியமான திருமறைப் போதனை —

பிலி 1:7 ... *என் கட்டுகளில் பங்குள்ளவர்கள்*
அது நம்மையும் தைரியப்படுத்திவிடும் (வச 12-14)

ஆனால், துன்புறுத்தப்படுவோரோடு சேர்ந்து நிற்போர் குறைவு —

எ.கா.) 2 தீமோ 4:16 ... *ஒருவரும் என்னோடு நிற்கவில்லை*
அப்படியே, 2 தீமோ 1:15 ... *யாவரும் விலகினர்*
(ஒப்பிடுங்கள்: ஆமோஸ் 6:6 & ஒபதியா 10-12)

அதற்கு முக்கிய காரணம் பயம் —
எனவேதான் தீமோத்தேயுவுக்குப் பவுல் அனல் மூட்டினார்
2 தீமோ 1:7,8 ... *பயம் ... பலம்*

இப்பொழுது நமக்கு நாமே அனல்மூட்டுவோம் — எப்படி?
*''நினைப்பூட்டுதல்''* மூலம் (வச 6)

துன்புறும் சபையோடு சேர்ந்து நிற்க எழும்பிடுவீர்!

☐ பலாபலன்கள் குறித்துப் பேசுகையில் மூன்றுவித சாட்சிகளை இயேசு குறிப்பிடுகிறார் (மத் 10:41,42) —

1. *தீர்க்கதரிசி*
2. *நீதிமான்*
3. *சீடன்*

''தீர்க்கதரிசிகள்'' முதலாவது வருகின்றனர் —

ஏன்?

உபத்திரவப்படுதலுக்கும் துன்புறுத்தப்படுதலுக்கும் தலைசிறந்த எடுத்துக்காட்டுகள் அவர்கள்தான் —

யாக் 5:10 ... *தீர்க்கதரிசிகளைத் திருஷ்டாந்தங்களாய் ...*



மத் 5:12 ... *மிகுந்த பலன் ... தீர்க்கதரிசிகளை அப்படித்தானே துன்புறுத்தினார்கள்*
அப் 7:52 ... *தீர்க்கதரிசிகளில் யாரைத் துன்புறுத்தாது ...*
லூக் 11:49-51 ... ஆபேல் (**A**bel) முதல் சகரியா (**Z**echariah) வரை

அப்படியானால், நவீனத் தீர்க்கர்கள் பிரபலமாயிருப்பதெப்படி? பெரும்பாலானோர் மக்களுக்கு ''வேண்டியதை'' அல்ல, அவர்கள் ''விரும்புவதையே'' தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள்.

எ.கா.) உண்மையாய்த் தீர்க்கதரிசனம் உரைத்த எரேமியாவுக்கு
உதை — எரே 20:1,2

அவர் ஏன் பிரபலமடையவில்லை?
எரே 26:1,2,8,11

இஸ்ரவேலரில் அந்நாட்களில் தலையணைத் தீர்க்கர்கள்தான்
ஏராளம் — எரே 8:11,12

எரேமியா சிறையிலடைக்கப்பட்டார் —
சோறு கிடையாது, வெறும் சேறு!
எரே 38:6

ஆனாலும் அவரால் பேசாதிருக்க முடியவில்லை —
*''எலும்புகளில் எரிநெருப்பு''* (எரே 20:7-11)

லியோனார்டு ரேவன்ஹில்லின் தீர்க்கதரிசனச் செய்திகள் கேளுங்கள்.

| வாசியுங்கள்: | லியோனார்டு ரேவன்ஹில் எழுதியது |
|---|---|
| *எழுப்புதல் தாமதிப்பது ஏன்?*<br>*Revival God's Way*<br>*Meat for Men* | |

• திருச்சபையையும் திருச்செய்தியையும் பிரபலப்படுத்தப் பிசாசின் தந்திரமே சிலுவையற்ற கிறிஸ்தவம் —

எனவேதான் ... மத் 16:21-25
*''அப்பாலே போ, சாத்தானே!''*
சூழமைவு: பிரச்னைகளில்லாது சாட்சிபகருதல்

— இயேசுவின் பாடுகளை அருகிலிருந்து கவனித்த பேதுரு அவற்றை நன்கு புரிந்துகொண்டார்.

அவரது முதலாம் நிருபத்தில் இதுவே முக்கிய கருத்து —

1 பேது 1:11 ... *பாடுகள் ... மகிமை ...*
2:21 ... *பாடுபட்டார் ... முன்மாதிரி ...*
3:16,18 ... *வையப்படும்போது ... பாடுபட்டால்*
4:1,13 ... *பாடுகளில் பங்கேற்பு ...*
5:8,9 ... *எதிராளி ... பாடுகள் ...*

நாம் ''இரத்தம்'' (blood) சிந்தினால் பிறர் ''ஆசீர்வாதம்'' (blessing) பெறுவர்.

நாம் அடிக்கடி சொல்வது —

இரத்த சாட்சிகளின் இரத்தமே திருச்சபையின் வித்து.
இந்த வித்துக்கு ஊற்றவேண்டிய நீர் நமது இரத்தமே!

- ஆன்மீகப் போராட்டம் குறித்து எவ்வளவோ பேசப்படுகிறது; ஆனால், பாடுகள், இரத்தசாட்சி மரணம், இவையெல்லாம் வசதியாக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன —

☐ வெளி 12:11 ... *ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும்*
*சாட்சியின் வசனத்தினாலும் வெற்றி.*

*''மரணமென்றாலும் உயிரை நேசிக்கவில்லை''*
[என்பது எங்கே?

☐ ரோ 8:35-37
... *எந்நேரமும் கொல்லப்படுகிறோம் ... முற்றும் ஜெயம்*

*''ஜெயம்''* என்றால் நாம் கொல்லப்படமாட்டோமா?

இல்லை, *''மரணம்''* என்றாலும் இறையன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமுடியாது — வச 38,39

*''மரணமானாலும் ஜீவனானாலும்''* ...
முதலில் வருவது மரணம்!

ஜெயங்கொள்ளுதல் என்றால் விடுதலை என்பதல்ல;
மறுதலிக்க மறுத்து நிமிர்ந்து நிற்பதே அது ...



எ.கா.) தானி 3:17,18 ... *விடுவிப்பார் ... விடுவிக்காவிடினும்*
எபி 11:35-38 ... *மேலான உயிர்த்தெழுதலடைய*
*விடுதலை பெறச் சம்மதியாமல் ...*

உயிர்விடுதலின்றி உயிர்த்தெழுதல் ஏது?

எ.கா.) வெளி 2:10 ... சிறையடைப்பு முன்னறிவிப்பு;
விடுதலை வாக்குப்பண்ணப்படவில்லை.
ஆனால், *''**மரணம்** வரை'' உண்மை!*

இங்கு *''10 நாட்கள்''* எதைக் குறிப்பிடுகின்றன?

10 நாட்கள் என்பது பொதுவாகக் குறுகிய காலத்தைக் குறிக்கும் —

எ.கா.) ரெபெக்காள் ... *இன்னும் 10 நாட்கள்* ... (ஆதி 24:55)
எ.கா.) தானியேல் ... *10 நாட்கள் பாரும்* (தானி 1:12)

அதாவது, இன்றைய உபத்திரவத்தின் கால அளவை நித்தியத்தோடு ஒப்பிட்டால் அது ஒன்றுமேயில்லை!

- எனவேதான் பவுல் சொன்னது —
*''கொஞ்சக்காலம் ... இலகுவான உபத்திரவம்!''*
(2 கொரி 4:17-5:1)

- எனவேதான்,
துன்புறுத்தலை நிறுத்த அப்போஸ்தலர் ஜெபிக்கவில்லை;
தைரியத்தையே வேண்டினர், பெற்றனர் —
அப் 4:24-31 — இந்த ஜெபம் மனனம் செய்யத் தகுந்தது.

இன்றைய ஜெபங்கள் பல திருமறைக்கு எதிரானவை —
எ.கா.) நாம் பிசாசைக் கட்டவே முடியாது;
சாத்தான்தான் நம்மைச் சிறையிலடைக்க முடியும்! (வெளி 2:10).
நாம் அவனை ஆசனமிறக்க முடியாது (வச 13).

இறுதியான வெற்றி கர்த்தாதி கர்த்தா,
இராஜாதி இராஜாவினுடையது!

நாம் உண்மையாயிருந்தால் அவரது வெற்றியில்
பங்குபெறுவோம் — வெளி 17:14

— *துர்க்குணமுள்ள, பொல்லாத மனிதரிடமிருந்து விடுவிக்கப்பட* நாம் ஜெபிக்கலாம் — 2 தெச 3:1-4

இது *திருவசனம்* தடையின்றிப் *பரவவே* (வச 1).
''நமது'' பாதுகாப்புக்கு உத்திரவாதம் தரப்படவில்லை —

பிற வசனப் பகுதிகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.

— தியாகத்துடன் நாம் செய்யும் நற்செய்திப்பணிக்கான பலன்களும் *''துன்பங்களோடு''* சேர்ந்தே வரும்!

மாற் 10:28-30 ... *சகோதரர் ... சகோதரிகள் ...*
*வீடுகள் ... துன்பங்களோடு ...*

— பவுலைத் தேவன் தெரிந்தெடுத்ததின் முதற்காரணம்
அப் 9:15,16 ... *என் நாமத்திற்காய் எவ்வளவாய்ப்*
***பாடு**படவேண்டுமென்று காண்பிக்க ...*

இந்த ஆழ்ந்த உணர்வே பவுலைப் பற்றிப் பிடித்திருந்தது —

அப் 20:22 ... *ஆவியில் கட்டுண்டவனாய் ...*
:22-24 ... *நகர்கள்தோறும் சங்கிலிகள் ...*
*ஆவியானவரின் சாட்சி ...*
21:13 ... *கட்டப்பட மட்டுமல்ல,*
*கருக்கப்படவும் ஆயத்தம்!*

முதலாம் இரத்தசாட்சி மரித்த விதத்தைப் பவுல் பார்த்ததின் மூலம் இவ்விதத் தைரியத்திற்குத் தேவன் அவரை ஆயத்தம்பண்ணினார் —

அப் 22:19-21 ... *ஸ்தேவான் இரத்தம் ... அருகே நின்றேன்*

எருசலேமின் திரளைப் பார்த்து: *''உமது*
*இரத்தசாட்சியாகிய ஸ்தேவான்!''*

எனவேதான் நாமும் இரத்தசாட்சிகளின் சரிதைகளை வாசிக்கவேண்டும் —

எ.கா.) *Christian Martyrs of the World* by John Foxe



**ஓர் அழைப்பு**

இவ்வித ஆயத்தத்திற்கு அர்ப்பணிக்க
நம்மில் எத்தனைபேர் ஆயத்தம்?

இரத்தசாட்சிகளின் எண்ணிக்கை முற்றுப்பெறவில்லை —
வெளி 6:9-11

■

**பாடுவோம்:**

*அழகாய் நிற்கும் யார் இவர்கள்?*
*திரளாய் நிற்கும் யார் இவர்கள்?*
*சேனைத் தலைவராம் இயேசுவின் பொற்தளத்தில்*
*அழகாய் நிற்கும் யார் இவர்கள்?*

*ஒரு தாலந்தோ இரண்டு தாலந்தோ*
*ஐந்து தாலந்தோ உபயோகித்தோர்,*
*சிறிதானதோ பெரிதானதோ பெற்ற பணி*
*செய்து முடித்தோர்.*

*காடு மேடு கடந்து சென்று*
*கர்த்தர் அன்பைப் பகிர்ந்தவர்கள்,*
*உயர்வினிலும் தாழ்வினிலும்*
*ஊக்கமாக ஜெபித்தவர்கள்.*

*தனிமையிலும் வறுமையிலும்*
*லாசர் போன்று நின்றவர்கள்,*
*யாசித்தாலும் போஷித்தாலும்*
*விசுவாசத்தைக் காத்தவர்கள்.*

*எல்லா ஜாதியார் எல்லாக் கோத்திரம்*
*எல்லா மொழியும் பேசும் மக்களாம்,*
*சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்*
*சீர் போராட்டம் செய்து முடித்தோர்.*

*வெள்ளை அங்கியைத் தரித்துக்கொண்டு*
*வெள்ளைக் குருத்தாம் ஓலை பிடித்து*
*ஆர்ப்பரிப்பார் சிங்காசனம் முன்பு*
*ஆட்டுக் குட்டிக்கே மகிமை யென்று!*

— N. எமில் ஜெபசிங், 1941-2013

# 49

# இரண்டாம் வருகையின் வல்லமை

## Power of Second Coming

கிறிஸ்துவின் முதலாம் வருகையின்போது வெளிப்பட்டதுபோல் கடவுளின் வல்லமை எப்பொழுதும் வெளிப்பட்டதில்லை. ''உன்னத மானவரின் பலம்'' இயேசுவின் தாயாரின்மீது நிழலிட்டதாலேயே அவரது கன்னிப்பிறப்பு சாத்தியமாயிற்று (லூக் 1:35). இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ''கடவுளால் கூடாதது ஒன்றுமில்லை'' என்ற சத்தியம் முதன்முறையாகப் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டது (வச 37). கிறிஸ்துவின் மண்ணுலகப்பணியை வெடித்துக்கிளம்பிய தேவ வல்லமை என்றால் அது மிகையாகாது. தந்தையாகிய கடவுள் இயேசு வைப் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமல்ல, ''வல்லமையினாலும்'' அபிஷேகித்தார் (அப் 10:38). பிசாசுகள் அவருக்குமுன் நடுங்கின. வியாதிகள் அவரது வார்த்தையால் பறந்தன. இறந்தோரை அவர் கூவியழைத்தபோது மரணம் தனது பிடிப்பைத் தளர்த்தியது. மலை போன்ற பிரச்சனைகளும் அவருக்குமுன் பனிபோல் உருகின. அவரைக் கேட்டோரின் இதயங்களிலிருந்து இருட்டு அகன்றது. ஆழ்கடல் அவரது கட்டளைக்கு உடனே கீழ்ப்படிந்தது. அவரது இவ் வித வலிமைமிக்க செயல்களைக் கண்டோர், ''புதுமையானவற்றைக் கண்டோம்'' என வியந்தனர் (லூக் 5:26ஆ).

இறைமகன் விசாரணை செய்யப்பட்டு சித்திரவதை மரண மடைந்தபோதும், இறைவன்மை வெகுவாய் வெளிப்பட்டது. கெத் செமனே தோட்டத்தில் தம்மைப் பிடித்துக்கொண்டுபோக வந்திருந்த படைவீரரைப் பார்த்து, ''நீங்கள் தேடுகிறவர் நான்தான்'' என்றதும் அவர்கள் மல்லாக்க விழுந்தனர் (யோ 18:6). அவர் சிலுவையில் இறுதிமூச்சு விட்டபோது, தேவாலயத்தின் தொங்குதிரை மேலிருந்து கீழாக இரண்டாய்க் கிழிந்தது, பூமி அதிர்ந்தது, குன்றுகள் பிளந்தன, கல்லறைகள் பல திறந்தன! (மத் 27:50-52).



கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் திருவல்லமையின் மற்றொரு வெளிப்பாடாகும். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிவதும் அனுபவிப்பதுமே அப்போஸ்தலன் பவுலின் தணியாத் தாகமாயிருந்தது (பிலி 3:10). பழைய உடன்படிக்கையின் திருவாக்கு களைப் புதிய உடன்பாட்டின் வெளிச்சத்தில் புரிந்துகொண்ட அவர், ''கிறிஸ்துவே கடவுளின் வல்லமை'' என்று முடித்தார் (1 கொரி 1:24).

முதல் வருகையின்போது, இயேசு தமது விண்ணக மதிப்பையும் மகிமையையும் துறந்துவிட்டு சதையும் இரத்தமும் கொண்ட மனு வுடலில் வெளிப்பட்டார். இரண்டாம் முறை அவர் வரும்போதோ எல்லா வல்லமையோடும், மாட்சிமையோடும் தோன்றுவார்! முதல் வருகையிலேயே அவ்வளவு வல்லமை வெளிப்பட்டிருக்குமானால், இரண்டாம் வருகையைக் குறித்துக் கேட்கவேண்டுமா? கடவுளைப் பொறுத்தவரை பிந்தியது முந்தியதைவிட மேன்மையாகவே இருக் கும் (ஆகாய் 2:9). இனிதான் இருக்கிறது! The best is yet to be!

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் தெய்வீக வல்லமை எவ்விதம், எங்கெல்லாம் வெளிப்படுமென்று இங்கு படிப்போம் —

**1. உடல் மீட்கப்படுதல்** (Redemption of our bodies)

உலகில் பாவம் நுழையுமுன் வியாதி என்பதே கிடையாது. இன்று ஒவ்வொரு வியாதிக்கும் நேரடிக் காரணம் பாவந்தான் என்றில்லா விட்டாலும், மனிதன் பாவம் செய்யாதிருந்திருப்பானானால் அவன் ஒருபோதும் வியாதிப்பட்டிருக்கமாட்டான். எனவேதான் நமது பாவங் களோடு வியாதிகளையும் கிறிஸ்து தமது உடலில் சுமந்து தீர்த்தார். அவரது இரத்தம் நம்மைக் கழுவுகிறது என்றும் (1 யோ 1:7), அவரது காயங்கள் நம்மைக் குணமாக்குகின்றன என்றும் (1 பேது 2:24) திரு மறை போதிக்கிறது. இங்குதான் ஒரு கேள்வி எழும்புகிறது. கிறிஸ்து எனது பாவங்களைச் சுமந்துவிட்டாரெனில் அவரை விசுவாசித்த பின்னரும் நான் ஏன் இன்னும் பாவத்தோடு போராடிக்கொண்டிருக்க வேண்டும்? (1 யோ 1:9). அவர் எனது வியாதிகளைச் சுமந்துவிட்டா ரெனில் நான் ஏன் இன்னும் வியாதிகளால் பாடுபடவேண்டும்? (1 தீமோ 5:23). வேத ஆக்கியோன்களில் பவுலைத் தவிர வேறு யாரும்

இதற்குத் திருப்திகரமான பதிலைத் தந்ததாகத் தெரியவில்லை. அவர் இறையியல் நிபுணராயிருந்தும் வெறும் தத்துவம் பேசுபவர் அல்ல. வாழ்க்கையின் கடினமான கேள்விகளுக்கு விடைகாண அவர் தீவிர மாய்த் திருமறையை ஆராய்ந்து பார்த்து, அதற்குரிய வெளிப்பாடு களைப் பெற்றுக்கொள்ள ஜெபத்தோடும் பொறுமையோடும் கடவுளுக்குமுன் காத்திருந்தார். இதோ அவருக்குக் கிடைத்த விளக் கம்: ''இந்நாள்வரை படைப்பு அனைத்தும் ஒருங்கே பேறுகால வேதனையுற்றுத் தவிக்கின்றது என்பதை நாமறிவோம். படைப்பு மட்டுமல்ல, ஆவியானவரின் முதலாம் பலன்களைப் பெற்றுக் கொண்டுள்ள நாமும் ... நமது உடலானது மீட்கப்படும் நாளை எதிர் நோக்கிப் பெருமூச்சு விடுகிறோம்'' (ரோ 8:22,23).

செய்ய வேண்டியதையெல்லாம் இயேசு சிலுவையில் செய்து முடித்துவிட்டாரென்பது உண்மை. நமது பாவத் தண்டனைக்கான முழுக் கிரயத்தையும் அவர் செலுத்திவிட்டார். மீறுதலினால் மனுக் குலம் இழந்த அத்தனையையும் திரும்ப விலைகொடுத்து வாங்கி விட்டார். ஆனால் கல்வாரியின் பலன்களை முழுமையாய் அனுபவிப் பது ''இதுவரை'' சாத்தியமாகவில்லை (ரோ 8:22). இப்பொழுது நாம் ''முதல் கனிகளை'' மட்டும் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் ''தவித்துக்கொண்டுதானிருக்கிறோம்.'' நமது உடல்கள் பூரணமாய், நிரந்தரமாய்க் குணமாக்கப்பட இன்னும் காத்திருக் கிறோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போதுதான் நாம் அதைப் பெற்றுக்கொள்வோம். நமக்கு இப்பொழுது இருக்கும் உடல் மண்ணுலகைச் சேர்ந்தது, மாளும் தன்மையுள்ளது. இவ்வுடலில் வாழ்க்கை என்பது பிறப்பிலிருந்து இறப்பு நோக்கிச் செல்லும் பய ணம். உயிர்த்தெழுந்த கிறிஸ்து பெற்றுக்கொண்டதுபோல் அவரது வருகையில் நமக்கும் மகிமையானதொரு உடல் கொடுக்கப்படும். அவர் வரும்பொழுது நாம் இருந்தால், நாம் மறுரூபமாக்கப்படுவோம்; இறந்திருந்தால், உயிரோடு எழுப்பப்படுவோம். அது தெய்வீக வல்ல மையின் வெளிப்பாடாய் இருக்கும். கொரிந்து நகர் சபைக்குப் பவுல் அப்போஸ்தலன் இச்சம்பவங்களை வரிசைப்படுத்தி முன்னுரைத் தார் —



''இதோ, ஒரு மறைபொருளை உங்களுக்குச் சொல்கிறேன்: நாம் யாவரும் இறந்துவிடமாட்டோம்; ஆனால் இறுதி எக்காளம் முழங் கும்போது, ஒரு நொடிப்பொழுதில், கண்ணிமைக்கும் நேரத்தில், நாமெல்லாரும் மாற்றுரு பெறுவோம். எக்காளம் முழங்கும்போது இறந்தோர் அழிவற்றவர்களாய் உயிருடன் எழுப்பப்படுவர்; நாமும் மாற்றுரு பெறுவோம். ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியா மையை அணிந்தாகவேண்டும்'' (1 கொரி 15:51-53).

குடிமக்களில் எவருக்கும் வியாதியோ, உடலில் எந்தக் குறையோ இல்லாத ஒரு நாட்டைக் கற்பனை செய்து பாருங்கள்! இவ்வுலகி லுள்ள எந்தக் கண்டுபிடிப்பும் சக்தியும் இதைச் சாதிக்கமுடியாது. கடவுளின் வல்லமை அவரது குமாரனின் இரண்டாம் வருகையின் போது இதைச் சாத்தியமாக்கும். ''இனி இறப்பு இல்லை ... கவலை இல்லை ... கதறல் இல்லை ... வேதனை இல்லை!'' என்றொரு நாள் வரப்போகிறது (வெளி 21:4). அல்லேலூயா! கிறிஸ்தவச் சிந்தனைச் செம்மல் C.S. லூயி (1898-1963) என்பவர் இதை இப்படிச் சொன் னார்: ''மறுரூபமாக்கப்பட்ட நாம் நமது தெருக்களில் நடந்து வரு வதை நாமே பார்த்தாலும், நாமே நமது கால்களில் விழுந்து நம்மையே கும்பிடுமளவிற்கு நமக்குச் சோதனை வந்துவிடும்!''

அகிலவுலக மாநாடுகளுக்கு அனைத்துலகிலிருந்தும் பங்கு பெறுவோரைக் கொண்டுவர எவ்வளவு பணம், பலம், நேரம் செல வழிக்கவேண்டுமென்று அவற்றை நடத்துபவர்களுக்குத்தான் தெரி யும். கிறிஸ்துவை விசுவாசிக்கும் அனைவரையும் ஒரே இடத்தில் கூட்டுவதென்றால் அது சாதாரண காரியமா? தெய்வீக வல்லமையே அதைச் செய்ய முடியும்! இந்த நிகழ்வை இயேசு இவ்விதம் விளக் கினார்: ''மின்னல் கிழக்கில் தோன்றி மேற்கு வரை ஒளிர்வதுபோல, மனுமகனின் வருகையும் இருக்கும் ... வானில் மனுமகன் வருகை யின் அறிகுறி தோன்றும். அப்போது மிகுந்த வல்லமையோடும் மாட்சிமையோடும் மனுமகன் வான மேகங்கள்மீது வருவார் ... அவர் தமது தூதரைப் பெரிய எக்காளத்துடன் அனுப்புவார். அவர்கள் உல கின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை நான்கு திசைகளிலிருந்தும் அவரால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள்'' (மத் 24:27,30,31).

## உ. தூயோர் பூரணப்படுதல் (Perfection of Saints)

பரிசுத்தமாகுதலை மூன்று நிகழ்வுகளாய்ப் புரிந்துகொள்ளவேண்டும். முதல் நிகழ்வு ஒரு குறிப்பிட்ட வேளையில் கிட்டும் அனுபவம் (crisis); அடுத்தது நெடுகவே நடந்துகொண்டிருப்பது (process); முடிவானது மறுபடியும் ஒரு குறிப்பிட்ட வேளையில் நடப்பதாகும் (crisis). நாம் நீதிமான்களாக்கப்படும் வேளைதான் பரிசுத்தமாகுதலின் முதல்படி. பாவியொருவன் கடவுளிடம் திரும்பி சிலுவையில் கிறிஸ்து முடித்துவிட்டதை நம்பும்போது அது நிகழ்கிறது. அவன் அந்நேரமே உடனடியாய்த் தூய்மையாக்கப்படுகிறான். அவனது சொந்த நீதியாகிய கந்தையான உடைகளுக்குப் பதிலாக இரட்சிப்பின் அலங்கார ஆடைகள் அவனுக்கு அளிக்கப்படுகின்றன. கடவுளின் பார்வையில் அவன் இனிப் பாவியல்ல, அவருக்குப் பிரியமான குமாரனுக்குள் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிசுத்தன்! அப்பொழுதுதான் விழுந்துள்ள பனித்துளிகள் போலவும், பஞ்சு போலவும் அவன் சுத்தமாகிறான் (ஏசா 1:18). இதை ''நிலையின்படியான'' (positional) பரிசுத்தம் என்கிறோம். இது கடவுளுக்கு முன் நமது ''நிலையைக்'' (standing) குறிப்பிடுகிறது.

நீதிமானாக்கப்பட்ட வேளைமுதல் ''நடைமுறையான'' (practical) சுத்திகரிப்பு துவங்குகிறது. நீதிமானாக்கப்பட்ட விசுவாசியைக் கடவுள் நீதிமானாக நடந்துகொள்ள அழைக்கிறார். பரிசுத்தவான் பரிசுத்தமாய் நடக்கவேண்டும்! ''தூயோர் இன்னும் தூய்மையாகட்டும்'' (வெளி 22:11). நிலையின்படியான பரிசுத்தம் ஒரு சிலாக்கியம்; நடையின்படியான அல்லது நெடுகவே உண்டாகும் பரிசுத்தம் விசுவாசியின் பொறுப்பாகும். இதுவே கடவுளுக்குமுன் அவனது ''நடை'' (state) ஆகும்.

நடைமுறையாய்ப் பரிசுத்தமாக்கப்படும்போது நாம் பரிசுத்தத்தில் வளர்ந்துகொண்டேயிருக்கிறோம். பரிசுத்தத்திலிருந்து பரிசுத்தத்திற்குக் கடந்துசெல்கிறோம். ''நீதிமான்களுடைய பாதை நடுப்பகல் வரை அதிகமதிகமாய்ப் பிரகாசிக்கிற சூரிய ஒளி போலிருக்கும்'' (நீதி 4:18). இறைமகன் திரும்ப வருகையில் நீதியின் சூரியன் உச்சியிலிருந்து பிரகாசிக்கும். அப்பொழுது நாம் பரிசுத்தமாகுதலின் உச்சத்தை



எட்டுவோம். பரிசுத்தமாகுதலில் இந்தக் கடைசிக்கட்ட செயல் கடவுளின் வல்லமையால் மட்டும் நிகழ்வதாகும். இந்தச் சத்தியத்தை விவிலியம் மிகத் தெளிவாய் எடுத்தியம்புகிறது —

எல்லாவிதத் தீங்கானவற்றிலிருந்தும் தங்களை விலக்கிக் காத்துக் கொள்ளும்படித் தெசலோனிக்கேயாவிலுள்ள விசுவாசிகளைப் பவுல் அறிவுறுத்திய பின்னர், அவர்களுக்காகக் கிறிஸ்துவின் வருகையின் போது கடவுள் என்ன செய்யவிருக்கிறாரென்று குறிப்பிட்டு அவர்களை உற்சாகப்படுத்தினார்: ''அமைதி அருளும் கடவுள்தாமே உங்களை முற்றிலும் தூய்மையாக்குவாராக. அவரே நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து வரும்போது உங்களுடைய ஆவி, ஆன்மா, உடல் அனைத்தையும் குற்றமின்றி முழுமையாய்க் காப்பாராக'' (1 தெச 5:23). அதைத் தொடர்ந்து அவர் சொன்னது: ''உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர்; அவர் அப்படியே அதைச் செய்வார்'' (வச 24). வேறு வார்த்தைகளில் சொன்னால், நம்மைப் பரிசுத்தத்திற்கென்று அழைத்துள்ள கடவுள் அதை நம்மில் முற்றிலும் நிறைவேற்றுவார்! நம்மில் தூய்மையாக்கும் நற்செயலைத் தொடங்கியவர் கிறிஸ்து வரும்போது அது பூரணமாகும்வரை அதைச் செய்துகொண்டேயிருப்பார் (பிலி 1:5).

அநேக சக்திகளும் வல்லமைகளும் நமக்கு எதிராய்ச் செயல்பட்டுக் கடவுளுக்குமுன் தூய்மையாய் நடக்க நாம் எடுக்கும் முயற்சிகளில் நம்மை அதைரியப்படுத்தலாம். ஆனால் கடவுள் நமக்கென்று இருக்கும்போது, யார் நம்மை என்ன செய்யமுடியும்? ''தம்மால் முன்பே தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் தமது மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்கவேண்டுமெனக் கடவுள் முன்குறித்து வைத்தார். தாம் முன்குறித்துவைத்தோரை அவர் அழைத்திருக்கிறார்; தாம் அழைத்தோரை அவர் நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; நீதிமான்களாக்கப்பட்டோரை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்'' (ரோ 8:28-31). நான் ஒரு நாளில் இயேசுவைப் போலவே இருப்பேன் என்று நினைத்தால் ... அப்பப்பா! இச்சத்தியம் யோவானை எவ்வளவாய்ப் பரவசப்படுத்திற்று பாருங்கள்: ''என் அன்பார்ந்தவர்களே, நாம் ஏற்கனவே கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். கிறிஸ்து வரும்போது நாம்

எத்தன்மையராய் இருப்போம் என்று கற்பனைசெய்தும் பார்க்க முடியவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப் போல் இருப்போம்; ஏனெனில் அவர் இருப்பதுபோல் நாம் அவரைக் காண்போம்'' (1 யோ 3:2).

ஆண்டவரது வருகையில் பூரணப்படுத்தும் செயலானது தனித் தனியே விசுவாசிகளுக்கும் மொத்தமாகத் திருச்சபைக்கும் உரியது. திருச்சபையே கிறிஸ்துவின் மணமகள். அவள் புனிதமெனும் அலங் காரத்தில் பூரணமாயிருக்க அவர் வாஞ்சிக்கிறார். அவள் கறை திரையோ எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் தமக்குமுன் விளங்குமாறு தமது இரத்தத்தினாலும் வார்த்தையினாலும் அவளைக் கழுவியவண்ணமிருக்கிறார் (எபே 5:26,27). இன்றிருக்கும் திருச்சபை அன்றிருந்த திருச்சபையோ, இருக்கவேண்டியபடியான திருச்சபையோ அல்ல! சபையின் இன்றைய நிலையைக் கவனிக்குங்கால் நமக்குச் சோர்பும் எதிர்மறைச் சிந்தையும்தான் உண்டாகின்றன. ஆனாலும், கடவுளைப்போலவே நிச்சயமான அவரது வாக்குகளை நாம் நம்புவோம். கிறிஸ்துவின் வருகையின்போது, திருச்சபையானது பெந்தெகொஸ்தேயன்று பெற்றுக்கொண்ட வல்லமையைவிட அதிகமான வல்லமையை அனுபவிக்கப்போகிறது!

பரிசுத்தத்திற்கு இரு பக்கங்கள் உண்டு: ஒன்று கடவுளுக்குமுன் குற்றமற்றவர்களாய் நடந்துகொள்ளுதல்; அடுத்தது மனிதரோடுள்ள உறவுகளில் மாயமற்ற அன்பைக் காட்டுதல். ஒன்றில்லாமல் மற்றது முழுமைபெறாது (1 யோ 4:20ஆ). பரிசுத்தத்தில் வளருவதென்றால் இவை இரண்டிலும் முன்னேறுவதாகும். இவ்விரு பகுதிகளையும் எபிரெயர் நிருப ஆக்கியோன் மிக அழகாக இணைத்துள்ளார்: ''யாவ ருடனும் சமாதானமாயிருக்க முயலுங்கள்; தூய்மையை நாடுங்கள்; தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமுடியாது'' (எபி 12:14). எவ்வளவோ முயன்றும் நம்மில் பலரும் சகவுறவுகளில் தடுமாறு கிறோம். இரண்டாம் வருகையை அடுத்த குறிப்பான திருவாக்கு ஒன்றுண்டு: ''நீங்கள் எல்லாருக்காகவும் கொண்டுள்ள அன்பை ஆண்டவர் வளர்த்துப் பெருகச் செய்வாராக! இவ்வாறு ஆண்டவர்



இயேசு தமது தூயோர் அனைவரோடும் வரும்பொழுது, நம் தந்தை யாம் கடவுள்முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக!'' (1 தெச 3:12,13).

**3. உலகு நற்செய்திமயமாதல்** (Evangelisation of the world)

ஒலிவ மலையில் இயேசுவின் சீடர் அவரிடம், ''உமது வரு கைக்கும் உலக முடிவுக்கும் அறிகுறி என்ன?'' என்று கேட்டனர் (மத் 24:3). முடிவுக்கால அடையாளங்கள் பலவற்றை வரிசைப்படுத்திய பின்னர் அவர், ''உலகெங்குமுள்ள எல்லா மக்களினத்தாரும் ஏற்றுக் கொள்ளுமாறு விண்ணரசைப்பற்றிய இந்நற்செய்தி உலகமெங் கும் அறிவிக்கப்படும்; அதன்பின்பு முடிவு வரும்'' என்று முடித்தார் (வச 14).

தூயாவியானவர் சீடர்கள்மீது வந்திறங்கியபோது அவர்கள் பெற்ற விந்தையான அனுபவங்களுக்குச் சாதகமாய்ப் பேதுரு பேசுகையில் திருவாக்கினன் யோவேலை மேற்கோள்காட்டி, ''இறுதி நாட்களில் நான் மாந்தர் யாவர் மேலும் என் ஆவியைப் பொழிந்தருள்வேன் ... மேலே வானத்தில் அதிசயங்களையும் கீழே வையகத்தில் ... அடை யாளங்களையும் கொடுப்பேன். அப்பொழுது ஆண்டவரின் திருப் பெயரைத் தொழுது கொள்ளும் யாவரும் இரட்சிக்கப்படுவார்கள்'' என்றார் (அப் 2:17-21). ஆவியானவரின் வருகையில் துவங்கிய இறுதிக்கால அறுவடை ஆண்டவரின் வருகையை ஒட்டி முடிவான கட்டத்திற்கு வரும்.

தனக்குக் கொஞ்ச நேரம் மட்டும் உண்டென்று அறிந்துள்ள பிசாசு எப்பொழுதையும்விட அதிகச் சினத்தோடு இருக்கிறான் (வெளி 12:12). ஆத்துமாதாயகர் மற்றும் சுவிசேஷகருக்கு எதிராய்ச் செயல் பட நரகின் சக்திகள் யாவற்றையும் அவன் கிளப்பிவிடுகிறான். மிஷ னரிகளைத் துன்புறுத்தும்படி அதிகாரிகளை ஏவிவிடுகிறான். துன் புறுத்தல் என்பது எப்பொழுதுமே இருந்துதான் வந்திருக்கிறது; ஆனால் முடிவுக் காலத்தை நெருங்க நெருங்க அது அதிகரிக்கும் (மத் 24:9,10). சிமிர்னாவிலும் பிலதெல்பியாவிலும் இருந்த சபை களுக்குக் கிறிஸ்து அருளிய வாக்குகளை மிஷனரிச் சிந்தையுள்ள கிறிஸ்தோர் யாவரும் உரிமைபாராட்டலாம். ''உனக்கு வரவிருக்கும்

துன்பத்தைப்பற்றி அஞ்சாதே ... இதோ, எவரும் பூட்ட முடியாத கதவை நான் உனக்குமுன் திறந்து வைத்திருக்கிறேன் ... இதோ, விரைவில் வருகிறேன்'' (வெளி 2:10அ; 3:8அ,11அ). மிஷனரிப் பணியில் உலகெங்கும் ஓர் எழுச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த இருபது நூற்றாண்டுகளிலும் இவ்வளவு வேகமாகத் திருச்சபை வளர்ந்த தில்லை. கதிர்கள் இன்னும் அறுத்து முடிக்கப்படாததால் வயலின் சொந்தக்காரர் மாலை ஐந்து மணிக்குக்கூட அறுவடையாளர்களை அமர்த்துகிறார் (மத் 20:6,7). பெந்தெகொஸ்தேயை முன்மாரிக்கு ஒப்பிட்டால், கிறிஸ்துவின் வருகைக்குமுன் எல்லா வயல்களிலும் நல்ல விளைச்சல் உண்டாகும்படி நமக்குப் பெய்யப்போகும் மழையைப் பின்மாரி எனலாம் (சக 10:1). இந்தக் கடைசி மணி நேரத்தில் தூயாவியானவர் தமது வல்லமையை அசாதாரணமாய் வெளிக் காட்டுவார்.

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே பவுலின் வாழ்க்கையில் நற்செய்திப்பணிக்கு மிக முக்கியமான உந்துவிசையாய் இருந்தது. ஆண்டவரது வரவை விரும்பியதால் ஆத்துமாக்களின் இரட்சிப்பைப் பவுல் வாஞ்சித்தார். தனது குமாரன் தீமோத்தேயுவும் இதே ஆவியைப் பற்றிக்கொள்ள ஆசித்தார். கிறிஸ்துவின் பேராணையைத் தீமோத் தேயுவுக்கு நினைப்பூட்டுகையில் அவர் அடிக்கடி இரண்டாம் வருகையைக் குறிப்பிட்டார். எடுத்துக்காட்டாக, 1 தீமோத்தேயு 6:12-15, 2 தீமோத்தேயு 4:1,2 ஆகிய வசனங்களைப் பாருங்கள். மகா பெரிய உபத்திரவம் இன்னும் வரவில்லை எனினும், உலகின் நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளும் இன்னல்களும் ஏற்கனவே ஏராளம். இனிவரும் காலம் இருட்டாயிருக்கிறது. தலைவர்கள் தடுமாறுகிறார்கள். தனது தலையை நம்பிக்கையோடு உயர்த்தி நிற்கத் திருச்சபைக்கு மட்டுமே தகுந்த காரணம் இருக்கிறது. தங்கள் கடந்த கால மேன்மைகளைக் குறித்தே நாடுகள் வெறுமனே பெருமையடித்துக் கொண்டிருக்கின்றன; திருச்சபையோ தனது எதிர்கால மகிமையைக் குறித்து எதிர்பார்ப்போடு மேளம் கொட்டலாம்! காரணம் என்ன? தண்ணீரினால் கடல் நிறைந்திருப்பதுபோல் இம்மண்ணுலகு ஆண்டவரை அறிகிற அறிவினால் நிறையப்போகிறது! (ஏசா 11:9; ஆப 2:14).



பீஹார் மாநிலம் ஒரு காலத்தில் மிஷனரிகளின் கல்லறைத் தோட்டம் என்றழைக்கப்பட்டது. இன்றோ அது மிஷனரி இயக்கங்களின் திராட்சைத் தோட்டமாகிவிட்டது! அகிலவுலகத் திருச்சபையில் தினமும் 75000 பேர் புதிதாய்ச் சேர்க்கப்படுகின்றனர். சீனாவில் மட்டும் நாளொன்றுக்கு 30000 பேர் திருச்சபையில் இணைகின்றனர். 1900இல் ஆப்பிரிக்கக் கண்டத்தில் கிறிஸ்தவர்கள் 3 சதவீதம்தான்; இன்று அது 45 சதவீதத்திற்கு மேலாகிவிட்டது. கி.பி. 100இல் கிறிஸ்தவர்-கிறிஸ்தவரல்லாதோர் விகிதம் 1:360 என்றிருந்தது; இன்றோ அது 1:6தான்! இவையெல்லாம் தற்செயலாய் நடந்துவிட்டவையல்ல. இரண்டாம் வருகையை நெருங்க நெருங்க அகிலவுலக நற்செய்திப்பணி வேகமடையத்தான் செய்யும். கடவுளுடைய கோபம் மனிதர்மீது இறங்கிவிடாதபடி எலியாவின் ஆவியும் ஆற்றலும் பெற்றுள்ள திருச்சபை யாவரையும் கடவுளிடம் திரும்பும்படிக் கூவி, வருந்தி அழைக்கிறது (மல் 4:5,6).

**4. தீங்கு ஒழிக்கப்படுதல்** (Eradication of evil)

இயேசு கிறிஸ்துவின் முன்னோடியாகிய திருமுழுக்கினன் யோவான் அவரை அணையாத நெருப்பினால் பதரைச் சுட்டெரிக்கிறவரென அறிமுகம் செய்தார் (மத் 3:12). தமது வாழ்வில் இயேசு நல்லதை விரும்புவதோடு நின்றுவிடாது, தீயதை வெறுக்கவும் செய்தார் (எபி 1:9அ). பரிசுத்த ஆவியின் வல்லமையால் அவர் ''நன்மை'' செய்கிறவராயும், தீயவனிடமிருந்து மக்களை விடுவிக்கிறவராகவும் நடந்துதிரிந்தார் (அப் 10:38). ஆனாலும், தமது ஊழியக்காலத்தில் உலகிலுள்ள தீயவை அத்தனையையும் அவர் ஒழித்துவிடவில்லை. சாத்தான்தான் இவ்வுலகின் தீது நிறைந்த அமைப்புகளுக்கு அதிபதி என்று அவர் திரும்பத் திரும்பச் சொன்னார் (யோ 12:31; 14:30; 16:11). இயேசு சிலுவையிலறையப்பட்டு உயிர்த்தெழுந்த பின்னரும், ''உலகம் தீயவனுக்குள் கிடக்கிறது'' என்றார் திருத்தூதுவர் யோவான் (1 யோ 5:19). கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே தீயவற்றிற்குச் சாவு மணி அடிக்கும்.

ஆண்டவராகிய இயேசு அந்திக்கிறிஸ்துவைத் தமது வாயினால் ஊதி ஒழித்துவிடுவார்; அவரது தோற்றமே அவனை அழித்துவிடும் (2 தெச 2:8). தமது வருகையில் அவர் சாத்தானை மட்டுமல்ல,

அவனைப் பின்பற்றுகிறவர்களையும் அதம்பண்ணுவார். ''நம் ஆண்டவர் இயேசு வல்லமையுள்ள தமது தூதரோடு வானிலிருந்து வெளிப்படும்போது அவர் தீப்பிழம்பின் நடுவே தோன்றி... இயேசு வைப்பற்றிய நற்செய்தியை ஏற்காதவர்களைத் தண்டிப்பார்'' (2 தெச 1:7-10). இறைமகனது பாதங்களை முத்தம் செய்யாத எவரும் அவரது கோபக்கனலுக்குப் பலியாகுவர் (சங் 2:12).

ஓராயிரமாண்டு சாத்தான் கட்டப்பட்டு இனிமேல் நாடுகளை வஞ்சிக்காதபடி ஆழங்காணமுடியாத படுகுழியில் வைக்கப்படுவான் (வெளி 20:1-3). முடிவாக, அவனுக்காகவும் அவனது தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கும் தீக்கடலில் அவன் தள்ளப்படுவான். அங்கு அவர்கள் என்றென்றுமாய் வாதிக்கப்படுவார்கள் (வெளி 20:10). சாத்தான் இல்லாத ஓரிடத்தை யோசித்துப்பாருங்கள்! ஏதேன் தோட்டத்தில்கூட அவன் புகுந்து விளையாட முடிந்தது. இன்று ஊழல் இல்லாத ஒரு நாடு இல்லை. தவறாத அரசு எதுவுமில்லை. மன்னாதி மன்னரும் கர்த்தாதி கர்த்தருமானவரது வல்லமையும் அதிகாரமுமே தீங்கே இல்லாத, நேர்மை ஒன்றே இருக்கும், ஓர் அமைப்பை ஏற்படுத்த முடியும்!

பிசாசின் ஆவிகள் அரசுத் தலைவர்களை அவர்கள் ஒன்றுசேர்ந்து கடவுளை எதிர்க்க ஏவிவிடும். இதுதான் ''அர்மகெதோன் யுத்தம்'' என்பது (வெளி 16:14-16). ''அவர்கள் ஆட்டுக்குட்டியானவரோடு போர்புரிவார்கள். ஆனால், அவர் அவர்களை வென்றுவிடுவார் ... ஏனெனில் ஆட்டுக்குட்டியானவர் ஆண்டவர்களுக்கெல்லாம் ஆண்டவர், அரசர்களுக்கெல்லாம் அரசர்!'' (வெளி 17:14). இப்பாமுலகின் தீய அமைப்பாகிய பாபிலோன் எனப்படுவது விழுந்துவிடும், விழுந்துபோகும்! (வெளி 18:2). விண்ணிலிருந்து ஒரு சத்தம் எழும்: ''அல்லேலூயா! மீட்பும் மாட்சியும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன. ஏனெனில் அவரது தீர்ப்புகள் உண்மை உள்ளவை, நீதியானவை!'' (வெளி 19:1).

இன்று நான் உயர்த்தப்பட்டால் பெருமையடைகிறேன்; அடுத்தவர் மதிப்பு பெற்றால் பொறாமை கொள்ளுகிறேன். கிறிஸ்து திரும்ப வந்து தமது பரிசுகளை வழங்கும்போது, பரிசு வாங்குபவன்



பெருமைப்படமாட்டான், அதைப் பார்ப்போர் பொறாமைப்படமாட்டார்! விண்ணகம் என்பது ஆச்சரியங்கள் நிறைந்த இடமாயிருக்கும். முந்தியவர் பிந்தியவராயும், பிந்தியவர் முந்தியவராயும் இருப்பர் (லூக் 13:30). அங்கு இருப்பர் என நான் எதிர்பார்த்த பலர் அங்கு இருக்கமாட்டார்; இவர் அங்கே போகவே மாட்டார் என்று நான் ஒதுக்கிக்கட்டிய பலர் அங்கு இன்புற்றிருப்பர் (மத் 21:31). ஆனாலும், அது பாவ வாசனையே இல்லாத இடமாதலால் எந்த ஆச்சரியமும் நம்மைத் துக்கத்தில் ஆழ்த்தாது! என்னே இடம்! *''அங்கு எப்போ சேர்வேனோ''* என்று சும்மாவா பக்தன் பாடினான்?

புதிய வானையும் புதிய பூமியையும் உருவாக்கும்படிக் கடவுள் இப்பொழுதுள்ள வானங்களை எரித்தழிப்பார், பஞ்சபூதங்களை வெந்துருகிப்போகச் செய்வார் (2 பேது 3:12). அப்பொழுதுதான் நாம் ''நமது தேவன் பட்சிக்கும் அக்கினியாயிருக்கிறார்'' என்பதற்குப் பொருளைப் புரிந்துகொள்வோம் (எபி 12:29).

**5. வெற்றி கொண்டாடப்படுதல்** (Celebration in Heaven)

கடவுளின் சர்வ வல்லமைபற்றிய நாடகத்தின் இறுதிக் காட்சிக்கு நாம் இப்பொழுது வருகிறோம். யோவானுக்குக் கிடைத்த வெளிப்பாட்டிலிருந்து அவர் சொன்னவை: ''பின்னர் பெருந்திரளான மக்களின் கூச்சல் போலும் பெரும் வெள்ளத்தின் இரைச்சல் போலும் பேரிடி முழக்கம் போலும் எழுந்த பேரொலியைக் கேட்டேன். அது சொன்னது: அல்லேலூயா! நம் கடவுளாகிய ஆண்டவர் ***எல்லாம் வல்லவர்;*** அவர் ஆட்சி செலுத்துகின்றார்'' (வெளி 19:6). கொண்டாட்டத்திற்கான அழைப்பு இது. ''மகிழ்வோம், பேருவகையுடன் அவரைப் போற்றிப் புகழ்வோம். ஏனெனில் ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்து வந்துவிட்டது. மணமகளும் விழாவுக்கு ஆயத்தமாய் இருக்கிறாள்'' (வச 7).

யுக முடிவில் வரவிருக்கும் இந்தக் குதூகலக் கொண்டாட்டம் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னரே எதிர்பார்க்கப்பட்டது. தீர்க்கன் ஏசாயா முன்னறிவித்தது: ''சர்வ வல்ல ஆண்டவர் இந்த மலையில் எல்லா மக்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார். அது கொழுத்த ... விருந்தாயிருக்கும் ... அவர் சாவை வெற்றியாய் விழுங்

கிப்போடுவார்! எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைப்பார் … அக்காலத்தில், 'இதோ, இவரே நமது தேவன்; இவருக்காய்க் காத்திருந்தோம்; இவர் நம்மை இரட்சித்தார்' என்று சொல்லப்படும்'' (ஏசா 25:6-9).

இன்றைக்குக் கிறிஸ்துவை விசுவாசிக்கும் நாம் விண்ணுலகில் அவரோடு அமர்ந்திருப்பது ''ஆன்மீகக்'' கண்ணோட்டத்தில்தான் (எபே 2:7). ஆனால் வரவிருக்கும் காலங்களில் ''நிசமாகவே'' கடவுள் அவரது ஒப்புயர்வற்ற அருள்வளத்தை நமக்கு எடுத்துக்காட்டி ''எழுத்தின்படி'' அதை அனுபவிக்கச் செய்வார் (வச 6). ''தம்மிடம் அன்புகொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை; செவிக்கு எட்டவில்லை; மனித உள்ளமும் அதை அறியவில்லை'' (1 கொரி 2:9). அதில் கொஞ்சத்தைத் தூயாவியானவர் நமக்கு வெளிப்படுத்தியுள்ளது உண்மைதான் (வச 10). ஆனால் விண்ணகக் கொண்டாட்டத்தில் நாம் சேர்ந்து மகிழும்போது, ''இதில் பாதிகூட எங்களுக்குச் சொல்லப்படவில்லையே'' என்போம். எனவேதான் எபேசு நகர்க் கிறிஸ்தவர்களுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கையில் பவுல் குதூகலங்கொண்டு ஆண்டவருக்குத் துதிமாலை சூடினார்: ''நம்முள் வல்லமையோடு செயல்படுபவரும் நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் மேலாக அனைத்தையும் செய்ய வல்லவருமான கடவுளுக்கே திருச்சபையில் கிறிஸ்து இயேசு வழியாகத் தலைமுறை தலைமுறையாக என்றென்றும் மாட்சி உரித்தாகுக, ஆமென்!'' (எபே 3:20,21).

புத்தகங்களுக்கெல்லாம் புத்தகம் ''ஆண்டவராகிய இயேசுவே, வாரும்'' என்ற ஜெபத்துடன் ஏன் முடிகிறது என்று இன்னுமா ஆச்சரியப்படுகிறீர்கள்?

*குதூகலம் நிறைந்த நன்னாள் நடுவானில் தோன்றிடுமே,*
*இதுவரை இருந்த துன்பமில்லை, இனி என்றுமே ஆனந்தம்!*
*தளகர்த்தனாம் இயேசு நின்று யுத்தம் செய்திடுவார் நன்று*
*அவர் ஆவியினால் புதுப் பெலனடைந்து ஜெயக் கீதங்கள் பாடிடுவோம்!*



# 50

# விக்டரி டானிக்

## Victory Tonic

திருவாக்குகள் நிறைந்த புத்தகமே திருவிவிலியம். பிரசங்க வேந்தன் என்றழைக்கப்பட்ட C.H. ஸ்பர்ஜன் (1834-1892) அவர்கள் சொல்லியுள்ளது: ''திருமறையை ஒரு காசோலைப் புத்தகத்திற்கு (cheque book) ஒப்பிடலாம்; உங்கள் தேவைக்கேற்பப் பரலோக வங்கியில் பணம் எடுத்துக்கொள்ளலாம்.'' பைபிளிலுள்ள ஒவ்வொரு புத்தகத்திலிருந்தும் வெற்றிக்கடுத்த வாக்குகள் தெரிந்தெடுக்கப்பட்டு இங்கு பட்டியலிடப்பட்டுள்ளன —

***ஆதியாகமம்***

''தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து, உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்'' (3:15).

***யாத்திராகமம்***

''கர்த்தரைப் பாடுவேன்; அவர் மகிமையாய் வெற்றி சிறந்தார் … கர்த்தரே யுத்தத்தில் வல்லவர்; கர்த்தர் என்பது அவருடைய நாமம் … கர்த்தாவே, உமது வலது கரம் பகைவனை நொறுக்கிவிட்டது'' (15:1,3,6).

***லேவியராகமம்***

''உங்களில் ஐந்து பேர் நூறு பேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறு பேர் பதினாயிரம் பேரைத் துரத்துவார்கள்; உங்கள் சத்துருக்கள் உங்களுக்கு முன்பாகப் பட்டயத்தால் விழுவார்கள்'' (26:8).

***எண்ணாகமம்***

''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை; இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை; தேவன் என்னென்ன செய்தார் என்று கொஞ்சக் காலத்தில் யாக்கோபையும் இஸ்ரவேலையும் குறித்துச் சொல்லப்படும்'' (23:23).

### *உபாகமம்*

''இன்று உங்கள் சத்துருக்களுடன் யுத்தம் செய்யப் போகிறீர்கள்; உங்கள் இருதயம் துவளவேண்டாம்; நீங்கள் அவர்களைப் பார்த்துப் பயப்படவும் வேண்டாம். உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடு யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடு போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும்'' (20:3.4).

### *யோசுவா*

''நியாயப்பிரமாணப் புத்தகத்தில் எழுதியிருக்கிறதையெல்லாம் கைக்கொள்ளவும் செய்யவும் உறுதிகொண்டிருங்கள் ... உங்களில் ஒருவன் ஆயிரம் பேரைத் துரத்துவான்; உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொன்னபடி, அவர்தாமே உங்களுக்காக யுத்தம்பண்ணு வார்'' (23:6,10).

### *நியாயாதிபதிகள்*

''கர்த்தர் கிதியோனை நோக்கிப் பார்த்து, ''உனக்கு இருக்கும் இந்தப் பலத்தோடு போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா?'' என்றார் (6:14).

### *ரூத்*

''உன் செய்கைக்கு ஏற்ற பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளை யிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டை களின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக'' (2:12).

### *1 சாமுவேல்*

கோலியாத்தைப் பார்த்துத் தாவீது சொன்னது: ''கர்த்தர் பட்ட யத்தினாலும் ஈட்டியினாலும் இரட்சிக்கிறவர் அல்ல ... யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப் பார்'' (17:47).

### *2 சாமுவேல்*

''கர்த்தாவே, உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தண்டுவேன் ... வெண்கல வில்லும் என் புயங்களால் வளையும்படி, என் கைகளை யுத்தத்திற்குத் தேவன் பழக்குவிக்கிறார்'' (22:30,35).



### *1 இராஜாக்கள்*

அரசன் சாலொமோனின் ஜெபம்: ''தேவனாகிய கர்த்தாவே, உமது மக்கள் தங்கள் எதிரிகளோடு யுத்தம்பண்ணப் புறப்படும் போது, ... அவர்கள் உம்மை நோக்கி விண்ணப்பம்பண்ணினால், பரலோகத்திலிருக்கும் தேவரீர் அவர்கள் விண்ணப்பத்தையும் வேண்டுதல்களையும் கேட்டு, அவர்கள் நியாயத்தை விசாரிப்பீராக'' (8:44,45).

### *2 இராஜாக்கள்*

''பயப்படாதே, அவர்களோடிருப்பவர்களைவிட நம்மோடிருப் பவர்கள் அதிகம்'' (6:16).

### *1 நாளாகமம்*

''கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவை; விண்ணிலும் மண்ணிலும் உள்ள வையெல்லாம் உம்முடையவை; கர்த்தாவே, இராஜ்யமும் உம்மு டையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்'' (29:11).

### *2 நாளாகமம்*

''நீங்கள் திடன்கொண்டு தைரியமாயிருங்கள்; அசீரியா இராஜா வுக்கும் அவனோடிருக்கும் ஏராளமான கூட்டத்திற்கும் பயப்படா மலும் கலங்காமலும் இருங்கள்; அவனோடிருக்கிறவர்களைவிட நம்மோடிருக்கிறவர்கள் அதிகம். அவனோடிருப்பது மாம்ச புயம், நமக்குத் துணை நின்று நமது யுத்தங்களை நடத்த நம்மோடிருக் கிறவர் நமது தேவனாகிய கர்த்தர்தானே'' (32:7,8).

### *எஸ்றா*

''தேவனுடைய கரம் தம்மைத் தேடுகிறவர்கள் எல்லார்மீதும் அவர்களுக்கு நன்மையாக இருக்கிறது; அவரது வல்லமையும் அவரது கோபமும் அவரைவிட்டு விலகுகிறவர்கள் எல்லார்மீதும் இருக்கிறது'' (8:22).

### *நெகேமியா*

''நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்'' (4:20).

### *எஸ்தர்*

''யூதரின் எதிரிகள் அவர்களை மேற்கொள்ளலாம் என்று நம்பினார்களே; அந்நாளில்தானே யூதரானவர் தங்கள் எதிரிகளை மேற்கொள்ளும்படிக் காரியம் மாறுதலாய் முடிந்தது'' (9:1).

### *யோபு*

''நீதிமான் தன் வழியை உறுதியாய்ப் பிடிப்பான்; சுத்தமான கைகளுள்ளவன் மேலும் மேலும் பலத்துப்போவான்'' (17:9).

### *சங்கீதம்*

''தமது மக்களை ஒடுக்கும்படி கர்த்தர் ஒருவருக்கும் இடங் கொடாமல், அவர்கள் பொருட்டு ராஜாக்களைக் கடிந்துகொண்டு, 'நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், எனது தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்' என்றார்'' (105:14.15).

### *நீதிமொழிகள்*

''கர்த்தரின் நாமம் பலத்த கோட்டை; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்'' (18:10).

### *பிரசங்கி*

''இரும்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற் போனால், அதிகப் பலம் செலவழிக்கவேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் சரியாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்'' (10:10).

### *உன்னதப்பாட்டு*

''என் நேசர் என்னை விருந்துசாலைக்கு அழைத்துக்கொண்டு போனார்; என்மீது பறந்த அவரது கொடி நேசமே'' (2:4).

### *ஏசாயா*

''பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன் ... நீ தண்ணீர் களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மீது புரளுவதில்லை; நீ நெருப்பில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; நெருப்பு உன்மேல் பற்றியெரி யாது'' (43:1,2).

### *எரேமியா*

''இதோ, உன்னை இன்று அரண்சூழ் நகராகவும், இரும்புத் தூணாகவும், வெண்கலச் சுவராகவும் ஆக்கினேன். அவர்கள் உனக்கு எதிராக யுத்தம்பண்ணுவார்கள்; ஆனாலும் உன்னை மேற்கொள்ள மாட்டார்கள்; உன்னை இரட்சிக்கும்படி நான் உன்னுடன் இருக் கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (1:18,19).



### *புலம்பல்*

''நாம் நிர்மூலமாகாதிருப்பது கர்த்தருடைய கிருபையே; அவரது இரக்கங்களுக்கு முடிவில்லை. அவை காலைதோறும் புதியவை; உமது உண்மை பெரிதாயிருக்கிறது'' (3:22,23).

### *எசேக்கியேல்*

''நான் அவர்களை எகிப்து நாட்டிலிருந்து அழைப்பேன் என்றும், அவர்களுக்காக நான் பார்த்துவைத்ததும், பாலும் தேனும் ஓடுகிறதும் எல்லா நாடுகளின் சிங்காரமுமான நாட்டில் அவர்களைக் கொண்டு வந்துவிடுவேன் என்றும் நான் ஆணையிட்டேன் (20:6).

### *தானியேல்*

''வானத்தின்கீழ் எங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளு கையும் மகத்துவமும் உன்னதமானவரின் பரிசுத்தவான்களாகிய மக்களுக்குக் கொடுக்கப்படும்; அவரது ராஜ்யம் நித்திய ராஜ்யம்; அனைத்து அதிகாரங்களும் அவரைச் சேவித்து அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்'' (7:27).

### *ஓசியா*

''அசீரியா எங்களை இரட்சிப்பதில்லை; நாங்கள் குதிரைகள்மீது ஏறமாட்டோம்; எங்கள் கைகளின் செயல்களைப் பார்த்து, 'நீங்கள் எங்கள் தேவர்கள்' என்று இனிச் சொல்லமாட்டோம்; எங்கு திரும்பு வதென்று தெரியாதவன் உம்மிடம் இரக்கம் பெறுகிறான்'' (14:3).

### *யோவேல்*

''கர்த்தர் தமது சேனைக்குமுன் சத்தமிடுவார்; அவரது பாளையம் மகா பெரிது; அவரது வார்த்தையின்படிச் செய்ய வல்லமையுள்ளது; கர்த்தருடைய நாள் பெரிதும் மகா பயங்கரமுமாயிருக்கும்; அதைச் சகிக்கிறவன் யார்?'' (2:11).

### *ஆமோஸ்*

''விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை நான் அந்நாளில் திரும்ப எடுப்பித்து, அதின் திறப்புகளை அடைத்து, அதில் பழுதாய்ப்போன தைச் சீர்ப்படுத்தி, பூர்வ நாட்களில் இருந்ததுபோல அதை நிலைப் படுத்துவேன் என்று இதைச் செய்கிற கர்த்தர் சொல்லுகிறார்'' (9:12).

### *ஒபதியா*

''சீயோன் மலையில் தப்பியிருப்பார் உண்டு, அவர்கள் பரிசுத்த மாயிருப்பார்கள்; யாக்கோபின் வம்சத்தார் தங்களது சுதந்தரங்களைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் ... ஏசாவின் மலையை நியாயந்தீர்க்க இரட்சகர்கள் சீயோன் மலையில் வந்தேறுவார்கள்; அப்பொழுது ராஜ்யம் கர்த்தருடையதாய் இருக்கும்'' (வச 17,21).

### *யோனா*

''இரட்சிப்பு கர்த்தருடையது'' (2:9ஆ).

### *மீகா*

''தடைகளை நீக்கிப்போடுகிறவர் அவர்களுக்குமுன் நடந்துபோகிறார்; அவர்கள் தடைகளை நீக்கி, வாசல் வழியாய் நுழைந்து கடந்து போவார்கள்; அவர்கள் ராஜா அவர்களுக்கு முன்பாகப் போவார்; கர்த்தர் அவர்கள் முன்னிலையில் நடந்துபோவார்'' (2:13).

### *நாகூம்*

''கர்த்தர் எரிச்சலுள்ளவரும், நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் கடுங்கோபமுள்ளவர்; அவர் தமது சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர்; அவர் தமது பகைவருக்காய்க் கோபத்தை வைத்துவைக்கிறவர்'' (1:2).

### *ஆபகூக்*

''ஆண்டவராகிய கர்த்தர் எனது பலம்; அவர் என் கால்களை மான் கால்கள் போலாக்கி, உயரமான தலங்களில் என்னை நடக்கப்பண்ணுவார்'' (3:19).

### *செப்பனியா*

''கர்த்தராகிய ஆண்டவருக்குமுன் மவுனமாயிருங்கள்; கர்த்தருடைய நாள் அருகிலிருக்கிறது; கர்த்தர் ஒரு பலியை ஆயத்தம் பண்ணி, அதற்கு விருந்தாளிகளையும் அழைத்திருக்கிறார்'' (1:7).

### *ஆகாய்*

''சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; கொஞ்சக்காலத்துக்குள் இன்னும் ஒரு தரம் நான் விண்ணுலகையும், மண்ணுலகையும், கடலையும், பாலை நிலத்தையும் அசையப்பண்ணுவேன். அனைத்து இனங்களையும் அசையப்பண்ணுவேன்; அனைத்து இனத்தவராலும் விரும்பப்பட்டவர் வருவார்'' (2:6,7).



### *சகரியா*

''சேனைகளின் கர்த்தர் யூதா வம்சத்தாராகிய தமது மந்தையை விசாரித்து, அவர்களை யுத்தத்தில் தமது சிறந்த குதிரையாக நிறுத்துவார் ... அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார்; அவரது நாமமும் ஒன்றாயிருக்கும்'' (10:3ஆ; 14:9).

### *மல்கியா*

''என் நாமத்திற்குப் பயந்திருக்கும் உங்கள்மீது நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்; நீங்கள் வெளியே புறப்பட்டுப்போய், கொழுத்த கன்றுகளைப்போல் வளருவீர்கள்' (4:2).

### *மத்தேயு*

''அவர் நியாயத்திற்கு வெற்றி கிடைக்கப்பண்ணும்வரை, நெரிந்த நாணலை முறிக்காமலும், மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்'' (12:20).

### *மாற்கு*

''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்கள்: என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான எதையும் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; நோயாளிகள்மீது கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சுகமடைவார்கள்'' (16:17,18).

### *லூக்கா*

''பயப்படாதே, சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்'' (12:32).

### *யோவான்*

இயேசு சொன்னது: ''இப்பொழுதே இவ்வுலகிற்கு நியாயத்தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இவ்வுலகின் அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான். நான் மண்ணிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது, எல்லாரையும் என்னிடம் இழுத்துக்கொள்வேன்'' (12:31,32).

### *அப்போஸ்தலர்*

பவுலிடம் இயேசு சொன்னது: ''அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினால் பாவ மன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படி, அவர்கள் இருளை

விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடம் திரும்பும்படிக்கும், நீ அவர்களது கண்களைத் திறக்கும் பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடம் அனுப்புகிறேன்'' (26:18).

### *ரோமர்*

''சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின்கீழ் நசுக்கிப்போடுவார். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களுடன் இருப்பதாக'' (16:20).

### *1 கொரிந்தியர்*

''மனிதருக்கு நேரிடும் சோதனையே அல்லாது வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திறனுக்கு மிஞ்சி நீங்கள் சோதிக்கப்பட அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடு அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான வழியையும் உண்டாக்குவார்'' (10:13).

### *2 கொரிந்தியர்*

''என் கிருபை உனக்குப் போதும்; பலக்குறைவில் என் பலம் பூரணமாய் விளங்கும்'' (12:9அ).

### *கலாத்தியர்*

''நீங்கள் குமாரராய் இருக்கிறதால், அப்பா, பிதாவே என்று கூப்பிடும்படியாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல், குமாரனாயிருக்கிறாய்; நீ குமாரனானால் கிறிஸ்து மூலம் தேவனது சுதந்தரவாளியாகவும் இருக்கிறாய்'' (4:6,7).

### *எபேசியர்*

''தேவன் இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தமது மிகுந்த அன்பினால், அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடன் உயிர்ப்பித்தார்; கிருபையினால் இரட்சிக்கப்பட்டீர்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடம் வைத்த தயவினால், தமது கிருபையின் மகா மேன்மையான செல்வத்தை வருங்காலங்களில் விளங்கச்செய்ய, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவருடன் எழுப்பி உன்னதங்களில் அவருடன் உட்காரவும் செய்தார்'' (2:4-7).

### *பிலிப்பியர்*

''தேவன் எல்லாவற்றிற்கும் மேலாகக் கிறிஸ்து இயேசுவை உயர்த்தி, இயேசுவின் பெயரில் விண்ணவர், மண்ணவர், கீழுலகோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்துவே கர்த்தர் என்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லாப் பெயருக்கும் மேலான பெயரை அவருக்குத் தந்தருளினார்'' (2:9-11).



### *கொலோசெயர்*

''நீங்கள் கிறிஸ்துவுடன் எழுந்ததுண்டானால், தேவனது வலது பக்கத்தில் கிறிஸ்து அமர்ந்திருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் ... நமது ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நீங்களும் அவரோடு மகிமையில் வெளிப்படுவீர்கள்'' (3:1,4).

### *1 தெசலோனிக்கேயர்*

''கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானிலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக மேகங்கள்மீது அவர்களோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடன் இருப்போம்'' (4:16,17).

### *2 தெசலோனிக்கேயர்*

''அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே செயல்படுகிறது; ஆனாலும் தடை செய்கிறவர் நடுவிலிருந்து நீக்கப்படுமுன் அது வெளிப்படாது. அவர் நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தமது வாயின் சுவாசத்தினால் அழித்து, தமது வருகையின் பிரசன்னத்தினால் நாசம்பண்ணுவார்'' (2:7,8).

### *1 தீமோத்தேயு*

''நீயோ, தேவனுடைய மனிதனே, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு; நித்திய ஜீவனைப் பற்றிக்கொள் ... நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும்வரை, நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும் குற்றமில்லாமலும் கைக்கொள்ளும்படி உனக்குக் கட்டளையிடுகிறேன். அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தமது காலங்களில் வெளிப்படுத்துவார் ... நித்தியானந்த ஏக சக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமான அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்'' (6:11-16).

### *2 தீமோத்தேயு*

''கர்த்தர் எல்லாத் தீமையிலிருந்தும் என்னை இரட்சித்து, தமது பரம இராஜ்யத்தை அடையும்படிக் காப்பாற்றுவார்; அவருக்குச் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்'' (4:18).

### *தீத்து*

''நாம் நம்பியிருக்கும் ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மகிமையான பிரசன்ன மாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி தேவ கிருபை யானது நமக்குப் போதிக்கிறது'' (2:13).

### *பிலேமோன்*

''நான் சொல்லுகிறதிலும் அதிகமாய்ச் செய்வீர் என்று அறிந்து, இதற்கு நீர் இணங்குவீர் என்று நிச்சயித்து, உமக்கு எழுதியிருக் கிறேன் ... நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உமது ஆவியுடன் இருப்பதாக. ஆமென்'' (வச 21,25).

### *எபிரெயர்*

''சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்குமுன் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தமது சித் தத்தின்படிச் செய்ய உங்களைச் சகலவித நற்செயலிலும் சீர்பொருந் தினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றும் மகிமை உண்டா வதாக. ஆமென்'' (13:20,21).

### *யாக்கோபு*

''என் சகோதரரே, நீங்கள் பலவிதச் சோதனைகளில் அகப்படும் போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண் டாக்கும் என்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள் ... கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள் ... கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமும் உள்ளவராயிருக்கிறாரே'' (1:2,3; 5:7,11).

### *1 பேதுரு*

''கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடனுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, திடப் படுத்தி, பலப்படுத்தி நிலைநிறுத்துவாராக'' (5:10).



### *2 பேதுரு*

''தேவனது வாக்குப்படியே நீதி குடிகொண்டிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகும் என்று காத்திருக்கிறோம் ... ஆதலால் பிரியமானவர்களே, அக்கிரமக்காரருடைய வஞ்சகத் திலே நீங்கள் இழுக்கப்பட்டு உங்கள் உறுதியிலிருந்து விலகி விழுந்துபோகாதபடி எச்சரிக்கையாயிருந்து, நமது கர்த்தரும் இரட் சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்'' (3:13,17,18).

### *1 யோவான்*

''பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகிலிருக்கிறவனிலும் உங்களிலிருக் கிறவர் பெரியவர்'' (4:4).

### *2 யோவான்*

''உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக் கவனமாயிருங்கள்'' (வச 8).

### *3 யோவான்*

''பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லா வற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்'' (வச 2).

### *யூதா*

''வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நி தானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவரு மாகிய நமது இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்ல மையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக'' (வச 24,25).

### *வெளிப்படுத்தல்*

''இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும் அவரது கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கின்றன; இரவும் பகலும் நமது தேவனுக்கு முன்பாக நமது சகோதரர்மேல் குற்றம் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றம் சாட்டுகிறவன் தாழத் தள்ளப்பட்டுப்போனான் ... இவைகளைச் சாட்சியாக அறிவிக்கிறவர்: 'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்' என் கிறார். ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்!'' (12:10; 22:20).

# ஆன்மீகப் போராட்டப் பொன்மொழிகள்
## Quotes on Spiritual Warfare

1. அண்ட சராசரத்திலும் நடுநிலையானது எதுவும் கிடையாது; ஒவ்வொரு சதுர அங்குலத்தையும், ஒவ்வொரு அரை நொடியையும் கடவுள் சொந்தங்கொண்டாடுகிறார், சாத்தான் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறான். *— C.S. Lewis*

2. நீங்கள் எத்தனை ஆலயங்கள் கட்டுகிறீர்கள் என்பதைப்பற்றிப் பிசாசுக்குக் கவலையில்லை; அவற்றை வெதுவெதுப்பான பிரசங்கிமாராலும் மக்களாலும் நிரப்பிவிட்டால் அவனுக்குப் போதும். *— Charles Spurgeon*

3. தேவனுக்கு நம்மால் பயன் கூடக் கூட, நம்மீது சத்துருவின் தாக்குதலும் கூடும். *— Zac Poonen*

4. சாத்தான் உங்களைக் கெடுக்க முடியாவிடில், எப்பொழுதும் குடுகுடுவென்று ஓட வைப்பான். *— Adrian Rogers*

5. தேவனுடைய பிள்ளைகளிடம் பாவம் இருக்கிறது என்பதால் அல்ல, அவர்களிடம் கிருபை இருக்கிறது என்பதாலேயே சாத்தான் அவர்களைச் சோதிக்கிறான். அவர்களிடம் கிருபை இல்லையேல் பிசாசு அவர்களைத் தொந்தரவு செய்யமாட்டான். சோதிக்கப்படுவது கடினமானது எனினும், ஏன் சோதிக்கப்படுகிறோம் என்றறிவது ஆறுதல். *— Thomas Watson*

6. திருமறையைத் தவறாய் வியாக்கியானிப்பது நமதாண்டவரின் சுவிசேஷத்தை மனிதனது சுவிசேஷமாக மாற்றிவிடுகிறது; இன்னும் மோசமாக அதைப் பிசாசின் செய்தியாக்கிவிடுகிறது. *— Jerome*

7. தங்களது மனச்சாட்சி தங்களைக் குற்றப்படுத்தும்போது அதைக் கவனித்து நடக்க விசுவாசிகள் இணங்கும் அதே வேளையில் சத்துருவின் குற்றச்சாட்டையும் அடையாளங்காண அவர்களுக்குத் தெரியவேண்டும். *— Watchman Nee*



8. நமது பாதையில் வைக்கோலைப் பிசாசு தூவி அதை ஒரு மலையென்று நம்மை நம்பச் செய்கிறான்; ஆனால் பிசாசின் மலைகளெல்லாம் புகை மண்டலம்தான்; அவற்றை நெருங்கிக் கடக்க வரும்போது அங்கு ஒன்றுமே இருக்காது. *— D.L. Moody*

9. விசுவாசிகளும், அதிலும் குறிப்பாக ஊழியரும், ஜெபத்தை அசட்டைபண்ணப் பிசாசானவன் தன்னால் முடிந்ததையெல்லாம் செய்வான். பிரசங்கம் எவ்வளவு கவர்ச்சியாயிருந்தாலும், ஆராதனை எவ்வளவு அலங்காரமாயிருந்தாலும், ஆயரது வீடு சந்திப்பு ஊழியம் எவ்வளவு கிரமமாயிருந்தாலும், ஜெபம் அசட்டை பண்ணப்படுமானால் அவனது அரசுக்கு ஆபத்தில்லை. *— Andrew Murray*

10. ஜெப ஆவிக்கு எதிராய்ப் போராட ஆகாயத்து அதிகாரப் பிரபு தனது சேனைகளையெல்லாம் அனுப்பி வைக்கிறான். *— Andrew Bonar*

11. நான் பிசாசுக்குப் பயப்படுவதில்லை. எனக்குத் தெரியாத மல்யுத்தம் அவனுக்குத் தெரியுமாதலால் அவன் என்னைச் சமாளிக்க முடியும். ஆனாலும் நான் யாரோடு இணைந்திருக்கிறேனோ அவரை அவன் மேற்கொள்ள முடியாது. அவரது சிந்தையும் தன்மையும் என்னில் இருப்பதால் என்னை அவன் மேற்கொள்ளுவதும் சுலபமல்ல. *— A.W. Tozer*

12. படைக்கப்பட்டவற்றைத் தேவனது வார்த்தை அன்பினால் நியாயந்தீர்க்கிறது; பிசாசு சொல்லுவதோ அவர்களைப் பொறாமையினாலும் வெறுப்பினாலும் நியாயந்தீர்க்கிறது. *— Dietrich Bonhoeffer*

13. நடத்தைக் கேடு அல்லது ஊழல் போன்றவற்றைவிடப் பிசாசின் தூண்டுதலால் ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதாலேயே அநேகச் சபைகள் சின்னாபின்னமாகின்றன. அடுத்தவர்மீது குற்றம் கண்டுபிடிப்பதே ஓர் ஊழியம் என்று உயர்த்தப்படுமளவு சமுதாயம் சீர்குலைந்திருக்கிறது. *— Francis Frangipane*

14. சிறிய துவாரங்கள் இருந்தாலே அவற்றின் வழியே கொடிய காற்றுகள் நுழைந்துவிடுவதுபோல, கவனியாது விட்ட சில

பகுதிகளின் வழியாகவே பிசாசு ஆக்கிரமித்துவிடுவான். இவை யெல்லாம் சிறிய காரியங்கள்தானே என்று நாம் நினைப்பதுதான் பெரிய சோதனைகளில் விழ வழிவகுக்கும். — *John Wesley*

15. பிசாசு சிறிய குற்றத்தைக் குணமாக்குவதுபோல் காட்டிப் பெரிய காயம் ஏற்படுத்திவிடுவான். — *C.S. Lewis*

16. சோம்பேறியின் கைகளைப் பிசாசு எப்படியாவது குறும்பும் சேட்டையும் பண்ணச் செய்துவிடுவான். — *Isaac Watts*

17. இரட்சிப்பின் கனியாக அல்லது விளைவாகவே நற்குணம் என்பதைப் பிசாசு மாற்றி நற்குணத்தினாலேயே இரட்சிப்பு எனும் சுவிசேஷத்தைப் பரப்பி வருகிறான். — *A.W. Pink*

18. பிற கிறிஸ்தவர்களோடுள்ள சகவாசத்தை விசுவாசியொருவன் துண்டித்துக்கொள்ளும்போது பிசாசுக்குப் புன்முறுவல் வருகிறது. விசுவாசியாகிய அவன் திருமறையைத் தியானிப்பதை நிறுத்தும்போது பிசாசுக்கு ஒரே சிரிப்பு. அவன் ஜெபிப்பதை நிறுத்தும்போது பிசாசு ஆனந்தத்தால் ஆர்ப்பரிக்கிறான். — *Corrie Ten Boom*

19. கஞ்சத்தனம் பண்ணுகிறவனின் அலமாரியே பிசாசுக்குப் புகலிடம். — *Thomas Fuller*

20. மனிதரைப் பாவத்திலேயே தூங்கவைப்பதுதான் பிசாசுக்குக் கைவந்த கலை என்பது அநேகருக்குத் தெரிவதில்லை. தூங்கும் பாவியை நாம் எழுப்பிவிட்டால் நமக்கு எதிராய்ப் பிசாசு எவ்விதம் பல்லைக் கடிப்பான் தெரியுமா? — *Catherine Booth*

21. இல்லத்தைக் காத்துக்கொள்ள தெய்வ பயம் இருக்கும்போது சத்துருவானவன் உள்ளே நுழைய வழியே இல்லை. — *Francis of Assissi*

22. ஜெபிக்க விடாமல் கிறிஸ்தவர்களைத் தடுப்பதே பிசாசின் பிரதான நோக்கங்களில் ஒன்று. ஜெபமில்லாத வேத ஆராய்ச்சி, ஜெபமில்லாத ஊழியம், ஜெபமில்லாத மார்க்கம், இவையெல்லாம் அவனைச் சற்றும் பாதிக்காது. ஜெபமில்லாத நமது உழைப்பைப் பார்த்துச் சிரிக்கிறான், நமது அறிவைப் பார்த்துக் கேலிபண்ணுகிறான்; நாம் ஜெபிக்க ஆரம்பித்துவிட்டாலோ நடுங்குகிறான். — *Samuel Chadwick*



23. போராட்டம் முடிந்தது, வெற்றி கிடைத்துவிட்டது என்றெண்ணிச் சற்றுக் கவலையீனமாய் இருக்கும்போதுதான் சத்துருவானவன் எனக்குப் பெரும் கேடு விளைவித்துள்ளான். — *David Brainerd*

24. நமது வாழ்விலும் பணியிலும் தேவன் மகிமையாய் வெற்றி சிறக்கவேண்டும் என்று விரும்புவதும் வாஞ்சிப்பதுமே ஜெபம் என்பது. எவ்வளவுதான் உழைத்தாலும் முடிவான வெற்றியைக் கொண்டுவருவது ஜெபமே. — *G. Campbell Morgan*

25. நாத்திகம் அல்லது மூட நம்பிக்கை என்று இரண்டாகத்தான் உலகைப் பிசாசு பிரிக்கிறான். — *George Herber*

26. சாத்தானுக்கும் அற்புதங்கள் உண்டு என்பதை நாம் நினைவிற்கொள்ளவேண்டும். — *John Calvin*

27. பிசாசுக்கு நீங்கள் சேவை செய்தால் அவன் உங்களுக்குக் கொடுக்கும் மிகப் பெரிய பரிசு நரகமே. — *Billy Sunday*

28. தேவன் உங்களை உயர்த்தும்போது பிசாசு உங்களைக் கீழே தள்ள முடியாது. — *Woodrow Kroll*

29. பிசாசுக்கும் அவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் உண்டு. — *Thomas Carlyle*

30. பாவத்திற்குத் தந்தை பிசாசு; அதற்குத் தோழன் வெட்கம்; அதற்குச் சம்பளம் மரணம். — *Thomas Watson*

31. எதிரியை அடையாளங்காணுவதே வெற்றிக்கு முதல் படி. — *Corrie Ten Boom*

32. கிறிஸ்து எனக்கு வெகு அருகில் இருக்கும்போதுதான் சாத்தான் மிக விறுவிறுப்பாய் இருக்கிறான். — *Robert Murray McCheyne*

33. பிசாசுக்கு எதிராய்ப் போர் தொடுத்து அல்ல, தமது அழைப்பிற்கு அடிபணிந்ததின் மூலமாகவே இயேசு அவனைக் கெத்செம

னேயிலும் கொல்கொதாவிலும் தோற்கடித்தார். அவனைக் கடிந்துகொள்ள ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் வெற்றி வேந்தராகிய இயேசு தமது மரணத்தின் மூலம் சரித்திரம் காணா வெற்றியடைந்தார். *— Francis Frangipane*

34. உங்களது ஆன்மீகப் பசி அவ்வளவு அதிகமாய் இருப்பதாலும், மன்றாட்டு ஜெபத்தில் உங்கள் ஆர்வம் அவ்வளவு பெரிதாய் இருப்பதாலும், ஆன்மீகப் போராட்டம் அவ்வளவு கடினமாய் இருப்பதாலும், உடலுக்கடுத்த தேவைகளை ஒதுக்கி வைத்து விட்டு உங்களை ஜெபத்திலும் திருமறைத் தியானத்திலும் முழுக்க முழுக்க ஈடுபடுத்திக்கொள்ள உணவைத் தவிர்ப்பதே திருமறைக்கு ஏற்ற உபவாசம். *— Wesley L. Duewel*

35. எங்கே ஓர் ஆலயம் கட்டப்படுகிறதோ அதற்கருகில் பிசாசு ஒரு சிற்றாலயத்தைக் (Chapel) கட்டிவிடுவான். *— Martin Luther*

36. நம்மில் எவரையும்விடப் பிசாசு தேர்ந்த இறையியலன் என்றிருந்தாலும் அவன் இன்னும் பிசாசாகவே இருக்கிறான். *— A.W. Tozer*

37. நாம் சாத்தானுக்கு நண்பர்களல்ல என்பது வெளிப்படை. இவ்வுலக அரசர்களைப்போலவே அவனும் தனது சொந்தக் குடிமக்களுக்கு எதிராய்ப் போர் தொடுக்க மாட்டான். அவன் நம்மைத் தாக்குகிறான் என்பதே நமது மனதை நங்கூரம் போன்ற நம்பிக்கையால் நிரப்பவேண்டும். *— J.C. Ryle*

38. ஒருபோதும் பிசாசுடன் வாதாடாதிருங்கள். *— Rick Warren*

39. மீனுக்குப் பிடித்தமான புழுவையே சாத்தான் தனது தூண்டிலில் வைப்பான். *— Thomas Adams*

40. பிசாசிடம் அழகான ஆப்பிள் பழங்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது. ஆனால் அவையெல்லாம் உள்ளே புழு வைத்து அழுகியவை. பழத்தைக் கடித்த பின்னர்தான் அது தெரியும். *— John R. Rice*

41. பிசாசை நீங்கள் பிரியப்படுத்திவிட்டால் அவன் நல்லவனாகவே இருப்பான். *— Thomas Fuller*



42. நமது கண்கள் மற்றும் நமது மனது வழியாகவே கவர்ச்சிகளைப் பிசாசு நமக்குள் அனுப்பி வைப்பான். *— Smith Wigglesworth*

43. தங்களது நித்தியத்தைக் குறித்து நினைக்க அவர்கள் சாகுமுன் இன்னும் எவ்வளவோ காலம் இருக்கிறதென்று மக்களை நம்ப வைப்பதே சாத்தானின் அரும் பெரும் சாதனை. *— John Owen*

44. தாழ்மையுள்ளவனே பிசாசுக்குத் தூரமாவான். *— Jonathan Edwards*

45. தன்னை ஆயத்தப்படுத்தாமல் பிரசங்கத்தை மட்டுமே ஆயத்தப் படுத்தும் பிரசங்கியைப் பிசாசுக்கு அதிகம் பிடிக்கும். *— Vance Havner*

46. தானியம் விளைவதைப் போன்றே எழுப்புதல் ஓர் அற்புதம். வெல்லுவோம் அல்லது வீழ்வோம், அல்லது வென்று வீழ் வோம், என்று முன் நிற்கும் துணிந்த கட்டைகள்மீதுதான் எழுப்புதல் அக்கினி விண்ணிலிருந்து விழும். ''தேவனுடைய இராஜ்யம் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணு கிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.'' *— Charles Finney*

47. நீங்கள் வெற்றி நோக்கிப் போராடவில்லை; வெற்றியில் நின்று கொண்டு போராடுகிறீர்கள். யுத்தத்தில் ஏற்கனவே வெற்றி கண்டாயிற்று. *— Tony Evans*

48. பரலோக இராஜ்யத்தின் திறவுகோல்கள் திருச்சபைக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. பாதாளத்தின் திறவுகோல்கள் திருச் சபைத் தலைவராம் கிறிஸ்துவிடம் இருக்கின்றன. நரலோகைக் கொள்ளையாடவும் பரலோகை நிரப்பவும் என்னே சாத்தியம்! *— R. Stanley*

49. பிசாசை அடையாளங்காட்ட இதோ வந்திருக்கிறேன்: அவன் ஒரு பொய்யன்! *— T. D. Jakes*

50. பிசாசினால் அதிகம் தேடப்படும் நபர்களின் பட்டியலில் இடம் பெறவேண்டுமென்பதே எனது தணியா தாகம். *— Leonard Ravenhill*

# வசன அட்டவணை Scripture Index

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையுள்ள புத்தகங்களில் ஆன்மீகப் போராட்டத்திற்கடுத்த வசனங்களின் அடிப்படையில் தெளிவானதொரு போதனையை இப்புத்தகம் வழங்குகிறது. பல்வேறு காரியங்களைப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயும் 50 அத்தியாயங்கள் இங்குண்டு. இவ்வட்டவணையை நாங்கள் தயாரிக்கும்போது 2250 வசனக் குறிப்புகள் எடுத்தாளப்பட்டிருப்பது எங்களை வியப்பில் ஆழ்த்தியது! பைபிளிலுள்ள ஒரு புத்தகம்கூட விடப்படவில்லை! கிறிஸ்துவை இராஜாவாய்ச் சித்தரிக்கும் இராஜ்யத்தின் சுவிசேஷமாகிய மத்தேயுவிலிருந்துதான் அதிகமான வசனக் குறிப்புகள் எடுக்கப்பட்டிருப்பது சுவாரஸ்யமானது. இச்சுவிசேஷத்திலிருந்து 219 வசனக் குறிப்புகள் உண்டு. 133 வசனக் குறிப்புகளுடன் நடபடிகள் புத்தகம் அடுத்தும், 99 வசனக் குறிப்புகளுடன் வெளிப்படுத்தல் புத்தகம் அதற்கடுத்தும் வருகின்றன. தர்க்கரீதியாய் இது சரிதானே? வேறெந்த வசனத்தையும்விட அதிகமாய் எடுத்தாளப்பட்டிருப்பது 1 யோவான் 4:4, *''உலகில் இருப்பவனிலும் உங்களில் இருப்பவர் பெரியவர்!''* எவ்வளவு உற்சாகம், என்னே ஊக்கம்! தேவனுடைய வார்த்தை மூலமாகவும், கிறிஸ்துவின் அதிகாரம் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மூலமாகவும் நாம் சாத்தானை எவ்விதம் மேற்கொள்ள முடியும் என்று நடைமுறையில் கற்றுக்கொள்ள இந்நூல் உதவும்.


***ஆதியாகமம்***
**1:1-5,14-18**—46
**அத். 2**—51
**2:15**—54
**2:16**—59
**2:16,17**—55,158
**2:16-18**—229
**2:25**—58
**அத். 3**—51
**3:1**—8,12,18,79,103,218,
**3:1-4**—75 [298,338
**3:1-5**—151
**3:4,5**—15
**3:5**—248,264
**3:5,6**—12
**3:5,22**—142
**3:6**—60
**3:8**—57
**3:8-11**—135
**3:12**—56
**3:13**—60
**3:15**—329,394
**6:3**—23
**11:3**—206
**12:12**—55
**13:14,15**—314
**14:14**—272
**14:18-23**—95
**15:6**—179
**18:17-19**—179
**21:2**—185
**22:14**—134
**22:17**—358
**24:55**—378
**24:60**—358
**25:26-34**—205
**அத். 39-41**—45
**39:5-7**—55
**39:7-12**—39
**45:4,5**—54
**45:5,8**—324

***யாத்திராகமம்***
**அத். 7,8**—14,158
**8:18,19**—14
**14:13,14**—350
**15:1,3,6**—394
**15:23-26**—135
**15:26**—168,181,184
**அத். 17**—312
**17:8-12**—155
**17:15**—137
**20:1-17**—178
**20:5**—330
**20:8-11**—132
**25:14**—206

***லேவியராகமம்***
**25:1-5**—132
**26:8**—230,394
**26:33-35**—179

***எண்ணாகமம்***
**11:14,15**—202
**அத். 12**—170
**13:33**—21
**14:9**—21
**அத். 20,21**—146
**23:10**—201
**23:21-24**—146
**23:22,23**—332
**23:23**—137,157,304,307, [394
**32:6,23**—232
**32:23**—360

***உபாகமம்***
**1:21**—142
**1:29-31**—351
**3:21,22**—351
**8:11-17**—236
**11:24**—314
**13:1-3**—158
**18:9-12**—115
**20:3,4**—395
**22:11**—206
**25:17,18**—87
**28:1-14**—272
**28:58,59**—170
**29:29**—115,143,158,238
**32:1,2**—253
**32:10**—78

***யோசுவா***
**1:3**—314
**1:9**—142
**2:9**—22
**3:5**—360
**அத். 6**—311
**6:5**—121
**அத். 7**—302
**7:10-12**—24
**7:21**—24
**10:5**—230
**10:6-8,10,12-14,40,42**—351
**10:7,29,31,34,36,38,40-42** [—230
**23:6,10**—395
**23:10**—352

***நியாயாதிபதிகள்***
**5:8**—232
**6:14**—395
**6:23,24**—138
**9:50-57**—201
**14:6**—14

***ரூத்***
**2:12**—395

***1 சாமுவேல்***
**1:10,18**—155
**2:17**—360
**3:13**—360
**4:5,21**—360
**6:2,7**—206
**7:15-8:3**—208
**13:22**—232
**15:1**—82
**15:22**—120
**15:23**—82
**16:7**—236
**17:37**—352
**17:45**—66
**17:45-47**—352
**17:47**—395
**18:6-9**—208
**22:1,2**—233
**23:2,4**—124
**30:8**—124
**31:4**—201

***2 சாமுவேல்***
**2:1**—124
**5:19,23**—124
**12:8,9**—60
**17:23**—201
**22:30,35**—395

***1 இராஜாக்கள்***
**8:12**—194
**8:44,45**—396

**16:16-20**—201
**19:4**—202
<u>*2 இராஜாக்கள்*</u>
**6:15**—20
**6:15-17**—160
**6:16**—20,396
**6:16,17**—70
**6:17**—21,182
**13:14,20**—183,199
**13:14,20,21**—180
**20:1-5**—174
**20:5,7**—176
<u>*1 நாளாகமம்*</u>
**10:4**—201
**13:7-10**—206
**15:11-15**—206
**19:8-13**—230
**19:10-13**—125
**21:1**—9
**28:20**—142
**29:11**—396
<u>*2 நாளாகமம்*</u>
**7:14**—321
**16:7-12**—176
**அத். 20**—137
**20:1,12**—353
**20:13-17,19-22**—353
**20:21**—121
**32:7,8**—396
**32:7,8,14,20,21**—353
<u>*எஸ்றா*</u>
**8:22**—396
<u>*நெகேமியா*</u>
**2:8,18,19**—357
**4:1,7,8**—130
**4:6-9,20,21**—322
**4:8,9**—354
**4:17**—119
**4:19,20**—119
**4:20**—354,396
**6:2,3,10-12**—130
**6:9-11**—137
**8:10**—131,275
<u>*எஸ்தர்*</u>
**9:1**—396
<u>*யோபு*</u>
**1:6**—75
**1:9,11**—9
**1:10**—22,23
**1:11,22**—22
**1:13-19**—189
**1:13-22**—54
**1:21**—189,200
**1:21,22**—46,189
**2:2**—16
**2:3-6**—23
**2:7**—200
**2:8-10**—145,195
**2:10**—189,190,200
**2:21,22**—202
**6:11**—202
**6:24**—191
**7:15,16**—202
**7:17**—192
**9:10,11**—194
**9:14,15**—193
**10:18,19**—202
**11:7-9**—143
**12:9**—191
**13:15**—195
**17:9**—397
**19:25-27**—196,203
**23:1-3,8-10**—144,165
**23:10**—197
**29:12-17**—295
**30:25**—364
**38:10,11**—23,368
**42:5,6**—170
**42:7**—184,188
**42:10**—177
**42:13-16**—145
<u>*சங்கீதம்*</u>
**1:1**—38
**1:1,2**—234
**2:2-4**—323
**2:8**—357
**2:12**—391
**8:1,4,5**—250
**11:3,5,7**—335
**16:8-11**—21
**18:34,39**—354
**19:7,8:**—155
**19:11-13**—262
**அத். 23**—139,177
**23:2,4,6**—139
**24:8**—352
**30:4,5**—175
**32:5**—111
**32:1-5**—27
**32:3,4**—170



**34:7**—304,359
**34:12,13**—90
**35:13,14**—364
**37:1,2,10,11,37,38**—205
**37:1,7**—44
**37:5**—92
**37:7,8,10,11,37**—146
**38:3**—170
**40:2,3**—76
**41:1,3**—178
**46:1**—175
**46:2-5**—141
**46:5**—69
**50:7-13**—193
**51:11**—308
**51:12,13**—342
**அத். 55**—137
**55:17**—218
**56:8**—182
**67:1,2**—275
**68:18**—66
**73:13-17**—144
**74:16**—46
**75:6,7**—130
**77:13,19,20**—144
**77:19**—49
**81:13,14**—28,68,302
**82:2-4**—249
**82:5**—335
**82:6,7**—249
**84:4-7**—154
**91:1,10**—179
**91:1,13**—303
**97:1,2**—194
**103:2,3**—169
**103:12**—106,154,162
**103:14**—23
**105:14,1-5**—397
**105:16-22**—45,146
**106:36-38**—306
**107:13-16**—359
**107:20**—172
**108:13**—329
**110:1**—329
**116:15**—202
**118:6**—134
**119:9,11**—72
**119:11**—68,80,90
**119:15,16**—90
**119:54,92**—155,219
**119:67,71**—185,192
**119:105**—158
**121:2**—122
**122:1,4**—39
**127:3-5**—145
**128:2-4**—179
**138:2**—114
**144:1**—355
**147:10,11**—352
**148:2-5**—19
<u>*நீதிமொழிகள்*</u>
**1:10**—57
**1:19**—237
**4:14,15**—38
**4:18**—385
**4:23**—235,359
**5:8**—38
**9:1**—341
**11:25,30**—40
**14:30**—171
**16:3**—92
**16:18**—226
**16:24**—172
**18:10**—66,397
**21:31**—354
**22:11**—35
**22:28**—284
**23:4,5**—223
**23:7**—35
**23:15,16**—35
**24:16**—37,77,228
**25:16**—268
**25:28**—31
**26:12**—227
**27:7**—95
**28:1**—120,140
**28:13**—27
**28:16**—237
<u>*பிரசங்கி*</u>
**4:9,12**—69,229
**4:9-12**—110,144,155,209
**4:12**—125,307
**5:1**—114
**7:14**—45,190
**9:7-10**—131
**10:8**—115
**10:10**—397
**11:1-6**—266,277
**11:6**—356
**12:1-7**—199

**உன்னதப்பாட்டு**

2:4—120,397

**ஏசாயா**

1:17—295
1:18—76,107,163,185,385
2:1,2,12,18—317
2:22—234
6:3,8—121
8:19—115,158
8:19,20—283
9:6,7—137,138
11:9—149,389
14:12-15—8,104,248
25:6-9—393
25:8—156
26:3—138
28:8—291
30:21—49
38:9-20—180
38:17—106,154,162
40:13,14—143
42:4—142
42:6,7—295
43:1,2—397
43:1-6—321,322
44:22—106,154,162
45:4—357
45:7—191
45:11—264
46:9,16—78
46:10—163
50:4—301
50:10—128,165,195,362
51:2—129
52:7—121
53:4,5—136,165,169,174
54:2—346
54:8—112
54:17—137
58:7,8—178
59:19—58,67,117,156,280,
அத். 60—147 [309
60:1—147
60:11—357
61:1—295,307
61:3—40
64:6—27
66:2—80

**எரேமியா**

1:18,19—397
6:16—292
8:11,12—376
9:4—234
9:23,24—47
14:14—239
15:16—152
17:9,10—235
20:1,2,7-11—368,376
20:14-18—203
23:5,6—140
23:23—315
23:28,29—152,264,319
26:1,2,8,11—376
31:29-31—332
31:34—106
32:27—143
33:15,16—140
33:16-18—345
38:6—376

**புலம்பல்**

3:22,23—398
3:38-40—46

**எசேக்கியேல்**

18:1-13,18-20—330,331
18:32—331
20:6—398
22:24-29—344
28:11-19—46
28:12—12,113,298
28:13,15—12,18
28:15-17—19,104
33:15—73
34:26—341
37:1,2,9,10—123
48:35—141

**தானியேல்**

அத். 1—43
1:3—88
1:8,9—37,72
1:12—378
2:17,18—91
அத். 3—43
3:17,18—195,365,378
6:10—146,218
7:18—70
7:27—398
9:19-21—320,359
10:2,10-13—319
10:20,21—320

**ஓசியா**

4:6—106,296
14:3—398

**யோவேல்**

2:7,8—124
2:11—398

**ஆமோஸ்**

5:15,24—295
6:1,5,6—275
6:3,6—278,375
9:12—398

**ஒபதியா**

வச 10-12—375
வச 17,21—112,399

**யோனா**

2:9—399
4:5-9—46
4:6,7—191
4:8—203

**மீகா**

2:13—399
7:5-7—130
7:17—157
7:19—96,106,138,154,162

**நாகூம்**

1:2—399

**ஆபகூக்**

2:14—149,389
3:18—129
3:19—399

**செப்பனியா**

1:7—399

**ஆகாய்**

2:4,5—361
2:6,7—399
2:9—382

**சகரியா**

2:8—78
3:1-5—9,27
4:6,7—339,342
4:6,9—119
4:7—121
10:1—389
10:3—354,400
13:1,2—317
13:6-12—121
14:9—400
14:20,21—121

**மல்கியா**

4:2—400
4:5,6—144,164,220,390

**மத்தேயு**

1:21—135,293
1:22,23—134
3:9—333
3:12—390
3:17—104
அத். 4—51
4:1—54,105
4:2—59
4:3,6—16,104
4:3-11—68,72,122,157
4:4,7,10—38,60,105
4:5-10—9,63
4:6,7—113
4:10—325
4:11—57
4:23—169
5:8—246
5:3,10,19—247
5:11-14—225,321,371,360,
5:23,24—73,171,363 [376
5:44—368
5:48—271
6:1-4—252
6:5,6—310
6:10,13,33—231,247
6:14,15—73
6:25-34—30,166,182
6:27—138
6:33—126
7:7—358
7:9-11—174
7:13,14—323
7:15—280,290
7:15-23—239,279
7:15,25—280
7:17,18—152
7:21-23—120,207,247,289
7:24,25—360
7:24-27—122,219,338,344
7:26—289
8:8-10—28,63,157,172
8:16,17—136,157,165,168,
8:28-34—300 [172,304
9:1-7—169
9:12—176
9:32,33—299,300
10:1—301
10:5-42—371
10:7,8—251,294,299,313,325
10:8—251,325
10:16—103,234
10:16-39—371,372
10:27,28—311
10:28-31—364,373
10:28-36—43
10:34-39—113

**10:40-42**—374,375
**11:28**—87,277
**11:28-30**—30,76,260
**12:20**—400
**12:22**—299
**12:22-29**—300
**12:25,26**—14,232,299,343
**12:28**—66,156
**12:28-30**—327
**12:34**—35,188
**12:43,45**—16,306
**13:4,19**—103
**13:21**—361
**13:25**—16,63
**14:12-14**—183,209
**14:15,16**—289
**14:21-23**—209
**15:16,17**—291
**15:22**—272
**15:26**—169
**15:32**—289
**16:15-18**—83,324
**16:18**—69,100,116,119,149,
231,269,305,324,354,358
**16:19**—326,328
**16:21-25**—9,57,63,83,308,
**17:14-18**—291 [376
**17:14-20**—300
**17:15-18**—200,201,299
**17:18,19**—301
**17:19-21**—63,157,303,359
**18:17,18**—173,326
**19:16-22**—50
**19:21-26**—76,143
**20:1-7**—356,389
**20:20,21,24-28**—344
**21:12,13**—309
**21:31**—392
**21:42**—338
**23:13**—327
**23:13-28**—235
**23:14**—87
**23:25-28**—209
**அத். 24**—255
**24:3**—388
**24:3,4**—114,242
**24:3-5,11,24**—253,279
**24:9,10**—388
**24:12**—222
**24:14**—149,224,278,388
**24:24**—243,257,308
**24:24,25**—114
**24:27,30,31**—384
**25:13**—217
**25:14,15**—356
**25:14-30**—166
**25:15**—345
**25:34-40**—177
**25:41**—20,107
**26:39**—186
**26:40,41**—34,63,72
**26:75**—75
**27:3-5**—75,201
**27:40**—104
**27:46**—164,195
**27:50-53**—96,162,381
**28:2**—359
**28:16-20**—271
**28:18**—301
**28:18,19**—117
**28:19**—259
**28:20**—141

***மாற்கு***
**1:21-28**—300
**1:27**—301
**1:32-36**—209
**1:35**—218
**2:18-22**—99
**3:14,15**—370
**3:24,25**—222
**4:3,4**—79
**4:14,15**—80
**4:35-41**—78
**அத். 5**—13
**5:1-4**—299
**5:8**—303
**5:9**—304
**5:10-13**—329
**5:15**—300
**5:19**—74,271
**5:19,20**—307
**5:25,26,34**—176
**6:7**—301
**6:12,13**—305
**6:31**—132
**7:21-23**—235
**7:25-30**—300
**7:32-37**—199
**9:1-27**—275
**9:14-27**—291
**9:17,18,22**—198
**9:17,20,25**—176
**9:22**—299
**9:24**—175,183
**9:25**—198
**9:50**—222
**10:28-30**—379
**10:48**—175




**13:9-11**—372
**13:10**—270
**13:22,23**—239
**13:33**—217
**14:8**—167
**15:38**—162
**அத். 16**—274
**16:1,9,10**—307
**16:3,4**—359
**16:15-17**—299,313,356,359
**16:15,20**—277
**16:16**—314
**16:17**—66,156,301,305,325
**16:17,18**—173,294,400
**16:19**—366
**16:19,20**—100,358

***லூக்கா***
**1:35**—140,381
**1:36,37**—136,381
**1:37,38**—172
**1:46,47**—129
**1:71**—342
**1:79**—138
**2:7-11**—139
**2:14**—138
**2:19**—80
**2:28,29**—138
**2:35**—177,367
**2:51**—367
**2:52**—206
**4:6,7**—83
**4:8**—83,325
**4:13**—17,53,325
**4:14**—105
**4:18**—295
**4:18,19**—40
**4:41**—304
**5:17**—172
**5:26**—381
**6:10-13**—209
**6:43,44**—258
**6:45**—91
**8:1,2**—300,307
**8:27**—299
**8:30,33**—201
**9:2**—294
**9:23,24**—50
**10:1,19**—230,301
**10:2,3**—275
**10:8,9**—313
**10:9,17,18**—231,295,304,
**10:18-20**—301 [313,320
**10:19**—65,156,295,298,
**10:30-32**—275 [304,308
**10:34**—177
**11:14**—300
**11:20**—300
**11:24-26**—156
**11:35**—236
**11:49-51**—376
**12:1**—235
**12:4-7**—136,373
**12:15-34**—237
**12:32**—400
**12:39**—16
**13:10-17**—300
**13:11-13,16**—176,199,299
**13:23,24**—73
**13:30**—392
**16:10-12**—336,360
**16:15**—236
**16:19-31**—177
**17:3-6**—73,303
**17:14**—175
**17:20-25**—206
**19:8**—73
**20:46,47**—236
**21:17-19**—373
**22:3,4**—9,111
**22:28-30**—231
**22:31,32**—9,143,227,321
**22:53**—231
**23:28**—164
**23:31**—371
**23:34**—162
**23:43**—163
**23:46**—167,195

***யோவான்***
**1:6-8**—371
**1:12**—71,105,169,333
**1:14**—134
**1:17**—293
**2:24,25**—234
**3:1-5**—208
**3:19-21**—25
**4:1-5**—208
**4:9**—101
**4:14**—285
**4:23,25**—121
**4:24**—160
**4:28-30**—271
**4:36-38**—125,132
**5:5-9**—175,185,199
**5:8,11,14**—170,184,199
**5:44**—208

6:58-66—95
6:67-71—96
8:44—75,304,340
8:56—134
9:17,25—74
9:31,33,35-38—74
10:9,16—356
10:10—80,155,198,271,299
10:12—103,280
10:16—40
10:27-29—78,308
10:28,29—72,167
10:33-36—249
10:41—273
11:6,40—175
12:4-6—252
12:24,25—367
12:31,32—390,400
12:42,43—73,208
13:34,35—86,120,337
14:5,6—43,144
14:9—244
14:16,17—182
14:26—81,173
14:27—138
14:30—11,20,28,302,390
15:2—128
15:5—76
15:12—337
15:18-21—41,73,234
16:7—100
16:11—390
16:13—285
17:12—201
17:14—41
17:20,21—267,344
17:21,23—120
18:6—381
18:37—370
19:25-27—164,177,367
19:28—165
19:30—166
20:19-22—102,138
20:26—138
20:29—48
20:30—283
20:31—284


*அப்போஸ்தலர்*


1:8—123,273,324,327,341,
1:9-11—102 [361,370
1:24—201
அத். 2—327
2:8,12,16—282
2:11—276
2:16,17—221,276,280
2:17-21—219,388
2:23—323
2:25-27—21
2:32,33—99
2:32,36—65
2:38,39—273
2:42—257
2:46—97
2:47—275
3:15,16—174
4:12—43
4:13—372
4:14—117
4:18,19—117
4:24-31—117,123,323,378
5:1-3—9,81
5:3,4—160,360
5:3,9—308
5:15,16—173,301
5:19—359
5:28—313
5:40,41—195,366
6:10—372
7:52—376
7:56-58—366
அத். 8—327
8:1,4—367
8:3—76
8:5-8—173,300,325
9:6—123
9:10,17,18—174
9:15,16—379
9:19,20—271
9:20-22—366
9:31—206
அத். 10—327
10:38—174,295,303,381,390
12:5,12,17—311
12:6,7,10—359
13:1-4—276
13:6-12—327
13:36—207
13:49-52—118,366
14:8-11—249
14:14,15—249
14:21-23—45,142
14:27—358
அத். 15—288
15:1,13-20—206
15:6-9,13-17,22,28—288





15:21—323
15:30-32—288
அத். 16—204
16:16-18—208,299-301,303
16:23-34—204
16:26—359,361
16:30,31—71,92
16:31,32,34—333
17:6—314
17:11,21—285
17:16-20—90,311,318
17:25—193
18:9,10—361
19:10—314
19:11,12—184,301,325
19:13-16—3,13,120,299,302
19:18-20—158,306
20:17—290
20:17,28—173
20:20—314
20:22-24—379
20:29-31—290
20:33-35—147
21:8-14—276,379
22:13-15—207
22:19-21—379
23:8—96
23:11—276
24:16—73
26:16-18—205,327,401
அத். 28—274
28:3-6—4
28:8,9—173
28:31—358


*ரோமர்*


1:5—94
1:14-16—73,319,327
1:24-27—89
2:11-16—277
2:28,29—334
3:21,22—331
4:3—338
4:19-21—172
5:1—138
5:3-5—197,337
6:3-5—38,94
6:6,7—65,83,93
6:11-13,19—33
6:14—34,77
7:22-25—31,32,37,67,143
7:25-8:2—143
8:1—135,228
8:1,33,34—294
8:2,3—32,67,293
8:8-10—66
8:9—160
8:9-11—67
8:10-12—94
8:10-13—38
8:11—168,187
8:13—89
8:15,16—71,169
8:15-18—105
8:15,26,31-39—128
8:16—105
8:18—196
8:20—67,93
8:22,23—383
8:23—165
8:28—180,186
8:28-31—386
8:28,36—191
8:30—276
8:31—124
8:31-34—108
8:31-39—154
8:34—64
8:35-37—4,377
8:36—69
8:36-39—52,124
8:37—67,226
8:38,39—377
9:1-3—315
9:6,7—334
10:3—27
10:4,6,7—98
10:9,10—169
10:15—121
10:17—172
11:2—338
11:3-5—148
11:16—152
12:1—34
12:1,2—35,94,290
12:2—73,217
12:3—124,345
12:3-8—209
12:4-6—100
12:10—362
12:12—191
12:15—364
12:16—227
12:17-21—73
12:18—73,130

12:19—283
13:1,2,4—249
13:11—71
13:12-14—25
14:1-10—99
14:5,6—260
14:6—261
14:10,11—283
14:12—53
15:2,3—283
15:18—340
15:19-21—273
15:21—73
16:3-16—251
16:17—113,240
16:17,18—250
16:19,20—27,302
16:20—118,329,401
*1 கொரிந்தியர்*
1:2—313
1:7—343
1:10-13—101
1:17,18—83
1:24—382
1:30—283
1:31—38,140
2:9,10—48,143,393
2:10—115
2:16—143
3:3-9—208
3:4—343
3:6,7—125
3:10-15—339
3:10-17—206
3:16,17—170
4:6—283,338
4:7—132
4:9-13—271
4:11-13—4
5:1-5—112,364
5:4—364
6:9-11—26,247
6:13—59
6:15-19—89
6:15-20—336
6:18,19—67,170
7:5—9
7:14—145
7:20,24—209,341
7:29-31—39,130
8:4-6—249
9:24—71
9:25-27—31
10:6-11—216
10:6,8,10—143
10:13—23,61,143,163,216, [351,401
10:16,17—97
10:19,20—306
10:20,21—114
10:31—130
11:3—338
11:15—291
11:16—205
11:17-20,28-32—171
11:29,30—183
அத். 12—343
12:4-6,8,9,11—343
12:7—100
12:7-11—356
12:9—168
12:9,10,28—173
12:10—200,282
12:12,13—343
12:26—232,364
12:28—181
12:30—294
அத். 13—343
13:1-3—207
13:4-7—221
அத். 14—343
14:29—264
15:3,17—94
15:9,10—193
15:14—245
15:17—65,94
15:19—207
15:19,20—96
15:24-28—329
15:26—156
15:32—96,245
15:33—245
15:33,34—39,91
15:36—245
15:51-53—384
15:55,57—100
15:57—62
16:9—4,116,149,357
*2 கொரிந்தியர்*
1:3,4—227
1:4—186
1:3-5—362
2:6-8—112
2:6-11—84
2:7—153
2:10,11—29,112



2:11—13,79,298
2:14—100,226
2:17—279
3:1—247
4:2,5—247
4:3-5—318
4:4—11,116
4:8,9—4
4:13—283
4:17-5:1—378
5:1-3—187,203
5:4—4
5:6—48,72,194,263
5:11,12—209
5:17-19—332
5:20—301
6:2—278
6:3-10—25
6:4-10—4
6:7—25,37,319
6:10—129
6:14—26
6:15,16—308
7:5—4
7:10,11—228
9:6—313
10:3-5—35,317
10:4—352
10:4,5—62
10:4-6—68
10:8—352
10:12-15—208
10:12-16—345
10:12-18—209
10:13,14—178
11:3—13,16,103,242
11:3,4—8
11:4—13,279
11:12-14—238
11:13—257,280,281
11:13-15—150,290
11:14—10,13,57
11:14,15—114,269,300
11:19,20—248
11:23-25—339,340
11:23-27—4
12:1-11—263
12:7—183
12:7,8—200,324
12:7,10—4
12:7-10—109,132,180,186
12:9—186,193
12:9—401
12:12—206
*கலாத்தியர்*
1:6-8—280
1:7—281
1:7,8—114
2:4—98,257,281
2:9—344
2:18—239
2:20—65,77
3:1—243,281,291
3:3—123,240,291,339,342
3:13—98,334
4:6,7—401
4:9,10—260
4:30—338
5:1—102,260,293
5:11—83
5:16—34
5:16,24—60
5:16-25—294
5:17—32
5:18—293
5:19-23—34,67,113
5:22,23—179
5:24—83
5:24,25—89
6:1—227
6:3—247
6:6-10—251
6:14—83,95
6:17—368
*எபேசியர்*
1:3—312,362
1:17-19—21
1:17-23—100
1:19,20—94
1:20,21—312
2:1-3—36
2:2—11
2:4,5—37
2:4-7—401
2:7—62
2:6,7—393
2:8—71
2:8,9—258
2:14,16—101
2:19-22—69,101
3:7,8—193
3:17-19—162
3:18—69
3:20,21—393
4:3,11—85,86,267

**4:4-6**—85
**4:7-13**—85
**4:8**—93
**4:8-10**—66
**4:8-13**—100
**4:11-15**—115
**4:11-16**—288
**4:12,13**—265
**4:13,14**—280
**4:14,15**—244
**4:15**—85,113
**4:15,16**—228
**4:17,18**—36
**4:17-24**—73
**4:20,21**—205
**4:24**—94
**4:25-32**—326
**4:26,27**—28,111
**4:26-32**—84
**4:27**—120,326
**4:29**—90
**4:30**—309
**4:31,32**—85
**4:32**—29,73
**5:6-10**—205,245,246
**5:8-11**—25
**5:14**—97,147
**5:15,16,21**—222
**5:16**—356
**5:18**—123
**5:18-20**—306
**5:21-33**—208
**5:22-33**—338
**5:25-27**—147
**5:26,27**—387
**6:4**—221
**6:5-8**—130,208
**6:10**—232
**6:10-12**—159,352
**6:10-17**—68,118
**6:10-18**—309
**6:10-20**—232,274
**6:11**—326
**6:11,12,17**—362
**6:11-18**—218
**6:12**—15,150,299,311
**6:12,17**—320
**6:13**—37,355
**6:14-17**—122
**6:16**—92,124,149
**6:17**—218,306
**6:19,20**—320

***பிலிப்பியர்***

**1:5**—77,386
**1:5,6**—163
**1:7**—375
**1:9**—255
**1:12-14**—366,375
**1:20**—187
**1:20,21**—374
**1:28**—364
**1:29**—196
**2:1,2**—120
**2:5**—344
**2:8**—83
**2:9**—65
**2:9-11**—402
**2:12**—71
**2:12-15**—216
**2:25**—231
**2:25-30**—199
**2:27**—4,183,199
**3:2**—239,281
**3:4-11**—98
**3:10**—373,382
**3:17,18**—205
**3:17-19**—147
**3:18**—279,281
**3:18,19**—95,251
**3:18-20**—83,244
**3:20,21**—187
**4:6,7**—30,109,138
**4:7-9**—131,219
**4:8**—35,36,89
**4:13**—76
**4:15,16**—272
**4:19**—122,272

***கொலோசெயர்***

**1:13**—11
**1:13,14**—332
**1:24**—368
**1:24,25**—373
**1:27**—182
**1:28**—294
**2:4,8**—281
**2:4-10**—243
**2:5-9**—238,244
**2:9,10**—271
**2:10**—243,294
**2:14**—98
**2:14,15**—83
**2:15**—20





**2:16**—240
**2:16,17**—97
**2:19**—281
**2:20-22**—293
**3:1-3**—95
**3:1,4**—402
**3:3**—334
**3:5**—95,237
**3:11**—101
**4:3,4**—357
**4:14**—177

***1 தெசலோனிக்கேயர்***

**2:3-5**—250
**2:18**—9,110
**3:4,5**—110
**3:5**—16,287
**3:12,13**—388
**4:9**—362
**4:16,17**—402
**5:11**—231
**5:18**—186,190
**5:19-22**—286
**5:21,22**—258,292
**5:23,24**—77,386

***2 தெசலோனிக்கேயர்***

**1:6-8**—368
**1:7-10**—391
**2:1-3**—254
**2:3,4**—248
**2:4**—15
**2:7,8**—402
**2:8**—329,390
**2:9**—14,299
**2:10**—14
**3:1-4**—379

***1 தீமோத்தேயு***

**1:3**—257,281
**1:13,15,16**—76
**2:1-4**—266
**2:1,4,6**—277
**2:3-7**—356
**2:8**—312
**2:9-12**—313
**3:1-13**—178
**3:4,5**—207,337
**3:6**—8
**4:1**—79,114,150,242,280,
**4:1-3**—240 [281,286,296
**4:1-5**—220
**4:7-9**—343
**4:13**—344
**5:14,15**—9
**5:3**—156,176,180,184,186,
**6:3,5**—246 [382
**6:3-5**—153,262
**6:4,5**—281
**6:6**—223
**6:6-11**—237
**6:10,11**—337
**6:11-16**—402
**6:12**—10,355
**6:12-14**—370
**6:12-15**—389
**6:17-19**—224
**6:20,21**—92

***2 தீமோத்தேயு***

**1:6-8**—368,370,375
**1:7**—290
**1:7,8,11**—273
**1:12**—77,92,143,167
**1,12**—82
**1:13,14**—80
**1:15**—375
**2:3**—10
**2:3,9,10**—371
**2:5**—206,360
**2:8-13**—371
**2:9**—69
**2:16,17**—281
**2:19**—335
**2:19-22**—343
**2:22**—39,69,72,89
**2:24-26**—296
**2:26**—79,243,281,291
**3:1**—215
**3:1,2**—144,252
**3:1-3**—220
**3:1-5**—47
**3:12**—361
**3:13**—281
**3:13-17**—252
**3:15**—90
**3:15,16**—252
**4:1,2**—117,389
**4:1-4**—220
**4:1-5**—277
**4:2**—356
**4:2-4**—344
**4:3,4**—152,257
**4:7-10**—10,118,150,324,355
**4:10,16,17**—4
**4:13**—344
**4:16**—375

4:18—403
4:20—180
*தீத்து*
1:10,11—251,281
2:11-13—39
2:13—403
3:10—281
*பிலேமோன்*
வச 21,25—403
*எபிரெயர்*
1:1-3—244,280
1:9—28,58,390
1:13,14—58,160,182
2:14-17—58,134,135,163
3:1,2,5,6—360
3:12—91,236
3:13—69
4:12—123
4:15,16—15,58,62,72,162,
228,362,367
5:14—200,282,290
6:19,20—97
7:25-27—97,106
8:10—56
9:1-14—64,97,135,303
10:5-7—38,63,94
10:23—362
10:24,25—222
10:26-29—237
11:8-10—207
11:13—374
11:33,34—69,355
11:35-38—272,365,378
12:1-3—49,77,84,142
12:4—72
12:7-11—185,192,362
12:11-13—205
12:14,15—29,112,387
12:22,23—69
12:25-27—219
12:29—392
13:1—362
13:3—295,364
13:5,6—38,134,137,182
13:7—258
13:8,9—78,181,261,285
13:12,13—373
13:15,16—252,275
13:17—125
13:20,21—403
*யாக்கோபு*
1:2,3—403
1:12—54
1:13-15—316
1:16—317
1:19—188
1:21—80
1:22—81,247
2:23—179
3:2—35,90,267
3:11—152
3:14,15—111
4:4—67,125,234
4:5—67,338
4:7,11—27,63,120,302,326,
5:9—222 [403
5:10,11—188,362,375
5:14-16—171,173,174,184,
231,294
*1 பேதுரு*
1:6-9—72,91,129
1:11—377
1:18,19—129,309,332,362
1:22—363
1:24,25—219
2:5-9—96,216,275
2:11-20—145
2:18,19—130
2:21-23—44,327
2:24—382
3:8-12—90
3:16,18—377
3:18-22—94
4:1-13—93,377
4:7,8—223
4:12,13—365
4:14—368
4:16—44
5:5,6—47,227,250
5:7-9—29,86,109,153,306
5:7,10—87
5:8,9—16,87,103,110,153,
308,326,365,377
5:10—403
*2 பேதுரு*
1:3,4—59,94,152
1:7—363
1:9—72
1:10—341
1:14—291
1:16-21—263
அத். 2—291
2:1-3—239,251,258,280





2:4—16
2:5—39
2:6-8—39,216
2:9—215
2:10,11—305,329
2:17—292
2:22—239
3:2—291
3:9—224,278
3:11—216
3:12—392
3:13—45
3:13,17,18—45,404
3:15-17—238
3:17,18—240
*1 யோவான்*
1:7-9—25,26,64,76,185,382
1:8,9—33,107,382
2:1—108,143
2:11—85
2:13,14—68,304,355
2:15-17—39,60
2:18—279,280
2:26,27—238,286
3:1—170
3:2—387
3:7—246
3:8,9—42,295,325
3:10-13—41,85,111
3:20,21—235
4:1-3—19,151,279
4:4—19,38,60,65,77,104,
137,182,295,304,308,327,404
4:6—153
4:20,21—337,387
5:3-5—76,124,324
5:4-6—65
5:18—37,72,88
5:19—12,317,390
*2 யோவான்*
வச 8—404
*3 யோவான்*
வச 2:—170,207,272,404
வச 5-8:—272
*யூதா*
வச 3—281
வச 6—16,104
வச 9—104,305,329
வச 19—113
வச 24,25—77,167,404
*வெளிப்படுத்தல்*
1:1—329
1:5—370
1:6—362
1:8,11,17—77
1:9—362
1:17,18—102,328
அத். 2—269
2:2,4-6,9,10,15—131,237,
2:7,11,17,26—355 [347
2:9—114,348
2:10—137,200,321,348,
368,369,378,389
2:12,13—369,378
2:13,14,19,20,23,24—348
2:24—115,159
அத். 3—269
3:1-4,8—348
3:5,12,21—355
3:7-13—359,360
3:8,11—356,360,361,389
3:9-11,15,17,18,20—349,
3:13—363 [361,362
3:16,19,20—146,237
5:22-6:9—160
6:9-11—367,380
6:11,13,18-24—160
9:1—328
12:1-9—16,103
12:10,11—16,64,72,106,107,
302,377,404
12:12—62,218,365,388
13:2,4—114
15:3—107
16:13—114
16:14-16—391
17:14—379,391
18:2—391
19:1—391
19:6-8—147,392
19:10—159,276
19:11-16—70,151
20:1-3—20,79,305,328,391
20:7,10—329
21:1-4—166,187,384
21:27—75
22:5—194
22:8,9—159
22:11,12—40,216,262,385
22:15—75
22:17—67,266
22:20—404



## “பைபிள் புதையல்கள்”

by **R. ஸ்டான்லி**

ஆன்மீக வாழ்வின் துவக்கமுதல்
இவ்வுலக வாழ்வின் முடிவுவரை
200 திருத்துதல் திருமறைப் பாடங்கள்

■

832 பக்கங்கள்;
உறையுடன் தடித்த அட்டை; ரூ. 500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-
*ஆங்கிலம், தெலுங்கு, இந்தி மற்றும் கன்னடத்திலும் உண்டு.*

■

இப்புத்தகத்திலுள்ள 200 பாடங்களும்
ஒலித்தட்டுகளாகவும், ஒளித்தட்டுகளாகவும் உண்டு.
*ஆங்கிலத்திலிருந்து தமிழ்.*

□

40 ஒளித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 2 மணி 30 நிமிடம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 1500/-
அனுப்பச் செலவு ரூ. 100/-

□

2 MP3 ஒலித்தட்டுகள்
ஒவ்வொன்றும் 50 மணி நேரம் ஓடக்கூடியது.
ஒரு தொகுப்பின் விலை ரூ. 100/-
அனுப்பச் செலவு ரூ. 50/-

■

***100 மணி நேரத் திடமான வேத போதனை***

■

தனித்தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.
புத்தகத்துடன் ஒலி-ஒளித்தட்டுகளைப் பயன்படுத்துவது
3-ஆண்டு வேதக் கலாசாலைப் படிப்பிற்குச் சமம்!

*இவை ஆசிரியரிடம் கிடைக்கும்.*





## பைபிள் முத்துக்கள்

**Bible Pearls**

50 ஆண்டுகளுக்கும் கூடுதலான (1963-2016) பிரசங்கப்
பணியிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 200 பிரசங்கக் குறிப்புகள்

**R. ஸ்டான்லி**

*இப்பிரசங்கக் குறிப்புகள் 14 தலைப்புகளில் பிரிக்கப்பட்டுள்ளன —*

*1. மனந்திரும்புதல் & இரட்சிப்பு*
*2. திருமறை & திருவுபதேசம்*
*3. கிறிஸ்தவ வாழ்வு*
*4. ஜெபம் & தொழுகை*
*5. எழுப்புதல் & ஆதிநிலையேகுதல்*
*6. நற்செய்தியறிவிப்பு & மிஷனரிப்பணி*
*7. திருச்சபை*
*8. பிரசங்கித்தல் & ஊழியம்*
*9. வேலை, சகவுறவுகள் & தலைமை*
*10. சிலுவை & பாடுகள்*
*11. குடும்பம்*
*12. இளைஞர்*
*13. நபர்கள் வாழ்க்கை & பொதுவானவை*
*14. இறப்பு & இரண்டாம் வருகை*

வசன அட்டவணை, பொருள் அட்டவணை,
கதாபாத்திரங்கள் அட்டவணை & மேற்கோள் அட்டவணை

1200 பக்கங்கள் □ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 1000/-; அனுப்பச் செலவு ரூ. 100/-
*10 அல்லது கூடுதல் பிரதிகளுக்கு 30% தள்ளுபடி*
*முழுநேர ஊழியருக்கு 50% தள்ளுபடி*

*ஆங்கிலத்திலும் உண்டு.*
*தெலுங்கு, இந்தி, கன்னட மொழியாக்கம் ஆயத்தத்தில் உள்ளது.*

R. Stanley
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>*
*<evangeline@stanleyonbible.com>*

***கிறிஸ்தவ வாழ்வில்***
***நிறைவாய் வளர உணவளிக்கும்***
***ஒரு தினசரித் தியான நூல் ...***



**Better Everyday**

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும் ...**
**அனைத்து வயதினரும் ...**
**அனைத்துத் துறையினரும் ...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு!**

*432 பக்கங்கள்; விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-*
*10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி*

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,
மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

*கிடைக்குமிடம்:*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*



## ஆசிரியரது பிற நூல்கள்

- *அறிவூட்டும் அகவுணர்வுகள்* (பக்கங்கள் 42)
- *ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?* (பக்கங்கள் 32)
- *ஆனந்த அறுவடை* (பக்கங்கள் 196)
- *இரட்சிக்கப்படுவது எப்படி?* (பக்கங்கள் 32)
- *இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?* (பக்கங்கள் 200)
- *இயேசுவின் அடிச்சுவடுகள்* (பக்கங்கள் 144)
- *இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!* (பக்கங்கள் 60)
- *உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்* (பக்கங்கள் 120)
- *எதிர்நீச்சல் வாலிபர்* (பக்கங்கள் 140)
- *எழுப்புதல் வரும்போது ...* (பக்கங்கள் 256)
- *ஐந்தப்பம் இருமீன்* (பக்கங்கள் 112)
- *கண் திறக்கும் கட்டுரைகள்* (பக்கங்கள் 240)
- *காட்டுத் தேன்* (பக்கங்கள் 112)
- *கீழ்ப்படிதலே மேல்படி!* (பக்கங்கள் 92)
- *சமநிலைக் கிறிஸ்தவன்* (பக்கங்கள் 80)
- *சிறு நரிகள்* (பக்கங்கள் 56)
- *திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)* (பக்கங்கள் 130)
- *திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)* (பக்கங்கள் 160)
- *தீர்க்கதரிசி, ஆசாரியர், இராஜா* (பக்கங்கள் 112)
- *நான் நிற்கும் கன்மலை* (பக்கங்கள் 64)
- *நெஞ்சில் நெருப்பு* (பக்கங்கள் 136)
- *பூர்வ பாதைகள்* (பக்கங்கள் 148)
- *பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!* (பக்கங்கள் 148)
- *பொற்பழங்கள்* (பக்கங்கள் 60)
- *பைபிள் கேள்விகள்* (பக்கங்கள் 228)
- *பைபிள் பதில்கள்* (பக்கங்கள் 256)
- *பைபிள் பரிசுத்தம்* (பக்கங்கள் 220)
- *பைபிள் வல்லமை* (பக்கங்கள் 356)
- *மாணவ மணிகளுக்கு ...* (பக்கங்கள் 60)
- *வல்லமை தேவனுடையது!* (பக்கங்கள் 160)
- *விசுவாச வாழ்வு* (பக்கங்கள் 128)

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்கள் ஆசிரியரிடம்
அல்லது கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கும் —

Blessing Literature Centre
21/11 West Coovam Road, Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

***My Letters***

Stanley talks heart to heart with the Visitors of this Website.

❒

***Books & Booklets***

Freely downloadable books by Stanley

❒

***Sermon Outlines***

Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching

❒

***Bible Studies***

Studies on specific themes and select books of the Bible

❒

***Doctrinal Essays***

Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible

❒

***Youth Matters***

Practical Guidelines to Young Men and Young Women for Successful Living

❒

***Leaders Column***

Biblical Insights and Practical Lessons on Christian Leadership

❒

***Missionary Challenge***

Calling Christians to obey the Great Commission of Christ

❒

***My Answers***

Answers to Questions frequently asked but rarely answered

❒

***Quotable Quotes***

Stanley's analytical Statements about Christian Life and Ministry

❒

***Video Talks***

Freely downloadable video and audio sermons of Stanley

*(Register your e-mail id on this website to receive daily devotions & updates instantly.)*



## கடைசி வரிகள் ...

- இந்நூல் எவ்விதம் உங்களுக்கு உதவியது என்று தெரியப்படுத்தினால் ஆசிரியரும் அவரது குழுவினரும் உற்சாகமடைவர். தொலைபேசி அல்லது கடிதம் மூலம் அவரோடு தொடர்புகொள்ளலாம். ஆனால் நீண்ட பதில்கள் எழுத அவருக்கு நேரமில்லை.

- வசனக் குறிப்புகளை பைபிளில் எடுத்துப் பார்த்து திரும்பத் திரும்ப இப்புத்தகத்தை வாசித்து இதிலுள்ள சத்தியங்களால் உங்களை நிறைத்துக்கொள்ளுங்கள். எதிரியின் தாக்குதல்களை மேற்கொள்ள உங்கள் உள்ளான மனிதனில் பலப்படுவீர்கள்.

- உடன் விசுவாசிகளோடும் உங்கள் ஜெபக்குழுக்களிலும் இச்சத்தியங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். ஆன்மீகப் போராட்டம் குறித்து அவர்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்கள் கிடைக்கும்.

- உங்கள் நண்பர், சபை ஆயர்கள் மற்றும் பிரசங்கிமாருக்கு அன்பளிக்கக் கூடுதல் பிரதிகள் வாங்கிக்கொள்ளுங்கள். தனிப் பிரதி ரூ. 200/-; 10 பிரதிகளுக்குக் கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி. காலம் பொல்லாதது, குறுகியது. இறைமக்களைத் தாக்குவதில் எப்பொழுதும் இல்லாத அளவு சாத்தான் தீவிரமாயிருக்கிறான். போதுமான ஆயுதமணிந்துகொள்ள அவர்களுக்கு உதவுங்கள்.

- 10 மொழிகளில் ஆசிரியர் செய்துவரும் இலக்கியப்பணிக்காய் ஜெபியுங்கள். காணிக்கைகளினால் அவரது கரங்களைப் பலப்படுத்துங்கள். வங்கி விபரம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>   <evangeline@stanleyonbible.com>*

# பைபிள் வெற்றி

தொடக்கம் முதல் முடிவு வரை கிறிஸ்தவ வாழ்க்கை ஒரு போராட்டமே. எனவேதான், "நல்ல போராட்டத்தைப் போராடினேன்" என்று தனது வாழ்வின் இறுதியில் அப்போஸ்தலன் பவுல் சாட்சியிட்டார் (2 தீமோ 4:7). அப்படியே, "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு" என்று இளம் தீமோத்தேயுவுக்கு அவர் சவாலிட்டார் (1 தீமோ 6:12). "ஆன்மீகப் போராட்டம்" குறித்துக் கிறிஸ்தவத்தில் ஒரு புத்தார்வம் எழுந்துள்ளது. ஆனால் இப்பொருளையடுத்த போதனைகளில் திருமறைக்கு ஒவ்வாத பல கருத்துக்கள் நுழைந்துவிட்டன. சாத்தானை எதிர்கொள்ளும்போது நீங்கள் எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று இந்த 432 பக்க நூல் போதிக்கிறது.

இந்நூலிலுள்ள 50 அத்தியாயங்கள் கீழ்க்கண்டவாறு
இரு பிரிவுகளாய்ப் பகுக்கப்பட்டுள்ளன:
(1) "கிறிஸ்தவ வாழ்க்கை" (30 அத்தியாயங்கள்)
(2) "கிறிஸ்தவ உபதேசமும் பணியும்" (20 அத்தியாயங்கள்)
வசன அட்டவணை உண்டு.



R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
Tel: 00 91 98437 07600, 98430 11943
<stanleyonbible@hotmail.com>
<evangeline@stanleyonbible.com>
www.stanleyonbible.com